உ

சிவமயம்.

# வருண சிந்தாமணி.

இஃது

சென்னை

அக்கவுண்டாண்டு ஜெனரலாபீசு

பென்ஷன் சூப்பரிண்டெண்டாண்டு

கூடலூர்

கனகசபைப் பிள்ளையவர்களால்

இயற்றப்பெற்று

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான்

மு. ரா. அருணாசலக் கவிராயரால்

பரிசோதிக்கப்பெற்று

சென்னை:

அல்பினியன் அச்சுயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1901.

சார்வரிஹூ தைமீ

காப்பி, 500.

Copy Right Registered.

# விளம்பரம்.

---

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம் முத்தியாலுபேட்டை இராமசாமி தெரு 20-ஆவது நெம்பர் வீட்டில் கூடலூர் நமசிவாயபிள்ளையிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை ரூ 2—0—0.

தபாற் செலவு பிரத்தியேகமாக ஏற்படும்.

| கையொப்பக்காரர்களின் பெயர். | ஜீவனம். | இருப்பிடம். | கையொப்பம். |
|---|---|---|---|
| | **Officials.** | | |
| The Honorable Mr. P. Rajaratna Mudaliar, Dewan Bahadur, C. I. E. ... | Inspector General of Registration and Member of Legislative Council, Madras ... ... | Sawmi Naiker Street, Chintadripet ... ... | 2 |
| The Honorable Mr. C. Jambulinga Mudaliar, B.A., M.L., Rai Bahadur ... | Government Advocate Cuddapah and Member of Legislative Council, Madras ... ... | Cuddapah ... ... | 1 |
| The Honorable Mr. P. Ramanatha Mudaliar ... ... ... | Advocate-General and Member of Legislative Council, Ceylon ... ... | Colombo ... ... | 1 |
| M.R.Ry. M. Vinayagam Mudaliar ... | Retired Asistt. Commissioner of Police ... ... | Mailapore ... ... | 1 |
| ,, V. Bodhaguruswamy Pillai... | Inspector of Police ... | 50. Ramasami Street ... | 1 |
| ,, K. E. L. Karpagavinayagam Pillai, B.A., ... ... | Prob. Do. ... | Vellore ... ... | 1 |
| ,, M. Shanmugam Mudaliar ... | Clerk, Office of Inspector General of Police ... | 19. Darmaraja Kovil Street Mailapore ... ... | 1 |

| கையொப்பக்காரர்களின் பெயர். | ஜீவனம். | இருப்பிடம். | கையொப் பிரதி |
|---|---|---|---|
| M.R.Ry. P. Rajaratna Mudaliar, B.A. | Presidency Magistrate ... | 47. Sawmy Naiker Street, Chintadripet ... ... | 1 |
| " V. Damodaram Mudaliar ... | Thasildar ... ... | Conjeveram ... ... | 1 |
| " G. Masilamani Pillai B.A., ... | Sub-Magistrate ... ... | 10. Linga Chetty Street ... | 1 |
| " S. V. Kallapiran Pillai B.A., | Stationary Sub-Magistrate | Conjeveram ... ... | 1 |
| " T. S. Muthiah Pillai ... | Honorary Magistrate and Secretary to the Hindu College Committee ... | Tinnevelly ... ... | 1 |
| " C. Mariappa Mudaliar, B.A.... | Personal Asistt. to the Inspector General of Registration ... ... | 16. Ramakristnan Street, Madras ... ... | 1 |
| " K. Appasawmi Mudaliar ... | Sub-Registrar ... ... | Conjeveram ... ... | 1 |
| " N. M. Dorasami Pillai, B.A.... | Senior Supt. Comptrollr's Office ... ... | Bolaram ... ... | 1 |
| " A. Venkatachellam Mudaliar ... ... | Supt. Acctt. Genl's. Office... | 25. Permal Pagoda garden Street, Madras ... | 1 |
| " P. Sabapathi Mudaliar ... | Supt. A. G's Office ... | 194. Mint Street, Madras... | 1 |
| " V. Kaliyanasundram Pillai, B.A. | Clerk Do. ... | 65. Komarappa Moody Street ... ... | 1 |
| " T. Rajavelu Mudaliar ... | Do. ... | 20. Mulla Sahib Street ... | 1 |
| " V. Vinayaka Mudaliar ... | Do. ... | Madras ... ... | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | T. Theagaraya Mudaliar ... | Do. ... | 202. Govindapa Naikan Street ... ... | 1 |
| ,, | C. Rajarathna Mudaliar ... | Do. ... | 3. Palliappan Street Madras | 1 |
| ,, | V. A. Parthasarathi Mudaliar, Rao Sahib ... ... | First Asstt. Forest Dept Bord of Revenue ..." | Puraswakam ... ... | 1 |
| ,, | P. Kolandavelu Mudaliar ... | Senior Audr. Court of Wards, Board of Revenue | 76. Ramasami Street Madras ... ... | 1 |
| ,, | A. P. Venkatachala Mudaliar | Clerk, Board Office ... | 357. Mint Street Madras ... | 1 |
| ,, | M. Arumuga Mudaliar ... | Pensioner ... ... | Mailapore ... ... | 1 |
| ,, | T. Balasubramania Pillai ... | Clerk, High Court ... | 29. Ramasawmy Street Madras ... ... | 1 |
| ,, | M. Streenivassa Mudaliar ... | Chief Acctt. Presy. Port Office ... ... | 40. Nammalvar Street ... | 1 |
| ,, | P. Ethiraja Mudaliar ... | Clerk Presy. Port Office ... | 5. Ramasawmy Street ... | 1 |
| ,, | P. Armuga Mudaliar ... | Do. ... | 83. Sami Naiker Street Chintadripet ... ... | 1 |
| ,, | P. Ethiraja Mudaliar ... | Boat Overseer ... ... | 113. Ramasamy Street Madras ... ... | 1 |
| ,, | M. Chenthilvelu Mudaliar ... | Govt. Pensioner ... ... | 217. Mint Street Madras ... | 1 |
| ,, | T. Chengalvaraya Mudaliar | Do. ... | 34. Office Venkatachala Moodly Street ... | 1 |
| ,, | M. C. Rajagopala Mudaliar | Clerk, High Court Madras | Mailapore ... ... | 1 |
| ,, | T. V. Tirunageswara Mudaliar ... ... | Clerk General Stamp Office | 31. Venkier Street Madras | 1 |
| ,, | T. Rajarathnam Mudaliar ... | Clerk Do. ... | 43. Court Ranganatha Mudaliar Street ... | 1 |

## கையொப்பக்காரர்களின் பெயர்.

| | கையொப்பக்காரர்களின் பெயர். | ஜீவனம். | இருப்பிடம். | கையொப்பம். |
|---|---|---|---|---|
| M.R.Ry. | A. Venkatachalla Pillai ... | Hospital Asstt. ... ... | Conjevaram ... ... | 1 |
| ,, | P. Cothandasawmy Pillai ... | Govt. Pensioner, P.W.Dept. | 19. Sengalanee Pillaiar Covil Street Madras ... | 1 |
| ,, | T. Narayanasawmy Pillai, Rao Sahib ... ... | Do. Comt Dept. | 59. Coral Merchant St. Do. | 1 |
| ,, | M. Sawmynatha Mudaliar ... | Govt. Pensioner & Land lord | Mailapore ... ... | 1 |
| ,, | C. Subbaraya Mudaliar ... | Registrar, Dy. Colltr's. Office | Madras ... ... | 1 |
| ,, | N. A. Muthiah Mudaliar ... | Hd. Clerk M.O.Dept.G.P.O. | 215. Mint Street Madras ... | 1 |
| ,, | P. M. Canthasawmy Mudaliar ... ... | Inspector, Post Office ... | 11. Tandavaraya Moody Street ... ... | 1 |
| ,, | Tinnevelly V.P. Subramanya Mudaliar ... ... | Stock Inspector ... | Tinnevelly ... ... | 1 |
| ,, | T. Balasundara Mudaliar ... | Tamil Translator's Office ... | Madras ... ... | 1 |
| ,, | C. Appavu Mudaliar ... | Govt. Pensioner, Supt., Comt. Exr's. Office ... | 6. Kondaly Iyer Street Madras ... ... | 1 |
| ,, | C. Y. Venugopal Mudaliar... | Pensioned Acctt. M. W. D. | 219. Mint Street Madras ... | 2 |
| ,, | Kolappancheri Balu Mudaliar ... ... | Pensioner ... ... | 15. Rasaiar Street Madras | 1 |
| ,, | V. Ekambara Mudaliar ... | Pensioner ... ... | 210. Mint Street Do. ... | 1 |
| ,, | P. Shunmuga Mudaliar ... | Cashier P. E. Office ... | 37. Anna Pillai Street Madras ... ... | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | Keeraipakam Rathnasabapathy Mudaliar ... | Pensioner ... ... | 55. Varatha Moothiappan Street Madras ... | 1 |
| ,, | R. Anantha Mudaliar ... | Govt. Pensioner ... | Mailapore ... ... | 1 |
| | | **Law Officers.** | | |
| ,, | J. M. Nallaswami Pillai, B.A., B.L. ... ... | District Munsif ... ... | Nandyal ... ... | 1 |
| ,, | P. M. Sivangnana Mudaliar, B.A., B.L. ... ... | High Court Vakil and Municipal Commr. ... | 100/101 Adiappa Naick Street, Madras ... | 1 |
| ,, | M. Panithavelu Mudaliar, B.A., B.L. ... ... | Do. Do. ... | Mailapore ... ... | 1 |
| ,, | T. Ethiraja Mudaliar, B.A., B.L. ... ... ... | Do. ... | Madras ... ... | 1 |
| ,, | T. Virabadra Mudaliar, B.A., B.L. ... ... ... | Do. ... | 192. Mint Street, Madras... | 1 |
| ,, | P. Sambanda Mudaliar, B.A., B.L. ... ... ... | Do. ... | 70. Aucharappan Street, Madras ... ... | 1 |
| ,, | N. A. V. Somasundram Pillai, B.A., B.L. ... | Do ... | Tinnevelly ... ... | 1 |
| ,, | B. Venkatachala Mudaliar, B.A., B.L. ... ... | Do. ... | Coiambatore ... ... | 1 |
| ,, | V. Dandapani Pillai, B.A., B.L. ... ... ... | Do. ... | Do. ... | 1 |
| ,, | P. Nellaiyappa Pillai, B.A., B.L. | Apprentice at-Law ... | Mailapore ... ... | 1 |
| ,, | A. P. Kanthimathinatha Pillai, B.A. ... ... | Law Student ... | 36. Thumbu Chetty Street, Madras ... ... | 1 |

| கையொப்பக்காரர்களின் பெயர். | ஜீவனம். | இருப்பிடம். | கையொப் பிரதி. |
|---|---|---|---|
| M.R.Ry. N. Duraisawmy Pillai, B.A.... | Law Student ... | Coral Merchant Street Madras ... ... | 1 |
| ,, T. S. Vaikuntam Pillai, B.A. | Do. ... | 41. Ramasawmy Street, Madras ... ... | 1 |
| ,, S. E. Subbaiya Pillai, B.A. | Do. ... | Thumbu Chetty Street, Madras ... ... | 1 |
| ,, S. Somasundaram Pillai, B.A., F.L. ... ... ... | Do. ... | 122. Coral Merchant Street, Madras ... ... | 1 |
| | **Land Lords.** | | |
| ,, A.V.Ratnavelu Pillai, B.A. | Landed Proprietor ... | Tanjore ... ... | 1 |
| ,, Tiroomanam Annamalai Mudaliar ... ... | Zamindar of Amur Mitta, Ponneri Taluk, Church Warden Sreekapaleeswarar Temple, Mailapore and Arunachaleswarar Temple, Tandiarpet ... | 53. Acharappen Street Madras ... ... | 1 |
| ,, Tiruvur K. Yegambara Mudaliar ... ... | Zamindar Vichur Mitta ... | 15. Ramakrishna Street Madras .. ... | 1 |
| ,, V. Balasubramania Mudaliar | Zamindar and Shrotiadar... | 64. Office Muthia Mudy St. | 1 |
| ,, C. Ramaswamy Mudaliar ... | Zamindar, Chunampattu ... | Chunamputtu ... ... | 1 |

| | | | |
|---|---|---|---|
| ம-ா-ா-ஸ்ரீ கா. மு. சுப்பராய முதலியார் | ஜமீன்தார், ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோவில் தர்மகர்த்தர் ... | காஞ்சிபுரம் ... ... | 1 |
| M.R.Ry. P. S. Raju Mudaliar ... | Zamindar, Ponneri ... | Mint Street, Madras ... | 1 |
| ம-ா-ா-ஸ்ரீ பூ. கயிலாசநாத முதலியார் ... | நாட்டுசுரோத்திரியம் ... | 36. சுப்பிரமணிய முதலி தெரு சென்னபட்டணம் ... | 2 |
| ,, இலவம்பேடு முத்தியா முதலியார் | சுரோத்திரியம் ... | 32. அபீசு முத்தியா முதலி வீதி சென்னபட்டணம் ... | 1 |
| M.R.Ry. T. Subramania Pillai ... | Landed Proprietor ... | 6. Siva-muthia Mudali Lane Madras ... ... | 1 |
| ,, T. S. Shanmugam Pillai ... | Do. ... | Do. ... | 1 |
| ,, C. V. Soobookylasa Mudaliar ... ... | Do, ... | 70. Nattu Pillayer Covil Street, Madras .. | 1 |
| ம-ா-ா-ஸ்ரீ சி. டி. யம். அப்பாராவு முதலியார் ... ... .. | ஏகபோக மிராசுதார் ... | காஞ்சிபுரம் ... ... | 1 |
| ,, நுங்கம்பாக்கம் சுப்புதெய்வநாயக முதலியார் ... ... | பூஸ்திதி வந்தர் அகத்தீசர் கோயில் தர்மகர்த்தர் ... | 115. சாலைத்தெரு சென்னபட்டணம் ... ... | 1 |
| ,, கரிக்கலவாக்கம் வேலாயுத முதலியார் ... ... | மிராசுதார் ... ... | 12. சந்திரப்ப முதலிதெரு சென்னபட்டணம் ... ... | 1 |
| ,, இ. அருளாநந்த முதலியார் ... | பூஸ்திதிவந்தர் ... ... | 15. பவணிகண்ட முதலிதெரு சென்னபட்டணம் ... | 1 |
| ,, நா. தெய்வநாயக முதலியார் ... | ஷை ... ... | 15. இராமசாமி தெரு ... | 1 |

## Merchants.

| | | | |
|---|---|---|---|
| M.R.Ry. Arcot Narrainasawmy Mudaliar, Rai Bahadur, Darmarathnam ... ... | Proprietor of the Maisur Hall ... ... | Bangalore ... ... | 2 |

| கையொப்பக்காரர்களின் பெயர். | ஜீவனம். | இருப்பிடம். | பிரதி. |
|---|---|---|---|
| M.R.Ry. N. Appusundaram Pillai ... | Dubash, Messrs Best & Co. and Municipal Commissioner, Madras ... | 33. Coral Merchant Street, Madras ... ... | 1 |
| ,, C. S. Rajaratna Mudaliar ... | Merchant and Municipal Commissioner, Madras... | 297. Mint Street, Madras... | 1 |
| ,, N. R. Authipuranam Pillai... | Dubash Messrs Binny & Co. | 259. Tiruvattur High Road, Madras ... ... | 1 |
| ,, N. Venkatachallam Pillai ... | Dubash Messrs Best & Co. | 272. Do. ... | 1 |
| ,, V. Gopalakrishna Pillai ... | Merchant ... ... | Yegatha Covil Street, Madras ... ... | 1 |
| ,, A. Sabapathi Pillai ... | Cotton Merchant ... | Kanakambalayam Udumalpet ... ... ... | 1 |
| ,, O. S. Sangaralingam Pillai... | Merchant ... ... | 165. Coral Merchant Street Madras ... ... | 1 |
| ,, C. Ponnusawmy Mudaliar ... | Do. ... | 29 Krishnappa Agraram Madras ... ... | 1 |
| ,, V. Moothoocoomarasawmy Pillai ... ... | Do. ... | 30. Ramasawmy Street | 1 |
| ,, K. S. Rathnavelu Pillai ... | Do. ... | 46. Do. ... | 1 |
| ,, T. M. Pandipperumal Pillai. | Do. ... | Tinnevelly ... ... | 1 |
| ,, P. Rathna Mudaliar ... | Do. ... | 342 Mint Street Madras ... | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | M. Vythilingam Chettyar ... | Do. ... | 87. Coral Merchant Street Madras ... ... | 1 |
| ம-ா-ா-ஸ்ரீ | வ. சீனிவாசப் பிள்ளை ... | வர்த்தகம் ... ... | 45. எகாத்தாள் கோயில்தெரு சென்னபட்டணம் ... | 1 |
| ,, | அ. மு. ம. சொக்கலிங்கம் பிள்ளை | ஷை ... | 2. பவழக்காரத் தெரு சென்ன பட்டணம் ... ... | 1 |
| ,, | சி. ம. சோமசுந்தரம் பிள்ளை ... | ஷை ... | 154 ஷை ... | 1 |
| ,, | வ. வ. புன்னைவனம் பிள்ளை ... | ஷை ... | 22 ஷை ... | 1 |
| ,, | சி. சு. பரமசிவன் பிள்ளை ... | ஷை ... | 3 ஷை ... | 1 |
| ,, | சி. ம. வயிரவநாதம் பிள்ளை ... | ஷை ... | 147 ஷை ... | 1 |
| ,, | க. யி. ப. திரவியம் பிள்ளை ... | ஷை ... | பவழக்காரத்தெரு, சென்ன பட்டணம் ... ... | 1 |
| ,, | க. சுப்பராய முதலியார் ... | ஷை (இரத்தினம்) ... | இராமசாமிதெரு சென்னபட்டணம் ... ... | 1 |
| ,, | வரதராஜ முதலியார் ... | ஷை ... | காஞ்சிபுரம் ... ... | 1 |
| ,, | மு. திருக்காமு செட்டியார் ... | ஷை ... | ஷை ... | 1 |
| ,, | மலாக்கா திருப்பாச்சூர் சாமிநாத முதலியார் ... ... | ஷை ... | 107. ஆதியப்ப நாயுடு வீதி ... | 1 |
| ,, | சி. நமசிவாய செட்டியார் ... | ஷை ... | வெள்ளாஞ் செட்டி தெரு சின்னகாஞ்சிபுரம் ... ... | 1 |
| ,, | பூ. அப்பாசாமி செட்டியார் ... | ஷை ... | ஷை ... | 1 |
| ,, | சுப்பிரமணிய பிள்ளை ... | தோல்ஷாப்பு ... ... | மாம்பலம். சைதாப்பேட்டை ... | 1 |
| ,, | அ. சு. வேலாயுதம் பிள்ளை ... | காசுக்கடை ... ... | சிவகாசி ... ... | 1 |
| ,, | தண்டலம் முருகேச முதலியார் | துபாசி ஆல்ரிட்ஜு ஸாலமன் கம்பெனி ... ... | பிரம்புக்கடை ஒத்தவாடை ... | 1 |

| கையொப்பக்காரர்களின் பெயர். | ஜீவனம். | இருப்பிடம். | கையொப்பம். |
|---|---|---|---|
| | **And others.** | | |
| M.R.Ry. S. Anavaratavinayakam Pillai, M.A. ... ... | ... ... | Saidapet ... ... | 2 |
| ,, K. Chinnathamby Pillai, B.A., L.T. ... ... | Asstt. Professor, Madras Christian College ... | 15. Reddy Street, Egmore. | 1 |
| ,, Mr. S. Purnalingam Pillai, B.A | Editor, Jnana Bodhini ... | Coimbatore ... ... | 1 |
| ,, A. Sankaralingam Pillai, B.A | Sub-Editor, Swadesa Mitran | Thambu Chetty St. Madras. | 1 |
| ,, A. Govindaraja Mudaliar, B.A. | Editor of the Under-graduates ... ... | 39. Kandappa Chetty Street Madras ... ... | 1 |
| ,, C. S. Govindaraja Mudaliar, B.A. ... ... | ... ... | Appiah Muthu Street, Park Town ... ... | 1 |
| ,, R. Vencatachalam Mudaliar, B.A. ... ... | Teacher, Madras Christian College ... ... | Madras ... ... | 1 |
| ,, A. Tirumalaicolandu Pillai, B.A. | Pachappa's College ... | Do. ... ... | 1 |
| ,, A. Vedamurti Mudaliar, B.A. | Secy. to the Municipality... | Tuticorin ... ... | 1 |
| ,, S. Singaravelu Mudaliar, B.A. | Head Clerk, Municipality... | 355. Mint Street, Madras... | 1 |
| ,, C. Rajarathna Mudaliar ... | Registrar of Births and eaths ... ... | 102. Coral Merchant St. Madras ... ... | 1 |
| ,, S. Balakistna Pillai ... | Store-keeper Messrs Best & Co. B. P. I. Office ... | 122. Coral Merchant Street Chindatripet ... ... | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | P. Murugesa Mudaliar ... | Sutt. Scottish Press, High Court ... ... | 68. Iyah Mudaly Street Chintadripet ... ... | 1 |
| ,, | S. Appadurai Mudaliar ... | Asstt. Cashier Harbour Trust ... ... | 24. Ayalur Moothia Mudaly Street Madras ... | 1 |
| ,, | C. Muthucumara Mudaliar | Shroff, Bank of Madras... | 10. Yagathakovil Lane ... | 1 |
| ,, | P. Vencatachalla Mudaliar | Clerk, Mercantile Bank ... | 240. Mint Street Madras ... | 1 |
| ,, | T. Rajagopaul Mudaliar ... | Clerk Messrs Arbuthnot & Co. ... ... | 12. General Muthea Moody Street Madras ... | 1 |
| ,, | C. Sornalingam Mudaliar ... | Shipping Clerk, Messrs Mcdowell & Co. ... | 37. Do. ... | 1 |
| ,, | P. Singaravelu Mudaliar ... | Bank of Madras... ... | Purasawakam ... ... | 1 |
| ,, | C. R. Colandavelu Mudaliar. | Hd. Clerk Do. ... | Komarappa Moody St, Mad. | 1 |
| ,, | G. N. Kalyanasundaram Mudaliar ... ... | Clerk Do. ... | Madras ... ... | 1 |
| ,, | A. Cumarasawmy Mudaliar.. | Head Clerk Do. ... | Chintadripet ... ... | 1 |
| ,, | A. Siyala Mudaliar ... | P. D. O. Do. ... | Vellala Street Parasawakam | 1 |
| ,, | T. Murugesam Mudaliar ... | Pensioner Do. ... | Aucharappa Moody Street Madras ... ... | 1 |
| ,, | C. W. Ragava Mudaliar ... | Acctt. Audit Dept. M. R. C. | Tandayarpet ... ... | 1 |
| ,, | N. Punchanatha Chetty ... | Clerk, M. R. C. ... | Coral Merchant Street Madras ... ... | 1 |
| ,, | M.A. Canthasawmy Mudaliar | Traffic Audit Office M.R.C. | 87. Ayanambakkam Sydapet ... ... ... | 1 |
| ,, | P. T. Subbaraya Mudaliar ... | Store-keeper, M. R. C. ... | 31. Eastern Raja Street Big Conjevaram ... ... | 1 |

| கையொப்பக்காரர்களின் பெயர். | ஜீவனம். | இருப்பிடம். | கையொப் பிரதி |
|---|---|---|---|
| M.R.Ry. E. Parasurama Pillai ... | Head Clerk, T. Ms'. Office, M. R. C. ... | 24. Ramakistna Street Madras ... ... | 1 |
| ,, P Balasubramaniya Mudaliar | Railway Station Master Do. | Tiruvalam ... ... | 1 |
| ,, M. Shadagopa Mudaliar ... | Gumastah ... ... | 3. Casavapermal Street, Maylapore ... ... | 1 |
| ,, S. Casavaraya Mudaliar ... | ... ... | Do. .. | 1 |
| ,, M. A. Subaraya Mudaliar ... | Native Doctor ... ... | 12. South Mada Street Mailapore ... ... | 1 |
| ,, T M. ShanmukasundramPillai | Medical Student ... | Ramasawmy Street, Madras | 1 |
| ,, M. Muthuramalingam Pillai. | Late Cash-keeper G. W. Dean & Co... ... | 18. Do. | 1 |
| ,, T. A. Sivagurunatha Pillai. | Hd. Clerk Alumnium Factory ... ... | Venkatayan lane Madras ... | 1 |
| ,, C. Shunmugam Mudaliar ... | Secy. M. H. O. Fund ... | Mailapore ... ... | 1 |
| ,, T. Murugesa Mudaliar ... | Trustee Sreekapaleeswara Temple Mailapore ... | Do. ... ... | 1 |
| ,, M. E. Chockalinga Mudaliar | Treasurer Mailapore Hindu Permanent F. (Ld) ... | Mailapore ... ... | 1 |
| ம-ள-ள-ஸ்ரீ கு. தங்கவேலு முதலியார் ... | மேஸ்திரி ... ... | 1. தானப்ப முதலிதெருவு சென்னபட்டணம் ... | 1 |
| ,, தி. ஆறுமுக முதலியார் ... | ... ... | 2. வெங்கடராயர் சந்து ஷெ ... | 1 |

| | | | |
|---|---|---|---|
| ,, ப. நம்பி தெய்வநாயக முதலியார் | ... | ... திருவொற்றியூர் ... ... | 1 |
| M.R.Ry. M. Deivasikhamani Mudaliar. | Principal, Tondaimandalam T. V. High School ... | 28. Subramania Mudali Street, Madras ... | 1 |
| ,, A. Krishnasawmy Pillay ... | Medical Student ... | 254. Linga Chetty Street, Madras ... ... | 1 |
| ,, A. Periasawmi Mudaliar ... | Medical Practitioner ... | 219. Mint Street, Madras... | 1 |
| ம-ா-ா-ஸ்ரீ ம. மாணிக்கவேலு முதலியார் ... | சுகஜீவனம் ... | ... 30. சுப்பிரமணிய முதலிதெரு சென்னபட்டணம் ... | 1 |
| ,, பம்மல் சாமிநாத முதலியார் ... | ஷை | ... 73. அண்ணாப்பிள்ளைதெரு சென்னபட்டனம் ... | 1 |
| ,, பாரிவாக்கம் பொன்னுசாமி முதலியார் ... ... | ஷை | ... 2/38. ஆயலூர் முத்தையாமுதலி தெரு சென்னபட்டணம் ... | 1 |
| ,, பட்டு முருகேச முதலியார் ... | வைத்தியர் ... | ... 31. சுப்பிரமணிய முதலிதெரு சென்னபட்டணம் ... | 1 |
| ,, மயிலை இராசு முதலியார் ... | சப்பிளேயர் ... | ... 12. நம்மாழ்வார் தெரு சென்னபட்டணம் ... ... | 1 |
| ,, வெ. துரைசாமி முதலியார் ... | சுதேசவைத்தியர் ... | ... 39. பிடாரியார் கோயில் தெரு சென்னபட்டணம் ... | 1 |
| ,, குத்தம்பாக்கம் திருவேங்கட முதலியார் | சுகஜீவனம் ... | ... 5. ஆய்லூர் முத்தையா முதலி தெரு சென்னபட்டணம் ... | 1 |
| M.R.Ry. C. R. Duraisawmy Pillai ... | ... | ... 117. Ramasawmy Street, Madras ... | 1 |
| ம-ா-ா-ஸ்ரீ காஞ்சிபுரம் சிங்காரவேலுதேசிகர் | சுகஜீவனம் ... | ... 41. முல்லா சாய்புதெரு ... | 1 |

# அநுபந்தம்.

| கையொப்பக்காரர்களின் பெயர். | ஜீவனம். | இருப்பிடம். | கையொப்பம். |
|---|---|---|---|
| M.R.Ry. M. Tillainayakam Pillai ... | Retired Dy. Collector ... | Cuddalore (N. T.) ... | 1 |
| ,, S. T. Shanmugam Pillai ... | Thasildar ... ... | Tindivanam ... ... | 1 |
| ,, P. Singaravelu Mudaliar, B.A. | Asstt. Inspr. of Schools ... | Arcot Division ... ... | 1 |
| ,, K Kuppusami Mudaliar, B.A. | Clerk Edl. Dept Govt. Office | Madras ... ... | 1 |
| ,, T. T. Sabapathy Mudaliar .. | Pensioner Resdt Try. Bangalore ... .. | Mangadu ... ... | 1 |
| ,, C. Rangasawmy Mudaliar ... | Retired Overseer, P. W. D. | Chidambaram ... ... | 1 |
| ,, T. Chockalinga Mudaliar ... | Vakil ... ... .. | Shyali ... ... | 1 |
| ,, T. Murugesa Mudaliar ... | Dubash Alridge Soloman & Co. ... ... | Madras ... ... | 1 |
| ,, C. S. Rangasawmy Mudaliar | Retired Manager, Messrs Parry & Co. ... ... | Chidambaram ... ... | 1 |
| ம-ா-ா-ஸ்ரீ ந. ச. கந்தப்ப முதலியார் ... | புதுவை திவான் ... ... | புதுவை... ... ... | 1 |
| ,, ச. இராமசாமி பிள்ளை ... | அணைக்குடி அரண்மனை ... | அணைக்குடி ... ... | 1 |
| ,, சி. சண்முகவேலாயுத முதலியார் | புதுவை நாடு ... ... | புதுவை... ... ... | 1 |
| ,, பி. தேவராயப் பிள்ளை ... | சிதம்பரம் நாடு ... ... | சிதம்பரம் ... ... | 1 |
| ,, கொப்பியம்திருநாராயணப்பிள்ளை | மிராசுதார் ... ... | சீயாழி ... ... ... | 1 |
| M. R.Ry. K. Chidambaranatha Mudr. | Mirasidar ... ... | Shyali ... ... | 1 |
| ம-ா-ா ஸ்ரீ. பு. வேலாயுதம் பிள்ளை ... | பச்சையப்ப முதலியார் தர்ம விசாரணை அமீனு ... ... | சிதம்பரம் ... ... | 1 |

# சாற்றுக்கவிகள்.

திருநெல்வேலி ம-ா-ா-ஸ்ரீ,

## நெல்லையப்பன் கவிராஜாவர்கள்

இயற்றிய

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

திருமணி மார்பன் மறையயில் வேதன்
    றேடெதற் கரியனுய் நின்ற
வொருவனைத் தினமும் பணிதரு மன்ப
    னுயர்தரு வைசியவே ளாளர்
மருவுறு குலத்திற் கூடலூர் தன்னில்
    வந்தவ தரித்தநம் மகிபன்
றருநிகர் வண்மைச் செங்கையான் கனக
    சபையெனு மொருபெயர் தரித்தோன். (க)

வேறு.

அவாவொடுசெந் தமிழ்க்கவிஞ ருல்லமகிழ் முன்புபெம்மா
    னருளும் வேத
சிவாகமங்கண் முதற்பலநூல் புகல்சாதி பேதமெலாந்
    தேர்ந்து மெய்ம்மை
தவாநிலையின் வருணசிந்தா மணியெனவோர் நூல்வரைந்து
    தந்து வானிற்
றிவாகரனு மதியுமுள தினம்வரையுஞ் சீர்த்திபெற்றுத்
    திகழ்ந்தான் மன்னே. (உ)

திருநெல்வேலி ஜில்லா

ம-ா-ா-ஸ்ரீ,

## வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள்

இயற்றிய

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

---

பரதகண்ட வாணரா ரியர்திரா விடரென்னும்
  பகுப்பி னாவ்
விருவகுப்பி னுல்வருணத் தியற்கைநிலை மாறுபட
  இருக்கு மாற்றால்
வருணசிந்தா மணியெனுநூ லவ்விருவர் வேதமுறை
  வரைந்தான் வண்மை
விரவுவே ளாளர்குலக் கனகசபைப் பெயர்பெற்ற
  மெய்க்கோ மானே.

---

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான் ம-ா-ா-ஸ்ரீ,

## இராமசாமிக்கவிராயரவர்கள்

இயற்றிய

### நேரிசையாசிரியப்பா.

---

நிலமகள்வதனத் திலதம்போன்று
சீர்தருகூட லூர்வருமாந்தர்
பண்ணியபுண்ணியப் பயனெனவுதித்தோ
னெண்ணியவெண்ணிய வெவர்க்குமீவோன்
வாள்ளார்முன்னவர் மகிழும்வைசிய
வேளாண்குலமணி விளக்கெனவிளங்குவோன்
சென்னையில்வசிக்குஞ் செல்வத்தனதன்
றன்னைநேர்தானுந் தகவுபூண்டோ
னன்பும்பொறையு மடக்கமும்வாய்மையு
மின்பமுங்குறையா தெய்தப்பெற்றோன்
சிவனடியாரைச் சிவனெனநினைக்குந்
தவமொருசிறிதுந் தணவாநேமன்
திங்கட்குறையுங் கங்கைத்திரையும்
பொங்கியபுரிசடைப் புங்கவன்மகிழ்வா

யாடகமாத்தன் னசத்தையிதலைப்
பீடுறுந்தனுது பெயராற்றலக்குவோ
னனகஞான வறிவிற்சிறந்த
கனகசபையெனுங் கவிஞர்நாயன்
வடமொழிதென்மொழி வல்லுநனுகித்
திடமுறவாழ்ந்த சித்தத்தெளிவினன்
கலிமிகவந்த காலத்திலுத்தமக்
குலநெறிபெரிதுங் குன்றுதனிப்பான்
சுருதிச்சுருதிமுற் கலையெலாமுணர்ந்து
மருவுமுத்தமநால் வகைமரபினர்தந்
தோற்றமுமொழுக்கமுந் தொழிலும்பிறவுஞ்
சாற்றியோர்புதநூல் தன்னைநன்காற்றி
வருணசிந்தா மணியெனும்பெயராற்
றிருவுறத்தந்தனன் செகத்துமாந்தரீர்
தோற்றிற்புகழொடு தோன்றுகவெனுமுற்
சான்றவருரைத்த தமிழ்க்கவிப்பொருளுக்
கிலக்கியமிவனே யென்பீ
ரலக்கணினிநா மடைகுவதிலையே.

---

திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை
ஆதீன வித்துவான் சேற்றூர் ம-ா-ா-ஸ்ரீ,
சுப்பிரமணியக்கவிராயரவர்கள்
இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள்.

---

திருவெலாங் கூடலினுற் கூடலூ ரெனுநகரஞ்
சிறக்க வந்தோன்
மருவுமுயர் கல்விநல வொழுக்கமுள்ள வரைப்பொன்போல்
வைத்து நோக்கப்
பொருவிலுரை யாணியொப்பான் சிவபூசை மார்க்கண்டன்
புரிந்தான் வாய்மை
பெருகுமிவன் போலென்ன வாங்கதனைப் புறத்தகத்தும்
பேணிச் செய்வோன். (க)

புகழ்வைசிய வேளாள குலதிலக னாருணிநீர்
போலுஞ் செல்வன்
மிகழ்சிவநல் லடியவர்பா லப்பூதி யைப்போலச்
சிறந்த நேச
னகநகட் பெம்மனே ரிடத்துள்ளா னற்குணங்கட்
காக ரம்போற்
றகவுறுசென் னையில்வாசன் கனகசபை யெனுநாமந்
தரித்த மேலோன். (உ)

நலமலியு மிவன்புகழா னென்மூளையைப் புலவரெலா
நவிரா காயப்
புலமதனில் வித்தியிடம் பெருதெஞ்சி யுள்ளவையோர்
புறத்திற் சேர்க்க
வுலகரவற் றினைத்தாரா கணமுமுடு பதியுமென
வுரைப்ப ரென்றாற்
குலவிவன்சீர் மான்மியத்தை யாவரே யளந்தறிந்து
கூறற் பாலார். (ஈ)

ஆயவிவ் னுலகினுக்கோ ருபகாரம் புரியவெண்ணி
யாரி யத்துந்
தூயதமிழ் வேதமுத னூல்களினு மாராய்ந்து
சொன்னு வல்லோ
ரேயசபைக் குந்தெரித்திங் கேவருமே யுணர்ந்துய்வா
னிலகு வான
பாயவசி னத்தினல் வருணசிந்தா மணியெனுநூல்
பாரித் தானல். (ச)

உமையறஞ்செய் பெருமையினுற் றொண்டைநாட் டுயர்காஞ்சி
யுற்ற சாதி
யமைபேத மரபொழுக்கங் குன்றும லுலகறிகாட்
டாய தென்பார்
நமையாளுந் தெய்வமெனுஞ் சேக்கிழார் முதலான்றோர்
ஞால மெல்லாஞ்
சமைவிந்நூ லுணர்ந்தவ்வூர் போலுறச்செய் தானிவன்சீர்
சாற்றப் போமோ. (ரு)

உடுமலைப்பேட்டை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதராயிருந்த
ம-া-ா-ஸ்ரீ,
எம் - ஆர் - கந்தசாமிக்கவிராயரவர்கள்
இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள்.

---

நிலமகட்கு மங்கலநா ணெனுஞ்சென்னை மாநகரி
 னிலைபெற் றோங்கிக்
குலவுபெரு வாழ்வுடையான் சோழநாட் டினிற்சிறந்த
 கூட லூரிற்
பலர்புகழும் வைசியவே ளாளர்குலப் பயோததியிற்
 பரவு மெண்ணெண்
கலைமருவு மதிப்புலவ னெனவுதித்தோன் மலர்மடவார்
 கருணை பூண்டோன். (க)

மறலியைவென் றலகினர்க்கு வியப்பூட்டு மிருகண்டு
 மதலை போலத்
திறமிகுந்த பத்தியொடு சிவபூசை முறைசிறிதுந்
 திறம்பா மேலோன்
குறைவிலமண் குழாமலிந்த கூடலின்முற் குலச்சிறையாங்
 குரிசி லென்ன
வறமிகுஞ்சீர்ச் சைவநெறி வழுவாமற் சென்னைநக
 ரண்மி வாழ்வோன். (உ)

வாய்மையொரு வடிவெடுத்தாற் போன்றபுகழ்க் கனகசபை
 வள்ளன் மேலாந்
தூய்மைபெறு நாற்குலத்தார் தோற்றமொழுக் கம்புரியுந்
 தொழின்மு னெல்லாஞ்
சேய்மையுறு மெம்போல்வா ரறிந்துய்யத் தான்கருதிச்
 சிந்திப் போர்க்கு
நோய்மைசெயும் பற்பலமுன் னூற்புரட்டை விலக்கிமறை
 முறையிற் காட்டி. (ங)

வருணசிந்தா மணியெனுநூ லொன்றுபுவிக் கினிதளித்தான்
 மாநா வல்லீர்

திருணமறிந் தெப்பொருளுந் தருபவருக குவயாணந்
சாற்ற வேண்டின்
மருவுசிந்தா மணியென்பீர் மற்றதையே யிவன்கொடுத்
மாண்பா லுன்னிப்
பொருவுமுவ மானமிவற் கினியுலகிற் கண்டிலிரெப்
போதுந் தானே. (௬)

---

ஞானபோதினிப் பத்திராதிபர் ம-ா-ா-ஸ்ரீ,

எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளையவர்கள், பி. ஏ.

இயற்றிய

நிலமண்டில ஆசிரியப்பா.

---

மன்னுசீருலகில் மாணிடப்பிறப்பில்
வருணநான்கென வகுத்தனர்முன்ன
மாரியர்திராவிட ரம்முறைமுழுதும்
யாவருளத்து மெளிதினில்விளங்கக்
கூடலூர்ப்பதியிற் குணநிதிவாய்ந்த
கனகசபையெனக் கருதும்பெயரோன்
வருணசிந்தா மணியெனுமொருநூல்
வசனநடையின் மாண்புறவெழுதி
யருளினனிதுவுமோ ரரியநூலே.

---

திருநெல்வேலி ம-ா-ா-ஸ்ரீ,

அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள், யம். ஏ.

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள்.

---

வேதமுதற் பலகலைகள் விளங்குமொரு நாற்சாதி
மெய்ம்மை சற்றும்
பேதமுறா வகையெளிதிற் கற்றூர்க்குங் கல்லார்க்கும்
பிறங்கும் வண்ணம்

போதமுறு வருணசிந்தா மணியெனுநூல் கூடலூர்ப்
புகழ்வே ளாளர்
மாதவத்தால் வருகனக சபைவள்ளல் வரைந்தன்பின்
வழங்கி னனால். (க)

எக்குறையு மில்லாம லாரியமுந் திராவிடமு
மெனும்வே தங்கள்
புக்கரியா யமுயேனைப் புராணவிதி காசமுதற்
புகலு மெய்ம்மைத்
தக்கபல நூல்களினு முள்ளரியா யமுமிந்நூ
றகவுற் றேங்கத்
தொக்கவுதா ரணமாகக் காட்டினு னிவன்பெருமை
சொல்வார் யாரே. (உ)

---

மதுரை - சேதுபதி ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ,
அ. சண்முகம்பிள்ளையவர்கள்
இயற்றிய
எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள்.

---

முகில்வண்ண முடனபங்கீண் டாரமஞ் சூழு
முறைமையான் முராரியென முண்டகமின் முன்னி
யகலாம லுறவங்கண் மாலுந்தி மேவி
யருமறையை நான்முகத்து மான்றோர்வாய் மொழியுந்
தகவினய னெனவாணி தங்குறவெஞ் ஞான்றுந்
தருமமுயர் வளமொடேற் கல்விநிறை தகைத்தாய்ப்
புகலெனவந் தெய்துபிற தேத்தார்க்குங் குன்றாப்
பொருள்பயக்கு மாணதியாம் புகல்கூட லூரே. (க)

அங்கர வயினுல்கு செய்தவமே கருவா
யன்புபொறை கொடைமேன்மை யறிவொழுக்க முறுப்பாய்
மண்ணிபுசெந் தமிழ்மொழியு மாங்கிலமும் வளர
மதிவளர்செஞ் சடைவளர்மாண் சங்கைகுலம் வளர

வுன்னியரு ளுயிராகப் பிறந்துவள ருரவோ
னுயர்சிவார்ச் சனைபுரியு மொள்ளியமெய்த் தவத்தோன்
கன்னலமு தன்னவின்சொ னூல்வாயுங் காட்டுங்
கனகசபை வள்ளலெனக் கவினுமகி பதியே. (௨)

மருணசிந்தா மணிமாதி யுடன்வீடு பேறு
வாய்த்தபெரி யாரிவையே யரியபொருள் வாய்ந்த
தருணசிந்தா மணியடைமி னெனவருளாற் சாற்றுந்
தமிழ்மறையா ரியவேதம் பிறநூலு மோர்ந்தே
யருணசிந்தா மணிவிருள்போக் கொளியெனநா டெங்கு
மவிரியசாற் குலத்தமுசூ மையவிரு ளகல
வருணசிந்தா மணியெனவோர் நூலினிய தமிழின்
வாசகத்தா லியல்வல்லோர் மகிழ்தரச்செய் தானே. (௩)

---

புரசை
அஷ்டாவதானம் சபாபதிமுதலியாரவர்கள்
மாணக்கர் ம-ா-ா-ஸ்ரீ,

## தண்டலம் - பாலசுந்தர முதலியாரவர்கள்

இயற்றிய

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

---

ஓதருமெண் ணெண்விளையாட் டியற்றக் கூட
லூர்வருநற் கனகசபை வள்ள றல்பாற்
றீதறுசெந் தமிழ்வேத மாந்தே வாரச்
சிந்தா மணிபிரகா சித்த தேபோ
லோதமலி வயல்புடைசூழ்ந் தோங்குங் கூட
லூர்வருநற் கனகசபை வள்ள றன்பா
னீதமுறு வருணசிந்தா மணிதான் றோன்றி
நிலவுறுவிம் மிதப்பெருக்கியா னிகழ்த்தற் பாற்றே.

---

அஷ்டாவதானம் ம-ா-ா-ஸ்ரீ,

## பூவை - கலியாணசுந்தர முதலியாரவர்கள்

இயற்றிய

### இரட்டையறுசீர் விருத்தம்.

திகழுற்றேன் கூடலூ ரிற்சைவ
வேளாளர் திலக மாகிச்
சென்னையம் பதியதனிற் பிரபலமுற்
றேவநியுஞ் சீமா னியாரும்
புகழ்கனக சபைக்கோமான் திராவிடவா
ரியமொழிகள் புகலும் பன்னூற்
பொருணலனைச் சூழ்ந்துபிர மாணங்க
ணிதேடிப் பொருந்தக் காட்டிச்
சகமகிழு மொழுக்கமோ டாசார
மாதியவை சதுராத் தீட்டித்
தன்னிகரி றென்மையாஞ் சதுர்வருண
வுண்மையினைத் தக்கோர் தேர,
மிகவருமை நூலெனநா வலரனைவ
ருங்கூறி வியந்து பேச
விளம்பினனல் வருணசிந்தா மணியிதன்
பெருமை விரிக்கற் பாற்றே.

---

திருமயிலை ம-ா-ா-ஸ்ரீ,

## செந்தில்வேலுமுதலியாரவர்கள்

இயற்றிய

### வெண்பா.

ஆரியமுஞ் செந்தமிழு மாய்ந்தவற்றி னுட்பொருளைப்
பாரினில்வாழ் மாந்தர் பகுத்தறிவான்,—சாருங்
கருணையினாற் செய்தான் கனகசபைக் கோமான்
வருணத்தின் சிந்தா மணி.

திருமயிலை ம-ா-ா-ஸ்ரீ,

வி. சுந்தர முதலியாரவர்கள்

இயற்றிய

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

---

மலரவன் வதனந் தோள்கவா னடியில்
 வந்தநால் வகைவரு ணத்தோர்
நிலைமுறை மேல்கீழ் மாறிமங் குறலா
 னீடிய சுருதியே முதலாம்
வலனுறு பலநூ லுண்மையைத் திரட்டி
 வருணசிந் தாமணி யெனுநூல்
தலமுயர் கூட னகர்வருங் கனக
 சபைவலோன் சாற்றிநல் கினனால்.

---

சென்னை பச்சையப்பன் கலாசாலை

இங்கிலிஷ் பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ,

ஸ்ரீ. அ. திருமலைக்கொழுந்துப்பிள்ளை. பி. ஏ.

அவர்களியற்றிய

கலிவிருத்தம்.

---

அருளமையும் வேளாள ருமரபி னினிதுதித்த
பெருமானுங் கனகசபைப் பெயர்வள்ளல் பேதமுறு
மருணீங்க மறையாதி நூல்வகுத்த முறைப்படியே
வருணசிந்தா மணியெனுநூல் வரைந்தளித்தான் மதிவல்லீர்.

---

சென்னைக் கிரிஸ்டியன் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ,

ஈக்காடு - இரத்தினவேலு முதலியாரவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள்.

---

சீர்மன்னு மிறையவனு முனிவரரும் பலதிறத்தாற்
 சிறப்பச் சொன்ன
நார்மன்னு குலமுறைகண் முறைபிறழ்ந்து நானிலத்தி
 னடத்த னோக்கி

யேர்மன்ன வித்திறத்த திக்குலமென் றெவருமெளி
      துணரற் கெண்ணிப்
பார்மன்னு பலநூன்மேற் கோள்காட்டிக் கத்தியமாம்
      படிவந் தன்னில். (௧)

முன்னூலாய் முறைதிறம்பா வாரியமுந் திராவிடமு
      மொழிந்த வற்றைப்
பன்னூலின் வழியறிந்தே வருணசிந்தா மணியென்னும்
      பாண்மை மிக்க
நன்னூலொன் றியற்றியச்சிற் பதிப்பித்தி யாவருக்கு
      நல்கி னனா
லிந்நாளி லிவன்செயற்குக் கைம்மாறென் றில்லையவன்
      யாவ னென்னில். (௨)

தென்னாடு செய்தவமுங் கங்கைகுலஞ் செய்தவமுஞ்
      சேர வொன்றி
மன்னுநின் றதுங்கரக் கூடலூர் தனிற்றோன்று
      மாட்சி மிக்கோ
னென்னும்பற் புலவர்புகழ் கனகசபை யெனும்பெயரே
      யேற்ற தூயோ
னன்னுவ லவர்நாவி லெந்நாளு நீங்காத
      நலமிக்கோனே. (௩)

---

விருதை ஸ்ரீலஸ்ரீ

## சிவஞானசுவாமிகளியற்றிய

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

---

திருமறைக ளுரைத்தவெழிற் குலமுறைக ளுள்ளபடி
      தெரியும் வண்ணம்
வருணசிந்தா மணியெனுநூ லினிதியற்றிப் புகழுலகில்
      வயங்கப் பெற்றான்
றருமநெறி யொழுகழகன் வைசியவே ளாளகுலந்
      தன்னில் வந்த
பெருமிதநற் கூடலூர்க் கனகசபைப் பிள்ளைமிகு
      பெருமை யோனே.

---

# சாற்றுக்கவிகள்.

காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார் பாடசாலைத்
தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ,

## வேலுச்சாமிபிள்ளையவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

---

பூமேவு மிருதிறமாப் பொருளுடையான் புராந்தகனைப்
பூசிப் போனாற்
காமேவு கூடலூர்க் கனகசபை வள்ளல்சென்னைக்
கண்வாழ் கின்றோன்
மேமேவு தமிழ்மறையா ரியமறையா தியநூல்கண்
மேற்கோள் காட்டி
மாமேவு முறைதிறம்பா வருணசிந்தா மணியெனுநூல்
வகுத்தான் மன்னோ.

---

தஞ்சை ம-ா-ா-ஸ்ரீ,

## வ. சா. சோமசுந்தரம்பிள்ளையவர்கள்; பி. ஏ.

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள்.

---

வாரிசமன் மலருக்கு மகரந்தங் கண்டணுகும்
வண்டே யென்ன
வாரியருண் புகலிடமற் றுதலரா யாளிரையோ
டலமந் தந்தோ
சீரியமேரர்த் தொழில்பயின்ற திராவிடர்வா ழிவ்விந்து
தேயந் தன்னிற்
போரியற்றிச் சிலராடக்கிப் புத்தேளி ரெனவெருட்டிப்
புகுந்தா ரந்நாள். (க)

ஊதியங்கொள் ளக்கத்தினரா யுவாமதியிற் கறையென்ன
வுலகிற் றோன்றி
வேதியர்தா மியற்றுமறை யிதிகாச புராணாதி
வேலை பொங்கத்

நீதியற்றி மெய்ம்மறைத்துத் தேவரெனத் தமையுயர்த்திச்
செறுநர் நான்காஞ்
சாதியெனப் பிரிவுஞற்றித் தந்தையைத்தன் சேய்பகைக்கச்
சழக்கர் செய்தார். (உ)

வனசமலர்ச் செல்வியுடன் வான்மதியு மருமருந்தும்
வாரி தோன்ற
முனங்கடைந்து தருந்தேவ ரெனவிந்நாட் பேதமுற்
முடிவொன் றின்றித்
தினம்பெருகும் பலவேறு நூற்புணரி கூடலூர்ச்
சிறந்த கல்விக்
கனகசபை வள்ளலுமோர் வருணசிந்தா மணியமுதைக்
கடைந்தே தந்தான். (௩)

---

குன்றத்தூர் ம-ா-ா-ஸ்ரீ,

## மதுரகவி - மாணிக்கமுதலியாரவர்கள்

இயற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வேதியரே முதலான வருண நான்கின்
விளக்கமெலா மறையாதி விரிந்த நூலி
னீதியினுன் முறைப்படியே வகுத்துக் காட்டி
நிலவுலகோர் மனத்தைய நீக்கு மாற்றூற்
காதலுடன் சேர்த்தவளக் கூட லூர்வாழ்
கனகசபைப் பெயர்ப்புலவோன் கரைந்த ளித்த
வேதமிலா வருணசிந்தா மணிப்பேர் நூற்கின்
கெம்மனோர் கைம்மாறென் னியற்று வோமே.

---

சுதேசமித்திரன் சப் எடிட்டர் ம-ா-ா-ஸ்ரீ,

## முத்தூர்· அ. சங்காலிங்கம்பிள்ளையவர்கள்,பி.ஏ.

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பணியொன்று பெருநயனச் சிறுமியர்க ணீர்குடையும்
வாவி சூழ்செய்

மணியொன்று கதிர்காட்டுங் கூடலூர் வந்துநால்
வருணத் தின்சீர்
மணியொன்று மாரியமுந் திராவிடமும் வருத்தபடி
வருண சிந்தா
மணியொன்று வரைந்துதந்தான் மணியொன்று கனகசபை
மதிவல் லோனே.

---

விருத்தாசலம் - தியாகராஜக் கவிராயரவர்கள்
குமாரர் ம-ா-ா-ஸ்ரீ.

## கலியாணசுந்தரம் பிள்ளையவர்கள், பி.ஏ.

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

---

பாற்கடலைக் கடைந்தந்த நாளமுதம் பகிர்ந்திட்ட
பண்பின் மிக்க
மாற்குநிக ரெனவிந்நாண் மறைமிருதி முதலாச்சொன்
மன்னுஞ் சீர்த்தி
நூற்கடலைக் கடைந்தெடுத்து வருணசிந்தா மணியீந்த
வுதவி நோக்குங்
காற்கனக சபைப்பெயர்கொள் வள்ளலுக்கிவ் வுலகுசெயுங்
கைம்மா றென்னே.

---

ஹைகோர்ட்வைக்கீல் ம-ா-ா-ஸ்ரீ,

## தி. வீரபத்திர முதலியார், பி. ஏ., பி. எல்.

அவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள்.

---

முருகவே ளனச்சிந்தா மணியளிக்கும் வேட்டபொருண்
முன்னு ளென்றப்
பொருவிலுரை விளக்கவிந்நாட் புலவர்சங்கைத் தெளிவளிக்கப்
புகுந்தாற் போல

வருணசிந்தா மணியென்னும் வரநூலொன் றரிதியற்றி
 வாழ்த்தப் பெற்றான்
கருணைமிகு காராளன் கூடலூர்க் கனகசபைக்
 கவிவல் லோனே. (க)

வேதமுட னாகமமே புராணமிதி காசமுதல்
 விரித்தே யுள்ள
வோதரிய பலநூல்க ளுரைத்தவற்றிற் பொதிந்துள்ள
 வுண்மை தேர்ந்து
சாதுரிய மெனப்புலவர் தலைக்கொள்ள வருணைச்சித்
 தாந்தஞ் செய்தான்
கோதுரைக ளவையறிந்து புரட்டெடனவே கோதாரிஇக்
 குணங்கொண் டானால். (உ)

---

சோழ்வந்தான் - சுப்பிரமணியபிள்ளையவர்கள்
குமாரர் ம-ா-ா-ஸ்ரீ,
## சு. அரசப்பபிள்ளையவர்கள்
இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள்.

---

சீர்திகழச் செயந்திகழத் திருமாலி னூரந்திகழுந்
 தெய்வப் பாவை
யேர்திகழக் கூடலூறுங் கூடலூ ரெழிறிகழ
 விலங்குங் கங்கை
நீர்திகழுங் குலந்திகழ நிலத்தின்மிசைக் கனகசபை
 நிருபனென்னும்
பேர்திகழ வவதரித்தான் பெரியோர்க ளுளந்திகழும்
 பெற்றி யோனே. (க)

ஆங்கிலமு மருந்தமிழு மகத்தாய்ந்தான் கவிஞர்கட்கே
 யாக்கஞ் செய்வான்
பாங்கிலகுந் தருமநெறிப் பான்மையினான் றமிழ்வேதப்
 பார்வை மிக்கான்

ருங்கிலகுந் தார்மார்பத் தடம்புயத்தா னந்தணர்முற்
சாதிக் கேற்ற
தேங்குலவு மொழுக்கநெறி திறம்பவது சிந்தைபொருண்
டெள்ளி யோனே. (௨)

வருணமிவை வருணமெலாம் வழங்குநெறி யிவையென்றெம்
மனத்தைத் தேற்றி
யிருணசிக்கத் தக்கவரெங் குள்ளாரென் றுலகியம்ப
வெழுந்து தக்க
தருணமிது வெனத்துணிந்து தமிழ்வசனத் தணிதரவே
தட்தா ணிந்த
வருணசிந்தா மணியையீந்தான் மணிக்கிணையெம் மணியியம்ப
வல்லம் யாமே. (௩)

---

திருமயிலை ம-ா-ா-ஸ்ரீ,

## தேவாரம் - முத்துசாமி முதலியார்

அவர்களியற்றிய

### நீலமண்டில ஆசிரியப்பா.

---

நீர்வள மில்வள நிறைந்து நிலவிய
சீர்வளர் தவத்தோர் திகழச் சார்ந்திடு
மேர்வளர் நல்லெனலா மென்று முள்ளது
கூடலூ ரென்னுங் கூற்றுதைத் தோன்கழற்
பாடலுறுத பண்புடை யப்பதி
தன்னில் வைசியவே ளாளர்தம் மரபி
லுன்னுதற் கரிய வுடையோ னருளாற்
சயம்பிர காசத் தொல்சீர் கோத்திரம்
நயம்பெற வந்து நற்செய னீங்காத்
திருவுங் கல்வியுஞ் சிறப்பு முடையோ
னுருவும் புகழு மூக்கமு முடையோ
னெங்குரு மலரடி யிணையுறு மனத்தோன்
றிங்களிற் சாந்த சித்தந் திகழ்ந்தோன்
கனவினுந் தீமை காணுக் கருத்தோ
னினமுறு சால்பு மிரக்கமுங் கொண்டோன்

வன்மையென் பனவெலா மற்றவர் பாலுற
நன்மையென் பனவெலா நண்ணிய நலத்தோ
னில்லற மல்லது நல்லற மிலையெனச்
சொல்லற முரைத்த தூய்மதி யௌவை
வாக்கை நாடியே வாழ்க்கை நலமென
வாக்கைக் குரிய வன்புடை யாளொடு
மில்லறத் திருந்து மிதய மடக்கிய
வல்லவர் தாமே வல்லவ ரென்றுரை
நல்லவ ருரைதனை நடத்திக் காட்டிய
மக்கட்பே றல்லது வேறுபே றிலையெனத்
திக்கெட் டுரைக்குந் திருக்குறள் புரிந்தோ
னிராஜாங் கத்தி னைரோப் பியர்கள்
பராவுறச் செலுத்தும் பாஷையிற் பயின்றே
யக்கவுண் டாண்டெனு மாபீ சதனிற்
சொற்க டவருச் சூப்பரிண் டெண்டாண்
டுத்தியோ கத்தி லுயர்ந்தினி திருந்து
சித்தி பெற்றுப் பென்ஷன ராகி
யரனடி யருச்சனை யன்றிமற் றொன்றுந்
திரமுறு பவநோய் தீர்த்திடா தெனவச்
சம்புவின் பூசனை தன்னை நாடொறு
நம்பிமெய் யன்பா னடாத்திடு நண்பன்
கிரியையா ஞானங் கிடைக்கு மதன்றி
யுரியமெய்ம் முத்திக் குபாயம்வே றிலையென
வேதா கமமுதல் வேறுமற் றுள்ளன
வோதுநாற் பகுதியு முளங்கொளக் கற்றுத்
திருக்குற ளுரைமுதற் சிறந்த தேவாரஞ்
சுருக்கமின் றறிந்த துகளில்பே ரறிவினோன்
றிருமகள் கலைமகள் சிறந்த ஞானமாங்
குருமகண் மூவருங் கூடி வாழுநாள்
வேளாள ரென்பவர் வள்ளன்மை யாண்மிகுந்
தாளாள ரென்றுரை தமிழ்ஞான சம்பந்த
னுயர்ந்தேன் மனைவாழ்க் கைஇல் லென்றுசொ
னயம்பட வைத்த நாவுக் கரசர்
பல்குடை நீழலுந் தங்குடைக் கீழென

வுலகிய லருளிய லொருங்குட னுரைத்த
திருவள் ளுவர்செய் செழுந்தமிழ் முழுதுந்
தெருள்படப் பயின்று தெய்வவை திகமுஞ்
சைவமு முலகிற் றழைத்திட வந்தே
யையர்தங் கருணையே யாதார மாக
வருணாச் சிரம வழக்கெலா முலகின்
மருளாச் சிரமமாய் வழங்கா வண்ண
மிருக்கியசுர் சாம மதர்வண மெல்லாந்
திருக்கற வுணர்ந்து சித்த நல்லறிவாற்
கருணையை நோக்குங் கனக சபைப்பேர்ப்
பொருணீயீர் தழுவிக் கொண்டவப் புநிதன்
வருண சிந்தா மணியெனும் வசனநூ
றிருக்கரங் கொண்டு தீட்டிய தன்றியு
மருட்கரங் கொண்டச் சிற்பதிப் பித்தன
னயர்வற வெனக்கே யருட்டுணை யாகியென்
னுயிரினுஞ் சிறந்த வொருமை யெனன்ப
னூழிதோ றூழி யுலப்புறா தோங்கி
வாழியென் றனக்கும் வாய்த்தநன் னட்பே.

— ❧ —

# அட்டவணை.

## முதலாவது ஆரியகாண்டம்.

## முதலாவது அத்தியாயம், ஆரியவேதம்.


| | பக்கம். |
|---|---|
| விநாயகர் வணக்கம் ... ... ... ... | 1 |
| **ஆரியவேதம்.** | |
| இருக்குவேதப் பாகுபாடு ... ... ... ... | 3 |
| யசுர்வேத ,, ... ... ... ... | ,, |
| சாமவேத ,, ... ... ... ... | 5 |
| அதர்வணவேத ,, ... ... ... ... | ,, |
| **I. இருக்குவேதம்.** | |
| **A. ஆரியர்.** | |
| இந்தியாவின் எல்லை ... ... ... ... | 6 |
| உத்தரதேசம் ... ... ... ... ... | ,, |
| பிரமவர்த்தம் ... ... ... ... ... | 7 |
| பிரமரிஷிதேசம் ... ... ... ... | ,, |
| மத்தியதேசம் ... ... ... ... ... | ,, |
| ஆரியாவர்த்தம்... ... ... ... ... | ,, |
| பிராமணர்களுக்குரிய இடம் ... ... ... ... | ,, |
| சூத்திரர்களுக்குரிய இடம் ... ... ... | 8 |
| தக்ஷணதேசம் ... ... ... ... ... | ,, |
| பஞ்சகௌடம் ... ... ... ... | 9 |
| பஞ்சதிராவிடம் ... ... ... ... ... | ,, |
| தேசங்களின் உயர்வு தாழ்வு ... ... ... | ,, |
| தக்ஷணதேசப்பிர்பாவம் ... ... ... ... | 10 |
| ஒழுக்கபேதம் ... ... ... ... ... | 11 |
| **B. தாசர்கள்.** | 12 |
| **C. இராக்ஷதர்.** | 16 |
| **D. அசுரர்.** | ,, |

| | பக்கம். |
|---|---|
| பிராமணன். | 17 |
| புரோகிதன் ... ... ... ... ... | 18 |
| இருடியர் ... ... ... ... ... | 19 |
| வேதஞ்செய்த ஆண்பாற் கிரந்தகர்த்தர்கள். | ,, |
| வேதஞ்செய்த பெண்பாற் கிரந்தகர்த்தர்கள். | ,, |
| க்ஷத்திரியன். | 21 |
| வைசியன். | ,, |
| சூத்திரர். | 26 |
| பிரஹ்மா... ... ... ... ... ... | 27 |
| பஞ்சஜனம் ... ... ... ... ... | 28 |
| புருஷசூக்தம் ... ... ... ... ... | 29 |
| விராட்புருஷசொரூபம் ... ... ... ... | ,, |
| மாநதயாகம் ... ... ... ... ... | 33 |
| சிருஷ்டி ... ... ... ... ... | 35 |
| II. சாமவேதம். | 40 |
| III. யசுர்வேதம். | ,, |
| கிருஷ்ணயசுர்வேதம் ... ... ... ... | 41 |
| சுக்கிலயசுர்வேதம் ... ... ... ... | 42 |
| வேதத்தில் கூறும் ஜாதி அட்டவணை ... ... ... | 44 |
| IV. அதர்வணம். | 47 |
| பிராஹ்மணங்கள். ... | 49 |
| ஐதரேயப்பிராஹ்மணம் ... ... ... ... | 50 |
| தைத்திரேயப் பிராஹ்மணம் ... ... ... | 60 |
| சதபதப்பிராஹ்மணம் ... ... ... ... | 62 |
| கோபதப்பிராஹ்மணம் ... ... ... ... | 63 |
| ஆரண்ய உபநிஷத்துகள். | 64 |
| பிரஹ்தாரண்ய உபநிஷத்து ... ... ... ... | ,, |
| தைத்திரேய உபநிஷத்து... ... ... ... | 66 |
| சூத்திரங்கள். ... | 67 |
| காத்தியாயன சூத்திரம் ... ... ... ... | 67 |
| பௌதாயன சூத்திரம் ... ... ... ... | 69 |
| ஹிரண்யகேசி சூத்திரம் ... ... ... ... | 70 |
| ஹிரண்யகேசியின் ஸ்மார்த்த சூத்திரம் ... ... | 71 |
| ஹிரண்யகேசியின் சமயாசார சூத்திரம் அல்லது தருமசூத்திரம் | 71 |

பக்கம்.
ஆபஸ்தம்ப சமயாசார சூத்திரம் ... ... ... 75
ஆஸ்வலாயன சிரௌத சூத்திரம் ... ... ... 76
ஆஸ்வலாயன கிரஹ்ய சூத்திரம் ... ... ... 77
மாநவகல்ப்பம்... ... ... ... ... ,,

## இரண்டாம் அத்தியாயம் வருணோற்பத்தி.

வருணமுண்டாயின வரலாறு ... ... ... ... 80
வருணங்களின் தாதுப்பொருள் விளக்கம்... ... ... 82
வருணத்தைப்பற்றிய ஞாயவாதிகளின் கருத்து ... ... 83
பிராஹ்மண கருமம் ... ... ... ... 85
க்ஷத்திரியகருமம் ... ... ... ... ... 86
வைசியகருமம்... ... ... ... ... ,,
சூத்திரகருமம் ... ... ... ... ... 87
சாதுர்வருணத்தார் தவங்கள் ... ... ... ,,
சாதுர்வருணத்தின்பேரில் ஐரோப்பிய கிரந்தகர்த்தர்களின் விவரணம் ... ... ... ... 88
I. பிராஹ்மணர்.
பிராமணர் முதன்மையாதற்குக் காரணம் ... ... 101
தேவரினும் பிராமணருயர்ந்தவரெனல் ... ... 102
சகல தீர்த்தமும் அந்தணரிடத்தெனல் ... ... ... 103
திரிமூர்த்திகளினும் மேலானவர் அந்தணரெனல் ... ,,
பொழுதுவிடிகிறதும் அஸ்தமிக்கிறதும் அந்தணர்களாலெனல் ... ... ... ... ... 104
பிராஹ்மணரால் உலகுநிலைபெற்றிருக்கின்றதெனல்... ... 105
அந்தணர் அறுதொழில் ... ... ... ... 106
அந்தணரின் நித்தியகருமம் ... ... ... ... 107
அந்தணரின் சிரௌதகரும ஸ்மார்த்தகருமங்கள் ... ,,
அந்தணன் செய்யவேண்டிய சத்சமஸ்காரங்கள் 40 ... ... 110
சோடசகிரியை செய்யும்வகை ... ... ... 111
பிரமசரிய ஆச்சிரமம் ... ... ... ... 115
கிரகஸ்தாச்சிரமம் ... ... ... ... 117
வானப்பிரஸ்தாச்சிரமம் ... ... ... ... 118

# அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| சந்நியாச ஆச்சிரமம் ... ... ... ... | 119 |
| பிராமணத்தியர்களின் சீவனவிருத்திகள் ... ... ... | 120 |
| பிராமணர்க்கீந்த தானபலன் ... ... ... | 121 |
| அந்தணர்க்கீந்ததானம் அனைத்துயிர்க்கீந்ததானமெனல் ... | 122 |
| பிராமணருக்கேதானஞ் செய்யவேண்டுமெனல்... ... | ,, |
| உபாத்தியாயர் ... ... ... ... ... | 123 |
| புரோகிதம் ... ... ... ... ... | 124 |
| சாஸ்திரிகள் ... ... ... ... ... | 125 |
| சமாராதனை ... ... ... ... ... | ,, |
| யாககாரியம் .. ... ... ... ... | 127 |
| அந்தணர்களுக்கு வரும்படி ஏற்பாடு... ... ... | 130 |
| பிராஹ்மணர்களினுட்பிரிவு ... ... ... ... | 132 |
| வந்தனமுறை ... ... ... ... ... | ,, |
| ஆரியர் ஒழுக்கம் பார்சீகரை ஒத்ததெனல்... ... ... | 134 |
| அந்தணன் சூத்திரனுக்குத்தருமசாத்திரமுணர்த்தலாகாதெனல் | 135 |
| அந்தணன் இன்னவிடங்களில் வசிக்கத்தகாதெனல்... ... | ,, |
| தண்டனைவிதி ... ... ... ... | ,, |
| அந்தணனுயிருக்கும் சூத்திரனுயிருக்குமுள்ளபேதம்... ... | 137 |
| அந்தணன் சொற்படி அரசன் நீதிசெலுத்தவேண்டுமெனல் | 138 |
| க்ஷத்திரியன் அந்தணர்க்குள் அடங்கியதற்குக்காரணம் ... | 139 |
| சாதியேற்பாடு அழியாதிருப்பதற்குக் காரணம்... ... | 141 |


## II. க்ஷத்திரியன்.


| | |
|---|---|
| அரசனே முதன்மையானவனெனல் ... ... ... | 143 |
| அரசன் தேவாமிசம் பெற்றவனெனல் ... ... | 144 |
| அரசனுக்குரிய அறுதொழில் ... ... ... ... | 146 |
| இறைமாட்சி ... ... ... ... ... | 146 |
| அரசர்களின் 56-தேசம் ... ... ... ... | 147 |
| அரண் ... ... ... ... ... | 149 |
| அமைச்சு ... ... ... ... ... | ,, |
| அரசன்குழு ... ... ... ... ... | 150 |
| அரசசின்னம் ... ... ... ... ... | ,, |
| உலகோம்பல் ... ... ... ... ... | 151 |
| பொருள்செயல்வகை ... ... ... ... | ,, |
| விசாரணை ... ... ... ... ... | 152 |

பக்கம்.
படை ... ... ... ... ... ... 152
III. வைசியன். ... 153
விற்றற்குரிய பண்டங்கள் ... ... ... ... 156
வைசியதருமத்தின்பயன் ... ... ... ... 162
வைசியன் இவ்விதிதவறியவழிவருங்குற்றம் ... ... ,,
IV. சூத்திரன். ... 163
சட்டங்களுக்கடங்காத துவிஜர் விராத்தியரெனல் ... ,,
சட்டங்களுக்கடங்கிய பூர்வகுடிகள் சூத்திரரெனல் ... 164
சட்டங்களுக்கடங்காத பூர்வகுடிகள் தாசரெனல் ... ,,
சூத்திரன் கருமம்... ... ... ... ... ,,
சூத்திரர்க்குழவுதொழிலாகாதெனல் ... ... ... 166
சூத்திரன் பிராமணனது வேலைக்காகவே சிருட்டிக்கப்பட்டானெனல் ... ... ... ... ... 167
சூத்திரனுக்குத் தான்தேடிய பொருளினுஞ் சுதந்தரமில்லையெனல் ... ... ... ... ... 168
எசமான் சூத்திரனுக்குச் செய்யவேண்டிய கடமை ... ,,
சூத்திரபேதம் ... ... ... ... ... 170
சூத்திரபேதமும் அவர்பொருள் வேள்விக்காகாதென்பதும்.. 171
சூத்திரனுக்கு உயர்வொழுக்க மில்லையெனல் ... ... 172
சூத்திரனுக்கு வைதிககிரியை யில்லையெனல் ... ... ,,
சூத்திரனுக்கு விவேகத்தை விளக்கலாகாதெனல் ... ... 173
சூத்திரன் வேதமோதலாகாதெனல்... ... ... ,,
சூத்திரனுக்கு இழிபெயரிடவேண்டுமெனல் ... ... 174
தண்டனைவிதி ... ... ... ... ,,

## இரண்டாவது திராவிடகாண்டம்.

## முதலாவது அத்தியாயம், திராவிடவேதம்.

வேதமுடையபாஷைகள் ஆரியந்திராவிடமெனல் ... ... 177
திராவிடவேதம் இவையெனல் ... ... ... 179
திருவள்ளுவநாயனார் திருக்குறள் வேதமென்பதற்குப் பிரமாணம் ... ... ... ... ... 181
மூவர்தேவாரம் வேதமென்பதற்குப் பிரமாணம்... ... 182

பக்கம்.

திருவாசகம் திருக்கோவையார் வேதமென்பதற்குப் பிரமாணம் ... ... ... ... ... 184
ஆரியவேதம் இருடிகளாலாக்கப்பட்டது எனல் ... ... 185
திராவிடவேதம் முனிவர்களா லாக்கப்பட்டது எனல் ... 190
திராவிடவேதங்களினற்புதங்கள் ... ... ... 196
ஆரியவேதம் பசுநூலென்பது ... ... ... ... ,,
திராவிடவேதம் பதிநூலென்பது ... ... ... 202
ஆரியதிராவிடங்களுக்கு ஆசிரியர்கள் ... ... ... 203
திராவிடந் தெய்வபாஷையெனல் ... ... ... 204
ஆரியந் தாய் பாஷையெனல் ... ... ... ... 203
திராவிடம் தந்தைபாஷையெனல் ... ... ... ,,
ஆரியம் எழுதாமறையெனல் ... ... ... ... 209
திராவிடவேதம் எழுதுமறையெனல் ... ... 212
ஆரியதிராவிடங்களுக்குள்ளபேதம் ... ... ... 215

## இரண்டாவது அத்தியாயம் வருணவிளக்கம்.

### I. தேவாரம்.

அந்தணர் ... ... ... ... ... 217
அரசர்... ... ... ... ... ... 218
வைசியர்... ... ... ... ... ... 219
சூத்திரர் ... ... ... ... ... 221

### II. தேவர் குறள். ... 222

பரசிவ வணக்கம் ... ... ... ... ... 223
பராசத்தி வணக்கம் ... ... ... .. 251
அந்தணர் சிறப்புத்தருமம் ... ... ... ... 253
முதன்மூவருக்கும் பொதுத்தருமம் ... ... ... 256
அரசர் சிறப்புத்தருமம் ... ... ... ... ,,
வைசியர் சிறப்புத்தருமம்... ... ... ... 257
சூத்திரர்தருமம் ... ... ... ... ... 260

### III. இதிகாசம்.

சாதுர்வருணதருமம் ... ... ... ... 262

பக்கம்.

## IV. நிகண்டு.


சாதுர்வருணம் ... ... ... ... 263

### I. அந்தணர்.

சிவபிரானிடத் துதித்தவந்தணரே பிராமணராவாரெனல் ... 265
ஆதிசைவப்பிராமணர் உற்பத்தி ... ... ... 267
ஆதிசைவர் புஞ்சரிஷி கோத்திரத்தாரெனல் ... ... 268
ஆதிசைவப்பிராமணர்களே தீக்ஷைசெய்தற்குரியரெனல் ... 269
மானிடரிற் சிறந்துள்ளார் ஆதிசைவரே எனல் ... ... 271
ஆதிசைவர் சப்தலிங்கத்துள் ஒருலிங்கமெனல்... ... ,,
சிவப்பிரசாதம் ஆதிசைவர்மூலமாகப்பெறல்வேண்டுமெனல் 272
அதீக்ஷிதரான ஆரியர்கள் தீக்ஷைசெய்யலாகாதெனல் ... ,,
அதீக்ஷிதரால் தீக்ஷைபெறல் பயன்படாதெனல்... ... 273
அதீக்ஷதர் பரார்த்தபூசை செய்யப்படாதெனல் ... ... ,,
சைவபேதம் ... ... ... ... ... 274
ஆரியருக்கும் ஆதிசைவருக்குமுள்ளபேதம் ... ... 275
ஆதிசைவர்கள் வடதேசமிருந்து வந்தவர்களெனல் ... ... 277

### II. க்ஷத்திரியர்.

இந்தியாவின் எல்லை ... ... ... ... 178
தண்டகநாட்டெல்லை ... ... ... ... 279
தமிழ்நாட்டெல்லை ... ... ... ... ... ,,
மண்டலங்களின் சிறப்பு ... ... ... ... 281
மூவேந்தரின் குலம் ... ... ... ... ,,
மூவேந்தரின் தசாங்கம் ... ... ... ... 282
மும்மண்டலத்தின் சிவாலயங்கள் ... ... ... 282
மூவேந்தர் ஒழுக்கம் ... ... ... ... 283
சேரராசன் பெருமை ... ... ... ... 285
சோழராசர்கள் பெருமை... ... ... ... ,,
பாண்டியராசர்கள் பெருமை ... ... ... ... 288
மூவேந்தரும் தெய்வத்தன்மை பெற்றவர்களெனல் ... 289

### III. வைசியர்.

வைசியர் மூவகைச்சீவனத்தொழில்... ... ... 291
வைசியர் அறுதொழில் ... ... ... ... 292
வேளாளரென்பதன்பதப்பொருள் விளக்கம் ... ... 294
காணியாட்சிக்காரர்... ... ... ... ... 297

பக்கம்.
கலியில் க்ஷத்திரிய வைசியரில்லை என்பதை மறுத்தல் ... 300
திராவிடநாட்டில் க்ஷத்திரியவைசியரில்லை என்பதைமறுத்தல் 306
தமிழ் அரசர்கள் க்ஷத்திரிய குலத்தாரென்பது ... ... 307
தமிழ் நாட்டரசர் வைசியர் வைதிககர்மமுடையரென்பது... ,,
பயிர்த்தொழில் செய்ததனுல் அரசராகாரென்பதின் மறுப்பு 308
IV. சூத்திரர். ... 310

## மூன்றாவது அத்தியாயம்,
## வேளாளருற்பவ விளக்கம்.

வேளாளர் கங்கையிடத்துதித்தாரெனல் ... ... ... 314
முப்பத்திரண்டறங்கள் ... ... ... ... 322
கங்கைநாட்டுவேளாளர் ... ... ... ... 323
ஆதியில் வடநாடு சைவந்தழைத்துள்ளதெனல்... ... 324
ஆரியர் வேளாளரோடு போர்புரிதல் ... ... ... 328
ஆரியர் வெற்றிபெறல் ... ... ... ... ,,
வேளாளர் வெற்றிபெறல் ... ... ... ... ,,
வேளாளர் தென்னடைதல் ... ... ... 329
குடியரசு. ... ,,
வேளாளர்தொண்டைநாட்டில் குடியேறினது ... ... 335
தொண்டைமண்டலம் கோட்டம், நாடு, நகரங்கள் ... 343
இளங்கோக்கள். 349
அறுதொழில் ... ... ... ... ... 359
பரிவாரம் 18 ... ... ... ... ... 360
சின்னம் ... ... ... ... ... ... 361
தசாங்கம் ... ... ... ... ... 362
மன்னர் பின்னர். ... 364

## நான்காவது அத்தியாயம்,
## வேளாளரறுதொழில் விளக்கம்.

I. ஓதல்.
ஓதற்பாலன மறைகள் ... ... ... ... 369
ஓதலின்பேதம்... ... ... ... ... 371
ஓதுவார்களின் மிராசுபாத்தியதை ... ... ... ,,

பக்கம்.
வேளாளர் ஆரியவேதம் ஓதுமுறை ... ... ... 372
வேதமோதுவதில் அந்தணரும் வேளாளரும் ஒத்தவரெனல் ,,
ஆரியர்திராவிட வேதம் ஓதாமைக்குக்காரணம்... ... 373
வேதமோது முறைமை ... ... ... ... 374
ஓதுவார்களுக்கு மரியாதை ... ... ... 375

II. வேள்வி.

வேள்விவகை ... ... ... ... ... 377
தூலவேள்வி அல்லது கருமவேள்வி ... ... ... ,,
சூக்கும வேள்வி அல்லது ஞானவேள்வி ... ... 379
பஞ்சமகாவேள்வி ... ... ... ... ... 380
வேள்வியின் பலன் ... ... ... ... 381
பசுபந்தவேள்வி ... ... ... ... ... 383
பசுபந்தவேள்வி ஏற்பட்டகாரணம் ... ... ... 386
பசுபந்த வேள்வியின்பயன் ... ... ... ... 388
ஆரியர் கொலைபுரிதல் ... ... ... ... 390
ஆரியர் மாமிசபட்சணஞ்செய்தல் ... ... ... 391
ஆரியர் சோமபானம் ... ... ... ... 395

III. ஈதல். ... 419

அந்தணரீகை ... ... ... ... ... 404
அரசரீகை ... ... ... ... ... ,,
சூத்திரரீகை ... ... ... ... ... 406
வைசியரீகை ... ... ... ... ... 407

IV. கிருஷி அல்லது உழவு. 419

திராவிடவேதத்தில் கூறும் உழவு. ... ... ... 421
ஆரியவேதத்தில் கூறும் உழவு ... ... ... 422
பயிர்செய்யுமுறை ... ... ... ... ... 432
நன்செய்த் தானியங்கள் ... ... ... ... 434
புன்செய்த் தானியங்கள் ... ... ... ... 435
காய்த்தானியம் ... ... ... ... ,,
இதரபுன்செய்ப்பலன்கள் ... ... ... ... 436
தோட்டக்கால் பயிர் ... ... ... ... ,,
எருதுக்குரியார் வேளாளரெனல் ... ... ... 438
எருதின் வலிமைகூறல் ... ... ... ... ,,

பக்கம்.
உழவெருதின் தொகை ... ... ... ... 438
உழவிற்கேற்ற எருதுகள் ... ... ... 439
உழவிற்கு விலக்கான எருதுகள் ... ... ... ,,
உழவெருதினை நடத்துமுறை ... ... ... 440
உழவெருதை வருத்தினதற்குப் பிராயச்சித்தம் ... ... 442
உழவர் ... ... ... ... ... 443
களவேள்வி ... ... ... ... ... 454
களவேள்வி செய்யாவழி வருங்குற்றம் ... ... 455
அருளியற்கிருஷி ... ... ... ... ... 457
V. வாணிகம். ... 458
VI. ஆனிரைகாத்தல். ... 465
ஆனிரைக்குப் பூசனைபுரிதல் ... ... ... ... 473
ஆனிரைக்கு உறைவிடம்... ... ... ... ,,
ஆனிரைக்குரிய ஏவலாளர் ... ... ... ... 474
ஏவலாளருக்கு இருப்பிடம் ... ... ... ,,
பெறுதற்கரியபேறு... ... ... ... ... 475

## ஐந்தாவது அத்தியாயம்.

## வேளாளர் பலசிறப்பு விளக்கம்.

முடிசூட்டல். ... 476
துலாபாரம். ... 478
துலாபாரத்தாலுண்டாகும்பயன் ... ... .. ,,
துலாபாரஞ்செய்யுமுறை... ... ... ... 479
துலாபாரம் நிறுத்தற்குரியார் ... ... ... ... ,,
தலம். ... 481
கோத்திரம். ... 482
எல்லாருக்கும் கோத்திரமுண்டெனல் ... ... ... ,,
கோத்திரமில்லாதான் சிவபெருமானெனல் ... ... ,,
வேளாளர் கோத்திரமீதெனல்... ... ... ... ,,
சூத்திரருக்குங் கோத்திரமுண்டெனல் ... ... 483

# அட்டவணை. சாங


பக்கம்.

பிள்ளைப்பட்டம். ... 484

பிள்ளைப்பட்டம் ஏனையசாதியருக்குரியகாலம் ... ... 485

பிள்ளைப்பட்டம் வேளாளர்க்கு எக்காலத்துமுளதெனல் ... ,,

முதலியார்ப் பட்டம். ...

குடிகளால் பெறப்பட்ட முதலியார்ப்பட்டம் ... ... 489

ஆதொண்டைச் சக்கரவர்த்தியால் பெறப்பட்டமுதலிப்பட்டம்... ... ... ... ... ... ,,

அநபாயச்சோழனால் பெறப்பட்ட முதலிப்பட்டம் ... ,,

சிருட்டியில் முதன்மைநோக்கிவந்த முதலிப்பட்டம்... ... 490

சைவன். ... 491

சாதுர்வருணர்களின் மேம்பாடு... ... ... ... 493

ஞாயஸ்தானங்களில் வாதி பிரதிவாதிகள் வாக்குமூலம் ... ,,

சாதுர்வருணச்சாட்சிகளின் வாக்குமூலங்கள் ... ... 494

சாதுர்வருணத்தார் தீட்டுப்போக்கு ... ... ... 495

வருணானுஷ்டானப் பிரகாசிகை ... ... ... 496

விருதுகள்.

இடங்கை வலங்கையார் விருதுகளைப்பற்றியதீர்ப்பு ... ... 499

வலங்கையார் விருதுகள்... ... ... ... ,,

வலங்கைப் பஞ்சமர்களுக்கு விருதுகள் ... ... ... 501

இடங்கையார் விருதுகள் ... ... ... 502

இடங்கைப்பஞ்சமர் விருதுகள்... ... ... ... ,,

கவரைகளுக்குத் தேசாயிப்பட்டமும் விருதுகளும் வந்தகாரணம் ... ... ... ... ... 503

நூற்புரட்டுகள். ... 505

பெரியபுராணத்திற்புரட்டு ... ... ... ... 506

தேவாரத்திற் புரட்டு ... ... ... .. 509

திருவாசகத்திற்புரட்டு ... ... ... ... 510

திருவிளையாடலிற்புரட்டு... ... ... ... 511

நிகண்டிற்புரட்டு ... ... ... ... ... 516

# சிறப்புப்பாயிரம்.

இஃது

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான்

## மு. ரா. அருணாசலக்கவிராயர்

இயற்றியது.

அநாதி யிறைவன் றனது திருவருட்
சத்தி தொண்டுசெய் வித்த சிருட்டியிற்
றோற்றிய பவஞ்சச் சேற்றினின் முளைத்த
பயிர்க ளாகிய வுயிர்கள் யானை
முதலெறும் பிறுதியா நுதலுமெண் பத்து
நாலிலக் கமெனு நூலினிற் பேத
மவற்றுண் மனிதரே யெவற்றினுஞ் சிறப்புற்
றரியபி ரமக்ஷத் திரிய வைசிய
சூத்திர ரெனும்பகுப் பாத்திகழ்ந் தவரவர்
தொழின்முறை பற்றி வழிவழி யுற்றன
ரிம்முறை யிருக்க வெம்முறை யாலோ
வொருசாதி யுயரமற் றொருசாதி யாரென்
றுண்மை யறியா ரெண்மையிற் புகன்று
நயங்கிளர் மாந்தரு மயங்க வைத்தனர்
கற்றறி வில்லாரிங் குற்ற தொன்றுந்
தேறுத லின்றி மாறு கொண்டனர்
சிற்சில ரன்றியும் பற்பலர் தெரிந்து
மெவரெவ ராயினென் னவரவர் குலநல
மாளா தென்று வாளா விருந்தன
ரின்னோ ரெல்லா முன்னோர் சென்ற
வழியிற் றவறிக் குழியில் வீழ்ந்தவ

ராதலி னவருள மேதகு தெளிவு
பெற்று மேலெழ லுற்றுநல் வழிச்செல
வரிய நுண்பொரு டெரிய வுள்ளடக்கி
யுலகு புகழப் பலதுறை திகழுங்
கடல்போல் விரிந்த வடமொழி யமைந்த
வாரிய வேதஞ் சீரிய திராவிட
வேத முதலிய போத நூல்க
டேசமை தருமிதி காச நிகண்டு
புராண மிருதி விராவிய நியாயம்
பன்னூ லாய்ந்து நன்னு வலரை
யடுத்துப் பலபல வெடுத்துக் காட்டி
நிசம்வெளிப் படநல் வசன நடையிற்
பொருணயந் தேறும் வருணசிந் தாமணி
யென்னு மொருநூன் மன்னு முலகி
னுதிப்பித் தச்சிற் பதிப்பித் தனனாற்
றண்டமிழ்ச் சோழ மண்டலச் சார்பில்
வயலமர் பொழிலிற் புயல்வர மயில்க
ளாட லூருங் கூட லூரெனும்
வான்பயில் கின்ற மீன்கண மென்ன
வைசிய மரபிற் சசிபெண வுதயஞ்
செய்து பல்கலை யைது நிரம்பி
விளங்கி வளர்தரு வளங்கிள ரொளியா
லிரவிணை யகற்றி விரவிய வுயிர்க்கெலா
மின்ப மெய்த நன்புல வுழவு
வாணிகம் பசுக்காத் தூணினி துதவி
நீதியி னேத லாதி மூன்று
மெய்திகழ் தருநல் வைதிக கிரியைசெய்
திடத்தி னில்லற நடத்தித் தனாது
வேளாளர் குலத்தினர் தாளாண் மையைப்பிறர்
காணு மாறு பேணு மாண்புறும்
வள்ள லன்பே யுள்ள மதிலுறை
பத்தியி னுயர்சிவ பத்தி பூசனை
யாக்கம் பேரறி வூக்கஞ் சாந்தந்
திண்ணிய புகழ்சிவ புண்ணியப் பெருமை

முழுக்க வமைந்த வொழுக்க முள்ளோன்
சென்னைமா நகரின் முன்னையோர் முறைநன்
றாகவுண் டென்னு மாகவுண் டாண்டு
செனரலா பீசின் மனமகி ழுரிமை
பூண்டகூப் பரில்டெண் டாண்டதி கார
மாங்கி லேயர் பாங்கிலே யியற்றி
நன்சன் மானமாப் பென்ஷன் பெற்ற
வுத்தம னாகு மெய்த்தரு மன்பெரும்
பிரபு வுயரிய வரமுது சென்னையிற்
றனமிக மலியுங் கனக சபையெனு
மியற்பெயர் பெறுநன் னயப்பெரி யோனே. (க)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நயம்பெறுமா யிரத்தெண்ணூற் றிருபத்து மூன்று
நணுகுசகாப் தந்தன்னி னாடுமிங்கி லீஷென்
றியம்புமா யிரத்தொடுசேர் தொளாயிரத்தொன் றாண்டி
லேழாவ தெட்வர்ட்டென் றிடுஞ்சக்ர வர்த்தி
சயம்பெறுபட் டங்கட்டி முடிபுனைந்து செங்கோ
றான்செலுத்து நாட்சென்னை தனிற்கனக சபைவேள்
பயன்பெறுநல் வருணசிந்தா மணியெனுநூல் கற்றோர்
பலர்மகிழ வரைந்துவெளிப் படுத்தினான் மாதோ. (உ)

சிவமயம்.

# முகவுரை.

கடல்சூழ்ந்த பூவுலகின்கணுள்ள மானிடர்கள் ஒவ்வொருவரும் நான் குலத்தற் சிறந்தவன், நான் சமயத்திற் சிறந்தவன், நான் ஒழுக்கத்திற் சிறந்தவன், எனக் கூறுகின்றனர். அங்ஙனங் கூறுவது சாதிகள் என்பவற்றினின்றுண்டானதாகவேயேற்படுகின்றது.

இது இந்தியாவிற்குமாத்திரம் நூதனமன்று. எத்தேசத்தும் எக்காலத்தும் எச்சாதியினும் எம்மனிதர்களினும் பார்க்குமிடத்துத் தமக்கு மேம்பாட்டிற்குரிய ஆதாரம் சற்றுமில்லாதிருந்தும் ஒவ்வொருவருந் தாங்கள் மற்றவரினும் சிறந்தவரென்று மதித்து அதற்காய சில சரிதங்களையும் வழக்கங்களையும் தழுவித் தங்கள் மேம்பாட்டை நாட்டுகிறார்கள். பூர்வீகரிலுள்ள இவ்வெண்ணத்தடிப்பே தங்கள் வழிவந்த சந்ததியாரிடத்துப் பழகி முதிர முதிர தாங்கள் வசிக்கின்ற நாட்டிற்குரியவர்கள் தாங்களேயென்றும், தாங்கள் வழிபட்டுவரும் வானநாட்டிலுள்ள பிரமன், சூரியன், சந்திரன், அக்கினி, கங்கை, பூமி, இந்திரன் வருணன், குபேரன் முதலியவர்களிடத்திலுதித்த வமிசத்தார்களென்றும் உலகமுழுமையும் கொண்டாடிக் கொள்ளுகிறார்கள்.

உயர்குலத்திற் பிறந்தவர்கள், தங்களுக்குக் கிடைத்த மேம்பாட்டிற்காகக் கடவுளிடத்து நன்றிபாராட்டாது, செருக்குற்றுத் தமக்குக் கீழ்ப்பட்டுள்ள குலத்தாரை அவமதித்து இழிவுபடுத்துகிறார்கள். எங்ஙனமெனில்? இந்தியாவிலுள்ள ஆரியர்கள்.

"தெய்வாதீனஞ் ஜகச்சர்வம்
மந்திராதீனந் தத்தைவதம்
தன்மந்திரம் பிராஹ்மணாதீனம்
பிராஹ்மண மமதைவதம்."

இ - ள். உலகந் தெய்வத்துள்ளடக்கம், அத்தெய்வமோ மந்திரத்துள்ளடக்கம், அம்மந்திரமோ பிராமணர்களுள்ளடக்கம், ஆதலால் பிராமணர்களே நமக்குத் தெய்வமாம்.

பாரதம் - அநுசாசநீகபருவம்
பூதேவர் மகிமையுரைத்த சருக்கம்.

அந்தணர்கள் தவவலியா லரசர்செங்கோ னிகழ்வதெலாம்
அந்தணர்க ளொழுக்கத்தா லாருயிர்கள் செறிவதெலாம்
அந்தணர்க ளன்மறையா லருமாரி பொழிவதெலாம்
அந்தணரி லதிகருல கதிலுண்டோ புகலாயே.

ஆயுள்வேண் டினர்செல்வ மாண்மைவேண் டினர்மிக்க
சேயைவேண் டினர்தத்தஞ் சீலம்வேண் டினர்முத்தி
நேயம்வேண் டினர்சுவர்க்க நீடுவேண் டினர்விப்பிரர்
தூயதா ளினிற்றொழுது சூழ்வரே யேற்றமென.

என இவ்விதமான சுலோகங்களையும் பாடல்களையுங் கற்பித்துக்கூறி ஆணவமலத்தினுளழுந்துகிறார்கள்.

கீழ்க்குலத்தாரோ? மேற்குலத்தாரைக்கண்டு அழுக்காறுடையவர்களாய், ஓடக்காரிவயிற்றிற் பிறந்தவரும், செம்படச்சிவயிற்றிற் பிறந்தவரும், சக்கிலிச்சிவயிற்றிற் பிறந்தவருமாயுள்ளவர்கள் எங்ஙனம் உயர்குலமான முனிவர்களாவார்கள்? இவர்களெல்லாம் சங்கரசாதியர்கள் என்றும், நாங்களே சுயமான சாதியரென்றும் பெருமைபாராட்டிக்கொள்ளுகிறார்கள்.

இவை நிற்க, சிலர்மாத்திரம் தங்களுக்குண்டாகிய குலம் கீழ்ப்பட்டதேனும் மேம்பட்டதேனும், பூர்வஞ் செய்துள்ள வினைக்கீடாக வுண்டானதென்று திருப்தியடைந்து, எக்குலத்தாரையும் தமக்குச் சமமாக எண்ணிச் சகோதர வுரிமை பாராட்டுகிறார்கள்.

சிலர் சாதியைப் பொய்யென்று இகழ்ந்து பேசுகிறார்கள். இது உண்மையோவென்று விசாரிக்கப்புகின், அவர்கொள்கை யதுவன்று. வேறென்னையெனின்? அவர் தத்தம் மக்களுக்கு மணம்புரியத்தொடங்குங்கால், இவன் இழிகுலத்தான் இவன்வழிபோதாதென உயர்குலத்தார் ஒவ்வொருவரும்விசாரித்துப் பெண்ணைக் கொடுக்கல்வாங்கல் செய்யார்களென நினைத்து, உலகத்தில் ஆண்சாதி பெண்சாதியென்னு மிரண்டல்லது மற்றைச் சாதியெல்லாம் வெறும்பொய்யென்று கூறி அணைபோட்டுக்கொள்ளுவதாம். இதனுண்மையறிந்தவர்கள், இழிகுலத்திற் பிறந்தவர்கள் பேரழகுடையவர்களானாலும் அவர்களிடம் பெண்ணைக் கொடுக்கல் வாங்கல்செய்யாது, உயர்குலத்திற் பிறந்தவர்கள் குரூபிகளாயிருந்தாலும் அவர்களிடம் பெண்ணைக் கொடுக்கல் வாங்கல் செய்கிறார்கள்.

சிலர் உயர்குலத்தாராயிருந்தும் இழிகுலத்தாரிடத்துச் சம்பந்தஞ் செய்கிறார்களே? எனின், அவர்கள் பொருளுக்காசைப்பட்டோ? அல்லது தமதிடத்தில் இரகசியமாகச் சில துற்செய்கைகளிருந்தமைபற்றித் தக்க சம்பந்தங் கிடையாமலோ? உயர்குலத்தாருள்ளும் சிலர் சாதிபொய்யென் றிகழ்ந்து பேசுகிறார்கள். எதனாலென்று அதன் உண்மையை விசாரிக்கப்புகின், அவர் உயர்குலத்திற்குரியவொழுக்கங்கெட்டு ஏதேனும் ஒரு அகுயைக் கிடமாயிருப்பரென்பது நிச்சயம்.

நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணையப் படும்.

என்ற நாயனார் குறளே சான்றும்.

இல்லது ராமம் பொ மந்ரந.

நீரளவே யாகுமா நீராம்ப லூன்கற்ற
நூலளவே யாகுமா நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வங்
குலத்தளவே யாகுங் குணம்.

என்று தெய்வப்புலமை ஔவையாரருளிச்செய்த இச்செய்யுளாலுஞ் சாதியுண்டென்பது தேற்றம்.

மனிதராய்ப் பிறந்தவர்கள் எல்லாருக்கும் தேகத்திலுள்ள இரத்த மாமிசாதிகள் ஒன்றே உருவங்களொன்றே அவயவங்களொன்றே இவையெல்லாம் ஒத்திருந்தபோதும், அவரவர்கள் செய்தொழில் வேற்றுமையால் உயர்வு தாழ்வுகளையடைந்தார்களாம்.

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்.

என்ற நாயனார் குறளாற்காண்க.

மனிதர்களுள் ஒருவருக்கொருவர் சம்பந்தஞ் செய்யுமிடத்துக் கொள்ளாத இடத்திற் கொள்வதும் கொடுக்காத இடத்திற் கொடுப்பதும் உண்ணாத இடத்திலுண்பதும் மேன்மக்கள் கொள்கையன்றாம். ஏனெனில்? நல்வினஞ்சேர்வதால் மேன்மையும் தீயினஞ் சேர்வதால் தாழ்மையும் உண்டாகும். ஆகலாலென்க. பிரமாணம்.

நாலடியார்.

நிலநலத்தா னந்திய நெல்லேபோற் றத்தங்
குலநலத்தா லாகுவர் சான்றோர்—கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்கு சான்றாண்மை
தீயினஞ் சேரக் கெடும்.
தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பி
னூன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க—வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

மேற்குலத்தாரென்பதும் கீழ்க்குலத்தாரென்பதும் அவரவர் வாய்மொழியால் கண்டுணரலாம். பிரமாணம்.

திருவள்ளுவர்.

நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

இது நிற்க. இன்னும் சம்பந்தஞ் செய்யுங்கால் பந்துக்கள் நல்லகுலத்தையே நாடுவார்கள். தந்தை கல்விமானையே விரும்புவான். தாய்செல்வவானையே விரும்புவாள். பெண் யௌவனமும் நலமும் உடையவனை விரும்புவாள். பிரமாணம்;

உத்தரராமாயணம் வரையெடுத்தபடலம்.

குலம்வேண்டு மென்றிருப்பர் குலத்துள்ளார்
கல்வியினாற் குறையா ஞானப்
பலம்வேண்டு மென்றிருப்பார் தந்தைமார்
பரந்த பெருஞ் செல்வமுள்ள
தலம்வேண்டு மென்றிருப்பார் தாய்மார்கள்
யௌவனமு நலமுஞ் சார்ந்த
நலம்வேண்டு மென்றிருப்பார் நாறுகுழன்
மங்கைமார் நலத்தின் மிக்கார்.

நல்லகுலத்தானென்று பார்த்தால் அவன் நித்தியதரித்திரனாயிருக்கிறான். அல்லது நிரட்சரகுட்சியாயிருக்கிறான். "பணம் பந்தியிலே குலம் குப்பையிலே" என்ற பழமொழியிருப்பதால் கீழ்க்குலத்தானேனும் செல்வவந்தனாயிருந்தால் நல்ல சுகத்தை யடைவாளென்று தங்கள் பெண்ணை அவனுக்குக் கொடுத்துச் சம்பந்தஞ் செய்துவிடுகிறார்கள்.

ஆகையால் மேற்கூறியப்படி குலம் கல்வி ஒழுக்கம் இவைகளிற் குறைவில்லாத இடமாகப்பார்த்துச் சம்பந்தஞ் செய்வார்களாயின் அக்குடிவாழ்க்கையுடையோனை உலகத்தார் சூழவிருப்பார். பிரமாணம்.

திருவள்ளுவர்,

குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு.

இது நிற்க,

சாதிகுலம்பிறப்பென்னுஞ்சுழிப்பட்டுத்தடுமாறு
மாதமிலிநாயேனையல்லலறுத்தாட்கொண்டு
பேதைகுணம்பிறருருவம்யானெனதென்னுரைமாய்த்துக்
கோதிலமுதானானைக்குலாவுதில்லைகண்டேனே.

என்னுந் திருப்பாசுரத்தில் மாணிக்கவாசகசுவாமிகள் சாதிகுலம் ஒழியவேண்டுமென்றும்,

என்பெற்றதாயருமென்னைப்பிணமென்றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்றமாதரும்போவென்றுசொல்லிப்புலம்பிவிட்டார்
கொன்பெற்றமைந்தரும்பின்வலம்வந்துகுடமுடைத்தார்
உன்பற்றொழியவொருபற்றுமில்லையுடையவனே.

ஊருஞ்சதமல்ல வுற்றார்சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர்சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள்சதங்கச்சி யேகம்பனே.

என்னுந் திருப்பாடல்களில் பட்டினத்தார் பெண்டுபிள்ளைகள் பண்டபதார்த்தங்கள் முதலியன பொருள்களல்லவென்றுங் கூறியிருப்பதாற் சாதியை யொருபொருட்படுத்திக் கொண்டாடுவதென்னையெனின்?

ஊரொழித்தும் பேரொழித்தும் உற்றாரொழித்தும் பெற்றாரொழித்தும் பெண்டீரொழித்தும் பிள்ளைகளொழித்தும் பதியொழித்தும் நிதியொழித்தும் உடுக்கையொழித்தும் படுக்கையொழித்தும் ஊணொழித்தும் உறக்கமொழித்தும் நின்ற இடத்துச் சாதி சமயங்கள் என்பன குறுக்கேநின்றால் சங்கற்ப விகற்பமெழுந்து பந்தத்தில் அழுத்துமென்று அவற்றையும் ஒழிப்பதே சுகமென்று கூறினதாம். அவ்வளவேயன்றிச் சாதிகுலம் பொய்யென்று கூறவந்ததன்று.

வேதங்களில் வருணாச்சிரமங்களை வகுத்து அவற்றிற்குரிய தருமங்களையும் வகுத்து அவற்றின்வழிதவறாதொழுகுவார் இகபரசாதனங்களைப் பெறுவாரெனக் கூறப்பட்டிருக்கிறதே அதற்குச் சான்றாம்.

பாரதம் ஆரணியபருவம் கௌசிகச்சருக்கம்.

தன்குலவியற்கைதவ றாதொழுகலுனே
முன்புரைசெய்நல்லற மெனப்புகல்வர்முன்னோர்
மன்பலவுயிர்த்தொகைகண் மீசருண்மனத்தோ
ரின்பமடைகுற்றன ரிகத்தொடுபரத்தும்.

என்று கூறியிருத்தலால் வீடு மக்கள் சுற்றம் பெண்டிர் பிள்ளை வாகனம் அறுசுவையுண்டி ஆடை ஆபரணம் கல்வி கேள்வி ஞானம் புகழ் ஒழுக்கம் பதி நிதி இவைகளை விரும்புவோர் தத்தமக்கு வகுத்த வருணங்களிற்கூறும் தருமவழியே யொழுகவேண்டுமென்பது சித்தாந்தம்.

பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தங்களை மெய்யெனக் கொள்ளும்போது சாதி குலங்களும் மெய்யாகவே யிருக்கும். பெண்டு பிள்ளையாதிகளைப்பொய்யென நீக்கும்போது சாதியும் பொய்யென்று நீக்கப்படும்.

இதுநிற்க, பரதகண்டத்தினுள் இந்தச் சாதி வித்தியாசங்களினாற்றான் இந்துமதங்கள் செவ்வையாகக் காப்பாற்றப்பட்டு வருகின்றன. சாதிபேதங்கள் தாம் இந்துமதங்களுக்கு முக்கியமான ஆதரவாயிருக்கின்றன. இந்த ஆதரவு ஒழியுமானால் இந்துமதங்கள் அழிந்துவிடும்.

ஒவ்வொரு சாதிக்கும் நடையுடை பாவனை குணங்குறி ஒழுக்கம் ஆசாரம் அனுஷ்டானங்கள் வேறுவேறாயிருக்கும். பாலியயௌவன விருத்தபருவங்களில், எந்தப் பருவத்தை யடைந்தபோதும், அவரவர்கள் உணவானும் உண்ணுந் திறத்தானும் நித்தியகருமங்களானும் சடங்குகளானும் வார்த்தைகளானும் உடையானும் ஆபரணங்களானும் அனுஷ்டானங்களானும் சிகையானும் எக்ஞோபவீதத்தானும் நெற்றியிலிடுஞ் சாதனங்களானும் விருத்திகளானும் இன்ன இன்ன வருணத்தாரென்று எளிதிற் கண்டுணரலாம்.

இங்ஙனமிருப்பவும், பார்சிகநாட்டிலிருந்து இந்தியாவிற் குடியேறின ஆரியர்கள் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்

னும் நான்கு சாதியும் தங்களுக்கேயன்றி தங்களுக்கு முன்ன ரேயிருந்த திராவிடர்களுக்குக்கிடையாவென நினைத்து,இத்தி ராவிடநாட்டில் ஆதியாயிருந்த ஆதிசைவப்பிராமணர்கள் தங்க ளுக்கு உயர்ந்தவர்களாயிருக்க,அவர்களைத் தங்களுக்குத் தாழ் ந்தவர்கள் என்றும்,இந்நாட்டைப்பண்டைநாள் தொடங்கிஆண் டுவந்த சேரசோழபாண்டியர்கள் க்ஷத்திரியர்களாகாரென்றும், உழவு வாணிகம்பசுக்காத்தல் இயற்றிவந்த வேளாளர்கள் வைசி யராகாரென்றும்,பொதுவாகத்திராவிடர்கள் எல்லாருமே சூத் திரரென்றுஞ் சாதிக்கிறார்கள்.

அங்ஙனம் இந்நான்கு வகுப்பும் ஆரியர்க்கே உரியவாயி ன், அந்நான்கனுளொன்றாகிய சூத்திரப்பட்டமாத்திரம் திரா விடர்களுக்குக் கொடுப்பானேன்? ஒருவருணம் திராவிடர்களு க்கு உண்டானபோது ஏனைய மூன்றுவருணம் அவருக்குண் டாகாமற்போகுமா ?

சாதி ஏற்பாடுதொழில் பற்றிவந்ததன்றோ அத்தொழில் திராவிடர்கள் செய்யவில்லையா? இழிதொழிலாயுள்ள சூத்திரப் பட்டம் திராவிடர்களுக்கென்றும், உயர்தொழிற்குரிய பிரம க்ஷத்திரிய வைசியப்பட்டங்கள் ஆரியருக்கென்றும் பிரம சிரு ட்டியிலேற்பட்டிருக்கின்றனவா? இவ்வாரியரும் திராவிடரும் ஒரே பிதாவின் பிள்ளைகளாயிருக்க அவர்கள் எல்லாருக்கும் எல்லாப்பட்டங்களு முண்டென்பதற்கு யாதுதடையுளது ? ஆகையால் மேற்குறித்த விபரீத வாசகங்கள் உண்மையாகா வென அதிப்பிரபல நியாயங்களை வெளிப்படுத்துவான்றொடங்கி வருணசிந்தாமணி என்னும் இந்நூலை ஆரியகாண்டம் திராவி டகாண்டமென இரண்டாகப்பிரித்து, முன்னர் ஆரியவேதத்தி னுட்கூறும் சாதி ஏற்பாட்டை மாக்ஸ் முல்லர், உல்சன்துரை முதலிய ஆங்கிலேய கிரந்த கர்த்தர்கள் ஆராய்ந்தெடுத்தபடி கூறிப் பின்னர் திராவிடவேதத்திற்கூறுஞ் சாதியேற்பாட்டை த் தெரிந்தமட்டும் வெளிப்படுத்தத் தொடங்கினேன்.

கூ - க.

உ

சிவமயம்.

# வருண சிந்தாமணி.

முதலாவது

## ஆரியகாண்டம்.

### முதலாவது அத்தியாயம் ஆரியவேதம்.

விநாயகர் வணக்கம்.

*மன்னுசீ ரோங்கும் வருணசிந் தாமணியென்*
*றுன்னுமிந் நூன்மெய் யுலகறியப்—பன்னுதற்குத்*
*தம்பதமா வென்னுளத்திற் சார்ந்தெல்லாந் தான்காட்டுங்*
*கம்பமத யானைமுகன் காப்பு.*

ஆரியவேதம்.

இவ்வாரியவேதமானது அறம் பொருள் இன்பம் வீடு என்னும் சதுர்வித புருஷார்த்தங்களை விளக்கும் சகல சாத்திரங்களுக்கும் ஓர் மூலகிரந்தமாயிருக்கிறது.

இதனை, மீமாஞ்சையர்கள்: அநாதியென்றும், சிருஷ்டிக்குட்பட்ட தல்லவென்றும், சிலகாலங்களில் வெளிப்படுத்தப்பட்டும் சில காலங்களில் மறைக்கப்பட்டு மிருந்ததென்றும், நியாயவர்த்திகளும் சில சாஸ்திரிகளும்: கடவுளால் சிருட்டிக்கப்பட்டதென்றும், பண்டிதர்கள்: கடவுள் பிரமாவுக்கு உபதேசித்தார், பிரமா முனிவர்களுக்கும், முனிவர்கள் தங்கள் சீடர்களுக்கும், உபதேசித்தார்களென்றுங் கூறுகின்றனர்.

இனி, சங்கனென்னும் * ஓர் இராக்கதன் வேதங்களைத் திருடிக்கொண்டுபோய்ச் சமுத்திரத்தில் ஒளித்துக்கொண்டான். விஷ்ணு மச்சாவதாரஞ்செய்து அவ்விராக்கதனிடத்துள்ள அவ்வேதழ்தை மீட்டுக்கொண்டுவந்து முனிவர்களுக்குக் கொடுத்து, சமுத்திரத்தில் சிதைந்துள்ள பாகங்களைத் திரும்பவும் அளிக்க அம்முனிவர்களுக்குக் கட்டளையிட்டனர். அக்கட்டளையின்படி வேதங்களில் சில பாகங்கள் அம்முனிவர்களாற் செய்யப்பட்டனவாக இருக்கின்றன.

இவ்வீரியவேதம் பூர்வத்தில் அநேகமாயிருந்தது. வேதவியாசர் காலத்தில் இருக்கு யசுர் சாமம் அதர்வணமென நான்காகப் பிரிக்கப்பட்டது. இந்நான்கு வேதங்களும் 1,131 சாகைகளாக விரிக்கப்பட்டிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| இருக்குவேதம் | சாகை ... ... | 21 |
| யசுர்வேதம் | ,, ... ... | 101 |
| சாமவேதம் | ,, ... ... | 1,000 |
| அதர்வணவேதம் | ,, ... ... | 9 |
| | ஆக சாகைகள்... | 1,131 |

இந்தச் சாகைகளை விளக்கஞ்செய்தவர்கள் கடர், கௌதமர் முதலியவர்களாம்.

தருமராஜா கேட்டுக்கொண்டபடி வேதவியாசர் அநேக பண்டிதர்களைக்கொண்டு ஒவ்வொரு வேதத்தையும் அநேக சம்ஹிதைகளாகப் பிரித்தார். (சம்ஹிதை=மந்திரம்). பைலர் இருக்கினையும், வைசம்பாயனர் யசுரையும், ஜைமினி சாமத்தையும், சுமந்து அதர்வணத்தையும், சூக்தங்களாக்கினார்கள். (சூக்தம் - சு=சுகமான, உக்தம்=வசனம்) எனவே, சுகத்தை விளைவிக்கும்படி புகழ்ந்து கூறியபாடலாம். சுமந்து இருக்கினையும், பைலர் அதர்வணத்தையும் சூக்தங்

* இவ்வசுரனை, சோமகாசுரனென்றும் சில நூல்கள் கூறுகின்றன.

களாக்கினதாகப் பராசரத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வேதத்திலும் சில துதிபாகங்களாகவும், சில விதிபாகங்களாகவும் இருக்கும். இவற்றுள் துதிபாகமென்பது தோத்திரங்களாம்; அவை பண்ணமைந்த பாடல்கள், அல்லது சம்மிதைகளென்றும், மந்திரங்களென்றும் சொல்லுவார்கள். விதிபாகமென்பது பூர்வகாண்டம் உத்தரகாண்டமென இருவகைப்படும். அவற்றுள், பூர்வகாண்டம் வைதிக கருமங்களையும், யாகாதி கருமங்களையும் கற்பிக்கும். உத்தரகாண்டம் ஞானத்தைக் கற்பிக்குமாதலால் ஞானகாண்டமாம். இதில் ஆரண்யகங்கள், உபநிஷத்துகள், பிராஹ்மணங்கள் அடங்கியிருக்கும். இவற்றுள்ளும் சம்மிதைகள் கலந்துவரும்.

## இருக்குவேதப் பாதுபாடு.

இருக்குவேதம்-சம்மிதாபாகம் அல்லது தோத்திரத்திரட்டு. (இருக்கு=தோத்திரம்). இது எட்டுக்காண்டம் அல்லது அஷ்டகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும். அவற்றுள், ஒவ்வொருகாண்டத்திலும் எட்டு அத்தியாயங்கள் அடங்கியிருக்கும். இவ்வாறன்றி வேறுவிதமாகப் பத்துமண்டலங்களாகவும் பிரிக்கப்படும். அவற்றுள் ஒவ்வொரு மண்டலத்திலும் நூறு அநுவகங்களடங்கி யிருக்கின்றன. இவ்வேதத்துள்ள சூக்தங்களில், 11,000 அல்லது 12,000 இருக்குகள், அடங்கியிருக்கின்றன. இச்சம்மிதா பாகத்தின்பின் ஐதரேய பிராஹ்மணமும், ஐதரேய உபநிஷத்தும் கூறப்பட்டிருக்கின்றன.

## யசுர்வேதப் பாதுபாடு.

யசுர்வேதம் - (யசுர்=பலியிடுதல்) ஆகவே, பலியினைக் குறித்த வேதமென்பது பொருளாம். இது கிருஷ்ண யசுர் என்றும், சுக்கில யசுர் என்றும் இருவகைத்தாம். கிருஷ்ண யசுர் தைத்திரேயமென்றும் சுக்கிலயசுர் வாஜசனேயமென்றும் சொல்லப்படும். இவை யிரண்டும் அந்தந்தப்பாடசாலைகளின் பெயராக இருக்கவேண்டும்.

(a) கிருஷ்ணயசுர் (தைத்திரேயம்.)

| | காண்டம். | பிரசினங்கள். |
|---|---|---|
| சம்ஹிதாபாகம் ... ... | 7 | 44 |
| பிராஹ்மணம், பிராயதாபாகம் ... | 3 | 28 |
| ஆரண்யகம், சம்ஹியாபாகம் ... | 1 | 5 |
| உபநிஷத்து ... ... | 1 | 5 |
| | 12 | 82 |

ஒவ்வொரு காண்டமும் 5-முதல் 8-அத்தியாயங்களாகவும், ஒவ்வொரு அத்தியாயமும் அநேக அநுவகங்களாகவும், பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப்பாகத்தில் 650 - அநுவகங்களடங்கியிருக்கின்றன.

வாஜகபாகத்தில்.

பிரஜாபதியால் 9 - காண்டமும், சந்திரனால் அநேக காண்டமும், அக்கினியால் 7-காண்டமும், பல தேவர்களால் 16-காண்டமும் கூறியிருக்கிறதாகத் தெரியவருகிறது. இதன் பின் ஆரண்யகங்களும் உபநிஷத்துகளும் கூறப்பட்டிருக்கின்றன.

(b) சுக்கில யசுர் (வாஜசநேயம்.)

சம்ஹிதாபாகம் 40 அத்தியாயமாம்:—ஒவ்வொரு அத்தியாயமும் அநேக கந்திகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இருக்கு வேதத்தைப்போலவே இதுவும் அநுவகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அநுவகங்களின் தொகை 286-ஆகவும், வாக்கியங்களின் தொகை 1,987-ஆகவும், கணக்கிடப்பட்டிருக்கின்றன. இந்தச் சுக்கில யசுரின் 40-ஆவது காண்டம் ஈஸாவாசியமென்னும் உபநிஷத்தாக இருக்கிறது.

இந்த வாஜசநேயத்தி னிரண்டாம் பாகம் சதபதப் பிராஹ்மணமென்று சொல்லப்படும். இதில் 14 - காண்டங்கள், 68-அத்தியாயங்கள், 100-அத்தியயனங்கள், 440-பிராஹ்மணங்கள், 7,624-கந்திகங்கள் என்னும் பிரிவுகள் அடங்கியிருக்கின்றன. 14-ஆவது காண்டம் பிருஹதாரண்ய உபநிஷத்தாம்.

### சாமவேதப் பாகுபாடு.

இது 7,000-வாக்கியங்களடங்கப்பெற்றதாம். இந்த வேதத்தின் பிரதானபாகம் ஆர்ச்சிகம் என்று சொல்லப்படும். இது 6-பிரபாதங்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரபாதமும் 10-தஸ்திகளாகவும், ஒவ்வொரு தஸதிக்கு 10-வாக்கியங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதின் சம்ஹிதாத்திரட்டு, கிராமகேயகான மென்ற பெயரினால் 17-அத்தியாயங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது. மற்றையபாகம் ஆரண்யகமென்று சொல்லப்படும். இது 3-அத்தியாயங்களாம். இதனுட்பிரிவு ஆர்ச்சிகத்துக் கொத்ததாயிருக்கும்.

இந்த வேதத்துக்கு அநுபந்தங்களாயிருக்கிற பிராஹ்மணங்கள் பலவுள. இவற்றுள் 4-கிரந்தம் விரிவாயினவாம்.

| | | |
|---|---|---|
| சாரதிவிதிஷம் | 26 | அத்தியாயம். |
| அத்பூதம் | ... | ,, |
| பஞ்சவிதிஷம் | 25 | ,, |
| தாகதியம் | ... | ,, |
| சாந்தோக்கியம் | 8 | ,, |

### அதர்வணவேதப் பாகுபாடு.

இதன் சம்ஹிதாபாகம் 20-காண்டங்களாம். இதன் வாக்கியங்கள் 6,015-ஆகவும் 100-க்கு மேற்பட்ட அநுவகங்களாகவும், 760-க்கு மேற்பட்ட சூக்தங்களாகவும், 40-பிரபாதங்களாகவுமிருக்கின்றன. இந்தவேதத்தில் 52 உபநிடதங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

வேதம் ஓதுவதில் பதம், கிரமம், சடை, கனம் முதலியவை வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு வருக்கையின் முதலில் அந்த வருக்கையை (1) எந்த ரிஷியால் ஓதப்பட்டதோ அந்த ரிஷியின் பெயரும், (2) எந்தக் கடவுளைப்பற்றியோதியதோ அந்தக் கடவுளின் பெயரும், (3) எந்தச் சந்தசுகளால் ஓதவேண்டியதோ அந்தச் சந்தசுகளின் பெயரும், (4) எந்தவிஷயத்தைப்பற்றிக் கூறியிருக்கிறதோ அந்தவிஷயமும், குறிக்கப்பட்டிருக்கின்றன.

# I. இருக்குவேதம்.

## A. ஆரியர்.

ஆரியர் என்பவர்கள் பூர்வத்தில் இந்துதேசத்தின் வட மேற்கிலுள்ள பாரசீகக் குடிகளாம். ஆர்யவென்பது உயர் வெனப்பொருளாம். எனவே உயர்வுள்ள பூமியில் வசித்தவர்களாம். இவர்கள் ஆக்சஸ் என்னும் நதியின் சமீபத்தில் மேகங்கள் தவழும்படியான உயர்ந்தபூமியில் கிருஷித்தொழில் செய்துகொண்டிருந்தார்கள். அந்நாட்டில் அக்காலத்தில் கோடைக்காலம் 2-மாசமும், மாரிக்காலம் 10-மாசமுமாக இருந்ததால், அந்நாடு உயர்வானதென்று தெரியவருகிறது. ஆரியர்கள் அதிக முயற்சியும் தயிரியமுமுள்ளவர்களாம். ஜனத்தொகை விரிந்ததின்மேல் நல்ல வளமுள்ள பிரதேசங்களிற் குடிபுக ஆரம்பித்தார்கள். மேற்கே பிரிந்துபோனவர்கள் ஐரோப்பிய தேசத்தைச் சேர்ந்து ஐரோப்பியர்களானார்கள். கிழக்கே பிரிந்துபோனவர்கள் இந்தியாவைச் சேர்ந்து இந்துக்களானார்கள்.

### இந்தியாவின் எல்லை.

வடக்கே இமயமலை, தெற்கே கன்னியாகுமரி, மேற்கே மேல் சமுத்திரம் ஆப்கானிஸ்தான் பெலுகிஸ்தான், கிழக்கே கீழ்சமுத்திரம் பர்மாதேசம், இதற்கு மத்தியிலுள்ளது இந்தியாவென்று பெயராம். இவ்விந்தியாவும் விந்தகிரிக்குவடக்காயுள்ளது உத்தரதேசமென்றும், தெறகாயுள்ளது தெக்ஷிணதேசமென்றும் பெயர்பெறும்.

### உத்தரதேசம்.

ஆரியர்கள் இந்தியாவின் சிந்துநதியின் மேற்குக்கரையில் சிலகாலம் வசித்தபின்பு சிந்துவைககடந்து கீழக்கரையில் சேர்ந்து அங்குள்ள இராட்சசர்கள், பைசாசர்கள், தாசர்கள் என்று அவர்களால் சொல்லப்பட்ட பூர்வகுடிகளுடன் அநேக யுத்தங்கள்செய்து அவர்கள் நாட்டைக் கைக்கொண்டார்கள்.

### பிரமவர்த்தம்.

அங்கிருந்தபின்னர் கிழக்கே சென்று சரஸ்வதிக்கும் திருஷத்துவதிக்கும் மத்தியிலுள்ள தேசங்களைச் செயித்து அதற்குத் தேவர்கள் வசிக்கும் பிரமவர்த்தமென்று பெயரிட்டார்கள். (மநு. 1-17.)

### பிரமரிஷிதேசம்.

அங்குச் சிலகாலமிருந்த பின்னர் ஜனத்திரள் மிகுந்தமையின் இருப்பதற்கு இடங்கொள்ளாமல் கங்காநதிவரையிலுள்ள குருக்ஷேத்திரம், மச்சதேசம், பாஞ்சாலதேசம், வடமதுரை இந்தத்தேசங்களெல்லாம் கவர்ந்து இவைகளுக்குப் பிரமரிஷி தேசமென்று பெயரிட்டார்கள். இவை பிரமவர்த்த தேசத்தின் சிறப்பிற்குக் கொஞ்சம் குறைந்திருக்கின்றன. (மநு. 1-19.)

### மத்தியதேசம்.

அங்கிருந்து சிலகாலஞ் சென்றபின் அளகாபுரிவரையிலுள்ள சிலநாட்டைப் பின்னுங் கைவசமாக்கினார்கள். அந்நாடு, இமோற்பர்வதத்திற்கும் விந்தியபர்வதத்திற்கும் நடுவாயும், சரஸ்வதி மறைந்த விசனச தேசத்திற்குக் கிழக்காயும், பிரயாகைக்கு மேற்காயுமுள்ளநாடாம். இதற்கு மத்தியதேசமென்று பெயரிட்டார்கள். (மநு 1-21.)

### ஆரியாவர்த்தம்.

இவ்விடத்துச் சிலகாலம்வசித்தபின் ஜனத்திரள்மிகவே, கங்கையின் அருகிலுள்ள மலையடிவாரங்கள் முதலிய இந்தியாவின் மத்தியகண்ட முழுமையும் பரவினார்கள். இங்ஙனம் இந்தியாவின் மேல்சமுத்திரமுதல் கீழ்சமுத்திரம் வரையிலும், வடக்கே இமயகிரிமுதல் தெற்கே விந்தகிரி வரையிலும் ஆகிய இவைகளின் மத்தியிலுள்ள தேசமெல்லாம் கைக்கொண்டு இவைகளுக்கு ஆரியாவர்த்தமென்று பெயர்புனைந்தார்கள். (மநு. 1-22.)

### பிராமணர்களுக்குரிய இடம்.

இதுவன்றியும் மான் எந்தவிடத்தில் சுபாவமாகச் சஞ்சரிக்கின்றதோ அந்த கிருஷ்ணசாரமென்னும் இடந்தான்

யாகஞ்செய்தற்கு யோக்கியமானதால் அதைப் பிராமணர் தங்களுக்குரிய இடமெனக்கொண்டார்கள். (மநு. 1-23.)

### சூத்திரர்களுக்குரிய இடம்.

மற்ற இடத்தைச் சூத்திரருக்கும் அசுத்தமான மிலேச்சர்களுக்குமுரிய இடமாக்கினார்கள். அன்றியும் ஊழியத்தொழிலைவிட வேறு விருத்தியை எந்தவிடத்தில் அடையமாட்டார்களோ அந்த இடத்தில் சூத்திரர்கள் வசித்தல் தக்கதென்றும் நியமித்தார்கள். (மநு. 1-24.)

### தக்ஷணதேசம்.

விந்தகிரிக்குத் தெற்காயுள்ள தேசங்களுக்கு (Dekhan) தக்கணம் அல்லது தட்சண தேசமென்றுபெயராம்; இவை பெரும்பான்மையும் காடாரம்பமாயிருந்து தண்டகன் என்னும் அரசனால் ஆளப்பட்டதால் தண்டகாரணியமென்றும் பெயர்பெறும். இந்தத்தேசங்களில் ஆரியராயுள்ளவர்கள் குடியேறலாகாதென்று ஏற்பாடு செய்துகொண்டார்கள்.

இதன் பின்னர் ஜனங்கள் விருத்தியாகவே, இருப்பதற்குப்போதுமான இடமின்மையால், விந்தகிரியையுங் கடந்து முன் நிஷேதமாக நீக்கப்பட்டிருந்த தண்டகநாடுகளிலும் குடியேற ஆரம்பித்து, எவ்வெவருக்கு எந்தெந்த மாகாணம் அல்லது கிராமங்கள் அனுகூலித்தனவோ அவரவர் அந்தந்த மாகாணம் அல்லது கிராமங்களில் குடிபுகுந்தனர். ஒவ்வொருகிராமத்தில் வசிக்கும் கூட்டத்தாருக்கும் அந்தந்தக் கிராமத்தின் பெயராலேயே பெயர்கள் வழங்கிவருகின்றன. அவை எலமநாட்டார், முரிக்கிநாட்டார், எருக்கஞ்சேரியார், காஞ்சிபுரத்தார் என்பனபோலுமாம்.

விந்தகிரியின் வடபாகம் அல்லது உத்தரதேசத்திலுள்ள ஆரியர்களுக்குத் கௌடர்கள் என்றும், விந்தகிரியின் தென்பாகம் அல்லது தட்சணதேசத்திலுள்ளவர்களுக்குத் திராவிடர்கள் என்றும் பெயராம்.

### பஞ்சகௌடம்.

1. சுத்த கௌடம்:—இது ஸ்ரீநகரமுதல் பத்ரிகேதாரம் வரையிலுள்ள இடமாம். இதிலுள்ளவர்கள் சுத்தகௌடராம்.

2. கானுகோபிஜம்:—இது அயோத்தி முதல் காசிவரையிலுள்ள இடமாம். இதிலுள்ளவர்கள் கானுகோபிஜ கௌடராம்.

3. சராசந்து:—இது டில்லிமுதல் அஸ்தினபுரிவரையிலுள்ள இடமாம். இதிலுள்ளவர்கள் சராசந்து கௌடராம்.

4. மாந்தலே:—இது மிதுலேமுதல் பங்காளம்வரையிலுள்ள இடமாம். இதிலுள்ளவர்கள் மாந்தலே கௌடராம்.

5. உத்கலம்:—இது ஜெகன்னாதமுதல் ஒட்டியம்வரையிலுள்ள இடமாம். இதிலுள்ளவர்கள் உத்கல கௌடராம்.

### பஞ்சதிராவிடம்.

1. கர்னாட்டகம்:—(தமிழ்) இது கன்னியாகுமரி முதல் காளத்திவரையிலுள்ள தேசமாம்.

2. ஆந்திரம்:—(தெலுங்கு) இது காளத்திமுதல் கெஞ்சம் வரையிலுள்ள தேசமாம்.

3. கன்னடம்:—(கன்னடம்) இது மைசூர்முதல் கோலகொண்டை வரையிலுள்ள தேசமாம்.

4. மகராஷ்டகம்:—(மகராஷ்டகம்) இது கோலகொண்டைமுதல் மேற்குச் சமுத்திரம் வரையிலுள்ள தேசமாம்.

5. கூர்ச்சம்:—(இந்துஸ்தானம்) இது குசராத்தி முதல் டில்லிவரையிலுள்ள தேசமாம்.

### தேசங்களின் உயர்வு தாழ்வு.

பிரமவர்த்தத்தினும் பிரமரிஷிதேசம் குறைவானதாகவும், பிரமரிஷி தேசத்தினும் மத்தியதேசம் குறைவானதாகவும், மத்தியதேசத்தினும் ஏனையதேசம் குறைவானதாகவும் நினைக்கிறார்கள்.

உத்தரதேசத்தினும் தட்சணதேசங் குறைவானதாக நினைக்கிறார்கள்.

பஞ்சகௌடத்தினும் பஞ்சதிராவிடம் குறைவானதாக மதிக்கிறார்கள்.

திராவிடத்தினுள்ளும், கிருஷ்ண கோதாவரியிலுள்ளவர்களினும் நெல்லூரிலுள்ளவர்கள் குறைந்தவர்களென்றும், நெல்லூரிலுள்ளவர்களினும் காஞ்சியிலுள்ளவர்கள் குறைந்தவர்களென்றும்; காஞ்சிபுரத்தாரினும் கும்பகோணத்தார் குறைந்தவரென்றும், கும்பகோணத்தாரினும் பாண்டிநாட்டார் குறைவானவரென்றும், பொது வகையால் வடநாட்டார் தென்னாட்டாரை நிமித்தமில்லாமலே இகழ்வது சுபாவமாகவிருக்கிறது, ஆனால் இவர்களுக்கு வடதேசம் பூர்வத்தில் குடியேறினதென்றும், தென் தேசம் பின்னிட்டுக் குடியேறினதென்றும் தெரியவருகிறது.

## தக்ஷணதேசப் பிரபாவம்.

இந்தியாதேசத்தில் ஏனைய பாகங்களைப்பார்க்கிலும் நீர்வளமும் நிலவளமும் நிறைந்துள்ளதும், மூவேந்தரால் நீதிவழுவாது செங்கோலோச்சப்பட்டதும், தண்டகாரணியத்திலுள்ள தமிழ்நாடாம். இந்நாடு அநேக தீர்த்தங்களும், இருஷிகளாலும், தேவர்களாலும் பூசை செய்யப்பட்ட 1,008 சிவாலயங்களும், 103 விஷ்ணுவாலயங்களும் நிறையப்பட்டுள்ளதாம். இஃதன்றியும், தொண்டைநாடு சான்றோரால் நிறையப்பட்டதென்றும், பாண்டிநாடு முச்சங்கவாணர்களால் வசிக்கப்பட்டதென்றும், அச்சங்கத்துள் இறையனார் முருகவேள் முதன்மையராக இருந்துள்ளாரென்றும், அந்நாட்டைப் பரமசிவமும் பார்வதியும், சோமசுந்தரபாண்டியனாகவும் மீனாட்சியம்மையாகவும் வந்தாண்டுள்ளாரென்றும், தொண்டை நாட்டில் உமாதேவியார் எழுந்தருளிவந்து தவஞ்செய்ததுமன்றி, ௩௨-அறங்களை வளர்த்துவந்தாரென்றும், அதனால் இக்காலத்தும், அங்கே ஆதுலர்க்கன்னமும், ஓதுவார்க்குணவும், அன்னசத்திரம், தண்ணீர்ப்பந்தல், தேவாலயம், பிரமாலயம், மடம் முதலியவையுமமைக்கப்பட்டும், தேவாரம் திருவாசகம்

முதலிய தமிழ் வேதங்கள் ஓதப்பட்டும் உள்ளனவென்றும் கருதாமல் இந்நாடுகளைக் குறைவாக நினைந்தது ஆரியர்களின் அறியாமையாலோ அழுக்காற்றினாலோ அறியேம்.

ஒழுக்கபேதம்.

தென் தேசத்திலுள்ள சதுர் வருணத்தாரும் ஸ்நானம் ஜெபம் தபம் சந்தி ஒழுக்கம் ஆசாரம் தேவதாபூசை இவைகள் தவறாதவர்களாக இருக்கிறார்கள்.

வடதிசையிலுள்ளவர்களுள் முக்கியமாகக் கௌடர்களுக்கு ஸ்நானமில்லை. திருஷ்டிதோஷம், எச்சில் தீட்டு இல்லை. அன்றியும் அவர்கள் மது மாமிசம் புசிக்கிறார்கள். அழுக்காடையும் சட்டையும் தம்மைவிட்டகலா. தயை சாந்தம் பொறுமை கிஞ்சித்தும் தம்மிடத்திற்கிடையா. சகல வருணத்தாரும் ஒன்றியிருந்துண்பார்கள்.

ஆரியவருணத்தாருள் தருமத்தையும், அதருமத்தையும் நன்றாயறிந்துள்ள,

வாமதேவர், பசியினால் பீடிக்கப்பட்டபோது நாயின் மாமிசத்தைப் புசித்தார். (மநு. 10-106).

தவத்தில் முதிர்ந்த பாரத்துவாஜர், தம் புத்திரனோடு காட்டில் விருதுவென்னும் தச்சனிடத்தில் அநேக பசுக்களை வாங்கித்தின்றார். (10-107).

விசுவாமித்திரர், பசியினால் வருந்தும்போது சண்டாளன் கையிலிருந்த நாயின்மாமிசத்தை வாங்கித்தின்றார். (10-108).

அகத்தியர், வாதாபியாகிய ஆட்டினைக்கொன்று வில்வலன் சமைத்து விருந்திடப் புசித்தார். (வெளிப்படை).

இவர்கள் மான்களுள்ளதேசத்தைத் தங்களுக்கு இருப்பிடமாக்கிக் கொண்டார்களென்றால் வேறு கூறுவானேன்.

மநு. 3-269-ஆவது சுலோகத்தில் மான்களைக்கொன்று அதன் மாமிசத்தைப் புசித்தாரென்று கூறப்பட்டிருத்தலால் அம்மான் மாமிசத்தைப் புசிப்பதற்காக அம்மான்களிருக்குமிடத்தில் வசித்தாரென்பது கருத்து.

மச்சதேசத்து அந்தணர்கள், மச்சங்களைக்கொன்றுதின்பதை இக்காலத்தும் இத்தேசத்துங் கண்டிருக்கிறோம். இதனால் வடதேசத்தார் ஆசார ஈனர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. அங்ஙனமிருப்ப ஒழுக்கத்திலுயர்வார்களை இழிவாகக் கூறுவ தழுக்காறன்றோ.

ஆரியவேதமுண்டான காலத்து ஆரியர்கள் சிந்துநதிக் கரையில் வசித்திருந்தார்கள்.

### B. தாசர்கள்.

ஆரியர்கள் பூர்வத்தில் *இரணியர்களுடன் ஒருமையாக விருந்தார்கள். இரணியர்கள் பௌத்தமதத்தைச் சேர்ந்தார்கள். அதனால் இவ்விருவருக்கும் கலகம் நேரிட்டு வேறாய்ப் பிரிந்தார்கள். அதனால் ஆரியர்கள் இந்தியாவிற் பிரவேசித்து ஆங்குள்ள பூர்வகுடிகளைச்செயித்து அவர்கள் நாட்டைக்கைப்பற்றி அவர்களைத் தங்களுக்கு அடிமையாக்கிக்கொண்டு அவர்களுக்குத் தாசியர்கள் அல்லது தாசர்களெனப் பெயர் புனைந்து வழங்கிவந்தார்கள்.

வேதத்தில் தோத்திரத்திரட்டில் அல்லது சம்மிதையில் இந்திரன் சுதேசகண்டகர்களை அதஞ்செய்து அவர்கள் புலங்களை வெண்மைநிறமுள்ள நண்பர்களுக்குப் பாகித்துக்கொடுத்தான் என்று கூறியிருக்கின்றது. அதனால் தாசர் என்பவர்கள் வைதிக கருமஞ்செய்யாதவர்கள் என்றும், அக்கருமஞ்செய்பவர்களைத் துன்பஞ் செய்கிறவர்கள் என்றும் தெரியவருகின்றன. (இருக்குவேதம். i-7-11.)

இந்தத் தாசர் என்ற சுதேசத்தாருக்கு ஆரியர் வந்தகாலத்தில் அவர்களை எதிர்க்கப் போதுமான சக்தியில்லாதிருந்தபோதிலும், இவர்கள் பிரத்தியேகமான நகரங்களையும் சற்று நாகரீகமுள்ள வேலையாட்களையும் உடையவராக இருந்தார்கள். இதற்குச் சாட்சியாக இருக்குவேதம் 3-ஆம் அஷ்டகம் முதலாவது அத்தியாயம் 12-ஆம், வருக்கையில் இந்திரனும் அக்கினியுமாகத் தாசர் பட்டணங்களில் 90-பட்டணங்களை அழித்துவிட்டதாகக் கூறப்பட்டிருக்கின்றது.

---

*இரணியர்=பூர்வத்தில் பார்சிகத்திலுள்ள குடிகளுள் ஓர் வகுப்பினர். இவர்கள் பாஷையில் ஆரியரை ஒத்திருப்பர் ஆனால் மதத்தில் வேறுபட்டிருப்பர்.

இருக்கு வேதத்தினால் ஆரியர்கள் சிறந்த நாகரீகமுள்ள வர்களெனத் தெரிந்தபோதிலும், அவர்களுக்குச் சாதியிற் சிறந்தோமென்னுஞ் செருக்குத் தலையெடுத்திருந்தது. அவர்கள் கொடுமையும் சகியாமையும் சாதி சமயங்களில் ஒவ்வாத் தனமுமுள்ளவர்களாக இருந்தார்கள். இஃதன்றியும் தமக் கெதிர்ப்பட்ட சாதியார்களின்மேல் துவேஷமும் திரஸ்காரமும் (திரஸ்காரம் = அலக்ஷியம்) ஏளனமுங் காட்டியிருக் கிறார்கள்.

பூர்வத்தில் வேதத்தில் சாதியேற்படுத்தினோர் அவர்களுக்குள்ள கர்வத்தையும் கொடுமையையும் சகியாமையையும் காட்டியிருக்கிறார்கள். அவற்றுட் சிலவற்றை எடுத்துக் காட்டுவோம்.

இருக்குவேதம் முதல் அஷ்டகம் 4-ஆவது அத்தியாயம் 11-ஆவது வருக்கையில்,

இந்திரனே! ஆரியர்களையும் தாசர்களையும் பகுத்தறியும்படி வித்தியாசம் செய்தருளும். வைதிக கருமங்கள் செய்யாதவர்களைத்தண்டித்து யாகத்துக்கு உடன்படச்செய்தருளும். யாகஞ்செய்பவர்களுக்கு ஊக்கத்தைக்கொடுப்பவரே! வல்லவராயிரும்.

i-5-4. உமது சத்துருக்களை எளிதிற் செயங்கொள்ளும். உதாரமுள்ள வீரேந்திரனே! யுத்தத்தில் தாசர்களை நீர் ஓடவிட்டடித்தீர்.

i-7-11. எல்லாராலும் வந்திக்கப்பட்ட இந்திரனே! தாம் மருத்துக்கள்சூழத் தாசர்களையும் ஷிமயூனர்களையும் எதிர்த்துத் தமது இடியினால் அவர்களைச் சேதித்தருளினீர். இடிக்கரசே! பின்பு புலங்களை வெண்மைநிறமுள்ள நண்பர்களுக்குப் பகுத்தருளினீர்.

i-7-12. நடக்கிற பிராணிகளுக்கும் சுவாசமுள்ள பிராணிகளுக்கும் கர்த்தனும்,வேதத்தையோதும் பிராமணர்களுக்

காகப் பசுக்களை மீட்டவரும், தாழ்ந்துள்ள தாசர்களைக் கொன்றவருமான இந்திரனே! உம்மை வணங்குகிறேன்,

i-7-16. இடியினை ஆயுதமாகக்கொண்டு தனது வல்லபத்தில் நம்பிக்கை உடைய இந்திரன் தாசர்களின் பட்டணங்களை அழித்துக்கொண்டுபோனார். அறிவிற்சிறந்த இந்திரனே! இடிக்கரசே! தாசர்களின்மீது உமது அம்புகளைச்செலுத்தும். ஆரியர்களின் வீரத்தையும் புகழையும் விருத்தியாக்கும்.

i-8-17. இடியைக்கொண்டு தாசர்களை ஒழித்துவிட்டு அசுவினித்தேவர்களாகிய நீவிர் ஆரியர்களின்மீது பிரகாசத்தைத் தந்தருளினீர்.

ii-1-19. வானத்தில் யுத்தஞ்செய்தவரும் சண்டையில் நூறுவிதத்திலுங் காப்பாற்றினவருமாகிய இந்திரனே! யாகஞ்செய்யும் ஆரியரை யுத்தத்தில் காத்தருளினீர்.

ii-1-22. இந்திரனே! பயங்கரமாயிரைச்சலிடும் பிங்கலவர்ணமான பிசாசுகளை நாசமாக்கும். இராட்சசர்களை நிர்மூலமாக்கும்.

[ஈண்டுக்கூறும் பிசாசு இராட்சசர் என்பவர் மனிதரேயாம்.]

ii-4-17. போர்க்குதிரைகளுக்குக் கர்த்தனாகிய இந்திரனே! உற்சாகத்தை விளைவிக்கும் எங்களது புகழ்ச்சியினால் பராக்கிரமங்கொண்டு, உமக்குப் பலியிடாதவரையும் உம்மை வணங்குகிறவர்களை வருத்துவோரையும் நீர் கொன்றருளினீர்.

ii-4-18. பராக்கிரமமுள்ளவரே! மரக்கலத்தை அக்கினி எரித்துவிடுவதுபோல, வைதிகமில்லாத தாசர்களைக் கொளுத்திவிடும்.

ii-6-6. நீர் ஆரியருக்கு வெளிச்சத்தை யுண்டாக்கினீர். தாசர்கள் உமது இடதுபாரிசத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆரியர் தாசர்களை வெற்றிகொண்டதுபோல, உமது கிரு

பைபெற்றுச் சத்துருக்களை வெற்றிகொள்வோரை, நாங்கள் கொண்டாடுகிறோம்.

ii-6-15. இந்திரன் அசுரர்களையெதிர்த்துத் தாபிதியர்களைக் கொண்டுபோய்விட்டதுமன்றி, அவர்கள் ஆயுதங்களையெல்லாம் நெருப்பிற்கிரையாக்கி, அவர்கள் ஆனிரையாலும் அசுவங்களாலும் இரதங்களாலும், அரசகுமாரனைச்செல்வவந்தனுக்கினார்.

ii-6-16. தாசர்கள், சூமூரியர், தூனியர் இவர்களுக்குத் தூக்கத்தை விளைவித்துக்கொன்றீர்: தாபிதியரைக் காப்பாற்றினீர்.

ii-6-26. இந்திரனாகிய அவர் தாசியரைக்கொன்று அவர்களின் இருப்புப் பட்டணங்களை நாசமாக்கினார்.

iii-6-4. இந்தக் கொடியவர்களிருக்கும் வானத்தையும் பூமியையும் காற்றினையும் அனலாக்கும் மேகாதிபதியே! பிராமணர்களைத் துவேஷிக்கும் கொடியவர்கள் வசிக்கும் வானம் பூமி காற்று இவற்றினை உமது கிரணங்களால் கொளுத்தும். தாசர்களேனும் ஆரியர்களேனும் மானிட சத்துருக்களைச் செயங்கொள்ள எளிதாக்கினீர்.

iv-7-3. தாசர்களாகிய ஷம்பரர்களது நுழைதற்கரிய 100-பட்டினங்களை நீர் அழித்தீர்.

v-6-4. தாசர்களுக்கும் ஆரியர்களுக்குமுள்ள பகையை ஒழித்துவிடும்.

viii-2-19. நீர் ஆரியர் பொருட்டாகத் தாசர்களை ஓட்டினீர்.

என இந்திரன் தோத்திரஞ் செய்யப்பட்டிருக்கிறான். இன்னும் இவைபோன்ற தோத்திரங்கள் பலவுள, விரிக்கிற்பெருகும்,

இதனால் தாசர் என்பவர்கள் ஷிமாயுக்கள் சூமூரியர் தூனியர் கிக்காதர் பிரமகண்டர் மாகவதர் கைசாஷர் ஷம்பரர் பர்ணியர் எனத் தெரியவருகிறது.

ஆரியர்கள் இந்தியாவிற் குடியேறின காலத்தில், இவர்களது ஒழுக்கம் ஆசாரம் அனுஷ்டானங்களுக்கு, மேற்கண்டவர்கள் நேர்விரோதிகளாக இருந்து அநேக இடையூறுகள் செய்தார்கள்.

அதனால் ஆரியர் இந்த விரோதிகளை நேரிற் சண்டை செய்ததுமன்றி, இந்திரன் மருத்துக்கள் அசுவினிதேவர்கள் அக்கினி வருணன் முதலிய தேவர்களை அஷ்டகர்மங்களால் வசியஞ்செய்து, அத்தேவர்களைக்கொண்டு உச்சாடனம் மாரண முதலியவை செய்து நாசஞ்செய்தார்கள். இவ்விதம் நாசஞ்செய்யப்பட்ட விரோதிகளுக்குத் தாசர் என்று பெயரிட்டு வழங்கினார்கள். தாசர் என்பதற்கு வேதத்தில் சத்துருவென்பது பொருளாம். இக்காலத்திலந்தணர்கள், தாசர் என்றபதம் திருடர் அடிமை என்பவற்றிற்குச் சமமாகக் கொள்ளுகிறார்கள்.

### C. இராக்ஷதர்.

ஆரியர்கள் தங்களை எதிர்த்துப்போர்செய்த குடிகளை இராக்ஷதர்களென வழங்கியிருக்கிறார்கள். அச்சொல்லுக்கு வலுத்தவர்கள் பலமானவர்கள் தாங்குகிறவர்கள், காத்திரமானவர்கள் என்பன பொருளாம். சுக்கிலயசுர்வேதம் சதபதப் பிராஹ்மணத்தில் இராக்ஷர் என்பதற்குத் தடுப்பவரெனப் பொருள் கொள்ளப்படுகின்றது; எனவே யாகத்தைத்தடுப்பவரென்பது கருத்து.

### D. அசுரர்.

ஆரியர்கள் பின்னும், தங்கள் சத்துருக்களுக்கு அசுரரெனவும் பெயர்கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதற்குக் காரணம் விளங்கவில்லை. இந்தச்சொல் சூரியனுக்கு வழங்கப்படுகின்றது. ஆனால் அப்பதத்திற்கு-கர்த்தர் யஜமானன் அல்லது தலைவர் என்பது பொருளாம். தற்காலத்தில் பூர்வகுடிகளின் தலைவர்க்கு நாயகர் என வழங்குவதுபோல, பூர்வத்தில் இம்

மொழி ஒருகால் வழங்கி யிருக்கலாமெனவுங் கொள்ளலாம். சுரர் என்பதற்குப் பொருள் தேவராதலின், அதற்கு எதிர் மொழி அசுரர் ஆகவே, அம்மொழிக்கு ஆரியர், துஷ்டர்கள் பகையாளிகள் எனப்பொருள் கொள்ளுகிறார்கள்.

இதுகாறுங் கூறிவந்தனவற்றுள், பார்சீக நாட்டிலிருந்து வந்தவர்கள் ஆரியரென்றும், இந்தியாவில் இவர்களுக்கு முன் னிருந்தவர்கள் தாசர், இராக்ஷதர், அசுரர் என்றும் தெரிய வருகின்றன. இனி அவ்வாரியருள் பல பிரிவினரிருந்தனர்.

### பிராமணர்.

வேதத்தில் பிராமணர் என்றபதம், குருக்கள் அல்லது ஆசாரியவகுப்பினரென ஸ்தாபிக்கப்படவில்லை. "பிராஹ்மணம்" என்பது வேதம்; அதை ஓதுகிறவன் அல்லது உச்சரிக்கிறவன் பிராஹ்மணனும். இந்தப் பிராஹ்மணமென்னும் வாக்கியம், பிருஃ என்னுந் தாதுவிலிருந்துண்டாயதாம். பிருஃ= உச்சரித்தல். எனவே, வேதத்தை யுச்சரித்தவர்கள் பிராஹ்மணர்கள். அதை விரோதித்தவர்கள் அல்லது அலக்ஷியஞ் செய்பவர் தாசராம்.

வேதத்தில், பிராஹ்மணர்களுக்கு வேதத்தையோதுந் தொழிலினைக் கற்பிக்கிறதேயன்றி, சாதியினைக் கற்பிக்கவேயில்லை. இவர்கள் உற்பத்தியை ஆராயுமிடத்து, மற்ற மானுஷ்ய பிறவியினின்றும் வேறுபட்டதாக ஒருவாக்கியமேனுங்கிடையாது. வேதத்தில் இவர்கள் வேள்வியாகிய வைதிக கருமங்களைச்செய்தலிலும் ஏனைய குருக்களைப்போல ஓர்முக்கிய வகுப்பினராகிய குருக்களாகவிருக்கிறார்கள் என்பது அடியில் வருவனவற்றால் தெரிகின்றது.

சதக்கிருதுவே=[இந்திரனே]! உம்மைப்பாடுவோர்பாடுக. நீர் புகழினுக்குரியவராதலின் இருக்குவினை யோதுவோர் புகழ்க.!

"அக்கினியே! ஹோத்திரி போத்திரி ரித்துவிஜா, நே ஷ்திரி இவர்களின் தொழில் உமக்கேயாகுக. நீரே, அக்கினி தரன்; பிரஷாஸ்திரி உத்தியோகம் உம்மதே. அத்வர்யும் பிர ஹ்மாவும் நீரே. நம்முடைய குடியிருப்பில் யசமானனும் நீரே" என்று மேற்கூறியவற்றுள் அஷ்டவித குருக்கள் குறி க்கப்படுகின்றனர். அவருள் பிரஹ்மா அல்லது பிராஹ்மண ன் என்பவன் கடைசியாகவுள்ளவனுயிருக்கிறான்.

வேதத்தில் பிராஹ்மணனைக் கூறுமிடத்தும், பிராஹ்ம ணனேடரசன் என்னுமிடத்தும், ஓர் தொழிலாளி அல்லது உத்தியோகஸ்தன் என்றே குறிக்கப்பட்டிருக்கின்றது. பிற்கா லத்து இந்தப் பிராஹ்மணன் என்பது தெய்வப்பிறப்பினறு கிய குருக்களாக வழங்கிவருகின்றது. பிராஹ்மணன் என்பது மூற்காலத்து வேதத்தில் ஓர்வகைத்தொழிலாளியாக இருந்து, பிற்காலத்து ஓர்வகை ஜாதியான் என ஏற்படுத்திக்கொண்ட தை அறிந்துணர்வது கஷ்டமின்றாம்.

### புரோகிதன்.

இந்தப்பிராமணன் யாகத்தில் இவ்வித சிறந்த தொழிலிலி ருந்ததுமன்றிப் புரோகிதன், அல்லது முன்னவன் கொண்டு செலுத்துகிறவனெனவுமிருந்தான். விசுவாமித்திரன் முதலிய ராஜருஷிகளநேகரிருந்தும் இவன் இந்தக் கௌரவத்தைப்பெ ற்றான். சகலத்தையும் உணவாகக்கொள்ளும் அக்கினிதே வன் தெய்வலோகத்தில் தேவர்களுக்கெல்லாம் புரோகிதனுக இருக்கிறான். அதற்குச்சமமாக இம்மண்ணுலகத்தில் பிராமண ரைப் புரோகிதராகக்கொள்வது உசிதமாகவிருந்தது. புரோகி தர், பிராமணர் இவர்கள் தொழில்கள் படிப்படியாகப் பரம்ப ரைப் பாத்தியதையைக்கொண்டு நடந்துவருகின்றன. இப்பு ரோகிதம் பிரபுக்கள் வீடுதோறும் வழங்கிப் பழகிவருகின்றது. இவர்கள் அரசனிடத்து அசுவமேதமுதலிய யாகங்கள் வெற்றி யையும் ஐசுவரியத்தையுங் கொடுக்குமென்று போதித்தார்க ள். இவர்கள் வித்தையிலும் புத்தியிலும் சிரேஷ்டரானர்கள்.

பின்னும் இவர்கள் அரசன் மக்களுக்கு வித்தை கற்பிக்கும் உபாத்தியாயரானார்கள். பிள்ளைகளுக்கு வித்தையேற வேற, உபாத்தியாயருக்குச் செல்வாக்கும் அதிகாரமும் வளர்ந்துவந்தன.

அதன்மேல், அரசனுக்கு அந்தணன் புத்திசொல்லுகிறவனும், மந்திராலோசனைக் காரனுமானான். மனிதர்களுக்கு இஷ்டகாமியார்த்தங்கள் சித்திக்கும்படி அந்தணன் ஆசீர்வாதஞ்செய்வதால், இவன்வாக்குக் கடவுளிடத்திற் செல்லுமென்று அவ்வந்தணரே தாந்திரீகமுஞ் செய்தார்கள். பின்னர் உலகபாலனத்திற்குரிய சட்டங்களை, இவர்களே ஏற்படுத்தினார்கள். அதில் தங்களுக்கு ஆகவேண்டிய காரியங்களெல்லாம் எழுதி வைத்துவிட்டார்கள். இவ்வித உபாயங்களினால் இவர்கள் பூசுரர்கள் என்னும் பூலோகதேவர்களானார்கள்.

### இருடியர்.

வேதத்தை எழுதினவர்கள் இருடியர்களாம். இவர்கள் மதவிஷயத்தில் ஆரியர்களுள் உயர்ந்த வகுப்பினராயிருக்கிறார்கள். இவர்கள் வாசித்த வித்தியாசாலையின் சாகைகள் இவர்கள் பரம்பரையை ஒட்டிவருகின்றன. இவர்கள் இந்தியர்களின் ஒருவகுப்பிலடங்கினவர்களல்லர். எனவே, பலசாதியாரும் சேர்ந்திருக்கிறார்கள். பெரும்பாலும் அரசரந்தணர்கள் வகுப்பினராயிருப்பார்கள். வேதங்களிலுள்ள அநேகசம்மிதைகள் விசுவாமித்திரராற் கூறப்பட்டிருக்கின்றன; அவர் தமது தவத்தினாலும், சாமர்த்தியத்தினாலும் இராஜருஷியாயிருந்து பின்னர் பிரமரிஷியாயினார். இவர் சப்தரிஷிகளில் ஒருவராக இருக்கிறார். சப்தரிஷிகள் யாவரெனின் வசிட்டர் கசியபர் அத்திரி ஜமதக்கினி கௌதமர் விசுவாமித்திரர் பாரத்துவாஜர் என்பவர்களாம்; இது விஷ்ணுபுராணத்திற் குறித்தபடியாம். இன்னும் வேறு புராணங்களிலும் ஸ்மிருதிகளிலும் வேறுவிதமாகக் கூறப்படும். ஜமதக்கினியையும் ஓர் இருடியாகக்கூறப்படுகின்றது. இவர்விஷ்ணு அவதாரமாகிய பரசுராமரின்தந்தையாம்.

இந்த ஜமதக்கினி விசுவாமித்திரரின் மருமகனும். இவ்விருவர்களினின்றும் அநேக பிராமணர்கள் கலப்பு உதிரத்து உதித்தவர்களாகக் கூறப்படுகின்றனர். அநேகவித சம்மிதைகளுக்குப் பிராமண சந்ததியார் அல்லது அரச சந்ததியார் கிரந்த கர்த்தர்களாக இருக்கிறார்கள்.

### வேதஞ்செய்த ஆண்பாற் கிரந்தகர்த்தர்கள்.

பிரமரிஷியாவார். மரீசி அத்திரி ஆங்கிரசு புலத்தியன் புலகன் கிருது பிரசேதனன் வசிட்டன் பிருகு முதலியவர்களாம்.

இராஜரிஷிகளாவார். மந்தாத்திரி ஷிவி வசுமனன் பிரதர்த்தனன் விஸ்வாமித்திரன மதுசந்தனன் ரிஷபன் ரேணு அம்பரிஷன் பரதன் மேதாதிதி, நாபகன் இரகுகணன் வக்ஷப்பிரியன் புரூரவன் வேனன் சுதாசன் கிருதசமதன் தேவாபி சந்தானுமுதலியவர்களாம்.

* தாசரிஷிகளாவார். கவஷ ஐலுஷன் முதலியவர்களாம்.

* சங்கராஜாதிரிஷிகளாவார். கக்ஷீவது-இவர் அங்கதேசத்தரசனது புழுக்கச்சிமகன். இவர்போன்றவர் பலருளராம்.

### *வேதஞ்செய்த பெண்பாற் கிரந்தகர்த்தர்கள்.

ஸ்திரீ சூத்திரர்கள் வேதம் ஓதப்படாதென்பது உலகவழக்கின்கணிருக்கின்றது. ஆயினும் அதுபொருந்தாவுரையாம். ஏனெனில் அநேக ஸ்திரீகள் வேதங்களுக்குக் கிரந்த கர்த்தர்களாகவிருக்கிறார்கள். இருக்குவில் சிலபாகங்கள்.

| | | |
|---|---|---|
| புலோமனை புத்திரி | ... | ஷசி. |
| காமையின் ,, | ... | சிரத்தை. |
| சக்தி ,, | ... | கோரவி. |
| அப்பிரீனு ,, | ... | வாக்கு. |
| அகஸ்தியர் பத்தினி | ... | லோபாமுத்திரை. |

என்பவர்களாற் செய்யப்பட்டிருக்கின்றன.

---

* இதனால் ஸ்திரீ சூத்திரர்கள் வேதமோதலாமென வெளியாகின்றது.

## க்ஷத்திரியன்.

இந்துக்களின் இரண்டாம் வகுப்பினராகிய வீரர்களுக்குச் சாஸ்திரங்களிலும், ஸ்மிருதிகளிலும் கூறப்பட்ட க்ஷத்திரியரென்னும் இம்மொழி, வேதத்துள் க்ஷத்திரமுடைய கூட்டத்தாருக்கே இடுகுறிப்பெயராக இருக்கின்றது. (க்ஷத்திரம்=அதிகாரம் வல்லபம்). இக்கருத்தால் இந்திரன், வருணன், மித்திரன் (=குபேரன்) ஆகிய இத்தேவர்களுக்குமிம்மொழி யுபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. வேதத்துள் க்ஷேத்திரபதி என்பது புலகர்த்தனும். எனவே பூஸ்திதியுடையவன் என்பது பொருளாம். க்ஷத்திரபதி என்பது அதிகாரியாம். எனவே, அதிகாரத்தைச் செலுத்துபவனும். இதனால் க்ஷத்திரியனென்பது க்ஷத்திரபதி என்பதற்குச் சமமாகும். இஃதன்றியும் க்ஷத்திரியவென்னும் பதத்திற்கு விஶபதி அல்லது விஶம்பதி எனவும் பொருள்கொள்ளும். விஶ விஶம் என்பன நரர்கள் மனிதர்கள் என்பனவாம். அதனால் விஶபதி என்பது நரபதியாம். விஶம்பதி யென்பது மனிதபதியாம். இவ்வகுப்பினருக்கு வேதத்துள் இராஜன்யஃ என்றும் பெயர் வழங்கிவருகின்றது. இது இராஜவென்னும் தாதுவிலிருந்துண்டாயதாம். இராஜம் என்பது கோபத்தையும் இடத்தையும் குறிக்கும். இராஜசம், இராச்சியம் என்பனவற்றுற் காண்க. இராஜர்கள் இருடிகளாகவு மிருக்கிறார்கள். இதற்கு விசுவாமித்திரர் முதலியோரே சான்றும்.

## வைசியன்.

வேதங்களுண்டான ஆதிகாலத்தில் (வீடு அல்லது நாடு எனப்பொருள்படும் வேச, [விஶ] என்னும் பதத்தோடு சம்பந்தமுடைய) விச [விஶ] என்னும் பதம், சாதாரணமாகச் ஜனங்களைக்குறித்து நின்றது. அதினின்றும் பிறந்தபண்பாகிய வைசிய என்பது பின்னர் வீட்டையுடையவனுக்கும், சனசாமானியத்துட்பட்ட ஒருவனுக்குச் சொந்தமானவைகளுக்கும், பிரயோகிக்கப்பட்டது. சனசமூகங்களில் பசுக்

காத்தலேயும் பயிரிடுதலேயும் இன்னுமிவைபோன்ற முயற்சிகளேயுமுடைய வகுப்பினர்க்கு விச என்னும் பதம் ஏகதேசமாகப் பிரயோகிக்கப்படுங்காலத்தில், அது அவர்களுக்கு இத்தொழில்களிற் சுதந்தரத்தைக்கொடுக்காமல், அவ்வம்முயற்சிகளுள்ளமட்டுமே பிரயோகிக்கத்தக்கதாயிருந்தது. இதனல், அக்காலத்தில் வைசியசாதியெனவொன்று ஏற்படவில்லையென்றும், மனிதர்களுள் மேற்குறித்த முயற்சிகளிற் புகுந்தவர்க்கு அவ்வப்பொழுது வைசியப்பட்டஞ் சித்தித்ததென்றுந் தெரிகின்றது. ஆதலாற் சிருட்டிக்காலத்துச் சாதிவகுப்பு இல்லையென்பதூஉம் அதன்பின்னர் தொழில்பற்றியே அவ்வகுப்பு ஏற்பட்டதென்பதுஞ் சித்தாந்தமாகிறது. இதற்குப் பிரமாணம். மநு என்பவருக்கு திருஷ்டா, கருஷா, நேடிஸ்தான், நாபாகரிஸ்டன், பிரிசத்திரன் என ஐந்து குமாரரிருந்தார்கள்; அவர்களுள் திருஷ்டாவினிடமாகவுண்டான தார்ஸ்டக ராசாக்கள் வேதமோதிப் பிராமணரானர்கள். கருஷாவினிடமாகவுண்டான கருஷாக்களென்பவர்கள் படைக்கலம் பயின்று சனங்களேக்காத்து க்ஷத்திரியரானர்கள். நேடிஸ்தான் குமாரன் நாபகனென்பவன் கிருஷி பசுக்காத்தல் வாணிகங்களேச் செய்து வைசியனுனன். நாபாகரிஷ்டன் பிள்ளேகள் வேதமோதிப்பிராமணரானர்கள். பிரிசத்திரன் பசுக்காத்து வருகையில், புலிவந்து பசுமந்தையில் விழ, அதைக் கொல்லும்படி பாணத்தை விட்டான்; அப்பாணந்தவறிப் பசுவின்மேலே விழப் பசு இறந்தது; அதைக்கண்டு புரோகிதரொருவர் அவனேச் சூத்திரனுகக் கடவதென்று சபித்தார். உடனேயவன் சூத்திரனுகிவிட்டான். இதன் விரிவை உல்சன் துரையெழுதிய சாதிப்புத்தகத்தில் 433-ஆவது பக்கத்திற்காண்க. இஃதன்றியும் விசுவாமித்திரரொருவரே, உலகத்தைக் காக்கும்போது அரசனுகவும் வேதமோதி ரிஷியானபோது பிராமணனுகவும் இருந்தனர். இன்னு மிவைபோன்ற சரித்திரங்கள் பலவுள, ஈண்டு விரிக்கிற் பெருகும்.

இருக்குவேதம் 3-ஆவது அஷ்டகம் 1-ஆவது அத்தியாயம் 9-ஆவது வருக்கையில் அக்கினியைக் குறித்த தோத்திரத்தில் "𑌵𑌿𑌶𑌾𑌂𑌹𑍋𑌤𑌾𑌮𑌨𑍁𑌷𑍀𑌣𑌾𑌂, విశాంమనుషీణాం, விசாம்மநுஷிநாம்" என மனிதர்களுக்கு முன்னவனே யென்று கூறப்பட்டிருக்கிறது. இஃதன்றியும் ஷ அஷ்டகம் 8-ஆவது அத்தியாயம் 13-ஆவது வருக்கையில் அவ்வக்கினியை "𑌵𑌿𑌶𑌾𑌂𑌵𑌿𑌶𑍍𑌪𑌤𑌿 విశాంవిశ్పతి விசாம் விஸ்பதி" என்றுங் கூறியிருக்கிறது.

இஃதன்றியும் இருக்குவேதத்தில் அசுவினி தேவனைத் துதிக்குமிடத்துத் துதிகாரன் தன்னையுந் தன்னினத்தையுந் தழுவிக்கொண்டு தோத்திரஞ் செய்திருக்கிறது வருமாறு, இருக்குவேதம் 6-ஆவது அஷ்டகம் 3-ஆவது அத்தியாயம் 16-ஆவது வருக்கையில்,

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑌮𑍁𑌤 𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑌂
𑌧𑌿𑌯𑍋 𑌹𑌤𑌂 𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑌿 𑌸𑍇𑌧𑌤𑌮𑌮𑍀𑌵𑌾
𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂 𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑌮𑍁𑌤 𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑌂
𑌨𑍄𑌨𑍍𑌹𑌤𑌂 𑌧𑍇𑌨𑍂𑌰𑍍𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑌮𑍁𑌤 𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑌂 𑌵𑌿𑌶𑌃

బ్రహ్మజిన్వతము తజిన్వతం
ధియః హతం రక్షాంసి సేధ తత మీవా
క్షత్రం జన్వతము తజన్వతం
నృన్ హతం,ధేనుః జిన్వతముత జన్వతంవిశః॥

*பிரஹ்ம ஜின்வதமுத ஜின்வதம்
தியஃ ஹதம் ரக்ஷாம்ஸி ஸேததத மீவாஃ
†க்ஷத்ரம் ஜின்வதமுத ஜின்வதம்
நிருன் ‡ஹதம்தேநுஃ ஜின்வத முதஜின்வதம் §விஶஃ ॥

---

* பிரஹ்மம் (பிராஹ்மணம்)=வேதம்.

† க்ஷத்திரம்=வல்லபம்.

‡ தேநு:=பசு.

§ விஶ:=மனிதன் குடி அல்லது வீடு.

(இ-ள்.) தோத்திரங்களை யருளவேண்டும்.
அனுஷ்டானங்களை யருளவேண்டும்.
இராக்கதரையழித்து இரட்சிக்கவேண்டும்.
தீங்கினையொழித்தருளவேண்டும்.
வீரத்தைத்தந்தருளவேண்டும்.
புருஷத்வவலிமையைத் தந்தருளவேண்டும்.
பசுவினையருளவேண்டும்.
மனிதர்களையருளவேண்டும்.

இது ஆச்சரியமன்று: இதற்குப் பூர்வாதாரமில்லை. இம்மந்திரங்கள் பிராமணர்களுக்கு மிகவும் பிரியப்பட்டுள்ளது. இதனை விசேஷ கிருத்தியங்களில் இரகசியமாகவும் விரிவாகவு மெடுத்தோதுவார்கள். இது அவரவர்களின் பிரயோசனத்தைக் குறித்ததேயல்லாமல் சாதியைக்குறிக்கவில்லை. இதைக்கிருஷ்ணயசுர்வேதத்தில் தைத்திரீயப் பிராஹ்மணத்தில் மூற்பாகத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது வருமாறு.

1. 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑌂-𑌤𑌨𑍍𑌮𑍇𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑌂
2. 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑌂-𑌤𑌨𑍍𑌮𑍇𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑌂
3. 𑌇𑌷𑌂𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑌂-𑌤𑌾𑌂𑌮𑍇𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑌂
4. 𑌊𑌰𑍍𑌜𑌂𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑌂-𑌤𑌾𑌂𑌮𑍇𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑌂
5. 𑌰𑌯𑌿𑌂𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑌂-𑌤𑌾𑌂𑌮𑍇𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑌂
6. 𑌪𑍁𑌷𑍍𑌟𑌿𑌂𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑌂-𑌤𑌾𑌂𑌮𑍇𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑌂
7. 𑌪𑍍𑌰𑌜𑌾𑌂𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑌂-𑌤𑌾𑌂𑌮𑍇𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑌂
8. 𑌪𑌶𑍂𑌨𑍍𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑌂-𑌤𑌾𑌨𑍍𑌮𑍇𑌜𑌿𑌨𑍍𑌵𑌤𑌂

1. బ్రహ్మసంధత్తం తన్మేజిన్వతం
2. క్షత్రగ్ సంధత్తం తన్మేజిన్వతం
3. ఇషగ్ సంధత్తం తామ్మేజిన్వతం
4. ఊర్జగ్ సంధత్తం తామ్మేజిన్వతం

5. రయిగ్ం సంధత్తం తాంమేజిన్వతం
6. పుష్టిగ్ం సంధత్తం తాంమేజిన్వతం
7. ప్రజాగ్ం సంధత్తం తాంమేజిన్వతం
8. పశూన్ సంధత్తం తాంమేజిన్వతం

1. பிரஹ்ம ஸந்தத்தம் தன்மே ஜின்வதம்.
2. க்ஷத்ரக்ஂ ஸந்தத்தம் தன்மே ஜின்வதம்.
3. ஈஷக்ஂ ஸந்தத்தம் தாம்மே ஜின்வதம்.
4. ஊர்ஜக்ஂ ஸந்தத்தம் தாம்மே ஜின்வதம்.
5. ரயிக்ஂ ஸந்தத்தம் தாம்மே ஜின்வதம்.
6. புஷ்டிக்ஂ ஸந்தத்தம் தாம்மே ஜின்வதம்.
7. பிரஜாக்ஂ ஸந்தத்தம் தாம்மே ஜின்வதம்.
8. பஸூன் ஸந்தத்தம் தாம்மே ஜின்வதம்.

(இதன்பொருள்.)

1. வேதத்தினை யுண்டாக்கும் அதனை எமக்கருளும்.
2. வல்லபத்தினை யுண்டாக்கும் அதனை எமக்கருளும்.
3. உணவினை யுண்டாக்கும் அதனை எமக்கருளும்.
4. பலரஸதை யுண்டாக்கும் அதனை எமக்கருளும்.
5. தனத்தை யுண்டாக்கும் அதனை எமக்கருளும்.
6. புஷ்டியை யுண்டாக்கும் அதனை எமக்கருளும்.
7. சந்ததியை யுண்டாக்கும் அதனை எமக்கருளும்.
8. பசுவினை யுண்டாக்கும் அதனை எமக்கருளும்.

இதனால் சாயனாசாரியர் பிரஹ்மம் என்பதை அந்தணருக்கும், க்ஷத்திரமென்பதை அரசருக்கும் பிரயோகித்தார் ஏனையவற்றை அந்தந்த ஜாதியின்மேலேற்றத் துணிவுகொண்டிலர். குடியேறின ஆரியவமிசத்தார் முற்காலத்தில் ஒரேவகுப்பினராக இருந்தாராதலின் மேற்குறித்த அவர் பிரார்த்தனைகளைக் குறித்ததேயன்றிப் பிறரைக்குறித்ததன்றாம். ஆரியர்கள் இந்தியாவிலே தாபனமான பிற்காலத்தில், பசுக்காத்

தல் வேளாண்மை வாணிகம் இம்மூன்றும் மநுகாலத்திற்போ லவே வைசியர்களுக்குச் சுதந்தரப்பட்டிருந்தன.

## சூத்திரர்.

சூத்திரர் (ஊழியராக இருந்தபோதிலும்) ஹிந்துவகுப்பி னர்க்கோரவயவமாயிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத்து விஜத்துவமில்லையென்று மநுவாதி ஸ்மிருதிகளில் கூறப்படுகி ன்றது. இவ்வேற்பாடு வேதத்திற்கிடையாது. இவ்வகுப்பினர் முன்னர் சிந்துநதியருகில் அபீரர்களுடன் வசித்திருந்தார்கள் என்று மஹாபாரதம் பீஷ்மபருவத்திற் கூறியிருக்கிறது.

அபீரர்கள் அபீரியதேசத்து மனிதர்களாம். இவர்களின் வமிசத்தார் சிந்து (Sind) குச்சரசேதம் (Kutch) காத்தியா வாக்கம் (Kathiawad) இந்தப்பிரதேசங்களில் இடையர் உழ வினர் என ஓர்பிரத்தியேக வகுப்பினராக இருக்கிறார்கள். ஆ ரியர்கள் இந்தத்தேசத்தைப் பிடித்தபின்பு "சூத்திரர்" என்ற பிரயோகம், இந்தியாவில் மற்றப்பாகத்திலுள்ள பூர்வீக ஊழிய வகுப்பினர்களுக்கும் ஏற்றப்பட்டது. இந்தப்பிரயோகம் பின் னர் அம்பட்டர் சண்டாளர் முதலியோர்களுக்கும் உபயோகி க்கப்பட்டது. நடுநாட்டில் சுவாதீனர்களாயுள்ள சில சூத்திரர் கள் தங்கள்பாஷையைஆரியபாஷை போலவே பேசுகிறார்கள். இவர்கள் தார்த்தாரிதேசத்திலிருந்து ஆரியர்களுக்குமுன் இந் தியாவில் குடியேறின துரேனியர்களாக இருக்கவேண்டுமெ ன்று தோன்றுகிறது. வைதிககருமத்தில் சூத்திரருக்காக உண் டான ஏற்பாட்டைப்பற்றி ஆலோசிக்குமிடத்தில், ஆரியவகுப் பினுட் சிலசந்தேகம் தோற்றுகிறது. அதாவது யசுர்வேதம் சத பதப்பிராஹ்மணம் முதலாவது அத்தியாயத்தில் யாகஞ்செய் யுமிடத்தில் சூத்திரரும் சேர்ந்திருந்ததாகத் தெரியவருவதாம். எங்ஙனமெனில்? யாககர்த்தா அந்தணனாயின் ஏகி=வருக, க்ஷத்திரிய வைசியராயின் அகஹி=இவ்விடத்தில் வருக. சூத் திரனாயின் அதாவா=இவ்விடத்தில் ஓடிவருக, எனக்கூறியிரு

க்கிறதனுலெண்க. ஆரியர்கள் இந்தியாவைச் செயித்து, கங்கை யமுனே இவற்றின் தீரங்களில் ஸ்தாபனமானவுடனே, இச்சூத்திரர்களே மநுவிற் கூறியபடி வருத்தத்தையுண்டாக்கும் இழிவான ஸ்திதியுட்புகுத்தி விட்டார்கள். வேதத்தில் சங்கரஜாதியாரைப்பற்றி யொன்றுங் கூறவில்லே.

பிரஹ்மா.,

சந்தசு ஏற்பட்டகாலத்தில்,மனுக்களே முகத்திலும் தோளிலும், தொடையிலும், பாதத்திலுமுண்டாக்கினவர் பிரஹ்மாவென்பவர். அவர் மனுக்களுக்கு மூதாதையாகவிருக்கிறுர், வேதங்களுக்குக் கடவுளல்லர். பிரஹ்மாவென்பது, அஃறிணையாகக் கூறுமிடத்து, ஓதப்பட்டவேதமாம். உயர்திணையாண்பாலாகக் கொள்ளின், வேதத்தை யோதப்பட்ட வேதியனும். யாகம் ஓமம் இவைகளுக்குக் கடவுளாகிய அக்கினியே வேதகர்த்தாவாகிய பிரஹ்மாவாம். இருக்குவேதத்தில், பிரஹஸ்பதி பிராஹ்மணஸ்பதி என்பதுமிதுவாம். இவரையே விஸ்பதி விஸ்பதி மனஸ்பதி வைஸ்வானரன் என்றுகூறுவாருமுளர். இவரையே பலியினேக் கொள்ளுகிறவர் என்றும் பூலோக வானலோக குமாரன் என்றும் சிருஷ்டி கர்த்தாவென்றும் இருக்குவேதம் 3-ஆவது அஷ்டகம் முதலாவது புத்தகம் 19-ஆவது சூக்தத்திற் கூறியிருக்கிறது. பிற்காலத்தில் பிரஹ்மாவென்ற ஓர் கடவுளாக இவர் வெளியிடப்பட்டிருக்கிறுர். இவரை ஹிந்துக்கள் முழுதும் தொழும்படி ஸ்தாபிக்க முடியவில்லே. இந்தியா முழுவதும் பார்க்குமிடத்து ஆஜ்மீயருக்கடுத்த புஷ்கரம் என்ற தடாகத்தின்கரையில் இவருக்காக ஓர் கோயில்தான் கட்டப்பட்டிருந்தது. இதுவும் குருக்களாற் பூசிக்கப்படவில்லே. அடியார்களால் பூசிக்கப்பட்டுவருகிறது.

உலகத்தாரால் பூசிக்கப்படாமற் போனதற்குக் காரணமென்றவெனின்? பின்னிட்ட சாஸ்திரங்களால் அவர் பொய் சொன்ன குற்றத்திற்காகச் சிவபெருமானுல் சபிக்கப்பட்டா

ரென்றும், அவர் சிரசிலும் ஒன்று குறைக்கப்பட்டதென்றும், கூறப்பட்டிருக்கிறது. இருக்குவேதம் 3-ஆவது அஷ்டகம் 8-ஆவது அத்தியாயம் 10-ஆவது வருக்கையில் அக்கினி 4 கொம்புடையவரென்று கூறப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் வேதம் ஒன்ருயிருக்கவும், பிற்காலத்தில் உரையிடவந்த சாயணுசாரியர் அதனை 4 வேதங்களென்றும், அவைகளுக்கு மகிதான் என்கிற அக்கினிகாரியஞ்செய்யும் ஹோத்திரி உத்காத்திரி அத்வர்யு பிரஹ்மா என்னும் 4 ஆசாரியர்கள் என்றும் குறித்திருக்கிருர். ஹாங்கு லாயிஸ் என்பவர் பூர்வபாகத்திலுள்ள அக்கினிகுண்டத்தின் 4 திக்கினைக்குறித்துப் பிரஹ்மாவுக்கும் 4 முகங்கள் ஏற்பட்டதாகச் சொல்லியிருக்கிருர். பிரஹ்மா என்பதை வேதாந்திகள் ஆத்மாவென்று உரைகூறுகிருர்கள்.

## பஞ்சஜனம்.

ஜீவனோபாயங்களில் உயர்வும் தாழ்வும் பிறதேசத்தார்களுக் குண்டாயிருந்ததுபோல இருந்தாலும், இக்காலத்தில் பரவியிருக்கும் ஜாதி ஏற்பாடானது பூர்வமிருந்த ஆரியர்களுக்குக் கிடையாது. இருக்குவேதம் 4-ஆவது அஷ்டகம் 2-ஆவது அத்தியாயம் 5-ஆவது வருக்கையில் பஞ்சக்ஷிதி என்றும் பஞ்சஜனமென்றுங் கூறப்பட்டிருக்கிறது. இதைச் சாயணுசாரியர் 4 ஜாதியாருக்கும் புற ஜாதியாருக்கும் பிரயோகப்படுத்தி யிருக்கிருர். புறஜாதியாவது (Outcaste, நிஷாதர்கள் (கிடதகாட்டார்) அல்லது நிருத்தத்திற் கூறியபடி காந்தருவர் பிதுரர் தேவர் அசுரர் இராக்ஷசர் ஆகிய இவ்வைவருக்கும் அவையுமென்ருர். லாசனென்னும்பண்டிதர் இவ்விரண்டும் பொருந்தாவென்று மறுத்திருக்கிருர். க்ஷிதி என்பது வேதத்தில் மனிதர்களுக்கே உபயோகிக்கப்பட்டிருக்கிறது. நிஷாதர்கள் என்பவர்கள் ஸ்தாபனையான பூர்வகுடிகளாம். ஆரியர்களல்லாத புறச்சாதியாருக்கு இது பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆரியர்களுள் இவர்கள் தூரமாகவே இருந்துவந்தனர். பஞ்சஜனமென்பது ஐவகை மனிதர்களாம் இவ்வைவரையும் ஹிந்துக்களி

ல் இன்னாரென்று நிச்சயிக்கக்கூடவில்லை. இங்ஙனம் பஞ்சசனம் என்பது பஞ்சகோத்திரங்களையுடைய ஆதி சைவப் பிராமணர்களைக் குறித்ததாம். இதற்கு உரையாசிரியர் விபரீதமாக வேறு வியாக்கியானஞ் செய்திருக்கின்றார்.

வேதமுண்டான காலத்தில் ஆரியர்கள் ஏற்பாட்டில் சாதி என்பதே கிடையாது. வேதத்தில் ஜாதியின் குள்ளுபாட்டிற்கு ஆதாரவேயில்லை. அந்தணர்களை மேன்மைப்படுத்தியதற்கும் சூத்திரர்களைக் கீழ்மைப்படுத்தியதற்கும் யாதொரு ஆதாரவுமில்லை. சகலவருணத்தாரும் ஒன்றுசேர்ந்திருக்கவும் ஒன்றாயிருந்துண்ணவும் ஒருவர்க்கொருவர் கொண்டு கொடுத்திருப்பதற்கும் வேதத்துள் யாதொரு தடையுந்தோற்றவில்லை.

வேதசூக்தங்களில் பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன் (வேளாண்மை செய்கிறவன்), சூத்திரன் ஆகிய இந்நால்வரும் ஒருவரைப்போலவே பிரமாவினிடத்தில் உதித்தவர்களாகவே யிருக்கிறார்கள். இதுவும் வேதத்தின் பூர்வபாகத்திற் சேர்ந்ததன்று பின்னிட்டதாம்.

இருக்குவேதம் 8-ஆவது அஷ்டகம்.

**புருஷசூக்தம்.**

இதற்கு.

| | | |
|---|---|---|
| இருஷி | ... | நாராயணன். |
| தேவதை | ... | விராட்புருஷன். |
| சந்தசு | ... | முதலில் அநுஷ்டுபு. முடிவில் திருஷ்டுபு. |
| விடயம் | ... | சிருட்டி. |

---

**விராட்புருஷ சொரூபம்.**

1. ஓம் ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: ।
ஸஹஸ்ராக்ஷஸ்ஸஹஸ்ரபாத் ।
ஸ பூமிம் விச்வதோ வ்ருத்வா
அத்யதிஷ்டத்தசாங்குலம் ॥

ఓం సహస్రశీర్షా పురుషః ।
సహస్రాక్ష స్సహస్రపాత్ ।
సభూమిం విశ్వతో వృత్వా ।
అత్యతిష్ఠద్దశాంగులం॥

ஓம் ஸஹஸ்ர ஸ்ரீர்ஷா புருஷ꞉
ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ர பாத்
ஸபூமிம் விஸ்வதோ விருத்வா
அத்ய திஷ்டத் தஸாங்குலம்.

இ-ள். விராட் புருஷனுக்கு ஆயிரம் சிரசுகளாம், ஆயிரம் கண்களாம், ஆயிரம் கால்களாம்; அவன் பூமிமுழுதும் வியாபித்து *10-அங்குலப் பிரமாணமுள்ள தேகத்தையுடையவனாக இருக்கிறான்.

2. പുരുഷ ഏവേദꣳ സർവം
യദ്ഭൂതം യച്ച ഭവ്യം ।
ഉതാമൃതത്വസ്യേശാനഃ ।
യദന്നേനാതിരോഹതി ॥

పురుషఏవేదగ్ంసర్వం ।
యద్భూతంయచ్చభవ్యం।
ఉతామృతత్వస్యేశానః ।
యదన్నేనాతి రోహతి॥

புருஷஏ வேதக்ம் ஸர்வம்
யத்பூதம் யச்ச பவ்யம்
உதா மிருதத்வஸ்யே ஸாநஃ
யதந்நேநா திரோஹதி.

* பத்து அங்குலமென்றது திக்குகள் 8, மேல் கீழ் 2 ஆகிய பத்தாம்.

இ-ள். புருஷனே உலகமுழுதுமாம். பூதகாலம், பவிஷிய காலம் யாவுமவனேயாம். உணவினாற் பருத்து அழியாதிருப்ப தற்கு மவனே கருத்தனும்.

3. 𑌏𑌤𑌾𑌵𑌾𑌨𑌸𑍍𑌯𑌮𑌹𑌿𑌮𑌾 |
𑌅𑌤𑍋𑌜𑍍𑌯𑌾𑌯𑌾𑌗𑍍𑌂𑌶𑍍𑌚𑌪𑍂𑌰𑍁𑌷𑌃 |
𑌪𑌾𑌦𑍋𑌽𑌸𑍍𑌯𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 |
𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌸𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌂𑌦𑌿𑌵𑌿 ||

ఏతావానస్యమహిమా ।
అతోజ్యాయాగ్ంశ్చపూరుషః।
పాదోఽస్యవిశ్వాభూతాని ।
త్రిపాదస్యామృతందివి॥

ஏதாவா நஸ்ய மஹிமா
அதோ ஜ்யாயாக்ம்ஸ்சபூருஷ:
பாதோஸ்ய விஸ்வா பூதாநி
திரிபா தஸ்யா மிருதந்திவி.

இ-ள். இவ்வளவும் இவன் மகிமையேயாம். இவன் உத்தமபுருஷனும் மூத்தோனுமாம். சர்வபூதங்களும் இவனிற்காற்கூறும். அழிவற்றதும் சுயம்பிரகாசமுள்ளதுமானவை இவனில் முக்காற்கூறும்.

4. 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵 𑌉𑌦𑍈𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 |
𑌪𑌾𑌦𑍋𑌽𑌸𑍍𑌯𑍇𑌹𑌾𑌭𑌵𑌾𑌤𑍍𑌪𑍁𑌨𑌃 |
𑌤𑌤𑍋𑌵𑌿𑌷𑍍𑌵𑌙𑍍𑌵𑍍𑌯𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑍍 |
𑌸𑌾𑌶𑌨𑌾𑌨𑌶𑌨𑍇𑌅𑌭𑌿 ||

త్రిపాదూర్ధ్వఉదైత్పురుషః।
పాదోఽస్యేహాభవాత్పునః।

తతో విష్వఙ్ వ్యక్రామత్ ।
సాశనానశనే అభి ॥

திரிபா தூர்த்தவ உதைத்புருஷாः
பாதோஸ்யேஹா பவாத் புநः
ததோ விஷ்வக்ம் வியக்கிராமது
ஸாஸநாநஸநே அபி.

இ-ள். புருஷனது முக்காற்கூறும் ஆதியில் மிகவும் சொச்சமாய் (எனவே நிர்மலமாய்) இருந்தது. அவனிற்காற்கூறு மீளவும் சிருட்டி, திதி, நாச நிமித்தம் மாயாரூபத்தைய டைந்தது. அந்த மாயாரூபத்தை யடைந்தபின் சேதனுசேதனங்களைக் குறித்து எங்கும் நானுவிதமாய் வியாபித்தது.

5. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌰𑌾𑌡𑌜𑌾𑌯𑌤 ।
𑌵𑌿𑌰𑌾𑌜𑍋 𑌅𑌧𑌿 𑌪𑍂𑌰𑍁𑌷𑌃 ।
𑌸 𑌜𑌾𑌤𑍋 𑌅𑌤𑍍𑌯𑌰𑌿𑌚𑍍𑌯𑌤 ।
𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌭𑍂𑌮𑌿𑌮𑌥𑍋 𑌪𑍁𑌰𑌃 ॥

తస్మాద్విరాడజాయత ।
విరాజో అధిపూరుషః ।
సజాతో అత్యరిచ్యత ।
పశ్చాద్భూమిమథో పురః ॥

தஸ்மாத் விராட ஜாயத
விராஜோ அதிபூருஷः
ஸஜாதோத்ய ரிச்யத
பஸ்சாத்பூமி மதோபுரः

இ-ள். அந்தப் பரமாத்மாவிலிருந்து பிரமாண்டாதி தேகமுண்டாயிற்று. பிரமாண்ட தேகத்தையே காரணமாகக் கொண்டு பின்னர் அந்தத் தேகாபிமானியான புருஷன் உண்டானுன். அங்ஙனமுண்டான அந்தவிராட்சொரூபி தன்னின்

வேறான தேவமனுஷ்ய திரியக்கு முதலிய ஸ்வரூபத்தைய
டைந்தார். பின்னர் பூமியையும் அதிலுள்ள சீவர்களுக்குத்
தேகங்களையு முண்டாக்கினார்.

மாநதயாகம்.

6. 𑌯𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣𑌹𑌵𑌿𑌷𑌾 |
𑌦𑍇𑌵𑌾𑌯𑌜𑍍𑌞𑌮𑌤𑌨𑍍𑌵𑌤 |
𑌵𑌸𑌨𑍍𑌤𑍋𑌽𑌸𑍍𑌯𑌾𑌸𑍀𑌦𑌾𑌜𑍍𑌯𑌂 |
𑌗𑍍𑌰𑍀𑌷𑍍𑌮𑌇𑌧𑍍𑌮𑌶𑍍𑌶𑌰𑌦𑍍𑌧𑌵𑌿𑌃 ||

యత్పురుషేణహవిషా ||
దేవాయజ్ఞమతన్వత ।
వసంతో అస్యాసీదాజ్యం
గ్రీష్మ ఇధ్మశ్శరద్ధవిః ||

யத்புருஷேண ஹவிஷா
தேவாயக்ஞ மதந்வத
வஸந்தோ அஸ்யா ஸீதாஜ்யம்.
கிரீஷ்ம இத்மஸ் ஸரத்தவி:

இ-ள். பின்னர் தேவர்கள் *அந்தப்புருஷனைப் பலியிடும் படி யாகஞ்செய்தார்கள். அப்போது வசந்தகாலம் அதற்கு நெய்யாகவும், கோடைகாலம் அதற்குச் சமித்து அல்லது விறகாகவும், சரத்காலம் நிவேதனம் அல்லது அவிசாகவுமிருந்தன.

7. 𑌸𑌪𑍍𑌤𑌾𑌸𑍍𑌯𑌾𑌸𑌨𑍍𑌪𑌰𑌿𑌧𑌯𑌃 |
𑌤𑍍𑌰𑌿𑌃𑌸𑌪𑍍𑌤𑌸𑌮𑌿𑌧𑌃𑌕𑍃𑌤𑌾𑌃 |
𑌦𑍇𑌵𑌾𑌯𑌦𑍍𑌯𑌜𑍍𑌞𑌂𑌤𑌨𑍍𑌵𑌾𑌨𑌾𑌃 |
𑌅𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌂𑌪𑌶𑍁𑌂 ||

* இந்த யாகத்தில் யாகப்பசுவாக இருந்தவனும் யாகபலியை ஏற்றுக்கொண்டவனும் விராட்டுவே என விளங்குகின்றது.

సప్తాస్యాసన్పరిధయః।
త్రిస్సప్తసమిధఃకృతాః ।
దేవాయద్యజ్ఞంతన్వానాః ।
అబధ్నన్పురుషంపశుం ॥

ஸப்தா ஸ்யாஸன் பரிதய:
திரிஸ்ஸப்த ஸமித: கிருதா:
தேவா யத்யக்ஞம் தன்வாநா:
அபத்நன் புருஷம் பஸூம்.

இ-ள். (பலிபீடத்தைச்சூழ) * ஏழு அக்கினி அல்லது ஓமகுண்டங்களிருந்தன. அவ்விடத்து மூவேழு சமித்து அல்லது விறகுகள் உண்டாக்கப்பட்டன. இவ்விதமாகத் தேவர்கள் யாகஞ்செய்யும்போது புருஷனைப்பலியிடும்படி பசுவாகக் கட்டினார்கள்.

8. 𑌤𑌂𑌯𑌜𑍍𑌞𑌂𑌬𑌰𑍍𑌹𑌿𑌷𑌿𑌪𑍍𑌰𑍌𑌕𑍍𑌷𑌨𑍍।
𑌪𑍁𑌰𑍁𑌷𑌂𑌜𑌾𑌤𑌮𑌗𑍍𑌰𑌤𑌃।
𑌤𑍇𑌨𑌦𑍇𑌵𑌾𑌅𑌯𑌜𑌨𑍍𑌤 ॥
𑌸𑌾𑌧𑍍𑌯𑌾𑌋𑌷𑌯𑌶𑍍𑌚𑌯𑍇 ॥

తంయజ్ఞంబర్హిషిప్రౌక్షన్ ।
పురుషంజాతమగ్రతః ।

---

* இந்த யாகத்திற்கு காயத்திரி முதலான ஏழுசந்தசுக்கள் பரிதுகளாகப் (பரிதுகள்=எல்லைகள்) பாவிக்கப்பட்டன. அந்தப் பரிதுகளே இருபத்தொரு பதார்த்தங்களாயின. அந்த இருபத்தொரு பதார்த்தங்களே சமித்துகளாகப் பாவிக்கப்பட்டன. அவ்விருபத்தொரு பதார்த்தங்கள் யாவை எனின், மாதங்கள் 12 இருதுக்கள் 5 பூலோக புவர்லோக சுவர்லோகங்கள் 3 சூரியன் 1 ஆக இருபத்தொன்றும். இவ்வுலகின்கண் கிரமமாகநடத்தப்படும் யாகங்களில் பசு வதைசெய்வதற்காக 21 யூபஸ்தம்பங்கள் நாட்டப்படும். அவ்விருபத்தொன்றில் தேவதாரு 3 நறுவிலி 3 கருங்காலி 6 வில்வம் 6 பலாசம் 6 இவையே சமித்துகளெனக் கூறப்பட்டன.

తేనదేవాఅయజంత ।
సాధ్యాఋషయశ్చయే ॥

தம்யக்ஞம் பர்ஹிஷி ப்ரோக்ஷன்
புருஷம் ஜாத மக்கிரதஃ
தேந தேவா அயஜந்த
ஸாத்யா ருஷ யஸ்சயே.

இ - ள். அவர்கள் ஆதியிற் பிறந்த புருஷனைப்பலியாக்கித் தெற்பையின்மேல் இட்டார்கள். தேவர்கள் சாத்யர்கள் ருஷிகளாகிய இவர்கள் அவனைத் தங்களுக்கு அவிசாகக்கொண்டார்கள்.

சிருஷ்டி.

9. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌹𑍁𑌤𑌃 ।
𑌸𑌂𑌭𑍃𑌤𑌂𑌪𑍃𑌷𑌦𑌾𑌜𑍍𑌯𑌂 ।
𑌪𑌶𑍂𑌂𑌸𑍍𑌤𑌾𑌂𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑍇 𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑌾𑌨𑍍 ।
𑌆𑌰𑌣𑍍𑌯𑌾𑌨𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌯𑍇 ॥

తస్మాద్యజ్ఞాత్సర్వహుతః ।
సంభృతంపృషదాజ్యం ।
పశూగ్ంస్తాగ్ంశ్చక్రేవాయవ్యాన్ ।
ఆరణ్యాన్గ్రామ్యాశ్చయే ॥

தஸ்மாத் யக்ஞாத் ஸர்வஹுதஃ
ஸம்பிரதம் பிரஷ தாஜ்யம்
பஶூக்ஸ் தாக்ஸ்ச கிரேவா யவ்யான்
ஆரண்யான் கிராம்யா ஸ்சயே.

இ - ள். அந்த யக்ஞமாகிய சர்வ பலியினின்றும் தயிரும் நெய்யுமுண்டாயின. காட்டிலும் நாட்டிலுமுள்ள வாயுவினை அதிதேவதையாகவுடைய மிருகங்களை அந்தப்புருஷன் உண்டாக்கினர்.

10. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌹𑍁𑌤𑌃 ।
𑌋𑌚𑌸𑍍𑌸𑌾𑌮𑌾𑌨𑌿𑌜𑌜𑍍𑌞𑌿𑌰𑍇 ।
𑌛𑌂𑌦𑌾𑌂𑌸𑌿𑌜𑌜𑍍𑌞𑌿𑌰𑍇𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 ।
𑌯𑌜𑍁𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌜𑌾𑌯𑌤 ॥

తస్మాద్యజ్ఞాత్సర్వహుతః ।
ఋచస్సామానిజజ్ఞిరే ।
ఛందాగ్ంసిజజ్ఞిరేతస్మాత్ ।
యజు స్తస్మాదజాయత ॥

தஸ்மாத் யக்ஞாத் ஸர்வஹுதஃ
ருசஸ் ஸாமா நிஜக்ஞிரே
சந்தாக்ம் ஸிஜக்ஞிரே தஸ்மாத்
யஜுஸ்தஸ்மா தஜாயத.

இ-ள். அந்த யாகமாகிய சர்வபலியினின்றும் இருக்கும் சாமமுமுண்டாயின. பின்னும் அதினின்று காயத்திரியாதி சந்தசும் யசுர்வேதமுமுண்டாயின.

11. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌶𑍍𑌵𑌾𑌅𑌜𑌾𑌯𑌨𑍍𑌤 ।
𑌯𑍇𑌕𑍇𑌚𑍋𑌭𑌯𑌾𑌦𑌤𑌃 ।
𑌗𑌾𑌵𑍋𑌹𑌜𑌜𑍍𑌞𑌿𑌰𑍇𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑌾𑌅𑌜𑌾𑌵𑌯𑌃 ॥

తస్మాదశ్వాఅజాయంత ।
యేకేచోభయాదతః ।
గావోహంజజ్ఞిరేతస్మాత్ ।
తస్మాజ్జాతాఅజావయః॥

தஸ்மா தஸ்வா அஜாயந்த
யேகே சோப யாததஃ
காவோ ஹஜக்ஞிரே தஸ்மாத்
தஸ்மாஜ் ஜாதா அஜாவயஃ.

இ-ள். அந்த யாகத்தினின்று அசுவங்களும் இரண்டுவரிசைப்பற்களுள்ள சகலமிருகங்களு முண்டாயின. பின்னும் அதினின்று பசுக்களும், பின்னும் அதினின்று செம்மறியாடுகளும் வெள்ளாடுகளு முண்டாயின.

12. 𑌯𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌵𑍍𑌯𑌦𑌧𑍁𑌃 ।
𑌕𑌤𑌿𑌧𑌾 𑌵𑍍𑌯𑌕𑌲𑍍𑌪𑌯𑌨𑍍 ।
𑌮𑍁𑌖𑌂 𑌕𑌿𑌮𑌸𑍍𑌯 𑌕𑍌 𑌬𑌾𑌹𑍂 ।
𑌕𑌾𑌵𑍂𑌰𑍂 𑌪𑌾𑌦𑌾 𑌉𑌚𑍍𑌯𑍇𑌤𑍇 ॥

యత్పురుషం వ్యదధుః ।
కతిధా వ్యకల్పయన్ ।
ముఖం కిమస్య కౌ బాహూ ।
కావూరూ పాదా ఉచ్యేతే ॥

யத் புருஷம் வியதது
கதி தாவ்ய கல்ப்பயன்
முகங்கி மஸ்ய கௌபாஹூ
காவூரு பாதா உச்யெதே.

இ-ள். அவர்கள் புருஷனைப் பலியாக்கினபோது அவனை எத்தனை கண்டமாகப் பாகித்தார்கள்? அவன் முகம் எவ்வாறாயிற்று? அவன் புஜங்கள் எவ்வாறாயின? அவன் றுடைகளும் பாதங்களும் எப்பெயர்கொண்டன?

13. 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑌮𑌾𑌸𑍀𑌤𑍍 ।
𑌬𑌾𑌹𑍂 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌃 𑌕𑍃𑌤𑌃 ।
𑌊𑌰𑍂 𑌤𑌦𑌸𑍍𑌯 𑌯𑌦𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑌃 ।
𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋 𑌅𑌜𑌾𑌯𑌤 ॥

బ్రాహ్మణోఽస్య ముఖమాసీత్ ।
బాహూ రాజన్యః కృతః ।

ఊరూతదస్యయద్వైశ్యః ।
పద్భ్యాగ్ంశూద్రో అజాయత ॥

பிராஹ்ம ஞேஸ்ய முகமாஸீத்
பாஹூ ராஜன்யః கிருதః
ஊருததஸ்ய யத்வைஸ்யః
பத்பியாக்ம் சூத்ரோ அஜாயத.

இ-ள். பிராஹ்மணன் அவன் முகமாயினான், இராஜன் அவன் புஜங்களாயினான், வைசியன் அவன் றுடைகளாயினான், சூத்திரன் அவன்பாதங்களில் உதித்தான்.

14. ചന്ദ്രമാ മനസോ ജാതഃ ।
ചക്ഷോഃ സൂര്യോ അജായത ।
മുഖാദിന്ദ്രശ്ചാഗ്നിശ്ച ।
പ്രാണാദ്വായുരജായത ॥

చంద్రమా మనసో జాతః ।
చక్షోస్సూర్యో అజాయత ।
ముఖాదింద్రశ్చాగ్నిశ్చ ।
ప్రాణాద్వాయురజాయత ॥

சந்தரமா மநஸோ ஜாதః
சக்ஷோஸ் ஸூர்யோ அஜாயத
முகா திந்திரஸ் சாக்கிஸ்ச
பிராணாத் வாயு ரஜாயத.

இ-ள். சந்திரன் அவன் மனத்திலிருந்துண்டாயினான். சூரியன் அவன் கண்களிலுண்டாயினான். இந்திரனும், அக்கினியும் அவன் முகத்திலிருந்துண்டாயினர். வாயு அவன் சுவாசத்திலுதித்தான்.

15. 𑌨𑌾𑌭𑍍𑌯𑌾 𑌆𑌸𑍀𑌦𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌂 |
𑌶𑍀𑌰𑍍𑌷𑍍𑌣𑍋 𑌦𑍍𑌯𑍌𑌃 𑌸𑌮𑌵𑌰𑍍𑌤𑌤 |
𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌭𑍂𑌮𑌿𑌰𑍍𑌦𑌿𑌶𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 |
𑌤𑌥𑌾 𑌲𑍋𑌕𑌾𑌁 𑌅𑌕𑌲𑍍𑌪𑌯𑌨𑍍 ||

నాభ్యాఆసీదంతరిక్షం ।
శీర్ష్ణోద్యౌస్సమవర్తత ।
పద్భ్యాంభూమిర్దిశశ్శ్రోత్రాత్ ।
తథాలోకాగ్ంఅకల్పయన్ ॥

நாப்யா ஆஸீ தந்தரிக்ஷம்
ஸ்ரீர்ஷ்ணோ த்யௌஸ் ஸமவர்த்தத
பத்பியாம் பூமிர்த்திஶஸ் ஶ்ரோத்ராது
ததாலோ காக்ம் அகல்ப்பயன்.

இ-ள்: அவன் நாபியில் அந்தரம் அல்லது வெளியுண்டாயிற்று. அவன் சிரசில் வானமுண்டாயிற்று. அவன்பாதங்களில் பூமியும் காதில் திக்குகளுமுண்டாயின. இவ்விதமாக உலகங்களுண்டாயின.

18. 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌯𑌜𑍍𑌞𑌮𑌯𑌜𑌨𑍍𑌤 𑌦𑍇𑌵𑌾𑌃 |
𑌤𑌾𑌨𑌿 𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌸𑌨𑍍 |
𑌤𑍇 𑌹 𑌨𑌾𑌕𑌂 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌃 𑌸𑌚𑌨𑍍𑌤𑍇 |
𑌯𑌤𑍍𑌰 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌸𑌾𑌧𑍍𑌯𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌦𑍇𑌵𑌾𑌃 ||

యజ్ఞేనయజ్ఞమయజంత దేవాః ।
తానిధర్మాణిప్రథమాన్యాసన్ ।
తేహనాకంమహిమానస్సచంతే ।
యత్రపూర్వేసాధ్యాస్సంతిదేవాః ॥

யக்ஞேந யக்ஞ மயஜந்ததேவாঃ
தானிதர்மாணி பிரதமா நியாஸன்
தேஹநாகம் மஹிமாநஸ்ஸ சந்தே
யத்ரபூர்வே ஸாத்யாஸ் ஸந்திதேவாঃ

இ-ள். இந்த மானதயாகத்திநாலே யாகசொரூபியாகிய பிரஜாபதியைத் தேவர்கள் பூசித்தார்கள். இதே முதற் சடங்காயிருந்தது. பூர்வத்தில் இச்சடங்குசெய்த ஸாத்தியாயர்களும் தேவர்களும் வானுலகத்தில் போய்ச்சேர்ந்தார்கள்.

## II. சாமவேதம்.

இனி, பிரிக்கப்பட்டுள்ள வேதங்களுள் முதன்மையாயுள்ளது சாமமாம். இதன் மூலவாக்கியங்களெல்லாம் சிற்சில நீங்கலாக இருக்கு வேதத்தில் முக்கியமாக 8-9-ஆவது மண்டலங்களில் காணப்படுகின்றன. ஓர் இடத்தில் பிரஹ்மாவை அக்கினி பிரகஸ்பதி இவர்களினின்றும் வேறாகக் கூறுகின்றது. இன்னும் வேறோரிடத்தில் கடவுளரில் முதன்மையானவரென்றும், யாக கர்த்தாவென்றுங் கூறுகின்றது. இன்னும் சில இடங்களில் விப்பிரர்கள் யாக காரியஞ் செய்பவர்களெனக் கூறுகின்றது. இந்தச் சாமத்தில் க்ஷத்திய வைசியர்களைப்பற்றி யாதொன்றுங் கூறவில்லை.

## III. யசுர் வேதம்

பிரிக்கப்பட்ட வேதங்களுள் இரண்டாவது பிரிவானது யசுராம்; அது கிருஷ்ண யசுரென்றும் சுக்கில யசுரென்றும் இரண்டு பிரிவாயிருக்கின்றது. அவைகளுள் ஒருபாகம் செய்யுளாகவும் ஒரு பாகம் வசனரூபமாகவும் இருக்கும். இருக்கு விலிருந்தெடுக்கப்பட்டது செய்யுள் நடையாயிருக்கும். ஏனையது பிராஹ்மணங்களைப்போலவிருக்கும். இந்துக்களில் சிலர் ஒப்புக்கொள்ளாதிருந்தபோதிலும், பிராஹ்மணர்கள் தாங்க

ளே சிரேஷ்டர்கள் அல்லது முதன்மை பெற்றவரர்களென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

**கிருஷ்ணயசுர்.**

கிருஷ்ண யசுர்வேதத்தில் பிராஹ்மணர் க்ஷத்திரியர் சபி ரஜா = [நற்குடிகள்] ராயஸ்போஷா = (பொருளுதவிசெய்வோர்) இவர்கள் தோத்திரங்களில் பிரத்தியேகமான உரிமையாளரெனக் கூறப்பட்டிருக்கின்றனர். யாக காரியத்தில் பிராமணர்களையே சிரேட்டர்களாக இந்தப்பாக முழுதுங் கூறுகின்றது. பிராஹ்மணர் க்ஷத்திரியர்களைப்போலவே ஏனை ப்சாதிகளின் அன்னியோன்ய பாவங்களைக் குறிப்பிக்கின்றது. அவை வருமாறு:—

| | | |
|---|---|---|
| இராஜன்ய | = | அரசன் |
| மகிஷீ | = | அபிஷேகம் பெற்றுள்ள அரசன் பத்தினி. |
| பரிவிருக்தி | = | அரசன் அபிமான ஸ்திரீ. |
| சேனானி | = | சேனாபதி. |
| சூதன் | = | சாரதி. |
| க்ஷத்தா | = | பெண் காவலன். |
| ஸங்கிரஹிதா | = | பொக்கிஷகாரன். |
| பாகதுக்நா | = | அரசனுக்குரிய ஆறிலொரு கடமை தண்டுகிறவன் (Collector.) |
| அக்ஷாவாபா | = | சூதாடுகிறவன். |

இவை பகிரங்கமாயுள்ள தொழிலாளிகளின் பெயராம். தேவர்களினும் இவைபோன்ற கூட்ட முள்ளன.

| | | |
|---|---|---|
| பிரஹஸ்பதி | = | சொல்லுக்கதிபன், பிரசங்கி. |
| இந்திரன் | = | தலைவன், அதிபதி. |
| மித்திரன் | = | உண்மையாளன், குபேரன். |
| வருணன் | = | சமயத்தலைவன். |
| சோமன் | = | அந்தணதிபதி. |

பிரம க்ஷத்திரியவென்பவை யாகப் பசுக்களின் வருணத்தை யுங் குறிக்கின்றன.

## சுக்கிலயசுர்.

இந்த வேதத்தில் பிரஹ்ம க்ஷத்திரியர்கள் ஒன்றாயிருந்து அக்கினியைப் பூசிக்கிறார்கள். மற்றவிஷயத்தில் அவர்கள் கிருஷ்ண யசுரில் கூறும் சம்பந்தமே சம்பந்தமாகவிருக்கிறார்கள்.

| | |
|---|---|
| பிரமன் | = மூதாதையரையும் ரிஷிகளையும் தொழுதற்கு மூலமாயிருக்கிறான். |
| இந்திரன் | = இடிக்கரசு - க்ஷத்திரியகாவலனும். |
| சோமன் | = பிராமண தேவனும். |

பிரம க்ஷத்திரியர்களின் அநேகவித தொழில்களெல்லாம் கூறுது கொள்ளப்படுகின்றன. இதில் அடியிற்கண்டவர்களெல்லாம் உபசரிக்கப்பட்டு வருகிறார்கள்.

| | |
|---|---|
| க்ஷேத்திரபதி | = புலகர்த்தன் அல்லது வேளாளன். |
| சூதன் | = சாரதி. |
| தஸ்கரப்பதி | = இழிசனத்தலைவன். |
| குல்லுஞ்சபதி | = மலையமான். |
| வில்லியர்கள் | = வில்லுமம்புமுடைய சாதியர். |
| இஷ்வபதி | = வேட்டைநாய்கட்கதிபன். |
| விராதபதி | = கூட்டத்தலைவன். |
| சேனானி | = சேனாதிபதி. |
| ஸங்கிரஹிதா | = பொக்கிஷகாரன். |
| தக்ஷன் | = தச்சன். |
| இரதகாரன் | = இரதஞ்செய்பவன். |
| குலாலன் | = குயவன். |
| கர்மாரன் | = கருமான். |
| நிஷாதர் | = பூர்வகுடிகள். |

இன்னும் பிறருமாம். இவர்களில் பிரமவர்ச்சிசையுடையவன் பிராஹ்மணன். வீரத்தையுடையவன் இராசனும். இன்னும்

சுக்கிலயசுரில் இந்தியர்களின் அநேகபிரிவான சாதியார்கள் கூறப்படுகின்றனர். பிரஜாபதிக்குச் செய்யப்பட்ட புருஷபலி அல்லது நரபலி என்கிற புருஷமேதத்தில் இவர்களது பாத்தியதையை விரிவாக ஓர் அத்தியாயமுழுதும் கூறுகின்றது. அதிற் சிலபாகம் யசுர்வேதத்தின் சதப்தப் பிராஹ்மணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. கிருஷ்ணயசுரின் தைத்திரேயப் பிராஹ்மணத்தில் சிலபாகம் வேற்றுமைப்படக் கூறப்பட்டிருக்கின்றது. சுக்கிலயசுரின் 13-ஆவது அத்தியாயத்தில் இந்தியர்களின் பூர்வ வகுப்புக்களெல்லாம், கூறப்பட்டிருக்கின்றன, அவற்றுள், தைத்திரேயம் 30-ஆவது அத்தியாயம்.

## வேதத்தில் கூறும் ஜாதி அட்டவணை.

| எண். | வேதவாக்கியம். | ஆரியபதம். | பொருள். | திராவிடபதம். |
|---|---|---|---|---|
| 1 | பிராஹ்மணே ... | பிராஹ்மணம் ... | வேதம் ... | அந்தணன். |
| 2 | க்ஷத்திராய ... | ராஜந்யம் ... | வீரம் ... | அரசன். |
| 3 | மருத்பியோ ... | வைஷ்யம் ... | வேளாண்மை ... | வேளாளன். |
| 4 | *தபஸே ... | ஷௌத்திரம் ... | தொழில் ... | தொழில்செய்வோன். |
| 5 | காமாயா ... | புஷ்சலம் ... | காமம ... | பரத்தை. |
| 6 | நிருத்யா ... | ஸௌதம் ... | நாட்டியம் ... | ஆட்டக்காரன். |
| 7 | மேதாயி ... | ரதகாரம் ... | அறிவு ... | தேர் செய்வோன். |
| 8 | தைர்யாய ... | தக்ஷாநம் ... | உறுதி ... | தச்சன். |
| 9 | தபஸே ... | கௌலாலம் ... | உழைப்பு ... | குசவன். |
| 10 | மயாயை ... | கர்மாரம் ... | செய்பவன் ... | கொல்லன். |
| 11 | ரூபாய ... | மணிகாரம் ... | அழகு ... | இரத்தின வியாபாரி. |
| 12 | மிருத்யாவி ... | மிரிகாயம் ... | கொல்லல் ... | வேட்டைக்காரன். |
| 13 | ரிக்ஷிகாப்யோ ... | நைஷதம் ... | காத்தல் ... | காவலாளி. |
| 14 | அயேப்யா ... | கிதவம் ... | அதிஷ்டம் ... | சூதாடுகிறவன். |
| 15 | பவித்ராய ... | பிஷாஜம் ... | ஒழித்தல் ... | வைத்தியன். |
| 16 | பிரஜாந்தியா ... | நக்ஷத்திர தர்ஸநம் ... | சோதிடம் ... | சோதிடன். |
| 17 | மர்யாதாயை ... | பிரஷ்ந விவாகம் ... | எல்லைக்குறி ... | நிமித்தமுரைப்போன். |
| 18 | ஆர்மேப்யோ ... | ஹஸ்திபம் ... | வாகனம ... | யானைக்காரன். |
| 19 | ஜவாயா ... | அஷ்வபம் ... | ஓட்டம் ... | குதிரைக்காரன். |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | புஷ்டே ... | கோபாலம் ... | போஷணை ... | பசுக்காப்போன். |
| 21 | விராயா ... | அவிபலம் ... | வீரம் ... | இடையன். |
| 22 | கிலாதாயா ... | சுராகாரம் ... | ஜலம் ... | கள்விற்போன். |
| 23 | மேதாயாவாஸா ... | பல்புலிம் ... | பரித்தியாகம் ... | வண்ணான். |
| 24 | நத்வலாப்யா ... | ஷௌஷாகலம் ... | சேற்றுநிலம் ... | மீன்வணிகன். |
| 25 | ஸரப்யோ ... | தைவரம் ... | நீர் ... | மீன் பிடிக்கிறவன். |
| 26 | வர்ணாயா ... | ஹிரண்யகாரம் ... | பொன் ... | தட்டான். |
| 27 | துலாயா ... | வாணிஜ்யம் ... | நிறை ... | வணிகன். |
| 28 | ஷப்தாயா ... | அதம்பாகதம் ... | சத்தம் ... | மேளகாரன். |
| 29 | பூம்னே ... | பரிஷ்க்கந்தம் ... | நீர் ... | மரமேறி. |
| 30 | வாயவே ... | சாண்டாளம் ... | காற்று ... | சண்டாளன். |
| 31 | குஹாப்யா ... | கிராதம் ... | குகை ... | கிராதன். |
| 32 | ப்ரவதேப்யா ... | கிம்புருஷம் .. | உயர்ந்தமலை ... | கிம்புருஷர். |

* தொழில் செய்யுஞ் சூத்திரனுக்கு இவ்விடத்தில் தபஸேயெனக் கூறியதுபோலத் தைத்திரேயப் பிராஹ்மணத்தில் ஷரமாயாவெனவுங் கூறியிருக்கிறது.

இந்தியர்களின் கூட்டத்திலுள்ள சில வகுப்பினர்களுக்கு எனவே பிரஹ்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர சூத விராத்தியாயர்களுக்குத் தனித்தனியே தொழிலும் கௌரவமும் ஏற்பட்டிருக்கின்றன. சிற்சில சாதியாருக்கு அவரவர் வசித்துள்ள நாட்டின்பெயரால் சாதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்கள் யாரெனின்? அயோகவர் மாகதர் தஸ்கரர் நிஷாதர் தாசர் கைவர்த்தர் வையிந்தவர் அல்லது விந்தியர் மைனர் கிராதர் ஐம்பகர் கிம்புருஷர் புலகர் முதலியவர்களாம். இவர்கள் இந்தியரியன் கூட்டத்திற் சேர்ந்தவர்களாம். இவற்றினாலும் சாதியேற்பாடு ஸ்தாபிக்கப்படவில்லை.

1. பிராஹ்மணர்கள், பிரமசம்பந்தத் தொழிலுடையாராதலின் எல்லாருக்கும் தாம் உயர்ந்தவரென வாதிக்கின்றனர்.

2. க்ஷத்திரியர் என்பவர் க்ஷத்திரம் அல்லது அதிகாரத்தையுடைய வமிசத்தாராம்.

3. கிருஷிகம் வைசியனிடத்துள்ளதாம். (கிருஷிகம்-பயிர்த்தொழில்) ஆனால் அவன் வணிகரில் வேறானவனும். எனவே வணிகனல்லன் என்பது பொருளாம்.

4. உழவிற்கு ஏவற்றொழிலாளர் சூத்திரராம்.

சங்கரஜாதியாரைப்பற்றி இங்கு ஒன்றுங் கூறவில்லை.

விந்திய பர்வதத்தின் தென்பாகத்திலுள்ள சாதிகளைப் பற்றி ஒன்றேனும் கூறப்படவில்லை. இந்த அத்தியாயஞ் செய்கிறவரையும் ஆரியர்கள் அம்மலையைத்தாண்டி இந்நாட்டிற்கு வரவில்லை. இருக்குவேதத்தில் நாம் முன்னரே குறித்துள்ள புருஷசூக்தமானது சுக்கில யசுரின் இந்த அத்தியாயத்தின் பின்னர் வகுக்கப்பட்டிருக்கின்றது. உரையாசிரியராகிய மகிதரர் பிரஜாபதியின் முகத்தில் பிராஹ்மணரும் தோளில்

க்ஷத்திரியரும் துடையில் வைசியரு முண்டானார்களென்று சொல்லுகிறார். சூத்திரரைப்பற்றி ஒன்றும் கூறவில்லை.

## IV. அதர்வணம்.

நான்காவது வேதமாகிய அதர்வணத்தில் ஜாதியைப்பற்றி விசேஷமொன்றுமில்லையாயினும் அதனையும் விசாரித்தொழிப்போமாக. அதர்வ என்பதற்குப் பொருள் முன்னர்க் கூறியபடியே அக்கினிகளும் அதர்வரிஷியின் சிக்ஷையின்படி ஓதப்பட்டதால் இவ்வேதத்திற்கு அதர்வண வேதமென்று இருக்குவேதத்தில் கூறப்பட்டிருக்கிறது. யாகத்தைப்பற்றிய விஷயத்தில் இந்த அதர்வணத்தின் ஏற்பாடுகளும் நடக்கைகளும் ஏனைய வேதங்கட்குப் பெரும்பான்மையும் வேறுபட்டிருக்கின்றன. வெவ்வேறாயுள்ள மூவிதச் சடங்குகளிருப்பதால் யாகத்தைத் திருத்தமாய் நடத்துவதற்காக வேதங்கள் மூன்றாகப் பிரிக்கப்பட்டன. அவை இருக்கு யசுர் சாமமாம். ஹோத்திரியாசாரியரின் சடங்குகள் இருக்குவேதத்தாலும், அத்வர்யு ஆசாரியரின் சடங்குகள் யசுர்வேதத்தாலும், உத்காத்திரியாசாரியரின் சடங்குகள் சாமவேதத்தாலும், நடத்தப்படுகின்றன. பிராஹ்மணாசாரியரின் கிருத்தியமும் யாகபலி கொடுக்கிற கர்த்தாவின் தொழிலும் இந்த மூன்றுவேதங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த அதர்வணவேதம் சுகாதாரமுள்ள யாகத்துக்கு உபயோகமானதன்றாம். இவ்வேதம் பிராயச்சித்தம் சாபானுக்கிரகங்களைப்பற்றிக் கூறுவதால் ஏனையவேதங்கட்கு மாறுபட்டுள்ளதாம். இவ்வதர்வணத்தில் மந்திரங்களெல்லாம் அடங்கியிருக்கும். அம்மந்திரங்கள் சுவலாபத்தைக்குறித்து ஓதுகிறவனுக்காவது பிறர்பொருட்டோதும் மாந்திரிகருக்காவது இஷ்டகாமியார்த்தங்களைக்கொடுக்கும். அவையாவன :—நோயொழிதல் ஆயுள்விருத்தி தனலாபம் செல்வாக்கு உத்தியோகம் சத்துருநாசம் ஜெயம்பெறுதல் இவைபோல்வனவாம். அதர்

வண சம்மிதைகள் ஆரியர்கள் இந்தியாவில் ஆட்சிபெற்றகால த்துண்டாயினவாம். இதிலுள்ள அநேக சம்மிதைகள் இருக் குவில் காணலார்.

இதில் பிராஹ்மணர்களும் க்ஷத்திரியர்களும் அக்கினிகா ரியத்தில் கூடியிருந்ததாகத் தெரியவருகிறது இராஜனைப்பற் றித் தோத்திரஞ் செய்யுமிடத்து அவன் தனது நாட்டிற்கே கர்த்தனாயிருக்கவேண்டுமென்றும், அவனுடைய இராச்சியத் திலுள்ள குடிமுழுதும் அவனைக் கொண்டாடவேண்டுமென் றும் பிரார்த்திக்கிறார்கள். க்ஷத்திரியன் யாககாரியத்தில் இர தக்காரன் கருமான் சூதன் இவர்கள் அந்த யாககாரியத்திற் குதவியாகக் கூடியிருந்தார்களென்றும் கூறப்படுகின்றது. பு ரோகிதன் க்ஷத்திரியனுடைய தைரியமும் வல்லபமும் குன் றாதிருக்கப் பிரார்த்திக்கிறான்.

பிராமணனைப்பற்றிப் பிரார்த்திக்குமிடத்துக் கூறியிருக் கிறதாவது:—பிராமணன் பத்துத்தலையுடனும் பத்து முகங்க ளுடனும் முதற்பிறந்தவன். (எனவே விசேட வல்லபத்தையு டையவனென்பது கருத்தாம்). அவன் முதலில் சோமபானஞ் செய்தவன்; அவன் விஷத்தைக் குற்றமற்ற இரசமாக்கினவன்.

சூத்திரரென்பவர் ஆரியவகுப்பினின்றும் வேறானவரெ னக் கொள்ளுகிறார்கள். தாசர்களையும் இருக்குவேதத்திற் கூ றியபடியே ஆரியர்களினின்றும் வேறாகக்கொள்ளுகிறார்கள். பூர்வத்து இராஜரிஷியாயிருந்த விசுவாமித்திரரும் ஜமதக்கினி யும் மித்திரனையும் வருணனையுங் காப்பாற்றவேண்டிப் பிரம ரிஷியாகிய வசிட்டருடன் கலந்துகொண்டார்கள். பிராஹ்ம ணனது முதன்மைத்தனம் இவ்விதமாக விளக்கப்பட்டிருக்கி ன்றது. பிராஹ்மணனே கர்த்தா க்ஷத்திரியன் கர்த்தாவாகான்.

யாகத்தில் பிராஹ்மணன் உண்ணற்குரிய யாகப்பசுவின் மாமிசத்தை இராஜன் உண்ண இச்சிக்கப்படாது; அங்ஙனமா

யினும் பிற்காலத்தில் படிப்படியாக க்ஷத்திரியனுக்கும் பாகம் ஏற்பட்டது. பிராஹ்மணனைக் கொல்லப்படாது; அவனுடம்பை அக்கினியைப்போலும் விசுவாசிக்கவேண்டும்.

புருஷசூக்தம் இருக்குவேதத்தில் கூறியபடி இதில் சில மாறுபட்டிருப்பினும், சில ஒற்றுமையாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவை வருமாறு. "பிராஹ்மணனே அவன் வாயாம். (அவன்=விராட்புருஷன்). ராஜன்யன் அவன் தோளானான். வைசியன் அவன் துடையானான். சூத்திரன் அவன் பாதத்தில் பிறந்தான்." இந்த அதர்வணசூக்தம் ஜாதியேற்பாடு வலுத்தகாலத்தில் கூறியதாம்.

## பிராஹ்மணங்கள்.

பிராஹ்மணர்கள் நடத்தவேண்டிய சடங்கினுக்கு வேதங்களின் சம்ஹிதைகளிலிருந்து பிரார்த்தனையாகவும் அட்டவணையாகவும் ஏற்பட்டவைக்குப் பிராஹ்மணங்களென்று பெயராம். அவைகளிலுள்ள விஷயங்கள் பலவாறாக விருக்கின்றன. இவை பிராஹ்மணர்களுக்குணர்த்து நூல்களாதலின், பிராஹ்மணங்களெனப்படும். இவற்றுட் சிலபாகம் மன்திரின் நடக்கைகளையும் பரம்பரைகளையு முணர்த்துகின்றன. சடங்குசெய்யு முறையினையும் வேறுவிஷயங்களையுமுணர்த்துவதன்றிப், பூர்வ மதங்களையும் பூர்வ சடங்குகளையும் விவகரித்துக்கூறும். பூர்வத்தில் ஒரு கூட்டத்தாராயுள்ள பிராஹ்மணர்களே, இருக்குவேதம் ஓதுகிறவர்கள் பாவிருச்சர்களென்றும், சாமவேதம் ஓதுகிறவர்கள் சாந்தோக்கியர்களென்றும், கிருஷ்ணயசுர் ஓதுகிறவர்கள் தைத்திரேயர்களென்றும், சுக்கிலயசுர் ஓதுகிறவர்கள் சதபதப் பிராமணர்களென்றும், தனித்தனியே யொவ்வொரு பெயரைப்பெற்றிருக்கிறார்கள்.

இந்தப் பிராஹ்மணங்கள் சம்ஹிதைகளைப்போலச் செய்யுளாக எழுதப்படவில்லை. அதனால் வெகுகாலமாக வாய்மொழியாக வந்ததுபற்றிப் பாரம்பரியமாயுள்ள சாம்பிரதாயங்கள்

அநேகமாகத் திருத்தப்பட்டும் மாறுபட்டுமுள்ளனவாயிருக்கின்றன. இவை சொற்சுவையும் பொருட்சுவையுமுடையனவாயிருப்பதால் பூர்வகாலத்துப் பாஷையன்றும்; பிற்காலத்தெழுதியனவெனத் தெரியவருகின்றது. இவை மனிதன் நினைவிலும் வாக்கிலு முண்டாயினவென்பது ஆச்சரியமானதாக இருக்கின்றது; இவை யாகத்தின் சடங்கிணையுணர்த்து நூலாயிருந்தபோதிலும் அநேக கோட்பாடுகள், வியாக்கியானம், மறைபொருள், ஞானயோகங்கள் அடங்கியிருக்கின்றன.

### ஐதரேயப் பிராஹ்மணம்.

இது இருக்குவேதத்தைச் சேர்ந்ததாம்.

பிரஜாபதி பிரஜைகளைச் சிருஷ்டிக்க நினைத்துத் தவஞ்செய்து உலகமாகியபூமியையும் அந்தரத்தையும் வானத்தையும் சிருஷ்டித்தார். மீளவும் தவஞ்செய்தார்; பூமியில் அக்கினியும், அந்தரத்தில் வாயுவும், வானத்தில் சூரியனும் ஆகமுப்பொருள்களும் உண்டாயின. மீளவுந்தவஞ்செய்தார்; மூன்று வேதங்களுண்டாயின. அக்கினியினிடத்து இருக்குவேதமும், வாயுவினிடத்து யசுரும், சூரியனிடத்து சாமமும் பிறந்தன. மறுபடியுந்தவஞ்செய்தார் மூன்றுசுக்கிரர்களுண்டானார்கள்.

இருக்குவில் = பூః
யசுரில் = புவః } பிறந்தன.
சாமத்தில் = சுவః

மீளவும் தவஞ்செய்தார்; அகார உகார மகாரங்கள் பிறந்தன. இவற்றின் சேர்க்கை, ஓம் என்ற பிரணவமாயிற்று. இந்தப் பிரணவத்துள்.

அகாரம் = அக்கினி.
உகாரம் = வாயு.
மகாரம் = மித்திரன் (சூரியன்).

இருக்குவேதம் 3-ஆவது அஷ்டகம் 10-ஆவது வருக்கையில் கூறியபடி காயத்திரிக்கு பிரணவத்தோடுங்கூடிய 3-சுக்கிரர்களுள்ளும் பூః=பூமி, புவః=வெளி, சுவః=வானமாம்.

ஐதரேயப் பிராஹ்மணத்தில் சாதியைப்பற்றிய விஷயம்.

இந்த ஐதரேயத்தின் முதலாவது அத்தியாயம் முதலாவது பஞ்சகத்தில் ஒருவன் யாகபலிசெய்யும்படி சேரும்போது தீக்ஷைசெய்துகொள்ளும் விஷயத்தில்.

1. அழகினையும் அறிவினையும் விரும்பினவன், (எனவே, பிரஹ்மவர்ச்சசை விரும்பினவன்) சிவிஷ்ட கிருதுவின் இரண்டுகாயத்திரி மந்திரத்தை ஜெபிப்பானாக. காயத்திரி என்பது அறிவுநிறைந்துள்ள அழகாம். இந்த இரண்டு காயத்திரியையும் ஜெபிக்கவுணர்ந்தவன் அழகினையும் அறிவினையும் பெறுவன்.

2. பலத்தை விரும்பினவன் இரண்டு திருஷ்டுபுக்களைச் செபிக்கவேண்டும். (திருஷ்டுபு=பலம்.) அதுவே வலியும் அதிகாரமுமாம். இதைச்செபிக்கவறிந்தவன் வலுத்தபலத்தையும் அதிகாரத்தையும் பெறுவன்.

3. ஆனிரையை விரும்பினவன் இரண்டு ஜகதீ மந்திரங்களை ஜெபிக்கவேண்டும். ஆனிரை ஜகதீயைப்போன்றதாம். இதையறிந்தவன் இரண்டு ஜகதியை ஜெபித்து ஆனிரையில் செல்வமுடையவனாகிறான்.

இருக்குவேதத்திலுள்ள சில சம்ஹிதைகளுக்கு கவஷ ஐலுஷனை இருடியாக அவ்வேதத்தின் அநுக்கிரமணியில் கூறப்பட்டிருக்கின்றது. (அநுக்கிரமணி=அட்டவணை). அது அங்ஙனமாக இருக்கவும், இந்த ஐதரேயப்பிராஹ்மணம் இரண்டாம்பஞ்சகத்தில் ருஷி கவஷ ஐலுஷன் தாசபுத்திரனாதலால் வேள்விக் காரியத்தினின்றும் நீக்கப்பட்டிருந்தானென்றும், பின்னர், தேவர்களின் கிருபையினாலே மீளவும் சேர்க்கப்பட்டான் என்றும் கூறப்பட்டிருக்கின்றன. கவஷ ஐலுஷன், சம்மிதை செய்தகாலத்தில் சாதியேற்பாடு பூரணமாக முடிவுபெறாததனால் அவன் சாதியைப்பற்றி வித்தியாசமாக நினையாமல் அச்சம்ஹிதை அங்கீகாரஞ்செய்யப்பட்டதுமன்றி, அவனும் யஜனக்கிரியையில் சேர்க்கப்பட்டான்போலும். ஆத

லால் பிராஹ்மணங்கள் ஏற்பட்டகாலத்தில் ஜாதி ஏற்பாட்டை ஸ்தாபிக்கும் நிமித்தம் இவ்வித கற்பனைகள் ஏற்படுத்தப்பட்டனவெனத் தெரியவருகின்றது.

மேற்படி அத்தியாயம் மூன்ருவது பஞ்சகத்தில், பிராஹ்மணர்கள் தேவர்களின் புரோகிதனுகிய பிரகஸ்பதியின் சந்ததியாரென்று கூறப்பட்டிருக்கிருர்கள்.

ஐதரேயப்பிராஹ்மணம் 5-ஆவது அத்தியாயம் 5-ஆவது பஞ்சகத்தில், அந்தணன் அறிவினையும் புகழையுங்குறித்துக் காயத்திரியையும், அரசன் செல்வத்தையும் பலத்தையுங்குறித்து திருஷ்டுபுவினையும், வைசியன் ஆனிரையைக் குறித்து ஜகதீயையும்,ஜெபிக்கவேண்டும் என்பதுகூறப்பட்டிருக்கிறது.

7-ஆம் அத்தியாயம் 7 - ஆம் பஞ்சகத்தில், ஒருவன் க்ஷத்திரிய வமிசத்தாருக்குக் குருக்களாகவரின் அவனை எப்போதும் மாற்றப்படாது. அந்தக்குருக்கள் சந்ததியாரே அவர்களுக்குக் குருக்களாக வரவேண்டும். இதற்குத் திருஷ்டாந்தமாக ஜனமேஜெயபரிக்ஷித்து, கசியபரில்லாமல் யாககாரியஞ்செய்தபோது, அவரையே வைத்துக்கொண்டு செய்யவேண்டுமென்று நிர்ப்பந்தஞ்செய்யப்பட்டிருக்கிறது. விஷவேந்திரஸௌஷத்மனன் ஷயாபரணர்களை யாகத்தில் நீக்கினபோது அவர்களை மீளவும் கொண்டுவந்துசெய்யும்படி வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

இக்ஷுவாகு வமிசத்தில் தோன்றிய அரிச்சந்திரனுக்கு 100 - மனைவிகளிருந்தும் சந்ததியில்லாமலிருந்தது. நாரதர் 10-வாக்கியங்களை யுபதேசித்து வருணனைத் தியானஞ் செய்யச்சொன்னர். அரிச்சந்திரன் தியானித்துத் தனக்குக் குழந்தையுண்டாயின், வருணனுக்கு அதைப்பலியிடுகிறேனென்று பிரார்த்தித்துக்கொண்டான். பின்னர் உரோகிதன் என்னும் ஒரு மைந்தன் பிறந்தான்; 10 - தினம் சென்று பலிகொடுக்க

லாமென்று நினைத்தான்; 10 - தினமுங் கழிந்தன. பல் முளைத்தபின்பு பலிசெய்ய உத்தேசித்தான்; பல் முளைத்தும் செய்யவில்லை. பல்விழுந்தால் செய்யலாமென்று நினைத்தான்; அப்போதும் செய்யவில்லை. க்ஷத்திரியர்க்குரிய ஆயுதங்களைப்பிடிக்க ஆரம்பித்தபின் செய்ய நினைத்தான்; அப்போதும் செய்யவில்லை. பின்னர்ப் பலியிடுகிறதென்று துணிந்தான்; அதுகண்டு உரோகிதன் வில்லையெடுத்துக்கொண்டு ஆரண்யத்திற் சென்று ஆங்கு ஓராண்டிருந்தான். இப்பால் வருணனால் தந்தைக்கு மகோதரமுண்டாயிற்று; அதுதெரிந்து உரோகிதன் ஊர்வந்துசேர்ந்தான்; அவனுக்குத் தேவேந்திரன் பிராமணவடிவங்கொண்டுவந்து மீளவுங் காட்டிற்சென்று வசிக்கும்படி சொன்னான். அதைக்கேட்டு மற்றோராண்டு வனவாசஞ்செய்தபின்னர் நாடடைந்தான். மீளவும் தேவேந்திரன் முன்போலக்காட்டில் வசிக்கும்படி சொன்னான். இவ்விதமாக 3-4-5-6-ஆண்டு வரையிலும் ஊருக்கு மீண்டுவருந்தோறும், தேவேந்திரன் வந்துசொன்னபடி, காட்டில்வாசஞ்செய்துவந்தான். 6-ஆம் ஆண்டில் காட்டிற்செல்லும்போது ஆங்குவசிக்கும் சுயவாசுவின் குமாரனாகிய அஜிகர்த்தன் என்ற ரிஷி பட்டினியுடன் வருந்துவதையும் அவருக்கு சுனபுச்சன், சுனஷேபன், சுனலாங்கூலன் என மூன்று புத்திரர்களிருப்பதையுங்கண்டு, உரோகிதன் அஜிகர்த்தனை வணங்கி, ரிஷியே! நான் உமக்கு 100-பசுக்களைக்கொடுக்கிறேன் அவைகட்கீடாக உம்முடைய குமாரர்களில் ஒருவரை யாகபலிக்குக் கொடுக்கிறீராவென்றான். அஜிகர்த்தன் மூத்தபிள்ளையைக் கொடேனென்று கட்டிக்கொண்டான். கடைசிப்பிள்ளையை நான் கொடேனென்று அவன்மனைவி கட்டிக்கொண்டாள். உரோகிதன் மத்தியிலுள்ள சுனஷேபனை 100 - பசுக்களைக் கொடுத்துவிட்டு அழைத்துக்கொண்டு தந்தையிடத்திற் சென்று இந்தப் பிராமணனை வாங்கிவந்தேன், எனக்குப் பிரதியாகப் பலிசெய்யலாமென்றான். அவ்வண்ணமே அரிச்சந்திரன் வருணனிடஞ் சென்று உரோகிதனுக்குப் பிரதியாக இந்தப் பிராம

ணப்பிள்ளையைப் பலிகொள்ளுகிறீராவென்றான். அதற்குவருணன் அரசனைப்பார்க்கிலும் அந்தணனைப் பலியாகக்கொள்வது சிரேஷ்டமென்று சம்மதித்தான். அரிச்சந்திரன் உடனே இராஜசூய யாகஞ்செய்யச்சொல்லி சுனஷேபனைப் பலியிடும்படி கொண்டுபோனான். அக்காலத்துத்தேவர்களுக்கெல்லாம் சோமபானம் பகிர்ந்தளிக்கப்பட்டது. அந்த யாகத்தில், விசுவாமித்திரரிஷி இருக்குவேதத்தையோத ஹோத்திரியாயிருந்தார். ஜமதக்கினி யசுர்வேதத்தை யோத அத்வர்யுவாயிருந்தார். வசிஷ்டர் அதர்வணவேதத்தையோதப் பிரஹ்மாவாயிருந்தார். ஐயாஸியர் சாமவேதத்தை யோத உத்கத்ரியாயிருந்தார்.

அப்போது சுனஷேபனை யூபஸ்தம்பத்தில் பிணிக்க ஒருவரும் சம்மதியாதிருக்கவே, அவன் தந்தையாகிய அஜிகர்த்தன் எனக்குப் பின்னும் 100-பசுக்களைக்கொடுத்தால் நான் கட்டிவிடுகிறேன் என்றான். அவ்வண்ணமே 100-பசுக்களைக்கொடுத்தபின் அவன் சுனஷேபனை யூபஸ்தம்பத்தில் கட்டிவிட்டான். பின்னர் சுனஷேபனைப் பலியிட ஒருவருஞ் சம்மதியாதிருக்க, பின்னுமொரு 100 - பசுக்களைக் கொடுத்தால் நான் சேதிக்கிறேன் என்று அஜிகர்த்தன் கூறி அவ்வாறே மீளவும் 100-பசுக்களைக் கைக்கொண்டு கத்தியைத் தீட்டிக்கொண்டு சேதிக்கவரும்போது, சுனஷேபன் ஆலோசிக்கலாயினான். நம்மையோர் மனிதனாக நினையாமல் கொல்ல எத்தனித்தார்கள் நாம் என்செய்வோம் என்று தேவர்களைத்தோத்திரிக்க ஆரம்பித்து, முதலில் பிரஜாபதியைத்தியானித்தான்; பிரஜாபதி அக்கினியைக் காட்டினார். சுனஷேபன் அக்கினியைத் தியானித்தான்; அவர் சாவித்திரியைக் காட்டினார். சுனஷேபன் சாவித்திரியைத் தியானித்தான்; அவள் வருணனைக்காட்டினாள். சுனஷேபன் வருணனைத் தியானித்தான்; அவன் பிரஜாபதியைப்போலவே அக்கினியைக்காட்டினான். சுனஷேபன் அக்கினியை மீளவுந்தியானித்தான்;

அவர் விசுவதேவரைக் காட்டினார். சுனஷேபன் விசுவதேவரைத் தியானித்தான்; அவர் இந்திரனைக்காட்டினார். சுனஷேபன் இந்திரனைத் தியானித்தான்; அவன் அசுவினிதேவர்களைக் காட்டினான். சுனஷேபன் அசுவினிதேவர்களைத் தியானித்தான்; அவர்கள் உஷாவைத் தியானித்தால் (உஷா என்பது விடியுமுன்னுள்ள போது) உன்னை விடுதலை செய்கிறோமென்றார்கள். அவ்வண்ணமே உஷாவினை 3 - மந்திரங்களைச்சொல்லிப் பிரார்த்தித்தான்; உடனே தன்னைப்பிணித்திருந்த கட்டு தளர்ந்தது. அரிச்சந்திரனது மகோதரங்கொண்ட வயிறுந்தளர்ந்தது. கடைசி வாக்கியத்தை யுச்சரித்தவுடனே சவுக்கிய மடைந்தான். யாகாசாரியர்களும் மிகவும் திருப்தியடைந்தார்கள். சுனஷேபனுடைய உத்தரவின்படி பின்பு நடத்தவேண்டிய சடங்கைச்செய்து முடித்தார்கள். சுனஷேபன் தன்னைச் சுவிகாரஞ் செய்துகொள்ளும்படி விசுவாமித்திரர் மடியில் வந்து இருந்தான். அஜிகர்த்தன் விசுவாமித்திர ரிஷியே! என் பிள்ளையைக் கொடுத்துவிடுமென்றான். அதற்கு விசுவாமித்திரர் எனக்குத் தேவர்கள் காப்பாற்றிக் கொடுக்கப்பட்டவனாகையால் உமக்குக்கொடேன் என்றார். அஜிகர்த்தன் தன்மகனை வரும்படி யழைத்தான். அதற்கு சுனஷேபன், என்னைக் கொடுத்துவிட்டு 300 - பசுக்களையும் கைக்கொண்டீர்; உம்மைக் கத்திபிடித்து எதிரில் வரவுங் கண்டேன். சூத்திரர்களுஞ் செய்யாத இக்காரியஞ் செய்தீர்; ஆதலால் உம்மிடம் வரமாட்டேனென்றான். அதற்கு அஜிகர்த்தன் அவனைப்பார்த்து என் மூத்தமகன் உனக்காக மிகவும் வருந்துகிறான். கத்தியை எறிந்துவிட்டேன்; இந்த 100 - பசுவும் உன்னுடையதென்றான். அதற்குச் சுனஷேபன் ஒரு பாவத்தைச் செய்யத்துணிந்தவன் மற்றோர் பாவத்தையுமுடன்செய்வான். ஆகையால் சூத்திரத்தன்மையினின்றும் நீர் நீங்கமாட்டீர்; நீர் செய்தகுற்றம் பொறுக்கத்தக்கதன்று என்றான். விசுவாமித்திரரும் உடனே க்ஷமிக்கத்தக்கதன்று, எவ்வளவு கொடுமையாகக் கையில் கத்திகொண்டு

சிதைக்கத் துணிந்நீர்? அஜிகர்த்தரே! என்றார். பின்னர் சுனஷேபனை நோக்கி நீ அஜிகர்த்தனுக்குக் குமாரனாகவேண்டாம், எனக்குக் குமாரனாக இரு என்றார். சுனஷேபன் விசுவாமித்திரரை நோக்கி உம்முடைய குழந்தைகளே உமக்கு முதன்மை பெற்றிருப்பார்கள்; அன்றியும் நீர் அரசகுமாரனாயிருக்கிறீர், நானோ ஆங்கிரசவமிசத்தனாக இருக்கிறேன்; எப்படி? உமக்குக் குமாரனாவேனென்றான். கடவுள் உன்னை எனக்கருளியதால் நீ என் முதற்குமாரனாக இருப்பாய் என்று விசுவாமித்திரர் சொன்னார். சுனஷேபன் உம்முடைய குமாரர்கள் ஒத்துக்கொள்ளுவார்களோ? என்றான். உடனே விசுவாமித்திரருக்கு 100 - குமாரர்களாதலால் அவர்களில் மூத்தகுமாரர்களாகிய ரிஷபன், ரேணு, அஷ்டகன் முதலிய முதல் 50 - பிள்ளைகளை யழைத்து இந்த சுனஷேபனைச் சிரேஷ்ட தமையனாகக் கொள்ளுங்கள் என்றார். அதற்கவர்கள் உடன்படாமையால் அவர்களைச் சாதிப்பிரஷ்டர்களாகுக வென்று சபித்தார்.

அவர்கள் அவ்வண்ணமே ஆந்திரர், புந்திரர், ஷபரர் புளிந்தர், முதிபர் முதலிய புறச்சாதியர்களாய்விட்டார்கள். இவ்விதமாக விசுவாமித்திரரின் சந்ததியார் தாசரிலும் கீழ்ப்பட்டவர்களானார்கள். இதைக்கண்ட மதுச்சண்டன் முதலிய பின்னர் 50 - பிள்ளைகளும் பயந்து சுனஷேபனைச் சிரேஷ்ட தமையனாகக் கொள்ளுவோமென்றார். உடனே சந்தோஷமாய் உங்களுக்கு நல்ல சந்ததியும் ஆனிரைகளு முண்டாகுமென்று விசுவாமித்திரர் ஆசிர்வாதஞ்செய்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் அரசனைப் பலியிடுவதைப்பார்க்கிலும் அந்தணனைப் பலியிடுவது தேவர்களுக்கு உகந்ததா யிருந்ததென்றும், அந்தணன்பிள்ளை அரசனுக்குச் சுவிகாரமானானென்றுங் கூறப்பட்டிருக்கின்றன.

ஆந்திரர்கள் = தெலுங்கு தேசத்தார்.
புந்திரர்கள் = வங்காளத்துக்கு மேற்கிலுள்ளவர்கள்.

ஷபரர்கள் = கங்கைமுகத்துவாரங்களிலுள்ளவர்கள்,
புலிந்தர்கள் = நருமதாநதிக்கரையிலுள்ளவர்கள்.

இவர்கள் ஐதரேயப் பிராஹ்மணஞ் செய்தகாலத்துப் பிராமணர்களின் ஏற்பாட்டை ஒப்புக்கொள்ளாதவர்களாயிருக்க வேண்டும். ஆகையால் இவர்கள் புறச்சாதியாரென்றும் இந்தச்சாதியாராகவென்று சபிக்கப்பட்டாரென்றுந் தெரியவருகின்றன.

இந்தச்சரித்திரம் இராமாயணத்துள் வேறுவிதயாகக்கூறப்பட்டிருக்கிறது. எங்ஙனமெனின்? இந்த சுனஷேபன் ரிச்சிகரிஷியின் குமாரன் என்றும், இவனை நரமேதயாகத்துக்காக அந்த ரிச்சிகரிஷி 100 - பசுக்களை வாங்கிக்கொண்டு அயோத்திக்கு அரசனாகிய அம்பரீஷனுக்குக் கொடுத்தான் என்றும், சுனஷேபன் வருகிற மார்க்கத்தில் விசுவாமித்திரரைக்கண்டு வணங்கித் தன் குறையினைச் சொன்னபோது, விசுவாமித்திரர் சில மந்திரங்களை உபதேசிக்க அவ்வுபதேசத்தால், தேவேந்திரன் யூபஸ்தம்பத்தினின்றும் இவனை விடுதல்செய்தானென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன.

அஜிகர்த்தன் தன்பிள்ளையை நரபலிக்காக விற்றதனால் பாவமில்லையென்று, மநு 10-ஆவது அத்தியாயம் 105-ஆவது சுலோகத்தில் கூறியிருக்கிறார். ஏனென்றால் தானும் தன் குடும்பமும் பசியினால் வருந்தி இறவாதிருக்கும்படி செய்தாரென்று கூறுகிறார். இதுகொடுமையினுங் கொடுமை! அந்தணர் உஞ்ச விருத்திசெய்து பிழைக்கலாமே! அதுவுங்கிடையாவிட்டால் கானகத்துக் கந்தமூலங்களால் ஜீவிக்கலாமே! தன் பிள்ளையை 100 - பசுவுக்கு விற்றாரே! அதனோடு திருப்தியடையாமல் மறுபடியும் 100- பசுவுக்காக யூபஸ்தம்பத்திற் பிணித்தாரே! இது என்னகொடுமை! இதுவும் போதாதென்று மறுபடியும் 100 - பசுக்களைப் பெற்றுக்கொண்டு வாளாயுதங் கொண்டு சிதைக்கத் துணிந்தாரே! இவரோ ரிஷி சிரேட்டர்! "அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழுக லால்" என்பதை மறந்தார்போலும். இரு

டியர்கொடுமையே இதுவானால், ஏனைய அந்தணர்களின் கொடுமை எவ்வாறிருக்கவேண்டும்!

இந்த ஏழாம்பஞ்சகத்தின் முடிவில்* யஜனக்கிரியையில் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் ஆகிய இவர்களுள் ஒருவருக்கொருவர்கொண்டிருக்கிற சம்பந்த பேதங்களைக்காட்டுகிறது. பிரஜாபதி யாகத்தையுண்டாக்கினார். யாகத்தின்பின் அந்தணரையும் அரசரையும் உண்டாக்கினார். இவர்களின் சந்ததியாருக்குஹூதர்கள் என்றும் அஹூதர்கள் என்றும் பெயராம். ஹூதர்கள் என்பவர்கள் பலியில் கொடுக்கப்பட்டதை உண்பதற்கு யோக்கியதையுடையர்களாம். அஹூதர்கள் என்பவர்கள் பலியிற்கொடுக்கப்பட்டதை உண்பதற்கு யோக்கியதையில்லாதவர்களாம். யாகம் நிறைவேற்றுகையில் அந்தணர்களும் அரசர்களும் தத்தமக்குரிய ஆயுதங்களோடு வந்தார்கள். அந்தணர்க்குரிய ஆயுதங்கள் யாகத்தை நடத்துவதற்குரிய கருவியாம். அரசர்களின் கருவி குதிரை இரதம் கவசம் அம்பு வில்லாம். அந்தயாகத்தில் க்ஷத்திரியர்கள் செல்ல வழிகிடையாது திரும்பிவிட்டார்கள். மற்றவர்களை உள்ளே நுழையப்படாதென்று அந்தணர்கள் தடுத்தார்கள். இதனால் யாகம் அந்தணர்க்கே உரியதாகத்தெரியவருகிறது. அரசர்கள் தாங்கள் வரவேண்டுமென்று கேட்டதன்மேல் ஆயுதபாணிகளாக வரக்கூடாது; அதை நீக்கிவந்தால் ஒப்புக்கொள்ளுவோமென்றார்கள். அவ்விதமாகவே அரசர்கள் தங்கள் ஆயுதங்களையொழித்து அந்தணர் ஆயுதங்களைக்கைக்கொண்டு உள்ளேசென்றார்கள். இதனால் அந்தணர்களின் குலத்தொழில்விருத்தியும் பரம்பராசாரியர்களென்ற தந்திரமும், அவர்களுக்குரிய பாத்தியதையைப் பற்றிய ஏற்பாடுகளும் தெரியவருகின்றன. யாகமே இக்கூட்டத்தாருக்குச் சிறந்தது. இந்த யாகத்தின் தலைவர் அந்தணர்களேயாம். க்ஷத்திரியன் யாகத்துக்குக் கர்த்தாவாகவரும்போது அந்தணரை வைத்துக்கொ

*யஜனக்கிரியை - வேள்விசெய்தல்.

ண்டு யாகஞ்செய்யவேண்டும். அவ்வந்தணர்கள் ஆசிர்வாதம் செய்யவேண்டும்.

பின்னும் இந்த ஐதரேயப் பிராஹ்மணம், அரசனுக்குப்பட்டாபிஷேகம் செய்யும்போது பிராஹ்மணர்கள் செய்யவேண்டிய உயர்வான சடங்கினைப்பற்றிக்கூறுகின்றது. புநர் அபிஷேகத்தைப்பற்றி அரசன் சொல்லவேண்டுபவையாவன:—"நான் வானத்தின்மீதும் பூமியின்மீதும் உறுதியாக அல்லது ஸ்திரமாகநிற்கிறேன். நான் இரேசக பூரகத்தில் ஸ்திரமாகநிற்கிறேன். நான் உண்டியிலும் பானத்திலும் ஸ்திரமாக நிற்கிறேன். நான் பிராஹ்மணரிடத்தும், க்ஷத்திரியரிடத்தும் மூன்றுலகத்தும் ஸ்திரமாகநிற்கிறேன்." என்பவையே. பின் இறங்கிக் கிழக்குமுகமாகத் தரையில் இருந்து பிராமணர்களுக்கு நமஸ்காரமென்று முக்காலுங்கூறிப், பிராஹ்மணர்களுக்குத் தானஞ்செய்யவேண்டும்; இந்தத்தானத்தின் பிரயோசனம் யாதெனின்? 1. சாதாரணத்தில் ஜயம்பெறல், 2. எவ்விடத்தும் ஜயம்பெறல், 3. இளைத்த சத்துரு வலுத்த சத்துருக்களை வென்றும் ஜயம்பெறல், 4. முழுமையும் ஜயம்பெறல் ஆம். அந்தணர்களுக்கு மூன்று நமஸ்காரத்தின் பயனாவது:—1. அரசாங்கம் க்ஷேமமடைதல். 2. அந்தணர்களுக்குள் அரசாங்கம் அடங்கியிருக்குமாயின், வீரமுள்ளவர்கள் கிடைத்தல். 3. வீரமுள்ள மகப்பேறு ஆம். ஓர் அரசனுக்குத் தேவேந்திரனுக்குச்செய்வது போலஅபிஷேகஞ் செய்வித்தால் அவ்வரசனுக்குப்பிணியொழியும், சத்துருக்களால் ஹானியில்லை, தரித்திரம் அணுகாது, எவ்விடத்தும் அபாயத்தினின்றும் நீக்கப்படுவான். இவ்விதமாக எத்திசையினும் ஜெயம்பெறுவன். இறந்தவுடன் இந்திரபதவி கிடைக்கும். இதனால் இச்சடங்கினை ஆசிரியன் நன்றாகக் கற்றுணர்ந்து செய்வானாயின் அரசனை உயர்ந்தஸ்தானத்தில் ஏற்றிவைப்பன். கற்றுணராதவனாயின் கிரியைக்குறைவினால் அழியச்செய்வன்.

சாமானிய அபிஷேகத்தில் சடங்குகள் முடிந்தவுடன் அரசன், பட்டாபிஷேகஞ்செய்த அந்தணாசாரியருக்குக் கு

றைந்தபட்சம் 1,000-பொன்னும், நிலங்களும், ஆனிரைகளுந் தானஞ்செய்யவேண்டும். அரசனிடத்து அளவிறந்த திரவிய மிருப்பதாலும் இன்னும் அளவிறந்த செல்வத்தை அவன் சம்பாதிப்பவனாதலாலும் அளவிறந்த தானங்களைச் செய்யவேண்டுமென்று அந்தணர்கள் கூறுவதாக ஐதரேயத்தில் கூறப்படுகின்றது. ஐதரேயப்பிராஹ்மணத்தின் கிரந்தகர்த்தர்கள், அந்தணாசாரியர்கள் தாங்கள் வாங்கின தானங்களை அளவிட்டுக்கூறாது, அத்திரியின் குமாரனாகிய அதமயன் தன்னுடைய ஆசாரியருக்கு 10,000-யானைகளையும் 10,000 தாதிகளையும் கொடுக்கிறேனென்று வாக்குத்தத்தம் செய்தானென்றும், அவ்வாசாரியரின் குமாரர் ஒவ்வொருவருக்கும் பகற்போசனமானவுடன் 2,000-பசுக்களைக்கொடுத்தானென்றுஞ் சொல்லுகிறார்கள். அங்கதேசத்தரசன் தனது ஆசாரியருக்கு நன்றாகச் சுமக்கத்தகுந்த 80,000-வெள்ளைக்குதிரைகளைக் கொடுத்தானென்றும், பரதன் தன் ஆசாரியனுக்குப் பொன்னாற் பூண்கட்டிய வெள்ளைத்தந்தங்களுடைய 17-கோடி கறுத்த யானைகளைக் கொடுத்தானென்றுங் கூறுகிறார்கள். இருக்குவேதத்தின் ஐதரேயப் பிராஹ்மணத்தில் கூறும் இந்தச்சரித்திரங்களால் பிராமணர்கள் மேலான ஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்தார்களென அபிப்பிராயப்படுகிறது.

### தைத்திரேயப் பிராஹ்மணம்.

இது கிருஷ்ண யசுர்வேதத்தைச் சேர்ந்ததாம்.

தைத்திரேயப் பிராஹ்மணத்தில் பிராமணர்களைக்குறித்துக் கூறும்விஷயம் இதன் முன்னர்க்கூறிய பிராஹ்மணத்திற் கூறியதிற்குறைந்ததன்றாம்.

1. அந்தணன் வசந்தகாலத்தில் யாகஞ் செய்யவேண்டும். (வசந்தமென்பது தளிர்காலம்), இந்தக்காலத்தில் செய்தால் பிரஹ்ம வர்ச்சசு (=பிரமஞானம்) அடைவான். இதுதான் காலத்திற்சிறந்தது.

2. அரசன் கிரீஷ்மருதுவிற் செய்யவேண்டும் (கிரீஷ்மம்=இளவேனிற்காலம்) அப்படிச்செய்யின் இந்திரயவியாவான் (இந்திரயவி = இந்திரனைப்போலும் அதிகாரத்தைப் பெற்றவன்.)

3. வைசியன் சரத்காலத்திற் செய்யவேண்டும். (சரத்காலம்=முதுவேனில் அல்லது இலையுதிர்காலம்) அந்தணன் அக்கினிகாரியம் காயத்திரியாற் செய்யவேண்டும். க்ஷத்திரியன் திருஷ்டுபுவினுலும், வைசியன் ஜகதீயினுலும் செய்யவேண்டும்.

ஓர்வீட்டிற்குரிய பிராமணன் வழிப்பிரயாணத்தில் நின்றும் வீட்டிற்குத் திரும்பினவுடன் உரோகணியில் அக்கினிகாரியஞ் செய்யவேண்டும்.

பிராஹ்மணன்=சுரகுலத்தான். சூத்திரன்=அசுரகுலத்தான். இவ்விருவரும் ஒருதோலைப்பற்றிச் சண்டையிடும்போது பிராஹ்மணன் ஓர்மந்திரபலத்தினுல் அவனைச்செயித்தான்.

வாஜபேயம்=பிராமணனுக்கும், க்ஷத்திரியனுக்கும் உரியதாம். பிராமணனும் ரிஷிகளைப்போல அக்கினிகாரியஞ் செய்யவேண்டும். பிராமணன் சகல தெய்வத்தன்மையும் பொருந்தினவன்.

இந்தப் பிராஹ்மணத்தில் சில தேவர்கள் தனித்தனியேயொவ்வொரு விஷயங்களுக்கும் அல்லது ஒவ்வொரு வகுப்பினராகிய மனிதர்களுக்கும் உரியவராக இருக்கிறுர்கள்.

| | | |
|---|---|---|
| அக்கினி | = | உணவின் கர்த்தன். |
| சோமன் | = | இராஜாதிராஜன். |
| வருணன் | = | சக்கரவர்த்திக்குச் சக்கரவர்த்தி. |
| மித்திரன் | = | க்ஷத்திரபதிக்கு க்ஷத்திரபதி. |
| இந்திரன் | = | வல்லவனுக்கு வல்லவன். |
| பிரகஸ்பதி | = | பிராமணர்களுக்குப் பிரமபதி. |
| புஷா | = | வைசியருக்கு வைசியபதி. |

புருஷ மேதத்திற்குரியவர்களைப்பற்றி இந்தத் தைத்திரேய பிராஹ்மண அத்தியாயத்தில் கூறியதும் சுக்கிலயசுர் 30-ஆவது அத்தியாயத்தில் கூறியதும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருக்கின்றன. வைதிக கிரியைகளில் அந்தணன் தனக்கு வேண்டுமானவரையிலும் மேன்மையைப் பெற்றிருக்கிறான். ஒரு வெள்ளாடு தவறிப்போகுமானால் அந்தணன் வலதுகையில் ஓமஞ்செய்யவேண்டும். அவ்வந்தணனே வைசுவாநர அக்கினியாம். அந்தணன் கையில் ஓமஞ்செய்யின் அக்கினியினாற் பூசித்ததொக்கும். அசுவமேதக்கிரியையில் சூத்திரனது நிலைமை எவ்வளவோ வித்தியாசமாயிருக்கிறது. சூத்திரன் சொத்துக்களைப் பாதுகாக்கவேண்டியது. வைப்பாட்டி மகனுக்கும் சூத்திரனைப்போலவே ஸ்நானமும், தீர்த்தப்புரோக்ஷணமுமில்லையாம்.

## சதபதப்பிராஹ்மணம்.

இது சுக்கில யசுர்வேதத்தைச் சேர்ந்ததாம்.

இப்போது குறித்த இரண்டு பிராஹ்மணங்களில் கூறியபடியே இந்தச் சதபதப் பிராஹ்மணத்தின் மத்யந்தினசாகையிலும் சாதியின் பிரிவுகள் வெளியாகக் கூறப்பட்டிருக்கின்றன. சுக்கில யசுரினின்றும் இவைகளைத்திரட்டினவர் யாஞ்ஞவற்கியரென்றும் அவருடைய ஏற்பாடே பிரமாணமென்றும் கூறப்பட்டிருக்கின்றன. இதில் ஓர்வசனத்தில் இராக்ஷஸர்கள் என்பவர்கள் யாகத்திற்கு இடையூறு செய்பவர்களென்று கூறப்பட்டிருக்கிறது. வியாபகரூபியாயுள்ள விஷ்ணு யாகாக்கினியின் சுடராய் எழுவதால் இவரே யாகமாம். தேவர்களையுண்டாக்கினவன் "சவிதா" என்னும் சூரியன் என்றும், யாககர்த்தா அக்கினியென்றும், வேதத்தில் கூறியிருப்பதால் இவ்விஷ்ணு பின்னர்த் தேவர்களிற் சிறந்தவரானார்; வைதிகச் சடங்கில் தச்சன் அல்லது வேறே அசுத்தமானவர்கள் ஆகிய இவர்களின் பரிசத்தால் உண்டாகிற தீட்டு தீர்த்தப்புரோக்ஷணத்தினால் நீங்குமாம். யாகத்தில் முன்கூறியபடியே

சூத்திரர்களும் சடங்கினுக்குச் சம்பந்தமுடையவரா யிருக்கிறார்கள். பலியிடும் யூபமும், அன்னம் கிண்டுகிற காண்டி அல்லது துடுப்பும் அந்தணர்க்குரிய ஆயுதங்களாம். இரதமும், அம்பும் அரசர்க்குரிய வாயுதங்களாம்.

அந்தணன் = பூః என்பதையும்,
க்ஷத்திரியன் = புவః என்பதையும்,
வைசியன் = சுவః என்பதையும்,

காயத்திரிக்கு முன்வைத்து ஜெபிக்கவேண்டும்.

பிராமணனுக்குத் தெய்வம் = பிரகஸ்பதி.
க்ஷத்திரியனுக்குத் தெய்வம் = இந்திரன், அக்கினி.
வைசியனுக்குத் தெய்வம் = விசுவதேவர்.

தீக்ஷாகிரியைகள் பிரம க்ஷத்திரிய வைசியருக்கேயாம். சூத்திரருக்கில்லை. அரசர் வைசியர்கள் தீக்ஷை செய்துகொண்டபின் அந்தணர்களைப்போல யாகத்திலுற்பத்தியானவர்களாவார்கள்.

இதன் பதின்மூன்றாவது காண்டத்தில் அரசன் ஐவகை மனிதர்க்கும் சப்தவிதமனிதர்க்கும் தானம் வழங்கினனென க்கூறப்பட்டிருக்கின்றது. ஐவகை மனிதர் ஐந்து ரிஷிகளிடத்துண்டாகிய ஆதிசைவப் பிராமணர்கள் என்றும், சப்தவித மனிதர் ஏழுரிஷிகளிடத்துண்டாகிய பிராமணர்கள் என்றும் பொருள்படுகின்றது. இதன் உண்மைப் பொருளுணராது பாஷியகாரர்கள் தமக்குத்தோன்றியவாறே யுரை எழுதியிருக்கிறார்கள். அது பொருந்தா வுரையெனக்கொள்க.

### சோபதப்பிராஹ்மணம்.

இது அதர்வணவேதத்தைச் சேர்ந்ததாம்.

பிராஹ்மணர்கள் நான்கு வருணத்துள் ஒருவராக இருந்த போதிலும், இவர்களே ஆட்சிபெற்றவர்களாக இருக்கிறார்கள்.

## ஆரண்யக உபநிஷத்துகள்.

இனி, ஆரண்யகங்களிலும் உபநிஷத்துக்களிலும், ஜாதி ஏற்பாட்டைப்பற்றி விசாரிப்போமாக.

ஆரண்யகங்கள்=என்பது கானகத்தில் நடந்த பிரசங்கம். அல்லது ஸம்வாதங்களாம்.

* உபநிஷத்தென்பது அதிக நெருக்கமுள்ளவனிடத்து வசனிக்கும் வாசகமாம். இவ்விரண்டும் பிராஹ்மணங்களுண்டானதற்குப் பின்னிட்டு காலத்தனவாயிருக்கின்றன.

உபநிஷத்துக்கள் கிரேதாயுகத்தில் 1,000-இருந்தன. அவற்றை திரேதாயுகத்தில் 108-ஆகச் சுருக்கி ஸ்ரீஇராமபிரான் அநுமானுக்குக் கூறினர். துவாபரயுகத்தில் 32-ஆக இருந்தன. அவைகளிற் கலியின் முதற்பாகத்தில் 16-ம் பிற்காலத்தில் 10-ம் சிறந்தனவாக வழங்கப்பட்டு வருகின்றன.

### பிருஹதாரண்யக உபநிஷத்து.

இது சுக்கிலயசுர் சதபதப் பிராஹ்மணத்தின் பின்னுள்ளது. முற்காலத்தில் இந்தப் பிரபஞ்சமானது பிரமமாகத்தானே ஒன்றாக இருந்தது. அந்தப் பிரமமானது ஒன்றாக இருந்தும் பெருமையையடையவில்லை. அந்தப்பிரமமானது க்ஷத்திரியனென்கிற உயர்ந்த சரீரத்தைப்படைத்தது. தேவர்களுள் இந்திரன் வருணன் சந்திரன் உருத்திரன் பர்ஜன்னியன் யமன் மிருத்தியு ஈசானன் என்கிற க்ஷத்திரிய அதி தேவதை

* உபநிஷத்து என்பது உப=நியதிகளைந்த இடத்து அல்லது உள், நி=நின்ற, சத்=உண்மைப் பொருளாம். எனவே பிரமநிலை விளக்கமென்பது பொருளாம். இதற்கு வேறுவிதம்பொருள் கூறுவாருமுளர். அப்பொருள் உப=அருகாக, நி=மிகவும், ஷத்=உள்ளது. எனவே தத்துவார்த்தை அநுபவத்திற்கு அரும்படி தெரிவிப்பது என்பதாம். ஆக இரகசியப்பொருளை யுணர்த்தும் வாசகியம் என்பது பெறப்பட்டது.

களைப்படைத்தது. ஆகையால் க்ஷத்திரியனைக் காட்டிலும் உயர்ந்ததில்லை. பிராஹ்மணன் இராஜசூய யாகத்தில் க்ஷத்திரியனுக்குக் கீழ் இருக்கிறான்; ஆகையால் க்ஷத்திரியனிடத்திலேயே பிராஹ்மண்யத்தினாலுண்டான கீர்த்தியைச் செய்கிறான். (அந்தயாகத்தில் அரசனானவன் பிராஹ்மணா என்று கூப்பிட்டவுடனே, ருத்துவிக்காயிருக்கிற பிராமணன், துவம் ராஜன் பிரஹ்மாஸ்மி=அரசனாகிய நீயே பிராஹ்மணனாயிருக்கிறாய் என்று அரசனைப்பார்த்துச் சொல்லுகிறபடியால், பிராஹ்மண்யத்தாலுண்டான கீர்த்தியை அரசனிடத்தில் பிராஹ்மணன் செய்கிறான் என்பது கருத்து.) க்ஷத்திரியனுக்குப் பிராஹ்மண்யம் என்கிறதெதுவோ அதுவேதான் உயர்வுக்குக் காரணம். ஆகையால் க்ஷத்திரியன் உயர்வை அடைகிறான். இராஜசூயம் முடிந்தவுடனே தன்னுடைய * பிறப்பிடமான பிராஹ்மணனை வணங்கி அவன் அருகிலிருக்கிறான். யாதொரு க்ஷத்திரியன் இந்தப் பிராஹ்மணனைக் கொல்லுகிறானோ அவன் தன்னுடைய பிறப்பிடத்தைக் கெடுக்கிறான். பெரியோரைக் கொன்றவன் எப்படிப்பாவியாகிறானோ அப்படி அந்தணனைக்கொன்றவன் பாவியாகிறான்.

அந்தப் பரமாத்மா விபுவாகவில்லை. அந்தப் பரமாத்மா வைசியனைப்படைத்தது. பின்னர் வைசிய அதிதேவதைகளான வசு ருத்திர ஆதித்தர்களைப் படைத்து, விசுவையினுடைய பிள்ளைகளான 13-தேவர்கள் மருத்துக்கள் என்ற தேவகூட்டங்களைப் படைத்தது.

பின்னர் அந்தப்பரமாத்மா சூத்திரஜாதியர்களைப் போஷகர்களாகச் சிருஷ்டித்தது. இப்பூமி போஷகனும். அது சகலத்தையும் உண்டாக்குகின்றது. அந்தப் பரமாத்மாவானவன் பலவாக அல்லது வேறாகவில்லை. அவன் உள்ளிருந்து தருமத்தை வெளிப்படுத்தினான். தருமமே க்ஷத்திரத்தைக் காப்பா

* இதனால் க்ஷத்திரியன் பிராஹ்மணனுக்குப் பிறந்தவனென விளங்குகின்றது. இது விபரீதமேயாம்.

ற்றுவது. தருமத்தைவிட உயர்ந்ததொன்றில்லை. தருமத்தால் எளியவனும் வலியவனை வெல்லுகிறான். தருமமே சத்தியம். அவனால் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களுண்டானார்கள். அவனே அக்கினிசொரூபன். அவன் தேவர்க்குப் பிரமனாகி யும், மனிதருக்குப் பிராமணனாயும், க்ஷத்திரியருக்கு க்ஷத்திரி யனாகியும் வைசியருக்கு வைசியனாகியும் சூத்திரருக்குச் சூத் திரனாகியு மிருக்கிறான். பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்க ளும் பிரம சிருஷ்டியேயாம். இவ்விதமாகப் பிரமா உலகத் தைச் சிருஷ்டித்தார்.

## தைத்திரேய உபநிஷத்து.

இது கிருஷ்ண யசுரைச்சேர்ந்ததாம்.

தைத்திரேய ஆரண்யகத்தின் பிரிவாயுள்ளவை 7-ஆவது முதல் 9-ஆவது அத்தியாயம் வரையும்; இவை அதர்வணவேத உபநிஷத்துள்ளும் காணலாம். இவற்றுள் தெய்வம் மூத்தோர் பந்து உபாத்தியாயர் அந்தணர்களுக்கு நடக்கவேண்டிய மரி யாதை கூறப்படுகின்றது.

உனது முன்னோரிடத்தும் தெய்வத்தினிடத்தும் நடத் துங்கடமையில் பராமுகமாயிருக்கக்கூடாது. தாய் தந்தை உனக்கு ஒரு தெய்வமாக இருக்கவேண்டும். நிந்தனையற்றவை யெல்லாஞ்செய்க. மற்றதை யொழிக்க. புகழானவற்றைச் செய்வதானால் உன் உபாத்தியாயரை நீ வழிபாடு செய்யவே ண்டும், மற்றவைவேண்டாம். அந்தணர் நம்மினுஞ் சிறந்தவ ராதலின் அவர்களுக்குப் பீடம் அளிப்பது உன் முயற்சியிலி ருக்கவேண்டும். அயலிலுள்ள சாதுக்களாகிய பிராமணர்கள் தங்களால் வேலைசெய்ய முடியாதிருந்தால் வேறு பிராமணர் கள் அவர்களுக்கு உதவிசெய்வதுபோல நீயும் உதவி செய்ய வேண்டும்.

## சூத்திரங்கள்.

வேதத்தின் கடைசிப்பாகமாயுள்ளன சூத்திரங்களாம்.

இது பிராஹ்மணத்துக்கும், ஸ்மிருதிக்கும் மத்தியில் நின்று அவற்றை ஒன்றுபடுத்தும் ஓர் தொடர்ச்சியாம். சூத்திரம் என்பது கயிறு அதாவது ஞாபகத்திற்குக் கொண்டுவருவதற்காக ஏற்படுத்திய பழமொழிச்சுருக்கமாம். இச்சூத்திரம் ஒவ்வொன்றும் அததனைச்செய்த நூலாசிரியன் பேரால் வழங்கப்படும். அச்சூத்திரங்கள் வேதங்களினின்றும் பிராஹ்மணங்களினின்றும் திரட்டப்பட்டனவாம். பின்னும் அவை பழைய நூல்களிலுள்ள விஷயங்களையும் சட்ட நிர்மாணங்களையும் அவற்றின் அர்த்தபாகங்களையும் குறிப்பிக்கின்றன.

சிரௌத சூத்திரம் வேதத்தின் சம்ஹிதைகளையும் பிராஹ்மணங்களையும் பற்றிக்கூறியதாம். (சிரௌதம்=சுருதிசம்பந்தம்). கற்பசூத்திரம் வேதத்தின் யாகாதி கருமங்களை யுணர்த்துவதாம். இவை மஷகர் போதாயனர், ஆபஸ்தம்பர், ஆசுவலாயனர், காத்தியாயனர் முதலிய மானிடராற் செய்யப்பட்டனவென்று குமரிலர் முதலிய பிராஹ்மணர்களே யொப்புக்கொள்ளுகிறார்கள். ஸ்மார்த்தசூத்திரம் ஸ்மிருதி சம்பந்தமானதாம். அது சாஸ்திரங்களைப் போதிக்கும். கிருஹ்யசூத்திரம் கிருகத்தில் குடும்பங்களுக்குரிய சடங்கினைப் போதிப்பதாம். சமயாசாரிக சூத்திரம் நித்தியகருமங்களைக்கூறுவதாம். இவற்றுள்,

### காத்தியாயன சூத்திரம்.

இது சுக்கில யசுர்வேதத்தைச் சேர்ந்தது.

சிரௌத சூத்திரங்களுள் காத்தியாயன சூத்திரம் பிரபலமுள்ளதாக இருக்கிறது. இது பிரம க்ஷத்திரிய வைசியருக்குள்ள கருமாதிகாரம் சூத்திரருக்கில்லையெனக் கூறுகின்றது. இதற்குப் பிரமாணம் பிராஹ்மணங்களிலிருந்து குறிக்கப்பட்டிருக்கிறது. இச்சூத்திரர்களுக்கு மேற்குலத்தாரைப்போல யஞ்

ஞோபவீதங் கிடையாது. இவர்கள் வேதம் ஓதப்படாது. ஓதுவதைக் கேட்கக்கூடாது மனனஞ் செய்யவுங் கூடாது. வேதம் ஓதுகிற சூத்திரன் காதில் அரக்கு அல்லது ஈயத்தைக்காய்ச்சி யூற்றவேண்டும். வேதம் ஓதுகிற சூத்திரன் நாக்கையறுத்துவிடவேண்டும். வேதத்தை மனனஞ் செய்கிற சூத்திரன் தேகத்தை இரண்டாகப்பிளந்தெறியவேண்டும்.

(இங்ஙனம் சூத்திரர்வேதம் ஓதல் கேட்டல் சிந்தித்தல் ஆதியவைகளைச்செய்தால் அவர்களுக்குத் தண்டனை விதித்திருப்பது பெருங்குற்றமாம். எங்ஙனமெனில்? சூத்திரர்களும் ஸ்திரீகளும் வேதங்கள் செய்த கிரந்தகர்த்தர்களாக இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது ஓதலாதியவைகளை மேற்குறித்தவர்கள் செய்வதற்குத் தடையென்ன இருக்கிறது? சூத்திரர்களைத் தாழ்த்தவேண்டுமென்று பொறாமைகொண்டு மனம்போனவாறு ஏட்டில் இடங்கிடைத்தமட்டும் எழுதிவைத்ததாகத் தெரியவருகிறது. சூத்திரர்களும் ஸ்திரீகளும் வேதஞ் செய்திருத்தலை 20-ஆவது பக்கத்திற் காண்க.)

யாக காரியத்தில் ஆதானத்துக்காக இரதகாரன் வேண்டியிருப்பதால் அவனுக்குக்கொஞ்சம் நயங்காட்டியிருக்கிறார்கள். (ஆதானம்=தீயுண்டாக அரணிகடைவது) இந்த வித்தியாசமும் அவன் ஜீவனத்துக்குரிய தொழிலைப்பற்றியதாயிருக்கிறது.

மகிஷ்யன் க்ஷத்திரியனுக்கும் வசியமாதுக்கும் பிறந்தவனாம். கரன்னிகன் வசியனுக்கும் சூத்திரமாதுக்கும் பிறந்தவனும். இரதகாரன் மகிஷ்யனுக்கும் கரன்னிக ஸ்திரீக்கும் பிறந்தவனும். நிஷாதபதி புதிதாக வீடுகட்டுவதற்குப் பள்ளம்வெட்டுகையில் பயறு சுண்டல்செய்து படைக்க அதிகாரமுண்டு. கிருகபதியாகிய நித்தியாக்கினியை வளர்ப்பது அந்தணனுக்கன்றி வசிய க்ஷத்திரியர்களுக்குக் கிடையாது. ருதுசாந்தியில்

அந்தந்த வேதத்துக்குரிய ரிஷிமூலத்தை யுடையவந்தணர்களே அக்கினிகாரியஞ் செய்யவேண்டும்.

### பௌதாயன சூத்திரம்.

இது கிருஷ்ண யசுர்வேதத்தைச் சேர்ந்தது.

(1) ருத்விஜியாக ஏற்படுத்தப்பட்ட பிராஹ்மணன் நற்குலத்திற் பிறந்தவனாகவும், நல்ல கோத்திரம் வேதவுணர்ச்சி நல்ல ஒழுக்கமுடையவனாகவும், அங்கஹீனம் மறுவில்லாதவனாகவும், ஊரைவிட்டுப் போகாதவனாகவும், ஊருக்குப் புறம்பிலிருக்கும் அந்தியஜர் = (ஈனசாதியர்)களிடத்துச் செல்லாதவனாகவும், துர்ப்பாஷை பேசாதவனாகவும், கிரமவழியில் வந்த சந்ததிகளுடையவனாகவும், பரஸ்திரீ கமனமற்றவனாகவும், * பிள்ளை பெற்றவளை விவாகஞ் செய்யாதவனாகவும், இளையவனாகவும், சுவீகாரம் போனவனல்லாதவனாகவும் இருக்கவேண்டும். 2. அத்வர்யுவாக வருகிறவன் ஆங்கீரச சந்ததியில் வந்தவனாகவும், 3. பிரஹ்மாவாக வருகிறவன் வசிட்டர் சந்ததியில் வந்தவனாகவும், 4. ஹோதாவாக வருகிறவன் விசுவாமித்திரர் வழியில் வந்தவனாகவும், 5. உத்காதாவாக வருகிறவன் † கௌசிகர் வழியில் வந்தவனாகவும் இருக்கவேண்டும். மேலேயிருந்து நடத்துவிக்கிற சதாஸியன் வசிஷ்டர் பிருகு ஆங்கீரசர் இவர்கள்வழி வந்தவனாகவும் பிறப்பிலும், வித்தையிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவனாகவும் இருக்கவேண்டும்.

யாககர்த்தா இவற்றை மாற்றவேண்டுமென்று விரும்பும் விருப்புமானது எத்தன்மையதென்றால், திருட்டை விராத்தியர் அல்லது சூத்திரர்களிடத்தும், உழைப்பை வைசியரிடத்தும், வித்தையை அரசரிடத்தும், பிரமஹத்தியை நிஷாதரி

---

* இந்த வாக்கியத்தால் ஒருகாலத்தில் ஆரியருள் விதவாவிவாகம இருந்ததாகத் தெரியவருகிறது. † கௌசிகர் என்பவர் முன்னர் விசுவாமித்திரரைக் கூறியிருத்தலால் இன்னாரென்று தெரியவில்லை.

டத்தும் மோக்ஷத்தைக் கிம்புருஷரிடத்தும், (கிம்புருஷன் = மலைவாசி) மிலேச்சபாஷையைக் கானகரிடத்தும், நித்திரையை விதேகரிடத்தும், க்ஷயத்தைத் துந்துபரிடத்தும், பித்தத்தை இக்ஷுவாகுவிடத்தும், யாககாரியமுயற்சியைக்கலிங்கரிடத்தும் சேர்த்ததொக்கும். எனவே பயன்படாதென்பது கருத்து.

ஆதானகாரியத்தில் அந்தணர் அரசர் வைசியர் இரதகாரர் உச்சரிக்கவேண்டிய மந்திரங்கள் விவரமாகக் கூறப்பட்டிருக்கின்றன. அந்தணராதி மூவரும் ஓதவேண்டிய சந்தசுக்கள் பிராஹ்மணங்களுட் கூறியபடியே கூறப்பட்டிருக்கின்றன. இடையில் தரிக்கவேண்டிய அரைஞாண் - வேதம் ஓதுகிற அந்தணனுக்கு முஞ்சிப்புல்லும், க்ஷத்திரியனுக்கு முறுவற்புல்லும், வைசியனுக்குக் கறுப்பு மான் மயிருமாம்.

### ஹிரண்யகேசி சூத்திரம்.

இது கிருஷ்ண யசுர்வேதத்தைச் சேர்ந்தது.

இதில் பிரம க்ஷத்திரிய வைசியர்கள் வேதாத்தியயனம் செய்யத்தடையில்லை. யாககாரியம் அந்தணனுக்கே யுரியது; மற்றவர்க்கில்லையாம். இவர்கள் கருமமெல்லாம் அந்தணனாற் செய்துகொள்ளவேண்டும். க்ஷத்திரிய வைசியர்கள் நித்தியாக்கினிஹோத்திரமும், அமாவாசை பௌர்ணமி கருமங்களும் செய்துகொள்ளலாம். சோமபாகம் பிராமணனுக்கே யுரியது. நிஷாதர்களும் இரதகாரர்களும் அமாவாசை பருவங்களில் அக்கினிகாரியங்களுக்குரிய ஆதானச்சடங்குசெய்ய அதிகாரமுண்டு. ஆதானகாலம் = பிராஹ்மணங்களில் கூறியபடி, வசந்தருது பிராமணர்களுக்காம். கிரீஷ்மருது ஹேமந்தருது = அரசனுக்காம். சரத்ருது வைசியருக்காம். வருஷருது இரதகாரனுக்காம். சிசிரருது சகலருக்கும் பொது.

பௌதாயன சூத்திரப்படி மந்திரம் இந்நால்வருக்கும் தனித்தனியே கூறப்பட்டிருக்கிறது. அசுவமேத யாகத்திற்குரிய குதிரை பிரம க்ஷத்திரிய வைசியருள் யாவர் வீட்டினதா

யிருந்தாலும் கொண்டுவரலாம். எஜமானனாகிய யாக கர்த்தாவுக்குரிய பாகத்தை அந்தணன் புசிக்கவேண்டும். அரச வைசியர்களுக்காகாது. மலமூத்திரக்குப்பைகளை எடுப்பதற்குச் சூத்திரன் உள்ளே புகுந்தகாலத்தில் பிரம க்ஷத்திரிய வைசியர்கள் மௌனம் சாதிக்கவேண்டும். எனவே வேதம் ஓதப்படாதென்பது கருத்து. சூத்திர வகுப்பினர்கள் இவ்வளவு இழுக்காக மதிக்கப்பட்டிருக்கிறார்கள். யாகப் பசுவின் தோல் சூத்திரனுக்கு அல்லது முதன் மூன்றுவருணத்தாருள் ஒருவருக்குவேண்டுவதாயின் அதை அக்கினிதரனாகிய பிராமணனிடத்திற் பெற்றுக்கொள்ளவேண்டும். அக்கினிஷ்டோமயாகத்தில் நிஷாத வைசிய க்ஷத்திரியர்கள் உதும்பரம் (அத்தி) என்னும் மரத்தின் வேரின்ரசத்தை மட்பாத்திரத்தில் விட்டு மூன்றுதரங்குடிக்கலாம். பிராமணன் ஒருதரம் குடிக்கலாம்.

### ஹிரண்யகேசியின் ஸ்மார்த்த சூத்திரம்.

இதில் உபநயனம் அந்தணன் 7-வயதிலும் அரசன் 11-வயதிலும், வைசியன் 12-வயதிலும் செய்யவேண்டும். அப்போது இரண்டு பிராமணர்களுக்குப்போஜனம் செய்விக்கவேண்டும். பாலியன் க்ஷவரஞ்செய்துகொண்டு அலங்காரஞ்செய்துகொள்ளவேண்டும். வீட்டிலுள்ள அக்கினியை யிருந்தவிடத்தே வளர்க்கவேண்டும். அஷதச்சூழத் தருப்பையைப் பரப்பவேண்டும்.

### ஹிரண்யகேசியில் சமயாசார சூத்திரம் அல்லது தருமசூத்திரம்.

இது முக்கிய கருமங்களையல்லாமல் அந்தந்த ஜாதியின் வித்தியாசங்களை யுணர்த்தும் வழக்கங்களையுங்கடமைகளையும் பற்றிய ஏற்பாடாம்.

வேதத்தில் ஏற்பட்ட ஜாதி நான்கனுள் வேதம் ஓதலும் யஞ்ஞோபவீதம் தரித்தலும், சூத்திரர்களுக்குப் பயனற்றனவாயிருக்கின்றன. அவர்களுக்கு ஊழியமே யுரியதாம். இதில்

முதன் மூன்று வருணத்தாருக்குங் கருமங்களுக்குரிய காலங்களைக் கூறுகின்றதேயல்லாமல் சூத்திரருக்குக் கூறவில்லையாம். இம்மூன்று வகுப்பினர்களும் உபநயனமானதுமுதல் 12-வருஷமவரையில் ஆசாரியனிடத்திலிருக்கவேண்டும். அந்தணன் தன்பத்தினியை யழைக்கும்போது மரியாதையுடன் அழைக்கவேண்டும். க்ஷத்திரிய வைசியர்கள் தத்தம் பத்தினியர்களை வெற்றெனவே அவரவர்களின் பெயர்சொல்லி யழைக்கலாம்.

பிரமசாரி வியாபாரத்தில் பிரவேசிக்கக்கூடாது. சூத்திரனுடன் பேசக்கூடாது. * ஆரியர்களல்லாத மாதருடன்சம்பந்தப்படக்கூடாது. மாமிசம் புசிக்கலாகாது. சூத்திரர் அல்லது ஆரியர்களால் வைக்கப்பட்ட அசுத்தமான பாத்திரங்களைத் தீண்டலாகாது. அந்தணன் அரசமாதிடத்திற்சேர்ந்தால் அதற்கு ஆயிரம்பசுக்களையும் வைசிய மாதுடன்சேர்ந்தால் நூறு பசுக்களையும் சூத்திரமாதுடன் சேர்ந்தால் பத்துப்பசுக்களையும் பிராயச்சித்தமாகத் தானஞ்செய்யவேண்டும். அந்தணன் துன்மார்க்கத்துக்குரியமாதைக் காட்டில் ஓட்டிவிடவேண்டும். பிரமசாரிக்கு ஆயுதமாகாது. யாராகிலும் அவனைக்கொல்லவந்தால் அப்போது அவன் கத்திமுதலிய ஆயுதம் எடுக்கலாம்.

கிருஹஸ்தாச்சிரமத்தில் பிரவேசிக்கும்போது முதலில் ஸ்தாலிபாகஞ் செய்யவேண்டும். (ஸ்தாலிபாகம்=ஹோமம் அல்லது கிரகபலிக்காக அன்னஞ் சமைத்தலாம்.) இதை இவன்போசனஞ் செய்வதற்கு முதல் நாள் ஒரேநரம் போசனஞ் செய்யவேண்டும். கட்டிலின்மேல் சயனிக்கலாகாது, பூமியின் மேல் சயனிக்கவேண்டும். இவன் மிகவும் நியமத்தோடு வாழவேண்டும். அதன்பின் சுகத்தையடையும்படி அந்தந்தச் சா

---

* ஆரியர்களல்லாத மாதருடன் சம்பந்தப்படக் கூடாதெனவே ஆரியமாதருடன் சம்பந்தப்படலா மென்பதாயிற்று. இது யுக்திக்கு நேர்விரோதமாயிருக்கிறது.

திக்குரிய சடங்குகளைச் செய்யவேண்டும். இதற்கு மாறுசெய்யின் துன்பம்நேரிட்டு, அந்தணன் சண்டாளனுகவும், அரசன் பௌலகாசனுகவும், வைசியன் வேணனுகவும் பிறப்பான். சண்டாளர்களைப்பார்த்தாலும் தீண்டினுலும் அவருடன் வசனித்தாலும் தோஷமுண்டாம். அந்தணன் தனக்குக்கீழான சாதியார்களுடன் வசனித்தாலும் அவர்களைத்தீண்டினுலும் பிராயச்சித்தம் ஸ்நானம் செய்தலாம். அவர்களைப்பார்த்தால் சூரியனொளியைப் பார்க்கவேண்டும். அந்தணாதி மூவரும் விசுவதேவரைப் பூசிக்கவேண்டும். (விசுவதேவர்=தருமதேவதையின் புத்திரர்கள்). சூத்திரர்கள் விசுவதேவபூசையைத் தினந்தோறுஞ் செய்து மூன்றுதரம் ஆசமனமுஞ் செய்யவேண்டும். முதன் மூவரும் மாதத்தில் 8-நாள் அல்லது 15-நாளுக்கு ஒருதரம் க்ஷவரஞ்செய்துகொண்டு ஸ்நானஞ் செய்யவேண்டும். வாசித்த அந்தணன் வந்தால் அவனை இருக்கவைத்துப் போசனஞ் செய்விக்கவேண்டும். அரசன் அல்லது வைசியன்வந்தால் வந்தனமாத்திரஞ் செய்யவேண்டும். சூத்திரன் வந்தால் அன்னமிட்டு வேலை வாங்கிக்கொள்ளவேண்டியது. அந்தணன் ஸ்மிருதியிற் கூறியபடி அரசனுக்கும் வைசியனுக்கும் வேதம் ஓதுவிக்கலாம். சீவனமில்லாதகாலத்து அவர்களிடத்துச் சேவிக்கலாம். சாஸ்திரங்களை அப்பியசிப்பிக்கலாம். சோதிடஞ்சொல்லலாம். உபநிஷத்து முதலானவைகளையும் போதிக்கலாம். அந்தணன் ஓதல் ஓதுவித்தல் வேள்வி செய்தல் செய்வித்தல் ஈதல் ஏற்றலாகிய அறுதொழில் செய்யலாம். அரசன் ஓதுவித்தல் வேட்பித்தல் ஏற்றல் நீங்கலாக மேற்கூறியவை செய்யலாம். உலகோம்பல் படைபயிலலும் செய்யலாம். வைசியன் க்ஷத்திரியருக்குரிய உலகோம்பல், படைபயிலல் நீங்கலாக கிருஷி வாணிகம் பசுக்காத்தல் செய்யலாம். இதுவுமன்றி இவர்கள் ஸ்மிருதிகளிற் கூறியபடி செய்யத்தவறினுல் இவர்களை அரசனிடத்திற் கொண்டுபோய் (சாஸ்திரிகளாயுள்ள அந்தணர்களின் தீர்மானப்படி) தண்டிக்கவேண்டும். அந்தணர்களில் தவறினவர்களைக் கொலைசெய்ய

வும் அடிமைகளாக்கவுங்கூடாது. மற்றவர்களைத் தடையின்றிச் செய்யலாம்.

இதனால் அந்தணர் குற்றஞ்செய்தால் அவரை யொருதண்டனையுஞ் செய்யக்கூடாதென்பது அநீதியாம். ஏனெனில் அந்தணர் எல்லாமுணர்ந்தோராதலின் ஒரு குற்றமுஞ்செய்யாதிருக்கக்கடவர்; செய்வாராயின் அவரை இரட்டைத்தண்டனை செய்யவேண்டுவது கிரமம். அப்படிச் செய்யாவிடினும் மற்றவரைப்போலவாவது தண்டிக்கவேண்டும். இப்படி ஏன்சொல்லவில்லையெனிற்? பெரும்பாலும் வேதவாக்கியங்களும் உபநிஷத்துக்களும் சூத்திரங்களும் எழுதியவர் அந்தணராதலால், தங்களுக்குச் சாதகமாகவேண்டியவற்றை எழுதிக்கொண்டார்கள். இஃதன்றி வேறுகாரணமில்லை.

ஸ்மிருதியில் எண்வகை விவாகம் விதிக்கப்பட்டிருக்கின்றன. பிரமசரியம் வானப்பிரத்தம் சந்நியாசமும் இவைகட்குரிய ஒழுக்கமும் ஸ்மிருதிகளுள் கூறப்பட்டிருக்கின்றன. 88,000 இருஷி வமிசமிருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் விரிக்கிற்பெருகும். அரசனுக்குரிய கடமை கூறப்பட்டிருக்கிறது. அரசனுக்கு உண்மையும் சத்தியமுமுள்ளவராயும் சகல தொழிலும் பயிற்சியுடையவராயுமுள்ள குறைந்தது 2-மந்திராலோசனைக்காரர்க ளிருக்கவேண்டும்.

"அரசன் குடியைக்காக்கவும், திருடர் பயமொழிக்கவும், தைரியவான்களை நியமிக்கவேண்டும். திருட்டுப்போன சொத்தைக்கொண்டுவந்து ஒப்புவிக்கும்படி எல்லைக்காவற்காரர்களை நிர்ப்பந்தஞ்செய்யவேண்டும். குடிகளிடத்து வரிவாங்கவேண்டும். ஆனால் வேதங்கற்றுணர்ந்தவரிடத்தும், மாதர்களிடத்தும், வாசிக்கிற பிள்ளைகளிடத்தும், சந்நியாசிகளிடத்தும், சூத்திரன் பிறன் வயப்பட்டவனாதலால் அவனிடத்தும், குருடு செவிடு ஊமை பிக்ஷைக்காரன் இவர்களிடத்தும் வரி வாங்கப்படாது.

பிறன் மனைவியிடத்தும் கன்னிகளிடத்தும் போகின்ற புத்தியில்லாத சிறுவர்களைத் தண்டிக்கவேண்டும். இதை மீளவுஞ்செய்வாராயின், அவயவங்களைக்குறைத்துச்சொத்துக்களைப்பறிமுதல்செய்து அவரை ஊரைவிட்டுத்துரத்தவேண்டும். ஆரியன் சூத்திரமாதுடன் சேர்ந்தால் அவனை ஊருக்குப் புறம்பே யோட்டவேண்டும். சூத்திரன் ஆரியமாதுடன் புணர்ந்தால் அவனைக்கொலைசெய்யவேண்டும். தன்னினத்திலுள்ள பிறன்மனையாளோடு புணர்ந்தால் அவன் நாவில் முதல் தரமானால் காற்கூறு அறுக்கவேண்டும்; மீளவுஞ்செய்யின் முழுமையும் அறுக்கவேண்டும்.

சூத்திரன் சற்கருமமுள்ள ஆரியனை வைதாலும், அவனுடன் சமமாக வீதியில் இருந்தாலும், கட்டிலிலாவது தரையிலாவது சமமாக இருந்தாலும், அவனைக்கோலைக்கொண்டு ஓச்சவேண்டும். கொலை, திருட்டு, பிறன் நிலத்தையபகரித்தல், பிறன் மனையாளைப் புணர்தல் ஆகிய இவைகளைச் சூத்திரன் செய்யின், அவனைக் கொலைசெய்யவேண்டும். அந்தணன் செய்யின் அவன் கண்ணைப்பறிக்க வேண்டும், இவையெல்லாம் அந்தணர் சாதியினை அக்காலத்தில் உயர்த்துகின்றன.

### ஆபஸ்தம்ப சமயாசார சூத்திரம்.

இது கிருஷ்ண யசுர்வேதத்தைச் சேர்ந்ததாம்.

இதில் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென நான்கு வருணங்களுளவென்றும், அவற்றுள் உபநயனாதி கருமங்கள் முதன்மூன்று வருணத்தாருக்கே உரியனவென்றும், தோற்றுகின்றன். பிரம க்ஷத்திரிய வைசிய பாலியர்களுக்கு உபநயனகருமங்களின் காலவரையறையைக்கூறுகிறது. ஆனால் சூத்திரனுக்கு இன்னவயதில் செய்யவேண்டுமென்பதைக்கூறவில்லை. சூத்திரனை வரையறுத்து நீக்கவுமில்லை. இவன் ஊழியப்பிறப்பினனென்றாவது, அல்லது மற்ற ஜாதியிற்சேர்ந்தவனென்றாவதுகூறவில்லை. தரும சூத்திரங்களுள் தருமசாஸ்தி

ரத்திற் கூறியபடியே இவன் இழிவுபடுத்தப்பட்டிருக்கிறான். அந்தணனுக்கு ஒருவிதமாகவும், சூத்திரனுக்கு ஒருவிதமாகவும், தண்டனை கூறப்படுகின்றது. எப்படியெனின்? முதன் மூவரும் சூத்திரமாதைப்புணர்ந்தால் தண்டனை அவரை ஊரைவிட்டு ஓட்டுவதாம். சூத்திரன் முதன் மூவரது மாதரைப் புணர்ந்தால் அவனுக்குத் தண்டனை கொலையேயாம். சூத்திரன் கௌரவமுள்ள முதல் மூன்றுவருணத்தாரை வைதால் அவனதுநாக்கை யறுத்துவிடவேண்டும். அவன் அவர்களுக்கு மரியாதையுண்டாக்கும்படி தூரத்திலிராவிட்டால் அவனை யடிக்கவேண்டும். கொலை, களவு கொள்ளைசெய்த சூத்திரனைக் கொன்றுவிடவேண்டியது. அந்தணன் இவ்வித குற்றஞ்செய்யின், அவன் கண்ணைப் பறித்துவிடவேண்டும் என்பனவாம். சூத்திரருக்கும் ஏனைய வருணத்தாருக்கும் இவ்வித வித்தியாசங்களை ஆபஸ்தம்பர் குறித்தாலும், சூத்திரன் "தருமசாத்திரத்துக்குப் படிந்து" நடப்பானாகில் மறுபிறப்பில் வைசியனாவான். இவ்விதமாக வைசியன் நடப்பானாகில் க்ஷத்திரியனாவான். க்ஷத்திரியனடப்பானாகில் அந்தணனாவான். படிந்து நடவானாகில் அந்தணன் மறுபிறப்பில் க்ஷத்திரியனாகவும், க்ஷத்திரியன் வைசியனாகவும், வைசியன் சூத்திரனாகவும் பிறப்பான். இந்த ஆபஸ்தம்பத்தில் சூத்திரர்களுக்கு உபநயனாதி கருமங்கள்செய்ய அதிகாரமுண்டென்று கூறியிருப்பதாகப், பிற்காலத்தில் உண்டாகிய சங்கரகணபதியத்தில் கூறப்பட்டிருக்கிறது. இஃதல்லாமலும் இவர்களுக்குச் செய்யும் கிரியையில் வேதமந்திரங்கள் சொல்லக்கூடாதென்றும் நாமமந்திரங்கள் சொல்லலாமென்றுங் கூறப்படுகின்றன.

## ஆஸ்வலாயன ஸிரௌத சூத்திரம்.

இது இருக்குவேதத்தைச் சேர்ந்தது.

இதில் ஜாதியைப்பற்றினதொன்றுமில்லை. பிராஹ்மணங்களில் கூறும் பிராமணர்களின் கோத்திரமும் பிரவரைகளிலுள்ள ரிஷிமூலங்களும் கூறப்படுகின்றன. பிரவரை = அக்கினி ஹோத்திரத்திற்குரிய குறியாம்.

### ஆஸ்வலாயன கிருஹ்ய சூத்திரம்.

கிருஹ்யம் என்பது=வீட்டிற்குரியதாம்.

இதில் பாகயஞ்ஞம் பாகிப்பதில் சண்டாளனையும் மற்றச்செந்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. பாகயஞ்ஞம்=சமைத்தசோறு. அன்னத்தை நாய் சண்டாளர் பைசாசர் இறந்தவர்கள் காகங்கள் இவர்களுக்காகப் பூமியில் இடவேண்டும்.

முதன் மூன்றுவருணத்தாருக்கும் உபநயனத்திற்குமுன் நடக்கவேண்டியகருமங்கள் உபநிஷத்தில் கூறப்பட்டிருக்கின்றன. அவைவருமாறு:—

கர்ப்பாலம்பனம், புஞ்சவனம், அநவலோபனம் ; இவை கருப்பமான மூன்றுமாதம் செய்யவேண்டும். சீமந்தம் நான்காவது மாதம், ஜாதகருமம் பிறந்தவுடன், அன்னப்பிராசனம் பிறந்த ஆறுமாதம், சௌளம் மூன்றும் ஆண்டு செய்யவேண்டும். உபநயனம் அந்தணருக்கு 8, க்ஷத்திரியனுக்கு 11, வைசியனுக்கு 12-ஆவது ஆண்டிற் செய்யவேண்டும். இக்காலம் இரட்டிக்கிறவரையிலும் செய்யலாம். அதிகப்பட்டால் பதிதர்களாவார்கள். பால்யரூபங்கழிந்தவுடன் சமஸ்காரம் செய்வதில் (Burnt-offering) அக்கினியைப் பூசிக்குமிடத்து, அக்கினிக்கு அந்தணன் வாயாகவும் அரசன் தோளாகவும் வைசியன் வயிறாகவும் ஸ்திரீ அந்தரங்க ஸ்தானமாகவும் பூசிக்கவேண்டும்.

### மானவகற்பம்,

இது கிருஷ்ணயசுரில் கூறுகிற கிரியா சூத்திரம்.

இதில் ஜாதியைப்பற்றி ஒன்றுங்கூறவில்லை. ஹோமசேடங்களை அந்தணனே கொள்ளவேண்டும், அவை அரசன் வைசியனுக்காகாவாம். துவிஜத்துவம் முதன்மூவருள்ளும் மிசிரஜாதியரான சங்கரஜாதியர்கள் அநுஷ்டித்துவந்தபோதும் சூத்திரர்கள் செய்யப்படாதாம். வைதிகராயுள்ள அரசர்கள் அக்கினிஹோத்திரத்தை இருத்துவிசியாயுள்ள அந்தணரைக்

கொண்டுசெய்யவேண்டும். இதரவருணத்தாரிடஞ் சேவிக்கும் அந்தணன் அக்கினிஹோத்திரத்துக்காகாமென்று குமாரிலர் என்னும் வியாக்கியான கர்த்தர் கூறுகின்றார். ஆனிரைகாத்த ல் வர்த்தகம் கைத்தொழில் சித்திரவேலை காவற்றொழில் அதிக வட்டிவாங்குவது இவைகளைச்செய்யும் அந்தணனைச் சூத்திரனாகக்கொள்ளவேண்டுமென்று மனுஸ்மிருதியில் கூறப்பட்டிருக்கிறது. (8-ஆம் அத்தியாயம் 102-ஆவது சுலோகம்.)

## இரண்டாவது: அத்தியாயம் வருணோற்பத்தி.

இது=வருணம் அல்லது சாதி என்பதின்னதென்பதையும் அதன்தொகையையும், வகையையும் உற்பத்தியையும் அந்தந்தச்சாதிகளை விளக்குங் கருமங்களையுங் கூறுவதாம்.

வருணம் என்பதை ஜாதி குலம் இனம் வமிசம் வர்க்கம் வகையெனவுங்கூறலாம். இந்த வருணமென்னுஞ் சொல் இத்தேசத்து ஜனங்களுடைய பலவித வித்தியாசங்களைக் காட்டுகிறது.

வருண வித்தியாசங்களின் மூலத்தைமுதனூல் வழிநூலாகிய சுருதி ஸ்மிருதிகளால் அறியவேண்டும். இந்தவருணம் நான்கு வகுப்புடையதாம். இவ்வகுப்பினர் பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்பவர்களாம். இவர்களது மூலோற்பத்தியை விசாரிக்குமிடத்தில் செகத் கர்த்தாவாகிய பரமசிவனிடத்திலிருந்தே தோன்றியதாகத் தெரியவருகிறது. எங்ஙனமெனில்? பரமசிவனிடத்து விஷ்ணுவும் விஷ்ணுவினிடத்துப் பிரமனும் பிரமனிடத்து உலகத்திலுள்ள சகலஜீவர்களும் தோன்றினார்கள்.

இருக்குவேதம் 8-ஆவது அஷ்டகம்.

புருஷ சூக்தம்.

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌸𑍍𑌯𑌮𑍁𑌖𑌮𑌾𑌸𑍀𑌤𑍍 |
𑌬𑌾𑌹𑍂𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌃𑌕𑍃𑌤𑌃 |
𑌊𑌰𑍂𑌤𑌦𑌸𑍍𑌯𑌯𑌦𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑌃 |
𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂𑌶𑍂𑌦𑍍𑌰𑍋𑌅𑌜𑌾𑌯𑌤 ||

బ్రాహ్మణోఽస్యముఖమాసీత్ ।
బాహూరాజన్యఃకృతః ।
ఊరూతదస్యయద్వైశ్యః ।
పద్భ్యాగ్ంశూద్రోఅజాయత ॥

பிராஹ்ம ணோஸ்ய முகமாஸீத்
பாஹூ ராஜன்யஃ கிருதஃ
ஊருத தஸ்ய யத்வைஸ்யஃ
பத்பியாக்ம் ஸூத்ரோ அஜாயத ||

இ-ள். பிராமணர் பிரமத்தின் முகத்தினின்றும் க்ஷத்திரியர் தோளினின்றும் வைசியர் துடையினின்றும் சூத்திரர் பாதத்தினின்றும் உற்பத்தியானார்கள்.

மநு 10-ஆவது அத்தியாயம் 4-ஆவது, சுலோகம்.

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍋𑌵𑍈𑌶𑍍𑌯|
𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍋𑌵𑌰𑍍𑌣𑌾𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑌯𑌃 |
𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌏𑌕𑌜𑌾𑌤𑌿𑌸𑍍𑌤𑍁 |
𑌶𑍂𑌦𑍍𑌰𑍋𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌤𑍁𑌪𑌞𑍍𑌚𑌮𑌃 ||

బ్రాహ్మణఃక్షత్రియోవైశ్య।
స్త్రయోవర్ణాద్విజాతయః।
చతుర్థఏకజాతిస్తు।
శూద్రోనాస్తితుపంచమః॥

பிராஹ்மணஃ க்ஷத்திரியோ ஸ்வஸ்ய
ஸ்ரத் யோவர்ணு திவிஜாதயஃ ||
சதுர்த்த ஏகஜாதிஸ்து
ஸூத்ரோ நாஸ்திது பஞ்சமஃ ||

இ - ள். இந்நான்கு வருணத்துள் பிராஹ்மணன் க்ஷத்திரியன் வைசியன் இம்மூவரும் இரண்டுவிதமாகப் பிறப்பதனால் துவிஜ ஜாதிகளென்று சொல்லப்படுவார்கள். சூத்திரனுக்கு உபநயன முதலிய கருமமில்லாததனால் ஒருஜாதியாகவேயிருக்கிறான். இந்த நான்கு வருணத்தார் தவிர ஐந்தாவது வருணத்தார் கிடையாது.

துவிஜன் என்பவன் இரண்டாற் பிறந்தவன். எனவே பிறப்பாலும் தொழிலாலும் பிறந்தவன் என்றவாறும். இதற்கு உபநயனமுடையவன் என்பது கருத்து. இக்காரணக்குறியால் துவிஜர் என்பவர் அந்தணர் அரசர் வைசியருமாகிய மூவருமாம். దంతవిప్రాండజాద్విజాః தந்தவிப்பிராண்ட ஜாத்துவிஜாஃ=பல்லுகள், வேதியன், முட்டையிலிருந்து பிறக்கும் பறவைகள் முதலியன. (துவிஜர் = இருபிறப்பினையுடையவர்). வேதமோதல் அந்தணருக்கேயன்றி க்ஷத்திரிய வைசியருக்கும் விதிக்கப்பட்டிருத்தலின், துவிஜர் என்பது அரசர் வைசியருக்கும் உபலக்கணத்தால் கொள்ளப்பட்டதாம்.

௬ வருணமுண்டாயின வரலாறு.

மநு. 1-ஆவது அத்தியாயம் 32-ஆவது சுலோகம்.

பிரமா தன்னுடைய தேகத்தை இரண்டுகூறாக்கி ஒன்று ஸ்திரீயும் ஒன்று புருஷனுமாக்கி, அந்த ஸ்திரீயினிடத்தில் அந்தப் புருஷனாகிய தானே புணர்ந்து, விராட்புருஷனை யுண்டுபண்ணினார்.

1-33. அந்த விராட்டு தவஞ்செய்து சுவாயம்பு மநுவை யுண்டுபண்ணினார்.

1-34. சுவாயம்பு மநு தவஞ்செய்து பிரஜாபதிகளான பத்துப் பிரமரிஷிகளை யுண்டாக்கினார்.

3-198. அந்தப் பிரமரிஷிகளிடத்திலிருந்து பிதுர்க்கள் உண்டானார்கள். அந்தப் பிதுர்க்களிடமாகச் சதுர்வருணத் தாரு முண்டானார்கள்.

1-35. பத்துப் பிரமரிஷிகள் யாவரெனின்? மரீசி அத்திரி அங்கிரசு புலத்தியன் புலகன் கிரது பிரசேதசு வசிட்டன் பிருகு நாரதன் என்பவர்களாம். இவர்களுள்,

3-197-1. பிருகுவினிடத்தில் சோமபர்கள் என்ற பிதுர்க்களும் அந்தப் பிதுர்க்களினின்றும் பிராஹ்மணர்களுமுண்டானார்கள்.

2 ஆங்கிரசனிடத்து ஹவிர்ப்புக்குகள் என்ற பிதுர்க்களும் அவர்களினின்றும் க்ஷத்திரியர்களு முண்டானார்கள்.

3. புலத்தியரிடத்து ஆஜ்ஜியபர்களென்ற பிதுர்க்களும் அவர்களினின்றும் வைசியர்களு முண்டானார்கள்.

4. வசிஷ்டரிடத்துச் சுவாலிகள் என்ற பிதுர்க்களும் அவர்களிடத்துச் சூத்திரர்களு முண்டானார்கள்.

இதனால் அந்தணர் பிருகுவமிசத்தாரென்றும், க்ஷத்திரியர் ஆங்கிரச வமிசத்தாரென்றும், வைசியர் புலத்திய வமிசத்தாரென்றும், சூத்திரர் வசிட்ட வமிசத்தாரென்றும் வெளியாகின்றன. பிரமாவே உலகத்தைச் சிருட்டித்தார். அவர் அக்கினிசொரூபராக இருக்கிறார். அவர் தேவர்களுக்குப் பிரமனாயும், மனிதருக்குப் பிராஹ்மணனாயும், க்ஷத்திரியருக்கு க்ஷத்திரியனாயும், வைசியருக்கு வைசியனாயும், சூத்திரருக்குச் சூத்திரனாயுமிருக்கிறார் எனச் சுக்கிலயசுர்வேதம் சதபதப்பிராஹ்மணம் பிருஹதாரண்யவுபநிஷத்தில் கூறப்படுகின்றது.

## வருணங்களின் தாதுப்பொருள் விளக்கம்.

| வருணம். | தாது. | பொருள். | பதப்பிரயோகம். | திராவிடபதம். |
|---|---|---|---|---|
| பிராஹ்மணன் ... | பிரஃ ... | உச்சரித்தல் சத்தித்தல் ஓதல் ... | பிரஹஸ்பதி, பிராஹ்மணம், பிரஹ்மன், பிராமணன் ... | மறையோன், அந்தணன். |
| க்ஷத்திரியன் ... | க்ஷத்திரம் .. | வல்லபம், அதிகாரம்... | க்ஷத்திரம் க்ஷத் திரபதி க்ஷத்திரியன் ... | அரசன் உலகாள்பவன். |
| வைஸ்யன் ... | விஸ் ... | * பிரவேசிக்கிறது ... | வைசியன் வயலிற் பிரவேசிக்கிறவன் ... | † வேளாளன், பயிர் செய்வன். |
| ஸூத்திரன் ... | ஸூத் ... | சுத்திகரித்தல், வீடு கழுனிகளைச்சுத்தி செய்தல் ... | சூத்திரன் ... | ஏவலன், பணிசெய்வோன். |

* பிருகு வாக்கியம். He who quickly enters among (?) cattle, (this seems to be a play upon words, to connect the word Vaishya with the root Vish to enter) is addicted to agriculture, and acquisition, who is pure, and studies the Vedas—is called a Vaishya (vide page 270 Indian caste by Mr. Wilson.) ஆனிரையிலும் வயலிலும் விரைவிற் பிரவேசித்தல், பொருளீட்டல், சுத்தமாயிருத்தல், வேதமோதல் இவற்றைச் செய்பவன் எவனோ அவனே வைசியனாம்.

† மூன்றும் வருணத்தாருக்கு அறுதொழிலுரிமைநோக்கி ஆரியருள் வைசியரென்றும், திராவிடருள் வேளாளரென்றும் பெயர்கள் கொள்ளப்பட்டன. "வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்குந் தாளாளர்" என்ற திராவிடவேதப் பிரமாணத்தானு முணர்க. தாளாளர் வைசியரென்பதை நிகண்டு அகராதியிற் கண்டுணர்க.

## வருணத்தைப்பற்றிய ஞாயவாதிகளின் கருத்து.

1. சிருட்டியின் முதற்காலத்து எல்லாரும் ஒரேவிதமாக மனிதர்கள் என்றே இருந்தார்கள்.

2. அம்மனிதர்களுள் வலுத்தவன் (*a*) ஆள்வோனும் இளைத்தவன் (*b*) ஆளப்படுபவனும் ஆக இரண்டு பிரிவாயினார்கள்.

3. (*a*) அவ்வாள்வோருள், கல்வி ஞானத்தால் ஆளுதற்குரிய சட்டங்களை உண்டாக்குபவர் அந்தணரும், அச்சட்டத்தின்படி அதிகாரஞ் செலுத்துபவர் அரசருமானார்கள்.

4. (*b*) முன்னர்க்கூறிய ஆளப்படுவோர்குடிகளானார்கள்.

5. இக்குடிகளுள்ளும், விவேகியாயுள்ளவர்கள் உயர்குடிகளும், அறிவிற்குறைந்துள்ளார் குடிமக்களுமானார்கள்.

6. அவ்வுயர் குடிகளே *வைசியர்களாம்.

7. குடிமக்கள் சூத்திரர்களாம்.

இந்தியாவிலுள்ள வருணம் நான்கனுள் முதன் மூவரும் இருபிறப்பினரென்றும், நான்காவார் ஒருபிறப்பினரென்றுங் கூறுவர். அவர்களுள், இருபிறப்பினர்கள் = கர்த்தர்கள் (Lords). ஒருபிறப்பினர்=சாமானியராம். இருபிறப்பினருள்,

### LORDS OF PRAYERS.

அந்தணன்—வேதகர்த்தா, வேதாதிகாரி அல்லதுவேதியன், எனப் பலபெயரால் விளங்குவன்.

---

* வைசியரே சுதந்தரத்தொழிலார். ஏனையோர் அசுதந்தரதரினராம். எங்ஙனமெனில்? கிருஷி வாணிகம் கோ சம்ரக்ஷணை இம்மூன்றுமே சுதந்தரத்தொழில்களாம். இவற்றாலுண்டான பொருள்களினின்றும் க்ஷத்திரியன் வரி இறைபெற்று அரசு செலுத்துகிறான். அந்தணர் தானதருமம் பெற்று வேதமோதிச் சீவிக்கிறார்கள். பதினெண் குடிமக்களும் தொழில்புரிந்து சீவிக்கிறார்கள்.

## LORDS OF KINGDOMS.

அரசன்-இராஜன், இராஜ்யாதிபதி; க்ஷத்திரபதி, விஷஸ்பதி நரபதி பூபதி இவை முதலிய பெயரால் விளங்குவன்.

## LAND LORDS.

வைசியன்—க்ஷேத்திரபதி நிலபதி நிலகர்த்தன் காணியாளன் என இவை முதலிய பலபெயரால் விளங்குவன்.

*நிறைக்குரிய வந்தணர்கள் நெறிபரவ மனுவிளங்கத்*
*"தறைக்குரிய காராளர்" தமதுவரம் பினிதோங்க*
*மறைக்குரிய பூமனையும் வண்டுளபத் தாமனையும்*
*பிறைக்குரிய நெடுஞ்சடிலப் பெம்மானை யும்பணிவாம்.*

என்ற கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் திருவாக்கானுமுணர்க. இதனால் வேதத்திற்கும் இராஜ்யத்திற்கும் (அல்லது அதிகாரத்திற்கும்) நிலத்திற்கும் தலைவராவார். பிரம-க்ஷத்திரிய வைசியரெனக்கூறப்பட்டது. இம்முறைபற்றியே தெய்வப்புலமையுடைய ஔவையார்,

*சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கா*
*னீதிவழுவா நெறிமுறையின்—மேதினியி*
*லிட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்*
*பட்டாங்கி லுள்ள படி.*

என்னுஞ் செய்யுளிற் சாதி இரண்டெனக்கூறினர். மேற்கூறிய செய்யுளில் இட்டார் பெரியோரென்றது இடுதற்குரிய இருபிறப்பாளராகிய முதன் மூன்றுவருணத்தாரையும், இடாதார் இழிகுலத்தோரென்றது இடுதற்கு அதிகாரமில்லாத ஒருபிறப்பினராகிய சூத்திரரையுங் குறித்தனவாம்.

தொழிலினுளெல்லாம் சிறந்துள்ளது யுத்தஞ்செய்தல், வேளாண்மை, கடவுள் வழிபாடு என மூன்றும்.

அவற்றுள், யுத்தஞ் செய்தலில் வெற்றிபெற்றால் அதிகாரமும் செல்வாக்குமுண்டாம். அதைச்செய்பவன் வேதத்தில் இராஜன் எனக்கூறப்படுவான்.

யுத்தப்பயிற்சி யில்லாதார் அடக்கமுடையாராம் அவர்கள் வைசியர் அல்லது குடிகள் எனப்படுவர். இவர்கள் படைகளின் செலவுக்குப் பொருளுதவி செய்பவர்களாம்.

கடவுளை வழிபடுமார்க்கத்தை யுடையாரும், கற்பிப்பவரும் அந்தணராம். கடவுள் வழிபாட்டினாலேதான் கிருஷியினால் உலகு செழித்தலும், படையினால் வெற்றியடைதலுமாம். அதனால் அரசருக்கும், வைசியருக்கும் முதன்மையாயுள்ளவர் அந்தணராம்.

மநு முதல் அத்தியாயம், 87-ஆவது சுலோகம்.

𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 ।
𑌗𑍁𑌪𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌸 𑌮𑌹𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 ।
𑌮𑍁𑌖𑌬𑌾𑌹𑍂𑌰𑍁𑌪𑌜𑍍𑌜𑌾𑌨𑌾𑌂 ।
𑌪𑍃𑌥𑌕𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍍 ॥

సర్వస్యాస్య తు సర్గస్య గుప్త్యర్థం స మహాద్యుతిః ।
ముఖబాహూరుపజ్జానాం పృథక్కర్మాణ్యకల్పయత్ ॥

ஸர்வஸ்யாஸ்யது ஸர்க்கஸ்ய-குப்தியர்த்தம் ஸமஹாத்தியுதி:
முகபாஹூருபஜ்ஜாநாம்-பிரதக்கர்மாண்யகல்பயது.

இ-ள். அப்பிரமாவானவர் இவ்வுலகத்தைக் காக்கும்படிக்குத் தன் முகம், தோள், தொடை, பாதம், இவைகளினின்றுமுண்டான பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வருணத்தாருக்கு இம்மைக்குமறுமைக்குமுபயோகமான கருமங்களைத் தனித்தனியாக விதித்தார். எ-று.

88-ஆவது சுலோகம்.

**பிராஹ்மண கருமம்.**

𑌅𑌧𑍍𑌯𑌾𑌪𑌨𑌮𑌧𑍍𑌯𑌯𑌨𑌂 ।
𑌯𑌜𑌨𑌂 𑌯𑌾𑌜𑌨𑌂 𑌤𑌥𑌾 ।
𑌦𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌚𑍈𑌵 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑌾𑌮𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍍 ॥

అధ్యాపనంచాధ్యయనం యజనంయాజనంతథా ।
దానంప్రతిగ్రహంచైవ బ్రాహ్మణానామకల్పయేత్ ॥

அத்யா பனஞ் சாத்ய யநம்-யஜநம் யாஜநந் ததா
தாநம்பிரதிக்கிரஹஞ்சைவ - பிராஹ்மணாநாமகல்பயேது.

இ-ள். பிராமணனுக்கு-வேதம் ஓதல், ஓதுவித்தல், யாகஞ்செய்தல், செய்வித்தல், தானங்கொடுத்தல், வாங்குதல் ஆகிய ஆறுதொழிலேயும் விதித்தார். எ-று.

89-ஆவது சுலோகம்.

**க்ஷத்திரிய கருமம்.**

மநு முதல் அத்தியாயம், 87-ஆவது சுலோகம்.

𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌂𑌰𑌕𑍍𑌷𑌣𑌂𑌦𑌾𑌨𑌮𑌿𑌜𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌮𑍇𑌵𑌚 ।
𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑌸𑌮𑌾𑌸𑌤𑌃 ॥

ప్రజానాంరక్షణందాన మిజ్యాధ్యయనమేవచ ।
విషయేష్వప్రసక్తిశ్చ క్షత్రియస్యసమాసతః॥

பிரஜாநாம் ரக்ஷணந்தாந - மிஜ்யாத்யயநமேவச
விஷயேஷ்வ பிரஸக்திஸ்ச - க்ஷத்திரியஸ்ய ஸமாஸத :

இ-ள். க்ஷத்திரியனுக்கு-பிரஜைகளைக்காத்தல், தானங்கொடுத்தல், வேதம் ஓதல், பாட்டு கூத்து ஸ்திரீ முதலிய விஷயங்களில் மனஞ்செல்லாதடக்கல் இந்நான்கையும் விதித்தார். யாகாதிகருமங்களும் அவனுக்குண்டு. எ-று.

90-ஆவது சுலோகம்.

**வைசிய கருமம்.**

𑌪𑌶𑍂𑌨𑌾𑌂𑌰𑌕𑍍𑌷𑌣𑌂𑌦𑌾𑌨𑌮𑌿𑌜𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌮𑍇𑌵𑌚 ।
𑌵𑌣𑌿𑌕𑍍𑌪𑌥𑌂𑌕𑍁𑌸𑍀𑌦𑌂𑌚 𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯𑌕𑍃𑌷𑌿𑌮𑍇𑌵𑌚 ॥

పశూనాంరక్షణందాన మిజ్యాధ్యయనమేవచ ।
వణిక్పథంకుసీదంచవైశ్యస్యకృషిమేవచ॥

பஸூநாம் ரக்ஷணந்தாந - மிஜ்யாத் யயநமேவச
வணிக்பதங் குஸீதஞ்ச - வைஸ்யஸ்ய கிருஷிமேவச.

இ-ள். வைசியனுக்குப் - பசுக்காத்தல், தானங்கொடுத்தல், வேதமோதல், சலத்திலும் பூமியிலும் உண்டான இரத்தினம் நெல் முதலிய வியாபாரஞ்செய்தல், வட்டி வாங்குதல், பயிரிடுதல் ஆகிய இவ்வாறையும் விதித்தார். எ-று.

91-ஆவது சுலோகம்.

**சூத்திரகருமம்.**

ஏகமேவ து ஶூத்ரஸ்ய ப்ரபு⁴꞉ கர்ம ஸமாதி³ஶத் ।
ஏதேஷாமேவ வர்ணாநாம் ஶுஶ்ரூஷாமநஸூயயா ॥

ఏకమేవతుశూద్రస్య ప్రభుఃకర్మసమాదిశత్ ।
ఏతేషామేవవర్ణానాం శుశ్రూషామనసూయయా ॥

ஏகமேவது ஸூத்ரஸ்ய - பிரபுகர்மஸமாதிஸத்
ஏதேஷா மேவவர்ணாநாம் - ஸுஸ்ருஷா மநஸூயயா.

இ-ள். சூத்திரனுக்கு - இந்த மூன்று வருணத்தாருக்கும் பொறுமையின்றிப் பணிசெய்வதொன்றையே முக்கியமான தருமமாக விதித்தார் எ-று.

11-ஆவது அத்தியாயம், 235-ஆவது சுலோகம்.

**சாதுர்வருணத்தார் தவங்கள்.**

ப்ராஹ்மணஸ்ய தபோ ஜ்ஞாநம் ।
தப꞉ க்ஷத்ரஸ்ய ரக்ஷணம் ।
வைஶ்யஸ்ய து தபோ வார்த்தா
தப꞉ ஶூத்ரஸ்ய ஸேவநம் ॥

బ్రాహ్మణస్యతపోజ్ఞానం తపఃక్షత్రస్యరక్షణం ।
వైశ్యస్యతుతపోవార్తా తపశ్శూద్రస్యసేవనం ॥

ப்ராஹ்மணஸ்ய தபோக்ஞாநம் - தப:க்ஷத்ரஸ்யரக்ஷணம்
வைஸ்யஸ்யது தபோவார்த்தா - தபஸூத்ரஸ்யஸேவநம்.

இ-ள். பிராமணனுக்கு-ஞானமும், க்ஷத்திரியனுக்குப் பிரஜைகளைக் காத்தலும், வைசியனுக்குப் பயிர் வர்த்தகங்களும், சூத்திரனுக்குப் பணிவிடையுந் தவமாம் எ-று. பணிவிடை என்றதைக் குல்லூகபட்டர் பிராமணப்பணிவிடையென்றார்.

## MACNAUGHTEN'S HINDU LAW.

### Vol. I, Page 248.

"The meaning is, he (the Judge) shall abjure a Brahmin by saying, if you speak falsely, your truth will be destroyed; a Kshatria by saying, your horse elephant and weapons will become useless: a Vaisya your cattle, seeds, and gold will be unproductive: a Sudra, he shall abjure by saying, if yon speak falsely, all sins will be on your head."

இ-ள். மெக்நாட்டன் துரையாற்செய்யப்பட்ட ஹிந்து நியாயநூல் முதலாவது புத்தகம் 248-ஆவது பக்கத்தில்.

நியாயாதிபதி, பிரமாணம் வாங்கும்போது பிராமணனிடத்தில் நீ அசத்தியங் கூறுவையானால் உன்னுடைய உண்மை யழிந்துவிடுமென்றும், க்ஷத்திரியனிடத்தில் உன்னுடைய குதிரையும், யானையும், ஆயுதங்களும் உனக்குப்பயன்படாவென்றும், வைசியனிடத்தில் உன்னுடைய ஆனிரையும், தானியங்களும், பொன்னும் உனக்குப் பலனாகாவென்றும், சூத்திரனிடத்தில் சகல பாவங்களையும் நீ சுமக்கக் கடவாயென்றும், சொல்லவேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது.

PAGE 12, Note.

"In the Jatimala or Garland of classes, the origin of the principal castes is given as follows:—

As regards the regular means of subsistence for the above castes—those for a Bramana are assisting to sacrifice, teaching the Vedas, and receiving gifts; for a Vaisya merchandise, attending on cattle, and agriculture; for a Sudra, servile attendance on the higher classes."

ஜாதிமாலை 12-ஆவது பக்கத்தில் உத்கிருஷ்டசாதிகளின் உற்பத்தியைக்குறித்துச் சொல்லியிருக்கிறதாவது

பிராமணனுக்கு யாகஞ்செய்வித்தல், வேதம் ஓதுவித்தல், தானம் வாங்குதலுமாம். வைசியனுக்கு வியாபாரஞ்செய்தல், பசுக்காத்தல், பயிர்செய்தலுமாம். சூத்திரனுக்கு மேற்குலத்தாருக்குப் பணிசெய்தலாம் என்பது.

THE MODERN ORATOR EDMUND BURKE.

PAGE 806.

"These people (the Hindus) my lords, from the oldest time, have been distributed into various orders, all hereditary, which are called castes, of which four are the most remarkable; the Brahmins, the Kshatrias, the Vaisyas, and the Sudras; the first, the priests, to whom honors almost divine are paid; the second, the military order; the third, husbandmen, and merchants; the last, the menial, or servile class or caste."

நிகழ்கால சபாப்பிரசங்கியாகிய எட்மண்டு பர்க்கு துரையாற் செய்யப்பட்ட கிரந்தத்தில் 806-ஆவது பக்கத்தில்.

எனதாண்டவர்களே, ஹிந்துக்கள் தொன்றுதொட்டுப் பரம்பரையாய்வரப்பட்ட அநேகஜாதியர்களாக வகுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுள் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்

திராகிய நால்வரும் உத்கிருஷ்டர்களாம். அவருள், முதல்வ குப்பினர் ஆசாரியர்களாம். அவர்களுக்குச் சற்றேறக்குறை யத் தேவர்களுக்குச் சமானமாக மரியாதை செய்கிறார்கள் இரண்டாவதார் யுத்தரங்கத்தாராம். மூன்றாவதார் உழவின ர்களும், வர்த்தகர்களுமாம். ஈற்றினர் ஊழியஞ்செய்பவர்க ளாமென்று சொல்லியிருக்கிறது.

THE MITAKSHARA, CHR. I. S. I.
PAGE 369-371.

"Let a Brahmin acquire wealth by acceptance or the like; a Kshatria by victory and so forth; and Vaisya by agriculture, &c."

"The acceptance of alms, as well as other prescribod modes for a Brahmin; conquest and similar means for a Kshatria; husbandry and the like for a Vaisya; and service and the rest for a Sudra."

"What is gained or earned by agriculture, keeping of cattle, (traffic), and so forth, is for a Vaisya peculiar; snd so is, for a Sudra, that which is earned in the form of wages, by obedience to the regenerate and by similar means."

மிதாக்ஷரம் - முதலாவது அத்தியாயம் முதற்பிரிவு
369-ஆவது முதல் 371-ஆவது பக்கம் வரையும்.

பிராமணன் திரவியத்தைப் பிறர்கொடுக்கப் பெறுதன் முதலியவற்றாலும், க்ஷத்திரியன் ஜயமுதலியவற்றாலும், வை சியன் பயிர் முதலியவற்றாலும், சம்பாதிக்கக்கடவன்.

பிக்ஷையை யங்கீகாரஞ்செய்தலும்,குறிக்கப்பட்ட மற்ற மார்க்கங்களும் பிராமணனுக்கும், வெற்றிபெறுதலும் இது போல்வனவும் க்ஷத்திரியனுக்கும், பயிர் செய்தலும் இதுபோ ல்வனவும் வைசியனுக்கும், ஊழிய முதலியவை சூத்திரனுக் குமாகவிதிக்கப்பட்டது.

பயிரிடுதலாலும் பசுக்காத்தலாலும் வர்த்தக முதலிய வற்றாலும் ஆர்ச்சிக்கப்பட்டது வைசியனுக்கு முக்கியமான தாம். கூலியினாலும் இருபிறப்பினருக்கு ஊழிய முதலியவற் றாலும் ஆர்ச்சிக்கப்பட்டது சூத்திரனுக்குரியதாம்.

CALCUTTA REVIEW, No. 29, Vol. 15.

"The commentator says, that it was want of a community to develope the resources of the earth, and to create the treasures, of which (by anticipation) the Kshatrias were constituted the guardians, that continued to disturb the Creator's mind. Accordingly he made a third order, the Vaisyas."

"The natural duties of the Brahmins are subjugation of the mind and body austerity, sanctity. &c. Those of the Kshatrias are heroism, &c. Those of the Vaisyas are commerce, agriculture, and tending on cattle. The duty of the Sudra is to serve the other orders."

கல்கத்தா ரிவியூ என்னும் பத்திரிகை 15-ஆவது புத்தகம் 29-ஆவது இலக்கம்.

முன்னரே க்ஷத்திரியர்களைக் காவலராக ஏற்படுத்தப் பட்ட பூமியிலுள்ள பொருள்களை வெளிப்படுத்தற்கும், திர வியங்களைப் பாதுகாத்தற்கும், மனிதர்களுள் ஒரு தொகுதி வேண்டியிருத்தலால் அது கடவுளுடைய மனத்தைக்கவலைப் படுத்திக்கொண்டிருந்தது. ஆகையால், அவர் மூன்றும் வகு ப்பினராக வைசியர்களைப் படைத்தார் என்றுரையாசிரியர் கள் கூறுகின்றார்கள்.

பிராமணர்களுடைய இயற்கைத்தொழிலாவது - தேகே ந்திரியங்களையடக்கலும், தவம்புரிதலும், ஒழுக்கமுமாம். க்ஷத்திரியனுக்கு - வீரத்தன்மையும்; வைசியனுக்கு - வியாபா ரமும், பூவிவசாயமும், ஆனிரைகாத்தலும், சூத்திரனுக்கு - மேன் மூவருக்கு சேவல்புரிதலுமாம்.

## INDIA (BY REVD. TREVOR.)

PARA. 39.

It might indeed, almost be thought that some such allegory was present to the mind of the Hindu writer, in which the priest whose lips are to keep knowledge, would naturally spring from the head; the class which is to bear the sword, from the arm; the mercantile and agricultural body, who are the stretngth of the community, from the loins; and the servile classes from the feet of the Creator.

## திரிவர் பாதிரியாரால் எழுதிய இந்திய சரித்திரம்.

39-ஆவது பிரிவு.

ஹிந்து நூலாசிரியர்கள் சில அந்தரார்த்தங்களை மனத்திற்கொண்டு, வேதஞானத்தையுணர்த்தும் அதரங்களையுடைய ஆசிரிய வகுப்பினர்களை, சிருட்டி கருத்தா தமது சிரத்திலும், ஆயுதங்களைத் தரிக்கும் வகுப்பினர்களை புஜத்திலும், சமுதாயத்தில் யாவருக்கும் உறுதியைத் தரத்தக்க வர்த்தகர் பயிரிடுவோர்களைத் தொடையிலும், ஊழியவகுப்பினர்களைப் பாதத்திலும், பிறப்பித்ததாகக் கூறியது உண்மையானதென்றே நினைக்கவேண்டியதாயிருக்கின்றது.

## INDIA ITS NATIVES AND MISSIONS (By REVD. TREVOR.)

PAGE 113.

Corresponding with this origin, to the first was assigned the office of teaching and guiding men; to the second of ruling and bearing arms; to the third the pursuits of commerce and agriculture; and to the last, the service of the other three.

The word Brahmin is derived from Brahma, signifying prayer, or sacred learning; in like manner the other castes have been referred to an etymology, importing respectively, protection, agriculture, and service.

இந்தியாவின் சுதேசிகளையும் தூதர்களையும் பற்றித் திரிவரென்னும் பாதிரியாராற் செய்யப்பட்ட ஹிந்துஸ்த்தான் சரித்திரம் - 113-ஆவது பக்கம்.

இந்தப் பூர்வோற்பத்திக்கு ஒற்றுமையாகவே, மனிதர்களுக்குப் போதித்தலும் வழிகாட்டலும் முதல் வகுப்பினர்களுக்கும், ஆளுதலும் ஆயுதந் தாங்குதலும் இரண்டாம் வகுப்பினர்களுக்கும் வர்த்தகமும் விவசாயமும் மூன்றும் வகுப்பினர்களுக்கும், மேல் மூவருக்கும் பணிசெய்தல் ஈற்று வகுப்பினர்களுக்கும் நியமிக்கப்பட்டன.

பிராமணமென்பது பிரமசப்தத்திலுண்டாயது. அதற்கு ஸ்தோத்திரம் அல்லது தேவஸ்மரணை என்றருத்தமாம். இம்முறையே ஏனைய சாதிப்பெயர்களுக்குஞ், சொல்லின், விவகாரப்படி, சம்ரக்ஷணம், விவசாயம், ஊழியமென்னும் பொருளைத்தருகின்றன.

## RICKARD'S INDIA.

### Vol. I.

There are four great classes, Brahmins, Kshatrias, Vaisyas, and Sudras.

### Page 6.

The first is the sacerdotal class; the second, military, or appointed to defend the people; the business of the third, commerce, lending at interest, agriculture, and keeping herds of cattle; and of the fourth, to serve the higher classes.

### Page 9.

Miller in his historical view of the English Government, observes that this distribution of the people into clergy, military, husbandmen, and artificers, is to be found everywhere; and the establishment of the four great castes in the

country of Hindustan is precisely of the same nature. The classes of clergy, military husbandmen and craftsmen, are all that is required for the beginnings of civilized life.

ரிக்கர்ட்ஸ் துரையாற் செய்யப்பட்ட இந்திய சரித்திரம்.

முதற்புத்தகம்.

பிரம, க்ஷத்திரிய, வைசிய சூத்திரரென 4-பெரும் வகுப்புகளிருக்கின்றன.

6-ஆவது பக்கம்.

முதல் வகுப்பினர் ஆசிரியர்கள், இரண்டாம் வகுப்பினர் வீரர்கள் அல்லது மனிதர்களைப் பாதுகாத்தற்காக ஏற்படுத்தப்பட்டவர்கள், மூன்றாம்வகுப்பினர் தொழில், வர்த்தகம், வட்டிக்குக் கொடுத்தல், விவசாயம், ஆனிரைகாத்தல் செய்பவர். நான்காம்வகுப்பினர் உயர்வகுப்பினர்க்கு ஊழியஞ்செய்பவர்.

9-ஆவது பக்கம்.

மில்லர்துரை தனது சரித்திரத்தில், இங்கிலீஷ் துரைத்தனத்தைப்பற்றிக்கூறவந்த இடத்தில், ஆசிரியர்கள், வீரர்கள், பயிரிடுங்குடிகள், கம்மாளர் முதலிய தொழிலாளிகள் என 4-வகையான மனிதர்களின் பாகுபாடானது எல்லாவிடங்களிலுங் காணலாம். ஹிந்துஸ்தானத்திலுமிந்தப்பெரிய 4-வகையான சாதி ஏற்பாடானது அதேபிரகாரமாகவிருக்கின்றது. நாகரிகமாக வாழத்தொடங்கிய முதற்காலத்திற்கே, ஆசிரியர்கள், வீரர்கள், பயிரிடுங்குடிகள், கம்மியர்கள் முதலியவர்களுமாகிய, இந்த 4-வகுப்புகளும் வேண்டுமானவைகளா யிருக்கின்றன.

## WEBSTER'S DICTIONARY.

CASTE.

In Hindustan, a name given by the Portuguese to the several classes into which society is divided, with fixed

occupations, which have come down from the earliest ages. The original castes are four:—the Brahmins or sacred order; the Kshatrias or soldiers and rulers; the Vaisyas or husbandmen and merchants; and Sudras or labourers and mechanics.

வெப்ஸ்டர் அகராதி—ஜாதி.

ஹிந்துஸ்தானத்தில் பூர்வந்தொடங்கிப் பரம்பரைபற்றி வந்ததொழில்களிற் பிரிந்தகூட்டமாகிய ஜாதியென்னும்பாகுபாட்டிற்கு போர்ட்சுகீஸ் தேசத்தாரால் "கியாஸ்ட்டு" என்று பெயர் கொடுக்கப்பட்டது. பூர்வீகமான ஜாதிகள் நான்காம்: அவற்றுள், 1. பிராமணர்கள் அல்லது பரமார்த்தமானவர்கள்—2. க்ஷத்திரியர்கள் - வீரர்கள்-அல்லது ஆள்பவர்கள்—3. வைசியர்கள்-பயிரிடுங் குடிகள்-வர்த்தகர்கள்—4. சூத்திரர்கள் - வேலைக்காரர்கள் - கம்மாளர்கள் என்பவர்களாம்.

## TYTLERS GENERAL HISTORY.
### Page 273.

The whole body of the people of India was divided into four orders or castes. The highest that of the Brahmins, was devoted to religion and the cultivation of the sciences; to the second belonged the preservation of the state —they were its sovereigns and its magistrates in peace, and its soldiers in war; the third were the husbandmen and merchants; and the fourth, the artisans, labourers, and servants. These are inseparable distinctions and descend from generation to generation. Moreover the individuals of each class follow invaraiably the professions of their fore-fathers.

A system of feudalism prevailed in India; the rights to lands flow from the sovereign, to whom a certain duty is payable by the class of husbandmen, who transmit their possessions to their children under the same tenure.

## டைட்லர் துரை பொதுச் சரித்திரம்.

### பக்கம் 273.

இந்தியா தேசத்தின் ஜனங்கள் முழுமையும் 4-வகுப்பு அல்லது சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றார்கள். எல்லாரி லும் உயர்ந்தவர்கள் பிராமணர்கள். இவர்கள் சமயாசாரங்க ளுக்குஞ் சாஸ்திரப்பயிற்சிகளுக்கும் உரியவர்களாக இருக்கி ரூர்கள்—துவிதர்கள் - இராஜாங்க சம்ரக்ஷகராக இருக்கிரு ர்கள் - இவர்கள் அரசர்களாகவும், நியாயாதிபதிகளாகவும், யுத்தத்தில் வீரர்களாகவு மிருக்கிறார்கள்—திரிதியர்கள் பயி ரிடுங் குடிகளும் - வர்த்தகர்களுமாம்—சதுர்த்தர்கள் கம்மாளர் கள் - பண்ணையாள்கள் தொழிலாளிகளுமாம். இவை நீக்கப் படாத குறிகளாகவும் - வம்ச பரம்பரையாகவும் வருகின்றன. அன்றியும், ஒவ்வொரு வகுப்பினர்களும், தங்கள் முன்னோர் கள் செய்தொழிலையே மாறுபாடின்றித் தொடர்ந்து வருகி றார்கள்.

பரம்பரைப் பாத்தியதை இந்தியா தேசத்தில் எப்போது ம் பரவியிருக்கின்றது. நிலப்பாத்தியதை அரசனிடத் திருந்து வருகின்றது. பயிரிடுங் குடிகள் அவ்வரசனுக்கு நிலவரி கட் டிக் காணியாட்சியின் பாத்தியதையைத் தங்கள் வழிவரும் பிள்ளைகளுக்குச் செலுத்திவருகிறார்கள்.

## THE VISHNU PURANA, BY H. H. WILSON.

### Page 96.

The Vayu Purana states that the castes were now first divided according to their occupations having, indeed, previously stated that there was no such distinction in the Kreta age: Brahma now appointed those who were robust and violent to be Kshatrias, to protect the rest; those who were poor and pious, he made Brahmins; those who were of less power but industrious, and addicted to cultivate the ground, he made Vaisyas; whilst the feeble and poor of

spirit were constituted Sudras; and he assigned them their several occupations, to prevent that interference with one another which had occurred as long as they recognised no duties peculiar to castes.

விஷ்ணு புராணம். ஹௌச்சு, ஹௌச்சு.
உல்ஸன் துரையாற் செய்த மொழிபெயர்ப்பு
96-ஆவது பக்கத்தில்.

ஜாதிகளானவை முதலில் தொழின் முறைமைப்படி பிரிக்கப்பட்டனவென்று வாயுபுராணத்திற் கூறப்பட்டிருக்கின்றது. கிரேதாயுகத்தில் உண்மையாகவே இப்படிப்பட்ட வித்தியாசங்களில்லையென்று முன்னர்க்கூறி, இப்போது பிரமாவானவர் பலமும் உக்கிரமுமுள்ளவர்களை மற்றவர்களைக் காப்பாற்றும்பொருட்டு க்ஷத்திரியர்களாக நியமித்தார். ஏழைகளாயும் தேவதார்த்தியுள்ளவர்களாயு மிருக்கப்பட்டவர்களைப் பிராமணர்களாகவும், கொஞ்ச வலியுடையவர்களையும் உழைப்புடையவர்களையும், பூமியை உழுது பயிர் செய்கிறவர்களையும், வைசியர்களாகவும், பலஹீனமுந் தைரியக் குறைவுமுடையவர்களைச் சூத்திரர்களாகவும் ஏற்படுத்தினர். சாதியுரிமைத் தொழிலில்லாமையால் நெடுங்காலமாக ஒருவருக்கொருவர் கலப்பிலிருந்ததைத் தடுக்கும்படி பல தொழில்களை யவரவர்களுக்குப் பிரித்து நியமித்தார் என்று கூறப்பட்டிருக்கிறது.

ESSAYS ON THE RELIGION, &c.
PHILOSOPHY OF THE HINDUS
BY COLEBROOKE.
PAGE 270, 271.

The permanent separation of classes with hereditary professions assigned to each is among the most remarkable institutions of India; and though now less rigidly maintained than heretofore, must still engage attention. One of the authorities I shall use is the "Jatimala" or garland of Classes, an extract from the "Rudra Yamala Tantra,'

which in some instances corresponds better with usage, and received opinions, than the ordinance of Menu and the great Dharma Purana.

In the first creation, by Brahma, Brahmins proceded with the Veda, from the mouth of Brahma. From his arms Kshatrias sprung; so from his thighs Vaisyas; from his foot Sudras were produced: all with their females. The Lord of Creation viewing them, said, what shall be your occupations? They replied, we are not our own masters Oh God! command us what to undertake. Viewing and comparing their labours he made the first tribe superior over the rest. As the first had great inclination for the divine sciences, therefore he was a Brahmana. The protector from evil was Kshatria. Him whose profession consists in commerce, which promote the success of wars, for the protection of himself and attendance on cattle, he called Vaisya. The other should voluntarily assist the three tribes, and therefore he became a Sudra: he should humble himself at their feet.

PARA. 276.

The regular means of subsistence for a Brahmana are assisting to sacrifice, teaching the Vedas and receiving gifts; for a Vaisya merchandize, attending on cattle and agriculture; for a Sudra, servile attendance on the higher classes.

மதத்தையும், தத்துவஞானத்தையும் பற்றிக்
கோல்புறூக் துரையாற் செய்த காவியம்.
பக்கம் 270, 271.

தொன்று தொட்டு வருகிற தொழில்களோடு நிலைபெற்றுள்ள சாதி பேதம் இந்தியா தேசத்தின் முக்கிய லக்ஷியமான ஏற்பாடுகளிலிருக்கின்றது. இது முன்னிருந்ததைவிட இப்

போது அவ்வளவு பிடிமானமாயில்லா திருந்தபோதிலுங் கவனிக்கத்தக்கதாகவே யிருக்கின்றது. இதற்குரிய சாஸ்திரப்பிரமாணங்கள், மநுவையும் தருமபுராணங்களையும்போல, வழக்கத்திற்கு மிகவொற்றுமையுள்ளதும் அங்கீகரிக்கப்பட்டதும் உருத்திரயாமள தந்திரத்தின் சாரமுமாகிய ஜாதி மாலை ஒன்றிலேயே எடுத்து இங்கு உதகரிக்கிறேன். பிரம சிருட்டியினாரம்பத்தில், பிரமாவின் முகத்திற் பிராமணர்களும், புஜத்தில் க்ஷத்திரியர்களும், துடையில் வைசியர்களும், பாதத்தில் சூத்திரர்களும், தத்தம் ஸ்திரீகளுடனே தோன்றினார்கள். வேதங்கள் பிராமணருடனே தோன்றின.

சிருட்டி கருத்தா அவர்களைநோக்கி நீங்கள் என்னதொழில்செய்வீர்களென்றார்? அதற்கு அவர்கள் கர்த்தனே! நாங்கள் சுவாதீன கர்த்தர்களல்லர், ஆகையால் நாங்கள் செய்ய வேண்டுவதைக் கட்டளையிடுகவென்றார்கள். உடனே கருத்தா அவரவர்களின் உழைப்பைச் சீர்தூக்கிப் பார்த்து, முதற் சாதியாரை மற்றவர்களுக்கெல்லாந்தலைவராக்கினார். அவர்கள் வேதசாஸ்திரங்களில் பிரியமுடையவர்களா யிருந்ததால், பிராமணர்களானார்கள். துன்பத்தில் நின்றுங் காப்பாற்றுபவர்கள் க்ஷத்திரியர்களானார்கள். தம்மையுந் தமதுநிரை(மந்தை)யையும் பாதுகாத்தலின் நிமித்தமும் சண்டைகளில் ஐயத்தைத்தரும் நிமித்தமும் வியாபாரத்தொழில் செய்பவர்கள் வைசியர்களாகக் கூறப்பட்டனர். மற்றவர்கள் மூன்றுவருணத்தாருக்கும் வலிய உதவி செய்யவேண்டுமென்றதனால் சூத்திரரானார்கள். இவர்கள் அவர்களின் பாதங்களிற் பணிய வேண்டும்.

## 276-ஆவது பிரிவு.

பிராமணனுக்குக் கிரமமான ஜீவன விருத்தியானது யாகஞ் செய்வித்தலும், வேதம் ஓதுவித்தலும், தானம்வாங்குதலுமாம். வைசியனுக்கு வியாபாரஞ்செய்தலும், ஆனிரைகா

த்தலும், பயிர்செய்தலுமாம். சூத்திரனுக்கு, மேலவர்களுக்குப் பணிசெய்தலாம் என்று கூறுகிறது.

THE LAND OF THE PERMAUL,

BY F. DAY.

PARA. 297.

The remarkable institution of Castes amongst the Hindus, is perhaps a result of their early founders for symbolical representations. What more rational than symbolically it should have been represented that the priests who expounded the law, and were considered the wisest of the people, should have derived their existeuce from Brahma's mouth, whence the Vedas sprung? That the man of war, living by the strength of his arm, and ruling his fellows by the law of force, should be typified as created from the God's shoulder? That the agriculturist, who by tilling the soil provides sustenance for himself and others, and gives streugth enabling man to stand fatigue, should be shown as coming from the divine thighs? Lastly, that those who subsist by manual labour, as artificers, servants and slaves to the higher classes, should be shown as coming from the feet of Brahma, they being the servile races.

பெருமாள் பூமி. டே - என்னும் துரையாற்செய்த மொழிபெயர்ப்பு. 297-ஆவது பிரிவு.

ஹிந்துக்களுள் இலட்சியமான ஜாதி ஏற்பாட்டைப் பூர்வத்தில் ஸ்தாபித்த ஆசாரியர்களால், மனிதர்களுள் மிகுந்த விவேகிகளென்று மதிக்கத்தக்கவர்களும் தர்மசாஸ்திரங்களுக்கு வியாக்கியானங்கள் செய்தவர்களுமாகிய குருக்கள்மார், வேதங்களுண்டான பிரமாவினது வாயிலுற்பத்தியானார்களென்பதும்; புஜபலத்தினால் ஜீவிக்கிறவர்களும் சாஸ்திரங்களின் வலிமையினால் தம்மவர்களை யாளுகிறவர்களுமாகிய வீரர்கள், புஜத்திலுண்டானார்களென்பதும்; தமக்கும் மற்றவர்களுக்கும்

நிலங்களையுழுது உணவுண்டாக்கி இளையாதிருக்கும்படி வலியைக்கொடுக்கிற உழவினர்கள், துடையிலுண்டானார்களென்பதும்; முடிவில் மேலவர்களுக்கு ஊழியஞ்செய்பவர்கள் ஆகிய அடிமைகள், கம்மியர்கள் முதலானவர்கள் பாதத்திலுண்டானார்களென்பதும்; அறிகுறியளவேயன்றி, பகுத்தறியும்படியானது மற்றென்னையிருக்கின்றது.

குலவியற்கை தவறுதொழுகலே நல்லறமெனல்.

பாரதம் - ஆரணியபருவம்.

கௌசிகச்சருக்கம்.

தன்குல வியற்கைதவ றுதொழுகன்றே
முன்புரைசெய் நல்லற மெனப்புகல்வர் முன்னோர்
மன்பல வுயிர்த்தொகைகண் மீதருண் மனத்தோ
ரின்பமடை குற்றன ரிகத்தொடு பரத்தும்.

இவ்விடத்துச் சாதுர் வருணோற்பத்தியும் அவர்களின் றொழிலும் சுருக்கிக்கூறப்பட்டன. இனி அவர்களின் றொழிலும் தருமங்களும் ஒழுக்கங்களும். அவரவர்கள் நடக்கவேண்டிய சட்டங்களும் சற்று விரித்துரைக்கப்படும்.

---

## I. பிராஹ்மணர்.

### பிராஹ்மணர் முதன்மையாதற்குக்காரணம்.

சதுர்வருணத்தினும் பிராமணர் விராட்டுவின் உன்னதஸ்தானமான முகத்தினிடத்தில் பிறந்ததாலும், முதற்பிறந்தவராதலாலும், வேதங்களையுடையராதலாலும், தர்மதேவதை அவதாரமாதலாலும், பூலோக தேவர்களாதலாலும், விப்பிரர்கள் அல்லது விசேஷஞானமுடையவராதலாலும், சீவகாருண்ய முடையவராதலாலும், ஒழுக்க முடையவராதலாலும், சாஸ்திர சம்பன்னராதலாலும்,ஏனையவருணத்தாருக்குச் சுபாசுபப் பிரயோசனங்களில் கிரியை நடத்துபவராதலாலும், வேள்வியாதிசெய்விப்பவராதலாலும் தாங்கள் தங்களை எல்லாவருணத்தினுஞ் சிறந்தவர்களெனக் கூறுகிறார்கள்.

தேவரினும் பிராமணருயர்ந்தவரேனல்,

அந்தணர் பூலோகதேவர்கள் என்றும், அவர்களுள் தெய்வலோகத்தாரும் அடங்கினவரென்றும், அதனால் தாங்களே எல்லாருள்ளும் சிறந்தவர்கள் என்றும் கூறுகிறார்கள்.

ദൈവാധീനം ജഗത്സർവ്വം മന്ത്രാധീനന്തു ദൈവതം
തന്മന്ത്രം ബ്രാഹ്മണാധീനം ബ്രാഹ്മണാ മമ ദൈവതം॥

దైవాధీనంజగత్సర్వం మంత్రాధీనంతుదైవతం।
తన్మంత్రంబ్రాహ్మణాధీనం బ్రాహ్మణామమదైవతం॥

தைவாதீனஞ் ஜகச்சர்வம் மந்திராதீனந்து தைவதம்
தன்மந்திரம் பிராஹ்மணாதீனம் பிராஹ்மணாமம தைவதம்.

இ - ள். உலகந்தெய்வத்துள்ளடக்கம், அத்தெய்வமோ மந்திரத்துள்ளடக்கம், அம்மந்திரமோ பிராமணர்களுள்ளடக்கம், அதனால் பிராமணர்களே நமக்குத்தெய்வமாம். சகலவிதத்தானும் பிராஹ்மணரையே பூசிக்கவேண்டும். அவர்களே சகலரினும் மேலான தெய்வமாம். இதுவிபரீதம்!

സർവ്വഥാ ബ്രാഹ്മണാഃ പൂജ്യാഃ
പരമം ദൈവതം ഹി തത്॥

సర్వదాబ్రాహ్మణాఃపూజ్యాః।
పరమందైవతం హితత్॥

ஸர்வதா பிராஹ்மணா: பூஜ்யா:
பரமந்தைவதம் ஹிதது.

இ - ள். சகல விதத்தானும் பிராமணர்களே பூசிக்கப்படுவார்கள். அவர்கள் உயர்வாயுள்ள தெய்வத்தன்மையுடையவர்களாம்.

சகல தீர்த்தமும் அந்தணரிடத்தேனல்.

𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂𑌯𑌾𑌨𑌿𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 | 𑌤𑌾𑌨𑌿𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌿𑌸𑌾𑌗𑌰𑍇 |
𑌸𑌾𑌗𑌰𑍇𑌸𑌰𑍍𑌵𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 | 𑌪𑌦𑍇𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 ||

ప్రథివ్యాంయానితీర్థాని తానితీర్థానిసాగరే।
సాగరేసర్వతీర్థాని పదేవిప్రస్యదక్షిణే॥

பிரிதிவ்யாம்யாநி தீர்த்தாநி தாநிதீர்த்தாநி ஸாகரே
ஸாகரே ஸர்வதீர்த்தாநி பதேவிப்பிரஸ்ய தக்ஷிணே.

உலகிலுள்ள சகலதீர்த்தங்களும் சமுத்திரத்தினிடத்துள்ளனவாம். சமுத்திரத்தினிடத்துள்ள சகல தீர்த்தங்களும் பிராஹ்மணனது வலது பாதத்திலுள்ளனவாம். இதுவிபரீதம்!

𑌵𑌿𑌪𑍍𑌰𑌪𑌾𑌦𑍋𑌦𑌕𑌂𑌯𑌸𑍍𑌤𑍁 𑌕𑌣𑌮𑌪𑍍𑌯𑌾𑌵𑌹𑌨𑍍𑌨𑌰𑌃
𑌦𑍇𑌹𑌸𑍍𑌥𑌂𑌪𑌾𑌤𑌕𑌂𑌤𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿 ||

విప్రపాదోదకంయస్తు కణమప్యావహన్నరః।
దేహస్థంపాతకంతస్య సర్వమేవప్రణశ్యతి॥

விப்ரபாதோதகம் யஸ்து கணமப்யாவஹந்நரஃ
தேகஸ்தம் பாதகந்தஸ்ய ஸர்வமேவ பிரணஸ்யதி.

இ-ள். ஒருவன் பிராஹ்மணனது பாததீர்த்தத்தில் தோய்வானுனல் அவன் தேகத்திலுள்ள சகல பாவங்களும் ஒழியுமாம்.

அங்ஙனமாயின் அவ்வந்தணர்கள் தங்கள் பாவத்தை யொழிப்பதற்குக் கங்கையாதி புண்ணிய நதிகளிற் ஸ்நானஞ் செய்யப்போவானேன்? ஆதலின் இதுயுக்திக்கு முழுவிரோதம்.

திரிமூர்த்திகளினு மேலானவர் அந்தணரேனல்.

கம்பராமாயணம், மந்தரை சூட்சிப்படலம்.

தசரதச் சக்கரவர்த்தி ஸ்ரீராமபிரானுக்கு முடிசூட்ட ஆலோசித்தகாலத்தில் புத்திசொன்னது.

கரிய மாலினுங் கண்ணுத லானினு
மூரிய தாமரை மேலுறை வாணினும்
விரியும் பூதமோ ரைந்தினு மெய்யினும்
பெரிய ரந்தணர் பேணுதி யுள்ளத்தால்.

அனைய ராதலி னையவிவ் வெய்யதீ
வினையி னீங்கிய மேலவர் தாளிணைப்
புனையுஞ் சென்னியை யாய்ப்புகழ்ந் தேத்துதி
யினிய கூறிநின் றேயின செய்தியால்.

இப்பாடல்களால் திரிமூர்த்திகளினும் பஞ்சபூதத்தினும் உண்மையினும் அந்தணர் பெரியரென்றும், அவருடைய பாதங்களைப் புகழ்ந்தேத்துகவென்றுங் கூறப்பட்டன.

பிரமனால் சிருட்டிக்கப்பட்ட அந்தணர் அப்பிரமனையும் சிருட்டிக்கும் விஷ்ணு சிவபிரானுக்கும் பஞ்சபூதத்தினுக்கும் உண்மைக்கும் உயர்ந்தாரெனக் கூறப்பட்டிருக்கிறது. இது முழுவிரோதமாம். இராமபிரானே அந்தணரைப் பெரியரென வணங்கவேண்டுமென்று கூறினால் உலகினுள்ள மாந்தரெல்லாம் மிகப்பயந்து உபசரித்து வணங்குவார்களெனக் கூறியது போலுமாம்.

**பொழுதுவிடிகிறதும் அஸ்தமிக்கிறதும் அந்தணர்களாலெனல்.**

பொழுதுவிடிகிறதும் அஸ்தமிக்கிறதும் அந்தணர்களாலேயாம். எங்ஙனமென்னில்? எங்கே யாககாரியமுதலான சத்கருமங்கள் நடக்கின்றனவோ அங்கே இராக்ஷசர்கள் சென்று அச்சத்கருமங்களை நடத்தவொட்டாமல் தடுத்து இடையூறுசெய்வது சுபாவமாகையால், அதுபோலச் சூரியன் உதயமாகிறகாலத்தில் இராக்கதர்கள் அவனை எதிர்த்து யுத்தஞ் செய்கிறார்கள். அவர்களின் போருக்காற்றாது சூரியன் ஆறு பரிது [எல்லை]களின் பின்னாக வருகிறான். அக்காலத்தில் பிராஹ்மணர்கள் ஸ்நானுஷ்டானஞ்செய்து அர்க்கியம் கொடுக்கிறார்கள்; அவ்வர்க்கியத்தின் நீர்த்தாரைகள் அம்பாகச்சென்று அவ்விராக்கதர்களை ஹிம்சித்துத் துரத்துகின்றன. அச்சமயத்தில் சூரியன் உதயமாகி வெளிப்பட்டு வருகிறான். இப்படியே அஸ்

தமன காலத்தும் அவ்விராக்கதர்கள் சூரியனைப் பாதாளத்துச்செல்ல வொட்டாமல் எதிர்த்துப் போர்செய்கிறார்கள். அக்காலத்தும் அந்தணர்கள் இறைக்கும் அர்க்கிய சலம் அவ்விராக்கதர்களை ஹிம்சித்துத் துரத்துகின்றது. அதன்மேல் சூரியன் அஸ்தமிக்கிறான் என்பதுவே. இவ்விதமாகத் தினப்படி சூரியன் உதயமாகிறதும் அஸ்தமிக்கிறதும் அந்தணர்களாலேயாம். வேதங்களை நன்றாக ஆராய்ந்துள்ள வேதியன் கொடுக்கிற அர்க்கியத்தைச் சூரியனானவன் ஆகாயத்தில் நின்றும் இறங்கிவந்து ஏற்றுக்கொண்டு மீளவும் ஆகாயத்திற் செல்கிறானென்று இன்னும் அநேக கற்பனைகதைகளைக் கூறுகிறார்கள்.

### பிராமணரால் உலகநிலைபெற்றிருக்கின்றதெனல்.

உலகிலுள்ள உயிர்கள் நிலைபெற்றிருப்பதும் அரசன் செங்கோல் நடத்துவதும் மழைபெய்வதும் அந்தணர்களாலேயெனக்கூறுகிறார்கள். பின்வருஞ் செய்யுளிற் காண்க.

பாரதம் அநுசாநீகபருவம்.

பூதேவர் மகிமையுரைத்த அத்தியாயம்.

அந்தணர்கள் வலிபாலே யரசர்செங்கோ னிகழ்வதெலாம்
அந்தணர்க ளொழுக்கத்தா லாருயிர்கள் செறிவதெலாம்
அந்தணர்க ளன்மறையா லருமாரி பொழிவதெலாம்
அந்தணரி லதிகருல கதிலுண்டோ புகலாயே.

ஆயுள்வேண் டினர்செல்வ மாண்மைவேண் டினர்மிக்க
சேயைவேண் டினர்தக்க சீலம்வேண் டினர்முத்தி
நேயம்வேண் டினர்சுவர்க்க நீடுவேண் டினர்விப்பிரர்
தூயதா ளிற்றொழுது சூழ்வரே யேற்றமென.

இப்பாடலில் ஆயுள் செல்வம் புத்திரப்பேறு மோக்ஷம் முதலியவற்றை விரும்பினவர்கள் அந்தணர்காலில் வந்துவிழவேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. அங்ஙனமானால் அந்தணர் மேற்கூறியவற்றை விரும்பி யாகாதி கருமங்கள்செய்வானேன்? 23-ஆவது பக்கத்திற் கூறியபடி வேதத்தினை யருளவேண்டும்,

உணவினை யருளவேண்டும், தனத்தை யருளவேண்டும், பசுவினை யருளவேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்திப்பானேன்?

> பாசம்வேண் டினர்பஞ்ச பாபம்வேண் டினர்தீய
> நேசம்வேண் டினராயு நீமோ நிதிவாழ்வு.
> நாசம்வேண் டினராய நான்குமா மறையோரைக்
> கூசிடா வசைபேசி யிகழ்வரே கொடியோர்கள்.

இப்பாடலில் பஞ்சபாதகங்களையும் ஏனைய தீமைகளையும் விரும்பினர் பிராமணரை யிகழ்வரென்று கூறப்பட்டிருக்கிறது. இதுபிராமணர்களை யெவ்விதத்தானுங் குறைகூறப்படாதென்பதற்கு ஒருவாய்ப்பூட்டுப் போலுமாம்.

### அந்தணர் அறுதொழில்.

மநு முதல் அத்தியாயம் 88-ஆவது சுலோகம்.

𑌅𑌧𑍍𑌯𑌾𑌪𑌨𑌮𑌧𑍍𑌯𑌯𑌨𑌂 | 𑌯𑌜𑌨𑌂 𑌯𑌾𑌜𑌨𑌂 𑌤𑌥𑌾 |
𑌦𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 | 𑌷𑌟𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌗𑍍𑌰𑌜𑌨𑍍𑌮𑌨𑌃 ||

అధ్యాపనంచాధ్యయనం యజనంయాజనంతథా।
దానంప్రతిగ్రహశ్చాపి షట్కర్మాణ్యగ్రజన్మనః॥

அத்யாபனம் சாத்யயநம் யஜநம் யாஜநந்ததா
தாநம் பிரதிக்கிரஹஸ் சாபி ஷட்கர்மாண்ய கிரஜந்மந:

இ-ள். வேதம் ஓதல், ஓதுவித்தல், யாகஞ் செய்தல், செய்வித்தல், தானங் கொடுத்தல், வாங்குதல் ஆகிய ஆறும் முதற்பிறந்தவராகிய வேதியருக்கு உரியகருமங்களாம்.

பராசரஸ்மிருதி 28½-சுலோகம்.

𑌷𑌟𑍍𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌰𑌤𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 |
𑌦𑍇𑌵𑌤𑌾𑌤𑌿𑌥𑌿𑌪𑍂𑌜𑌕𑌃 |
𑌹𑍁𑌤𑌶𑍇𑌷𑌂 𑌤𑍁 𑌭𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑍋 |
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌾𑌵𑌸𑍀𑌦𑌤𑌿 ||

షట్కర్మనిరతో నిత్యం దేవతాతిథిపూజకః
హుతశేషంతు భుంజానో బ్రాహ్మణో నావసీదతి॥

ஷட்கர்மா நி ரதோநித்யங் தேவதா திதிபூஜகஃ
ஹுதசேஷந்து புஞ்சாநோ பிராஹ்மணோ நாவஸீததி.

இ - ள். அறுவகைத் தொழிலினிடத்தும் நிரம்பிய விருப்பமுடையவனும், நித்தமும் தேவர்களையும் அதிதிகளையும் பூசிப்பவனும், வேள்விசெய்து மிக்க அவியின் சேடத்தைப் புசிப்பவனுமாகிய அந்தணன் கெடுவதில்லை. அவி = தேவர் பொருட்டுச் சமைத்த சோறு.

### அந்தணர்களின் நித்தியகருமம்.

பராசரம் சுலோகம் $40\frac{1}{2}$.

𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌸𑍍𑌨𑌾𑌨𑌂𑌜𑌪𑍋𑌹𑍋𑌮𑍋 |
𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌞𑍍𑌚𑌪𑍂𑌜𑌨𑌂 |
𑌆𑌤𑌿𑌥𑍍𑌯𑌂𑌵𑍈𑌶𑍍𑌵𑌦𑍇𑌵𑌞𑍍𑌚 |
𑌷𑌟𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿𑌦𑌿𑌨𑍇𑌦𑌿𑌨𑍇 ||

సంధ్యాస్నానంజపో హోమో దేవతానాంచపూజనం।
ఆదిత్యంవైశ్వదేవంచ షట్కర్మాణిదినేదినే॥

ஸந்தியா ஸ்நாநஞ் ஜபோஹோமோ
தேவதாநாஞ்ச பூஜநம்
ஆதித்யம் வைஸ்வதேவஞ்ச
ஷட்கர்மாணி திநேதிநே.

இ - ள். ஸ்நானஞ் செய்வதோடு சந்தியாவந்தனம், ஜெபம் ஹோமம் தேவதாபூசை விருந்துபசரித்தல் வைஸ்வதேவம் ஆகிய ஷட்கர்மங்களையும் அந்தணராயுள்ளவர் தினந்தோறுஞ் செய்யத்தக்கவர்.

### அந்தணரின் சிரௌதகருமம் ஸ்மார்த்த கருமங்கள்.

அந்தணனுக்குரிய முக்கிய கருமங்கள், பிராஹ்மம், தெய்வம் என இருவகையாம்.

ஹாரீதஃ.

𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍋𑌹𑌿𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍋𑌭𑌵𑌤𑌿 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍋𑌦𑍈𑌵𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 ।
𑌤𑌤𑍍𑌰𑌗𑌰𑍍𑌭𑌾𑌧𑌾𑌨𑌾𑌦𑌿𑌃 𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌤𑍋𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌃 ।
𑌪𑌾𑌕𑌯𑌜𑍍𑌞𑌹𑌵𑌿𑌰𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌸𑍌𑌮𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌦𑍈𑌵𑍋 ॥
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍇𑌣𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌋𑌷𑍀𑌣𑌾𑌂 ।
𑌸𑌮𑌾𑌨𑌂𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌂𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌦𑍈𑌵𑍇𑌨𑍋𑌤𑍍𑌤𑌰𑍇𑌣𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍋𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 ।
𑌸𑌮𑌾𑌨𑌤𑌾𑌂𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌂𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥

ద్వివిధొహిసంస్కారోభవతి
బ్రాహ్మోదైవశ్చేతి
తత్రగర్భాదానాదిః స్మార్తోబ్రాహ్మః
పాకయజ్ఞహవిర్యజ్ఞా సౌమ్యాశ్చదైవో
బ్రాహ్మేణసంస్కృతఋషీణాం
సమానంసాయుజ్యంగచ్ఛతి
దైవేనోత్తరేణసంస్కృతోదేవానాం
సమానతాంసాయుజ్యంగచ్ఛతి॥

திவிவிதோஹி ஸம்ஸ்காரோபவதி
பிராஹ்மோ தைவஸ்சேதி
தத்திர கர்ப்பாதாநாதிஃ
ஸ்மார்த்தோ பிராஹ்மஃ
பாகயக்ஞ ஹவிர்யக்ஞாஸ்
ஸௌமியாஸ் சதைவோ
பிராஹ்மண ஸம்ஸ்கிருத ருஷிணும்
ஸமாநம் ஸாயுஜ்யங்கச்சதி
தைவெநெதரேண ஸம்ஸ்கிருதோ தேவாணும்
ஸமானதாம் ஸாயுஜ்யங்கச்சதி.

இ - ள். கருமங்கள், பிராமம் என்றும் தெய்வம் என்றும் இருவகைப்படும். அவற்றுள் மிருதிகளிற் கூறுங் கருப்பாதான முதலிய கருமங்கள் பிராமமாம். பாகவேள்வி அவிவேள்வி சோமசமத்தை என்னுங் கருமங்கள் தெய்வமாம். பிராமத்தில் திருந்தினவன் இருடியர்களோடு கலப்பன். தெய்வத்தில் திருந்தினவன் தேவர்களோடு கலப்பன்.'

அவ்விருவகைக் கருமத்தின் றொகை.

கௌதமர்.

𑌗𑌰𑍍𑌭𑌾𑌧𑌾𑌨 𑌪𑍁𑌂𑌸𑌵𑌨 𑌸𑍀𑌮𑌨𑍍𑌤𑍋𑌨𑍍𑌨𑌯𑌨 𑌜𑌾𑌤𑌕𑌰𑍍𑌮 𑌨𑌾𑌮𑌕𑌰𑌣𑌾𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌾𑌶𑌨 𑌚𑍌𑌲𑍋𑌪𑌨𑌯𑌨𑌾𑌨𑌿 𑌚 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿 𑌵𑍇𑌦𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌿 𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑍀 𑌸𑌂𑌯𑍋𑌗𑌃 𑌪𑌞𑍍𑌚𑌾𑌨𑌾𑌂 𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌮𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑌷𑍍𑌟𑌕𑌾𑌨𑍍𑌵𑌷𑍍𑌟𑌕𑌾 𑌪𑌾𑌰𑍍𑌵𑌣 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌶𑍍𑌰𑌾𑌵𑌣𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌯𑌣𑍀 𑌚𑍈𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌶𑍍𑌵𑌯𑍁𑌜𑍀𑌚𑍇𑌤𑌿 𑌸𑌪𑍍𑌤 𑌪𑌾𑌕𑌯𑌜𑍍𑌞𑌾𑌃 𑌸𑌪𑍍𑌤 𑌹𑌵𑌿𑌰𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌃 𑌸𑌪𑍍𑌤 𑌸𑍋𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌃॥

గర్భాధాన పుంసవన సీమంతోన్నయన జాతకర్మ నామ కరణాన్న ప్రాశన చౌలోపనయనానిచ చత్వారి వేద వ్రతాని స్నానం సహధర్మచారిణీ సంయోగః పంచానాం యజ్ఞానామను ష్ఠాన మష్టకాన్వష్టకా పార్వణ శ్రాద్ధం శ్రావణ్యాగ్రయణీ చైత్ర్యాశ్వయుజీచేతి సప్తపాక యజ్ఞాస్సప్త హవిర్యజ్ఞాస్సప్త సోమసంస్థా ఇత్యేతే చత్వారింశత్సంస్కారాః ॥

கர்ப்பாதான பும்ஸவன ஸீமந்தோன்னயந ஜாதகர்ம நாம கரணான்ன பிராஶன சௌலோபநயனானிச சத்வாரி வேத பிரதானி ஸ்நானம் ஸஹ தர்ம சாரிணி ஸம்யோகஃ பஞ்சாநாம் யக்ஞாநாமநுஷ்டாந மஷ்டகான் வஷ்டகா பார்வண சிராத்தம் சிராவண்யாகிரயணே சைத்திரியாஸ்வயுஜேசேதி ஸப்த பாக யக்ஞாஸ் ஸப்த ஹவிர்யக்ஞாஸ் ஸப்த ஸோம ஸம்ஸ்தா இத்யேதே சத்வாரிம் ஶத்ஸமஸ்காரா ஃ ||

அந்தணன் செய்யவேண்டிய சத்சம்ஸ்காரம் நாற்பதாம் அவற்றுள்.

| ஸ்மார்த்த கருமங்கள் அல்லது பிரமகருமங்கள் 16. | சிரௌத கருமங்கள் அல்லது தெய்வ கருமங்கள் 24. |
| --- | --- |
| **சோடச கருமம்.**<br>1. கர்ப்பாதானம்.<br>2. பும்ஸவனம்.<br>3. சீமந்தம்.<br>4. சாத கருமம்.<br>5. நாமகர்ணம்.<br>6. அன்னப்பிராசனம்.<br>7. சௌளம்.<br>8. உபநயனம்.<br>9. பிரஜாபத்தியம்.<br>10. சௌமியம்.<br>11. ஆக்நேயம்.<br>12. வைஸ்வ தேவம்.<br>13. ஸ்நாதகம்.<br>14. விவாகம். ஆக 14.<br>மேற்கண்ட பதினான்குடன் நாமகரணத்தின் பின்னர் (1) நிஷ்கருமணம்=சந்தி மிதிப்பித்தல் சந்திர தெரிசனம். (2) சூர்யாவலோகனம் = சூரிய தெரிசனம். ஆக இவ்விரண்டினையுஞ் சேர்த்து 16 - கருமங்களெனக் கூறுவர்.<br><br>சிலர் மேற்கண்ட 14 உடன் அந்தியேஷ்டி=பிரேதசர்மம். சபிண்டீகரணம்=சொர்க்காரோகணம். ஆக இவ்விரண்டுஞ் சேர்த்துப் பதினாறெனக் கூறுவர். | **ஐம்பெரும்வேள்வி.**<br>1. பிரமவேள்வி.<br>2. தெய்வ வேள்வி.<br>3. பிதர் வேள்வி.<br>4. மானுட வேள்வி<br>5. பூத வேள்வி. ஆக 5.<br>**பாக எச்ச சமஸ்தை.**<br>1. அஷ்டகா சிராத்தம்.<br>2. அந்வஷ்டகாசிராத்தம்.<br>3. பார்வண சிராத்தம்.<br>4. சிராவணி.<br>5. ஆக்கிரஹாயணி.<br>6. சைத்திரி.<br>7. ஆசுவயுஜி. ஆக 7.<br>**ஹவிர் எச்ச சமஸ்தை.**<br>1. அக்கினி ஆதானம்.<br>2. அக்கினி ஹோத்திரம்.<br>3. தரிஸபூர்ண மாசங்கள்.<br>4. ஆக்கிரயணம்.<br>5. சாதுர் மாசியம்.<br>6. நிருடபசுபந்தம்.<br>7. சௌத்திராமணி. ஆக 7.<br>**சோம சமஸ்தை.**<br>1. அக்கினிஷ்டோமம்.<br>2. அத்தியக்கினிஷ்டோமம்.<br>3. உக்தியம்.<br>4. ஷோடசி.<br>5. வாஜபேயம்.<br>6. அதிராத்திரம்.<br>7. அப்தோரியாமம். ஆக 7.<br>26 |

ஸ்மார்த்த கருமம் சோடச கிரியை பதினாறனுள் 14
சிரௌத கருமம் ... ... ... ... 26
ஆக கருமங்கள் 40

## சோடசகிரியை செய்யும் வகை.

1. கருப்பாதானம்— இது பிண்டோற்பத்தி செய்தற் பொருட்டு விவாகமான பெண் பூத்தநாள் நான்கிற்குமேல் 16-நாளுக்குட் செய்யுங்கிரியையாம்.

2. பும்ஸவனம்—இது பிண்டம் அசைவு அடைதற்கு முன்பே 2-ஆவது மாதம் அல்லது 3-ஆவது மாதத்தில் தரித்தகரு ஆண்மகவாகவேண்டிச் செய்யுங்கிரியையாம்.

3. சீமந்தம்—இது கருப்பத்திருத்தமாம். இக்கருமம் 3-ஆவது மாதமுதல் 9-ஆவது மாதவரையில் அவரவர் மரபின்வழக்கப்படி செய்தலாம். கருப்பத்திருத்தமில்லாது பிறந்தபிள்ளை விராத்தியனும்.

4. சாதகருமம்—இது குழந்தைபிறந்து நீராடினவுடன் கொப்பூழ்க்கொடி யறுப்பதற்குமுன் செய்யவேண்டிய கிரியையாம். அதாவது புதல்வன் பிறந்தமாத்திரத்தில் தந்தை தரித்திருக்கும் வஸ்திரத்தோடு ஸ்நானஞ்செய்து, பொன் வெள்ளி தான்யங்களைத் தானஞ்செய்தபின், பொன் தேன் நெய் சேர்த்திழைத்துச் சிசுவுக்குச் செவ்வெண்ணெய் புகட்டுதலுடன் பிதுர்களுக்கு இரண்ய சிராத்தஞ்செய்தலாம்.

5. நாமகரணம்—இது பிறந்த மகவுக்கு 10 அல்லது 12-16-ஆவது நாள்களில் பிறந்த நட்சத்திரத்தைக்குறிக்கும் அட்சரங்களை முதலாகக்கொண்டபெயரிடுவதாம். அல்லது பாட்டன்முதலினோர்பெயரை இடுவதாம். இப்பெயரும் தகப்பன் பாட்டன் முதலியோரால் இடவேண்டும். அந்தணனுக்குச் சுபத்தையும் க்ஷத்திரியனுக்கு வீரியத்தையும் வைசியனுக்குச் செல்வத்தையும் சூத்திரனுக்கு அடக்கத்தையும் ஸ்திரீகளுக்கு நதி மலர் சுகந்தம் வல்லி முதலியவற்றையும் குறிக்கும் பெயரேயிடவேண்டும். அங்ஙனம் பெயரிடுமிடத்தும் அப்பெயரின்முடிவில் சதுர்வருணத்தாருக்கும் முறையே

சருமன்வருமன் குத்தன் தாசன்என வருணத்தை விளக்கும்படி இடவேண்டும்.

6. சூர்யாவலோகனம்—மூன்ருந்திங்களில் குழந்தை சூரியனைத் தரிசிக்கச்செய்தலாம்.

7. நிஷ்கருமணம்—இது நான்காந்திங்களில் குழந்தை சந்திரனைத் தரிசிக்கச்செய்தலும் சந்தி மிதிப்பிக்கச்செய்தலுமாம். சந்திமிதிப்பித்தல் குழந்தையை வெளியே கொண்டுபோவதாம்.

8. அன்னப்பிராசனம்—இது 6-ஆவது அல்லது 8-ஆவது திங்களில் விதிப்படி குழந்தை அன்னம் உண்ணச்செய்தலாம். பெண் குழந்தைகளுக்கு 5 - முதலிய ஒற்றைப்பட்ட மாதங்களில் உண்பிக்கவேண்டும்.

9. செள்ளம் அல்லது சூடாகரணம்—இது குழந்தைக்கு 1-3-அல்லது 5-ஆவது ஆண்டில் மயிர் களையச்செய்வித்தலாம்.

10. உபநயனம்—இது குழந்தைக்கு உளக்கண்ணைத்திறப்பித்தல் அல்லது தீக்ஷைசெய்தலாம். இக்கிரியை பிறந்த 3-ஆண்டுக்குள் வேதியனுக்கும், 11-ஆண்டுக்குள் க்ஷத்திரியனுக்கும், 12-ஆண்டுக்குள் வைசியனுக்கும், செய்யவேண்டும். பிரமவொளியை விரும்பின வேதியனுக்கு 5-வலியைவிரும்பிய வேந்தனுக்கு 6-பொருளைவிரும்பிய வைசியனுக்கு 8-ஆவது ஆண்டு உபநயனகாலமாம். இதுதவறினல் வேதியனுக்கு 16-க்ஷத்திரியனுக்கு 22-வைசியனுக்கு 24-வருடங்களுக்குட்செய்யவேண்டும்.

கர்ப்பாதான மந்திரத்தாலும் சீமந்த ஓமத்தாலும் சாதகர்மம் நாமகரணம் அன்னப்பிராசனம் சௌளம் உபநயனம் இவைகளாலும் துவிஜர்கள் சம்போகஞ் செய்யக்கூடாததினத்தில் செய்ததனுற், ருங்களுற்பத்தியான தோஷமும் மாதா

வின் கர்பத்தில் வசித்த தோஷமும் குழந்தைகளுக்கு நீங்கும். (மநு 2-27.)

11-முதல் 14-வரையிலுள்ள பிரசாபத்தியவிரதம் சௌமியவிரதம் ஆக்னேயவிரதம் வைசுவதேவவிரதம் இவை நான்கும் பிரமசரியாச்சிரமத்தில் அநுட்டிக்கவேண்டிய விரதங்களாம்.

15. ஸ்நாதககருமம்—இது வேதமோதலின் முடிவில் ஆசாரியருக்கு வேண்டுவனவாயதட்சணை கொடுத்து அவரது கட்டளையால் பிரமராச்சிய பட்டாபிஷேகம்போன்ற அபிஷேகம் செய்துகொள்ளுதலாம். இக்கருமமேற்றவன் அதுமுதல்இரண்டுமுப்புரிநூல் கமண்டலம் குடை வெள்ளைநிறமுள்ள தலையாடை பாதுகை பாதரட்சை பொற்குண்டலம் தருப்பைக்கட்டு இவற்றைத் தரித்தல்வேண்டும். தலைமயிர் நகம் களைந்து சுத்தனாக இருக்கவேண்டும். பூமாலைசூடலாம்; சந்தனம் பூசலாம் பார்வைக்கு விரும்பத்தக்கவனாக இருக்கவேண்டும்.

16. விவாகம்—இது சுஜாதியில் இலக்கணம் அமைந்த மாதினை மனைவியாகமணம் புரிதலாம்.

இக்கிரியைகளை வேறுவிதமாகவுங் கூறுவர்.

1. ருதுசங்கமனம்—நாயகியினது ருதுகாலத்தில் நாயகன் நாயகியைக் கூடும்படி செய்யுங் கிரியை.

2. கருப்பாதானம்—கருப்பந் தரிக்கும்படி செய்யுங் கிரியை.

3. பும்ஸவனம்—ஆண்மகவு பிறக்கும் மருந்து பிழியுங் கிரியை.

4. சீமந்தம்—பன்றி முள்ளினால் தலைமயிரை வகிர்ந்து செய்யுங் கிரியை.

5. சாதகன்மம்—புத்திரோற்பத்தியாய காலத்துச் செய்யுங் கிரியை.

6. உத்தாபனம்—பிறந்தவறையினின்றுங் குழந்தையை வேறிடத்துச் சேர்ப்பிக்குங் கிரியை.

7. நாமகரணம்—பெயரிடுங் காலத்துச் செய்யுங்கிரியை.

8. அன்னப்பிராசனம்—சோறூட்டுங் கிரியை.

9. பிரவாசம்—குழந்தையை ஆலயத்திற்குக் கொண்டு போகுங் கிரியை.

10. பிண்டவிருத்தி—குழந்தையை வளர்க்குங்கிரியை.

11. சௌளம்—மயிர்களையுங் கிரியை.

12. உபநயனம்—ஞானக்கண் திறப்பித்தல் - அல்லது தீட்சை செய்யுங் கிரியை.

13. காண்டோபக்கிரமணம்—வேதாத்தியயனம் ஆரம்பிக்குங் கிரியை.

14. காண்டமோசனம்— வேதாத்தியயன முடிக்குங் கிரியை.

15. சமாவர்த்தநம்—பிரமசரிய விரதத்தை முடிக்குங் கிரியை.

16. விவாகம்—மகளிரை மணம்புரியுங் கிரியை. இம் முறையை,

திருவானைக்காப்புராணம்.

கோச்செங்கணார் வழிபடுபடலம்,

பூணிருது சங்கமநங் கருப்பா தானம்
புஞ்சவனம் சீமந்தஞ் சாத கன்மம்
பேணுமுத்தா பீநம்நாம கரண மன்னப்
பிராசநமே பிரவாசம் பிண்ட விர்த்தி
சாணலுறுஞ் சவுளமுப நயநங் காண்டோ
பக்கிரம ணங்காண்ட மோச னஞ்சீர்
மாணுசமா வர்த்தநமே விவாக மின்ன
வகுத்தபதி னாறுமென மதிக்க மன்னா.

என்னுஞ் செய்யுளாலறிக.

இவற்றுட் சிலர் உத்தாபனத்தைச் சாதகன்மத்துளடக்கியும், அன்னப்பிராசனத்தைப் பிண்டவிர்த்தியுளடக்கியும், காண்டோபக் கிரமணத்தை உபநயனத்துளடக்கியும், அக்கருமங்களைப் பதின்மூன்ருகக்கொண்டு, அவற்றுடன் பிரேத கன்மம் சபிண்டீகரணம் விஷ்ணுபலியென மூன்று கருமங்களையுமுடன்கூட்டி, பதினுருகக் கொள்வர். இதற்குப் பிரமாணம் பின்வரும் செய்யுளாலறிக.

பின்ன ரிந்நூல் பிரேதசமக் காரத்தோடு
பிறங்குசபிண் டீகரணம் பேசு மீங்குச்
சொன்னவற்று ளுபநயனம் சாத கன்மத்
துறையினுஞ்சோ றூட்டுதலிற் பிண்ட விர்த்தி
தன்னையுநல் லுபநயநந் தனிற்காண் டோபக்
கிரமணந்தன் னையுமடக்கித் தகநா லொன்று
நன்னர்விண்டு பலியசுபத் திரண்டுங் கூட்டி
நவிலும்விண்டு பலிசேமந் தத்தி னண்ணும்.

சிரௌத ஸ்மஸ்காரங்களை விரிக்கிற் பெருகும். அவைகள் பராசரஸ்மிருதியில் விரித்துரைக்கப்படுகின்றன ஆங்குணர்க.

## ஆச்சிரமபேதம்.

### பிரமசரிய ஆச்சிரமம்.

இருபிறப்பாளனுனபாலியன் உபநயனுதிகருமங்களான்பின் வேதாத்தியயனம் தரும சாஸ்திரம், ஆகிய இவைகளை யறியவேண்டியிருப்பதால் பிரமசரிய வேடங்கொள்ளவேண்டும். அக்காலத்து முஞ்சிப்புல் முறுவற்புல் சணல்நார் இவற்றையே பிரம க்ஷத்திரிய வைசியர் ஆகிய மூவரும் அரைஞாணுகவும், கரியமான்றேல் புள்ளிமான்றேல் ஆட்டின்றேல் இவற்றை முறையே மூவரும் உத்தரீயமாகவும், பஞ்சிநூல் சணல்நார் வெள்ளாட்டின் மயிர் இவற்றை முறையே மூவரும் உபவீதமாகவுந் தரிக்கவேண்டும்.

வேதியன் வில்வக்கோல் அல்லது முருக்கங்கோலும், க்ஷத்திரியன் ஆல் அல்லது கருங்காலிக்கோலும், வைசியன் அரசு அல்லது அத்திக்கோலுந் தண்டமாகக் கொள்ளவேண்டும்.

பிரமசாரி காலையிலெழுந்து சூரியனை வணங்கிப் பிக்ஷைக்குப்புறப்படவேண்டும். சமித்துக்கள் கொண்டுவந்து ஹோமஞ்செய்யவேண்டும்.

பிரமசாரி வேதத்தை ஓதுவிக்கும் ஆசாரியனுக்குச்சிசுருஷைசெய்து வணங்கி வடக்குமுகமாகவேனும் கிழக்குமுகமாகவேனும் கைகளைக்கட்டிக்கொண்டு வேதம் ஓதல்வேண்டும். வேதமோதத்தொடங்குங்கால் சொல்லென்றால் ஓதவேண்டும்; நில் என்றால் நிறுத்தவேண்டும். சந்தனம் பூமாலை தாம்பூலம் முதலியபோகபோக்கியங்களை அநுபவிக்கலாகாது.

பெண்கள் சமீபத்திருத்தலும், அவர்களோடு வசனிப்பதும் கீதங்கேட்டலும், கூத்துப்பார்த்தலுஞ் செய்தலாகாது.

ஆசாரியரிடத்து ஓதற்பாலனவாகிய வேதமுதலியவைகளை அருத்தஞானம் வருமளவும் ஓதல்வேண்டும்.

வேதங்களையோதினுயினும், அவைகளின் பொருளையுணராறுயின், சும்மா கத்துகின்ற காகத்துக்குச்சமானமாவன். ஆதலின் வேதார்த்த ஞானந்தெரிந்தவுடன் ஆசாரியரிடந் தட்சணை தந்து ஆஞ்ஞைபெற்று இல்லறத்திற் பிரவேசிக்கவேண்டும்.

ஒவ்வோர் வேதத்திற்கும் பன்னிரண்டு பன்னிரண்டுயாண்டு. அல்லது அவ்வைந்தியாண்டாகவாயினும் பிரமசரிய விரதஞ்செய்யவேண்டும். முழுவதுங்கற்கும் வரையெனச் சிலர்கூறுவர். இதற்குப்பிரமாணம் பராசரம் ஆசாரகாண்டம் 2-ஆம் அத்தியாயம் 52-ஆவது பக்கத்திற்காண்க.

## கிருகஸ்த்தாச்சிரமம்.

பிரமசரிய ஆச்சிரமத்திலிருந்து வேதங்களை நன்றாகக் கற்றுணர்ந்து ஆசாரியன் ஆஞ்ஞையின்படி சமாவாத்தனஞ்செய்துமுடித்து, பிரம க்ஷத்திரிய வைசியராயுள்ள பிரமசாரிகள் தத்தங்கிருகத்தையடைந்து தாய்தந்தையரைவணங்கி அவர்கள் கருத்தின்படி தத்தம் சுயகுலத்தில் சுயகோத்திரமில்லாமல், நோய்பழியில்லாத நல்லகுடும்பத்தில் பிறந்த நற்குண நற்செய்கையுடைய மகளிரை மணந்து அவ்வவ்வருணத்திற்குரிய ஷட்கருமமுஞ்செய்து,

> பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
> வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்,

என்ற வேதவாக்கியத்தின்படி பழிபாவத்துக்கஞ்சினவனாய்,

> நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
> யன்றே யொழிய விடல்.

என்றபடி நல்வழியில் பொருள்தேடி கொலை களவு கள் காமம் அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் இவைமுதலிய தீக்குணங்களையகற்றி, கூடாவொழுக்கமகன்று, அறிவு ஒழுக்கம் சத்தியம் கல்வி தயை சாந்தம் பொறுமை இன்சொல்லாதி நற்குணங்களைப் பூஷணமாகக்கொண்டு பெரியோரைப்பேணிச் சுற்றந்தழுவித் தாய் தந்தையர் குரு தெய்வங்களையுபசரித்துத், தென்புலத்தார் தெய்வம் விருந்தினர் சுற்றத்தார் *தான் என்னும் ஐம்பெரும்வேள்வியாற்றி, துறந்தாரையும் துவ்வாதவரையும் உண்பித்து நல்லபுதல்வர்களைப் பெற்று, ஆத்மார்த்தத்திற்குரிய செபம் தவம் ஹோமம் சிவார்ச்சனை ஏனைய தேவதாராதனைகளைச்செய்து வேதாகமஸ்மிருதி இதிகாசபுராணங்களை ஆராய்ச்சிசெய்து நித்திய

---

* தான் என்பது தானும் தன்னுதிர சம்பந்தமான பெண்டு பிள்ளைகளுமெனக்கொள்க.

நைமித்திய கருமங்களில் வழுவாதிருந்து, இல்லறதருமத்தை நடத்திவரின் மேலான கதியையடைவன்.

### வானப்பிரஸ்தாச்சிரமம்.

### மநு 6-ஆவது அத்தியாயம்.

1. விரதானுஷ்டானமுள்ள துவிஜன் மேற்கூறியபடி கிருகஸ்தாச்சிரமத்திலிருந்து பரிசுத்தனாய் இந்திரியங்களை யடக்கிக்கொண்டு வானப்பிரஸ்தாச்சிரமத்தை அடைந்து தபோவனத்தில் வசிக்கவேண்டும். தான் தனித்தாவது தனது மனைவியுடன் கூடவாவது வனத்திற்போகவேண்டும்.

4. அக்கினி ஹோத்திரத்தையும் சுருக்கு சுருவமுதலிய ஹோமபாத்திரங்களையும் எடுத்துக்கொண்டு போகவேண்டும்.

5. சாலியன்னம் பலபலகாய் கிழங்கு பழம் இவைகளால் கிருகஸ்தாச்சிரமத்திற் சொல்லிய பஞ்சமகா எக்கியங்களையும் விதிப்படி செய்யவேண்டும்.

6. மான்றோல் முதலியவற்றையாவது, மரவுரியையாவது தரிக்கவேண்டும். காலை மாலைகளில் ஸ்நானஞ்செய்யவேண்டும். சடை மீசை தாடி நகம் இவைகளை வளர்க்கவேண்டும்.

14. தேன் மாமிசம் காளான் அழிஞ்சிற்பழம் இவைகளை நீக்கவேண்டும்.

23. கிரீஷ்மகாலத்தில் பஞ்சாக்கினி மத்தியிலிருந்துகொண்டும் மழைகாலத்தில் மழையிலிருந்துகொண்டும் பனிகாலத்தில் ஈரத்துணியைப் போர்த்துக்கொண்டும் தவஞ்செய்யவேண்டும்.

28. ஊர்களிற்சென்று பிக்ஷை எடுத்துண்ணலாம்.

31. அதிகவயதானபின்பு ஈசானதிக்கில் தன் தேகம் அழிகிறவரையில் ஜலத்தையும், காற்றையும் புசித்துக்கொண்டு மகாப்பிரஸ்தானமாயும் போகலாம்.

31. இவ்விதமாக எதையாவது ஒன்றை அநுஷ்டித்துத்தன் சரீரத்தை விடுகிறவன் பிரமலோகத்தில் மேலான சுகத்தை யடைவன்.

### சந்நியாச ஆச்சிரமம்.

மநு 6-ஆவது அத்தியாயம்.

34. பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், இவைகளை வரிசைக்கிரமத்திலடைந்து அந்தந்த ஆச்சிரமங்களில் செய்யவேண்டிய ஹோமம் பலி பிட்சைபோடுதல் இவைகளைச்செய்து இளைப்படைந்தவனாய் அவைகளை நீக்கிச் சந்நியாசம் செய்துகொண்டால் மேலான சுகத்தையடைவன்.

41. சந்நியாசம் பெற்றுக்கொண்டவன் கமண்டலம் தண்டம் பவித்திரம் இவை முதலானவற்றைப் பெற்றிருக்கவேண்டும். விஷய போகங்களில் விருப்பமில்லாதவனாக இருக்கவேண்டும். மௌனவிரதம் பூண்டிருக்கவேண்டும்.

42. ஒருவர் சகாயமின்றி ஏகனாய்ப் பரமாத்மாவைச் சிந்திக்கிறவனுக்கு மோக்ஷசித்தி யுண்டாகிறதை நன்றாக அறிந்து, தானுமப்படியே தனியாய்ச் சஞ்சரிக்கவேண்டும். அப்படிச்சஞ்சரிப்பவனுக்கு ஒருவருடைய சேர்க்கை பிரிவு ஆகிய இவைகளால் சுகதுக்கம் நேரிடா.

43. கிருகமில்லாதவனாயும், சமையல் செய்யாதவனாயும், ஊரில் பிட்சை எடுத்துண்ணவேண்டும். நோய்க்கு மருந்துண்ணாதவனாயும், ஸ்திரபுத்தியும் பிரமசிந்தனையுமுடையவனாயும் இரவும் பகலும் காட்டில் வசிக்கவேண்டும்.

52. தலைமயிர் நகம் மீசை இவைகளைக்களைந்து கமண்டலம், திரிதண்டம், தருப்பை, காஷாயம் இவைகளைத்தரித்

துக்கொண்டு யாவரையும் துன்பப்படுத்தாமல் ஜிதேந்திரியனு ய் ஓரிடத்திலும் நிலைபெற்றிராமல் தேசசஞ்சாரஞ்செய்யவே ண்டும்.

54. தேங்காய்ப்பாத்திரம் சுரைக்குடுக்கை மரப்பாதி ரம் தொன்னை மண்பாத்திரம் மூங்கிற்படி இவைகள் சந்நியாசி யின்பாத்திரங்களென்று கூறப்படுகின்றன.

55. ஒருவேளை பிக்ஷையெடுக்கவேண்டும். அதையும் அதிகமாக எடுத்தல்கூடாது. அதிகமாய் உணவு கொண்டால் மனம் விடயத்திற்செல்லும்.

96. தாம்பூலம் சந்தனம் பூமாலை ஆபரணமுதலிய போக்கியப்பொருள்களை அநுபவித்தலும் கீதங்கேட்டலும் கூத்துப்பார்த்தலும் பெண்களையிச்சித்தலும், அவர்களுடன் பழகலும், கோயில் அதிகாரஞ்செய்தலும், அரசரை அடுத்த லும், காஷாயவஸ்திரம் முழங்காலின்கீழ்ப்பட உடுத்தலுமா காவாம். இந்தப்பிரகாரம் சமஸ்த கர்மங்களையும், நீக்கிவிட் டுத் தானற்கதியடையும்பொருட்டு முயற்சியுடையவனுய் ஒன் றிலும் பற்றில்லாதவனுய்ச் சந்நியாசஞ் செய்துகொள்ளுகிறவ ன்பாவத்தைப்போக்குவித்து மேலான கதியையடைகிறுன்.

### பிராமணுதியர்களின் ஜீவன விருத்திகள்.

### மநு 4-ஆவது அத்தியாயம்.

3. போக விருப்பமின்றிச் சாஸ்திரப்படி மாதா பிதா முதலிய குடும்ப சம்ரக்ஷணைக்கும், தன் பிராண சம்ரக்ஷணை க்கும் உபயோகமான தன தானியங்களை யுலகத்தாரால் நிந் திக்கப்படாதனவாயும் சாஸ்திரத்திற் சொல்லப்பட்டனவாயு மிருக்கிற மேற்சொல்லப்போகிற காரியங்களாலே சம்பாதிக்க வேண்டும்.

4. ருதம் அமிர்தம் மிர்தம் பிரமிர்தம் சத்தியாநிர்தம் இவை ஐந்தினுலும் பொருளைச் சம்பாதிக்கலாம். சுநகவிருத்தி யினுல் ஆபத்தில்லாதபோது ஒருக்காலும் ஜீவிக்கக்கூடாது.

5. (1) கழனியிலும், மற்ற இடத்திலும் சிந்தினநெல்லை இரண்டு விரலால் பொறுக்குவதும், மேற்சொன்ன இடங்களில் கதிர் நெல்லைப் பொறுக்குவதும், ருதம் என்பதாம். (2) தான் யாசியாமலே வருகின்றவை அமிர்தம் என்பதாம். (3) தான் யாசித்து வருகின்றவை மிர்தம் என்பதாம். (4 a) பயிரிடுவது பிரமிர்தம் என்பதாம்.

6. (4 b) வியாபாரஞ்செய்வது சத்தியகிர்தம் என்பதாம். பிராமணன் இதனாலும் ஜீவிக்கலாம். (5) சேவக விருத்தியானது தினமாக மதிக்கப்படுவதாலும், யஜமானன் பயமுறுத்தற் குட்படுத்தலாலும், நாயின் பிழைப்புக்குச் சரியானதாலும், சுநக விருத்தியென்று சொல்லப்படுகின்றது. ஆகையால் இச்சேவகவிருத்தியை அகத்தியம் நீக்கவேண்டும்.

7. பிராஹ்மணசாதிக் கிருகஸ்தன். (1) மூன்றுவருஷம் வரையிலாவது அதற்கு அதிகமாகவாவது போதுமான தானியத்தைக் களஞ்சியத்திற்போட்டு வைத்துக்கொள்ளலாம், (2) அவ்வளவுக்குச் சக்தியில்லாதவன் ஒருவருஷத்திற்குக் குறையாம லிருக்கத்தக்க தானியத்தைச் சாலிலிட்டு வைத்துக்கொள்ளலாம். (3) அதற்குஞ் சக்தியில்லாதவன் மூன்றுநாளைக்கு பயோகமாகிய தானியத்தை வைத்துக்கொள்ளலாம். (4) அல்லது நாடோறும் சம்பாதித்துக் கொள்ளுகிறவனாகவாவது இருக்கலாம்.

8. இந்நால்வரில், முன்சொல்லப்பட்டவர்களைப் பார்க்கினும் பின்சொல்லப்பட்டவர்கள், பொருளதிகமாக இல்லாதவராதலால், யூகாதிகளால் சொற்காதி போகங்களை யடையவேண்டுமென்னும் இச்சையின்றிப் பரமாத்மாவைத் தியானிப்பதால் உயர்ந்தவர்கள்.

### பிராமணர்க்கீந்த தானபலன்.

அதனால் சகலதானமும், அந்தணர்க்கே கொடுக்கவேண்டும். அவர்களுக்குக்கொடுக்கும் பூதானத்தால் சொர்க்கமும்,

கோதானத்தால் வைத்தரணி என்னும் அக்கினி ஆற்றைக்கடத்தலும், கிருகதானத்தால் சொர்க்கம் பெறுதலும், குடைத்தானத்தால் உஷ்ணநிவிர்த்தியும், பாதரட்சைத் தானத்தால் நடையில் உண்டாகும் உபாதியொழிவும், கந்தத்தானத்தால் துர்நாற்றம் ஒழிவும், அன்னதானத்தால் சுகமும் அடைவன்.

வீட்டின்மேலே கழுகு வந்து இருந்தால் அதைப்பிராமணனுக்குத்தானஞ்செய்தாற் பாவவிமோசனமாம்.

பூனையைக்கொன்றால் பொன்னாற் பூனைசெய்து பிராமணனுக்குத்தானஞ்செய்தால் பாபவிமோசனமாம். இவைபோலுந் தானபலன்கள்பலவுள விரிக்கிற்பெருகும்.

### அந்தணர்க் கீந்ததானம் அனைத்துயிர்க் கீந்ததானமெனல்.

ஆகையால் சகல தானங்களும் பிராமணர்களுக்கே செய்யவேண்டும். அவர்களுக்குச் செய்யுந்தானம் சகலவருணத்தாருக்கும் செய்தபலனை யொக்கும். அது எங்ஙனமொக்குமெனில், ஓர் செடியின்வேரில் சலம் விட்டால் அது அம்மரத்தின் கிளை இலை பூ காய் முதலியவைகட்கும் பலனுண்டாக்குவதுபோலப் பிரமாவின் வாயினிட முண்டானவன் அந்தணனாதலால், அவனுக்குக் கொடுக்கும் உணவு அப்பிரமாவின் வாயின் வழியாகச்சென்று அவன் தோள் துடை பாதம் ஆகிய அவயவங்களிலுண்டான க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களுக்கும் பலனைக்கொடுக்கு மென்பதாம்.

### பிராமணருக்கே தானஞ்செய்யவேண்டுமெனல்.

1-ஆவது நீதிசாஸ்திரத்தில் கன்னன்வாக்கியம்.

விப்ரஹஸ்தேய நந்தத்யாத்ஸ்வபார்யாயாஞ்ச யௌவநம் |
ஸ்வாமிகார்யேஷு ச ப்ராணாந் நிஸ்சயோ மம மாதவ ||

విప్రహస్తేధనందద్యా త్స్వభార్యాయాంచ యౌవనమ్ ।
స్వామికార్యేషుచప్రాణా౯ నిశ్చయోమమ మాధవ॥

விப்ரஹஸ்தே தனந் தத்யாத் ஸ்வபார்யா யாஞ்சயௌவனம்
ஸ்வாமிகார் யேஷு சபிராணான் நிஸ்சயோமம மாதவ.

(இ-ள்) கிருஷ்ணா! தான் தேடியபொருளையெல்லாம் பிராமணர்களுக்கே தானஞ்செய்யவேண்டும்: தனது யௌவனத்தைத்தனது பாரியாளுக்குபயோகப்படுத்தவேண்டும்: தனது பிராணனைச் சுவாமிகாரியத்தில் உபயோகப்படுத்தவேண்டுமென்பது எனது நிச்சயார்த்தமெனக் கர்னன் கூறினானென்று சொல்லப்பட்டிருக்கிறது.

### உபாத்தியாயர்.

### 2-ஆவது நீதிசாஸ்திரம்.

𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 𑌕𑍁𑌲𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌕𑍃𑌷𑌿𑌵𑌾𑌣𑌿𑌜𑌾𑌤𑍍 ।
𑌅𑌧𑌮𑌾 𑌸𑍇𑌵𑌕𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌮𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌶𑍍𑌚𑍌𑌰𑍍𑌯𑍋𑌪𑌜𑍀𑌵𑌨𑌂 ।

ఉత్తమంకులవిద్యయా మధ్యమంకృషివాణిజాత్।
అధమాసేవకావృత్తి మృతిఃశ్చౌర్యోపజీవనం॥

உத்தமங்குலவித்தியாயா மத்யமங் கிருஷிவாணிஜாது
அதமாஸேவகாவிருத்திர் மிருத்திஃஸ்சௌரியோபஜீவனம்.

(இ-ள்) குலவித்தையினால் சீவிப்பது உத்தமம்; கிருஷிவாணிபத்தால் சீவிப்பதுமத்திமம்; சேவகஞ்செய்து சீவிப்பது அதமம்; சோரத்தனத்தால் சீவிப்பது செத்தபிழைப்பு; எனவே அது அதமாதமமாம். சோரத்தனத்தால் சீவிப்பது என்பது திருடிப்பிழைப்பது மாத்திரமேயன்றி, நான் காசிக்குப்போகிறேனென்றும், என்பிள்ளைக்கு உபநயனமென்றும், அநாதப்பிரேதத்தையெடுக்க வழியில்லையென்றும், என்தகப்பனுக்குப் பிதிர்சிராத்தமென்றும், பொய்சொல்லி யாசிப்பனவுமாம்.

ஆதலால் அந்தணர் தமக்குக்குலபாஷையாகிய ஆரியத்தைக்கற்றுப் பிள்ளைகளைச்சேர்த்துப் பள்ளிக்கூடம்வைத்து

உபாத்தியாயரா்யிருக்க விரும்புகிறார்கள். அவரிடங்கற்றுணர்ந்தபிள்ளைகள் மேம்பாடான உத்தியோகங்களிற் பிரவேசித்தகாலத்தில், அப்பிள்ளைகளால் அவ்வுபாத்தியாயரும் அவர்பிள்ளைகளும் மேலான உத்தியோகஞ்செய்து கொடுக்கப்பெறுகிறார்கள். மற்றும் சுபாசுபங்களில் வேண்டிய திரவியசகாய முதலியவுபகாரஞ்செய்யப் பெறுகிறார்கள். இம்மட்டோ கண்ட இடமெல்லாம் கௌரவமுண்டாம்படி அவர்களால் வழிபாடுசெய்யவும்பெறுகிறார்கள். இதைக்கண்ட ஏனையோராலும்வந்திக்கப்பெறுகிறார்கள்.

## புரோகிதம்.

இது இத்தொழிலையுடைய அந்தணன் அரசனிடத்தில் தினப்படிசென்று பஞ்சாங்கம் வாசித்துவருவதுடனே மாதப்பிரவேசம் வருடப்பிரவேசம் அமாவாசை கிருத்திகை ஏகாதசிமுதலிய பஞ்சபர்வங்களையும் பிள்ளையார்சதுர்த்தி சரஸ்வதிபூசை தீபாவளி சங்கிராந்தி முதலிய பண்டிகைகளையும் கிரகணம் உத்தராயண தெட்சணாயன முதலிய புண்ணிய காலங்களையும் உணர்த்துவதும், கல்யாணம் சீமந்தம் செய்வதற்கு முகூர்த்தங்கள் ஏற்படுத்துவம்,மகப்பேற்றில் சாதகங்குறித்து அதின் பலாபலன்களை விளக்குவதுமாம்.

இதைக் கிராமத்திலுள்ள புரோகிதப்பிராமணர்கள் மேற்கண்டவண்ணம் தினப்படி பிரபுக்கள் வீடுகள் தோறும் சென்று பஞ்சாங்கம் வாசித்துவருவதுடன், ஒவ்வொரு வீட்டிலும் இறந்துபோனவர்களின் திதியை எழுதிவைத்துக்கொண்டு இன்னதினத்திற் சிராத்தம் வருகிறதென்று முன்னறிவித்துத், தாமும் தம்முடன் வேண்டிய பிராமணர்களையும் அழைத்துக்கொண்டுபோய்ச் சிராத்தஞ் செய்வித்து அரிசி பருப்பு காய்கறி நெய் பால் தயிர் முதலியவையும் பெற்றுவருகிறார்கள். இஃதன்றிக் கல்யாணாதி சுபகாரியங்களிலுந் தக்ஷிணை பெறும்பொருட்டுத் தன்னினங்களாயுள்ள இதரபிரா

மணர்களையுஞ் சேர்த்துக்கொண்டுபோய், அவர்களுக்கும் நவக்கிரகாதி ஓமங்களில் தக்ஷிணை கொடுப்பித்தும், பலதானங்கள் கொடுப்பித்தும், தாம்பூலகாலத்து முதன் மரியாதை செய்வித்தும், ஏனையோரை மரியாதையில் பின்னிடச்செய்கிறார்கள். பின்னும் தம்பதிகளைத் தங்கள் காலில் விழும்படி செய்கிறார்கள். இவ்விதமாக ஒவ்வொரு கருமங்களினும் கருத்தாவாயுள்ள யசமானன் தங்களைப்பணியச்செய்து மேம்பாட்டை அடைகிறார்கள்.

### சாஸ்திரிகள்.

இப்பெயரையுடைய அந்தணர்கள் வேதசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்து, இதிகாச புராண ஸ்மிருதிகளில் தமக்கு வேண்டுவனவெல்லாம் எழுதி வைத்துக்கொண்டு, அரசனுக்கும் ஏனையோர்க்கும் பிரசங்கஞ்செய்கிறார்கள். அப்படிச்செய்யும்போது, அந்தணனே சகல வருணத்தினும் சகல தேவரினும் உயர்ந்தவன், அவனை இராமகிருஷ்ணாதிகள் பூசித்திருக்கிறார்கள். அந்தணனை வணங்குவதே எல்லாத்தவத்தினு முயர்ந்தது, ஆகையால் சகல பூசிதையும் சகலதானங்களும் அந்தணனுக்கே செய்யவேண்டுமென்றும் போதிப்பவர்களாம்.

இன்னும் அவ்வந்தணர்கள் சோடசகிரியைகளினும் பிராயச்சித்தாதிகளினும் பிரேத கருமங்களினும் வருஷாப்பியங்களினும் அதற்குரிய கிரியைகளைச்செய்து, தக்ஷிணை முதலியவைகளைப்பெற்றும், வஸ்திரம் குடை பாதரக்ஷை வெள்ளிப்பாத்திர முதலிய பண்டங்களைப் பெற்றும், தங்களை ஏனைய சாதியார் பிதிரூகப்பாவித்துக் கோதானம் பூதானம் சொர்ன தானம் வஸ்திரதான முதலியவைகள் கொடுக்கவேண்டுமென்றும் போதித்து, வழக்கத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

### சமாராதனை. (Civil food.)

பிராஹ்மணோபோசனப்பிரியஃ (அந்தணர்கள் சாப்பாட்டில் பிரியமுடையவர்கள்) எனப்பழமொழியிருப்பதால்

சிவாலய விஷ்ணுவாலயப் பிரதிஷ்டைகளினும் சிரஞ்ஞோத்தாரணம் கும்பாபிஷேகம் பிரமோற்சவாதி காலங்களினும், அரசன் பிறந்தநாள் பட்டாபிஷேகம் கல்யாணம் சீமந்தம் மகப்பேறு முதலிய காலத்தும், 2-3-4-மண்டலம் வரையில், வந்த பிராமணர்களுக்கெல்லாம் அன்னமிடவேண்டுமென்றும் அல்லது லக்ஷப்பிராமண போஜனஞ்செய்யவேண்டுமென்றும்,' அவ்வந்தணர்களே போதிக்கிறார்கள்.

நீதிசாஸ்திரத்தில்.

3-ஆவது அர்ச்சுனன் வாக்கியம்.

𑌆𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌣𑍋𑌤𑍍𑌸𑌵𑌾𑌵𑌿𑌪𑍍𑌰𑌾 𑌗𑌾𑌵𑍋𑌨𑌵𑌤𑍍𑌰𑌣𑍋𑌤𑍍𑌸𑌵𑌾𑌃 ॥
𑌭𑌰𑍍𑌤𑍍𑌰𑌾𑌗𑌮𑍋𑌤𑍍𑌸𑌵𑌾𑌨𑌾𑌰𑍍𑌯𑌃 𑌸𑍋𑌹𑌂𑌕𑍃𑌷𑍍𑌣𑌰𑌣𑍋𑌤𑍍𑌸𑌵𑌃 ॥

ఆమంత్రణోత్సవావిప్రా గావోనవత్రణోత్సవాః।
భర్త్రాగమోత్సవానార్యః సోహంకృష్ణ రణోత్సవః॥

ஆமந்திரணோச்சாவாவிப் பிரா
காவோநவத்திரணோச்சவா
பர்த்தாக மோச்சவாநார்யஃஸ்
ஸோஹம் கிருஷ்ணர்த்தணோச்சவஃ

(இ-ள்.) பிராமணர்களுக்கு அன்னியர்வீட்டுப் போசனத்திற் பிரியம், பசுக்களுக்குப் பச்சைப்புல்லினிடத்துச் சந்தோஷம், பதிவிரதைக்குத் தேசாந்திரம்போன புருஷன் வந்தவிடத்துச்சந்தோஷம், எனக்கு யுத்தத்தினிடத்துச் சந்தோஷம். என அர்ச்சுனன் கூறியிருத்தலால், அவ்வாறே அந்தணர்கள் அன்னியர்வீட்டுப் போசனத்திற் பிரியமுடையவர்களாதலின் தங்களுக்குக் கைப்பு தித்திப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு கார்ப்பு ஆகிய அறுவகைச்சுவையுடன் கூடிய, உண்பன தின்பன நக்குவன பருகுவனவாகிய நால்வகை யுண்டிகளும், அதிரசம் அப்பம் தோசை வடை பாயசாதி சிற்றுண்டிகளும் மா

பலா வாழை முதலியவற்றின் பழவர்க்கங்களும் நெய் தயிர் பால் முதலிய இரசவர்க்கங்களுடன் கூட்டி உண்பித்துப், பச்சைக்கர்ப்பூரம் குங்குமப்பூ கோரோசனை சேர்த்துள்ள பரிமளகந்தமும், வெறுக்கும்படியான தட்சணை தாம்பூலமுமளித்து உபசரிக்கவேண்டுமென, விதிகள் ஏற்படுத்திவிட்டார்கள்.

பின்னும் வைணவாலயங்களில், பிரமோற்சவ காலத்தும், பஞ்சபருவமாதிய விசேடகாலத்தும், பருப்புப்பொங்கல் சருக்கரைப்பொங்கல் புளியோதனம் ததியோதனம் எள்ளோதன முதலிய சித்ரான்னங்கள் அவரவர்கள் சக்திக்கேற்ப 10-8-தளிகைகளும் தோசை வடை சுண்டல்களும் சுவாமிக்கு நிவேதிப்பித்து ஆராதித்து "வடைகண்டேன் தோசைகண்டேன் அப்பளங்கண்டேன் அதிரசங்கண்டேன்" எனவைணவப்பிராமணர்கள் கோஷ்டிசெய்து, வந்த பிராமணர்களுக்கெல்லாம் வினியோகஞ் செய்யவேண்டுமென ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 'இதனால் இக்காலத்துள்ள ஸ்மார்த்தர்கள் தங்கள் நெற்றியிலுள்ள விபூதிப்பூச்சையொழித்து, வயிறு வளர்க்கமாட்டாது வைஷ்ணவமதம் நமதென்று, துவாதச நாமங்களைச்சாத்தி வைணவராகிறார்கள். அதனாலன்றோ கலியில் வைணவமதம் மேலிட்டது.

### யாக காரியம். (Military food.)

பின்னும் அவ்வந்தணர்கள், அசுவமேதமுதலிய யாகங்கள் அரசனுக்கு வெற்றியையும் ஐசுவரியத்தையும் கொடுக்குமென்று போதித்து, யாகஞ் செய்யுமிடத்தில் வெகுதூரம் பந்தலிட்டுத் தேசங்கள்தோறும் பறையறைவித்து அங்குள்ள பிராமணர்களையெல்லாம் அழைப்பித்து, யூபஸ்தம்பங்களைநாட்டி, அவைகளில் *நூற்றுக்கணக்குகளாயுள்ள ஜீவராசிகளைப்

---

*நூற்றுக்கணக்கு வான்மீகராமாயணம் 14-ஆவது சருக்கம் அசுவமேதயாகத்தில் 300-க்கு மேலாக விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வனவாகிய பசுக்கள் யூபஸ்தம்பத்திற் கட்டப்பட்டிருந்தன என்பதனாலறிக.

பூட்டி உயிர்களைப்போக்கி, அவற்றின் தேகங்களைபழித்து மாமிசங்களைத் தேவர்களுக்கு நிவேதிப்பித்து, குடங்குடமாக நெய்களைச்சொரிந்து அம்மாமிசங்களைப் பாகஞ்செய்து, அறுவகைச் சுவையுடன் சிற்றுண்டிகளோடும் வந்த பிராமணர்களுக்கெல்லாம் பகிர்ந்தூண்பித்துத் தாங்களும் உண்கிறார்கள். இது (**Military food**) மாமிசபோசனம் அல்லது விசேடவிருந்தாம். சமாராதனையிற் செய்யும் உபசரிப்பும் செய்கிறார்கள்.

இதுவன்றியும் அசுவமேதயாகத்தில் தசரதச்சக்கரவர்த்தி கௌசலையாதி தனதுபத்தினிமார்களைத் தமது யாகப்பசுக்களில் முதன்மையாயுள்ள அசுவத்தினிடத்தில் செய்யவேண்டிய சடங்குகளெல்லாஞ்செய்து மூன்று பொன்னூசிகளாலே ஆயுதநாட்டுமிடங்களைக்கீறி இடம் வலம் சுற்றிவந்து ஓர் இரவு முழுதும் பாரியர்களாக இருக்கவிட்டாரென்று வான்மீக இராமாயணத்தில் கூறப்படுகின்றது. இதற்குப் பிரமாணமாகவே, Religions Reform, Part III. Vedic Hinduism. என்னும் நூலில்,

In the Ramayana the horse sacrifice is employed by the childless Dasaratha as the meaus of obtaining sons. As one step towards this the principal queen Kausalya, is directed to lie all night in closest contact with the dead horse. "In the morning" says Wilson "when the queen is released from this disguesting, and in fact, impossible, contiguity a dialogue, as given in the yajush, and in the Ashvamedha section of the Sathapatha Brahmana, and as explained in the Sutras, takes place between the queen and the females accompanying or attended upon her and the principal priests, which, the brief, is in the highest degree both silly and obscene."

தசரதச் சக்கரவர்த்தி பிள்ளையுண்டாவதற்காக அசுவமேதயாகஞ்செய்தார் அப்போது அதில் தமது சிரேஷ்ட பாரியாளாகிய கௌசலாதேவியை ஓர் இரவுமுழுதும் இற

ந்துள்ள அசுவத்தைத் தழுவிக்கொண்டு படுத்திருக்கச் செய்தார், இது உல்சன்துரை சொல்வதுபோல, அருவருப்பானதாயும் உண்மையாகவே, அசாத்தியமாயுள்ளதாயு மிருக்கிறது. இனி அவ்வசுவத்தின் தேக சம்மந்தத்தினின்றும் நீங்கினவுடனே, யசுர்வேதம் சதபதப்பிராமணத்திலும் அசுவமேத அத்தியாயத்திலும் சூத்திரங்களிலும் விவரித்தபடி "பொழுதுவிடிந்தவுடனே இராசபத்தினிக்கும் அவளைச்சூழ்ந்துள்ள மாதர்களுக்கும் பிரதான ஆசாரியர்களுக்கும் ஒரு சம்பாஷணையுண்டாயிற்று. அது அதிகச்சுருக்கமானதாயிருந்தபோதிலும் சொல்லுதற்கு மிகவும் அசங்கதமாயும் அருவருப்பையுண்டாக்குவதாயும் இருக்கிறது." என்று கூறப்படுகின்றது.

இஃதன்றியும், பௌண்டரீகயாகத்தில், சகலசனங்களும் நிறைந்துள்ள யாகசாலையில், மத்தியானகாலத்தில் பந்தலின் மேல் ஓர் விதந்துவாகிய பிராமணஸ்திரீயையும் ஓர் திடமுள்ள பிரமசாரியையும் புணர்ச்சிசெய்யவிட்டு, அவர்கள் சுக்கில சுரோணிதங்கள் அந்தயாகத்தில் விழவேண்டுமெனப் பலவிதமான ஆபாசக்கதைகளைக்கற்பித்து, அரசர்களையுங் குடிகளையு மயக்கிப் பசுபந்த யாகஞ்செய்து வருகிறார்கள்.

இவ்வித யாகாதிகளில் அவ்வந்தணர்கள் வேண்டுமான வரையில் சுத்தபோசனமும் மாமிசபோசனமுமுண்டு ஆடையாபரணங்களையும் கோதானபூதானங்களும் பெற்று வெறுக்கத் தக்கபடி தட்சணைகளையும் பெறுகிறார்கள்.

தசரதச் சக்கரவர்த்தி அசுவமேத முடிவில் *அத்வர்யு ஹோதா உத்காதா பிரமா என்கிற முக்கியமான இருத்து

* இருத்துவிக்கு யாகஞ்செய்விப்பவராம். அவர்களில் முக்கியமாயுள்ளவர் நால்வர். 1. அத்வர்யு யாகம் நடத்தவேண்டிய விதிகளைச் சொல்பவர். 2. ஹோதா அவ்விதிப்படி ஹோமஞ்செய்கிறவர். 3. உத்காதா அங்கு அழைக்கப்பட்ட தேவதைகளை அந்தந்த வாக்கியங்களாலே துதிப்பவர். 4. பிரமா - இவர்கள் யாவருந் தவறுமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளுகிறவர்.

விக்குகளுக்குத் தமது பாரியர்களாகிய கௌசலை கைகேசி சுமித்திரையாதியர்களைத் தட்சணையாகக் கொடுத்துவிட்டார். அந்த இருத்துவிக்குகள், இராஜபத்தினிகளைக் கைப்பற்றிக்கொண்டு சிலநேரந்திரிந்தபின்பு, அவர்களுக்கீடாகத் திரவியங்களைப் பெற்று, அவர்களை அவ்வரசனுக்கே கொடுத்துவிட்டார்கள்.

இஃதன்றி, அக்கினிஷடோமமும், உக்த்தியமும், ஷோடசியுமாகிய மூன்று கிருதுக்களும் (கிருது=யாகம்) நடத்தி, ஜோதிஷ்டோமம் ஆயுஷ்டோமம் அதிராத்திரம் அபிஜித் விசுவஜித் அப்த்தோர்யாமம் நடத்தி, யாகம் முடிந்தவுடன் சக்கரவர்த்தியார் மனமகிழ்ந்து, உத்காதாவுக்கு அயோத்திக்கு வடபாலுள்ள நாட்டையும், ஹோதாவுக்குக் கீழ்பாலுள்ள நாட்டையும், அத்வர்யுவுக்கு மேல்பாலுள்ளநாட்டையும், பிரமாவுக்குத் தென்பாலுள்ளநாட்டையும், தட்சணையாகக் கொடுத்தார். அவர்கள் அவற்றைப்பெற்றுக்கொண்டு "அரசனைநோக்கி மகாப்பிரபுவே! உமது உதாரகுணத்தை வியந்தோம்; ஆயினும் வைதீக கருமங்களிலுள்ள எங்களுக்குப் பூமியாலாகவேண்டுவதொன்றுமில்லை; ஆகையால் அந்தப்பூமிக்கீடாகத் திரவியங்களைக்கொடுத்து அந்தப்பூமியை நீரே யாளுமெனக் கொடுத்துவிட்டார்கள். பின்னும் யாகத்துக்கு வந்திருந்த பிராமணர்களுக்கு ஆடையாபரணங்களையும் வேண்டுமான திரவியங்களையும் கொடுத்தனுப்பினரென்று கூறப்பட்டிருக்கிறது." இதனால் சோமபானமும் மாமிசபோசனமும் அந்தணர்கள் செய்து வருவதாகத் தெரிகிறது.

அந்தணர்களுக்கு வரும்படி ஏற்பாடு.

மநு. 7-134. வேதமோதின பிராமணன் சாப்பாட்டுக்கில்லாமற் பசியினாலே துன்பப்படுவானாயின் தேசமெல்லாஞ் சீக்கிரத்தில் க்ஷாமத்தினால் துன்பப்பட்டு அழிந்துவிடும்.

135. தகப்பன் பிள்ளையைக் காப்பாற்றுவதுபோல் வேதசாஸ்திர முணர்ந்த அந்தணர்களுக்கு அரசன்தகுந்த சீவனோ

பாயத்தை ஏற்படுத்தி அவர்களைத் திருடர் முதலானவரினின்றும் பயப்படாமற் காப்பாற்றவேண்டும்.

9-243. மகாபாவிகளுக்கு விதித்த தண்டப்பொருளையும் அவர்களிடத்தில் தானாகக் கவர்ந்த பொருளையும் அரசன் தான் எடுத்துக்கொள்ளக்கூடாது. எடுத்துக்கொண்டால் அவர்கள் பாவத்தை அரசனடைவான்.

244. மேற்கண்ட பொருளை யெல்லாம் வேதமோதும் பிராமணனுக்குக் கொடுக்கவேண்டும்.

323. அரசன் தனக்கு மூப்பு வந்தகாலத்தில் செலவழிந்ததுபோக மிகுந்திருக்கிற தண்டப்பொருளையெல்லாம் பிராமணர்களுக்கே கொடுத்துவிடவேண்டும்.

8-38. அரசன் பூமியிலிருந்து புதையல்கண்டெடுத்தால் அதிற் பாதியைப் பிராமணர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

39. பிராமணனுக்குப் புதையலகப்பட்டால் முழுதும் அவனே யெடுத்துக்கொள்ளலாம் ஏனையோர்க்கு அகப்பட்டால் பாதி அரசனுக்குக் கொடுக்கவேண்டும். இன்னு மிவைபோல்வன பலவுமாம்.

அக்கினியில் ஓமஞ்செய்யப்பட்டது ஒருக்கால் உருகியும் உலர்ந்தும் கண்ணுக்குத் தெரியாமலும் போய்விடும்; பிராமணன் முகமாகிற அக்கினியில் ஓமஞ்செய்தது அழிவற்றதாகவே பலனைக்கொடுக்கும். (7-84.)

### பிராமணர்களினுட்பிரிவு.

| தமிழ்ப்பிராமணர்கள். | தெலுங்குப்பிராமணர்கள். |
|---|---|
| சோழதேசத்துவடமர். | காணகம்முலு. |
| வடதேசத்துவடமர். | முரிக்கிநாட்டார். |
| வாத்திமார். | வெலநாட்டார். |
| அஷ்டசகஸ்த்திரத்தார். | வேகிநாட்டார். |
| பிரஹசரணத்தார். | நீயோகியர். |
| காணியாளர். | தெலுங்காணியர். |
| பூக்ஷாணியர். | மகராஷ்டர். |
| சோழியர். | கொங்கணத்தர். |
| வீழியர். | கன்னடப்பிராமணர். |
| கேசிகர். | கர்நாட்டகர். |
| குருக்கள். | ஆறுவேலுபிராஹ்மணர். |
| ஆழியாளர். | அறுபதுவக்கலுபிராஹ்மணர். |
| போற்றிமார். | பனக்கநாட்டார். |
| சுக்கிலயசுரர் அல்லது | கம்மாஹுரார். |
| மாத்தியானசண்டாளர். | குஜராத்தியப்பிராஹ்மணர். |
| மூவாயிரவர்வர். | |
| முக்காணியர். | இன்னும் இவைபோல்வன |
| பட்டமார். | பல பிரிவுளவாம். |
| வடகலையையங்கார். | |
| தென்கலையையங்கார். | |

### வந்தனமுறை.

ஆபஸ்தம்பர்.

வேதியனை *அபிவாதனஞ் செய்யும்போது வேதியன் வலது கையினைச் செவிக்குச்சரியாகவுயர்த்தியும், அரசன் மார்பினுக்குச் சரியாகவும், வைசியன் இடைக்குச்சரியாகவும், சூத்திரன் தாழ்ந்த தரையோடொப்பவுந் தமது கைகளைவைத்தும் அஞ்சலி செய்யவேண்டும்.

### ஆசீர்வாதஞ் செய்யும்வகை.

அந்தணன் தன்னைப்பணிகிற அந்தணனுக்கு சுவஸ்தி என்றும், அரசனுக்கு ஆயுஷ்மான் என்றும், வைசியனுக்கு

* அபிவாதனம்=வணக்கம்.

வர்த்ததாம் என்றும், சூத்திரனுக்குச்சுவாகதம் என்றும், கூற வேண்டும். சுவஸ்தி=க்ஷேமமாகுக. ஆயுஷ்மான்=தீர்க்காயுளுடையவனாகுக. வர்த்ததாம்=விருத்தியடைக. சுவாகதம்=நன்றாக வந்தனையோ என்பனவாம்.

### க்ஷேமம் வினாதல்.

மநு.

வந்தவனை, அந்தணன் க்ஷேமம் விசாரிக்குமிடத்து, அந்தணனைக் குசலமா எனவும், அரசனை அநாமயமா எனவும், வைசியனை க்ஷேமமா எனவும், சூத்திரனை ஆரோக்கியமா எனவும், வினாவவேண்டும். குசலம்=அறிவின் சுகவிருத்தி. அநாமயம்=உபத்திரவங்களில்லாமை. க்ஷேமம்=இருந்தநிலை கெடாதிருத்தல். ஆரோக்கியம்=நோயில்லாமையாம்.

### வேதியன் மாட்டேனையர் விடயம்.

சாதாதபர்.

செல்வத்தை விரும்பிய அரசன் முதலிய வருணத்தார் எப்பொழுதும் வேதியனுக்கு அபிவாதனமும் நமஸ்காரமுஞ் செய்யவேண்டும். தலைகுனிந்து வணங்குதலுஞ் செய்க.

இருபிறப்பாளன் சூத்திரனுக்கு நமஸ்காரஞ்செய்தால் அப்போது கட்டியிருந்தவுடையோடு நீராடவேண்டும்: பின் நூறு வேதியர்க்கு நன்றாக அபிவாதனஞ்செய்தால் சுத்தனாவான்.

மநு. 2-150. இரண்டாவதுஜனனத்தை யுண்டுபண்ணுகிறவனாயுந் தன் சாதி தருமத்தை வேதத்திற் சொல்லியபடி அறிவிக்கிறவனாயுமிருப்பவன், தன்னைவிடச் சிறியவனாயிருப்பினும் சாஸ்திரப்படி தகப்பனுக்குச் சரியாகிறான்.

2-135. பத்துவயதுள்ள பிராமணனையும், நூறுவயதுள்ள க்ஷத்திரியனையும், தகப்பன் பிள்ளையாக வறியவேண்டும். அங்ஙனம் அறிவதால் பிராமணன் தகப்பன்மரியாதையையும்

க்ஷத்திரியன் புத்திரமரியாதையையும், வகிக்கவேண்டும்.

பிராமணர் உலகாளும் அரசனையே இங்ஙனங்குறைத்துக் கூறுவரானால் ஏனையர்களை மனம்போனவாறு குறைத்துக் கூறுவதற்குத் தடையாதிருக்கின்றது.

### ஆரியர் ஒழுக்கம் பார்சீகரையொத்ததெனல்.

' ஆரியர் பார்சீகக்குடிகளாகையால் அவர்கள் இந்தியாவில் வந்து வெகுகாலமானபோதிலும் அவர்கள் ஒழுக்கம் பெரும்பாலும் அப்பார்சீகர் ஒழுக்கத்தை ஒத்திருக்கின்றது. எங்ஙனமெனில்:—

1. பார்சீகர் அக்கினியைவணங்குகிறார்கள்; அதுபோலவே, ஆரியர்களும் அக்கினிஹோத்திரம் அக்கினிஷ்டோமம் முதலிய அக்கினியைப்பூசிக்கிறார்கள்.

2. பார்சிகர் *ஆன்மா வென்னும் பதார்த்தம் ஆண்பாலுக்கேயொழியப் பெண்பாலுக்கில்லை ஆகையால் பெண்கள் வேதங்களை ஓதவும் கடவுளை வணங்கவுங்கூடாதெனத் தடுக்கிறார்கள். அதுபோலவே ஆரியரும ஸ்திரிகள் வேதம் ஓதல் கூடாதெனக் கூறுகிறார்கள்.

3. பார்சிகர் குதிரை ஆடு மாடு முதலியவற்றைப்புசிக்கிறார்கள். அதுபோலவே ஆரியரும் யாகஞ்செய்கிறோமென்று குதிரை ஆடு மாடு முதலியவற்றைக்கொன்று தின்னுகிறார்கள். இவ்வாரியர்களுக்குக் கல்யாணகாலத்தில் "மதுபர்க்கம்" என்னும் ஓர்சடங்கு ஏற்பட்டிருக்கின்றது. மதுபர்க்கம் என்பது கோமாமிசபக்ஷணமாம். இதைக் கல்யாணகாலத்தில் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் ஊட்டுவதாம்.

அது இக்காலத்தில் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக வெண்கலப்பாத்திரத்தில் தயிர் நெய் தேன் கலந்து அதனைக்கோமாமிசமாகப்பாவித்து ஊட்டுகிறார்கள். இவைகளின் விரிவை

---

* ஆன்மா என்பதற்கு ஈண்டு அறிவென்பது பொருள்.

எ. சி. பாஸ்வெல் துரையாற் செய்யப்பட்ட 1873-ஆம் வருஷத்திய நெல்லூர்ச்சில்லாச் சரித்திரதிற் கண்டுணர்க மேற்கூறிய மதுபர்க்கம் பஞ்சாமிர்தமென மநுவில் கூறப்படுகிறது.

பின்னும் சிராத்தகாலங்களிலும் தங்கள் பிதுர்களுக்கு மாமிசங்களைச் சமைத்துப்படைப்பது வழக்கமாம். அவைகளுக்குப்பதிலாக இக்காலத்தில், கல்யாணபூசினிக்காய்க்கறியும் உழுந்துவடையும் பாயசமும செய்துபடைக்கிறார்கள். கல்யாணபூசினிக்காய் பெரிய மாமிசத்துக்கும், உழுந்துவடை ஆட்டிறைச்சிக்கும், பாயசம் சுராபானத்துக்கும், ஒப்பாகப் பாவித்துச்செய்கிறார்கள்.

**அந்தணன் சூத்திரனுக்குத் தர்மசாஸ்திரம் உணர்த்தலாகாதெனல்,**

80. சூத்திரனுக்கு இம்மைக்குபயோகமான அர்த்தசாஸ்திரத்தைச்சொல்லக்கூடாது.

தருமம், விரதம் இவைகளை ஒரு பிராமணனை முன்வைத்துக்கொள்ளாமல் நேராயவனுக்கு உபதேசித்தல்கூடாது.

81. எந்தப் பிராமணன் சூத்திரனுக்கு நேராகத் தருமத்தையும் விரதத்தையும் உபதேசிக்கிறானோ அவனந்தச்சூத்திரனோடுகூட அசம்விருதமென்னும் இருளில் மூழ்குகிறான்.

**அந்தணன் இன்ன இடங்களில் வசிக்கத்தகாதெனல்.**

4-61. சூத்திரன் இராசாவாயிருக்கிற இராச்சியத்திலும், தருமமறியாதவர்கள் பாஷண்டர்கள் இவர்கள் வசிக்கும்படியான கிராமத்திலும், சமீபத்தில் சண்டாளர் வசிக்கின்ற கிராமத்திலும், பிராமணன் வாசஞ்செயதல்கூடாது

**தண்டனைவிதி.**

மநு 8.270. சூத்திரன் துவிசர்களைக் கொடுமையாக வைதால் அவன் தாழ்ந்தவிடமான காலிற் பிறந்தவனாதலால் அவனுக்கையறுத்துவிடுக.

271. துவிசர்களைப் பெயர் சாதி இவைகளைச்சொல்லி யிகழ்ச்சியாக வைகிற சூத்திரன்வாயில் பத்தங்குலமுள்ள எஃ குக்கம்பியைக் காய்ச்சி எரிய எரிய வைத்துவிடுக.

272· அகங்காரத்தால் நீ இதைச்செய்யவேண்டுமென்று பிராமணனுக்குத் தருமத்தையுபதேசிக்கிற சூத்திரனுடைய வாயினுங் காதிலும் எண்ணெயைக்காய்ச்சியூற்றவேண்டும்.

279. சூத்திரன் துவிஜசாதிகளினது எந்தெந்த அவயவங்களைக் கையினுலாவது ஆயுதத்தினுலாவது அடிக்கிறானோ அவனுடைய அந்தந்த அவயவங்களைக் குறைக்கவேண்டுமென்று மநுப்பிரசாபதி சொல்லியிருக்கிறார்.

280. கோபத்தினுற் கையையாவது தடியையாவது தூக்கியடித்தால் அவன் கையையும் அவன் காலையும் சேதிக்கவேண்டும்,

281. பிராமணனுடன் அவனுசனத்திலிருந்த சூத்திரனை அவனுக்குப் பிராணஹானிவாராமலிருக்கும்படி, இடையிற் சூடுபோட்டாவது ஆசனத்தில் சிறிது அறுத்தாவது ஊரைவிட்டுத்துரத்தவேண்டும்.

282. பிராமணனைப்பார்த்துச் சூத்திரன் அகங்காரத்தினுல் காறி உமிழ்ந்தால் இரண்டு உதடுகளையும் அறுக்கவேண்டும். மூத்திரத்தை மேலேவிட்டு அவமானஞ்செய்தால் ஆண்குறியையறுத்துவிடவேண்டும். மலத்தைமேலேயெறிந்து அவமானஞ்செய்தால் அவன் ஆசனத்தைச் சேதிக்கவேண்டும்.

283. அகங்காரத்தால் தலைமயிர் தாடி மீசை கழுத்து ஆண்குறி இவைகளைப்பிடிக்கிற சூத்திரன்கைகளை யோசியாமல் வெட்டவேண்டும்.

325. பிராமணனது பசுக்களையபகரித்தவனையும், யாகப் பசுவை யபகரித்தவனையும், அவனுடையபாதிக்காலை வெட்டவேண்டும்.

374. சூத்திரன் காக்கப்படாத துவிஜசாதிகளின் மனைவியைப்புணர்ந்தால் அவனது பீசம் ஆண்குறி இவைகளை அடியோடே அறுக்கவேண்டும். காக்கப்பட்டஸ்திரீயைப்புணர்ந்தால் தேகமுழுதும் வெட்டி அவனுடைய எல்லாப்பொருள்களையும் கவருக.

9-248. பிராமணன் பொருளைப் பிடுங்கிக்கொண்டு அவனை அடித்துத்துன்பப்படுத்துகிற சூத்திரனைப் பயங்கரமான சித்திரவதைசெய்து கொல்லவேண்டும்.

**அந்தணனுயிர்க்கும் சூத்திரனுயிர்க்கும் உள்ளபேதம்.**

மநு. 8-380. பிராமணன் எப்படிப்பட்ட பாவங்கள் செய்தாலும் அவனைக் கொல்லாமற் காயமின்றி அவன் பொருளுடன் அவனை ஊரைவிட்டுத் துரத்தவேண்டும். *

381. பிரம்ஹத்தியைவிட அதிகமானபாவம் உலகத்திற்கிடையாது; ஆதலால் பிராமணனைக் கொல்லவேண்டுமென்று அரசன் மனத்தினாலும் நினைத்தல்கூடாது. *

379. பிராமணனுக்குத் தலையை முண்டிதஞ்செய்வது கொலைத்தண்டமாகும். மற்ற வருணத்தாருக்குக் கொலைத்தண்டமுண்டு. *

துர்க்கையானவள் ஓர் மனித பலியிலுண்டாகும் உதிரத்துக்காக 1,000-வருடகாலம் சந்தோஷிப்பள். அப்படியிருந்தும் பிராமணனைக் கொல்லமாட்டாள்.

மகாவிஷ்ணுவின் வாகனமாகிய கருடன் உலகத்திலுள்ள செந்துக்களையெல்லாம் கொறித்துவிடும். அது பிராமணனைக் கொறித்தால் அதன் வயிற்றிற் சகிக்கப்படாத நோயுண்டாகிறதாம்.

---

* இவற்றால் மநுநீதி அந்தணருக்காகவே ஏற்பட்ட நூலாகவிருக்கிறது.

பிராமணன் உயிர் மிகவும் அருமையுள்ளதாம். அதனால் பிராமணன் தலைக்குத் தீங்குநேரிடுங்காலத்தில் அவன் தலைக்கீடாகச் சூத்திரனுயுள்ளவன் தன்றலையைக்கொடுத்து அவனைக்காப்பாற்றவேண்டும்.

சூத்திரனுயிரோவென்றால் அற்றன்று. பிராமணனுக்காகவே அவனைச் சிருட்டிக்கப்பட்டிருக்கின்றபடியால் அவனைப் பிராமணன் என்னசெய்தாலுஞ் செய்யலாம்.

அந்தணனுக்குக் கோபம்வந்தால் சூத்திரனைக் கொடுமையாகத் தண்டிக்கலாம்.

அந்தணன் சூத்திரனைக்கொன்றால் அது ஒரு பூனை அணில் காடை தவளை நாய் உடும்பு கோட்டான் காகம் இவைகளைக் கொன்றதற் கொப்பாம்.

இதனாலந்தணனுயிர் கரும்பாகவும், சூத்திரனுயிர் வேம்பாகவும் மதிக்கப்படுகின்றன. மேற்குறித்தவைகளை ஆலோசிக்கும்போது மிகக் கொடுமையினுங் கொடுமையென்பதும் ஆரியர்கள் அநீதியுடையாரென்பதும் தெளிவாக விளங்குகின்றன.

**அந்தணன்சொற்படி அரசன் நீதி செலுத்தவேண்டுமெனல்.**

மநு. 7-145. அரசன் தினப்படி காலையிலெழுந்து ஜெபதவமுடித்துப் பிராமண பூசைசெய்து பின்பு சபைக்குவரவேண்டும்.

37. அரசன் தினப்படி அந்தணர்களை உபசரித்து அவர்கள் சொல்லுகிறபடி நீதிசெலுத்தவேண்டும்.

39. தான் நியாயமறிந்தபோதும் பிராமணர்களிடத்து நியாயத்தை வணக்கமாகக்கேட்கவேண்டும்.

11-31. தருமமறிந்த பிராமணன் அரசனிடத்தில் ஒரு வழக்குஞ் சொல்லிக்கொள்ளவேண்டியதில்லை; தனக்கபகாரஞ் செய்பவர்களைத் தானே சிக்ஷைசெய்யலாம்.

33. அதர்வணவேதத்திற் சொல்லிய ஆங்கிரச முதலிய ஆபிசார மந்திரங்களை யோசியாமற் பிரயோகிக்கலாம். ஆபிசாரம்=மாரணமந்திரம்.

34. க்ஷத்திரியன் தன் புஜபலத்தினால் தன் ஆபத்தைப் போக்கவேண்டும். வைசிய சூத்திரர்கள் பொருளைக்கொடுத்து ஆபத்தைப் போக்கிக்கொள்ளவேண்டும், பிராமணன் மேற்சொன்ன ஆபிசாரமந்திரத்தினால் ஆபத்தைப்போக்கிக் கொள்ளவேண்டும்.

**க்ஷத்திரியன் அந்தணர்க்குள் அடங்கியதற்குக்காரணம்.**

இருக்குவேதம், ஐதரேயப்பிராஹ்மணம் 7-ஆவது அத்தியாயம் 7-ஆவது பஞ்சகத்தில் அரசனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்யுஞ் சடங்குகளில், அவ்வரசனை "நான் பிராஹ்மணரிடத்தும், க்ஷத்திரியரிடத்தும், மூன்றுகாலத்தும் ஸ்திரமாய் நிற்கிறேன்" என்று சொல்லுவித்துச் சத்தியப்பிரமாணம் வாங்கப்பட்டிருத்தலேயாம். அன்றியும் ஆரியர் இந்தியாவை ஜெயித்தபோது தங்களுக்குள் சாதிப்பிரிவுகள் செய்துகொண்டார்கள். அப்போது பிராமணன் முதலானவனென்றும், க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் அவனுள் அடங்கி நடக்கவேண்டுமென்றும், மநு முதலிய சட்டங்களை ஏற்படுத்தி அவைகளின்படி க்ஷத்திரியனாக நியமிக்கப்படுவோன் தங்களுக்கு அடங்கி நடக்கவேண்டுமென்றும்,பிரமாணம் அல்லது உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

அதனால் அந்தணர்சொற்படி அரசன் நடக்கவேண்டுமென்பது ஆதியில் ஏற்பட்டது. அந்த உடன்படிக்கையுட் சிலவற்றைக்காட்டுதும்.

313. அரசனுக்குப் பொக்கிஷங்குறைந்த காலத்தும் அதிகத் தீர்வையேற்படுத்திப் பிராமணர்களுக்குக் கோபம் வரச்செய்யக்கூடாது. அந்தணர் கோபிப்பாராயின் அரசன் தன் சேனை வாகனத்தோடும் அழிந்துபோவான்.

314. அக்கினி எல்லாவற்றையும் தகிக்கிறதும், சமுத்திரம் உப்பு நீரானதும் சந்திரன் விருத்திக்ஷயமடைந்ததும், அந்தணர் சாபத்தினாலன்றோ? அவர்கள் கோபித்தால் எவன்றானழியமாட்டான்.

315. திரிசங்குக்காக நூதனசொற்கத்தைச் சிருட்டித்ததும், திக்குப்பாலகர்களையும் தேவர்களையும் மனிதராகச் சிருட்டித்ததும், அந்தணரல்லவா? அவர் கோபிக்கின் எவன் க்ஷேமத்தையடைவான்.

316. உலகங்களும் தேவர்களும் தத்தம் நிலையில் நிற்பது அந்தணரீலல்லவா? அவரை எவனால் ஹிம்சிக்கக்கூடும்.

317. வைதிக கருமமாயிருந்தாலும் லௌகீக கருமமாயிருந்தாலும் அக்கினி எப்படி மேலானதெய்வமாயிருக்கிறதோ அப்படியே பிராமணன் ஞானியாயிருந்தாலும் மூடனாயிருந்தாலும் அவனே மேலான தெய்வமாவன்.

318-319. பிராமணன் துற்செய்கையுள்ளவனாயிருந்தபோதிலும் சகலமான சுபாசுபங்களிலும் பூசிக்கத்தக்கவன். ஏன் எனில் அவன் மேலான தெய்வமாதலால்.

320. பிராமணர்களுக்கு எப்போதும் அதிக்கிரமஞ்செய்து துன்பப்படுத்துகிற க்ஷத்திரியனைப் பிராமணனே சாபத்தினாலாவது மாரண ஹோமத்தினாலாவது அடக்கிறவனாயிருக்கிறான்; ஏனென்றால் க்ஷத்திரியன் பிராமணனிடத்திலுண்டானதால்.

321. ஜலத்தினின்று அக்கினியும், பிராமணனிடத்தினின்று க்ஷத்திரியனும், கல்லினின்று லோகமும் உண்டாயின. அவைகளின் சக்தி எங்கும் வியாபித்திருந்தாலும் தந்தம் உற்பத்திஸ்தானங்களில் அடங்கிப்போகின்றன.

முன்னொருகால் க்ஷத்திரியப்பூண்டு அழிந்தகாலத்து அந்தணர்கள் அந்தக்ஷத்திரிய ஸ்திரீகளிடத்துப் புணர்ந்து க்ஷத்

திரியர்களை உண்டாக்கினார்கள். அதனால் க்ஷத்திரியன் பிராமணனிடத்தில் அடங்கியிருக்கவேண்டும்.

**சாதி ஏற்பாடு அழியாதிருப்பதற்குக் காரணம்.**

மநு. 8-20. கர்மாநுஷ்டானமில்லாத பிராமணனேனும் அவன் அரசன் செய்யவேண்டிய தீர்மானங்களைச் செய்யலாம். சூத்திரன் ஒருபோதுஞ் செய்யக்கூடாது.

21-22. அரசன் செய்யவேண்டிய தீர்மானத்தைச் சூத்திரன் செய்வானாகில் அந்த ராச்சியம் வறுமையானும் நோயானும் பீடிக்கப்பட்டு அழிந்துவிடும்.

46. அந்தணர்களால் ஏற்படுத்தப்பட்ட தேசாசார குலாசாரங்களுக்கு விரோதமில்லாமல் தீர்மானிக்கவேண்டும்.

390. வருணாச்சிரம தருமங்களில் விவாதப்பட்டால் அரசன் அவ்விவாதத்தைத் தானே தீர்மானிக்கக்கூடாது.

391. பிராமணர்களை வைத்துக்கொண்டு தீர்மானிக்கவேண்டும்.

410. வைசியன் வர்த்தகம் கிருஷி பசுக்காத்தல் செய்யாவிடினும், சூத்திரன் அந்தணனுக்குப் பணிசெய்யாவிடினும், அவர்களை அரசன் தண்டிக்கக்கடவன்.

413. பிராமணன் சூத்திரனிடத்துக் கூலி கொடுத்தேனும் கொடாமலேனும் வேலைகொள்ளலாம்.

418. வைசியனும் சூத்திரனும் தத்தம் தொழில் செய்யாவிடின் உலகு நிலைபெறாது. ஆதலின் அவர்கள் உலகமுழுமையும் அழித்தவர்களாவார்கள் என்று, இன்னும் பலவாறு வற்புறுத்திக் கூறுதலேயாம்.

**குறிப்பு.**

கဝக-ஆவது பக்கத்தில் அந்தணர் தருமதேவதையின் அவதாரமுடையரெனக் கூறப்பட்டிருக்கின்றது அங்ஙனமாயின் எல்லாருக்கும் பொதுநிலையினிற்கவேண்டும். அப்படியில்லாது, அந்தணன் கொலைசெய்தால் அவனை விட்டுவிட

வேண்டுமென்றுஞ், சூத்திரன்கொலைசெய்தால் அவனைக்கொலைசெய்ய வேண்டுமென்றும், இன்னும் இவைபோன்ற பலபல சாதிக்கொரு நீதியாகிய விதிகளை எழுதி வைத்திருத்தலால் அது பொருந்தாதென்க.

க0ௗ-ஆவது பக்கத்தில் பிராமணர்களைத் தேவரெனக் கூறியிருக்கின்றது. அங்ஙனம் தேவராஞல் இரத்தம் மாமிசம் தோல் எலும்பு நரம்பு தசைகளால் ஆக்கப்பட்டும், மல மூத்திரங்களால் நிரம்பப்பட்டும், செனன மரணத்தால் தோற்றியழியும் மாமிச பிண்டமாகிய மக்கட்பிறப்பினிலொருவராகவேயிருக்கிறார்கள். ஆதலானும், பின்னும் ஆராயுமிடத்து வாத பித்த சிலேத்துமமாகிய நோய்களால் வருந்தியும், பசிதாக நித்திரை மைதுனங்களால் தொடக்குண்டும், சாக்கிர சொற்பன சுழுத்தி துரியம் துரியாதீதமாகிய பஞ்சாவஸ்தைகளால் மயக்குண்டும், நரை திரை மூப்புகளிஞல் உருமாறியும் இருத்தலால் அது பொருந்தாதென்க.

சமுத்திரத்தினிடத்துள்ள சகல தீர்த்தங்களும் பிராமணருடைய பாதத்திலுண்டாயின வென்றும், அவர் பாத தீர்த்தத்தில் தோய்பவரது சகல பாவங்களும் ஒழியுமென்றுங் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளுண்மையாயின், உத்தராயணம் தக்ஷணாயணம் கிரஹணம் விதிபாதம் முதலியபுண்ணிய காலந்தோறும் கங்கையாதி புண்ணிய தீர்த்தங்களில் அந்தப் பிராமணர் போய் ஸ்நானஞ்செய்து தங்கள் பாவங்களைப்போக்கிக்கொள்ளுவானேன்? அவைகள் முழுதும் பொருந்தாவென மறுக்கப்பட்டனவேயாம்.

இன்னும் மேற்படி பக்கத்தில் அவருடைய கையில் அக்கினியிருக்கிறதென்றும், மயிர்க்கால்தோறுங் காமதேனு இருக்கிறதென்றுங், கூறப்பட்டிருக்கின்றன. அவைகளுண்மையாயின், சமையல் செய்வதற்கு அடுத்வீடு தேடிப்போய் நெருப்பெடுத்துக்கொண்டு வருதலும், வீடுதோறும்போய் உபாதா

ணம் எடுக்கவேண்டுதலும் வேண்டாவே. ஆகையால், உண்மையன்றென்பது தெளிவாகப்புலப்படும்.

க0௫-கசு0-ஆவது பக்கங்களில் அந்தணராலே பொழுது உதயமாகிறதென்றும் அஸ்தமிக்கிறதென்றும், உலகு நிலைபெற்றிருக்கிறதென்றுங், கூறப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் அறிவில்லாதவர்களை மயக்குகிறதற்கென்று நன்றாகத் தெரியவருகிறது.

138 ஆ-வது. பக்கத்தில் பிராமணன் தலைக்குத்தீங்கு நேரிடுங்காலத்தில் அவன் தலைக்கீடாகச் சூத்திரன் தலையைக் கொடுத்துக் காப்பாற்ற வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது; இது மாமிசபக்ஷணிகள் தங்களுயிருக்கு நோய்வருங்காலத்தில் ஆடு கோழிகளைச் சிறுதெய்வங்களுக்குப் பலிகொடுத்துத் தங்களைக்காப்பாற்ற நினைப்பதுபோலுமாம். இன்னும் இப்படியே அந்தணரைப்பற்றிக் கூறிய நியாய விரோதங்கள் பலவுள; அவைகளையெல்லாம் விரித்துரைக்கிற் பெருகுமென்க.

## II. க்ஷத்திரியன்.

க்ஷத்திரியன் பிரமாவின் தோளினின்று பிறந்தமையால் இரண்டாம் வருணத்தவனுவன்.

### அரசனே முதன்மையானவனெனல்.

இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் உண்டாக்கும் வேதங்களுக்கும் தருமங்களுக்கும் விரோதமின்றி நடக்கும் வண்ணம், உலகிலுள்ளமானிடரை நிறுத்தவேண்டுவதால் அரசனே முதன்மையாயிருக்கிறுன்.

"அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்"

என்ற திராவிடாசாரியர் கருத்துமிதுவாம்.

மநு. 7-3. உலகத்தில் அரசனில்லாமற்போனல் பலமுள்ளவனிடத்திற் பலமில்லாதவர்கள் பயத்தினலழிந்து போ

வார்கள். ஆகையினால் இவ்வுலகமெல்லாம் அழியாமலிருக்கும் பொருட்டுச் சுவாமியானவர் அரசனை யுண்டுபண்ணினார்.

**அரசன் தேவாமிசம் பெற்றவனெனல்.**

மதவிவகாரம் சாதிவிவகாரம் ஞாயவிவகாரங்களைக்குறித்த ஏற்பாடுகளுக்காக,

மநு. 7-4. இந்திரன் வாயு எமன் சூரியன் அக்கினி வருணனன் சந்திரன் குபேரன் இவர்கள் அமிசங்களினாலேயே அரசனுண்டாக்கப்பட்டிருக்கிறான்.

9-304. இந்திரன் மழையை யுண்டுபண்ணி ஜனங்களை சந்தோஷிக்கச்செய்வதுபோல அரசன் தன்னிராச்சியத்திலுள்ள பிரஜைகளுக்கு அபிஷ்டத்தை யுண்டுபண்ணி மகிழ்ச்சி செய்கிறான்.

305. சூரியன் தன்னுடைய கிரணங்களாலே தபியாமல் பூமியிலிருக்கிற ஜலத்தைச் சிறுகச்சிறுகக் கிரகிப்பதுபோல அரசன் சனங்களை உபத்திரவப்படுத்தாமல் காலவரையறைகளேற்படுத்திச் சிறுதுசிறிதாகத் தீர்வைவாங்குகிறான்.

306. வாயு சகல ஜெந்துக்களிடத்தும் பிராணரூபமாயுள்ளேநுழைந்து சஞ்சரிக்கிறதுபோல அரசன் வேவுகாரர்களால் எதிரியின் பட்டணத்திற் பிரவேசித்து அங்குள்ளவற்றையறிகிறான்.

307. எமன் தண்டனை காலத்து மித்திரனென்றும் சத்துருவென்றும் பேதமின்றி யாவரையுஞ்சமனாக நோக்கி அவரவர்களுக்குத் தக்கப்படி சிட்சைசெய்கிறான், அதுபோல அரசன் குற்றஞ்செய்த பிரஜைகளைப் பட்சபாதகமில்லாமற் றண்டிக்கிறான்.

308. வருணன் தன்னாலே தண்டிக்கத் தக்கவர்களான பாவஞ்செய்த பிரஜைகளைப் பாசங்களாற் கட்டுகிறதுபோல அரசன் பாவிகளைத்தயையில்லாமற் றண்டிக்கிறான்.

309. சந்திரன் தன்னைப்பார்த்த மனிதர்களையெல்லாம் சந்தோஷிப்பிக்கின்றான், அதுபோல அரசன் தன்னைப்பார்த்த மந்திரி பிரதானியர்களைச் சந்தோஷிப்பிக்கிறான்.

310. அக்கினியைப்போல அரசன் சோம்பலில்லாமல் பிரதாபமுள்ளவனாய்த் துஷ்டர்களையும், தனக்கபகாரஞ்செய்பவர்களையும் தண்டிக்கிறான்.

311. பூமியானது ஜங்கமஸ்தாபரரூபமான சகலபிராணிகளையும் உயர்வு தாழ்வின்றித் தாங்குகிறதுபோல அரசன் பண்டிதர்களையும் பாமரர்களையும் பேதமின்றிக் காப்பாற்றுகிறான்.

7-5. இவ்விதமாகத் தேவதாமிசமுள்ளவனாகையால் அரசன் எல்லாமனிதரினும் அதிக காந்தியுள்ளவனாய் அனைவரையும் ஆளத்தக்க வீரமுள்ளவனாயிருக்கிறான்.

6. பூமியிலுள்ள எந்தமனிதனும் அவனை ஏறிட்டுப்பார்க்கலாகாது.

7. அக்கினியும் வானமும் அவனே ; சூரியனுஞ் சந்திரனுமவனே ; நீதிசெலுத்துவதில்யமனாவான் ; செல்வத்தில் குபேரனாவான் ; நீர்வளநிலவளத்தில் வருணனாவான் ; ஐம்பெரும்பூதத்திற்கும் கருத்தனுமவனே.

8. அரசன் குழந்தையாயிருந்தாலும் அவனை மானிடக்குழந்தையென்று அவமதிக்கக்கூடாது. தேவனே மானிடனாய் வந்தானென்று மதிக்கவேண்டும்.

அரசன் சந்தோஷமாகவிருக்கிறானென்று அதிகமாக நெருங்கவுங்கூடாது. கோபித்தானென்று நீங்கவுங்கூடாது. இக்கருத்துப்பற்றியே,

“ அகலா தணுகாது தீக்காய்வர் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.”

என்றார் நாயனாரும்.

### அரசனுக்குரியவறுதொழில்.

மநு.

[illegible]

శ్లో॥ ప్రజానాంరక్షణందాన మిజ్యాధ్యయనమేవచ।
విషయేష్వప్రసక్తిశ్చ క్షత్రియస్యసమాసతః॥

பிரஜாநாம் ரக்ஷணந்தான மிஜ்யாத் யயநமேவச
விஷயேஷ்வ பிரஸக்திஸ்ச க்ஷத்திரியஸ்ய ஸமாஸத:

இ-ள். க்ஷத்திரியனுக்கு பிரஜைகளைக்காத்தல், தானங் கொடுத்தல், வேதமோதல், பாட்டு கூத்து ஸ்திரீ முதலிய விஷயங்களில் மனஞ் செல்லாதடக்கல், இந்நான்கையும் விதித்தார். யாகாதி கருமங்களும் அவனுக்குண்டு.

பிரகற்பதி ஸ்மிருதி.

[illegible]

శ్లో॥ ఇజ్యాధ్యయనదానేచ ప్రజానాంపరిపాలనం।
శస్త్రాస్త్రధారణంసేవా కర్మాణిక్షత్రియస్యతు॥

இஜ்யாத்யயநந்தானேச பிரஜாநாம்பரிபாலனம்
ஸஸ்தராஸ்தரதாரணமஸேவாகர்மாணிக்ஷத்திரியஸ்யது.

இ-ள். வேதமோதல், ஈதல், பிரஜைகளைக்காத்தல், ஆயுதங்களைத் தாங்குதல், இவை க்ஷத்திரியனுக்குரிய தருமமாம்.

ஆதலால் க்ஷத்திரியனுக்கு வைதீககருமங்களாகிய ஓதல் வேட்டல் ஈதல் மூன்றும், இலௌகீக கருமங்களாகிய உலகோம்பல் படைபயிற்றல் மனமடக்கல் ஆகிய மூன்றும், ஆக அறுவகைக்கருமங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன.

இறைமாட்சி.

அரசனுயுள்ளவன் கல்வி கேள்வி அறிவுடைமை குற்றங் கடிதல் பெரியாரைத்துணைக்கோடல் சிற்றினஞ்சேராமை

தெரிந்துசெய்தல் வலியறிதல் காலமறிதல் இடனறிதல் தெரிந்துவினையாடல் சுற்றந்தழுவல் செங்கோன்மை கண்ணோட்டம் ஒற்றாடல் ஊக்கமுடைமை மடியின்மை ஆள்வினையுடைமை முதலியவையெல்லாம் உடையவனாயிருக்கவேண்டும்.

### அரசர்களின் 56 தேசம்.

| எண். | தேசம். | THE MODERN DISTRICTS. |
|---|---|---|
| 1 | அங்கம் ... | The Bhagalpore territories. |
| 2 | அருணம் ... | |
| 3 | அவந்தி ... | The Avantyas of Ujains. |
| 4 | ஆந்திரம் ... | Nellore and Krishna Districts. |
| 5 | இலாடம் ... | |
| 6 | யவனம் ... | The Bactrian Greeks. |
| 7 | ஒட்டியம் ... | Orissa. |
| 8 | கருசம் ... | |
| 9 | கலிங்கம் ... | Near the river Vaitrani. |
| 10 | கன்னடம் ... | Canara. |
| 11 | கன்னாடம் ... | Carnatic. |
| 12 | காசம் ... | Cutch. |
| 13 | காஸ்மீரம் ... | Cashmere. |
| 14 | காந்தாரம் ... | Candahar. |
| 15 | காம்போஜம் ... | Kamboje of Kabul. |
| 16 | கிராடம் ... | The territory of Kiratas of the Sarayu valley. |
| 17 | குருகு | |
| 18 | குடகம் ... | Coorg. |
| 19 | குந்தளம் | |
| 20 | குரு ... | Round about modern Delhi. |
| 21 | குலிந்தம் ... | TheKulindas of the western river-valleys of the Himmalayas and the higher contiguous regions. |
| 22 | கூர்ச்சரம் ... | Guzerat. |
| 23 | கேகயம் | |
| 24 | கேரளம்=சேரநாடு | The territory lying between south Canara and Malabar. |
| 25 | கொங்கணம் ... | (Konkan) Coimbatore District. |
| 26 | கொல்லம் ... | Quilon. |

| எண். | தேசம். | | THE MODERN DISTRICTS. |
|---|---|---|---|
| 7 | கோசலம் | ... | The country between the Ganges and the Gandak which includes modern Delhi. |
| 28 | சகம் | ... | The territory of Suhanas on the south eastern sea-shore. |
| 29 | சவ்வீரம் | ... | |
| 30 | சாலவம் | ... | |
| 31 | சிங்களம் | ... | Ceylon. |
| 32 | சிந்து | ... | Sind. |
| 33 | சீனம் | ... | China. |
| 34 | சூரசேனம் | ... | Surat. |
| 35 | சோழம் | ... | Coramandal. |
| 36 | சோனகம் | ... | The territory of Muhamadan Converts. |
| 37 | திராவிடம் | ... | Tamil Districts. |
| 38 | துளுவம் | ... | South Canara. |
| 39 | தெக்கணம் | ... | Dekkan. |
| 40 | நிடதம் | ... | The territory of Nishadas near the river of Sarasvathi and the Vindhya mountains. |
| 41 | நேபாளம் | ... | Nepal. |
| 42 | பாஞ்சாலம் | ... | Round about Kanouj. |
| 43 | பப்பரம் | ... | |
| 44 | பல்லவம் | ... | The Pahlavas of Persia. |
| 45 | பாண்டியம் | ... | Madura. |
| 46 | புலிந்தம் | ... | The territory on the bank of Narbada. |
| 47 | போடம் | ... | |
| 48 | மகதம் | ... | Near Narmada River. |
| 49 | மச்சம் | ... | |
| 50 | மராடம் | ... | Mahratta District. |
| 51 | மலையாளம் | ... | Malabar District. |
| 52 | மாளவம் | ... | Malwa. |
| 53 | யுகந்தரம் | ... | |
| 54 | வங்கம் | ... | The Territory of Bangas on the sea-shore. |
| 55 | வங்காளம் | ... | Bengal. |
| 56 | விதர்ப்பம் | ... | |

### அரண்.

இங்ஙனமிருக்குங்கால் காடு சூழ்ந்தநாட்டில் அரண்சூழ்ந்த நகரநடுவிலிருக்கவேண்டும். மலை காடு மதில் கடல் இவை நான்குமே அரணும். அரசன் பட்டஸ்திரீயைத் தன்னினத்திலேயே கொள்ளவேண்டும். உள்ளறையில் தன்பத்தினியோடு பள்ளிகொள்ளவேண்டும். நல்லகாலத்தும், தீயகாலத்தும் நம்பிக்கையுள்ள பரிசாரகனிடத்திற் போசனஞ்செய்யவேண்டும். போசனஞ்செய்யுங்காலத்து விஷங்கலந்ததா இல்லையாவென்று சோதனைசெய்து புசிக்கவேண்டும். தனக்குதவிசெய்கிற அரசர்களிடத்தில் விசுவாசமாக இருக்கவேண்டும். சமயப்பிசகான காலத்தில் தன் தேசத்தையும் தன் மனைவியையும் விட்டு நீங்கவேண்டும்.

### அமைச்சு.

க்ஷத்திரியனானவன் தனது அரண்மனைக்கு ஒரு புரோகிதனையேற்படுத்திக்கொள்ளவேண்டும். அந்தணர்களிடத்தில் இலௌகிக வைதிக கருமங்களைக் கற்றுணரவேண்டும். தீயவழியிற் செல்லாதவண்ணம் மனத்தையடக்கவேண்டும். ஆலோசனை செய்வதற்கு 8-மந்திரிகளைக் கொள்ளவேண்டும். அவருட் சிலர் வேதத்திற் பழகினவராகவும், சிலர்யுத்தசாஸ்திரங்களிற் பழகினவராகவு மிருக்கவேண்டும்.

தூதனாகக் கொள்ளப்பட்டவன் சாஸ்திரத்தில் வல்லவனாக இருக்கவேண்டும்.

அஸ்தமனமானபின்னர் அனுஷ்டானவிதி முடிந்தவுடன் தூதன் வேவுக்காரன் இவர்களிடத்தில் கலக்கவேண்டும்.

ஞாயசட்டங்களைக்குறித்துப் பிராம்மணனிடத்தில் ஆலோசிக்கவேண்டியதேயொழியச் சூத்திரனிடத்தில் ஆலோசிக்கக்கூடாது. எதாவதொன்றைத் தானாகப்போய்பார்க்கச் சக்தியில்லாதகாலத்தில் ஓர் பிராமணனையனுப்பிப்பார்த்து வரச்சொல்லல் வேண்டும்.

### அரசன்சூழ.

அரசனுக்கு மந்திரிகள் புரோகிதர் சேனுபதியர் தூதர் சாரணர் இவ்வைவரும் கூட்டமாயுள்ளவர்.

மந்திரியர் கருமாதிகாரர் சுற்றம் கடைகாப்பாளர் நகர மாக்கள் படைத்தலைவர் இவுளிமறவர் யானைவீரர் இவ்வெண் மரும் அரசனுக்குத் துணைவராயுள்ளவர்.

நட்பாளர் அந்தணாளர் மடைத்தொழிலர் மருத்துவக்க லைஞர் நிமித்திகப்புலவர் இவ்வைவரும் அரசனுக்கு உறுதிச் சுற்றமாயுள்ளவர்.

### அரசன்சின்னம்.

முடி குடை கவரி தோட்டி முரசு சக்கரம் யானை கொ டி மதில் தோரணம் நீர்க்குடம் பூமாலை சங்கு கடல் மகரம் ஆமை இணைக்கயல் சிங்கம் தீபம் இடபம் ஆசனம் என்பன அரசனுக்குச் சின்னங்களாம்.

இவைகளையெல்லாம் அரசன் அங்கமாகப் பெற்றிருக்க வேண்டும்.

இனி இந்த 56-தேசத்தரசர்களுக்கும் பேதந் தெரியும்ப டி ஒவ்வொருவருக்கும் தசாங்கம் ஏற்பட்டிருக்கின்றன. அ வையாவையெனின்; பெயர் மலை யாறு நாடு நகர் ஊர்தி மா லை கொடி படை முரசம் என்பனவாம். இவைகள் தம்மையு டைய அரசர்களைக் குறிப்பிக்கும்; அவற்றுட் சிலவற்றைக்கா ட்டுதும், வேதக்கொடி துரோணாசாரியரையும், முரசக்கொடி தருமபுத்திரனையும், சர்ப்பக்கொடி துரியோதனனையும், கச்சை க்கொடி கன்னனையும், சிங்கக்கொடி வீமனையும், அநுமக்கொ டி அருச்சுனனையும், விற்கொடி சேரனையும், புலிக்கொடி சோழனையும், மீனக்கொடி பாண்டியனையும் குறிப்பிக்கும். இவைபோலவே படை மாலை முதலியனவும் அவ்வவ்வரசர் களைக் குறிப்பிக்கும்,

### உலகோம்பல்.

குடிகளுக்கு அவரவர்கள் சக்திக்கேற்க வரியேற்படுத்தி வாங்கிவரவேண்டும். பாலியர்கள் முதலிய சகலருடைய சொத்துக்களையும் பாதுகாக்கவேண்டும். ஸ்திரீகள் புருஷர்களுக்கு அடங்கி நடப்பதற்காக அரசன் புருஷர்களுக்கு உதவி செய்யவேண்டும். ஜாதியைப்பற்றிய சட்டங்களையும் ஜாதி வழக்கங்களையும் பாதுகாக்கவேண்டும்.

### பொருள்செயல்வகை.

"உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்."

இ-ள். உடையவர் இல்லாமல் தானே வந்து கிடைத்தபொருளும், சுங்கமாதியபொருளும், தன்பகைவரைவென்று திறையாகக்கொள்ளும் பொருளும், அரசனுக்கு உரியனவாம்.

"செய்கபொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில்."

இ-ள். பொருளினை ஈட்டவேண்டும், அது பகைவரது செருக்கையறுக்கும் ஆயுதமாம்; அதற்கு மேற்பட்ட ஆயுதம் ஒன்றுங் கிடையாதாம்.

அன்றியும் பொருளென்பது கெடாதவிளக்காம்; அது தன்னைச் சம்பாதித்தவர் நினைத்ததேயத்திற்சென்று பகையென்னு மிருளையொழிக்கும்.

"பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்திற் சென்று."

என்பதனுற் காண்க.

### மநு 7-213.

ஆபதர்த்தம் தநம் ரக்ஷேத் தாராந் ரக்ஷேத் தநைரபி।
ஆத்மாநம் ஸததம் ரக்ஷேத் தாரைரபி தநைரபி॥

శ్లో॥ ఆపదర్థాధనంరక్షేద్దారాన్రక్షేద్ధనైరపి।
ఆత్మానంసతతంరక్షే ద్దారైరపి ధనైరపి॥

ஆபதர்தம் தநம் ரக்ஷேத் தாரான்ரக்ஷேத் தநைரபி,
ஆத்மாநம் ஸததம்ரக்ஷேத் தாரைரபி தநைரபி.

இ-ள். துர்த்திசையிலும் தன்பொருளைக் காப்பாற்றவேண்டும்; அப்படிப்பட்ட பொருளைச் செலவிட்டுத் தன் மனைவியைக் காப்பாற்றவேண்டும்; அங்ஙனங் காப்பாற்றப்பட்ட மனைவியையும் பொருளையும் இழந்தாவது அரசன் தன்னைக்காப்பாற்றிக்கொள்ளவேண்டும்.

## விசாரணை.

வைசியன் வர்த்தகம் வட்டிக்குக்கொடுத்தல் பயிர்செய்தல் ஆனிரைகாத்தல் இவைகளைச்செய்யவும், சூத்திரன் இருபிறப்பாளர்க்கு ஊழியஞ்செய்யவும் கட்டளையிடவேண்டும். விற்பவனையும் கொள்பவனையும் நிதானித்துக்கடைவிலைப்பருவம் ஏற்படுத்தவேண்டும். சகல வருணத்தாருக்கும் வணக்கத்தையும் ஒழுக்கத்தையும் விருத்தியாக்கவேண்டும். தண்டனைவிதிக்கிறகாலத்தில் பிராமணர்களுடன் ஆலோசித்துச் செய்யவேண்டும்.

இவ்விதமாக அரசன் அதிகாரத்தையும் ஞாயத்தையும் செலுத்தவேண்டும்.

## படை.

க்ஷத்திரியனாயுள்ளவன் யுத்தத்தில் தீரனாயும், யுத்தவீரனாகவும், தயாளமுடையவனாகவும் இருக்கவேண்டும். இரத கஜ துரக பதாதிகளாகிய நால்வகைச் சேனைகளையும் உடையவனாக இருக்கவேண்டும். சேனைகளைப் பலமுகத்தும் சாமர்த்தியமாக அனுப்பவேண்டும். தானியாதிகள் விளைந்த செழிப்பான காலத்தில் சத்துருக்களின்பேரில்* தண்டெடுக்கவேண்டும்.

---

*தண்டு - படை.

## III. வைசியன்.

வைசியன் விராட்டுவின் துடையிற்பிறந்தவனாதலால் மூன்றும் வருணத்தவனவன்.

இவன் நாட்டிற்குரிய பொதுநன்மையைப்பற்றி இராஜனுக்கு அறிவித்துச் சீர்திருத்துவதுமன்றி, வரி இறை முதலியவை கொடுத்தும், சண்டைக்காலத்துங்கடன்கொடுத்தல் முதலியவற்றால் பொருளுதவிசெய்தும், இராஜகாரியம் செய்பவனும்.

இவன் பின்னும் அரசர்க்கு மந்திராலோசனைக்குரிய மந்திரியாகவும் பிரதானி சேனாதிபதியாகவும்இருந்து இராஜகாரியத்தைச்செய்பவனும்.

பிரகஸ்பதி ஸ்மிருதி.

𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍋𑌯𑌜𑌨𑌂𑌦𑌾𑌨𑌂 𑌪𑌶𑍂𑌨𑌾𑌂𑌪𑌾𑌲𑌨𑌂𑌤𑌥𑌾 ।
𑌕𑍁𑌸𑍀𑌦𑌕𑍃𑌷𑌿𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂 𑌵𑍈𑌶𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿𑌸𑌪𑍍𑌤𑌵𑍈 ॥

శ్లో॥ స్వాధ్యాయోయజనందానం పశూనాంపాలనంతథా।
కుసీదకృషివాణిజ్యం వైశ్యకర్మాణిసప్తవై॥

ஸ்வாத்யாயோயஜநந்தானம் பஸூநாம்பாலநந்ததா
குஸீதக்கிருஷிவாணிஜ்யம் வைஸ்யகர்மாணிஸப்தவை.

இ-ள். வேதமோதல், வேள்விபுரிதல், ஈதல், பசுக்காத்தல், வட்டியிட்டல், உழவுத்தொழில் செய்தல், பண்டமாற்றுதல் விற்றலென்னும் வியாபாரம் ஆகிய இவ்வேழுகருமங்களும் வைசியனுக்குச் சிறப்புத்தருமங்களாம்.

மநு.

𑌪𑌶𑍂𑌨𑌾𑌂𑌰𑌕𑍍𑌷𑌣𑌂𑌦𑌾𑌨 𑌇𑌜𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌮𑍇𑌵𑌚 ।
𑌵𑌣𑌿𑌕𑍍𑌪𑌥𑌂𑌕𑍁𑌸𑍀𑌦𑌂𑌚 𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯𑌕𑍃𑌷𑌿𑌮𑍇𑌵𑌚 ॥

శ్లో॥ పశూనాంరక్షణందాన మిజ్యాధ్యయనమేవచ।
వణిక్పథం కుసీదంచ వైశ్యస్య కృషిమేవచ॥

பஸூநாம்ரக்ஷணந்தான மிஜ்யாத்யயனமேவச
வணிக்பதங்குஸீதஞ்ச வைஸ்யஸ்யகிருஷிமேவச.

இ-ள். பசுக்களைக் காத்தல், தானங்கொடுத்தல், வேட்டல் வேதமோதல், கொள்ளல் விற்றல், வட்டிவாங்குதல் இக்கருமங்கள் வைசியனுக்கு விதிக்கத்தக்கனவாம்.

வராகபுராணம்.

𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌂𑌯𑌜𑌨𑌂𑌦𑌾𑌨𑌂 𑌕𑍁𑌸𑍀𑌦𑌂𑌪𑌶𑍁𑌪𑌾𑌲𑌨𑌂 |
𑌗𑍋𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌕𑍃𑌷𑌿𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑍋𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿

శ్లో॥ స్వాధ్యాయంయజనందానం కుసీదంపశుపాలనం।
గోరక్షాంకృషివాణిజ్యం కుర్యాద్వైశ్యోయథావిధి॥

ஸ்வாத்யாயம்யஜனந்தானம் குஸீதம்பஸூபாலநம்
கோர்க்ஷாம்கிருஷிவாணிஜ்யம் குர்யாத்வைஸ்யோயதாவிதி.

இ-ள். வேதமோதல், வேள்விசெய்தல், தானமீதல், வட்டிவாங்குதல், பசுநிரையோம்பல், ஆனிரைகாத்தல், உழவு, வாணிபம் இவைகளை விதிப்படி வைசியன் செய்தல் வேண்டும். ஆனிரைகாத்தலை வேறுகூறியிருத்தலின், பசுநிரையோம்பலென்பது யாடு குதிரை முதலியவற்றையோம்புதலெனக் கொள்க.

மார்க்கண்டேயபுராணம்.

𑌦𑌾𑌨𑌮𑌧𑍍𑌯𑌯𑌨𑌂𑌯𑌜𑍍𑌞𑍋 𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌿𑌤𑍍𑌰𑌿𑌦𑍈𑌵𑌸𑌾 |
𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂𑌪𑌾𑌶𑍁𑌪𑌾𑌲𑍍𑌯𑌂 𑌚𑌕𑍃𑌷𑌿𑌶𑍍𑌚𑍈𑌵𑌾𑌸𑍍𑌯𑌜𑍀𑌵𑌿𑌕𑌾 ‖

శ్లో॥ దానమధ్యయనంయజ్ఞో వైశ్యస్యాపిత్రిదైవసా ।
వాణిజ్యంపాశుపాల్యంచ కృషిశ్చైవాస్యజీవికా ॥

தானமத்யயனம்யக்ஞோ வைஸ்யஸ்யாபிதிரிதைவஸா
வாணிஜ்யம்பாஸுபால்யஞ்ச கிருஷிஸ்சைவாஸ்யஜீவிகா.

இ-ள். தானமீதல், வேதமோதல், வேள்விசெய்தல் இம்மூன்றும் வைசியன் வைதீககருமமாம். வாணிபம், பசுநிரைகாத்தல், உழவுத்தொழில் இம்மூன்றும் சீவனத்தொழிலாம்.

(பாராசரம் முதல், அத், 577-வது பக்கம்.)

𑌲𑌾𑌭𑌕𑌰𑍍𑌮 𑌤𑌥𑌾𑌰𑌤𑍍𑌨𑌂 𑌗𑌵𑌾𑌂𑌚𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌨𑌂 ।
𑌕𑍃𑌷𑌿𑌕𑌰𑍍𑌮𑌚𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂 𑌵𑍈𑌶𑍍𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌾 ॥

శ్లో॥ లాభకర్మ తథారత్నం గవాంచపరిపాలనం।
కృషికర్మచ వాణిజ్యం వైశ్యవృత్తి రుదాహృతా॥

லாபகர்ம ததாரத்நங் கவாஞ்சபரிபாலநம்
கிருஷிகர்மசவாணிஜ்யம் வைஸ்யவிருத்திருதாஹிருதா.

இ-ள். வட்டிவாங்குதல், இரத்தினமுதலிய மணிச்சோதனை, பசுநிரைகளைக் காத்தல், உழுதல், கொள்ளல் விற்றலாகிய பண்டமாற்று, இவைகள் வைசியன் தருமமாகக் கூறப்பட்டன.

“లాభకర్మ” (லாபகர்ம)—இலாபத்தின் பொருட்டுச்செய்யுந் தொழில். எனவே, கடன் கொடுத்து வட்டிவாங்குதல் நெல் முதலிய தானியங்களை வாசிக்குக்கொடுத்து வாங்குதல் முதலியன. இது, தலவாசி நாங்கு என இக்காலத்து வழங்குகின்றது.

“రత్నం” (ரத்நம்)—வச்சிரம், நீலம், மாணிக்கம்=செம்மணி, மரகதம், கோமேதகம், வைடூரியம், புட்பராகம், பவளம், முத்து முதலியன. இம்மொழி இலக்கணையால் அவற்றைச் சோதித்தல், விற்றல் வாங்கல் என்ற பொருளைத்தருகின்றது.

பசு நிரைகளைக் காத்தலாவது-வைக்கோல் புல் இடுதல், நீர்குடிப்பித்தல், மேய்த்தல், தேய்த்தல், சொறிதல், சுத்தஞ்செய்தல், நீராட்டல், பால்கறத்தல்,புலிமுதலியவற்றா லிடையூறு வராமற்காத்தல், முதலியவைகளாம்.

''కృషికర్మ'' (—கிருஷிகர்ம.) நிலத்தையுழுது பக்குவஞ்செய்து விதைவிதைத்து, பயிர் வளரக் காத்துப் பயனைப் பெறுதல்.

''వాణిజ్యం'' —(வாணிஜ்யம்) தானியம், பாக்கு, ஆடை முதலியவற்றைக் கொள்ளல் விற்றல் முதலிய இவையே வைசியதருமமாம்.

வட்டி வாங்குதல் முதலிய கருமங்கள் வைசியனுக்குத் தருமமென்று யாஞ்ஞவற்கியரும் கூறினர்.

𑌕𑍁𑌸𑍀𑌦𑌂 𑌕𑍃𑌷𑌿𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂 𑌪𑌾𑌶𑍁𑌪𑌾𑌲𑍍𑌯𑌂 𑌵𑌿𑌶𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌂 ।

శ్లో॥ ''కుసీదకృషివాణిజ్య పాశుపాల్యం విశః స్మృతం''

குஸீதகிருஷிவாணிஜ்ய பாஸுபால்யம் விஸ: ஸ்மிருதம்.

இ-ள். வட்டி வாங்குதல், உழவு, கொள்ளல் விற்றல், பசுக்காத்தல், வைசியனது என்று கூறப்பட்டது.

**விற்றற்குரிய பண்டங்கள்.**

அநுசாசனபருவம்.

𑌤𑌿𑌲𑌚𑌰𑍍𑌮𑌰𑌸𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌵𑌿𑌕𑍍𑌰𑍇𑌯𑌾𑌃 𑌪𑌶𑍁𑌵𑌾𑌜𑌿𑌨𑌃।
𑌵𑌣𑌿𑌕𑍍𑌪𑌥𑌮𑍁𑌪𑌾𑌸𑍀𑌨𑍈𑌰𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑍈𑌰𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌥𑌿𑌤𑍈𑌰𑌪𑌿॥

శ్లో॥ తిలచర్మరసాశ్చైవ విక్రేయాః పశువాజినః।
వణిక్పథముపాసీనై ర్వైశ్యై ర్వైశ్యస్థితైరపి॥

திலசர்மரஸாஸ்சைவ விக்ரேயா: பசுவாஜிந:
வணிக்பதமுபாஸீநைர்வஸ்யைர் வைஸ்யஸ்திதை ரபி.

இ-ள். எள், தோல், இரசவருக்கங்கள், பசுக்கள், குதிரை முதலியவற்றினை ஆவணத்திருந்த வைசியராயினும், அவர்களிடத்து அம்முயற்சியின்பொருட்டு நின்ற மற்றையர் யாவராயினும், விற்றல் வேண்டும். ஆவணம்=கடைவீதி.

சாந்திபர்வத்தில் ஜாபாலி யுபாக்கியாணப் பிரசங்கத்தில் துலாதாரன் என்பவனால் வைசியதருமங் கூறப்பட்டது.

𑌯𑌦𑍍𑌦𑌦𑌾𑌮𑌿𑌨𑌤𑌂𑌨𑍍𑌯𑍂𑌨𑌂𑌯𑌦𑍍𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌮𑌿𑌨𑌚𑌾𑌧𑌿𑌕𑌂 |
𑌵𑌿𑌕𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑌿𑌰𑌸𑌾𑌂𑌶𑍍𑌚𑌾𑌹𑌮𑌨𑍍𑌨𑌵𑌰𑍍𑌜𑌮𑌮𑌾𑌯𑌯𑌾 |
𑌕𑍍𑌰𑍀𑌤𑍍𑌵𑌾𑌵𑍈𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌿𑌕𑍍𑌰𑍀𑌣𑍇𑌪𑌰𑌹𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌤𑌨𑌂𑌬𑌹𑍁 ||

యద్దదామినతం స్యూనం యద్గృహ్ణామినచాధికం|
విక్రీణామిరాసాంశ్చా హమన్నవర్జమమాయయా|
క్రీత్వావై ప్రతివిక్రీణే పరహస్తాత్తనంబహు||

யத்ததாமிநதம் நியூநம் யத்கிரஹ்ணா மிநசாதிகம்
விக்கிரீணாமிராஸாம்ஸ்சா ஹமந்நவர் ஜமமாயயா
கிரீத்வாவைபிரதிவிக்கிரீணே பரஹஸ்தாத் தநம்பஹு.

இ-ள். நான் எதனைக் கொடுக்கிறேனோ அது குறைவாக விராது. எதனை நான் கொள்ளுகின்றேனோ அது மிகுதியாக இராது. சமைத்த சோறொன்றொழிய மற்றைய இரசவருக்கமனைத்தினையும் வஞ்சிப்பின்றி விற்கின்றேன். ஆனால், கொண்டதினும் அதிகப்பொருளைப் பிறன் கையிற்பெற்று விற்கின்றேன்.

மநு. 9-326.

𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌤𑍁𑌕𑍃𑌤𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌦𑌾𑌰𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌂
𑌵𑌾𑌰𑍍𑌤𑌾𑌯𑌾𑌂𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌶𑍂𑌨𑌾𑌂𑌚𑍈𑌵𑌰𑌕𑍍𑌷𑌣𑍇 |

శ్లో॥ వైశ్యస్తుకృతసంస్కార కృత్వాదారపరిగ్రహం|
వార్తాయాంనిత్యయుక్తస్య పశూనాంచైవరక్షణే॥

வைஸ்யஸ்துகிருதஸம்ஸ்கார: கிருத்வாதாரபரிகிரஹம்
வார்த்தாயாம்நித்யயுக்தஸ்ய பஸூநாஞ்சைவரக்ஷணே.

இ-ள். வைசியன் தக்கவிதியோடு உபநயனமுதலிய சமஸ்காரங்கள் செய்யப்பெற்று மணம்புணர்ந்து, உழவு, வாணிபம்

ஆனிரைகாத்தலினும், வார்த்தையினும், யாடு குதிரைமுதலிய பசுக்காத்தலினும், தவறாது எப்போதும் நடத்தல் வேண்டும்.

மநு. 9-327.

𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌰𑍍𑌹𑌿𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌯 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌪𑌰𑌿𑌦𑌦𑍇𑌪𑌶𑍂𑌨𑍍।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌯𑌚𑌰𑌾𑌜𑍍𑌞𑍇𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃𑌪𑌰𑌿𑌦𑌦𑍇𑌪𑍍𑌰𑌜𑌾𑌃॥

శ్లో॥ ప్రజాపతిర్హివైశ్యాయ సృష్ట్వాపరిదదేపశూన్।
బ్రాహ్మణాయచరాజ్ఞేచ సర్వాఃపరిదదేప్రజాః॥

பிரஜாபதிர்ஹிவைஸ்யாய ஸ்ருஷ்ட்வா பரிததேபஸூன்
பிராஹ்மணாயசராஜ்ஞேச ஸர்வா: பரிததேபிரஜா:

இ-ள். பிரமா, பசுக்களையுண்டுபண்ணி யவற்றைக்காக்கும்படி வைசியனிடத்திலும், பிரஜைகளைச் சிருட்டித்து அவர்களை மறுமையிலுமிம்மையிலுங் காக்கும்படி பிராமண க்ஷத்திரியனிடத்திலும், ஒப்புவித்தார்.

மநு. 9-328.

𑌨𑌚𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯𑌕𑌾𑌮𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌰𑌕𑍍𑌷𑍇𑌯𑌂𑌪𑌶𑍂𑌨𑌿𑌤𑌿।
𑌵𑍈𑌶𑍍𑌯𑍇𑌚𑍇𑌚𑍍𑌛𑌤𑌿𑌨𑌾𑌨𑍍𑌯𑍇𑌨𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌵𑍍𑌯𑌾𑌃𑌕𑌥𑌂𑌚𑌨॥

శ్లో॥ నచవైశ్యస్యకామస్స్యా న్నరక్షేయంపశూనితి।
వైశ్యేచేచ్ఛతినాన్యేన రక్షితవ్యాఃకథంచన॥

நசவைஸ்யகாமஸ்யாந் நரக்ஷேயப்பஸூநிதி
வைஸ்யெசேச்சதிநாந்யேன ரக்ஷிதவ்யா: கதஞ்சந.

இ-ள். பசுவை நான் காக்கமாட்டேன் என்று வைசியனுக்கு எண்ணம் பிறவாது, வைசியன் விரும்பியிருக்கையில் ஏனையோரால் பசுக்களை யோம்பச் செய்யலாகாது.

மநு. 9-329.

𑌮𑌣𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌪𑍍𑌰𑌵𑌾𑌳𑌾𑌨𑌾𑌂 𑌲𑍋𑌹𑌾𑌨𑌾𑌂 𑌤𑌾𑌨𑍍𑌤𑌵𑌸𑍍𑌯 𑌚।
𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑌾𑌂𑌚𑌰𑌸𑌾𑌨𑌾𑌂𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑌰𑍍𑌘𑌬𑌲𑌾𑌬𑌲𑌮𑍍॥

శ్లో॥ మణిముక్తాప్రవాళానాం లోహానాం తాంతవస్యచ।
గంధానాంచరసానాంచ విద్యాదర్ఘబలాబలం॥

*மணிமுக்தாபிரவாளாநாம் லோஹாநாந்தாந்தவஸ்யச*
*கந்தாநாஞ்சரஸாநாஞ்ச வித்யாதர்குபலாபலம்.*

இ-ள். வயிரமுதலிய மணிகளும் சந்திரகாந்தம், சூரியகாந்தம், படிகம், அயக்காந்தமுதலிய உபமணிகளும், முத்து, சங்கு, பவளம் முதலிய வெள்ளி பொன் முதலிய வுலோகங்களும், நார்ச்சீலை, நூலாடை, பட்டுக்கோசிகம், மயிர்க்கம்பளமும், அகில், சந்தனம், கும்குமப்பூ, கஸ்தூரி, பச்சைக்கருப்பூரம், புழுகு=புனுகு, சவ்வாது, விலாமிச்சம் முதலிய வாசனைப்பண்டங்களும், வெல்லம் சருக்கரை உப்பு புளிப்பு காரம் நெய் எண்ணெய் தேன் அரக்கு கந்தகம் முதலிய இரசவர்க்கங்களும்,

மநு. 9-330.

𑌬𑍀𑌜𑌾𑌨𑌾𑌮𑍁𑌪𑍍𑌤𑌿𑌮𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌬𑍀𑌜𑌗𑍁𑌣𑌸𑍍𑌯 𑌚।
𑌮𑌾𑌨𑌯𑍋𑌗𑌾𑌂𑌶𑍍𑌚𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌤𑍍 𑌤𑍁𑌲𑌾𑌯𑍋𑌗𑌾𑌂𑌶𑍍𑌚𑌸𑌰𑍍𑌵𑌶𑌃॥

శ్లో॥ బీజానాముప్తిమావిద్యా క్షేత్రబీజగుణస్యచ।
మానయోగాంశ్చజానీయా త్తులాయోగాంశ్చసర్వశః॥

*பீஜாநாமுப்திமாவித்யாத் க்ஷேத்திரபீஜகுணஸ்யச*
*மாநயோகாம்ஸ்சஜாநீயாத் துலாயோகாம்ஸ்சசர்வஸ꞉.*

இ-ள். தானியங்களும், பிரம்பு மூங்கில் முதலிய மரவகைகளும் பிறவுமாயுள்ள பண்டங்களின் விலைகளும், அவற்றின்

தரங்களும், நிலத்தின் குணங்களும், எந்த நிலத்தில் எந்தெந்த க்காலத்தில், எதனை விதைத்துப் பயிர்செய்து பயன் கொள்ள வேண்டுவதோ அதுவும், தானியமுதலிய பண்டங்களைச் சுத்தஞ்செய்து வைத்தலும், வித்துக்களைச் சீர்செய்து வைத்தலும், முகத்தலளவையின் வேறுபாடுகளும், நிறுத்தலளவையின் வேறுபாடுகளும், கணித வேறுபாடுகளும்,

மநு. 9-331.

𑌸𑌾𑌰𑌾𑌸𑌾𑌰𑌂𑌚 𑌭𑌾𑌣𑍍𑌡𑌾𑌨𑌾𑌂 𑌦𑍇𑌶𑌾𑌨𑌾𑌂𑌚 𑌗𑍁𑌣𑌾𑌗𑍁𑌣𑌂।
𑌲𑌾𑌭𑌾𑌲𑌾𑌭𑌂𑌚 𑌪𑌣𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌪𑌶𑍂𑌨𑌾𑌂𑌚 𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌂॥

శ్లో॥ సారాసారంచభాండానాం దేశానాంచగుణాగుణం ।
లాభాలాభంచపణ్యానాం పశూనాంచవివర్ధనం ॥

ஸாராஸாரஞ்சபாண்டாநாம் தேஸாநாஞ்சகுணுகுணம்
லாபாலாபஞ்சபண்யாநாம் பஸூநாஞ்சவிவர்தநம்.

இ-ள். ஆக்கப்பட்ட பண்டங்களின் நன்மைதீமை முதலிய நிலைமைகளும், நிறவண்ணங்களின் ஏற்பாடுகளும். "ச" என்றதனாற் சிறபபேதங்களும், தேயவியற்கைகளும், கொள்ளல் விற்றலின் நயநஷ்டங்களும், பசுக்களைக் காக்கத்தக்க வகைமைகளும்,

மநு. 9-332.

𑌭𑍃𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂𑌚 𑌭𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑌾𑌷𑌾𑌶𑍍𑌚 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾 𑌨𑍃𑌣𑌾𑌂।
𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌯𑍋𑌗𑌾𑌂𑌶𑍍𑌚 𑌕𑍍𑌰𑌯𑌂 𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑌮𑍇𑌵 𑌚।

శ్లో॥ భృత్యానాంచభృతింవింద్యాద్భాషాశ్చవివిధాన్నృణాం।
ద్రవ్యాణాంస్థానయోగాంశ్చ క్రయంవిక్రయమేవచ ॥

பிரத்யாநாஞ்சபிரதிம்விந்தியாத் பாஷாஸ்சவிவிதாந்ருணாம்
திரவியாணும்ஸ்தாநயோகாம்ஸ்ச கிரயம்விக்கிரயமேவச.

இ-ள். கூலித்தொழில் செய்பவர்களுக்குக் கூலியேற்பாடுகளும், எந்தெந்த நாட்டில் யார் யார் எந்தெந்தப் பாஷைகள் பயின்று எந்தெந்தவொழுக்கமுடையவர்களா யிருக்கின்றார்களோ அவற்றினை யறிந்து பழகுதலும், அவ்வப்பண்டங்கள் பிறக்குமிடமும், கொள்ளுமிடமும், கொள்ளத்தக்க பண்டமும், விற்குமிடமும், கொள்வோரைப் பெறும் வகைகளும், முதலிய பிறவெல்லாமும் சான்றோர் வழியாலுணர்ந்து அனுபவத்தால் அறிவுணர்ச்சியடைந்து,

மநு. 9-333.

𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌚 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌵𑌾 𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌦𑍍𑌯𑌤𑍍𑌨𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂।
𑌦𑌦𑍍𑌯𑌾𑌚𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾 𑌮𑌨𑍍𑌨𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌤𑌃॥

శ్లో॥ ధర్మేణచద్రవ్యవృద్ధావా తిష్ఠేద్యత్నముత్తమం।
దద్యాశ్చసర్వభూతానా మన్నమేవప్రయత్నతః॥

தர்மேணசத்ரவ்யவிரத்தாவா திஷ்டேத்யத்நமுத்தமம்
தத்யாஸ்ச ஸர்வபூதாநா மந்நமேவப்ரயத்நத:

இ-ள். தருமத்தோடும், "ச" என்றதனால், தருமத்திற்கு மாறுபாடில்லாததாகிய பொய்முதலியவற்றோடும் நடத்தியும், தன்பொருள் விருத்தியாகும்படி நல்ல முயற்சிகளை எப்பொழுதும் செய்துவரவேண்டும். இப்படிப்பட்ட வைசியன் விசேடமாகப் பொருளைத்தேடி எல்லாமுயற்சியாலும் அந்தப்பொருளினால் வேதியன் முதலிய எல்லாவுயிர்களுக்கும் தக்கவாறு சோறிடுதல் முதலிய வேளாண்மை செய்யவேண்டும், என்பது காண்க. வேளாண்மை=உபகாரம்.

வாளார்கண் செந்துவர்வாய் மாமலையான் றன்மடந்தை
தோளாகம் பாகமாப் புல்கினான் றொல்கோயில்
வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந்
தாளாள ராக்கூரிற் றான்றோன்றி மாடமே.

இதில் வேளாளர் - என்பது, வைசியருக்கு உபகாரங்காரணமாக வந்ததோர் குறியீடு, என்பது காண்க.

தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

என்பதுமது.

**வைசியதருமத்தின் பயன்.**

வைசியன் மேற்கூறிய தன் கருமத்தின் நூன்முறையே அனுட்டித்து வருவானாயின் அவனுக்குண்டாம் பயன் அஸ்வமேத பர்வத்துட் கூறப்பட்டது.

𑌵𑌣𑌿𑌗𑍍𑌧𑌰𑍍𑌮𑌮𑌮𑍁𑌞𑍍𑌚𑌸𑍍𑌵𑍈 𑌦𑍇𑌵𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌪𑍂𑌜𑌕𑌃 ।
𑌸𑌵𑌣𑌿𑌕𑍍𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌪𑍂𑌜𑍍𑌯𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑍍𑌸𑌰𑍋𑌗𑌣𑍈𑌃 ॥

శ్లో॥ వణిగ్ధర్మమముంచస్వై దేవబ్రాహ్మణపూజకః ।
సవణిక్స్వర్గమాప్నోతి పూజ్యమానోప్సరోగణైః॥

வணிக்தர்ம மமுஞ்சஸ்வை தேவபிராஹ்மணபூஜக:
ஸவணிக் ஸ்வர்க மாப்நோதிபூஜ்ய மாநோப்பரோகணை:

இ-ள். வைசிய தருமத்தை விடாமல், தேவர்களையும் வேதியரையும் பூசித்துக் கொண்டிருக்கும் வைசியன், அரமாதரால் பூசிக்கப்பட்டுச், சுவர்க்கம் புகுவன் என்று காண்க. அரமாதர்=தெய்வப் பெண்கள்.

**வைசியன் இவ்விதி தவறியவழி வருந்துற்றம்.**

சாந்திபர்வம்.

𑌯𑌸𑍍𑌤𑍁𑌕𑌰𑍋𑌤𑌿𑌜𑌡𑌾𑌨𑍍𑌸𑌾𑌧𑍂𑌨𑍍 𑌵𑌣𑌿𑌕𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑍋𑌨𑌿𑌵𑌞𑍍𑌚𑌿𑌤𑌾𑌨𑍍 ।
𑌸𑌯𑌾𑌤𑌿𑌨𑌰𑌕𑌂𑌘𑍋𑌰𑌂 𑌧𑌨𑌂𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿𑌹𑍀𑌯𑌤𑍇 ॥

శ్లో॥ యస్తుకరోతిజడాన్సాధూ న్వణిక్పూర్ణోనివంచితాన్ ।
సయాతినరకంఘోరం ధనంతస్యాపిహీయతే॥

யஃகரோதிஜடான்ஸாதூன் வணிக்கர்மணிவஞ்சிதான்
ஸ்யாதிநரகங்கோரந் தனந்தஸ்யாபிஹீயதே.

இ-ள். எந்தவைசியன், சாதுக்களாயும் தெரியாதவர்களாயுமுள்ளவர்களை வஞ்சிக்கின்றானோ அந்தவைசியன் அச்சத்தைத்தருகின்ற நரகத்திற்குச் செல்வன். அவன் பொருளும் அழிந்துவிடும்.

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

என்பதுமது.

## IV. சூத்திரன்.

சூத்திரன்விராட்டுவின் பாதத்தில் பிறந்தவனாதலால் நான்காம் வருணத்தான் அல்லது முதன் மூன்று வருணத்தாருக்குந் தாழ்ந்தசாதியனாவன்.

சூத்திரன் ஆரியவகுப்பினின்று நீக்கப்பட்டவனுமல்லன்; அவன் ஊழிய வகுப்பினனாய்ப் பிறந்தவனென்றாவது, அல்லது அவன் மற்றச் சாதியர்களுடன் சம்பந்தப்பட்டவனென்றாவது கூறவுமில்லையென்பது. 75-ஆவது பக்கத்திற்காண்க.

சூத்திரன் என்பதற்குப் பொருள் சுத்திசெய்கிறவன். இதன் விவரம் 82-ஆவது பக்கத்திற் காண்க.

### சட்டங்களுக் கடங்காத துவிஜர் விராத்தியரேனல்.

முதன் மூன்று ஜாதி ஏற்பாட்டின் சட்டங்களுக்கு உடன்படாத ஆரியர்கள் ஜாதிப்பிரஷ்டர்கள், அல்லது குலஹீனர்கள் என ஏற்படுத்தப்பட்டனர்; அவர்களை விராத்தியரெனக் கூறுவார்கள். அவர்கள் மேற்குலத்தாரைப்போலப் பேசுகிறார்கள்; அவர்கள் ஆரியரின் சிட்சை அல்லது கற்பனைக்கு உடன்படவில்லை. அவர்கள் மீளவும் ஆரியவகுப்பிற் சேரவேண்டுமானாற் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளவேண்டுமாம்.

**சட்டங்களுக்கடங்கிய பூர்வகுடிகள் சூத்திரரெனல்.**

பிராமணர்களின்சட்ட ஏற்பாட்டிற்கு இசைந்துள்ள பூர்வகுடிகளுக்கு ஓர்வித நயங்காட்டியிருக்கிறது; அதாவது நான்காவது சாதி என்ற சூத்திரவகுப்பிற் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இதுதயாவிஷயமாகச் செய்ததாகத் தோற்றுகிறது.

**சட்டங்களுக்கு அடங்காத பூர்வகுடிகள் தாசரெனல்.**

மேற்கூறிய சட்டங்களுக்கு இசையாத பிரத்தியேகமான சுதந்தரவாசிகள், என்ன பாஷைபேசினபோதிலும், அவர்களைத் தாசரெனவழங்குகிறார்கள்.

**சூத்திரன் கருமம்.**

மநு. 1-191-ஆவது சுலோகம்.

𑌏𑌕𑌮𑍇𑌵 𑌤𑍁 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑌾𑌦𑌿𑌶𑌤𑍍 ।
𑌏𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌮𑌨𑌸𑍂𑌯𑌯𑌾 ॥

శ్లో॥ ఏకమేవతుశూద్రస్య ప్రభుఃకర్మసమాదిశత్।
ఏతేషామేవవర్ణానాం శుశ్రూషామనసూయయా॥

ஏகமேவது ஸூத்ரஸ்ய பிரபுகர்ப ஸமாதிஸத்
ஏதோஷா மேவவர்ணாநாம் ஸுஸ்ரூஷா மநஸூயயா.

இ-ள். சூத்திரனுக்கு, முதல் மூன்று வருணத்தாருக்கும் பொறாமையின்றிப் பணிசெய்வதொன்றையே முக்கியமான தருமமாக விதித்தார்.

மநு. 10-122. 'சூத்திரன் சுவர்க்கத்திற்காவது சீவனத்திற்காவது அல்லது இரண்டிற்குமாவது பிராமணனையே தொழவேண்டும்.

10-123. பிராமணனை யுபசரிப்பதே சூத்திரனுக்கு எல்லாத் தொழிலினும் மேலானதொழிலாம். மற்றவையெல்லாம்

பயனில்லாதவை என்று கருமகாண்டத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

வேதம் பயின்ற பிராமணனுக்குச்செய்யுமூழியத்திற்குத்தக்கப்படி, சூத்திரனுக்கு நல்ல சனனமும் நல்ல பதவியும் கிடைக்கும்.

சூத்திரன் பிராமணனிடத்தில் சுத்தமும் வணக்கமுமுடையவனாக இருக்கவேண்டும்.

கருவமற்றவனாகவும் எதிர்வார்த்தை பேசாதவனாகவும் இருந்தால் பின்சனனத்தில் உயர் குலத்தில்வந்து பிறப்பான்.

9-334. வேத சாஸ்திரமறிந்த பிராமணனுக்குச் சிசுருடை செய்வதே சூத்திரனுக்கு மோக்ஷத்தைக்கொடுக்கிற மேலான தருமமாம்.

உசிஈசு=சுக்கிரனற் கூறப்பட்டது.

ஶூத்₃ரஸ்ய த்₃விஜஶுஶ்ரூஷா ஸர்வஶில்பாநிவாபி ச ।
விக்ரய꞉ ஸர்வவஸ்தூநாம் ஶூத்₃ரகர்மோதா₃ஹ்ருதம் ॥

శ్లో॥ శూద్రస్యద్విజశుశ్రూషా సర్వశిల్పానివాపిచ ।
విక్రయస్సర్వవస్తూనాం శూద్రకర్మోదాహృతం॥

சூத்ரஸ்ய த்விஜஸிஸ்ரூஷா ஸர்வஸில்ப்பாநிவாபிச
விக்ரயஸ்ஸர்வவஸ்தூநாம் ஸூத்ரகர்மஹ்யுதாஹிருதம்.

இ-ள் அந்தணர் அரசர் வைசியர் என்னும் இருபிறப்பாளர் மூவரையும் முறைமைப்படி உபசரித்துப் பணிபுரிதல், எல்லா வகைப்பட்ட சிற்பத்தொழில்களையும் செய்தல், எல்லாப்பொருளையும் விற்றல், இவைகள் சூத்திரன் சீவனத்தொழில்களென்று கூறப்பட்டன.

இதனால் வியாபாரஞ் செய்பவரெல்லாம் வைசியராகார் என்பது கருத்தாம்.

ஹாரீதர்.

ஶூத்ரஸ்யதர்மோத்விஜாதிஶுஶ்ரூஷா
பவர்ஜநம் களத்ராதிபோஷணம்
கர்ஷணம்பஶுபாலநபாரோத்வஹநபண்ய
வ்யவஹாரசித்ரகர்மந்ருத்தகீதவேணு
வீணாம்ருதங்கவாதநாதீநிச ||

శ్లో॥ శూద్రస్యధర్మోద్విజాతిశుశ్రూషా
పవర్జనం కళత్రాదిపోషణం
కర్షణంపశుపాలనభారోద్వహనపణ్య
వ్యవహారచిత్రకర్మనృత్తగీతవేణు
వీణామృదంగవాదనాదీనిచ.

சூத்ரஸ்யதர்மோதிவிஜாதிஸிஸ்ரூஷா
பவர்ஜநம் களத்ராதிபோஷணம்
கர்ஷணம்பஸுபாலநபாரோத்வஹநபண்ய
வியவஹாரசித்ரகர்மநிருத்தகீதவேணு
வீணாமிருதங்கவாதநா தீநிச.

இ-ள், இருபிறப்பாளரைச் சேவிப்பதுவே சூத்திரனுக்குச் சிறந்ததருமமாம். அது=குப்பைகளைதல் முதலியதொழில்,எஜமான் குடும்பத்தைக்காத்தல், நிலத்தையுழுதல், பண்ணைவேலை முதலியசெய்தல், பசுநிரைகாத்தல், சுமைசுமத்தல், அங்காடித்தொழில், சித்திரவேலை, கூத்து, பாடல், குழலாதியூதல், வீணை மத்தள முதலிய வாத்தியங்களை முழக்குதலாதியாம்.

சூத்திரர்க்குழவுதொழிலாகாதெனல்.
பராசரம் ஆசாரகண்டம்
2-ஆவது அத்தியாயம், 17-ஆவதுபக்கம்.

விகர்மகர்மதேஶூத்ரே த்விஜஶுஶ்ரூஷயோஜ்ஜிதா |
பவத்யல்பாயுஷோதேவ நிரயம்யாத்யஸம்ஶயம் ||

శ్లో॥ వికర్మకుర్వతేశూద్రో ద్విజశుశ్రూషయోజ్ఝితాః
భవంత్యల్పాయుషస్తేవై నిరయంయాంత్యసంశయం॥

விகர்மகுர்வதேஸூத்ரோ த்விஜஸுஸ்ருஷயோக்கிதா:
பவந்தியல்பாயுஷஸ்தேவை நிரயம்யாந்த்யஸம்சயம்.

இ-ள்' சூத்திரர் இருபிறப்பாளரது பணிவிடைகளை விடுத்துக்கொடுந்தொழிலாகிய உழவு முதலிய தொழில் செய்தால் அற்பாயுளையுடையவராய்நரகத்தையடைவர். இதிலையமில்லை. ஊதியம்(=இலாபம்), அதிகமாகக் கிடைப்பதால் எல்லாப் பிழைப்புக்குங் காரணமாயிருத்தலின், உழவினை மாத்திரம் செய்துவந்தால் அது விகருமமாம். விகருமம்=கொடுந்தொழில். சூத்திரன் வேதியன்பணிசெய்தால் கிழிந்த ஆடையும் உச்சிட்ட அன்னமுமே கிடைப்பனவாம். விசேடித்த வூதியம் ஒன்றும் கிடைப்பதல்லவே யென்றெண்ணி, மிகுந்த பொருளிச்சையால் உழவு முதலிய சீவன விருத்தியுள் புகுந்து, அவற்றினையே செய்திருந்து வேதியன் பணியை விட்டால், அந்தச் சூத்திரனுக்கு இம்மைப் பயனும் மறுமைப் பயனும் கெடுகின்றன.

இனி, பராசரம் ஆசாரகாண்டம் 2-ஆவது அத்தியாயம் 2-ஆவது சுலோகத்தில், பிராமணன் ஆறுகருமங்களுடன் உழவுதொழிலுஞ் செய்யலாமென்று விதிக்கப்பட்டிருத்தலால், இவ்வுழவைக்கொடுந்தொழிலென இங்ஙனங் கூறியது சூத்திரனைப் பயப்படுத்தி வசப்படுத்தற்கென்க.

**சூத்திரன் பிராமணனதுவேலைக்காகவே சிருட்டிக்கப்பட்டானெனல்.**

மநு. 8-413. பிராமணன் சம்பளங்கொடுத்தேனுங் கொடாமலேனும் சூத்திரனிடத்தில் வேலைவாங்கலாம். ஏனெனில் அவன் பிராமணன் வேலைக்காகவே பிரமனால் சிருட்டிக்கப்பட்டிருத்தலால்.

414. சூத்திரன் எஜமானால் வேலையினின்று நீக்கப்பட்டிருந்தாலும், அந்தவேலையானது, அவனைவிட்டு நீங்காது. இம்மைக்கும் மறுமைக்கும் உபயோகமாக அவனுடன் பிறந்த அந்தவேலையை எவன்தா னீங்குவான். ஆதலால் அவன் மறுமைக்காகவும் பிராமண சிசுருஷை செய்யவேண்டும்.

**சூத்திரனுந்தத் தான் தேடிய பொருளினுஞ் சுதந்தரமில்லையெனல்.**

8-416. மனையாள், பிள்ளை, வேலைக்காரன் இவர்களுக்குப் பொருளில் சுயாதினமில்லை. இவர்கள் எப்பொருளைச் சம்பாதித்தாலும்; அவைகள் அவர்களின் எஜமானையேசேரும். எஜமான் உத்தரவின்றித், தருமவிஷயத்திற்கும் மேற்சொன்னவர் தங்கள் பொருளைச் செலவழிக்கக்கூடாது.

8-417. பிராமணன் சந்தேகமின்றி மேற்சொல்லும் ஏழுவிதத்தொழிலாளிகளான சூத்திரரிடத்தினின்றும் பொருளை வலிமையாலும் எடுத்துக்கொள்ளலாம். அரசன் சூத்திரனிடத்து வரிவாங்கலாகாது. அவன்பிறன்வயப்பட்டானாதலாலும், பொருளில் சுதந்தரமில்லாதவனாதலாலுமென்க.

மநு. 10-129. சூத்திரன் பொருள்சம்பாதிக்கத்தக்கவனாக இருந்தாலும், குடும்பத்திற்கு வேண்டுமளவு சம்பாதிக்க வேண்டும். அதிகப்பொருள் சம்பாதிக்கக்கூடாது. அப்படிச் சம்பாதித்தால் தன்னாலுபசரிக்கத்தக்க பிராமணனையே ஹிம்சைசெய்யவேண்டியதாய்வரும்.

மநு. 8. 418. வைசியனையும் சூத்திரனையும் தன்றன் தொழிலைச் செய்யும்படியாக முயற்சியோடு அரசன் கட்டளையிட வேண்டும். இல்லாவிடில் அவர்களுலகமுழுமையும் அழித்துப்போடுவார்கள்.

**எஜமான் சூத்திரனுக்குச் செய்யவேண்டிய கடமை.**

மநு. 10-124.

𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌤𑍈𑌰𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌸𑍍𑌵𑌕𑍁𑌟𑍁𑌂𑌬𑌾𑌦𑍍𑌯𑌥𑌾𑌰𑍍𑌹𑌤𑌃 ।
𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌦𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌚 𑌭𑍃𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ॥

శ్లో॥ ప్రకల్ప్యాతస్యతైర్వృత్తిః స్వకుటుంబాద్యథార్హతః
శక్తించావేక్ష్యభక్తించ భృత్యానాంచపరిగ్రహం॥

பிரகல்பியாதஸ்யதைர்விருத்திஃ ஸ்வகுடும்பாததார்ஹதஃ
ஸக்திஞ்சாவெக்ஷ்யபக்திஞ்ச பிருத்தியாநாஞ்சபரிகிரஹம்.

இ-ள், வேதியர் தமது பணிசெய்யுஞ் சூத்திரனுக்குத் தமது குடும்பத்திலிருந்து தக்க சீவன வழியை யுண்டுபண்ண வேண்டும். அவன் செய்யும் பணிக்கும், அவனுக்குண்டாயிருக்கும் பக்திக்கும், அவன் குடும்பத்திற்குத் தக்கவாறு தமதளவையும் அறிந்துகொடுக்கவேண்டும்.

மநு. 10-125.

𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌮𑌨𑍍𑌨𑌂𑌦𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 𑌜𑍀𑌰𑍍𑌣𑌾𑌨𑌿𑌵𑌸𑌨𑌾𑌨𑌿𑌚 ।
𑌪𑍁𑌲𑌾𑌕𑌾𑌶𑍍𑌚𑍈𑌵𑌧𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌜𑍀𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌚𑍈𑌵𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌦𑌾𑌃 ॥

శ్లో॥ ఉచ్ఛిష్టమన్నందాతవ్యం జీర్ణానివసనానిచ
పులాకాశ్చైవధాన్యానాం జీర్ణాశ్చైవపరిచ్ఛదాః॥

உச்சிஷ்டமந்நம் தாதவ்யம் ஜீர்ணாநிவஸநாநிச
புலாகாஸ்சைவதாந்யாநாம் ஜீர்ணாஸ்சைவபரிச்சதாஃ

இ-ள்: உண்டு மிகுந்த எச்சில் பழையது அனுபவித்து மிகுந்த பண்டங்கள் பழைய ஆடைகள் சோறு அல்லது அவல் பொரி முதலியன, தானியவகைகளிற் சிறிது சிறிது, பழமைப்பட்ட ஏனைய கருவிப்பொருள்களும் கொடுக்கப்படுவனவாம்.

விருத்த மநு.

𑌪𑍀𑌤𑍍𑌵𑌾𑌪𑍋𑌶𑌨𑌮𑌶𑍍𑌨𑍀𑌯𑌾 𑌤𑍍𑌪𑌾𑌤𑍍𑌰𑌦𑌤𑍍𑌤𑌮𑌗𑌰𑍍𑌹𑌿𑌤𑌂।
𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌭𑍃𑌤𑍍𑌯𑌕𑌦𑌾𑌸𑍇𑌭𑍍𑌯 𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌂𑌶𑍇𑌷𑌯𑍇𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌃॥

శ్లో॥ పీత్వాపోశనమశ్నీయా త్పాత్రదత్తమగర్హితం।
భార్యాభృత్యకదాసేభ్య ఉచ్ఛిష్టం శేషయేద్ద్విజః॥

பீத்வாபோஶமஸ்நீயாத் பாத்திரதத்தமகர்ஹிதம்
பார்யாபிருதகதாஸேப்ய உச்சிஷ்டம் ஶேஷயேத்திவிஜ:

இ-ள், இருபிறப்பாளன் * சிறிது நீரைக்குடித்துப் பின்பு புண்கலத்திற் படைத்திருக்கப்பட்ட நல்ல அன்னத்தினைப் உசிக்கவேண்டும். மனைவிக்கும் பணியாளர்க்கும் அடிமைகளுக்கும் எச்சிலை மிகுத்துவைத்தல்வேண்டும்.

சாந்திபருவம்.

𑌛𑌤𑍍𑌰𑌵𑍇𑌷𑍍𑌟𑌨𑌮𑍌𑌂𑌜𑌾𑌨𑌿 𑌹𑍍𑌯𑌪𑌾𑌨𑌦𑍍𑌵𑍍𑌯𑌜𑌨𑌾𑌨𑌿𑌚 ।
𑌯𑌾𑌤𑌯𑌾𑌮𑌾𑌨𑌿𑌦𑍇𑌯𑌾𑌨𑌿 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌯𑌪𑌰𑌿𑌚𑌾𑌰𑌿𑌣𑍇 ॥

శ్లో॥ ఛత్రవేష్టనమౌంజాని హ్యుపానద్వ్యజనానిచ।
యాతయామానిదేయాని శూద్రాయపరిచారిణే॥

சத்ரவேஷ்டநமௌஞ்ஜாநிஹ்யுபாநட்வியஜநாநிச
யாதயாமாநிதேயாநிஶூத்ராயபரிசாரிணே.

இ-ள். குடை தலைக்காடை அரைஞாண் பாய் செருப்பு விசிறி உடுக்குமாடை இவைகள் பழமைப்பட்டால் பணிவிடைசெய்யும் சூத்திரனுக்குக் கொடுக்கவேண்டும்.

சூத்திரபேதம்.

மநு. 8-245. இனி அச்சூத்திரன்.

1. யுத்தத்தில் ஜெயித்துக்கொண்டுவரப்பட்டவன்,
2. பத்தியினால் வேலைசெய்கிறவன்,
3. தன்னுடைய தேவடியாள் மகன்,
4. விலைக்கு வாங்கப்பட்டவன்,
5. ஒருவனால் கொடுக்கப்பட்டவன்,

* சிறிதுநீர் குடித்தல் - ஆசமனஞ் செய்தல்.

6. குலவழியாகத் தொன்றுதொட்டு வேலைசெய்கிறவன்;
7. குற்றத்திற்காக வேலைசெய்கிறவன்,

என எழுவகைப்படுவன்.

**சூத்திரபேதமும் அவர்கள் பொருள் வேள்விக்காகா தென்பதும்.**

சுமந்து.

ஶூத்ரயாஜகஸ்ஸர்வத்ரவ்ய பரித்யாகாத்பூதோ பவதி ।
அபிஶஸ்தபதித பௌனர்ப்பவ ப்ரூணஹ பும்ஶ்சல்ய
ஶஸ்த்ரகாரதைலிக சாக்ரிக த்வஜி ஸுவர்ணகாரா
லேக்யக ஷண்டக வர்த்தகி கணக கணிகா ஶௌண்டிக வ்யாதநி
ஷாதரஜக புராடசர்மகாரா அபோஜ்யான்னா அப்ரதி
க்ராஹ்யா அயாஜ்யாஶ்ச ।

శూద్రయాజక స్సర్వద్రవ్య పరిత్యాగా త్పూతో భవతి
అభిశస్త పతిత పౌనర్భవ భ్రూణహపుంశ్చల్యశుచి
శస్త్రకార తైలిక చాక్రికధ్వజి సువర్ణకారా లేఖ్యక
షణ్డక వర్ధకిగణక గణికా శౌణ్డిక వ్యాధనిషాద రజక [శ్చ ॥
బురాడ చర్మకారా అభోజ్యాన్నా అప్రతిగ్రాహ్య అయాజ్యా

ஶூத்ரயாஜகஸ் ஸர்வத்திரவ்ய பரித்யாகாத் பூதோபவதி
அபிஸப்தபதித பௌனர்ப்பவ புரூணஹ பும்ஸசல்யஶசி
ஶஸ்தரகார தைலிக சாகரிக த்வஜீ ஸுவர்ணகாரா லெக்யக
ஷண்டக வர்த்தகி கணக கணிகா ஸௌணிக வியாதம ஜக
புராடசர்மகாரா அபோஜ்யான்ஞ அப்பிரதிகிராஹ்ய அயாஜ்
[யாஸ்ச.

இ-ள். சூத்திரனுக்கு வேள்விசெய்தவன் பொருளை யெல்லாம் விட்டொழிதலினால் பரிசுத்தனுகின்றான். அபவாதமடைந்தவன், கருமவொழுக்கங்கெட்டவன், புநர்விவாவகமானவள்மகன், கருவழித்தவன், சிசுக்கொலைசெய்தவன், ஆணவாயபெண், சுத்தமில்லாதவன், ஆயுதங்கள்செய்பவன்,

எண்ணெய்வாணிபஞ்செய்பவன், குயவன், கொடிபிடிப்பவன் அல்லது குறியிடப்பட்டவன், தட்டான், அரிப்பாளன் அல்லது ஆகரத்து நின்றும் பொன்னெடுப்பவன், சித்திரக்காரன், பேடி, தச்சன், ஒட்டன், மண்வேலைசெய்பவன், கொல்லத்துக்காரன் அல்லது கொத்தன், கணக்கன், கணிகை, கூனன், ஊன்விற்குமவன் அல்லது பரதவன், செம்படவன், வேடன், நிஷாதன், காட்டில்வசிப்பவன், வண்ணான், குடுகுடுப்பைக்காரன், சகுனஞ்சொல்பவன், தோல்வேலைசெய்பவன் அல்லது செம்மான் மதங்கன் வெட்டியான்.

இவர்கள் கைப்பொருள்களைப் புசிக்கலாகாது. இவர்களிடம் தானம் வாங்கலாகாது. இவர்கள் வேள்விசெய்விக்கலாகாது.

### சூத்திரனுக்கு உயர் வொழுக்கமில்லையெனல்.

ஹிந்து தர்ம சாஸ்திரத்தின்படி சூத்திரன் சமயாசாரத்தினின்றும் முழுமையும் தாழ்த்தப்பட்டிருக்கிறான்.

1-2-6. பிராமணன் சுரகுலத்தானென்றும் சூத்திரன் அசுரகுலத்தானென்றும் கிருஷ்ணயசுர்வேதம் தைத்திரியப் பிராஹ்மணத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

சூத்திரன் பிராமணன் குடும்பவேலையில் பிரவேசிக்க ஸ்நானம் செய்யவேண்டுவதில்லை. ஸ்நானஞ்செய்தாலும் அந்தணரைத் தீண்டலாகாது.

கள்வும் கட்குடியும் மேற்குலத்தாரைப்போலக் கூடா என்று இவர்களுக்குநிர்ப்பந்தமின்றும்,

சாப்பிடத்தகாத முள்ளங்கி முதலியவற்றைச் சூத்திரன் சாப்பிடுவதினால் தோஷமில்லை. (மநு. 10-126.)

### சூத்திரனுக்கு வைதீகக்கிரியையில்லையெனல்.

இவனுக்கு உபநயனமுதலிய சம்ஸ்காரமும் அக்கினிஹோத்திர முதலியனவுங் கிடையா. ஆனால் யாக எக்கிய

தருமகாரியங்கள் மாத்திரம் இவனுக்கு நீக்கப்படவில்லை. (மநு 10-127.)

வேதமோதலும் யக்ஞோபவீதந் தரித்தலும் சூத்திரருக்குப் பயனற்றவையாம். அவர்களுக்கு ஊழியமே உரியதாம். (கிருஷ்ணயசுர்வேதம் ஹிரண்யகேசி சூத்திரம்)

**சூத்திரனுக்கு விவேகத்தை விளக்கலாகாதெனல்.**

பிராமணன் சூத்திரனுக்குப் புத்திசொல்லக்கூடாது. வைதீக கர்மங்களைப் போதிக்கக்கூடாது.

முதன் மூவருக்குள் மிசிரத்தாலுண்டான சங்கர சாதியர்கள் துவிஜத்துவ கிரியைகளை அனுட்டித்தாலும் சூத்திரசாதியார் அனுட்டிக்கப்படாதாம்.

தர்ம சாஸ்திரங்களையும் ஞானமார்க்கத்தையும் சூத்திரனுக்குப் போதிக்கிற பிராமணன் நரகத்தையடைவன்.

**சூத்திரன் வேதம் ஓதலாகாதெனல்.**

(சுக்கில யசுர் வேதம் காத்தியாயன சூத்திரம்.)

சூத்திரன் வேதமோதலாகாது. ஓதுவதைக் கேட்கலாகாது. மனனமுஞ்செய்யலாகாது.

சூத்திரனுக்கெதிரில் வேதம் ஓதலாகாது. அவனுக்காக வேள்வியும் செய்யக்கூடாது.

சூத்திரன் வேதமோதின் அவன் நாக்கையறுக்கவேண்டும். வேதம் ஓதுவதைக்கேட்டால் அவன் காதுகளின் துளையில் ஈயம் அல்லது அரக்கைக்காய்ச்சி ஊற்றவேண்டும். வேதத்தை மனனஞ்செய்யின் அவன் மார்பைப்பிளக்கவேண்டுமென்றுங் கூறுகின்றது.

இங்ஙனம் விதியேற்படுத்தியது முழுவதும் நியாயவிரோதமாம். எங்ஙனமெனில் ஸ்திரீ சூத்திரர்கள்பலர் வேதங்களை யுண்டுபண்ணிய கிரந்தகர்த்தர்களா யிருத்தலாலென்க.

யாகசாலையில் மலமூத்திராதி குப்பைகளை எடுப்பதற்குச் சூத்திரன் உள்ளேபுகுந்தால் பிரம க்ஷத்திரிய வைசியர்கள் மௌனஞ் சாதிக்கவேண்டும். எனவே வேதம் ஓதப்படாதென்பது கருத்து (கிருஷ்ண யசுர்வேதம் ஹிரண்கேசி சூத்திரம்.)

### சூத்திரனுக்கிழிபெயரிடவேண்டுமேனல்.

பெயரிடுங்கால் அந்தணனுக்கு வைதீகத்தையும், க்ஷத்திரியனுக்கு வீரத்தையும்,வைசியனுக்குச் செல்வத்தையும்,சூத்திரனுக்கு இழிவையும், குறிக்கும்படி இடவேண்டும்.

### தண்டனைவிதி.

ஆரியன் சூத்திரமாதுடன் சேர்ந்தால் அவனை யூரைவிட்டோட்டவேண்டும். சூத்திரன் ஆரியமாதைச்சேர்ந்தாலவனைக்கொலைசெய்யவேண்டும்.

சூத்திரன் ஆரியனுடன் வீதியில் சமமாகவிருந்தாலும், கட்டிலிலாவாவது தரையிலாவது சமமாக இருந்தாலும், தடிகொண்டடிக்கவேண்டும்.

சூத்திரன் கொலை திருட்டு பிறனிலத்தையபகரித்தல் இவைகளைச் செய்தால் அவனைக் கொலைசெய்யவேண்டும். (ஹிரண்யகேசி சமயாசாரசூத்திரம்.)

சூத்திரன் அந்தணனுக்குச் சொற்பக்குற்றஞ் செய்யினும் பெரிய தண்டனைக்குள்ளாவான்.

பிராமணன் சூத்திரனைக் கொன்றால் அது ஒருபூனை பட்சி தவளை நாய் காக்கை பல்லி இவற்றுளொன்றைக் கொன்றதற்கொப்பாம்.

## முதலாவது ஆரியகாண்டம்

முற்றிற்று.

ஆதியில் இந்தியாவில் குடியாயுள்ளவர்கள் திராவிடர்களேயாம். இவர்கள் சுத்த சைவசீலர்களாக வடநாடு முழுமையும் பரவியிருந்தார்கள். அக்காலத்தில் பார்சீகநாட்டிலிருந்து ஆரியர்கள் இந்தியாவில் வந்து குடியேறிக், குதிரை யாடு மாடு தின்பனவற்றோடு சோமபானமென்னுங் கட்குடித்தலுமுடையராதலினால், வைதீக கிரியை என்று யாகங்கள் செய்வதும், அவற்றுள் ஆடுமாடு அசுவமாதிய சீவபலியிட்டுப்புசிப்பது மன்றிப் புருஷமேத யாகமென மனிதரையும் பலியிட்டுத்தின்றுவந்தார்கள். இதனாலேதான் ஆரியரென்ற பதத்துக்குப் பூருவநூலாசிரியர்கள் மிலேச்சரென பொருள் கூறியிருக்கின்றனர். இதனை பிங்கலந்தை ஐந்தாவது ஆடவர்வகைப் பெயர்பிரிவு. 72-ஆவது சூத்திரத்தாற் காண்க. மிலேச்சர் என்பதை ஆங்கிலேயர் Barbarians எனக் கூறுவர். இன்னும் அவ்வாரியர் Cannibals, என்ற நரமாமிச பட்சணியர்களுடன் சம்பந்தப்பட்டவர்களாகவு மிருந்திருப்பார்களென்று நம்பவேண்டியதாயிருக்கிறது. இது இங்ஙனம் நிற்க. இவ்வாரியர்கள் பெருங்கூட்டமாய்வந்து பரவினவுடன் திராவிடரோடு யுத்தஞ்செய்து, அவர்கள் நாட்டைக்கைப்பற்றிக் கொண்டார்கள். அதன்மேல் திராவிடர்கள் விந்தகிரிக்குத் தென்பாகமாகிய * தண்டகாரணியத்தில் சேரசோழ பாண்டிநாடுகளில் வந்துவாசஞ்செய்திருந்தார்கள். அதன்மேல் ஆரியர்கள் குடிவந்திருந்த நாட்டிற்கு ஆரியர்வர்த்தம் என்றும், திராவிடர்கள் வந்து வசித்தநாட்டிற்குத் தமிழ் நாடு அல்லது திராவிடதேசம் என்றும், பெயர்கள் வழங்கப்பட்டன.

Indian caste by Mr. Wilson page 135.

"It is to be particularly observed that no exterior tribes are mentioned which have been recognized geographically as having their locations south of the Vindhya

* தண்டகாரணியம்=தண்டகனென்னும் அரசனாலாளப்பட்ட நாடுசூழ்ந்த காடு.

mountains. This range, up to the period of the composition of this Adhyaya (I. E. the thirtieth Adhyaya of the Yajur Veda had probably uot been crossed by the Aryas."

இதன்மொழி பெயர்ப்பு உலசன் துரையால் செய்யப்பட்ட இந்தியர்களின் ஜாதிநூல் 135-ஆவதுபக்கம்.

புறநாட்டுச்சாதியர்களில் ஒருவரும் விந்தகிரியின் தென் பர்கத்தில் குடியிருந்ததாகக் குறிக்கப்படவில்லை யென்பதை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். இந்த யசுர்வேதம் 30-ஆவது அத்தியாயம் எழுதி முடிகிறவரையும் ஆரியர்கள் விந்த கிரியைக்கடந்து வரவில்லை. எனவுங்கூறப்பட்டிருக்கின்றது.

இதனால் விந்த கிரியின் தென்பாகத்திலுள்ள தேசங்களின்வளத்தையும், ஆங்குவசித்துள்ள திராவிடர்களின் ஆசார ஒழுக்கத்தையும், தேவதாபக்தியையும், சாதி ஏற்பாட்டையும் சிறிதேனும் ஆரியர்களுணர்தற்கேதுவில்லாதிருந்தனர். அதனால் திராவிடர்களுள் சாதியேற்பாடில்லையெனக் கருதித் திராவிடர் எல்லாரும் ஊழியவகுப்பினராகிய சூத்திரரேயென்று எழுதிவிட்டதுமன்றி இக்காலத்தும், திராவிடர்களைச் சூத்திரரென வழங்கிவருகின்றார்கள். இந்நாட்டிலுள்ள சாதிசமயங்களில் பூரணதேர்ச்சியில்லாதார் அவ்வாரியரின் கூற்று உண்மையென நம்பி மோசம்போனார்கள். இப்புரட்டை உண்மையாகக்கொண்டு, ஆயிரவருஷக்கணக்காகப் பழகியும், ஸ்திரீ சூத்திரர்கள் வேதம் ஓதப்படாதென ஆரியர்கள் எழுதிவைத்த தகட்டுவாக்கியங்களை உண்மையென நம்பியும், ஆன்றோராதியர்பலரும் மயங்கிவிட்டார்கள்.

ஆகையால் திராவிடர்களது திராவிடவேதங்களின்பெருமையினையும், அவ்வேதங்களையருளிய ஆசாரியர்களின் பிரபாவத்தையும், அவ்வேதத்துட்கூறும் சாதியேற்பாட்டையும், ஆசார ஒழுக்கங்களையும், இந்நாட்டாரேயன்றி ஏனையநாட்டாரும் நன்குணரும்படி விரித்துரைக்கக் கருதி, மேல்வருங்காண்டத்துக்குத் திராவிடகாண்டமெனப் பெயர்கொடுக்கப்பட்டது.

உ

சிவமயம்.

# வருண சிந்தாமணி.

இரண்டாவது

## திராவிட காண்டம்.

### முதலாவது: அத்தியாயம்—திராவிடவேதம்.

**வேதமுடைய பாஷைகள் ஆரியந் திராடவிடமெனல்.**

இந்துக்களுள் வழங்கப்பட்ட பாஷைகள் பலவுளவேனும் ஆன்றோரால் வரையறுக்கப்பட்ட பாஷை பதினெட்டாம். அவற்றுள் வேதமுடையவை ஆரியம் திராவிடமென இரண்டேயாம்.

**திருமந்திரம்.**

*மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்*
*றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து*
*வாரிய முந்தமி ழும்முட னேசொலிக்*
*காரிகை யார்க்குக் கருணை செய்தானே.*

*அவிழ்க்கின்ற வாறு மதுகிட்டு மாறுஞ்*
*சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறுந்*
*தமிழ்ச்சொல் வடசொல் லெனுமிவ் விரண்டு*
*முணர்த்து மவனை யுணரலு மாமே.*

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்
அச்சிறுபாக்கம் பண்-குறிஞ்சி.

மைம்மலர்க் கோதை மார்பின ரெனவும் மலைமக ளவளொடு மருவின ரெனவுஞ், செம்மலர்ப் பிறையுஞ் சிறையணி புனலுஞ் சென்னிமே லுடையரெஞ் சென்னிமே லுறைவார், தம்மல ரடியென்

றடியவர் பரவத் தமிழ்ச்சொலும் வடசொலுந் தாணிழற் சேர, வம்மலர்க் கொன்றை யணிந்தவெம் மடிக ளச்சிறு பாக்கம தாட்சிகொண்டாரே.

## திருமழபாடி பண்-கொல்லி.

அந்தணர் வேள்வியு மருமறைத்துழனியுஞ்
செந்தமிழ்க் கீதமுஞ் சீரினால் வளர்தரப்
பந்தணை மெல்விர லாளொடும் பயில்விட
மந்தம்வந் துலவுசீர் மாமழ பாடியே.

## திரு அரத்தைப்பெரும்பாழி பண்-கொல்லி.

மண்ணர்நீ ராரழ லார்மலி காலினர்
விண்ணர் வேதம்விரித் தோதுவார் மெய்ப்பொருள்
பண்ணர் பாடலுடை யாரொரு பாகமும்
பெண்ணர் கோயிலரத் தைப்பெரும் பாழியே.

## திருவாலவாய் பண்-கொல்லி.

சந்துசேனனு மிந்துசேனனுந் தருமசேனனுங் கருமைசேர்
கந்துசேனனுங் கனகசேனனு முதலதாகிய பெயர்கொளா
மந்திபோற்றிரிந் தாரியத்தொடு செந்தமிழ்ப்பய னறிகிலா
வந்தகர்க்கெளி யேனலேன்றிரு வாலவாயர னிற்கவே.

## திருநாவுக்கரசு சுவாமிகள் திருமறைக்காடு திருத்தாண்டகம்.

மூரி முழங்கொலி நீரான் கண்டாய் முழுத்தழல்போன் மேனி முதல்வன் கண்டா, யேரி நிறைந்தனைய செல்வன் கண்டா யின்னடியார்க் கின்பம் விளைப்பான் கண்டா, யாரியன் கண்டாய் தமிழன் கண்டா யண்ணாமலையுறையு மண்ணல் கண்டாய், வாரி மதகளிறே போல்வான் கண்டாய் மறைக்காட் டுறையு மணாளன் றானே.

மூலநோய் தீர்க்கு முதல்வன் கண்டாய் முத்தமிழு நான்மறையு மானான் கண்டா, யாலின்கீழ் நால்வர்க் கறத்தான் கண்டா யாதியு மந்தமு மானான் கண்டாய், பால விருத்தனு மானான் கண்டாய் பவளத் தடவரையே போல்வான் கண்டாய், மாலைசேர் கொன்றை மலிந்தான் கண்டாய் மறைக்காட் டுறையு மணாளன் றானே.

திருக்கடம்பந்துறை திருக்குறுந்தொகை.

ஆரி யந்தமி ழோடிசை யானவன்
கூரிய குணத் தார்குறி நின்றவன்
காரி கையுடை யான்கடம் பந்துறைச்
சீரியல் பத்தர் சென்றடை மின்களே.

திருவாவடுதுறை திருத்தாண்டகம்.

பந்தணவு மெல்விரலாள் பாகன் றன்னைப் பாடலோ டாடல் பயின்றான் றன்னைக், கொந்தணவு நறுங்கொன்றை மாலையானைக் கோலமா நீல மிடற்றான் றன்னைச், செந்தமிழோ டாரியனைச் சீரியானைத் திருமார்பிற் புரிவெண்ணூ றிகழப் பூண்ட,வந்தணனை யாவடுதண் டுறையுண் மேய வரனடியே யடிநாயே னடைந்துய்ந் தேனே,

என வருவனற்றாலும் இவைபோல்வனபலவுள அவற்றாலுங் காண்க.

இனி, பாஷைகள் பலவுளவாக ஆரியதிராவிடங்களுக்கு மேம்பாடு வந்தகாரணம் என்னை?யெனின், இவை பிறமொழிகள் போலாது பாணினியார் அகத்தியனார் என்னும் முனிவர்களால் முறையே செய்யப்பட்டமுதனூல் இலக்கணங்களாலே சீர்திருந்தி நின்றமையாலும், பிராகிருதம் முதலியவற்றிற்கு ஆரியமும்,ஆந்திரம் முதலியவற்றிற்குத் திராவிடமும்,முதன்மை பெற்றிருந்தமையாலுமேயாம்.

திராவிட வேதம் இவையெனல்.

இது காறும் வேதமென்பது ஆரிய பாஷையில் தான் உள்ளதென்றிருந்தோம். இப்போது நீர்திராவிடத்திலும் உண்டென்று கூறக்கேட்டோம். ஆயினும் ஆரியத்துள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னுமிவற்றை வேதமெனக்கூறுதல்போலத் திராவிடத்திலும் வேதங்களெனக்கூறு நூல்களுளவோ? எனின், உளவாம். அவை எவை? யெனில்,

தேவாரம் திருவாசகம் திருக்கோவையார் திருமூலர் திருமந்திரம் திருவள்ளுவநாயனார் குறள் முதலிய நூல்களாம்.

இவை ஆரியவேதத்திற்குச் சமத்துவமாதற்குப் பிரமாண மென்னை? யெனின், தெய்வப்புலமைசான்ற ஔவையாரருளிச்செய்த.

தேவர் குறளுந் திருநான் மறைமுடிபு
மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லு
மொருவா சக மென் றுணர்.

என்ற செய்யுளானறிக.

மேற்கண்ட வேதங்களருளிச்செய்த நூலாசிரியர்கள் யாவர்? அவர்கள் அவ்வேதங்களை அருளுதற்குத் தகுதியுடையவர்களா? எனின்.

திருக்குறளுக்கு ஆசிரியராவார் திருவள்ளுவநாயனார். இவர் பிரமதேவன் அமிசமாக அவதரித்தவர்.

தேவாரத்துக்கு ஆசிரியராவார் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள். என்னும் மூவர்களாம்.

இவர்களுள் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்ருமுகக்கடவுள் அமிசமாக அவதரித்தவர். இவர் மூன்றுவது வயதில் உமாதேவியார் கொடுத்தருளிய ஞானப்பாலுண்டு ஓதாதுணர்ந்தவர்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்கயிலாசத்திலிருந்த வாகீசமுனிவரது பூரண அமிசமாகத் திருவவதாரஞ்செய்து, சிவபிரானுலே நாவுக்கரசு எனவும் அப்பர் எனவுந் திருநாமஞ் சூட்டப்பெற்றவர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலாய மலையிற் சிவபிரானுக்குப் புட்பப்பணிவிடை செய்துகொண்டிருந்த ஆலால சுந்தரரது பூரண அமிசமாய்த் திருவதாரஞ்செய்தவர். இம் மூவர்களுடைய பூரணசரித்திரம்பெரியபுராணத்துள்ளே விரிவாகவிளங்கும்.

திருவாசகம் திருக்கோவையாருக்கு ஆசிரியராவார், மாணிக்கவாசக சுவாமிகள்; இவர் திருக்கயிலாய மலையிலே சிவகணத்தலைவருளொருவராயிருந்தவர். இவரது முழுச் சரித்திரமும் திருவாதவூர்ப் புராணத்தாலறிக.

திருமந்திரத்துக்கு ஆசிரியராவார், திருமூல நாயனார்; இவர் திருக்கயிலாய மலையினுள்ள சிவயோகியரிலொருவர். இவர் பூலோகத்துக்கெழுந்தருளிவந்து திருவாவடுதுறையென்னுந் திவ்ய க்ஷேத்திரத்தையடைந்து மூவாயிரவருடம் சிவயோகத்திலிருந்து, வருடத்துக்கு ஒருமுறை, அவ்யோகத்தினின்றுங் கண்விழித்து,ஒவ்வொருபாட்டலாக மூவாயிரம்பாடலருளிச்செய்தவர். அப்பாடல் மூவாயிரமுமே திருமந்திரமென்பதாம். திருமந்திரமென்பதற்கு ஆரியத்துள் இருக்கு எனப் பெயராம்.

இனி, ஆரியவேதம் விதிபாகம், துதிபாகம், உபநிடதம், மந்திரங்கள் எனப்பிரிவுபட்டுள்ளதாம். இவைபோலத் திராவிடவேதமுமுளதோ? எனின், உண்டு. அவையாவன.

தேவர் குறள்......................விதிபாகங்களாம்.
மூவர் தேவாரம்..................துதிபாகங்களாம்.
திருவாசகம் திருக்கோவையார் உபநிடதங்களாம்.
திருமூலர் திருமந்திரம்...............மந்திரங்களாம்.

மேற்கூறிய நூல்கள் வேதமென்பதற்கு ஆன்றோர்வழக்குளதோ? எனின்,

**திருவள்ளுவநாயனார் திருக்குறள் வேதமென்பதற்குப்பிரமாணம்.**

மதுரைச்சங்கப்புலவர் உக்கிரப்பெருவழுதியார்.

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி.

செய்ஞலூர்க் கொடுங்கண்ணனார்.

வேதப் பொருளை விரகாய் விரித்துலகோ
ரோதத் தமிழா லுரைசெய்தா—ராதலா
லுள்ளுந ருள்ளும் பொருளெலா முண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி
யந்தா மறைமே லயன்.

மாங்குடி மருதனார்.

ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோ
ருள்ளுதோ றுள்ளுதோ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

எனக்கூறியவற்றாற் காண்க.

பின்னுஞ் சங்கப்புலவர்கள் திருக்குறளுக்கு உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை எனக்கொடுத்தருளிய திருநாமங்களே போதுமானசான்றாம்.

மூவர் * தேவாரம் வேதமேன்பதற்குப் பிரமாணம்.

பெரியபுராணம் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்.

திங்களணிமணிமாடமிடைந்தவீதிசென்றணைந்துதெய்வமறைக் கற்பின் மாதர், மங்கலவாழ்த் திசையிரண்டு மருங்கு மல்க வானவர் நா யகர்கோயின் மருங்குசார்ந்து, துங்கநிலைக்கோபுரத்தையிறைஞ்சிப்புக்குச் சூழ்ந்துதிருத் தேரின்மிசை மேவினர்க, டங்கடிரு முன்பு தாழ்ந் தெழுந்துநின்று தமிழ்வேதம் பாடினர் தாளம்பெற்றார்.

* தேவாரம்=தே - கடவுள். ஆரம் - மாலை. அம்மாலை பாமாலை பூமாலையென விருவகைத்து. இங்ஙனங் கூறியமாலை - பாமாலை. இது சிவபிரான் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் முதலிய மூவராற் செய்வித்துத் தாமேயணிந்துகொள்ளப்பட்டதாம்,

திருக்கொறுக் கைப்பதி மன்னித் திருவீரட் டான மமர்ந்த
பொருப்புவில் லாளரை யேத்திப் போந்தன்னி யூர்சென்றுபோற்றிப்
பருக்கை வரையுரித் தார்தம் பந்தண நல்லூர் பணிந்து
விருப்புடன் பாட லிசைத்தார் வேதந் தமிழால் விரித்தார்.

பன்னு தமிழ்மறை யாம்பதிகம் பாடித் திருக்கடைக் காப்புச் சாத்தி
மன்னுங் கவுணியர் போற்றி நிற்க மழவன் பயந்த மழலைமென்சொற்
கன்னி யுறுபிணி விட்டுநீங்கக் கதுமெனப் பார்மிசை நின்றெழுந்து
பொன்னின் கொடியென வொல்கி வந்து பொருவலித் தாதை புடை
[யணைந்தாள்.

வேத வேதியர் வேதி குடியினி
ஞாதர் கோயி லணைந்து நலந்திகழ்
பாத பங்கயம் போற்றிப் பணிந்தெழுந்
தோதி னார்தமிழ் வேதத்தி னோங்கிசை.

சக்கரப் பள்ளியார் தந்தனிக் கோயிலுட்
புக்கருத் தியினுடன் புனைமலர்த் தாள்பணிந்
தக்கரைப் பரமர்பா லன்புறும் பரிவுகூர்
மிக்கசொற் றமிழினால் வேதமும் பாடினார்.

காழியார் வாழவந் தருள்செயுங் கவுணியப் பிள்ளை யார்தா
மாழியா னறியொணா வண்ணலா ரூர்பணிந் தரிது செல்வார்
பாழியா லியானையின் னுரிபுனைந் தார்பனை யூர்பணிந்து
வாழியா மறையிசைப் பதிகமும் பாடியப் பதியில் வைகி.

தெண்டிரைசூழ் கடற்கானற் றிருவகத்தி யான்பள்ளி
யண்டர்பிரான் கழல்வணங்கி யருந்தமிழ்மா மறைபாடிக்
கொண்டல்பயின் மணற்கோடு சூழ்கோடிக் குழகர்தமைத்
தொண்டருடன் றொழுதணைந்தார் தோணிபுரத் தோன்றலார்.

மன்றலங் குழலினாரை வணங்கிப்போந் தமைச்சனாரும்
வென்றிவே லரசனுக்கு முறுதியே யெனவி ரைந்து
பொன்றிகழ் மாடவீதி மதுரையின் புறத்துப் போகி
யின்றமிழ் மறைதந்தாரை யெதிர்கொள வெய்துங்காலை.

திருவிளையாடற் புராணம், சமணரைக் கழுவேற்றிய படலம்.

விரிந்த வேத நாவர்தாம் விரித்த வேத மெய்ப்பொருள்
வரைந்த புத்த கத்தைவன் கயிற்றினால் வகிர்ந்துதா

மருந்த ஞான வமுதளித்த வம்மைபே ரகப்படத்
தெரிந்தவே டெடுத் தடுத்த தீயின் வாயி லிட்டனர்.

பாண்டியன் சுரந்தீர்த்த படலம்.

சிட்டர்நோக்கியத் தீயினைத் தென்றமிழ்க் கூட
லட்டமூர்த்தியை யங்கிருந் தருமறைப் பதிகந்
துட்டர் பொய்யுரை மேற்கொண்டு தொன்முறை துறந்து
விட்ட வேந்தனைப் பற்றெனப் பாடினார் விடுத்தார்.

திருப்பெருந்துறைப்புராணம், புராணவரலாற்றுப்படலம்.

காழிநாடுடையராய கவுணியர் மூவர் வந்த
வாழிநா வரைய ராதி யறுபத்து மூவர் மாண்பு
மாழிசூ ழுலகு போற்றுந் திராவிட வேத மாய
வூழிநா யகனு வக்க வுற்றதே வாரச் சீரும்.

காஞ்சிப்புராணம் சுந்தரமூர்த்திசுவாமிகள் துதி.

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட் டாட்கொண்ட வுவனைக்கொண்டே, யிருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட வல்லாள னெல்லா முய்யப், பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த பேரருளின் பெருமாளென்றுந், திருமணக்கோலப் பெருமாள் மறைப் பெருமா ளெமது குலதெய்வ மாமால்.

* திருவாசகம் திருக்கோவையார் வேதமேன்பதற்குப் பிரமாணம்.

திருப்பெருந்துறைப் புராணம் புராணவரலாற்றுப் படலம்.

மற்றதுந் தெரிந்தேமின்னும் வாசகவேதச் சீருஞ்
சொற்றவர் சீருமன்னார் வழிபடூஉத் தூயமேன்மை
பெற்றமா தலத்தின்சீரும் பேசுகென் றுரைத்தலோடுங்
கற்றவர் புகழுமந்த முனிவரன் களிப்பிற்றாங்க.

---

* திருவாசகம்=திருவென்பது சுகம்; இது நாயசியு நாயகனுங் கலந்த விடத்துண்டாகிய சுகம்போலும் ஆன்மா பதியினிடத்தொன்றியவிடத்து நிகழுஞ்சுகம். அச்சுகத்தை விளைவிக்கும் வாசகம், திருவாசக மென்றுரையிற்று; இதை ஆரியத்தில் சூக்தமெனக் கூறுவார்கள். (-ஆவது பக்கத்திற் காண்க.)

பூரண வடிவமாகிப் பொலிந்தினி தமர்சிறப்பு
நாரணன் முதலோரேத்த விழாக்கொண்ட நகுசிறப்பு
மாரண விசேடமாய வாசகத் தருஞ்சிறப்பு
மேரணவெடுத் துரைத்தான் யாவருமின்ப மெய்த.

நைமிசாரணிய முனிவர்பூசித்த படலம்.

எம்மறையு மொழிந்தார்கை யேட்டெழுத மொழிபெயர்த்தே
யம்மறைசொற் றவருதித்த வருந்தலமற் றதுகாண்மின்
மும்மறையும் புகழ்சைவத் திறமுழங்கு நீருநெருப்
பும்மறையா வெளிப்படுத்தப் பொலிதல மற்றிதுகாண்மின்.

புரூரவன் திருவிழாச்செய்த படலம்.

நித்திய பலியிட்டுற் சவர்திருமு ணிகழ்தருபேரிகை யடித்தல்
சத்தமை தருதே வதாவாக னவிசர்ச் சனந்தீர்த்தாங் குரமிலை யாற்றி
யுத்தமச் சூர ணுற்சவம்புரிந்தே யுறுமுளை விசர்ச்சன மாற்றி
வித்தக மருவ நட்டாத்துபு தமிழாம் வேதபூ சாவிசர்ச்சனமும்.

ஆரணங் காணென்பரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமனன்னூலதென்ப
ரேரணங் காணென்ப ரெண்ணரெழுத்தென்பரின்புலவோர்
சீரணங் காயசிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே,

திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா.

செக்கரொத் திரவிநூறு யிரத்திரளொப்பாந் தில்லைச்
செர்க்க †ரம்பலவ ரென்னுஞ் சுருதியைக் கருதமாட்டா
வெக்கரைக் குண்டமிண்ட வெத்தரைப் புத்தராதிப்
பொக்கரைக் காணு கண்வாய் பேசாதப் பேய்களோடே.

**ஆரியவேதம் இருடிகளா லாக்கப்பட்டது எனல்,**

ஆரியவேதம் ஈசுரவாக்கியம் என்று கூறப்பட்டிருக்க, நீர் அதனை இருடிகளா லாக்கப்பட்டதென்பது எங்ஙனம்? எனிற், சொல்லுதும்.

---

† அம்பலவரென்னுஞ் சுருதி = திருச்சிற்றம்பல மென்னும் சொல்லை முதலாகக்கொண்ட தேவார திருவாசகங்களாம்.

ஆரிய வேதத்தின் ஒவ்வொரு சூக்தங்களும் அகத்தியர், வசிட்டர், விசுவாமித்திரர், ஜமதக்கினி, புலத்தியர், மந்தாத்திரி, ஷிவி, மனசு, பிரதாதன், ரேணு, அம்பரிஷன், பரதன் முதலிய இருடிகளாலே சொல்லப்பட்டன.

அதற்குப் பிரமாணம் என்னை? எனில், ஒவ்வொரு சூக்தத்தின் தலையினும், இது இன்ன சந்தசு(,=பண்) உடையது, இன்ன தேவதையைக்குறித்தது, இன்ன ருஷியாற்செய்யப்பட்டது, என்று குறிக்கப்பட்டிருத்தலாமென்க,

ஆரிய வேதம், இருடிகளாற்செய்யப்பட்டதன்று முன்னரேயுள்ளது அதை அவ்விருடிகள் முதலில் ஓதினர்களென்று கூறுவாருமுளர். அங்ஙன மாயின், அந்தச்சூக்தங்கள் யாரால் உண்டாக்கப்பட்டன? யாரிடத்தில் ஓதியுணர்ந்தார்கள்? என்பதை விசாரித்தொழிக்க.

ஆரியவேதம் இருடிகளாற் செய்யப்பட்டதென்பதற்குப் பிராமணம்.

இருக்குவேதம் முதல் அஷ்டகம் 47-ஆம்அத்தியாயம் 2-ஆவது வருக்கை.

𑌕𑌣𑍍𑌵𑌾𑌸𑍋 𑌵𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌕𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 |
𑌅𑌧𑍍𑌵𑌰𑍇 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑍁 𑌶𑍃𑌣𑍁𑌤𑌂 𑌹𑌵𑌂 ||

కణ్వాసో వాం బ్రహ్మ కృణ్వంతి ।
అధ్వరే తేషాం సుకృణుతం హవం ॥

கண்வாஸோவாம் ப்ரஹ்ம க்ருண்வந்தி
அத்வரேதேஷாம் ஸ¬க்ருணுதம்ஹவம்.

இ-ள்; கண்ணுவர்கள் உமக்கு ஓர்தோத்திரஞ் செய்கின்றார்கள். அவர்கள் பிரார்த்தனையை நன்றாகக்கேட்டருளும் (தோத்திரம்=சம்ஹிதை.)

இருக்குவேதம், முதல் அஷ்டகம் 64-ஆம் அத்தியாயம் 61-ஆவது வருக்கை.

ഏവാതേ ഹാരി യോജനാ സുവൃക്തി।
ഇന്ദ്ര ബ്രഹ്മാണി ഗോതമാസഃ അക്രന്।

ఏవాతేహారియోజన్సువృక్తి।
ఇంద్రబ్రహ్మాణిగోతమాసఃఅక్రన్ ॥

ஏவாதேஹரீயோஜங் த்ஸுவ்ருக்தி
இந்த்ரப்ரஹ்மாணிகோ தமாஸஃ அக்ரங்.

இ-ள். பரிகளைப்பூட்டும் இந்திரனே! இவ்விதமாகக் கௌதமர்கள் உமக்கு இரஸக்கினையுள்ள சங்கீதஞ்செய்திருக்கிறார்கள்.

இருக்குவேதம் இரண்டாவது அஷ்டகம் 39-ஆம் அத்தியாயம் 8-ஆவது வருக்கை.

ഏതാനിവാം അശ്വിനാവർദ്ധനാനി।
ബ്രഹ്മസ്തോമം ഗൃത്സമദാസഃ അക്രന്।

ఏతానివాం అశ్వినా వర్ధనాని।
బ్రహ్మస్తోమం గృత్సమదాసః అక్రన్ ॥

ஏதாநிவாம் அஶ்விநா வர்தநாநி
ப்ரஹ்ம ஸ்தோமம் க்ருதஸமதாஸஃ அக்ரங்.

இ-ள். அசுவினிதேவர்களே! உங்களுக்குக்காகக் கிருதஸமதாஸர்கள் உன்னதமாகிய முறைபாடுகளான இந்தச் சம்ஹிதையைச்செய்கிறார்கள்.

இருக்குவேதம் 10-ஆவது அஷ்டகம் 54-ஆம் அத்தியாயம் 6-ஆவது வருக்கை.

𑌅𑌥𑌪𑍍𑌰𑌿𑌯𑌂𑌶𑍂𑌷𑌂 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌮𑌨𑍍𑌮 |
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍃𑌤𑍋 𑌬𑍃𑌹𑌦𑍁𑌕𑍍𑌥𑌾𑌦𑌵𑌾𑌚𑌿 |

అథప్రియం శ్యూషం ఇంద్రాయ మన్మ ।
బ్రహ్మకృతో బృహదుక్థాద్ అవాచి ॥

அதபிரியம்ஶ்ருஷம் இந்த்ராயமந்ம
ப்ரஹ்மக்ருதோ ப்ருஹதுக்தாத்அவாசி.

இ-ள். ஸம்ஹிதைகளைச்செய்யும் விருஹதுக்தர் என்பவரால் இந்திரனுக்கு உவக்கத்தக்க மகத்துவமுள்ள சங்கிதை செய்யப்பட்டது.

இருக்குவேதம் முதல் அஷ்டகம் 62-ஆம் அத்தியாயம் 13-ஆவது வருக்கை.

𑌸 𑌨𑌾𑌯𑌤𑍇 𑌗𑍋𑌤𑌮𑌃𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌨𑌵𑍍𑌯𑌂 |
𑌅𑌤𑌕𑍍𑌷𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌹𑌰𑌿𑌯𑍋𑌜𑌨𑌾𑌯𑌇𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 |

సనాయతే గోతమః ఇంద్రనవ్యం ।
అతక్షద్ బ్రహ్మహరియోజనాయ ఇత్యాది ॥

ஸநாயதேகோதமஃஇந்த்ரநவ்யம்
அதக்ஷத் ப்ரஹ்ம ஹரியோ ஜநாயஇத்வாதி.

இ-ள். இந்திரனே! உமக்கு கௌதமரின் சந்ததியாராகிய கோதர்கள் இந்த நூதனமான சம்ஹிதையை விநோதமாகச் செய்தார்கள்.

இருக்குவேதம் 5-ஆவது அஷ்டகம் 2-ஆம் அத்தியாயம் 11-ஆவது வருக்கை.

𑌏𑌤𑌂𑌤𑍇 𑌸𑍍𑌤𑍋𑌮𑌂 𑌤𑍁𑌵𑌿𑌜𑌾𑌤 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 |
𑌰𑌥𑌂 𑌨𑌧𑍀𑌰𑌃 𑌸𑍍𑌵𑌪𑌾𑌅𑌤𑌕𑍍𑌷𑌂 |

ఏతం తే స్తోమంతు విజాత విప్రో ।
రథం నదీరః స్వపా అతక్షం ॥

ஏதம்தேஸ்தோமம்துவிஜாதவிப்ரோ
ரதம்நதீரஃஸ்வபா அதக்ஷம்.

இ-ள். வல்லபமுள்ள (தெய்வமே)! கைதேர்ந்த வேலைக்காரன் ஓர் தேரினை அலங்கரிப்பதுபோலத் தவமுனியாகிய நான் உமக்காக இந்தச் சம்ஹிதையைப் புனைந்தேன்.

இருக்குவேதம் முதல் அஷ்டகம் 61-ஆம் அத்தியாயம் 4-ஆவது வருக்கை.

അസ്മൈ ഇദംസ്തോമം സംഹിനോമി ।
രഥംന തഷ്ടേവ തത്സിനായ

అస్మై ఇదంస్తోమం సంహినోమి ।
రథంనత ష్టాఇవ ఇత్యాది ॥

அஸ்மைஇதுஸ்தோமம்ஸம்ஹிநோமி
ரதம்நதஷ்டா இவ இத்யாதி.

இ-ள். ஓர் தச்சன் தேரினைச்செய்வதுபோல அவருக்கு (=இந்திரனுக்கு) நான் ஒரு ஸம்ஹிதையைச் செய்து அநுப்புகிறேன்.

மேற்கூறிய திருட்டாந்தங்களினால் வேதங்களிலுள்ள சம்மிதைகள் இருடியர்களாற் செய்ப்பப்பட்டனவென்று புலப்படுகின்றது.

இஃதன்றியும் இருக்குவேதம் 6-ஆவது அஷ்டகம் 3-ஆவது அத்தியாயம் 16-ஆவது வருக்கையில்,

தோத்திரங்களை யருளவேண்டும்.
தீங்கினையொழித்தருளவேண்டும்·
வீரத்தைத் தந்தருளவேண்டும்.
பசுவினையருளவேண்டும். என்றும்,
கிருஷ்ணயஜுர் வேதம் தைத்திரேயப்பிராஹ்மணத்தில்,

வேதத்தினையுண்டாக்கும் அதனைஎமக்கருளும்.
வல்லபத்தையுண்டாக்கும் அதனை எமக்கருளும்.
உணவினை யுண்டாக்கும் அதனை எமக்கருளும்.
பாலையுண்டாக்கும் அதனை எமக்கருளும்.
தனத்தையுண்டாக்கும் அதனை எமக்கருளும்.
புத்திரனையுண்டாக்கும் அதனைஎமக்கருளும்.
மனிதரையுண்டாக்கும் அவர்களை எமக்கருளும்.
பசுக்களையுண்டாக்கும் அவைகளை எமக்கருளும்.

என்றுங்கூறபட்டிருக்கின்றன. இதன் விரிவை 24-ஆவது பக்கத்திற் காண்க. இவை ஈசுரவாக்கியமெனக் கொள்ளின், எந்தக்கடவுள் எந்தக்கடவுளைப் பிரார்த்தித்தது? கடவுளாயுள்ளவர்களுக்கு இவை வேண்டுமோ? யார் கொடுப்பது? ஆகையால் இவற்றை இருடியர் வாக்கியமென்றேதேர்ந்துணர்க.

பின்னும் ஆரியவேதம் பெரும்பாலும் இந்திரன், வருணன், வாயு, குபேரன், அக்கினி முதலிய தேவர்களைக்குறித்த தோத்திரங்களாக இருக்கின்றன. இவை ஈசுவரவாக்கியமெனக்கொள்ளின், உலகங்களையெல்லாம் படைத்துக்காத்தழிக்கும் சாட்சாத் பரமசிவனோ? அவரால் ஆக்கப்பட்ட தேவர்களைத் தோத்திரிப்பார்.

**திராவிடவேதம் முனிவர்களா லாக்கப்பட்டதெனல்,**

இனி, திராவிடவேதம் சம்பந்தசுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசகசுவாமிகள், திருவள்ளுவ நாயனர், திருமூலர் முதலிய சிவாநுக்கிரகம் பெற்றமுனிவர்களாலேசெய்யப்பட்டது. (முனிவர்-ருஷிகள்).

### திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

### திருப்பிரமபுரம் - பண் - நட்டபாடை.

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய,
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்த்தலெளிதாமே,

### திருப்புகலி-பண்-தக்காரம்.

இரைக்கும்புனல்செஞ்சடைவைத்தவெம்மான்றன்
புரைக்கும்பொழிற்பூம்புகலிந்நகர்தன்மே
லுரைக்குந்தமிழ்ஞானசம்பந்தனொண்மாலை
வரைக்குந்தொழில்வல்லவர்நல்லவர்தாமே.

### சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்.

### நொடித்தான்மலை-பண்-பஞ்சமம்.

ஊழிதோறூழிமுற்றுமுயர்பொன்னொடித்தான்மலையைச்
சூழிசையின்கரும்பின்சுவைநாவலூரன்சொன்ன
வேழிசையின்றமிழாலிசைந்தேத்தியபத்தினையு
மாழிகடலரையாவஞ்சையப்பர்க்கறிவிப்பதே.

இவைபோலவன பலவுள மற்றும் வருவனவற்றுற் காண்க.

திராவிடவேதஞ் செய்தார் இவர்தாமென்பது யாமுமறிவேம் ஆயினும் அன்னோரை நீர் முனிவரென்றது எப்பிரமாணங் கொண்டெனில், முனிவர் என்னும் பெயரால் இத்திறத்தான நூல்களும் ஆன்றோரும் பன்முறை வழங்குதல் உண்மையினென்க.

### திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்.

திருஞான மாமுனிவ ரரசிருந்த பூந்துருத்திக்
கருகாக வெழுந்தருளி யெங்குற்றா ரப்பரென
வுருகாநின் றும்மடியேனும்மடிகடாங்கிவரும்
பெருவாழ்வுவந்தெய்தப்பெற்றிங்குற்றேனென்றார்,

என்றவிடத்து திருஞானசம்பந்த சுவாமிகள் முனிவரெனப் பட்டமைகாண்க.

இங்ஙனம், நீர் கூறியபடி திருநாவுக்கரசு சுவாமிகள் நீங்கிய ஏனை மூவர்களுக்கும் பொருந்தும், இவர்வேளாளர் ஆதலின் இவரையு முனிவர் எனக் கூறலாமோ? எனின்.

பெரியபுராணம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்.

இந்நாளிற்றிருப்பணிகள்செய்கின்றவின்றமிழ்க்கு
மன்னானவாகீசத்திருமுனியுமதிச்சடைமேற்
பன்னாகமணிந்தவர்தம்பதிபலவுஞ்சென்றிறைஞ்சிச் [வார்.
சொன்னாமத்தமிழ்புனைந்துதொண்டுசெய்வான்றொடர்ந்தெழு

அடியனேனாதரவாலாண்டவரசின்சரிதப்
படியையானறிந்தபடிபகர்ந்தேனப்பரமுனிவன்
கடிமலர்மென்சேவடிகள்கைதொழுதுகுலச்சிறையார்
முடிவில்புகழ்த்திருத்தொண்டின்முயற்சியினைமொழிகின்றேன்

எனவருவனவற்றாற் காண்க. இம்மட்டோ?

மருவுதிருமுறைசேர்ப்பாரெழுதுவாரிருந்து வாசிப்பார்பொருளுரைப்பார்கேட்டிருப்பார்மகிழ்ந்து, சிரமசைத்துக்கொண்டாடிக்குதுகுதுப்பார்சிரிப்பார் நேணிப்பார்குன்றைமுனிச்சேக்கிழார்செய்த, வரியதவத்தினைநினைப்பாரம்பலவர்முன்னா வடியெடுத்துக்கொடுக்க விவர்பாடினரென்றுரைப்பார், பெரியபுராணங்கேட்டவளவர்பிரான் செவிக்குப் பிடிக்குமோவினிச்சிந்தாமணிப்புரட்டென்றுரைப்பார்.

என, தில்லைவாழந்தணருள் ஒருவராகிய சந்தானகுரவர் பரம்பரையில்வந்த கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர் வேளாளர் குலத்தினராகிய சேக்கிழார் சுவாமிகளைத் திருத்தொண்டர் புராணவரலாற்றில் முனிவரெனக் கூறியிருத்தலானுந்தெளிக. இன்னும் வேளாளரில் முனிவர்களாயுள்ளவர்கள் அநேகருளர், ஆங்காங்கு வருமிடந்தோறுங்கண்டுணர்க.

இனி, அத்திராவிடவேதத்தில் பரமபதியாகிய சிவபெருமானையன்றிவேறுதேவரை எடுத்தோதார். ஆகவே இன்னதேவரைக்குறித்ததென்று அவ்வேதத்தின் முதலில் எழுதாதுவிட்டார்கள். இன்ன முனிவரால் ஓதப்பட்டதென்றும், இன்ன தலத்தையுடையதென்றும், இன்னபண்ணையுடையதென்றுங் குறிக்கப்பட்டிருக்கின்றன.

ஆரியம் கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம், ஆகிய சதுர் யுகங்களினும் வழங்கிவரக் கண்டிருக்கிறோம். திராவிடம் அவ்வாறாக வழங்கிவரக் காணப்படவில்லையே? எனின்,

கம்பராமாயணம், அகத்தியப் படலம்.

நின்றவனைவந்தநெடியோனடிபணிந்தா
னன்றவனுமன்பொடுதழீஇயழுதகண்ணா
னென்றுரைசெயென்றுபலநல்லுரைபகர்ந்தா
னென்றுமுளதென்றமிழியம்பியிசைகொண்டான்.

என்றபாடலால் திராவிடமும் அவ்வாறே வழங்கிவருகிறது எனக்கண்டுணரலாம். மாணிக்கவாசகசுவாமிகள் முதலியோரெல்லாம் சில்லாயிரத்தாண்டிற்கு முன்வந்தவர்களாயிருக்க அவர்களாற்செய்யப்பட்ட திராவிடவேதம்,என்றுமுளதென்பது எங்ஙனம்? அவர்களுக்குமுன் வேறுதிராவிடவேதமுண்டாயிருந்ததோ? எனின், சிவபெருமான் என்றுளரோ அன்றேயுள்ளதாம். பின்பு, எந்தெந்தக்காலத்தில், எந்தெந்த வேதத்தை, எவரெவர் மூலமாக வெளிப்படுத்தவேண்டுமோ? அந்தந்தக்காலத்தில், அந்தந்த வேதத்தை அவரவர் மூலமாக வெளிப்படுத்தியருளினரென்க.

அதனால், தமிழ்மறை பாடினவர்கள் தற்போதங்கொண்டு தாமே பாடவேண்டுமென்று பாடியதன்றெனசித்தாந்தமாகின்றது.

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

### திருப்புன்கூர் திருநீடூர், திருத்தாண்டகம்.

கலைஞானங்கல்லாமேகற்பித்தானைக்கடுநரகஞ்சாராமேகாப்பா ன்றன்னைப், பலவாயவேடங்கடானேயாகிப்பணிவார்கட்கங்கங்கே பற்றுற்றானைச்,சிலையாற்புரமெரித்ததீயாடியைத்திருப்புன்கூர்மேவி யசிவலோகனை, நிலையார்மணிமாடநீடூரானைநீதனேனென்னேநானி னையாவாறே.

### திருமுதுகுன்றம், திருத்தாண்டகம்.

எத்திசையும்வானவர்கடொழநின்றானையேறூர்ந்தபெம்மானை யெம்மானென்று, பத்தனாய்ப்பணிந்தடியேன்றன்னைப்பன்னாட்பா மாலைபாடப்பயில்வித்தானை, முத்தினையென்மணியைமாணிக்கத்தை முளைத்தெழுந்தசெம்பவளக்கொம்பொப்பானைச், சித்தனையென்றிரு முதுகுன்றுடையான்றன்னைத்தீவினையேனறியாதேதிகைத்தவாறே.

### திருவெறும்பியூர், திருத்தாண்டகம்.

பன்னியசெந்தமிழறியேன்கவியேன்மாட்டேனெண்ணிறைபெ ண்ணிறைந்தகலைகளாய, தன்னையுந்தன்றிறத்தறியாப்பொறியிலே னைத்தன்றிறமுமறிவித்துநெறியுங்காட்டி, யன்னையையுமத்தனையும் போலவன்பா யடைந்தேனைத் தொடர்ந்தென்னையாளாக்கொண்ட, தென்னெறும்பியூர்மலைமேன் மாணிக்கத்தைச்செழுஞ்சுடரைச்சென் றடையப்பெற்றேனானே.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

### திருநாட்டியத்தான்குடி-பண்-தக்காரம்.

கல்லேனல்லேனின்புகழடிமைகல்லாதேபலகற்றே
னில்லேனல்லேனின்வழிநின்றார்தம்முடையநீதியைநினைய
வல்லேனல்லேன்பொன்னடிபரவமாட்டேன்மறுமையைநினைய
நல்லேனல்லேனானுமக்கல்லானாட்டியத்தான்குடிநம்பி.

### திருவாசகம்.

நாயேனைத்தன்னடிகள்பாடுவித்தநாயகனைப்
பேயேனதுள்ளப்பிழைபொறுக்கும்பெருமையனைச்

*சீயே தமில்லாதேன் செய்பணிகள் கொண்டருளுந்*
*தாயானவீசற்கேசென் றூதாய்கோத் தும்பி.*

எனவருவனவற்றாலும், இன்னும், அழகியதிருச்சிற்றம்பல முடையார் அசரீரியாய் நின்று சேக்கிழார்சுவாமிகள் பெரியபுராணம்பாடுதற்கு "உலகெலாம்" என்று தமது திருவாக்கால் முதலடியை யருளிச்செய்தமையாலும் இவைபோல்வன பிறவற்றாலுமுணர்க.

"உலகெலாம்" என்பது நடராசப்பெருமான் திருவாக்கென்பதற்குப் பிரமாணம்:

திருத்தொண்டர் புராணவரலாறு.

*அலைபுனற்பகிரதிநதிச்சடை யாடவாடரவாடநின்*
*றிலகுமன்றினிலாடுவார்திரு வருளினாலசரீரிவாக்*
*குலகெலாமெனவடியெடுத்துரை செய்தபேரொலியோசைமிக்*
*கில்குசீரடியார்செவிப்புலத் தெங்குமாகிநிறைந்ததால்.*

என்னுஞ் செய்யுளாற் காண்க.

இன்னும் திருவெண்ணெய் நல்லூரில் சிவபெருமான் சுந்தரமூர்த்திசுவாமிகளைத் தடுத்தாட்கொண்டருளும் போது அவரை நோக்கி, நீ நம்மைத் தமிழினாற் பாடுவாயென்று திருவாய்மலர்ந்தருளலும் அவர் ஒன்றும் பாடுதற்குத் தெரியாமல் மயங்கிநிற்க, உடனே சிவபெருமான் அவரைநோக்கி நீநம்மைப்பித்தனென்று கூறியபடியே "பித்தாவென்றுப்பாடுக"வென அடியெடுத்துக் கொடுத்தனர். அதுகேட்டுப் "பித்தாபிறைசூடி" யென்னுந்திருப்பதிகத்தைப் பாடினர், இவ்விஷயங்களை,

பெரியபுராணத்துள், தடுத்தாட்கொண்டபுராணம்.

*வேதியனாகியென்னை வழக்கினால்வெல்லவந்த*
*ஆதியமறியாதேனுக் குணர்வுதந் துய்யக்கொண்ட*
*கோதிலாவமுதேயின் றுன் குணப்பெருங்கடலைநாயேன்*
*யாதினையறிந்தென்சொல்லிப் பாடுகேனெனமொழிந்தார்.*

அன்பனையருளினேக்கி யங்கணாருளிச்செய்வார்
முன்பெனைப்பித்தனென்றே மொழிந்தனையாதலாலே
யென்பெயர்பித்தனென்றே பாடுவாயென்றார்நின்ற
வன்பெருந்தொண்டராண்ட வள்ளலைப்பாடலுற்றார்.

என்னுந்திருப்பாடல்களாலறிக.

### திராவிட வேதங்களினற்புதங்கள்.

புனலிலேடெதிர்செல்லெனச்செல்லுமேபுத்தனார்தலைதத்தெனத்தத்துமே, கனலிலேயிடப்பச்சென்றிருக்குமேகதவுமாமறைகாட்டிலடைக்குமே, பனையிலாண்பனைபெண்பனையாகுமேபழையவென்புபொற்பாவையதாகுமே, சினைவராவிடந்தீரெனத்தீருமேசிறந்தசம்பந்தர்செந்தமிழ்ப்பாடலே.

தலைகொணஞ்சமுதாகெனவாகுமே தழலினீறுதடாகமதாகுமே கொலைசெயானை குனிந்துவணங்குமே கோளராவிடந் தீரெனத்தீருமே, கலைகொள்வேதவனப்பதிதன்னிலே கதவுதானுங்கடுகெத்திறக்குமே, யலைகொள்வாரியிற்கன்மிதப்பிக்குமே யப்பர்கூறுமருந்தமிழ்ப்பாடலே.

வெங்கராவுண்டபிள்ளையழைக்குமே வெள்ளையானையின்மீதேறவைக்குமே, மங்கைபாகரைத்தூதுசெல்விக்குமே மருவியாறுவழிவிட்டுநிற்குமே, செங்கல்யாவும்பசும்பொன்னதாக்குமே திகழுமாற்றிட்டசெம்பொனளிக்குமே, துங்கவாம்பரிசேரற்குநல்குமே தூல்கு நாவலூர்ச்சுந்தரர்பாடலே.

பெருகும்வையைதனையழைப்பிக்குமே பிரம்படிக்குப்பிரான்மெலிகன்றுமே, நரியெலாம்பரியாகநடத்துமே நாடிமூகைதனைப்பேசுவிக்குமே, பரிவில்பிட்டுக்குமண்சுமப்பிக்குமே பரமனேடெழுதக்கோவைபாடுமே, மருவுபுத்தரைவாதினில்வெல்லுமே வாதவூரர்வழங்கியபாடலே.

என்னும்பாடல்களாலும் பிறவற்றாலு முணர்க.

### ஆரியவேதம் பசுநூலென்பது.

ஆரிய திராவிட வேதங்களுள் பேதமுண்டோ? எனில் பேதமுண்டு, எங்ஙனம்? எனில், ஆரியவேதம் பசுநூலாம், திராவிடவேதம் பதிநூலாம். இதற்குப் பிரமாணம்.

ஆரியவேதம் பிறந்திறந்துழலும் பசுக்களாகிய விஷ்ணு, ருத்திரன், இந்திரன், அக்கினி, யமன், நைருதி, வருணன், வாயு, குபேரன், சந்திரன், சூரியன், அட்டவசுக்கள், இவர்களை த்தோத்திரிக்குமிடத்து, ஒவ்வொருவருக்குந் தனித்தனியே பர த்துவங்கூறும். ஆகலிற் பசுநூலென்பது தெளிவாக விளங் கும். அன்றியும் பிரமனைத்தொழுவதால் பத்தியும், ருத்திரனை த்தொழுவதால் வைராக்கியமும், விஷ்ணுவைத் தொழுவதால் மோக்ஷமும், சித்தியாமென்றும், இங்ஙனமே மற்றைத் தேவர் களைவணங்கினால் ஒவ்வொரு சித்தியுண்டாமென்றும் கூறும். இதனால் ஒரு தேவனை வணங்கினாற் சகல சித்தியுங்கிடையா என்பது சித்தாந்தமாயிற்று. தவிரவும், பராபரவஸ்து இது தானென்று ஒன்றை ஆரிய வேதத்தால் தீர்மானிக்கக்கூடா மையுமாயிற்று.

அன்றியுந் திராவிட வேதத்திலெடுத்துக்கூறும் சிவபிரா னை ஆரியவேதம்நான்கும்அறியமாட்டா. இதற்குப் பிரமாணம்.

இலிங்கபுராணம், திரிபுரத்தோற்றமுரைத்த அத்தியாயம்.

தாழ்ந்துமறையொருநான்குங்காணாத தனிமுதலேயருணீசெய் ய, வாழ்ந்தனம்யாமிதுநாளே வல்லசுரர்கொடுமையிலுழைத்திடலால் மாழ்கி, வீழ்ந்தனர்கயெர்க்கடலுள் வெவ்வசுரர்தமைவிரைவினெய்தி மாய்த்திங், காழ்ந்தவிடர்கெடுத்தியென மாயன்முதற் றேவரெலா ம றைந்தார் மன்னோ.

திருவாசகம்.

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியு நாரணனு நான்மறையு
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

கருவூர்த்தேவர் திருவிசைப்பா.

சொன்னவின்முறைநான்காரணமுணராச் சூழல்புக்கொளித்தநீ யின்று, கன்னவின்மனத்தென்கண்வலைப்படுமிக் கருணையிற்பெரிய

தொன்றுளதோ, மின்னவில்கனகமாளிகைவாய்தல் விளங்கிளம்பி றைதவழ்மாடம், பொன்னவில்புரிசையாவணவீதிப் பூவணங்கோ யில்கொண்டாயே.

எனவருவனவற்றுற் காண்க.

இனி, ஆரியவேதத்தின்தன்மை இவ்வாருகவே, அவ்வே தங்களை முற்றுமுணர்ந்து சூக்தங்களாக்கிப் பாகுபாடுசெய்த வேதவியாச முனிவர்பால், வேதங்களையும் புராணங்களையுமு ணர்ந்த முனிவர்கள் அவற்றுற் றெளிவுபெருராகி, அவரிடத் துமீட்டுஞ்சென்று, ஆரியவேதத்தில் பதிநிச்சயம் பிரமன்முத லிய எல்லார்க்குங் கூறப்படுதலால், அவ்வேதத்தின் மெய்ம் மையுணர்ந்த நீர் உள்ளபடியே பதிநிச்சயம் இன்னருக்குத்தா னென்பதைப் பிரமாணமாகச் சொல்லியருளுமென்றுகேட்ட னர். உடனே அம்முனிவரும் காசிக்ஷேத்திரத்திற் கங்காநதிக் கரையிலுள்ள விசுவேசர்சந்நிதியில் நின்று இரண்டு கைகளை யும் உயரவெடுத்து,

𑌸𑌤𑍍𑌯𑌂𑌸𑌤𑍍𑌯𑌂𑌪𑍁𑌨𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌸𑌦𑍈𑌵𑌂𑌕𑍇𑌶𑌵𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 ||

సత్యం సత్యం పునసత్యం సదైవం కేశవాత్పరం ।

ஸ்த்யம்ஸத்யம்புனஸ்ஸதயம் ஸதைவங்கேஸவாத்பரம்.

நாராயணனே பரம்பதி. இது சத்தியம்! சத்தியம்! சத் தியம்! எனக்கூறினர்.. இப்பெரும்பொய்மை கூறினதால் உட னே இரண்டு கைகளுந் தம்பித்து நிற்கத் தாமுந்தம்பமாய் நின்றனர். அங்ஙனமே நின்று விஷ்ணுவைத் தியானித்துவ ணங்கினர்; உடனே அவர் பிரசன்னராய் வந்து வியாசமுனி வரைப்பார்த்துச் சொல்லுவார் வியாசமுனியே!

𑌅𑌹𑌮𑍇𑌵 𑌜𑌗𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑌾 𑌲𑍋𑌕𑌕𑌰𑍍𑌤𑌾 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 |
𑌤𑌸𑍍𑌯𑍈𑌵𑌾𑌪𑍍𑌯𑍈𑌵𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑌾𑌕𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ||

అహమ్మేవ జగత్కర్తా మమకర్తా మహేశ్వరః ।
తస్యదేవాది దేవస్య కర్తాకోఽపిన విద్యతే ॥

*அஹம்மே ஜகத்கர்த்தா மமகர்த்தா மஹேஸ்வரஃ*
*தஸ்யதேவாதிதேவஸ்ய கர்த்தாகோபி நவித்யதே.*

இ-ள். எல்லா உலகத்துக்கும் நானே பதியென்பதுண்மை.எனக்குப்பதியாவார் மகேசுரரென்றறிவாயாக. மஹாதேவராகிய அவருக்குமேலொரு பதிப்பொருளுமில்லை எனக்கூறிமறைந்தனர். பின்னர்வியாசமுனிவரும் மற்றமுனிவர்களும் சிவபெருமானொருவரே பதிப்பொருளென்று தெளிந்தனராகித் தத்தம்பதிகளைச்சேர்ந்தனர். இஃதிங்ஙனமிருக்க, வியாசமுனிவர் தாம் சிவசந்நிதியில் அசத்தியங்கூறிய பாவத்தையொழிக்கும் பொருட்டு ஷை காசிப்பதியில் கங்கைக்கரையின் ஓர் பக்கத்தில் தவஞ்செய்யலுற்றார்; அவர் தவஞ்செய்தவிடத்திற்கு வியாசகட்டமென்று பெயராம். காசியிலிறக்க முத்தியெனப் பொதுவிதியிருக்கவும், வியாசர் தவஞ்செய்யும் அந்தவிடத்தில் இறந்தவர் கழுதைப் பிறப்பினையடைவரென்று, அவரை மரணகாலத்து அந்த இடத்தைவிட்டு வேறிடத்துக்குக் கொண்டுவந்து விடுகிறார்களென்பதை இக்காலத்தும் பிரத்தியட்சமாகக்காணலாம். ஆதலால் அவ்வேத வியாசர் பசுத்தன்மையுடையாரைப் பதியெனக்கூறுங் கூற்றை நம்பி மோசம்போகலாகாது. இதனாலும் ஆரியவேதம் பதிநூல் அன்றென்றுதெளிக. இம்மட்டோ? பிரமனும் விஷ்ணுவும் ஆரியவேதத்தில் பதிநிச்சயந்தெரியாமல் மயங்கி, நான் பிரமம் நான் பிரமம் எனமமதைகொண்டு, ஒருவருக்கொருவர் கலகம்விளைத்துப் பின்பு சிவபெருமானால் தமதறியாமையைக்கண்டுணர்ந்தனர். இதற்குப்பிரமாணம்.

திருவாசகம்.

*பிரமனரியென் றிருவருந்தம் பேதைமையாற்*
*பரமமியாம்பரமமென்றவர்கள் பதைப்பொடுங்க*

வரனு ரழலுருவா யங்கே யளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்க மாடாமோ.

என்பது முதலியவற்றாற் காண்க.

பிரமன் என்றால் என்ன, விஷ்ணு என்றால் என்ன, சிவன் என்றால் என்ன, எல்லாம் நமக்குச் சரியேயென்கிறார்கள். இவர்கள்கூற்று எத்தன்மையது ? எனில்,

உலகமெல்லாம் ஆளும் ஏகசக்கராதிபதிக்கும் அவன் அரண்மனைவாயிற் காவலாளருக்கும் பேதமென்ன? இவரில் உயர்ந்தவன் எவன் தாழ்ந்தவன் எவன், இருவரும் சமானமாவார் என்பதை நிகர்க்கும். இங்ஙனம் நினைப்பார் பெரும்பாவிகளே. இதற்குப் பிரமாணம்.

திருவாசகம் திருச்சதகம்.

சாவமுன் னாட்டக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
யாவவெந் தாயென் றவிதாவிடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிரானொடு மெண்ணிவிண் ணாண்டுமண்மேற்
றேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரிதவரே.

திருவிளையாடற்புராணம் நாட்டுப்படலம்.

கண்ணிலாதவெங்கூற்றெனக்கராக்கிடந்தலைப்ப
மண்ணினூரெவரேனுமிம்மடுவிடைவீழ்ந்தோர்
தெண்ணிலாமதிமிலைந்தவர்க்கொப்பெனச்சிலரை
யெண்ணினாரிருணர்கவீழ்த்தேறினுமேறார்.

என்பவற்றாலும் பிறவற்றாலும் காண்க.

அன்றியும், உயர்ந்தசாதியாரான அந்தணருடன் இழிந்த சாதியானான சூத்திரன் சமமாகத்தரையில் இருந்தால், அவன் குதத்தை அறுத்துவிடவேண்டுமென்று, மநு தருமசாத்திரத்திற் கூறியிருப்பதால், இழிவான பசுஸ்தானத்திலிருப்பவராகிய பிரமன் முதலியோரை, உயர்வான பதிஸ்தானத்திலிருக்கிற சிவபிரானோடு சமமாக இருத்த நினைப்பதுபாவமன்றோ? இப்படி நினைப்பார்க்கு என்ன தண்டனை விதிக்கப்படுவதோ?

இனி, ஆரியவேதநூலுக்கு நிகமம் எனப்பெயர் கூறுதலின், அதன்பொருளை விசாரிக்குமிடத்து, அது-நி. க. ம. என்னு மூன்றக்ஷரங்களடங்கிய ஓர் சொல்லாம். அவற்றுள் நி. என்பது - இன்மை - க. என்பது - பதி அல்லது கடவுள். ம. என்பது-பாசம். ஆகவே, பதிபாசம் என்னும் இரண்டையும் நீக்கிய தென்பது பெறப்பட்டது. பெறவே, பதி பாசத்தை யுணர்த்தாது பசுவையுணர்த்திய நூல் ஆரியவேதமென்பதாம்.

இங்ஙனம் பசுநூலென்றதற்கேற்ப, ஆரியவேதம் பசுக்களாகிய சீவர்களை நீயே பிரமம் நீயே பிரமமென்றுகூறலால், பாசத்தினுற் கட்டுண்டு சனனமரணங்களிலுழலும் சீவர்கள் தாமே பிரமமென்று நம்பி, அப்பிரமமாகிய நாம் எதைச்செய்தாலுங் குற்றமில்லையெனக் கொடிய பாவங்களைச்செய்து தீய நரகங்களில் வீழ்கின்றார்கள். இவர்கள்டையும் பதவியாதெனின்? இயமலோகமேயாம். இதற்குப்பிரமாணம்.

தாயுமானவர், சிற்சுகோதய விலாசம்.

பன்முகச்சமயநெறிபடைத்தவரும் யாங்களேகடவுளென்றிடும்
பாதகத்தவரும்வாதத ர்க்கமிடு படிறருந்தலைவணங்கிடத்
தன்முகத்திலுயிர்வரவழைக்குமெம தருமனும்பகடுமேய்க்கியாய்த்
தனியிருப்பவடநீழலூடுவளர் சனகனுதிமுனிவோர்கடஞ்
சொன்மயக்கமது தீரவங்கைகொடு மோனஞானமதுணர்த்தியே
சுத்தநித்தவருளியல்பதாகவுள சோமசேகரபானுவாய்த்
தென்முகத்தின்முகமாயிருந்தகொலுவெம்முகத்தினும் வணங்குவே
றெரிவதற்கரியபிரமமேயமல சிற்சுகோதயவிலாசமே. [ன்

இனி,பதிநூல் பாசநூல்களின் பொதுலக்ஷணம் என்னே? அதனைச்சிறிது சுருக்கிக்காட்டுகே? எனின்,

சிவஞானசித்தியார் 9-ஆம் சூத்திரம்.

வேதசாத்திரமிருதிபுராணகலைஞானம் விரும்பசபைவைகரியாதித்திறங்கண்பேலா, நாதமுடிவானவெலாம்பாசஞான நணுகியான்

மாவினைகீழ்காடலாலே, சாதலினுஞன்பிரமமென்னுஞானங் கருது
பசுஞானமிவனுடலிற்கட்டுண்,டோதியுணர்ந்தொன்றொன்றுவுணர்ந்
திடலாற்பசுவா மொன்றாகச்சிவனியல்பினுணர்ந்திடுவன்காணே.

இச்செய்யுளால் பாசஞானம், பசுஞானம், பதிஞானமெ
ன ஞானம் மூவகைப்படும். அவற்றுள்,

தேக்முதலிய சடப்பொருள்களையன்றி வேறு சித்துப்
பொருள் இல்லையென்றுணர்வதே பாசஞானமாம். அதையுண
ர்த்து நூலுக்குப் பாசநூலென்றுபெயராம்.

ஆன்மாவாகியசித்துப் பொருளையன்றிவேறு சடசித்துப்
பொருள்களில்லை யென்றுணர்வதே பசுஞானமாம். அதனை
யுணர்த்து நூலுக்குப் பசுநூலென்றுபெயராம்.

சடப்பொருள்களை யுடைமையாகவும் ஆன்மசித்துப்
பொருள்களை அடிமையாகவுங்கொண்டு, அசைப்பித்தும் அறி
வித்தும் இயங்கும் பரமான்வாகிய சித்துப்பொருளையறியும்
அறிவே பதிஞானமாம்; அதையுணர்த்துநூலுக்குப் பதிநூலெ
ன்றுபெயராம். இன்னும்விரிப்பிற் பெருகுமென்க.

## திராவிடவேதம் பதிநூலென்பது.

திராவிடவேதம், ஆரியவேதம்போலத் தோற்றம் இடை
யீடு முடிவு என்பனவின்றி, அநாதித்தெய்வமொழியாயுள்ள
து. அன்றியும், தற்பதத்தும் பரபதத்துங் கடவுளொன்றே.
அதுவும், இந்திரனோ பிரமனோ விஷ்ணுவோ என்றையப்படா
வண்ணம், சிவபெருமானேயென்று தெளிவாகக்காட்டுவதாம்.
இதற்குப் பிரமாணம்,

உமாபதிசிவாசாரியார், திருமுறைகண்டபுராணம்,

அருமறையைச் சிச்சிலிபண்டருந்தத்தேடு மதுபோலன்றிது
வென்றுமுளதாமுண்மைப், பரபதமுந்தற்பதமும் பரனேயன்றிப் பல
ரில்லை யென்றெழுதும் பனுவல் பாரி, னெரியினிடைவேவாதாற்

றெதிரேயோடுமென்புக்குழுயிர்கொடுக்கு மிடுகேஞ்சாற்றுங், கரியை வளைவிக்குங்கன்மிதக்கப்பண்ணுங் கராமதலைகரையிலுறக்காற்றுங் காணே.

திருவாசகம்.

தேவர்கோ வறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்து காத்தழிக்குமற்றை,மூவர்கோனாய் நின்றமுதல்வன் மூர்த்திமூதாதை மாதாளும் பாகத்தெந்தை, யாவர்கோனென்னையும்வந் தாண்டுகொண்டான் யாமார்க்குங்குடியல்லோமியாதுமஞ்சோ, மேவினோமவனடியாரடியாரோடுமேன்மேலுங் குடைந்தாடியாடுவோமே.

சிவஞானபோதம்.

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதா
மந்தமாதி யென்மனார் புலவர்.

சிவப்பிரகாசம்

பலகலையாகமவேதம் யாவையினுங்கருத்துப் பதிபசுபாசந்தெரித்தல் பதிபரமேயதுதா, னிலவுமருவுருவன்றிக்குணங்குறிகளின்றின்மலமாயேகமாய் நித்தமாகி, யலகிலுயிர்க்குணர்வாகி யசலமாகியகண்டிதமாயானந்தவுருவாயன்றிச்,செலவரிதாய்ச் செல்கதியாய்ச்சிறிதாகிப் பெரிதாய்த் திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்துளோரே.

என வருவனவற்றாற் காண்க,

**ஆரிய திராவிடங்களுக்கு ஆசிரியர்கள்.**

ஆரிய திராவிடங்களுக்கு முதனூல் வழிநூலாசிரியர்கள் யாவர்? எனின், முதனூலாசிரியர் அநாதிமுத்த சித்துருவாகிய சாக்ஷாத் சிவபெருமானொருவரே.

வழிநூலாசிரியர்கள்.

ஆரியத்துக்குப் பாணினி முனிவரும், திராவிடத்துக்கு அகத்தியமா முனிவருமென்க.

பிரமாணம், காஞ்சிப் புராணம்.

இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவரியல்வாய்ப்ப
விருமொழியும்வழிப்படுத்தார் முனிவேந்தரிசைபரப்பு

மிருமொழியுமான்றவரேசழீஇ யினொன்றலிவ்
விருமொழியுநிகரென்னு மிதற்கையமுளதேயோ.

வடமொழியைப்பாணினிக்கு வகுத்தருளியதற்கிணையாத்
தொடர்புடையதென்மொழியையுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்குவலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகரெனிற்
கடல்வரைப்பினிதன்பெருமையாவரே கணித்தறிவார்.

திருவிளையாடற் புராணம், நாட்டுப் படலம்.

விடையுகைத்தவன்பாணினிக் கிலக்கணமேனாள்
வடமொழிக்குரைத்தாங்கியன் மலயமாமுனிக்குத்
திடமுறுத்தியம்மொழிக் கெதிராக்கியதென்சொல்
மடமகட்கரங்கென்பது வழுதிநாடன்றோ.

சேனாவரையம்.

ஆதியிற் றமிழ்நூ லகத்தியர்க் குணர்த்திய
மாதொருபாகனை வழுத்துதும்
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே.

என்பவற்றானுணர்க.

## திராவிடம் தெய்வபாஷை யெனல்.

ஆரிய பாஷைபோலத் திராவிடபாஷை தெய்வபாஷை யோ? எனில், தெய்வபாஷையேயாம்.

பிரமாணம் திருவாசகம்.

விண்ணாளுந்தேவர்க்கு மேலாயவேதியனை
மண்ணாளுமன்னவர்க்கு மாண்பாகிநின்றானைத்
தண்ணார்தமிழளிக்குந் தண்பாண்டிநாட்டானைக்
கண்ணார்கழல்காட்டி நாயேனையாட்கொண்ட
வண்ணமலையானைப் பாடுதுங்காணம்மானாய்.

கம்பராமாயணம்.

உழக்குமறைநாவினு முயர்ந்துலகமோதும்
வழக்கினுமதிக்கவினி னும்மரபினாடி
நிழற்பொலிகணிச்சி யணிநெற்றியுமிழ்செங்கட்
டழற்புரைசுடர்க்கடவுடந்த தமிழ்தந்தான்.

குமரகுருபர சுவாமிக ளருளிச்செய்த
மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.

பைவைத்ததுத்திப் பருஉச்சுடிகைமுன்றிற்பசுங்கொடியுடுக்கை கிழியப், பாயிருட்படலங்கிழித்தெழுசுடர்ப்பரிதி பரிதிக்கொடிஞ்சி மான்றேர், மொய்வைத்தகொய்யுளை வயப்புரவிவாய்ச்செல்ல முட் கோல்பிடித்து நெடுவான், முற்றத்தை யிருள்படவிழுங்குந் துகிற் கொடிமுனைக்கணைவடிவம்புனக்கா, மைவைத்தசெஞ்சிலையுமம்புலியு மோடநெடுவான்மீன்மணந்துகந்த, வடவரைமுகந்தநின்வயக்கொடி யெனப்பொலியுமஞ்சிவர்வளாகநொச்சித், தெய்வத்தமிழ்க்கூடறழை யத்தழைத்தவடிருப்பவளமுத்தமருளே, செல்வைத்தவொண்கொடி யைவலம்வைத்தபெண் கொடிதிருப்பவளமுத்தமருளே.

எனவருவனவற்றாற் காண்க.

அந்தத்திராவிடமாகியதமிழ் இன்னும் எத்தகைமைத்துஎனின்,
திருவாரூர்ப் புராணம், நாட்டுப்படலம்.

திருந்துமாதவத்தகத்திய னிடத்தினிற்சேர்ந்து
மருந்துபோலுலகிற்குவந் தரும்பொருண்மல்கி
விரும்புநல்வளனளித்திரு ணீக்கிவீடளித்துப்
பொருந்துதண்டமிழ் போன்றதுபொன்னிமாநதியே.

என்பதனாலும், இறையனார் முருகவேள் ஆகிய கடவுளராலும், அகஸ்தியமுனிவராகிய பிரம ரிஷியாலும், குபேரன் நக்கீரன் முதலிய தெய்வத்தன்மையுடையோராலும், முதலிடை கடை என்னும் மூன்று சங்கத்திலும் ஆராயப்பட்டுள்ளதாலும், சைவசமயாசாரியர்கள் நால்வர்கள் அருமைத் திருவாக்கால் தேவாரதிருவாசகமென ஓதப்பட்டுள்ளதாலும் தெய்வ பாஷை யென்று கூறுதற்கு யாதொருசந்தேகமுமில்லையென்க.

இவ்விதம் மான்மியமுள்ளதனாலன்றோ முன்னொருகால த்தில் காஞ்சிமா நகரத்திலுள்ள விஷ்ணுவானவர், செந்நாப் புலவர் பாடலைக்கேட்டு, அவர்முன்செல்லவும் தாம் சர்ப்பசய னத்தைச் சுருட்டிக்கொண்டு பின்னே சென்றுபோயினர். இதற்குப்பிரமாணம்.

மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்.

மணிகொண்ட நெடுநேமி வலயஞ் சுமந்தாற்றுமாசுணச் சூட்டு
மோட்டு, மால்களிறுபிடர்வைத்த வளரொளி விமானத்துவாலுளைம
டங்கருங்கு, மணிகொண்டபீடிகையினம்பொன்முடி முடிவைத்தெ
மையனொடுவீற்றிருந்த, வங்கயற்கண்ணமுதை மங்கையர்க்கரசியை
யெமம்மனையையினிதுகாக்க, கணிகொண்ட தண்டுழாய்க்காடலைத்
தோடுதேன் கலுழிபாய்ந்தளறுசெய்யக், கழனிபடுநடுவையிற் கமலத்
தணங்கரசொர்கையணை முகந்துசெல்லப், பணிகொண்டமுடவுட்
படப்பாய் சுருட்டிப்பணைத்தோளொருத்தலைப்பப், பழமறைகண்மு
றையிடப் பைந்தமிழ்ப்பின்சென்றபச்சைப்பசுங்கொண்டலே.

என்பதனாற்காண்க.

இதனாலன்றோ இக்காலத்திலும், பெருமாள் திருவீதியெழுந்தருளும்போது, திருவாய்மொழியாகிய திராவிட வேதம் பெருமாளுக்கு முன்னாகவும், ஆரியவேதம் பின்னாகவும், ஓதிச் செல்கின்றனர். இம்மட்டோ? சிவபெருமானும் ஒருபாவலன் செந்தமிழுக்கு இரக்கஞ்செய்து, அவனுக்கு ஏவலாளாகி அவனது தாசிவீட்டுக்குத் தூதுபோய், ஓர் இரவெல்லாமலைந்து திரிந்து அவள் பிணக்கையொழித்து அப்பாவலனோடு சேர்த்துவைத்தார். இதற்குப் பிரமாணம்.

திருவெண்காட்டுத் திருவிசைப்பா.

யாவரேயிருந்தும்யாவரேவாழ்ந்தும் யாவரேயெமக்குறவாயுந்
தேவரீரல்லாற்றிசைமுகமெனக்குத் திருவுளமறியவேறுளதோ
பாவலனொருவன்செந்தமிழ்க்கிரங்கிப் பரவையாருடலைமாற்ற
வேவலாளாகியிரவெலாமுழன்ற விறைவனேயேகநாயகனே.

இதுவன்றியும், இத்தமிழ் சிவபெருமான் பணங்கொடுத்துப்பாடப் பெற்றுள்ளதுமாகும். இதற்குப் பிரமாணம்.

சேந்தனார் திருவிசைப்பா.

பாடலங்காரப்பரிசில்காசருளிப் பழுத்தசெந்தமிழ்மலர்சூடி
நீடலங்காரத்தெம்பெருமக்க ளெஞ்சினுணிறைந்துநின்றானை

வேடலங்காரக்கோலத்தினமுதைத் திருவீழிமிழலையூராளுங்
கேடிலகீர்த்திக்கனககற்பகத்தைக் கெழுமுதற்கெவ்விடத்தேனே:

இதனாலுணர்க.

அன்றியும் பெற்றான் சாம்பானுக்குத் தீக்ஷைசெய்யும் படி, திருச்சிற்றம்பலமுடையார் தமது திருக்கரத்தால் கொற்றங்குடியார்க்குவரைந்த,

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டு—படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

என்னுஞ் செய்யுளாலும், பாணப்பத் திரனுக்குத்திரவியங்கொடுக்கும்படி சேரமான்பெருமாளுக்கு மதுரைச் சோமசுந்தரக் கடவுள் தமது திருக்கரத்தா லெழுதிய,

மதிமலிபுரிசை மாடக்கூடற்
பதிமிசைநிலவும் பானிறவரிச்சிற
கன்னம்பயில்பொழி லாலவாயின்
மன்னியசிவன்யா மொழிந்திமோற்றம்
பருவக்கொண்மூப் படியெனப்பாவலர்க்
கொருமையினுரிமையி னுதவியணிதிகழ்
குருமாயணிதிகழ் குலவியகுடைக்கீழ்ச்
செருமாவுகைக்குஞ் சேரலன்காண்க
பண்பால்யாழ்பயில் பாணபத்திரன்
றன்போலென்பா லன்பன் றன்பாற்
காண்பதுகருதிப் போந்தனன்
மாண்பொருள்கொடுத்து வரவிடுப்பதுவே,

என்னுஞ் செய்யுளாலும், இன்னும் அவ்வெம்பெருமான், மதுரைமா நகரத்தையரசாண்டு வந்த சண்பகபாண்டியன் தன் மனத்திலிருக்கும் ஒருசந்தேகந் தெளியும்படி, பாடல் பாடி வந்தவருக்கு இப்பொற்கிழியுரியது எனச்சங்கத்திலே கொண்டுவந்து வைத்த அதனைப் பெறும்பொருட்டுத், தருமியென்

னும் ஆதி சைவப் பிராமண னொருவனுக்குத் தமது திருக்கரத்தால் வரைந்தருளிய,

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோநீ யறியும் பூவே.

என்னுஞ் செய்யுளாலும், தமிழ்ப்பாஷை தெய்வபாஷையே யென்றுணர்க.

## ஆரியம் தாய்ப்பாஷை யெனல்.

ஆரியர்கள் ஆரிய பாஷையைத் தாய்ப் பாஷையெனக் கூறுகிறார்கள். அதற்குப்பொருள் என்னையென விசாரிக்குமிடத்தில், எல்லாப்பாஷைகளும் பிறக்கும் உற்பத்திஸ்தானமாயிருக்கிறது என்கிறார்கள்; இது யுக்தியநுபவங்களுக்குப்பொருந்தவில்லை. ஏனெனில், முழு முதற்கடவுளாகிய சிவபெருமான் ஏககாலத்தில் பாணினி முனிவருக்கு ஆரியத்தையும், அகத்தியமா முனிவருக்குத் திராவிடத்தையு முபதேசித்தாராதலானும், இன்னும் அறிவாரும் அறியாரும் சாதியாரும் சமயத்தாரும், பற்பல பாஷைகளை யுண்டுபண்ணுதலானுமென்க. இனி, தாய்ப்பாஷையென்பதற்கு வேறு பொருள்யாதெனின்? பெண்கள் வசனம்போலு மினியவசனங்களுடைமையின் ஒருவாறு பெண்பாஷையெனக் கூறினும் பொருந்தும்.

## திராவிடம் தந்தை பாஷை எனல்.

திராவிட பாஷையானது இந்தியாவிற் பிறந்து இந்தியாவில் வளர்ந்ததாம். இது புறநாட்டார் கொடுமையினால் வடநாட்டிற் செல்லாது, பொதிகாசலத்துக்கடுத்த பாண்டிநாட்டின்கண் முச்சங்கமேறிவளர்ந்து பயிலப்பட்டுள்ளதாம். எங்ஙனம் ? எனின், தலைச்சங்கம் 4,440-ஆண்டும், இடைச்சங்கம்

3,700-ஆண்டும், கடைச்சங்சம் 1,850 - ஆண்டும், தலைச்சங்கத்தில் இறையனூர் முருகவேள் நிதியின்கிழவன் முனிக்கராகிய அகத்தியரேமுதலிய ஐஞ்ஞாற்று நாற்பத்தொன்பதின்மரும், இடைச்சங்கத்து அகத்தியரே முதலிய ஐம்பத்தொன்பதின்மரும், கடைச்சங்கத்தில் காணக்காயனூர் மகனூர் நக்கீரரே முதலிய நாற்பத்தொன்பதின்மரும், இருந்து ஆராய்ந்தறியப்பட்டதாம், இப்பாஷை முச்சங்கமேறி வளர்ந்தமையானும், எழுதும் மறையாயுளதானும், யாவர்க்குந் தந்தையாயுள்ள சிவபெருமானே தலைமையாக வளர்த்தமையானும், தந்தை பாஷையென்று சொல்லப்படும். இதற்குப் பிரமாணம்.

திருவிளையாடற் புராணம்.

கண்ணுதற்பெருங்கடவுளுங் கழகமோடமர்ந்து
பண்ணுறத்தெரிந்தாய்ந்தவிப் பசுந்தமிழேனை
மண்ணிடைச்சிலவிலக்கண வரம்பிலாமொழிபோ
லெண்ணிடைப்படக்கிடந்ததா வெண்ணவும்படுமோ.

என்பதனுலுணர்க.

ஆரியம் எழுதாமறை எனல்.

ஆரியம் எழுதாமறை என்பதற்குப்பிரமாணம்

திருவிளையாடற் புராணம்.

எழுதருமறைகடேரு விறைவனையெல்லிற்கங்குற்
பொழுதறுகாலத்தென்றும் பூசனைவிடாதுசெய்து
தொழுதகைதலைமேலேறத் துளும்புகண் ணீருண்மூழ்கி
யழுதடியடைந்தவன்ப னடியவர்க்கடிமைசெய்வாம்.

காஞ்சிப்புராணம்.

எழுதாதமறைமுடியுமிறைஞ்சுமடி யார்முடியுமிலங்கப்பூத்துக் [ளா
கொழுதாடுசிறைச்சுரும்பினன்பர்துதி குடிகொண்டகொழும்பூந்தா
யழுதார்வமிக்குலடையாரலர்தூவிப் பணிந்தெனத்தேனசும்பத்தும்பி
யுழுதாலுமலரிறைத்துக்குரங்குசினை கழும்புன்னையொசிவபாராய்.

[பெரியபுராணம்,

திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்.

எழுதாதமறையளித்த வெழுத்தறியும்பெருமானைத்
தொழுதார்வமுறநிலத்திற் றோய்ந்தெழுந்தேயங்கமெலா
முழுதாயபரவசத்தின் முகிழ்த்தமயிர்க்கான்மூழ்க
விழுதாரைகண்பொழிய விதிர்ப்புற்றுவிம்மினார்.

ஏரெழுபது, கம்பவாணர்.

எழுதொணாமறைவிளங்கு மியலிசைநாடகம்விளங்கும்
பழுதிலாவறம்விளங்கும் பார்வேந்தர்முடிவிளங்கு
முழுதுசால்பலபோக்கி யுழவருழக்கியவெங்காற்
புழுதியால்விளையாத பொருளுளவோபுகலீரே.

எனவருவனற்றாற்காண்க.

அங்ஙனமாயின், எழுதாமறையை எழுதுமறைக்கு ஒப்பு ச்சொல்லலாமோ? எனின், சொல்லக்கூடாது. ஏனெனில் ஆரியவேதம், எழுதாமறையென்றமையால் வாய்மொழி மாத்திரமேயன்றிப்பத்திரமூலமாக ஏற்படாத நூல் என்று சித்தாந்தமாகிறது. ஞாபகப்பிசகு எவர்க்கு முளதாகலின், இவ்வாரியம் ஓதுபவர் ஒருகாற் கூறியபடி மற்றொருகாற் கூறார். ஆகவே, ஒருவர் பாடம்போல மற்றொருவர்பாடம் இராதென்பதும் பெறப்பட்டது. ஏட்டில் எழுதப்பட்ட பிரமாணங்களிலேயே ஒன்றில் வரைந்தபடி மற்றொன்றிலில்லாமல் இருக்கும் பாடபேதங்கள் கண்டிருக்கிறோம். வாய்மொழியில் பாடங்கள் மாறுபடுவதற்கு ஐயமுண்டோ? இனி,

ஞாயஸ்தலங்களிலும் கொடுக்கல் வாங்கல்களைப்பற்றி வழக்கு நேரிட்டகாலத்து, எழுத்து மூலத்தில் சாசனங்களைக் காண்பித்தால் உடனே நியாயாதிபதி தீர்ப்புச்செய்துவிடுகிறார். வாய்மொழி ஏற்பாடென்றால் நம்பத்தக்கதில்லையென்று தள்ளிவிடுகிறார். ஆகையால் எழுதாமறைக்கு வலிமை எக்காலத்துமில்லையாம். "செய்யாமொழிக்குந் திருவள்ளுவர்

மொழிந்த பொய்யாமொழிக்கும் பொருளொன்றே" என்ற சங்கச்செய்யுளில், நாயனுராலியற்றப்பட்டு ஏட்டில் வரைந்துள்ள திராவிடவேதம் "பொய்யாமொழி" என்ற மாத்திரையானே, ஆரியவேதம் ஏட்டிலெழுதப்படாது கர்ண பரம்பரையால் பாடமாய் வருவதுபற்றிப் பொய் கலந்திருக்குமென்று கூருது கூறுவதுமாயிற்று.

அந்தணர்கள் நான்மறையை ஏட்டில் எழுதிவைத்தால், உதாத்தம் அனுதாத்தம் சுவரிதகம் என்னப்பட்ட சுரபேதகங்களைக் கற்க வலியில்லாத ஏனைய சூத்திராதிய சாதியரும் ஓதி அவ்வேதத்தின் சுரவலிமையைக் கெடுப்பாரென்று, தங்களுக்குள்ளே வாய்ப்பாடமாக வோதிக்கொள்ள வேண்டுமென்று ஏட்டில் வரையாது விடுத்தனர். நாயனுராற் கூறப்பட்ட திராவிடவேதமாகிய குறளோவென்ருல், அச்சுரங்களைக் கற்றுள்ளாரு மல்லாதாரும் ஓதினும் ஆற்றல் கெடாதென, ஏட்டில் எழுதப்பட்டதென்பது கருத்து.

ஆரியவேதத்தை ஏட்டில் எழுதினுல் அந்தணரொழிந்த ஏனைய சாதியார் அதின் சுரவலியைக் கெடுப்பாரென்றன்றோ பயந்து ஏட்டில் எழுதாது மறைத்துவைத்தார்கள்; அங்ஙனம் சூத்திராதியர்கள் ஓதாதிருப்பாராயின், வேதத்தை ஏட்டில் எழுதலாமென்பது தெளிவாக விளங்குகின்றது.

அச்சுரவலிமை அந்தணர்க்கே யுள்ளது ஏனையர்க்கில்லையெனின், நான்கு சாதிக்குட்படாத கணிகை மாதர்களும் பாடகர்களும் ஒவ்வொரு சபையிலும் சப்த சுரங்களையுங்கூட்டி அதிக சுகமாகப் பாடுவதைக்கேட்டதில்லையா? ஆகலின் அது பொருளன்று. "அதற்குரிய ரந்தணரே" என்று கூறப்பட்டமையின், அவ்வாரியவேதத்திற்கு உரியவர் அந்தணரே என்று தேற்ற ஏகாரங்கொடுத்து கூறியிருப்பதால், ஏனையர் உரியர் அல்லர் எனப்பொருளாகின்றது. ஆயினும், இருபிறப்பாளராகிய பிரம க்ஷத்திரிய வைசியர்கள் மூவரும் ஓதலாமென மூ

ன்னரே கூறப்பட்டிருப்பதால் அது கருத்தன்றாம். பின்னை என்னை ? எனில், ஓதல் ஓதுவித்தல் என்னும் இரண்டுகருமங்களுக்கும் அந்தணர் அதிகாரம் பெற்றிருப்பதால் சிறப்புவகைநோக்கி அந்தணரே எனக்கூறினாரெனக்கொள்க.

சிவபெருமான் திராவிடத்தைத் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதியும், அழகிய திருச்சிற்றம்பலமுடையார் கைநாட்டென்று கையொப்பம் வைத்தும், இருப்பதால் எழுதுமறையெனக் கூறப்பட்டது. ஆரியவேதமோவென்றால் அவ்விதமாகச்சிவபெருமான் தமது திருக்கரங்களால் எழுதியதாகவாவது, அல்லது அவ்வேதங்கட்கு கையொப்பம் வைத்ததாகவாவது, யாவராலாயினும் பிரமாணிக்கப்பட்டுள்ளதா ? யாங்கணும் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. ஆகையால் எழுதாமறையெனக்கூறபபட்டது. ஏன் கையொப்பம் வைக்கவில்லை? என்றால் பதி நிச்சயார்த்தம் திராவிடத்தில் கூறுவதுபோல ஆரியத்தில் கூறாது, ஆணவாதி மலங்களிற் கட்டுண்டிருக்கும் அணுபட்சத்தாரையும் பதிகளாகக் கூறப்பட்டிருப்பதால், அவ்வாரியத்திற்கூறும் கூற்றுகள் உண்மையென ஒப்புக்கொள்ளவில்லைபோலுமாம்.

அத்தேவர்தேவ ரவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

என்ற திருவாசகத்தானுமுணர்க.

**திராவிடவேதம் எழுதுமறையெனல்.**

இதற்குப்பிரமாணம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

திருப்பிரமபுரம், வழிமொழித் திருவிராகம்-பண்-சாதாரி.

ஒழுகலரிதழிகலியி லுழியுலகுபழிபெருகு வழியைநினையா
முழுதுடலிலெழுமயிர்கடழுவுமுனி குழுவினொடுகெழுவுசிவனைத்

தொழுதலகிலிழுகுமலமழியும்வகை கழுவுமுரைகழுமனகரப்
பழுதிலிறையெழுது மொழிதமிழ் விரகன்வழி மொழிகண்மொழித
[கையவே.

பெரியபுராணம்.

சம்பந்தசுவாமிகள் புராணம்.

தெருளுமெய்க்கலைவிளங்கவும் பாருளோர்சிந்தை
யிருளுநீங்கவுமெழுதுசொன் மறையளிப்பவர்தாம்
பொருளுஞானமும்போகமும் போற்றியென்பாருக்
கருளுமங்கணர்திருவரத் துறையையவ் ததணைந்தார்.

பழுதில்சீர்த்திருப்பருதிநன் னியமமும்பணிந்தவ்
வெழுதுமாமறையாம்பதி கத்திசைபோற்றி
முழுதுமானவர்கோயில்கள் வணங்கியேமுறைமை
வழு வில்சீர்த்திருப்பூவனூர் வணங்கிவந்தணைந்து.

திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்.

தொண்டர்குழாம்புடைசூழத் தொழுதகரத்தொடு நீறுதுதைந்த கோலங், கண்டவர்தம்மனங்கசிந்துகரைந்துருகுங் கருணைபுறம்பொழிந்துகாட்டத், தெண்டிரைவாய்க்கன்மிதப்பி லுதைத்தேறுந்திருநாவுக்கரசர்தாமும், வண்டமிழாலெழுதுமறை மொழிந்தபிரான் திருப்புகலிமருங்குசார்ந்தார்.

ஏரெழுபது கம்பவாணர்.

உழுதுண்டுவாழ்வாரே வாழ்வார்மற்றெல்லாந்
தொழுதுண்டுபின்செல்வ ரென்றேயித்தொல்லுலகி
லெழுதுண்டமறைசொன்ன லிவரேவன்மள்ளர்க்கும்
பழுதுண்டோபார்வேந்தர் படைமன்னரொப்பாரே.

எனவருவனவற்றாலும் காண்க.

திருப்பெருந்துறைப்புராணம், தில்லையை யடைந்தபடலம்.

ஆயவந்நாளிற்செம்பொ னம்பலத்தாடுமைய
ரேயமாமறையோராகி யேடெழுத்தாணிகொண்டு
பாயமற்றவர்முன்சென்றார் பனவரேநீரியாரென்ன
மாயமில்பாண்டிநாட்டுப் பெருந்துறைவதிவோமென்றார்.

வந்தகாரியமென்னென்ன வாதவூரிறைவரேநீர்
பந்தநீத்துலகமுய்யும் படியினிதருளிச்செய்த
சந்தவாசகம்வரைந்து போதற்குசசமைந்துவந்தே
னந்தயாநிதியேயின்றே நயந்தருள்செய்வீரென்றார்.

என்றலுநமச்சிவாய முதலினிதமையக்கூறி
நன்றமைபடையெழுச்சி நகுபடையாட்சியச்சோ
வொன்றுநின்றுலாவுறும்பத் தொத்தயாத்திரைப்பத்தோதிப்
பொன்றலிலெலாமுடித்தார் பூசுரர்பின்னுஞ்சொல்வார்.

இயம்பியவனைத்துமைய ரேயினியெழுதிக்கொண்டே
னியம்பிகோவையொன்று நவின்றிடவேண்டுமென்ன
வயம்படுமெவருமுள்ள மகிழ்ந்தனர்பாடப்பாடச்
சயம்படுமறையோர்தாமும் வரைந்தனர்சலித்தலின்றி.

முற்றியபின்மாணிக்க வாசகர்மொழிந்தவாறே
பற்றியவெழுதினேனம் பல்வாணன்கையெழுத்தென்
றுற்றியதனதுபேரு முலகறிதரவரைந்து
மற்றியலேடுகாப்புச் செய்துகைக்கொடுமறைந்தார்.

மறைந்தவர்போதவாத வூரருண்மயங்கிமன்று
ணிறைந்தவர்கொல்லோவென்று நெஞ்சநெக்குருகவெங்கு
முறைந்தவர்மன்றுண்மேவி யுவந்தயனரிமுன்னோர்க்கு
மறைந்தனர்நம்பால்ன்பன் பாடியதறிதீரென்று:

பின்னர்மைக்காப்புச்செய்து பிறங்குபுத்தகஞ்சேமித்து
நன்னரைந்தெழுத்தினுமப் படிமிசைநயக்கவைத்தா
ரன்னதைமறுநாண்மூவா யிரருமாங்கமையக்கண்டு
தென்னவற்புதமென்றங்கை யேந்தினார்தலைமேற்கொண்டார்.

திருமுறையதையவிழ்த்துச் சிறப்புறவாதியந்த
மொருமுறைநோக்கினார்க ளுலகெலாமுய்யவாடும்
பெருமுறையவர்திருக்கை யெழுத்தெனல்பிறங்கக்கண்டா
ரருமுறையனையாருற்ற மகிழ்ச்சியாராளக்கவல்லார்.

ஓங்குபொற்சிவிகைமேலா லொய்யெனமுறையையேற்றித்
தேங்குபல்லியமுழங்கத் திருவாதவூரர்முன்போ

யீங்கிது நுமதுபாட லெழுதினார்நம்மானுரென்
ருங்குவைத்தஞ்சலித்தா ரழுதழுதவருங்கண்டார்.

முறையிதன்பொருளையாங்க ளறியுமாமொழிவீரென்ன
விறைவளர்சபைமுன்சொல்வா மென்றவரொடுமோங்கெய்தி
நிறைபெருநடஞ்செய்வாரே நிசழ்பொருளென்னக்காட்டி
மறைமுடிபெனுமுட்புக்கு மறைந்தனர்வாதவூரர்.

எனவருவனவற்றாலுணர்க.

## ஆரியதிராவிடங்களுக்குள்ள பேதம்.

ஆரியம் திராவிடமாகிய இரண்டு வேதங்களின் பொருளைச் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, ஆரியம் அணுவும் திராவிடம் மகமேருவுமெனக் கூறுதலும் பொருந்தாதென்பதாம்.

இதற்குப்பிரமாணம்,

இராமலிங்கம்பிள்ளையவர்கள் திருவருட்பா.

இலக்குளசீரழைத்ததனி விடங்கருறவழைத்ததன்வாய்த்
தலைக்குதலைமதலையுயிர் தழைப்பவழைத்தருளியநின்
கலைக்கும்வடகலையின்முதற் கலைக்குமுறுகணக்குயர்பொன்
மலைக்குமணுநிலைக்குமுரு வன்றெண்டப்பெருந்தகையே.

எனவும், மாணிக்கவாசகசுவாமிகள் ஓத சிவபெருமானெழுதப்பட்ட திராவிடவேதமாகிய திருவாசகத்தின் ஓர் பாடலின்கண்ணுள்ள பலவெழுத்தினுள் ஓர் எழுத்தின்பயனை நான்முகனால் ஓதப்பட்ட ஆரியவேதமாகிய நான்கு வேதங்களையு மோதியுமறியார்கள் என்று திருப்பெருந்துறைப்புராணத்தில்,

உருத்திர மூர்த்தமுரைத்தபடலம்.

வெள்ளியபங்கயக்கிழத்தி விம்மியிறுமாந்தமுலைவீக்கந்தாக்கத்,
துள்ளியவெண்டோள்வரையான் வரைந்தவெழுத்தற்றபயன்றோன்றவோரார், நள்ளியநந்திருவாதவூரடிகள் வாய்மலரநம்மானேருற்,
றெள்ளியகையால்வரைந்த பலவெழுத்துளோரெழுத்தை யோர்ந்துளாரே.

எனவும்,

திருவாரூர்ப்புராணம், தியாகராஜசருக்கம்.

கலைகளிற்சிறந்துள்ளதோர் தென்கலைசறங்கு
மலைகளிற்சிறந்துள்ளதோர் பாலலையறத்தி
னிலைகளிற்சிறந்துள்ளதோர் சைவநன்னிலைபோன்
மலைகளிற்சிறந்துள்ளது கயிலைமாமலையே.

எனவும்,

கம்பராமாயணம், ஆரணியகாண்டம், அகத்தியப்படலம்.

உழக்குமறைநாலினு முயர்ந்துலகமோதும்
வழக்கினுமதிக்கவியினும் மரபினுடி
நிழற்பொலிகணிச்சியணி நெற்றியுமிழ்செங்கட்
டழற்புரைசுடர்க்கடவு டந்ததமிழ்தந்தான்.

எனவுங் கூறுதலால், ஆரியவேதம் நான்கினுஞ் சிறந்துள்ளது தமிழ்வேதமென்பது சித்தாந்தம்.

பின்னும் ஆரியவேதமோதின் அன்பினைவிளைவியாது; திராவிடவேதமாகியதிருவாசகமோதின் அன்பினைவிளைவிக்கும்.

பிரமாணம்.

சிவப்பிரகாசர் நால்வர் நான்மணிமாலை

அகவல்.

விளங்கிழைபகிர்ந்த மெய்யுடைமுக்கட்
காரணனுரையெனு மாரணமொழியோ
வாதிசீர்பரவும் வாதவூரண்ணன்
மலர்வாய்ப்பிறந்த வாசகத்தேனோ
யாதோசிறந்த தென்குவீராயின்
வேதமோதின் விழிநீர்பெருக்கி
நெஞ்சநெக்குருகி நிற்பவர்க்காண்கிலேந்
திருவாசகமிங்கொருகாலோதிற்
கருங்கன்மனமுங் கரைந்துகக்கண்க
டொடுமணற்கேணியிற் சுரந்துநீர்பாய
மெய்ம்மயிர்பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்தி
யன்பராகுந ரன்றி
மன்பதையுலகின் மற்றையரிலரே.

ஆரியவேதம் மட்கல நிகர்க்கும்
திராவிடவேதம் பொற்கல நிகர்க்கும்.

இதற்குப் பிரமாணம்.

திருவார்பெருந்துறைச் செழுமலர்க்குருந்தி
னீழல்வாயுண்ட நிகரிலானந்தத்
தேன்றேக்கெறியுஞ் செய்யமாணிக்க
வாசகன்புகன்ற மதுரவாசகம்
யாவருமோது மியற்கைத்தாதலிற்
பொற்கலநிகர்க்கும் பூசுரர்நான்மறை
மட்கலநிகர்க்கு மதுரவாசக
மோதின்முத்தி யுறுபயன்
வேதமோதின் மெய்ப்பயனறமே.

என்பதனாற்காண்க.

## இரண்டாவது: அத்தியாயம் வருணவிளக்கம்.

### I. தேவாரம்.

அந்தணர்.

திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்.

திருநல்லூர், திருவிராகம், பண்-சாதாரி.

மாலுமலர்மேலயனு நேடியறியாமையெரியாய
கோலமுடையானுணர்வு கோதில்புகழானிடமதாகு
நாலுமறையங்கமுத லாறுமெரிமூன்றுதழலோம்புஞ்
சீலமுடையார்கணெடு மாடம்வளருந்திருநலூரே.

திருக்கருப்பறியலூர், திருவிராகம், பண்-இந்தளம்.

வேதமொடுவேதியர்கள் வேள்விமுதலாகப்
போதினொடுபோதுமலர் கொண்டுபுனைகின்ற
நாதனெனநள்ளிருளின்மு னாடுகுழைதாழுங்
காதவனிருப்பது கருப்பறியலூரே.

திரு ஆக்கூர், பண்-சீகாமரம்.

கொங்குசேர்தண்கொன்றை மாலையினான்கூற்றடரப்
பொங்கினான்பொங்கொளிசேர் வெண்ணீற்றான்பூங்கோயி
லங்கமாறோடு மருமறைகளோ வேள்வி
தங்கினாராக்கூரிற் றான்றோன்றிமாடமே.

சீழ்மாம்புலியூர், பண்-புறநீர்மை.

மணந்திகழ்திசைகளெட்டுமேழிசையு மலியுமாறங்கமைவேள்வி [ங்
யிணைந்தநால்வேதமூன்றெரியிரண்டுபிறப்பெனவொருமையாலுணரு
குணங்களுமவற்றின்கொள்பொருள்குற்ற மற்றவையுற்றதுமெல்லா
முணர்ந்தவர்வாழுமோமாம்புலியூ ருடையவர்வடதளியதுவே.

மேற்கண்ட செய்யுட்களால் அந்தணர்களின் முக்கிய தருமம் வேதமோதலும் வேள்விசெய்தலுமாகத் தெரியவருகின்றது.

அரசர்.

திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்.

திருப்பூவணம், பண்-தக்கேசி.

அறையார்புனலுமாமலரு மாடரவார்சடைமேற்
குறையார்மதியஞ்சூடி மாதோர்கூறுடையானிடமா
முறையால்முடிசேர்தென்னர் சேரர் சோழர்கடாம்வணங்குந்
திறையாரொளிசேர்செம்மை யோங்குதென் றிருப்பூவணமே.

திருமூக்கீச்சுரம், பண்-செவ்வழி.

அன்னமன்னநடைச்சாயலா ளோடழகெய்தவே
மின்னையன்னசடைக்கங்கையான் மேவியகாரணந்
தென்னன்கோழியெழில்வஞ்சியு மோங்குசெங்கோலினான்
மன்னன்மூக்கீச்சரத்தடிகள் செய்கின்றதோர்மாயமே.

திருவாலவாய், பண்-புறநீர்மை.

மண்ணெலாநிகழமன்னனாய்மன்னு மணிமுடிச்சோழன்றன்மகளாம்
பண்ணினேர்மொழியாள்பாண்டிமாதேவிபாங்கினாற்பணிசெய்துபர
விண்ணுளாரிருவர்கீழொடுமேலு மளப்பரிதாம்வகைநின்ற [வ
வண்ணலாருமையோடின்புறுகின்ற வாலவாயாவதுமிதுவே.

மேற்கண்ட செய்யுட்களால் சேர சோழ பாண்டியராதி அரசர்களிருந்தார்களென்பதும், அவர்களுக்கு உலகோம்பலே முக்கியதருமம் என்பதும் தெரியவருகின்றன.

## வைசியர்.

திருஞானசம்பந்தசுவாமிகள், திரு ஆக்கூர், பண்-சீகாமரம்.

வாளார்கண்செந்துவர்வாய் மாமலையான்றன்மடந்தை
தோளாகம்பாகமாப் புல்கினான்றன்கோயில்
வேளாளரென்றவர்கள் வள்ளன்மையான்மிக்கிருக்குந்
தாளாளராக்கூரிற் றான்றோன்றிமாடமே.

ஈண்டு, தாளாரென்றதற்கு வைசியரெனப்பொருளாம். "தாளாளரிப்பர் தருமக்கிழவோர், வேளாளரிளங்கோக்கள் வைசியர் பொதுப்பெயர்" என்பதைப் பிங்கலந்தையிற்காண்க.

இக்கருத்துப் பற்றியே கடையெழுவள்ளலி லொருவனாகிய பாரியென்னும் வேளாளனைச் சிறப்பித்துச் சுந்தரமூர்த்தி சுவாமிகளுந் திருவாய்மலர்ந்தருளினர். பின்வருந்தேவாரத்தாலுணர்க.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் திருப்புகலூர்
பண்-கொல்லி.

மிடுக்கிலாதானைவீமனேவிறல் விசையனேவில்லுக்கிவனென்றுங்
கொடுக்கிலாதானைப்பாரியேயென்று கூறினுங்கொடுப்பாரிலை
பொடிக்கொண்மேனியெம்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்கா
ளடுக்குமேலமருலகமாள்வதற் கியாதுமையுறவில்லையே.

பெரியபுராணம், சாக்கியநாயனார் புராணம்.

தாளாளர்திருச்சங்க மங்கையினிற்றகவுடைய
வேளாளர்குலத்துதித்தார் மிக்கபொருடெரிந்துணர்ந்து
கோளாகிப்பல்லுயிர்க்கு மருளுடையராய்க்கெழுமி
நீளாதுபிறந்திறக்கு நிலையொழிவேனெனநிற்பார்.

மற்றும் வருவனவற்றாற்காண்க. பின்னும்,

திருஞானசம்பந்தசுவாமிகள் திருப்புகலி, பண்-செவ்வழி.

மயலிலங்குந்துயர் மாசறுப்பானருந்தொண்டர்க
ளயலிலங்கப்பணி செய்யநின்றவடிகள்ளிடம்
புயலிலங்குங்கொடை யாளரதேத்தொலிபொலியவே
கயலிலங்கும்வயற் கழனிசூழுங்கடற்காழியே.

வேளாளரென்பதற்கு கொடையாளரென்பது பொருளாம். கொடை பிறவருணங்களிலிலதோ? எனின், காரணங்கருதிய வழி யேனையோர்க்கும் பொருந்துமேனும், இது வேளாருக்குக் காரணஇடுகுறியாய் நிற்றலின் வேளாளருக்கே யுரியதென்க. இது நோக்கியே நாயனாரும் "பலகுடை நீழலுந் தன்குடைக்கீழக் காண்ப, ரலகுடை நீழ லவர்" எனவோதியருளினார். "புரவல னீகையாளன் றியாகி யுபகாரிவேளாளன் கொடையுளோன் டெயரே" என்பது பிங்கலந்தையிற்காண்க.

திருவையாறு, திருவிராகம், பண்-இந்தளம்.

துன்னுகுழைமங்கையுமை நங்கைசுளிவெய்தப்
பின்னொருதவஞ்செய்துழல் பிஞ்ஞகனுமங்கே
யென்னசதியென்றுரைசெ யங்கணனிடஞ்சீர்
மன்னுகொடையாளர்பயில் வண்டிருவையாறே.

திருவேதிகுடி, திருவிராகம், பண்-சாதாரி.

பூவின்மிசையந்தணனொடாழிபொலி யங்கையனுநேடவெரியாய்த்
தேவுமிவரல்லரினியாவரென நின்றுதிகழ்கின்றவரிடம்
பாவலர்களோசையியல்கேள்விய தறாதகொடையாளர்பயில்வா
மேவரியசெல்வநெடுமாடம்வளர் வீதிநிகழ்வேதிகுடியே.

திருவீழிமிழலை, திருவிராகம், பண்-நட்டபாடை.

மலைமகடனையிகழ்வதுசெய்த மதியறுசிறுமனவனதுயர்
தலையினொடழலுருவனகர மறமுனிவுசெய்தவனுறைபதி
கலைநிலவியபுலவர்களிடர் களைதருகொடைபயில்பவர்மிகு
சிலைமலிமதில்புடைதழுவிய திகழ்பொழில்வளர்திருமிழலையே.

இதுவுமது.

இகழுருவொடுபறிதலைகொடு மிழிதொழின்மலிசமண் விரகினர்
திகழ்தருவருடையுடல்பொதிபவர் கெடவடியவர்மிகவருளிய
புகழுடையிறையுறைபதிபுன லணிகடல்புடைதழுவியபுவி
திகழ்சுரர்தருநிகழ்கொடையினர் செறிவொடுதிகழ்திருமிழலையே.

திருமறைக்காடு, திருவிராகம், பண்-நட்ட பாடை.

கரமுதலியவவயவமவை கடுவிடவரவதுகொடுவரு
வரன்முறையணிதருமவனடல் வலிமிகுபுலியதளுடையின
னிரவலர்துயர்கெடுவகைநினை யிமையவர்புரமெழில்பெறவளர்
மரநிகர்கொடைமனிதர்கள்பயின் மறைவனமமர்தருபரமனே.

இருபிறப்பாளருள், அந்தணர்க்குச் சிறப்புவேதமோதல், அரசர்க்குச் சிறப்பு வேள்விசெய்தல், வைசியர்க்குச் சிறப்பு ஈதல் ஆகலின், சம்பந்தசுவாமிகள் வேளாளரைக்கொடையாளரெனப் பல பாடல்களில் விதந்து கூறினமைகாண்க.

திருஞானசம்பந்த சுவாமிகள், திருப்பிரமபுரம் ஈரடி,
பண்-பழம்பஞ்சுரம்.

காணியொண்பொருட்கற்றவர்க்கீகையுடைமை யோரவர்காதல்செய்
யுகற்]
றொணிவண்புரத்தாணியென்பவர் தூமதியினரே.

ஈங்கு கொடையாளர் வேளாளரென்பதை ஐயப்பாட்கலக் காணியுடையார், பொருளுடையார், கற்றவர்க்கீகையுடையார், எனக்கூறியருளினர். வேளாளர் காணியாளரென்பதற்கு "தறைக்குரிய காராளர்" என்றும், பொருளுடையாரென்பதற்கு "வாழித்தேவர் திருமக்கள் வையம்புரக்கும் பெருக்காளர்" என்றும், ஏரெழுபதினுரையில் விளங்கவுரைத்தனர். ஆங்குணர்க.

**சூத்திரர்.**

திருஞானசம்பந்த சுவாமிகள்.

திரு அவளிவணல்லூர், திருவிராகம், பண்-சாதாரி.

சழியருகுபள்ளியிட மாகமீன்கள்சவர்வாரும்
வழியருகுசாரவெயி னின்றடிசிலுள்கிவருவாரும்

பழியருகிறேரொழிக பான்மையொடுநின்றதொழுதேத்தும்
மழியருவிதோய்த்தபெரு மானுறைவதவளிவணல்லூரே.

திருநல்லூர், திருவிராகம், பண்-சாதாரி.

பொடிகொடிருமார்பர்புரி நூலர்புனல்பொங்கரவுதங்கு
முடிகொள்சடைதாழவிடை யேறுமுதலாளரவரிடமா
மிடிகொண்முழவோசையெழி லார்செய்தொழிலாளர்விழமல்கச்
செடிகொள்வினையகலமன மினியவர்கள்சேர்திருநல்லூரே.

சூத்திரருக்குச் சுதந்தரத்தொழிலின்மையால் விசேடித்து ஒன்றும் கூறவில்லை.

## II. தேவர்குறள்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனூர் திராவிட வேதத்தை அறம் பொருள் இன்பம் வீடு என்று சொல்லப்பட்ட, புருஷார்த்த நான்கையும் வருணச்சிரம தருமங்களையும் உள்ளடக்கி 133 அதிகாரமும், 1,330 குறளுமாக வோதியருளினூர். எங்ஙனமெனில்,

| | | அதிகாரம். | |
|---|---|---|---|
| கடவுள் வாழ்த்து | ... | 1 | பரசிவ வணக்கம். |
| வான்சிறப்பு | ... | 1 | பராசத்தி வணக்கம். |
| நீத்தார் பெருமை | ... | 1 | அந்தணர் சிறப்புத் தருமம். |
| அறன்வலி யுறுத்தல் பொதுவறம் | ... | 1 | இவை முதன் மூன்று வருணத்தாருக்கும் பொதுத் தருமம். |
| இல்லற வியல் | ... | 20 | |
| துறவறவியல் | ... | 14 | |
| அரசியல் | ... | 25 | இவை அரசர் சிறப்புத் தருமம். |
| அங்கவியல் | ... | 32 | |
| ஒழிபியலுள், குடிமை முதல் இரவச்சமீருன | ... | 12 | இவை வைசிய தருமம். |
| கயமை | ... | 1 | இது சூத்திர தருமம். |
| களவியல் | ... | 7 | இவை காமத்துப்பால். |
| கற்பியல் | ... | 18 | |
| ஆக அதிகாரம் | ... | 133. | |

## முதல் அதிகாரம், கடவுள்வாழ்த்து
### பரசிவ வணக்கமாம்.

வேதத்தில் உலகத்திற்குக்காரண கர்த்தர்கள் "சப்பிர்ம சஸ்ஸிவ சஹ்ஹறி சூட்சும பரமஸ்வராட்" எனப் பிரம விஷ்ணு உருத்திரர்களைக் கூறப்பட்டிருக்கின்றது. அங்ஙனமிருப்ப நாயனார் கடவுள் வாழ்த்துக் கூறுமிடத்து,

I குறள்.

அகர முதல் வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

என முதற்குறளில் மூவரையுங் கொள்ளாது, உலகத் தோற்றத்திற்குக்காரண கர்த்தா அம்மூவருள் ஒருவரே ஆதியாயுள்ளவரென்றும், அவரே இவ்வுலகத்துக்கு முதன்மையுடையவரென்றும், ஆதிபகவன் முதற்றே யுலகு எனச்சுட்டாது சுட்டிக்கூறினர். ஒவ்வொருசமயவாதிகளும் தத்தங்கடவுளே ஆதிபகவன் எனப் பொருந்தாவுரைகொண்டு சாதிக்கிறார்கள். அவை பிரமாணமாகாவாகையால், சுருதி யுக்தி யனுபவங்களைக் கொண்டு இங்கு இவரே ஆதிபகவன் எனச் சித்தாந்தப்படுத்த வேண்டும். எங்ஙனமெனில்,

சுருதிவாக்கியம்.

𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌰𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌤𑌤𑍍𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑍋 𑌹𑌰𑌿𑌃 ।
𑌤𑌤𑍍𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑍋𑌽𑌪𑍀𑌶𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑍋𑌽𑌧𑌿𑌕𑍋 𑌨 𑌹𑌿 ॥

పరాత్పర తరో బ్రహ్మా తత్పరా త్పరతో హరిః ।
తత్పరాత్పరతో ఈశః తస్మాత్తుల్యోధి కోనహి ॥

பராத்பரதரோ பிறஹ்ம தத்பராத் பரதோஹரீஃ
தத்பராத் பரதோயீஸ தஸ்மாத் துல்யோதிகோநஹீ ॥

இ - ள், பரத்துக்கெல்லாம் பரம் பிரமன்; அவற்குப் பரம் அரி. அவற்குப் பரம் சிவபெருமானுகும் அவர்க்குச் சமானுதிகர் ஒருவருமில்லை.

இருக்குவேதபுருஷன்.

𑌨𑌮𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇

"నమోరుద్రాయ మన్యవే"
நமோ ருத்திராய மன்யவே என்றும்,

யஜுர்வேதபுருஷன்.

𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌰𑍁𑌦𑍍𑌰 𑌮𑌨𑍍𑌯𑌵𑍇 ।
"నమస్తే రుద్రమన్యవే"
நமஸ்தெருத் ரமந்யவே என்றும்,

சாமவேதபுருஷன்.

𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌹𑌰𑌤𑍇 𑌨𑌮𑌃
"రుద్రాయ హరతేనమః"
ருத்திராய ஹரதேநம: என்றும்,

அதர்வணவேதபுருஷன்.

𑌨𑌮𑍋 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 ।
"నమోయస్తు రుద్రాయ"
நமோயஸ்து ருத்திராய என்றும் நமஸ்கரித்து,

𑌏𑌕 𑌏𑌵 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌯 𑌤𑌸𑍍𑌥𑍇 ।
"ఏక ఏవ రుద్రో నద్వితీయాయ తస్థే"
ஏகயே வருத்ரோ நத்விதியாயதஸ்தே.

என்று மகாருத்திர மூர்த்தியைத்தவிர இரண்டு வஸ்துவில்லை யென்று சந்தேக விபரீதமற அநாதியாய் உத்கோஷிக்கின்றனர். வேதங்களுக்கு முடிவாயுள்ளது ஆகமம், அவ்வாகமத்தின் முடிவாயுள்ளதைச் சிவஞானபோதமெனச், சிவபெருமான் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அனுக்கிரகஞ் செய்தருளினர்.

அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதா
மந்தமாதி யென்மனார் புலவர்.

என்பது முதற்சூத்திரம். இச்சூத்திரத்தான் அவனென்றும், அவளென்றும், அதுவென்றுஞ் சுட்டியுணரப்படுவதெதுவோ அதுவே யுலகமாம். அவ்வுலகம் இருவினைக்கீடாய தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழிலையுடையதாம். அது ஒருவனாற் றோற்றப்பட்டு உள்பொருளாகிச் சங்கார கர்த்தாவினிடத்தொடுங்கும். அது சகசமலம் நீங்குமளவும் தோன்றியும் நின்றும் ஒடுங்கும். அது தோன்றுங்கால், தானொடுங்குதற்கு நிலைக்களனாயுள்ள சங்கார கர்த்தாவினிடத்தினின்றும் வெளிப்படும். இவ்வாறாகலிற் சங்கார கர்த்தாவே உலகிற்கு முதற்கடவுள், ஏனையோ ரல்லரெனக் கூறுவர் அளவைநூலுணர்ந்தோர் என்பது பொருளாம்.

அதனால் வேதாகம முடிவை யுணர்ந்த நாயனாரும் உலகிற்குக் காரண கர்த்தாவாயுள்ளவர் பரமசிவமெனக் கூறவந்தவர் ஆதிபகவன் எனக்கூறியருளினார்.

சிவஞானபோதம் சைவமத சித்தாந்தநூலாதலாற் அது சிவனையே முதற்கடவுளாகக்கூறும். அதனால் அதையொழித்து வேறுநூற்பிரமாணங்கூற வேண்டுமெனில், சமணநூலாகிய சூடாமணி பதினொராவதுநிகண்டில் "பகவனே யீசன்மாயோன் பங்கயன் சினனே புத்தன்" எனக்கூறியிருக்கின்றது. இதனால் பகவன் என்பதற்குப் பொருள் சிவன் விஷ்ணு பிரமன் அருகன் புத்தன் எனக்கூறப்படுகின்றது. இவற்றுள்ளும், முன்னர் சிவனையும் பின்னர் விஷ்ணுவையும் அதன்பின்னர் பிரமாவையும் வரிசைக் கிரமமாக வகுக்கப்பட்டிருக்கின்றது. இதுமாத்திரமன்று, இச்சூடாமணி முதலாவது நிகண்டு தெய்வப்பெயர்த்தொகுதியிலும், முன்னர் சிவநாமங்களும் பின்னர் விஷ்ணுநாமங்களும் அதன்பின்னர் பிரமநாமங்களும் வகுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு மாத்திரமேயன்று, பிங்கலந்தையிலும் இரண்டாவதுநிகண்டு "வானவர் வகையுளும்" சிவனையே ஆதியாகக்கொண்டு பெயர்கூறப்படுகின்றது. திவாகரங்களுள்ளும் இவ்வரிசைக்கிரமங்களைக்

கண்டுணரலாம். இம்மும்மூர்த்திகளிடத்து அருகர் புத்தர்களுக் கபிமானமின்றே, அங்ஙனமாயிருக்கவும், அவர்கள் பல நூல்களையும் நன்காராய்ந்து மூவருள் சிவனே ஆதிபகவன் எனச் சித்தாந்தப்படுத்தி யிருப்பதே போதுமானசான்றும். இதற்கு மேற்கொண்ட பிரமாணத்தை யொருவருமெதிர்நோக்கார். நோக்கினரென்றால்,

திருநாவுக்கரசு சுவாமிகள், தேவாரம், ஆதிபுராணம்.

திருக்குறுந்தொகை.

செத்துச்செத்துப் பிறப்பதேதேவென்று
பத்திசெய்மனப் பாறைகட்கேறுமோ
வத்தனென்றரி யோடுபிரமனுந்
துத்தியஞ்செய நின்றநற்சோதியே.

என்பதனுலுணர்க.

நாயனருக்குச் சிவனே ஆதிபகவன் என்பது கருத்தாயின் ஏன் வெளிப்படையாகக் கூறவில்லை? யெனின், இவர் எடுத்துக்கொண்ட நூல் தமிழ்மறையாதலின் மறைபொருளாகவே கூறினரெனக்கொள்க.

உலகென்பது ஒருவனொருத்தி ஒன்றென்று சுட்டப்பட்ட சேதனசேதனப் பிரபஞ்சம், இப்பிரபஞ்சம் பசுபாசமெனவும், இப்பிரபஞ்சத்துக்குப் பதிப்பொருள் ஆதிபகவன் எனவமையும். ஆகவே, பதி பசு பாசங்களைக் கூறியிருப்பதால் திருக்குறள் சைவசித்தாந்த நூலெனவும், கடவுள்வாழ்த்தென்பது பரசிவவணக்கமெனவுங் கொள்ளப்படும். சிவபெருமான் உலகிற்கு முதற்கடவுள் என்பதற்குப் பிரமாணம்.

திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம், திருவிற்கோலம்,

பண்-காந்தாரபஞ்சமம்.

முந்தினன்மூவருண் முதல்வனாயினன்
கொந்தலாமலர்ப்பொழிற் கூகமேவினை

னந்திவான்பிறையினு னடியர்மேல்வினை
சிந்துவானுறைவிடந் திருவிற்கோலமே.

திருவாசகம்.

"முன்னானை மூவர்க்கு" முற்றுமாய முற்றுக்தும்
பின்னானைப்பிஞ்ஞகனைப் பேணுபெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும்பாதியனைத்
தென்னானைக்காவானைத் தென்பாண்டிநாட்டானை
யென்னானையென்னப்ப னென்பார்கட்கின்னமுதை
யன்னானையம்மானைப் பாடுதுங்காணம்மானாய்.

திருவெம்பாவை.

முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும் பேர்த்துமப்பெற்றியனே
யுன்னைப்பிரானாகப் பெற்றவுன்சீரடியோ
முன்னடியார்தாள்பணிவோ மாங்கவர்க்கேபாங்காவோ
மன்னவரேயெங்கணவ ராவாரவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப்பணிசெய்வோ
மின்னவகையே யெமக்கெங்கோனல்குதியே
லென்னகுறையு மிலோமேலோரெம்பாவாய்.

திருச்சதகம்.

தேவர்கோவறியாத தேவதேவன்
செழும்பொழில்கள்பயந்து காத்தழிக்குமற்றை
மூவர்கோனாய்நின்ற முதல்வன்மூர்த்தி
மூதாதைமாதாளும் பாகத்தெந்தை
யாவர்கோனென்னையும் வந்தாண்டுகொண்டான்
யாமார்க்குங்குடியல்லோம் யாதுமஞ்சோ
மேவினோமவனடியா ரடியாரோடு
மேன்மேலுங்குடைந்தாடி யாடுவோமே.

இவற்றாலும் மற்றும் வருவனவற்றாலுங்காண்க. இச்செய்யுள்களால் ஆதிபகவன் என்பது சிவபெருமானெனச் சித்தாந்தப்படுகின்றது.

அச்சிவபெருமான் உலகிற்கு எவ்வாறு முதன்மையாரெனக்கூறின் அகரமானது ஏனைய அட்சரங்களுக்கு முதன்

மையாமாறெனக்கொள்க. அதனைத் திஷ்டாந்த தாஷ்டாந்தங்களால் விளக்கவேண்டுமெனின்,

அகரமானது,

1. தானே தனித்தும், 2. ஏனைய உயிருடம்புகளெல்லாம் புணர்ந்தும், 3. அங்ஙனம் புணர்ந்தவழி தன்னுரு தோன்றாததாயும், 4. எழுத்துகளுக்கெல்லாம் முதற்கண்வைக்கப்பட்டும், 5. நாதமாத்திரையாய் இயல்பாய்ப் பிறந்ததாயுமிருக்கின்றது. அதுபோல,

சிவபெருமான்,

1. தானே தனியனுயும், 2. உயிருலகெல்லாம் புணர்ந்தும், 3. அங்ஙனம் புணர்ந்தவழி தன்னுருத்தோன்றாதவனுயும், 4. தேவர்க்கும் யாவர்க்கும் முதன்மை பெற்றவனுயும், 5. என்றுமுள்ள சுயம்புவாயு மிருக்கிறாரென்க.

சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்

திருநெல்வாயில், திரு அரத்துறை, பண்-இந்தளம்.

சிகரமுகத்திற்றிரளாரகிலும் மிகவுந்திவருந்நிவவின்கரைமே
னிகரின்மையிலவர்தாம்பயிலு நெல்வாயிலரத்துறைநின்மலனே
மகரக்குழையாய்மணக்கோலமதேபிணக்கோலமதாம்பிறவியிதுதா
னகரமுதலினெழுத்தாகிநின்ற யடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே.

தாயுமானசுவாமிகள், பொருள் வணக்கம்,

சிவபெருமான் தானே தனித்தும் உலகொடு புணர்ந்து நின்றார் என்பது,

அகரவுயிரெழுத்தனைத்துமாகிவேறா யமர்ந்ததெனவகிலாண்டமனைத்துமாகிப், பகர்வனவெல்லாமாகியல்லதாகிப் பரமாகிச்சொல்லரியபான்மையாகித், துகளறுசங்கற்பவிகற்பங்களெல்லாந் தோயாதவறிவாகிச்சுத்தமாகி, நிகரில்பசுபதியானபொருளைநாடி நெட்டுயிர்த்துப்பேரன்பானினைதல்செய்வாம்.

சிவபெருமான் புணர்ந்துழித் தன்னுருத்தோன்றாது கரந்துநின்றார் என்பது,

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்
திருப்பிரமபுரம், பண்-நட்ட பாஷை.

தோடுடையசெவியன்விடை யேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடி பூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனை நாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.

தேவாரம், திருமுதுகுன்றம்' பண்-பழந்தக்கராகம்.

பற்றுமாகிவானுளோர்க்குப் பல்கதிரோன்மதிபா
ரெற்றுநீர்தீக்காலுமேலை விண்ணியமானனோடு
மற்றுமாதோர்பல்லுயிராய் மாலயனும்மறைகள்
முற்றுமாகிவேறுமானான் மேயதுமுதுகுன்றே.

திருவாசகம், திருச்சாழல்,
தான் தனியன் என்பது.

கோயில்சுடுகாடு கொல்புலித்தோனல்லாடை
தாயுமிலிதந்தையிலி தான்றனியன்காணேடீ,
தாயுமிலிதந்தையிலி தான்றனியனாயிடினுங்
காயிலுலகனைத்துங் கற்பொடிகாண்சாழலோ.

திருவாசகம் திருச்சதகம்.

வானாகிமண்ணாகி வளியாகியொளியாகி
யூனாகியுயிராகி யுண்மையுமாயின்மையுமாய்க்
கோனாகியானெனதென் றவரவரைக்கூத்தாட்டு
வானாகிநின்றாயை யென்சொல்லிவாழ்த்துவனே.

என வருவனவற்றாலுங் காண்க.

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழா அ ரெனின்.

இதில் கடவுளை வாலறிவன் எனக்கூறினர். வாலறிவன்=மெய்யறிவன். இங்கு மெய்யறிவுடைய கடவுளை வணங்கினால் பயனுளதென்ற மாத்திரத்தால் பொய்யறிவுடைய கடவுள்களைத் தொழுவதால் பயனில்லையெனப் பொருளாகின்றது. ஆகவே பொய்யறிவானது மலினமுடையதாய் ஆ

ணவாதி மலங்களிலழுந்தச்செய்து சனன மரணங்களை யுண்டாக்கும். புல் பூடு புழு மரம் பறவை மலை மக்கள் தேவர் நரகாதிய சீவ கோடிகளினறிவெல்லாம் பொய்யறிவாம்.

என்றும் பரிசுத்தமுடையதாய் நிர்மலமாய் நிஷ்களமாய் நிரஞ்சனமாய் அறிவுக்கறிவாய் ஆணவாதி மலங்களில் கட்டுப்பட்டாத பதியறிவே மெய்யறிவாம். அதனால் பிரம விஷ்ணுவாதிய கடவுளர்கள் சனன மரணமுடையர்களாதலின் பொய்யறிவினரென்றும், சிவபெருமானுக்குத் திரிகாலத்தும் சனன மரணமில்லாமையின் மெய்யறிவன் என்றும், சித்தாந்தப்படுகின்றன. இதற்குப் பிரமாணம்.

ஆதித்திய புராணம்.

ப்ரஹ்மவிஷ்ணுஸுரேந்த்ராத்யா: பஶவ: பரிகீர்த்திதா:|
தேஷாம்பதித்வாத்தேவேஶ ஶ்ஶிவ: பஶுபதிஸ்ம்ருத:||

బ్రహ్మ విష్ణు సురేన్ద్రాద్యాః పశవః పరికీర్తితాః ।
తేషాంపతిత్వాద్దేవేశశ్శివః పశుపతిస్మృతః ॥

பிரஹ்மவிஷ்ணுஸுரேந்திரா த்யா:பஸ்வ:பரிகீர்த்திதா:
தேஷாம்பதித்வாத்தேவேஸஸ் ஸிவ:பஸுபதிஸ்மிருத:

இதனால் பிரம விஷ்ணு தேவேந்திராதியர்கள் பசுவென்றும், இவர்களுக்குப் பதியாயுள்ளவர் பசுபதி என்ற சிவபெருமானை என்றும், கூறப்படுகின்றன.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், ஆதிபுராணம்.

திருக்குறுந்தொகை.

நூறுகோடி பிரமர்க ளொங்கினா
ராறுகோடி நாராயண ரங்ஙனே
யேறுகங்கை மணலெண்ணி லிந்திர
ரீறிலாதநல் லீச னொருவனே.

அருணகிரியந்தாதி.

எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தோஞ் சோணேச—ரில்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம்.

இதனல் சிவபெருமான் பிறப்பிறப்பில்லாதவரென்றும், ஏனை யோர் சனனமரணத்தை யுடையவரென்றுஞ், சித்தாந்தப்ப டுகின்றன. மற்றும் வருவனவற்றுற் காண்க. ஆகையால் நா யனர் இங்ஙனம் வாலறிவன் எனக்கூறியது பரசிவத்தையே யெனக்கொள்க.

3. மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்."

இதில் கடவுளை மலர்மிசை ஏகினன் என்றார்.

ஆகமவிதியிற் கூறியபடி சிவபெருமானைப் பத்மாசனத் தில் எழுந்தருளச்செய்து சிவபூசைசெய்பவர் மோக்ஷவுலக த்தில் நீடூழிகாலம் வாழ்வர் என்பது கருத்தாம். எங்ஙனமெ னில்? ஆகமத்தில் சிவபூசைவிதியில் அகப்பூசை புறப்பூசைக ளில் விதித்திருக்கிறது அவற்றுள் அகப்பூசையாமாறு. பின்வ ருஞ் செய்யுட்களாலுணர்க.

சிவபூசையந்தாதி.

சிவிக்குமைமங்கலைப் பிரணவத்தாற்பூரகத்தாற்
சிருட்டிவழிகொடுசோதி மயனாய்த்தாபித்துத்
தாவுற்றவெளஷடந்த சத்திமனுப்பகர்ந்து
சத்தியினின்றெழுமமுதா லபிடேகித்ததற்பின்
மேவுற்றவங்கசியா சம்புரிந்துமேற்சொல்
விதியி "னகத்தாமரையிற் சிவனைமானதமாய்த்
தூவுற்ற்பூசைபணி நாபிகுண்டத்தனலைச்
சுழுமுனையாற்றுவாதசாந் தேசன்பாலமைத்தே."

"அமைவினின்ரா னக்கினியாமதைநாபிகுண்டத்
தமைத்ததனிற் சிவனையருச்சனைபுரிந்தவ்வனலிற்
சமையும்விந்து வகத்துதிக்குமமுதநெய்யாலியன்ற
சத்திமூலத்துமதிற் பத்திலொன்றுமாக
வெமையருள்சங்கிதையானு மோமஞ்செய்தோமத்
திசைந்தபலனுளத்திருந்த சிவனிடத்திற்கொடுத்து
விமலவிந்துத்தலத்தினுடுப் போற்சிவனைநினைந்து
வெளியினும்பூசிப்பனெனவனுமதிபெற்றுவந்தே."

## புறப்பூசையாமாறு.

இனி, புறப்பூசனையினும் கந்தம் பீஜம் அங்குரம் நாளம் கண்டகம் தளம் கேசரம் கர்ணிகைபீசம் பத்மமெனத் தசவித வுருவுடன் கமலாசனமமைத்து, அவற்றுள் தாமரையிதழ் எட்டினுள்ளும் வாமாதிசத்திகளையும் கர்ணிகையின் ஈசான பாகத்தில் மனோன்மனி சத்தியையுமமைத்து, தளாகார விருத்தத்தில் சூரியமண்டலத்தையும் சூரியமண்டலாதிபதியான பிரமனையும் பூசித்து, அதன்பின் கேசாரகார விருத்தத்தில் சந்திரமண்டலத்தையும் சந்திரமண்டலாதிபதியான விஷ்ணுவையும் பூசித்து, பின்னர் கர்ணிகாகார விருத்தத்தில் அக்கினிமண்டலத்தையும் அக்கினிமண்டலாதிபதியான உருத்திரனையும் பூசித்து, அதன் மேல் கர்ணிகையின்மத்தியில் சத்திமண்டலத்தையும் அச்சத்திமண்டலாதிபதியான மகேசுரனையும் பூசித்து, அதன்மேல் சிவாசனமிட்டு அதன்மேல் சிவபெருமானை எழுந்தருளச்செய்து, பூசிக்கவென்று விதிக்கப்பட்டிருக்கின்றது.

### பிரமாணம் சிவபூசையகவல்.

மீதமாகந்தம் பீசமங்குரம்
தன்மைநாளந் தாதுகன்னிகைவிதை
பன்மையுறப்புறு பத்மாசனத்தையுந்
தீமையில்சேசரஞ் செறியிதழெட்டினும்
வாமைமுதலெண்வகைச் சத்திகளுட
னிடமுறுகர்ணிகை யீசானத்திற்
றடமுமேலமனோன்மனி தன்னையுஞ்சாத்தி

யிதழ்நுதிவட்டத் திரவிமண்டலத்தையு
மதனதிபதியா மயனையுஞ்சாத்தி
னுண்டருகேசர நுதியினின்மதியின்
மண்டலந்தன்னொடு மாயனைச்சாத்தித்
தாங்கியகர்ணிகை தருநுதிவட்டத்
தோங்கனன்மண்டலத் துருத்திரன்றனையுந்
தயங்குகர்ணிகைநடுச் சத்திமண்டலத்து
வயங்கதிபதியா மகேசன்றனையுந்
தவாததன்மீதிற் சாத்தியபின்னர்"

என்பதனாலுணர்க. சிவபெருமான் எங்கும் பரிபூர்ணராய் நிறைந்திருக்க ஏகினான் என்றது என்னை? எனில், அடியார்கள் கடவுளை எவ்வடிவமாகப் பாவித்துத் தியானிக்கின்றார்களோ அவ்வடிமாய் அவர்கள்மனத்திற்போய்த் தோற்றி நிற்கிறதியல்பாம். இதற்குப் பிரமாணம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், திருப்பெரெயில்
திருக்குறுந்தொகை.

உழைத்துந்துள்ளியு முள்ளத்திலேயுரு
விழைத்துமெந்தை பிரானென்றிராப்பக
லழைக்குமன்பின ராயவடியவர்
பிழைப்புநீக்குவர் பேரெயிலாளரே.

பட்டினத்துப் பிள்ளையார், கோயினான் மணிமாலை,
இணைக்குறளாசிரியப்பா.

உரையின்வரையும் பொருளினளவு
மிருவகைப்பட்ட வெல்லையுங்கடந்து
தம்மையுமறந்து நின்னைநினைப்பவர்
செம்மைமனத்தினுந் தில்லைமன்றினுநட
மாடுமம்பல வாணநீடு.

திருவாசகம், திருப்படை யாட்சி.

பந்தவிகாரகுணங்கள் பறிந்துமறிந்திடுமாகாதே
பாவனையாயகருத்தினில்வந்த பராவமுதாகாதே

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்,
திருக்கற்குடி, திருத்தாண்டகம்.

வானவனை வானவர்க்கு மேலா னானை
வணங்குமடியார்மனத்துண் மருவிப்புக்க
தேனவனைத்தேவர்தொழு கழலான்றன்னைச்
செய்குணங்கள்பலவாகி நின்றவென்றிக்
கோனவனைக்கொல்லைவிடை யேற்றினானைக்
குழன்முழவமியம்பக் கூத்தாடவல்ல
கானவனைக்கற்குடியில் விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணாரக் கண்டேனானே.

திருமாற்பேறு, திருக்குறுந்தொகை.

ஏதுமொன் றுமறிவிலராயினு
மோதியஞ்செழுத்தும்முணர்வார்கட்குப்
பேதமின்றியவரவருள்ளத்தே
மாதுந்தாமுமகிழ்வர்மாற்பேறரே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்,
திருவேகம்பந்திருமேற்றளி, பண்-நட்டராகம்.

நொந்தாவொண்சுடரே நுனையேநினைந்திருந்தேன்
வந்தாய்போயறியாய் மனமேபுகுந்துநின்ற
சிந்தாயெந்தைபிரான் றிருமேற்றளியுறையு
மெந்தாயுன்னையல்லா லினியேத்தமாட்டேனே.

மோரூர்ந்தோரொருகா னினையாதிருந்தாலும்
வேறுவந்தென்னுள்ளம் புகவல்லமெய்ப்பொருளே
சேறூர்தண்கழனித் திருமேற்றளியுறையு
மேறேயுன்னையல்லா லினியேத்தமாட்டேனே.

நானேலுன்னடியே நினைந்தேனினைத்தலுமே
யூனாரிவ்வுடலம்புகுந்தாயென்னொண்சுடரே
தேனேயின்னமுதே திருமேற்றளியுறையுங்
கோனேயுன்னையல்லாற் குளிர்ந்தேத்தமாட்டேனே.

இதனாலு மற்றும் வருவனவற்றாலுங் காண்க. இங்ஙனமாத
லின் மலர்மிசையேகினான் என்பது சிவாகமவிதியாற் செய்ய

ப்படும் பூசையினிடத்துக் கமலாசனத்தில் எழுந்தருளப்படுஞ் சிவபெருமானையே யெனப்புலப்படுகின்றது.

4. வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
யாண்டு மிடும்பை யில.

இதில் வேண்டுதல் வேண்டாமை இலானென்பது பரசிவத்தையே குறித்ததாகத் தெரியவருகிறது. எங்ஙனம்? எனில்.

திருவாசகம், கோயிற்றிருப்பதிகம்.

இன்றெனக்கருளி யிருள்கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறேபோன்று
நின்றநின்றன்மை நினைப்பறநினைந்தே
னீயலாற்பிறிதுமற் றின்மை
சென்றுசென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றாந்
திருப்பெருந்துறையுறை சிவனே
யொன்றுநீயல்லை யன்றியொன் றில்லை
யாருனை யறியகிற்பாரே.

இப்பாசுரத்துள் அடியேனை யாண்டருளிய சிவபெருமானே! உனது சொரூபத்தை உணருமிடத்து, இவ்வுலகத்துள் எதிரிட்டுத்தோற்றப்பட்டவை "ஒன்று நீயல்லை" ஆகவே யெல்லாம் உனக்கன்னியமேயாம். ஆகையால் அவற்றுள் உனக்கு வேண்டாமை ஒன்றில்லை. உலகு உனக்கு அன்னியப்பொருளோ? எனின், "அன்றியொன்றில்லை" நின்னையன்றிச் செகத்துவேறின்றென்றால் உனக்கு அவற்றுள் வேண்டுவதொன்றில்லையாம்.

உலகு உனக்கு அன்னியப்பொருளாதலின், உனக்கு வேண்டாமை ஒன்றில்லை எனக்கூறியவாற்றால், எல்லாம் உனக்கு வேண்டும் பொருளே எனமுடியுமே; அங்ஙனம் வேண்டுதலில்லை என்னு முடிபு ஒழிந்ததே என்னில், அற்றன்று, சிவபெருமானுக்கு வேண்டுகையுளதெனினும் அது தன்பயனைக்குறித்தோ பிறர்பயனைக்குறித்தோ அவபயனைச்குறித்தோ என வினுமிடத்து ஆங்கு,

1. தன்பயனெனில், இடர்நீங்கல் சுகமடைதல் புகழடைதற்காகவெனக்கொள்ளவேண்டும். சிவபெருமான் நிர்மலனாதலால் அவனுக்கு இடரொன்றின்றாம். அவன் ஆனந்தமயனாதலால் அவன் சுகமடைதலின்றாம். அவனுக்கு ஒப்புயர்வு ஒன்றுமில்லையாதலின் அவன் புகழடைதலின்றாம்.

2. பிறர்பயனைக்கருதி வேண்டுவனெனில் அது அருளைக்கருதியதாம். ஆகையால் அது வேண்டுதலும் வேண்டாமையுமாகும்.

3. உபயபயனைக் குறித்து வேண்டினானெனில் அதுவிளையாட்டாயொழியும்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்,
திருமாற்பேறு, திருத்தாண்டகம்.

மலைமகடங்கோனவனைமாசீர்முத்தை மரகதத்தைமாமணியைமல்குசெல்வக், 'கலைநிலவுகையனைக்கம்பன்றன்னைக் காண்பினியசெழுஞ்சுடரைக் கனகக்குன்றை, விலைபெரியவெண்ணீற்று மேனியானை "மெய்யடியார்வேண்டியதேவேண்டுவானைச்", சிலைநிலவுகரத்தானைத்திருமாற்பேற்றெஞ் செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனானே.

என அடியார்நிமித்தம் வேண்டல்கூறியதேயன்றித் தனக்கெனவேண்டுதல் கூறாமையால் அவ்வேண்டுதலுபசாரமேயாம்.

நலமிலன்்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்.

என்பது திருவருட்பயன். இதனால் தன்னை வந்தடைந்தவர்கள் நற்கதியடைதலின் அவர்களுக்குச் சிவபெருமான் நல்லவனாவன். தன்னை வந்தடையாதார் பயனடைதலின்மையின் நல்லவன் அல்லனாவன். ஆகவே தன்னையடைந்தவரிடத்துவிருப்பமும் அடையாதவரிடத்து வெறுப்பும் உடையவனாகிறானே?எனின், அற்றன்றாம். பனியினாலும் மழையினாலும் குளிரடைந்தவ

ர்கள் சூரியன் சந்நிதியில் வந்தமாத்திரம் குளிரொழிந்து சுகமடைகிறார்கள். அடையாதார் குளிர்நோயால் வருந்துவார்கள். ஆதலால் தன்னை வந்தடைந்தவரிடத்து விருப்பும் அடையாதாரிடத்து வெறுப்பும் சூரியனுக்கு இன்றாம். அதுபோலச்சிவபெருமானுக்கு விருப்பும் வெறுப்பும். இல்லையாம்."சலமிலன்" வயிரமில்லாதவன் "பெயர் சங்கரன" அவன்பெயர் சங்கரனும். சங்கரன், சம்=சுகம், கரன்=செய்பவன், எனவே அவன் சுகத்தைக்கொடுப்பவன் என்பது பொருளாம்.

சிவபெருமான் றன்னைக் கல்லாலும் வில்லாலும் பிரம்பாலு மடித்தவர்களுக்கும், நன்மலருஞ் சொன்மலருங்கொண்டு பூசித்தவர்களுக்கும் பேதமின்றிக் கிருபைசெய்திருக்கிறார். பிரமாணம்.

தாயுமானவர்.

கல்லாலெறிந்துங்கை வில்லாலடித்துங்கனிமதுரச்
சொல்லாற்றுதித்துநற் பச்சிலைதூவியுந்தொண்டரினம்
மெல்லாம்பிழைத்தன ரன்பற்றநானினியேதுசெய்வேன்
கொல்லாவிரதியர் நேர்நின்றமுக்கட்குருமணியே.

இனி, அவர் பொதுவினில் நடனம் புரிகிறவராதலால், அவருக்குத் தம்மவரென்றும் தமக்கன்னியரென்றும் பேதமில்லையாம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமதடியவராயிருந்தும் சத்தியம் தவறியகாலத்து அவருக்குக் கண்ணிழக்கச்செய்தார். இராவணன் திரிபுராதியர் இயமன் தமக்குத் தீங்கிழைத்த காலத்துத் தண்டனையையும், வணங்கியகாலத்து நற்பயனையும் அடையச்செய்தார்.

திருப்பாற்கடல்கடைந்த காலத்து அமுதமுண்டாயிற்று தேவர்களெல்லாம் அதை விரும்பினார்கள். விஷம் பிறந்தகாலத்து எல்லாரும் அதை வெறுத்தார்கள். சிவபெருமானோவெனில், அமுதம் வந்தகாலத்து விரும்பவுமில்லை. விஷம்வந்தகாலத்து வெறுக்கவுமில்லை. அதனால் சிவபெருமானே வேண்டுதல்

வேண்டாமை யிலாதவன் எனத்தேற்றமாதலின், பரசிவவாழ்த்தெனக்கூறுது கடவுள் வாழ்த்தெனப் பொதுப்படக் கூறினர்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்,
திரு - ஆவடுதுறைத் திருத்தாண்டகம்.

வேண்டாமைவேண்டுவது மில்லான்றன்னை
விசயனைமுன்னசைவித்த வேடன்றன்னைத்
தூண்டாமைச்சுடர்விடு நற்சோதியானைச்
சூலப்படையானைக் காலன்வாணு
மாண்டோடவுதைசெய்த மைந்தன்றன்னை
மண்ணவரும்விண்ணவரும் வணங்கியேத்து
மாண்டானையாவடுதண் டுறையுண்மேய
வரனடியேயடிநா யேனடைந்துய்ந்தேனே,

இதனுல் வேண்டுதல் வேண்டாமையிலாதவன் சிவபெருமானென்பதைத் தெள்ளிதிற் காண்க.

5. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

10. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.

இவ்விரண்டு குறள்களிலுங் கடவுளை இறைவனெக்கூறினர். இறைவன் என்பது சிவபெருமானுக்கே உரியதென்பதற்குப் பிரமாணம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்,
திருப்புகலியுந் திருவீழிமிழலையும், விணுவுரை,

பண்-நட்ட பாஷை.

கன்னியராடல்கலந்துமிக்க கந்துகவாடைகலந்துதங்கப்
பொன்னியன்மாடநெருங்குசெல்வப் புகலிநிலாவியபுண்ணியனே

யின்னிசையாழ்மொழியாளோர்பாகத் தெம்மிறையேயிதுவென்கொ [ல்சொல்லாய்
மின்னியனுண்ணிடையார்மிழலை விண்ணிழிகோயில்விரும்பியதே.

நாகபணந்திகழல்குன்மல்கு நன்னுதன்மான்விழிமங்கையோடும்
பூகவனம்பொழில்சூழ்ந்தவந்தண் புகலிநிலாவியபுண்ணியனே [லாய்
யேகபெருந்தகையாயபெம்மா னெம்மிறையேயிதுவென்கொல்சொல்
மேகமுரிஞ்செயில்சூழ்மிழலை விண்ணிழிகோயில்விரும்பியதே.

இப்பதிகம் முழுதும் சிவபெருமானுக்கு இறையெனக் கூறப்பட்டிருக்கின்றதனானும்,

பட்டினத்தார், ஏகம்பமாலை.

நன்னாரிற்பூட்டியசூத்திரப்பாவை நன்னார்தப்பினாற்,
றன்னாலுமாடிச்சலித்திடுமோ வந்ததன்மையைப்போ
லுன்னாலியானுந்திரிவதல்லான் மற்றுனைப்பிரிந்தா
லென்னாலிங்காவதுண்டோ விறைவாகச்சியேகம்பனே.

நல்லாரிணக்கமுநின்பூசை நேசமுஞானமுமே
யல்லாதுவேறுநிலையுளதோ வகமும்பொருளு
மில்லாளுஞ்சுற்றமுமைந்தரும்வாழ்வு மெழிலுடம்பு
மெல்லாமவெளிமயக்கே யிறைவாகச்சியேகம்பனே.

இம்மாலை முழுதுஞ் சிவபெருமானை இறைவனெனக் கூறப்படுகின்றதனாலும் பின்னும்,

எளியேமுக்குறவனீ யாவர்க்குமிறைவனீ
யளியோடுகாப்பவனீ யறவாழியந்தணனீ
முழுமதியார்சுந்தரனீ முன்னமுன்னச்சுவைப்பவனீ
கெழுமுமையாள்பாகனீ கெடுவில்வெண்காடுடையவனீ.

இப்பாசுரத்தால் மக்களுக்கும் பிரம விஷ்ணுவாதி தேவர்களுக்கும் சிவபெருமானே இறைவனெனக் கூறப்படுகின்றதனானும்,

பட்டினத்தார் திருவொற்றியூர்த்தொகை.

“ தூமதிசடைமிசைச் சூடேறூநெறி
யாமதியானென வமைத்தவாறே

யறனுருவாகிய வானேறேறுத
விறைவன்யானென வியற்றுமாறே."

என்பதனானும், இறைவனென்பது பொதுவகையானுஞ் சிறப்பு வகையானுஞ் சிவபிரானையே யுணர்த்துமாறுகாண்க. இக்குற ளில் இறைவனது பொருள்சேர் புகழ்புரிதலாவது ஆரியவே தம், திராவிடங்களோதலெனக்கொள்க. இதனால் அவ்விரு வகை வேதமுமோதுபவரிடத்து இருவினை யடையாவாம். இதற்குப் பிரமாணம்.

—— திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்,
பாவநாசத்திருக்குறுந்தொகை.

கூடவேடத்தராகிக் குழுவிலென்
வாடியூனை வருத்தித்திரியிலென்
ஞடல்வேடத்த னம்பலக்கூத்தனைப்
பாடலாளர்க்கலாற் பயனில்லையே.

எனவருந் தேவாரத்தானுங்காண்க இதுகாறும் இறைவன் சிவ பெருமானென்பதற்குக் கூறிய பிரமாணமெல்லாம் சைவசம யத்தார் கூறுங் கூற்றாதலிற் பொருந்தா எனின்,

இறைசிவன்கடன்வேந்தன்கை யிறையுறுப்பிறைசிறந்தோன்
சிறுமைபுள்விறகுதங்கல் சென்னிகூனிறப்பீராறே
யுறையுளென்பதுநாடோறா முறுதியேநன்மைகல்வி
பொறைபலதுறுகல்பாரம் பொறைசுமைசருப்பம்பூமி.

எனப் புறச்சமயிகளாகிய சமணர்களுள் மண்டலபுருடனாற் செய்யப்பட்ட பதினோராவது நிகண்டில் இறை ஏனைய கடவுளரு க்குச் செல்லுமென்பதையொழித்துச் சிவபெருமானுக்கே உரியதெனக்கூறியிருத்தலே பெரியபிரமாணமாகக் கொள்க.

இன்னும் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் இறைவன் என்னும் பதத்திற்கு இறு-தங்கு எனத்தாதுப்பொரு ள்கூறிச் சடசித்துப் பிரபஞ்சமனைத்துந்தங்கும் சிவபெருமா

னுக்கே இப்பெயர் பொருந்துமென்னுங் கருத்தால், இறைவ னென வருமிடந்தோறும் சிவபெருமானெனக் கண்ணழித்த ருளினர். அன்றியும், இறையனாகப்பொருள், திருவள்ளுவமா லையில் இறையனார்பாட்டு என்னுமிடங்களில், இறைவன் என் னும்பதம் காரணவிடுகுறியாய்ச் சிவபெருமானுக்கே செல்லு தலறிக.

6. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

சிவபெருமானுக்குச் சனனமரணமில்லையாதலின் மாயாதநு ஒன்றுமில்லை, ஆகவே பொறிவாயிலைந்தவித்தான் என்பது அவருக்கே யுரியதாம். அங்ஙனமாயாதநு இல்லையேல், பஞ் சகிருத்தியம் எங்ஙனம் நடக்கும்? எனின் நடக்குமென்பதற் குப்பிரமாணம்.

இலிங்கபுராணம், திரிபுரமெரித்தவத்தியாயம்.

காலின்றிநடந்துமுறுகையின்றிக்கவர்ந்துமலர்
போலும்விழியின்றியரும்பொருள்களனைத்துங்கண்டுமிக
வேலுஞ்செவியின்றியக்கேட்டும்வாயின்றிகியம்பியுஞ்சீர்
சாலவுறையுந்தனிச்சுடரேதலைவாநின்னைத்தொழுதோமே.

எனவரும் இச்செய்யுளானுணர்க.

அங்ஙனம் மாயாதநுவில்லாதிருக்கவும், ஆன்மாக்கள் தி ருவடி வந்தடையும்பொருட்டுச்சிவபெருமான் தட்சணாமூர்த் தியாகி, சனகாதி நால்வருக்கும் சரியை கிரியை யோகம் ஞா னங்களாகிய சதுஷ்பாத முக்தி மார்க்கங்களை யனுக்கிரகித்த ருளினர், அவர்களுக்கு உணர்த்துமுறையில், நாம் பொறிவா யிலைந்தவித்தானாகி யிருக்கிறோம், நீங்களும் மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம்பொறிகளை வழிகளாக வுடைய சத்த பரிச ரூப ரச கந்தமென்னும் ஐந்தாசைகளையும், ஒழிப் பீராகில், சிவானுபவம் வெளியாகுமென வநுக்கிரகித்தருளி னர். அதனல் சிவபெருமானுக்கு யோகியென்றும் ஞானி

யென்றும் ஐந்தவித்தானென்றும் பெயர்களாயின. ஐந்தவித்த விடத்துச் சிவாநுபவம் வெளிப்படுமென்பதற்குப் பிரமாணம்.

திருவிளையாடற்புராணம்.

வென்றுளேபுலன்களைந்தார் மெய்யுணருள்ளந்தோறுஞ்
சென்றுளேயமுதமூற்றுந் திருவருள்போற்றியேற்றுக்
குன்றுளேயிருந்துகாட்சி கொடுத்தருள்கோலம்போற்றி
மன்றுளேமாறியாடு மறைச்சிலம்படிகள்போற்றி.

என்பதனாற் காண்க. சிவபெருமான் யோகியென்பதற்குப் பிரமாணம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், கோயிற்றிருநேரிசை,
பண் - கொல்லி.

பத்தனாய்ப்பாடமாட்டேன் பரமனேபரமயோகி
யெத்தினாற்பத்திசெய்கே னென்னைநீயிகழவேண்டா
முத்தனேமுதல்வாதில்லை யம்பலத்தாடுகின்ற
வத்தாவுன்னாடல்காண்பா னடியனேன்வந்தவாறே.

திருஞானசம்பந்தசுவாமிகள், திருவீழிமிழலை,
பண் - மேகராகக்குறிஞ்சி.

அகனமர்ந்தவன்பினராயறுபகைசெற்றைம்புலனுமடக்கிஞானப்
புகலுடைமேலார்தமுள்ளப்புண்டரிகத்துள்ளிருக்கும்புராணர்கோயி
றகவுடைநீர்மணித்தலத்துச்சங்குளவர்க்கந்திகழச்சலசத்தியுண்
மிகவுடையபுன்குமலர்ப்பொரியட்டமணஞ்செய்யுமிழலையாமே.

எனவருவனவற்றாற்காண்க.

பொய்தீரொழுக்கநெறி என்பது என்னையெனின்? சிவபெருமானால் அருளிச்செய்த அறநெறியாம்.

திருவாசகம், திருச்சாழல்.

நன்றாகநால்வர்க்குநான்மறையி னுட்பொருளை
யன்றாலின்கீழிருந்தங் கறமுரைத்தான்காணேடீ
யன்றாலின்கீழிருந்தங் கறமுரைத்தானாயிடினுங்
கொன்றான்காண்புரமூன்றுங் கூட்டோடேசாழலோ.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்,
தொழப்பாலனத் திருக்குறுந்தொகை.

ஆதியானை யமரர்தொழப்படு
நீதியானை நியமநெறிதனை
யோதியானை யுணர்தற்கரியதோர்
சோதியானைக்கண் டீர்தொழப்பாலதே.

மேற்கண்ட பிரமாணங்களால் ஐந்தவித்தானென்பது சிவபெருமானுக்கென்பதே நாயனார் கருத்தென்க.

7. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

இதில் கடவுளைத் தனக்குவமையில்லாதானெனக் கூறினர். இதை விசாரிக்கப்புகின் சிவபெருமானுக்கென்றே சித்தாந்தப்படும்.

தனக்குவமையில்லாதானென்பது ஈசனது எண்குணங்களி லொன்றாகக் குறிக்கப்படுகின்றது; அது ஒன்பதாவது குறளில் விரித்துரைக்கப்பட்டது. ஆங்குணர்க. இன்னும் இதற்குப்பிரமாணம்.

திருநாவுக்கரசு சுவாமிகள், திருவினாத் திருத்தாண்டகம்.

மைப்படிந்தகண்ணாளுந்தானுங்கச்சி மயானத்தான்வார்சடையான் மாசொன்றில்லா,னொப்புடையனல்லனொருவனல்ல னோரூரனல்லனோருவமனில்லி, யப்படியனவ்வுருவனவ்வண்ணத்த னவனருளே கண்ணாகக்காண்பதல்லா, லிப்படியனிவ்வுருவனிவ்வண்ணத்த னிவனிறைவனென்றெழுதிக்காட்டொணாதே.

மாணிக்கவாசக சுவாமிகள், அதிசயப்பத்து.

வைப்புமாடென்றுமாணிக்கத்தொளியென்று மனத்திடையுருகாதே
செப்புநேர்முலைமடவாலியர்தங்க டிறத்திடைநைவேனை
யொப்பிலாதனவுவமனிலிறந்தன வொண்மலர்த்திருப்பாதத்
தப்பனாண்டுதன்னடியரிற்கூட்டிய வதிசயங்கண்டாமே.

எனவருவனவற்றாலுணர்க.

ஒவ்வொரு மதசித்தாந்திகளும் தத்தங்கடவுளர்க்கு ஒப்பிலாதவனெனக் கூறியிருப்ப நீர் சிவபெருமானுக்கே ஒப்பிலி எனப் பிரமாணிப்பதை எங்ஙனம் சித்தாந்தப்படுத்தக்கூடும்? எனின், அக்கடவுளர்க்கெல்லாம் சனன மரணமுண்டாயிருப்பதானும், சிவபெருமானுக் கஃதின்மையானும், ஒப்பில்லாதவன் எனக்கூறப்பட்டது. இதன் விரிவை இரண்டாங்குறளில் கண்டுணர்க.

அங்ஙனமாயின்,பிறமதத்தாருந் தத்தங்கடவுளை ஒப்பிலி எனக்கூறுங் கூற்றுப் பொய்யோவெனின்? அது உபசாரவழக்கே எனக்கொள்க.

8. அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

இதில் கடவுளை அறவாழியந்தணன் என்றார். அறம்=தருமம், ஆழி=கடல், அந்தணன்=கடவுள், எனவே தருமக்கடலாகிய கடவுளென்பது பொருளாம். இது சிவபெருமானையே குறித்ததாம். எங்ஙனமெனில்?

பட்டினத்துப்பிள்ளையார்.

எளியேமுக்குறவுநீ யாவர்க்குமிறைவனீ
யளியோடுகோப்பவனீ யறவாழியந்தணனீ
முழுமதியிற்சுந்தரனீ முன்னமுன்னச்சுவைப்பவனீ
செழுமுமையாள்பாகனீ கெடுவில்வெண்காடுடையவனீ.

என்பதனுற்காண்க.

தருமக்கடவுளெனக்கூறுது தருமக்கடலாகிய கடவுள் எனக்கூறுவானேன்?எனின், அக்கடவுளினது தருமத்தை எடுத்துக்கூறின் அளவைக் கெட்டாதெனத் தோன்றக் கூறியதாம். அங்ஙனமாயின் அவற்றுள் ஒன்றையெடுத்து விளங்கக் காட்டவேண்டுமென்னின், ஆணவமலத்திற் கட்டுண்டுகிடக்கும் ஆன்மாக்களைச் சிவபெருமான் தனது காருண்யத்தால்

அவைகளுக்குத் தனுகரண புவன போகங்களையளித்து, இருவினை யொப்பு மலபரிபாகம் வருவித்துத், தமது திருவடியிற் கூட்டுவதேயாம்.

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

என்று நாயனூர் கூறியபடி இச்சிவபெருமான் செய்த வுதவிக்கு ஆன்மாக்கள் என்ன பிரதி உபகாரஞ் செய்யப்போகிறூர்கள். இத்தருமத்தைவிட மேலான தருமம் ஒன்றுளதோ? உண்டாயின் எடுத்துக்காட்டுக இனி, சிறியதருமங்கள் சிலவற்றை யெடுத்துக்காட்டுதும். வியாக்கிரபாதரிஷியின் குழந்தை உபமன்னியர் பாலில்லாமல் பசி மிகுதியாலழ, அக்குழந்தையுண்ணும்படி திருப்பாற்கடலைக் கொடுத்தருளினூர்.

வில்வத்தைப்பறித்தெறிந்த குரங்கை முசுகுந்தச் சக்கரவர்த்தி யாக்கினூர். தீபத்தைத் தூண்டின எலியை மாபலிச் சக்கரவர்த்தியாக்கி யருளினூர். இஃதன்றியும்.

பட்டினத்துப்பிள்ளையார், கோயினான்மணிமாலை.

சதுர்முகன்றந்தைக்குக் கதிர்விடுகடவு
ளாழிகொடுத்த பேரருள்போற்றி
முயற்சியொடுபணிந்த வியக்கர்கோனுக்கு
மாநிதியிரண்டு மானப்பெருவளத்
தளகையொன்றுந் தளர்வின்றிநிறுவிய
செல்வங்கொடுத்த செல்வம்போற்றி
தாணிழலடைந்த மாணிக்காக
நான்முறைபிறழாது கோன்முறைவலித்துப்
பதைத்துவருங்கூற்றைப் படிமிசைத்தெறிக்க
வுதைத்துயிரளித்த வுதவிபோற்றி
குலைகுலைகுலைந்த நிலையாத்தேவர்
படுபேரவல மிடையின்றிவிலக்கிக்
கடல்விடமருந்தின கருணைபோற்றி.

இவைபோல்வன பலவுள. இவைநிற்க,

இனி,சிவபெருமா னிருப்பிடமோவெனின் தருமத்தின்மீ தாம். அஃதெங்ஙனமெனின்? தருமதேவதையானது இடபரூபமாயிருக்குமென்றும், அதுகிரேதாயுகத்தில் 4-பாதத்தானும், திரேதாயுகத்தில் 3-பாதத்தானும், துவாபரயுகத்தில் 2-பாதத்தானும், கலியுகத்தில் 1-பாதத்தானும் நடக்குமென்றும், தருமசாத்திரங்களிற் கூறப்படுகின்றன. அவ்விடபத்தின்மீது சிவபெருமான் வீற்றிருக்கிறார். அதனாலன்றோ சிவபெருமானுக்குப் பலவாகனங்களிருக்கவும் இடபவாகனஞ்சிறந்ததென்றும், அதை எல்லாரும் முக்கியமாகத் தெரிசிக்கவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. இதைத்தெரிசிப்பின் என்னபயனெனில்? சிவபெருமான் தருமத்தின்மீதிருப்பதால் அவரது திருவடி யடையவிரும்புவோரும் தருமவழியிலேயே நடக்கவேண்டுமென்பதை யுணர்த்துவது. அறஞ்செயவிரும்பு என்பதும், தருமமே செயமென்று கூறுவது மிதுபற்றியேயாம். இடபவாகனந்தருமசொரூப மென்பதற்குப் பிரமாணம்.

திருவிளையாடற் புராணம், திருமணப்படலம்.

உடையானடி தாழ்ந்திவை யோதலுமோதநீத்தச்
சடையானிளவாணகைசெய்து "தருமச்செங்கண்
விடையான்"சிலையானிகல் வென்றிவிளைக்குந்தெய்வப்
படையானெழுந்தானமராடிய பாரிற்சென்றான்.

பட்டினத்தார் திருவொற்றியூர்த்தொகை.

அறனுருவாகிய வானேறேறுத
லிறைவன் யானென வியற்றுமாறே.

என்பனவற்றாற் காண்க. சிவபெருமான் தருமசொரூபி என்பதற்குப் பிரமாணம்.

திருவிளையாடற் புராணம், மூர்த்திவிசேடம்.

திறப்படுமுலகமெங்கும் வியாபியாய்ச்சிறந்துநிற்கு
"மறப்பெருங்கடவுள்" சோமசுந்தரனதனாலன்றோ
சுறைக்கதிர்வடிவேற்றென்னன் கையிற்பொற்பிரம்புபட்ட
புறத்தடித்தழும்புமூன்று புவனமும்பட்டதன்றே.

"அறவுருவனுலவாயா"னுமஞ் செவிமடுத்தாலடைந்தபத்துப் பிறவிவினையறுநினைந்தானூறுபெரும் பவப்பாவப்பிணிபோங்கூட, விறைவனையின்றிறைஞ்சுதுமென்றெழுந்துமனைப் புறம்போந்தாலீ ரைஞ்ஞூறு, மறமுறுவெம்பவத்திழைத்த பாதகவல்வினையனைத்து மாயுமன்னே.

எனவருவனவற்றுற் காண்க. அவரது பாகத்திருக்கும் உமா தேவியாருந் தருமசொரூபி என்பதற்குப் பிரமாணம்.

திருவிளையாடற் புராணம், திருநாவுக்கரசு சுவாமிகள் துதி.

"அறப்பெருஞ்செல்வி"பாகத் தண்ணலஞ்செழுத்தாலஞ்சா
மறப்பெருஞ்செய்கைமாறு வஞ்சகரிட்டநீல
நிறப்பெருங்கடலும்யார்க்கு நீந்துதற்கரியவேழு
பிறப்பெனுங்கடலுநீத்த பிரானடிவணக்கஞ்செய்வாம்.

என்பதனுலறிக. இன்னும், உமாதேவியார் காஞ்சியில் எழுந்தருளி 32-தருமங்களையும் வளர்த்தாரென்பதைக் காஞ்சிப் புராணத்தில் கண்டுணர்க.

சகல உயிர்களையுங்கொன்றெழிக்கும் சம்மாரகர்த்தனை மறப்பெருங் கடவுளென்னது அறப்பெருங்கடவுளென்னலாமோ? வெனின் அற்றன்று சீவர்களைச் சங்கரிப்பது அவர்களிடத்துத் திவேஷங்கொண்டு செய்வதன்றும். பொன்னைப் புடம்போடுவதெல்லாம் மாற்றுயர்த்தித் தங்கமாக்குதற்காம். அதுபோலச், சகசமலத்தி லழுந்திக்கிடக்குஞ் சீவர்களை அம்மலமொழித்துச் சுத்தான்மாவாக்குநிமித்தம் இருவினைக்கீடாக அவர்களுக்குத் தேகங்களை மாற்றுவதாம். இது அவ்வான்மாக்களினிடத்துவைத்த காருண்யத்தால் செய்வதாம்.

திருவாசகம், அதிசயப்பத்து.

நீக்கிமுன்னெனைத்தன்னொடுநிலாவகைகுரம்பையிற்புகப்பெய்து
நோக்கிநுண்ணியநொடியனசொற்செய்து நுகமின்றிவிளாக்கைத்துத்
தூக்கிமுன்செய்தபொய்யறத்துகளறுத்தெழுதருசுடர்ச்சோதி
யாக்கியாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே.

என்பதனுற்காண்க. இதுநிற்க,

திருவாசகம், திருவண்டப்பகுதி.

படைப்போற்படைக்கும் பழையோன்படைத்தவை
காப்போற்காக்குங் கடவுள்காப்பவை
கரப்போன்கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள்.

இதனால் சீவர்களைக் கொல்லவேண்டுமென்பதவன் கருத்தன்றாம்; கருணைபற்றிச்செய்யுங் கிருத்தியமாதலின் அறப்பெருங் கடவுளேயன்றி மறப்பெருங்கடவுளென்பது பொருந்தாதாம். இனி, சிவபெருமானடியார்களும் தருமசொரூபிகளாம். இதற்குப்பிரமாணம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்,
திருமறுமாற்றத் திருத்தாண்டகம்.

என்றுநாமியாவர்க்குமிடைவோமல்லோ மிருநிலத்திலெமக்கெதிராவாருமில்லைச், சென்றுநாஞ்சிறுதெய்வஞ் சேர்வோமல்லோஞ் சிவபெருமான் றிருவடியேசேரப்பெற்றோம், மொன்றினாற்குறையுடையோமல்லோமன்றே யுறுபிணியார்செறலொழித்திட் டோடிப்போனார், பொன்றினார்தலைமாலை யணிந்தசென்னிப் புண்ணியனை நண்ணிய புண்ணியத்துளோமே.

என்பதனாலுணர்க.

ஆகையால் நாயனார் அறவாழியந்தணன் என்றது சிவபெருமானையே குறித்ததென்க. இத்திருநாமம் வேறு தேவர்களின்மேலேற்றப்பொருந்தாதாம். அறவாழிக் கடவுளென்னாது அறவாழி அந்தணன் என்றது என்னை யெனின்?

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

என நாயனார் கூறியபடி, சீவர்களிடத்துக் கருணையுடையவன் என்பதற்கென்க. இவன் கருணையுடையானென்பதற்குப் பிரமாணம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்,
திருவையாறு-திருத்தாண்டகம்.

பெண்ணாண்பிறப்பிலியாய்நின்றாய்நீயே பெரியார்கட்கெல்லாம் பெரியாய்நீயே, யுண்ணாவருநஞ்சமுண்டாய்நீயே யூழிமுதல்வனாய் நின்றாய்நீயே, "கண்ணாயுலகெலாங்காத்தாய்நீயே" கழற்சேவடியென்மேல்வைத்தாய்நீயே, திண்ணார்மழுவாட்படையாய்நீயேதிருவையாறகலாதசெம்பொற்சோதி.

திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்,
திருநெல்விக்கா, பண்-இந்தளம்.

"அறத்தாலுயிர்காவ லமர்ந்தருளி"
மறத்தான்மதின்மூன் றுடன் மாண்பழித்த
திறத்தாற்றெரிவெய்தியதீவெண்டிங்க
ணிறத்தானெல்விக்காவுணிலாயவனே.

என்பனவற்றாற் காண்க.

இன்னும் அந்தணன் என்பதை, இரட்டுறமொழிதலென்னும் யுத்தியால் வருணத்தின்மேலேற்றின், தேவர்களுள் சிவன் விஷ்ணு பிரமன் இந்திரன், இவர்கள் முறையே பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களெனக்கூறப்படுகின்றனர். ஆதலால் அந்தணன் என்பது சிவபெருமானுக்கே யுரியதாகலின் நாயனார் அறவாழி அந்தணன் என்றாரெனக்கொள்க. இதற்குப் பிரமாணம்.

ப்ராஹ்மணோ பகவாந்ருத்ரோ க்ஷத்ரியோ பரமோ ஹரி: | வைஸ்ய: பிதாமஹஸ்சைவ இந்த்ரஸ்ஸூத்ர ஜாயதே ||

బ్రాహ్మణో భగవాన్ రుద్రో క్షత్రియో పరమో హరిః |
వైశ్యః పితామహశ్చైవ ఇంద్రశ్శూద్రఅజాయతే ॥

பிராஹ்மணோபகவான்ருத்ரோ க்ஷத்திரியோபரமோஹரி:
வைஸ்யபிதாமகச்சைவ இந்திரஸ்சஸூத்திர அஜாயதே.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்,
சித்தத்தொகை, திருக்குறுந்தொகை.

ஐயன் "அந்தணன்" ஆணொடுபெண்ணுமாய்
மெய்யன்மேதகு வெண்பொடிபூசிய
மைகொள்கண்டத்தன் மான்மறிக்கையினன்
பைகொள்பாம்பரை யார்த்தபரமனே.

திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்,
திருப்புள்ளிருக்கும் வேளூர், பண்-சீகாமரம்.

தையலாளொருபாகஞ் சடைமேலாளவளோடு
மையநீர்ந்துழல்வானே "ரந்தணனு"ருறையுமிட
மெய்சொல்லாவிராவணனை மேலோடியீடழித்துப்
பொய்சொல்லாதுயிர்போனான் புள்ளிருக்கும்வேளூரே.

என வருவனவற்றாற் காண்க.

9. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

இதில், கூறப்படும் எண்குணங்களாவன. தன்வயத்தனாதல் தூயவுடம்பினனாதல் இயற்கை யுணர்வினனாதல் முற்றுணர்தல் இயல்பாகவே பாசங்களினீங்குதல் பேரருளுடைமை முடிவிலாற்றலுடைமை வரம்பிலின்பமுடைமை ஆகிய இவை எட்டுமாம். இவ் எட்டும் சிவபெருமானுக்கு ஆகமங்களில் எடுத்துக்கூறப்படுதலின், எண்குணத்தானென நாயனார் கூறுங் கூற்று, சிவபெருமானையே குறித்ததெனக்கொள்க. இன்னும் சிவபெருமானுக்கு எண்குணங்கள் வேறுவிதமாகவுங் கூறப்பட்டுள்ளன. அவை வருமாறு, பிறப்பின்மை இறப்பின்மை பற்றின்மை பெயரின்மை உவமையின்மை வினையின்மை குறைவிலறிவுடைமை கோத்திரமின்மை என்பனவாம் பின்வரும் பிங்கலந்தைச் சூத்திரத்திற் காண்க.

பவமின்மையிறவின்மை பற்றின்மைபெயரின்மை
யுவமையின்மை யொருவினையின்மை
குறைவிலறிவுடைமை கோத்திரமின்மையென்
றிறைவனிடத்தி லெண்குணமிவையே.

இன்னும் சிவபெருமான் எண்குணத்தானென்பதற்குப் பிரமாணம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்,
விடந்தீர்த்த திருப்பதிகம், பண் - இந்தளம்.

எட்டுக்கொலாமவரீறில்பெருங்குண
மெட்டுக்கொலாமவர்சூடுமினமல
ரெட்டுக்கொலாமவர்தோளிணையாவன
வெட்டுக்கொலாந்திசையாக்கினதாமே.

பிங்கலந்தையார் வானவர்வகை, சிவன்பெயர்,

அறன்சிவனரூபி யனந்தருத்திரன்
பரன்கறைமிடற்றோன் பார்ப்பதிகொழுநன்
காலகாலன் பசுபதிகண்ணுத
றுணுமெண்குணன் சங்கரனந்தி.

எனவருவனவற்றுற்காண்க. எண்குணக்கடவுளாகிய சிவபெருமான் அடியாரும் எண்குணத்தராவர். இதற்குப் பிர்மாணம்.

திருநாவுக்கரசு சுவாமிகள், திருமாற்றுத் திருத்தாண்டகம்.

நாவாரநம்பனையேபாடப்பெற்றோ நாணற்றார்நள்ளாமே விள்ளப்பெற்றோ, மாவாவென்றெமையாள்வா னமரர்நாதனயனொடுமாற் கறிவரியவனலாய்நீண்ட, தேவாதிதேவன்சிவனென்சிந்தை சேர்ந்திருந்தான் றென்றிசைக்கோன்றானே வந்து, கோவாடிக்குற்றேவல் செய்கென்றாலுங் குணமாகக்கொள்ளோமெண்குணத்துளோமே.

என்பதனாலுணர்க. ஆதலால் இப்பத்துத் திருக்குறளிலுங் கூறியவெல்லாஞ் சிவபிரானையே குறிக்கப்பட்டிருத்தலின், கடவுள்வாழ்த்துப் பரசிவ வணக்கமெனச் சித்தாந்தமாயிற்று.

## 2-ம் அதிகாரம் வான்சிறப்பு.

### பராசத்தி வணக்கம்.

கடவுள் வாழ்த்தை மேற்கண்ட பிரமாணங்களால் பரசிவ வணக்கமெனக்கொள்ளப் பொருந்துமாயினும், வான்சிறப்பை எங்ஙனம் பராசத்திவணக்கமெனக் கொள்ளலாமெனின்?

தாயானவள் தானீன்ற சிசுவுக்குப் பசிக்காலமறிந்துபால் கொடுத்து வளர்ப்பதுபோல, சிவத்தை விட்டு நீங்காவருட் சத்திவடிவாகிய மேகங்கள் வானத்தினின்றும் அமுத தாரைகளைப்பொழிந்து உலகுயிர்களைப் பருவமறிந்து ஊட்டி வளர்க்கின்றன. இதனால் தமிழ்வேதஞ் செய்யவந்த நாயனார் தமது நான்முகத்து, உருவாகிய உலகினைக்கொண்டு, அருவாகிய சிவபெருமானை வெளிப்படுத்தியதுபோல, உருவாகிய மழைத்தாரையைக்கொண்டு, அருவாகிய சத்தியை வெளிப்படுத்துவதற்கு வான்சிறப்பெனக் கடவுள் வாழ்த்தின் பின் வைத்தருளினார்.

திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்குத் தேவியார் அன்றருளிய ஞானப்பாலானது அறிவினைமாத்திரம் வளர்க்கும். அதுவும் ஏகதேசத்தில் ஓரான்மாவுக்குதவியதாம். இவ்வானப்பாலான மழைத்தாரைகள், "அண்டசராசரங்களிலுள்ள வுயிரனைத்தையும் வளர்ப்பதால், நாயனார் மழையை அமுதமெனக் கூறியருளினார். பிரமாணம்,

> வானின் றுலகம் வழங்கி வருதலாற்
> றானமிழ்த மென் றுணரற் பாற்று.

எனக்கூறியதனாற் காண்க.

இதுவன்றியும் மழையின்றித் தேவர்களுக்கும் பூசை நடவாதென,

> சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
> வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. எனவும்,

மழையின்றி அந்தணர் துறவியர்கள் தவ நிலைமை நடவாதென,

> தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
> வானம் வழங்கா தெனின். எனவும்,

மழையின்றி அரசன் உலகிலுள்ளமாக்களை ஒழுக்கந்தவறாது நிறுத்தமுடியாதென,

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. எனவும்,

மழையின்றி வைசியர் உழவுதொழில் நடத்தாரென

ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். எனவும்,

மழைபெய்யாது பொய்ப்பின் எல்லாவுயிர்களும் பசியினால் வருந்துமென

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி. எனவும்,

கூறியருளினர். ஆகையால் பராசத்தியைப்போல, மழையின்றி உலகத்தோற்றமின்மையால், அதைவான்சிறப்பென இரண்டாமதிகாரத்துள் ஓதியருளினர்.

3-ஆம் அதிகாரம், நீத்தார் பெருமை.

அந்தணர் சிறப்புத் தருமம்.

நீத்தார் என்பது துறந்தவர்களன்றோ? அவரைப் புத்திர மித்திர களத்திராதிகளுடன் கூடிவாழும் அந்தணரென்பதெவ்வாறுமெனின்? இவ்வதிகாரத்தில்,

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும் பாளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

என நாயனர் அகலியையோடுங் கூடிவாழ்ந்த கௌதமரை நீத்தாரெனக் கூறியிருத்தலாலென்க. இனி, வசிட்டர் விசுவாமித்திரர் அகத்தியர் முதலிய ரிஷிகளும், களத்திர புத்திராதிகளுடையராதலாலும், பஞ்சேந்திரிய நிக்கிரகஞ்செய்த தவசிரேட்டராதலாலும், வேத வித்துக்களாதலாலும், அந்தணரைக் கூறவந்த நாயனர், அவர்களுக்கு மூலபுருடராயுள்ள முனிவரைக்கூறி, அவர்கள் வழிவந்த அந்தணர்களுக்கு உபலக்கணத்தால் பொருந்துமாறு நீத்தார்பெருமையெனக் கூறினர்.

நீத்தார் அந்தணரென்பதனைச் சூடாமணிநிகண்டு மக்கட்பெயர்த் தொகுதியில்,

துறவர்சார்பிலோர்நீத்தோர் தூய்த்தவர் முனைவர்மெய்ய
ரறவர்மாதவர்கடிந்தோரந்தணரடிகளைய
ருறுவர்தாபதர்விளங்குமிருடிகளுயர்ந்தோர்யோக
ரறிஞர்பண்ணவர்சிறந்தவருந்தவர் முனிவராமே.

எனக்கூறப்படுவதாலுணர்க.

இவ்விடத்து நாயனார் காரியமாகிய உலகினைக்கொண்டு காரணனாகிய கடவுளை வெளிப்படுத்தினராதலின், அவர் சைவசித்தாந்தத்திற்கு மாறுபட்டவரல்லராம். ஆகவே உலகிலுள்ள ஆன்மாக்களைப் பதப்படுத்தும்பொருட்டுக்கடவுளையும், கடவுளை வழிபடுதற்கேதுவாகிய அறங்களையும், உலகத்துக்கு உள்ளவாறு அறிவிப்பவர்கள் இருடியர்களும் அவர்வழிவந்தார்களாகிய அந்தணர்களுமாதலின் நீத்தார் அந்தணரே என்பது அவர்கருத்தாம்.

கடவுள் எங்குள்ளார்? எனின் தருமத்தின்மீதுள்ளார் என்பதுதோன்றச் சிவபெருமான் தருமவிடை என்கிற இடபவாகனத்தின்மீது ஆரோகணித்திருப்பதே காட்சியளவையாம். இதனால் கடவுளை வழிபடுதற்கு அறனே முக்கியகருவியாம்.

ஆதலால் உலகினைக்காப்பவர் அரசரென்றதுபோல, அறத்தினைக்காப்பவர் அந்தணர் என்பதுதோன்ற,

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

என்று விளங்க வுரைத்தருளினர்.

இங்ஙனம் அறத்தினைக் காப்பவரென்றதற்கு அறத்தினைக் கூறும் வேதத்தைக் காப்பவரென்பது பொருளாம். ஆதலால் அந்தணர் வேதத்தை எக்காலத்தும் தாம் ஓதியுணர்தலுடன்

பிறர்க்கு ஓதுவித்தலும் வேண்டும். அரசன் முதலியோரையும் அறனெறியில் நிறுத்தவேண்டும். அப்படிச்செய்யாது தமது சுயலாபத்தைக்குறித்து உண்மைநெறிகடந்து மாறுபடக்கூறி வஞ்சிப்பவர்கள் அந்தணராகார். வேதமோதா அந்தணர்கள் பதர்களாவார். இதற்குப் பிரமாணம்.

> காலையுமாலையு நான்மறையோதா
> வந்தணரென்போ ரனைவரும்பதரே.

என்பதனாலுணர்க. அங்ஙனமாயின்.

> மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
> பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

என்று நாயனர் கூறியிருக்கிருரே? எனின் மறப்பினுமென்றவும்மை இழிவும்மையாமாகலின் மறக்கலாகாதென்பது கருத்தாம். அவர்கள் ஒழுக்கம் "ஓதலின்ன்றே வேதியர்க்கொழுக்கம்." என்று வெற்றிவேற்கையிற் கூறியபடி, ஓதலினுஞ் சிறந்ததெனவும், அவர்களுக்குரிய வொழுக்கங் கெடின் பிராமணீகம் ஒருங்கே கெடுமெனவும், ஒழுக்கத்தைச் சிறப்பிக்கவந்தவிடமாதலின், மறப்பினுமோத்துக் கொளலாகுமென ஒருவாறு கூறியொழித்தார். ஆதலால் வேதத்தை மறந்தவர் பிரமாணரல்லராம். இக்குறளை நீத்தார்பெருமை யென்ற அந்தணரைக்குறித்த வதிகாரத்தில் கூருது, ஒழுக்கம் என்ற அதிகாரத்தில் கூறுவானேன்? எனின், வேதமோதல் அந்தணர் முதலிய முதன்மூன்று வருணத்தாருக்கும் பொதுத் தருமமாதலின், அந்தணர்க்குரிய சிறப்பு விதியாகிய நீத்தார்பெருமையென்ற அதிகாரத்தில் கூறவில்லை.

பின்னும் இவ்வந்தணர்க்குச் சுதந்தரத்தொழிலின்மையின் அரசன் இவர்களைக் காக்கவேண்டுமென்றும், அங்ஙனங் காவாக்கால் வேதங்களை மறப்பர் என்றும், பின்வருங்குறளாற் கூறினர். அதாவது,

ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

என்பதாம். இக்குறளால் அந்தணர் வேதமோதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றலென்னு மறுதொழிலுடையாரெனக் கூறியருளினர்.

4-முதல் 38-ஆம் அதிகாரம் வரையும்.
முதன் மூவர்க்கும் பொதுத்தருமம்.
5-முதல் 34-ஆம் அதிகாரம் வரையும் இல்லறம்.
35-முதல் 38-ஆம் அதிகாரம் வரையும் துறவறம்.

என்பது காண்க.

39-முதல் 57-ஆம் அதிகாரம் வரையும்,
அரசர் சிறப்புத்தருமம்.

இதில் சாதுர் வருணத்தினும் அரசனே ஆதி அல்லது தலைவன் என ஒதியருளினர்.

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

இதனல், அரசரினும் அந்தணர் சிறந்தவரேனும், அவ்வந்தணரும் அரசர்க்குப் பின்னவராயுள்ளவரும் அறத்தினின்றும் பிழைப்பாராயின், அவர்களை ஒறுத்தற்குரியானரசனே யாதலின், அவனே யாவர்க்கு முதன்மையானவனென்பதாயிற்று.

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

என்பதுமது.

ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

என்றமையின் அரசன் துட்டமிருகங்களைக்கொன்று வைசியரது ஆனினங்களைக்காவானுயின், அவ்வானிங்களாலாகிய கிரு

ஷிபலன் கெடும். உண்டியுதவி அந்தணர்களைக்காவாவிடின் வேதப்பயிற்சிகெடும்.

இதனால் அரசனுக்குப் பின்னவரு முன்னவருமாகிய வைசிய அந்தணர்களது தொழிலோங்காதென்பதாம்.

> கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
> முடையானாம் வேந்தர்க் கொளி.
>
> படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
> முடையா னரசரு ளேறு.
>
> செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
> கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

என்னுங் குறள்களுள் "கொடையளி" என்றதில் ஈதலும் உலகோம்பலும் "படைகுடி" என்றதில் படைபயிற்றலும் "செவிகைப்ப" என்றதில் மனமடக்கலும் அரசர்க்குக் கூறப்பட்டன.

## 96-முதல் 107-ஆம்-அதிகாரம் வரையும்.

### வைசியர் சிறப்புத்தருமம்.

ஒழிபியலுள் குடிமை முதலிய 12-அதிகாரமும் வைசியருக்குச் சிறப்புத்தருமமாம். எங்ஙனமெனில், "வைசியவென்பது வடமொழியில் விஶவென்றபதத்திலிருந்துண்டானதாம். இருக்குவேதம் 3-ஆவது அஷ்டகம் முதல் அத்தியாயம் 9-ஆவது வருக்கையில் "விஶ மனிஷ்யாணாம்" என்றதனால் விஶ என்பதற்கு மனிதனென்பது பொருளாம். அவ்விஶவென்ற பதமோவென்றால் "வேஶ" என்னுமொழியினைக் குறிக்கின்றது. "வேஶ" என்பதற்குக் குடிமை என்பது பொருளாம். உலகு உயர்ந்தோர் மாட்டென்பதுபோல, குடிமை என்பது உயர் குடிப்பிறப்பினரைக்குறித்ததாம். அஃதெங்ஙனமாக்குமெனில், முன்னர் அந்தணர் தருமத்தையும் அரசர்தருமத்தையுங் கூறியொழித்தமையின் அரச தருமத்துக்கடுத்தது வைசிய தருமமெனக் கூறுதலையும்.

ஈசுர சிருட்டியிலுண்டான மனிதரெல்லாம் ஒன்றுதானே அவருட் சிலர் உயர்குலத்தாரென்றும் சிலர் இழிகுலத்தாரென்றும் கூறும் பேதமுண்டோ? எனின்,

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

என்று கூறப்பட்டிருப்பதால் பஞ்சபூதக் கூறுகிய எலும்பு தோல் இரத்த மாமிசங்களாலாயது உடம்பு. அவ்வுடம்பு எல்லாவுயிர்க்கும் ஒன்றேயாயினும், அவர்கள் செய்கருமங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதால், உயர்குலமென்றும் இழிகுலமென்றும் பேதப்படுகின்றன. இவ்விருபகுப்பினையும் அவரவர் வாய்மொழியானுங் குணங்குறிகளானும் அறிந்துணரலாம்.

நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணையப் படும்.

என்பனவற்றாற் காண்க.

பின்னும் மானம் பெருமை சான்றாண்மை பண்புடைமை செல்வம் உழவு ஒழுக்கம் முதலியவை, இழிகுலமாக்களுக்கியல்பிலவையாவாம். ஆகையால் இவையெல்லாம் உயர்குலமாக்களாகிய வைசியருக்கே உரியனவாம்.

இஃதன்றியும், இவர்களுக்குக் கூறிய அதிகாரங்களுள் ஒன்றாகிய உழவதிகாரத்துள்,

சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா
லுழன்று முழவே தலை.

என்க்கூறப்பட்டிருக்கின்றது. இதனால் எத்தகை மேம்பாடுடைய தொழிலரேனும் (எனவே வேதமோதும் அந்தணரே

னும், உலகாளுமரசரேனும்) பசிப்பகையையொழிக்கமாட்டா ராகவே ஏரின் பின்வந்து உணவின்மூலத்தை எதிர்பார்த்து நிற்பராம். அதனால் உழவுத்தொழில் எவ்வளவு சிரமமுடைய தேனும் எல்லாத்தொழிலுள்ளும் முதன்மையானதொழிலாம். இம்முதன்மையான தொழிலுடையார் "முதலியாரென" இக் காலத்தும் வேளாளருக்கு வழங்கிவருதலால் இவர்கள் மேன் மக்களான வைசியரேயாவர்.

பின்னும் இவ்வைசியர் உலகுயிர்களுக்கெல்லாம் ஆதார பூதராயிருக்கிறாரென்பது தோன்ற, இரண்டாவது குறளில்,

உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

எனக்கூறினர். அன்றியும் வைசியரெனப் பிரித்துக்கூறாது கு டிமையெனப் பொதுப்படக் கூறினமையின், வைசியர் என்று ஞ் சூத்திரர் என்றும் பகுத்தறியப்படாமல் மயங்குவரெனக் கருதி, முன்னவர் உழுதுண்டு வாழ்வாரென்றும், பின்னவர் தொழுதுண்டு வாழ்வாரென்றும்,

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

என்னுங்குறளில் ஐயப்பாடகல விரித்தோதினர்.

தொழுதுண்டு வாழ்வாரென்பது சூத்திரரைக் குறித்த தெனக்கொள்க.

பின்னும் இவ்வேளாளரின் ஆற்றலும் வெற்றியும், முன் னவரிருவர் தொழிலினும், மேம்பாடுள்ளனவெனக் குறிக்க,

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்.

என்றோதினர். ஆதலின் வைசியருக்கு முதன்மையான தொ ழில் கிருஷியேயாம். அக்கிருஷிக்குத் துணையாயுள்ளது ஆன்

காத்தலாம். இவ்விருதொழிலின் பயன் வாணிகமாம் அவ்வா ணிகத்தை,

> வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
> பிறவுந் தமபோற் செயின்.

என முதன் மூவருக்கும் பொதுவிதியாகிய நடுவுநிலைமையிற் கூறியருளினார். இதனால் கிருஷி கோ சம்ரட்சணை வாணிகம் ஒன்றைவிட்டொன்று பிரியாதாம்.

முதன் மூவருக்கும் பொதுவிதி கூறியவற்றுள் அடங்கிய ஒழுக்கமுடைமையால், ஓத்லும் வேள்வியும் இவருக்குக் கூறா தமையும். ஈதலை இவ்வதிகாரத்துள்,

> இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
> கைசெய்தூண் மாலை யவர்.

> உழவினார் கைமடங்கி னில்லை விழைவதூஉம்
> விட்டேமென் பார்க்கு நிலை.

எனச் சிறப்புவகையால் ஓதியருளினார். இதனால் வைசியருக் கறுதொழில் விதித்தவாறுணர்க. நாயனார் குறள் தமிழ்வேத மாகலின் அதனதுட்பொருளைப் பலகால்விசாரித்து ஓர்ந்தோ ர்ந்தறியவேண்டும்.

108-ஆம் அதிகாரம் கயமை. இது சூத்திரரைக்குறித்ததாம்.

**சூத்திரர் தருமம்.**

முற்கூறியவெல்லாம் கிரமமே, ஒழிபியலுள் கயமை எ ன்ற அதிகாரம் சூத்திரர்க்கென்பதெவ்வாறிருக்கும்? எனின், குடிப்பிறந்தாரென்பது உயர்குடிப் பிறந்தாரென்று கொண் டமையானே இழிகுடிப் பிறப்பினர் சூத்திரரேயாவர். இதற் குப், பிரமாணமுண்டோ? எனின்,

> சூடாமணி நிகண்டு மக்கட்பெயர்த்தொகுதி.
> பொறியிலார்கயவர்நீசர்புள்ளுவர்புல்லர்தீயோர்
> சிறியசிந்தையர்கனிட்டர்கீழ்க்குணர்கீம்பர்தேரார்

முறையிலார்முசுண்டர்மூர்க்கர்முசுடர்பல்லவரேசையர்
மறைவிலாக்கலர்மூவாறுமன்னுபூரியருங்கீழோர்.

என்பதனுற்காண்க.

இச்சூத்திரர் முதன்மூவருக்கும் பணிசெய்கிறதே தருமமென்றும், முக்கியமாக அந்தணருக்காகவே சிருட்டிக்கப்பட்டிருக்கிறாரென்றும், அவர் அடிமைத்தொழிலைச் செய்கிறவரென்றும், வீட்டு அடிமைகளென்றும், அவர் சொற்பக்குற்றஞ் செய்யினும் பெரியதண்டனைக்குள்ளாவார் என்றும், ஆரிய வேதத்தில் கூறியவாறே நாயனாரும்,

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியார் விரைந்து.

என்றும் கூறியிருக்கின்றார். ஆகையால் இவை வடநூன்முடிபுக்கு மாறுபடாவாற்றால், கயவர் என்ற அதிகாரம் சூத்திரர்க்கென்பதற் கையமின்றாம். இவர்கள் மேன்மக்களுக்குப்பணி செய்து கிடப்பதே தருமமாகலினானும், சுதந்தரத்தொழிலின்மையானும், விசேடங்கூறவமையாது "கயமை" என ஒரே அதிகாரங் கூறியொழித்தார்.

பின்னும்,

தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான்.

என்னும், குறளானும்,

இந்தமூச்குலத்துளார்க்கே யேவல் பூண்டொழுகுகின்ற
வெந்திறலாளர்தாமே விதித்த சூத்திரரென்றாகும்.

என்னும் சூடாமணி நிகண்டானுங் கண்டுணர்க. மற்றும் வருவனவற்றாற்காண்க. இவற்றின் விரிவு சூத்திரரென்னும் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கின்றது ஆங்குணர்க.

# III. இதிகாசம்.

## சாதுர் வருண தருமம்.

### நல்லாப்பிள்ளை பாரதம்.

### சாந்திபருவம், வீட்டுமனைக்கண்ட சருக்கம்.

#### அந்தணர் தருமம்.

மறையவர்க்குநன்மறையுணர்ந்திடுதல்பன்மகங்க
ளுறைபடுத்தலத்தியயனமோதுதல்சுசியோடு
பொறைமிகுத்தநற்றவந்தரல்கடவுளர்ப்போற்ற
லிறைவணக்கனல்வேட்பித்தலீதெலாமியல்பே.

நெறியின்மிக்கவர்தந்திடுதானநன்னிதிக
ளறிவின்மிக்கவர்பெறவழங்குவதுமாமவர்க்குச்
செறிவுபற்பலவென்னினுஞ்சிறப்புடைத்தரும
மிறைவநற்றவமியற்றுதலென்றுணர்வாயால்.

#### அரசர் தருமம்.

சுருதிமாகமம்பயிலுதல்சிலைமறைதொடர்தல்
விருதினேனோர்படைகளுமளிக்குதன்மேவார்ப்
பொருதழித்தனல்லுயிர்களைப்பொதுமையிற்புரத்த
லிருநிதிக்குழாமீதன்மன்னவர்குலவியல்பே.

#### வைசியர் தருமம்.

அனையதன்மைபற்பலவினுஞ்சிறப்புடையறமா
முனையினென்னலர்முடிப்பதுமுடிபுனைந்தவர்க்குப்
பினையுடல்வைசியர்க்கருமமறைமகம்பேண
ணினைவதிற்பெரிதாமறநிகழ்த்துதுங்கேண்மோ.

அறம்வழாவகைமுயற்சியோடருநிதியீட்ட
றிறம்வழாவகையேர்த்தொழில்செலுத்துதல்செப்பு
நிறம்வழாநிரைக்கணம்புரந்தளித்தலிந்நிலத்தின்
மறம்வழாதவவைசியர்தம்மியல்பிதேமதிப்பாய்.

#### சூத்திரர் தருமம்.

இத்திறத்தவர்மூவருமுளமகிழ்வெய்த
வத்திறத்தவரூர்தொழில்செய்வதேயறனாங்

கைத்திறற்சொருவருகிகரற்றகாவலகேள்
வித்தகத்தனிச்சூத்திரர் தங்குலமேன்மை.

# IV. நிகண்டு.

## மண்டலபுருடன்செய்த சூடாமணி, நிகண்டு.

### அந்தணர்.

ஐயர்வேதியரேநூலோராறுதொழிலாளராய்ந்தோர்
மையில்பூசுரரேசெந்தீவளர்ப்பவர்தொழுகுலத்தோர்
பொய்யிலந்தணரேயாதிவருணர்முப்புரிநூன்மார்பர்
மெய்யர்விப்பிரரேவேதபாரகர்வேள்வியாளர்.

இருபிறப்பாளர் பார்ப்பாரேற்றமேற்குல ருயர்ந்தோர்
ஒருமறையாளர்          *          *          *          *

### அரசர்.

புரவலன்பெருமானேந்தல்பூபாலன்வேந்தன்மன்ன
னரபதிபொருநன்மற்றைநகைமுடிநிருபனோடு
குரிசில்பார்த்திவனேகோவேகொற்றவனிறைவனண்ண
லரசன்பேரிவைமூவைந்தாந்தலைவன்காவலனுமாமே.

### வைசியர்.

இளங்கோக்கண்மன்னர்பின்னரிப்புரெட்டியர்காராளர்
வளம்பெறவாழ்வேளாளர்வைசியர்தம்பொதுப்பேராருங்
கிளந்தகோக்காத்தன்மற்றுங்கிளர்பொருளீட்டலேரை
விளங்கவேயுழலான்மூன்றுகுலம்பெறும்வேறுசொல்வாம்.

வந்தகோவலருடன்கோவர்த்தனரிப்பர்முப்பேர்,
முந்துகோவைசியரென்றுமொழிந்திடும்வணிகர்நாய்கர்
தந்தநூற்பரதர்முப்பேர்தனவைசியர்க்கேசாற்று
முந்துபூவைசியர்முப்பேருழவர்மேழியர்வேளாளர்.

வைசியருக்கு ஏற்பட்ட இம்மூவிதப்பிரிவுகள் வடநூலிலின்
மையின் இவை சித்தாந்தமாகா.

## சூத்திரர்.

இந்தமுக்குலத்துளார்க்கே யேவல்பூண்டொழுகுகின்ற
வெந்திறலாளர்தாமே விதித்தசூத்திரரென்றாகுந்
தந்தநூலுரைத்தவாறே சாற்றினமிவர்கடாமே
யுந்தியதொழிலுக்கெல்லா முரியவர்தெரியுங்காலே.

சூடாமணி நிகண்டுக்கு முதனூலாகிய பிங்கலந்தையில் வேளாளரை வைசியரென்றுகூறி, பின் சூத்திரரைக்கூறுமிடத்தும் அவ்வேளாளரே சூத்திரரென மாறுபடக்கூறியது ஐயத்துக்கிடமாகவிருக்கிறது. இவ்வையத்தை நீக்கும்பொருட்டு, இதற்கு வழிநூல்செய்த மண்டலபுருடனார் தமது நிகண்டில் வேளாளர் வைசியரென்றும் முதன் மூவர்க்குமேவற்றொழில்செய்பவர் சூத்திரரென்றும் தெளிவாகக்கூறினார்.

மண்டலபுருடன் என்பவரது நிகண்டு வழிநூலென்பதற்கும், வடநூன்முடிபைத்தழுவிய தென்பதற்கும் பிரமாணம்.

பண்டைநிகண்டுதிவாகரம் பிங்கலம்பன்னுரிச்சொ
லெண்டிசையின்சொல் வடமொழிச்செய்யுளெலாமுணர்ந்தே
தண்டமிழ்கொண்டுநிகண்டு சூளாமணிதானுரைத்த
மண்டலவன்குடிகொண்டது நீடொண்டமண்டலமே.

எனத்தொண்டமண்டல சதகத்துள் கூறப்பட்டதனாலுணர்க. மண்டலபுருடனார் வடநூல் முடிபையுமுணர்ந்து கூறினாராதலால், வேளாளரைச் சூத்திரரெனக்கொள்ளின் அவர் அறுதொழிலாளராதலின் மிருதிக்கு மாறுபடுமென வைசியரெனவாளாகூறிப், பின்சூத்திரரைக் கூறுமிடத்துத்தேய வேறுபாட்டின்படி ஒவ்வொரு தேயத்துக்கொவ்வொரு வகுப்பினர் சூத்திரரெனக் கூறப்பட்டிருப்பதால் மூவர்க்கும் பணிசெய்பவர் என்று பொதுவகையால் கூறியொழித்தார்.

மைசூர் முதலிய சிலநாட்டில், குயவரையும், செகநாதம் முதலிய சிலநாட்டில் அம்பட்டரையும், கிருஷ்ண கோதாவரி முதலிய நாடுகளில் வண்ணாரையும், சூத்திரரெனக்

கொள்ளப்பட்டிருக்கின்றது. அன்றியும் விந்தகிரிக்கு வடபாலிலுள்ள ஆரியாவர்த்தன முதலிய இடங்களில் வசிக்கும் சூத்திரராயுள்ளவர் வேளாளரோ? இவற்றையெல்லாம் நன்குணராதுபொதுவகையால் உயர்ந்த சாதியராயுள்ள வேளாளரைச் சூத்திரரெனஇழிவுபடுத்திக் கூறுவது "வேளாளரென்றவர்கள் வள்ளன்மையால்மிக்கிருக்குந் தாளாளர்" என்ற வேதவாக்கியத்திற்கு மாறுபடுதலாற்பொருந்தாவுரை எனமறுக்க.

## I. அந்தணர்.

திராவிடருள் பிராமணர் என்பவர் யாவர்? எனின், ஆதிசைவப்பிராமணரேயாம். பிரமாவின் முகத்திலுதித்தவரே பிராமணரென வேதங்கள் கோஷிக்க, ஆதி சைவரை எவ்வாறு பிராமணராகக்கொள்ளக்கூடும்? எனின்.

சிவபிரானிடத்துதித்தவந்தணரே பிராமணராவரெனல்.

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍋𑌪𑌰𑌮𑍋
𑌹𑌰𑌿𑌃 । 𑌵𑍈𑌶𑍍𑌯𑌃𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌶𑍍𑌚𑍈𑌵 𑌇𑌂𑌦𑍍𑌰𑌶𑍍𑌶𑍂𑌦𑍍𑌰
𑌅𑌜𑌾𑌯𑌤𑍇 ॥

బ్రాహ్మణో భగవాన్ రుద్రో క్షత్రియోపరమోహరిః ।
వైశ్యఃపితామహశ్చైవ ఇంద్రశ్శూద్రఅజాయతే ॥

பிராஹ்மணோபகவான்ருத்ரோ க்ஷத்திரியோபரமோஹரீ:
வைஸ்யபிதாமகச்சைவ இந்திரஸ்சஸூத்திரஅஜாயதே.

இதனால் பிராஹ்மணன் உருத்திரன் என்றும், க்ஷத்திரியன் விஷ்ணுவென்றும், வைசியன் பிரமனென்றும், சூத்திரன் இந்திரனென்றும் பெறப்பட்டன. ஆதலால் உருத்திரனாகிய பிராஹ்மணனிடத்தில் பிறந்தவர் பிராமணரேயன்றிப் பிரமனாகிய வைசியனிடத்தில் பிறந்தவர் பிராஹ்மணராகார். மேற்கூறியது புராண வசனமேயன்றி வேதவாக்கியமாகாது.

ஆகவே, பிரமன் வைசிய னென்பது வேதப்பிரமாணமோ? எனின்.

சாந்தோக்கிய சுருதி.

𑌤𑍍𑌵𑌂𑌦𑍇𑌵𑍇𑌷𑍁𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌹𑍍𑌯
𑌹𑌂𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 ।
𑌵𑍈𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂𑌉𑌪𑌧𑌾𑌵𑌤𑌿
𑌉𑌪𑌧𑌾𑌵𑌾𑌮𑍀𑌤𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌵𑍈
𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍋𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌵𑍈𑌶𑍍𑌯𑌇𑌤𑌿 ॥

త్వందేవేషుబ్రాహ్మణోహ్య
హంమనుష్యేషు బ్రాహ్మణః।
వైబ్రాహ్మణంఉపధావతి
ఉపధావామీతి విష్ణుర్వై
క్షత్రియోబ్రహ్మావైశ్యఇతి

துவங்தேவேஷு பிராஹ்மணோஹ்ய
ஹம்மனுஷ்யேஷு பிராஹ்மண:
வைப்பிராஹ்மணம் உபதாவதி
உபதாவாமீதி விஷ்ணுர்வை
க்ஷத்திரியோ பிரஹ்மாவைஸ்யஇதி.

என்னும் சுருதி வாக்கியத்தாற்காண்க.

பிரமன் முகத்துதித்தவாரியரைப் பிராமணர்களாகக்கூறும் வேதம் பொய்யோ? எனின், அற்றன்று, நாயின்வயிற்றிற் பிறந்த சௌனகரையும், கழுதையின் வயிற்றிற் பிறந்த கார்க்கேயரையும், தவளை வயிற்றிற் பிறந்த மாண்டவியரையும், வேசிவயிற்றிற் பிறந்த வசிட்டரையும், பிராமணரென வேதங்கூறும்போது, திரிமூர்த்திகளில் ஒருவராகிய பிரமானிடத்துதித்தவரைப் பிராமணரெனக்கூறுவதிற் றடையென்னை ? அங்ஙனம்

கூறியது அவரவர்கள் செய்தகர்மவிசேடத்தாலன்றிச் சென்ம விசேடத்தாலன்றும். ஆகவே ஆரியர்கள் பிராமணர்களெனக் கூறுவது உபசாரமொழியேயன்றிச் சித்தாந்தமாகாது.

வேதத்தில் கூறுவதை உபசாரமெனஎங்ஙனங்கொள்ள க்கூடுமெனின்? அவ்வேதவாக்கியம் இந்திரன் வருணன் வாயு குபேரன் அக்கினி யமன் நிருதி முதலிய ஒவ்வொரு தேவரை யும் தோத்திரிக்குமிடத்து, நீயே பரம் நீயே பரம் எனக்கூறுகி ன்றது. சிவபெருமானைத் தோத்திரிக்குமிடத்தும் அவ்வாறாக வே நீயேபரமெனக்கூறுகின்றது. இவற்றுள் எதுபொய், எது மெய்யெனக்கொள்வது? ஆகையால் இவற்றினுண்மையை வெ ளிப்படுத்துவது ஆகமமேயாம். ஆதலின், ஆரியப்பிராமணரை யும் ஆதி சைவப் பிராமணரையும் வேதத்தில் பொதுப்படக் கூறினும், அவ்விருவர்களிற் சிறப்புடையார் ஆதி சைவரென் று ஆகமம் எடுத்துக்காட்டும்.

### ஆதி சைவப் பிராமணர் உற்பத்தி,

சுவாயம்பு வசனம்.

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑍋𑌦𑍍𑌭𑌵𑌾𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌃𑌆𑌦𑌿𑌶𑍈𑌵𑌾𑌃𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ।
𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍁𑌭𑌕𑍍𑌤𑌾𑌯𑍇𑌤𑍇𑌷𑌾𑌂𑌪𑍂𑌜𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌦𑌾𑌨𑌹𑌿 ॥

ఊర్ధ్వవక్త్రోద్భవావిప్రాః ఆదిశైవాఃప్రకీర్తితాః
విప్రాస్తుభక్తాయెతేషాం పూజాకార్యాన్యదానహి ॥

ஊர்த்வ வக்த்ரோத்பவாவிப்ரா: ஆதிஶைவா:ப்ரகீர்திதா:
விப்ராஸ்து பக்தாயேதேஷாம் பூஜாகார்யாந்ய தாநஹி.

இ-ள். சிவபெருமானுடைய ஊர்த்துவ முகத்திற் பிறந் தவர்கள் ஆதி சைவர்கள் அவர்களுக்குப்பக்தர்களாயிருக்கும் விப்பிரர் பூஜிக்கப்படுவர்; அல்லாதவர் அபூஜ்யராவார்.

### ஆதி சைவர் பஞ்சரிஷி கோத்திரத்தாரேனல்.

காமிகாகமம்.

𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌕𑌾𑌲𑍇𑌯𑍇 𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃 𑌕𑍌𑌶𑌿𑌕𑌾𑌦𑌯𑌃|
𑌶𑌿𑌵𑍇𑌨 𑌤𑌤𑍍𑌕𑍁𑌲𑍋𑌤𑍍𑌥𑌾𑌸𑍍𑌯𑍁𑌃 𑌶𑍈𑌵𑌾𑌸𑍍𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑌿𑌕𑌾𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃||

సృష్ట్యనంతరకాలేయేదీక్షితాః కౌశికాదయః
శివేనతత్కులోద్ధాస్యుః శైవాస్తంత్రానికాద్విజాః

ஸ்ருஷ்ட்யாநந்தரகாலேயே தீக்ஷிதா: கௌஸிகாதய:
ஸிவேநதத்குலோத்தாஸ்யு: ஸைவாஸ்தந்த்ராநிகாதிவிஜா:.

இ-ள். சிவபெருமானால் கௌசிகாதி மகரிஷிகள் சிருட்டிக்கப்பட்டு அவரால் தீக்ஷை செய்யப்பட்டார்கள். அவர்கள் குலத்திலுண்டானவர்கள் சந்தான கிரமத்தில் வந்த ஆதிசைவப் பிராமணரெனப்படுவார்கள்.

காமிகாகமம்.

𑌕𑍌𑌶𑌿𑌕𑌃 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌶𑍍𑌚𑍈𑌵 𑌭𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑍋𑌤𑍍𑌰𑌿𑌰𑍇𑌵𑌚|
𑌗𑍌𑌤𑌮𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌪𑌞𑍍𑌚𑍈𑌤𑍇 𑌪𑌞𑍍𑌚𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃||
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑍁𑌲𑍇 𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑍂𑌤𑌾𑌃 𑌆𑌦𑌿𑌶𑍈𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃

కౌశికఃకాశ్యపశ్చైవ భరద్వాజోత్రిరేవచ
గౌతమశ్చేతిపంచైతే పంచవక్త్రేణదీక్షితాః
తేషాంకులేసముద్భూతాః ఆదిశైవః ప్రకీర్తితాః

கௌஸ்ரீக: காஸ்யபஸ்சைவ பரத்வாஜோத்ரிரேவச
கௌதமஸ்சேதிபஞ்சைதே பஞ்சவக்திரேணதீக்ஷிதா:
தேஷாங்குலேஸமூத்பூதா: ஆதிஸைவா: பிரகீர்த்திதா:

இ-ள். கௌசிகர் காசிபர் பரத்துவாசர் அத்திரி கௌதமர் என்னும் பஞ்சரிஷிகள் சதாசிவமூர்த்தியின் பஞ்சமுக

ங்களால் தீட்சிக்கப்பட்டார்கள். அவர்குலத்தில் பிறந்தவர்கள் ஆதி சைவரெனப்படுவார்கள்.

ஆ! இஃதென்ன விபரீதம் மேற்கண்ட கௌசிகராதிய பஞ்சரிஷிகளும் பிரமாவினாலே சிருட்டிக்கப்பட்டாரென்பது உலகத்தில் பிரசித்தியாயிருக்க, இங்கு சிவனாலே சிருட்டிக்கப்பட்டாரென்பது எங்ஙனமொக்கும்? எனில்,

இவர்கள் ஆதியில் சிவனாலே சிருட்டிக்கப்பட்டுண்டானார்கள்;பின்பு வேறு கௌசிகர்முதலானவர் பிரமாவினாலே சிருட்டிக்கப்பட்டுண்டானார்கள். ஆதலால் பின்னோரும் முன்னோருக்குப் பெயரொற்றுமையாற் சமத்துவமுடையரானார்கள். இவ்விருதிறத்தாருள்ளே சிவனாலே சிருட்டிக்கப்பட்ட கௌசிகர் முதலானவர்கள் வேறு, பிரமனாலே சிருட்டிக்கப்பட்ட கௌசிகர் முதலானவர்கள் வேறு, என்று அறிந்துகொள்க. அங்ஙனம் அறியுமிடத்து ஈண்டெடுத்துக்காட்டிய கௌசிகர் முதலானஐவரும் சைவசம்பந்தமுடையார்களென்பதில்ஐயமில்லையாம். இங்ஙனம் ருஷிகள் இருவகையினராகச்சிருட்டிக்கப்பட்டிருந்தனரென்பதற்கு, பராசரருக்கு முன்விருத்தபராசரரும், மநு என்பவருக்கு முன் விருத்தமனுவும், வசிட்டருக்கு முன் விருத்த வசிட்டரும், இருப்பதே சான்றாம். பராசரம் ஆசாரகாண்டம் 281- 505- 522-ஆவது பக்கங்களில் காண்க. இருக்குவேதம் 4-ஆவது அஷ்டகம் 2-ஆவது அத்தியாயம் 5-ஆவது வருக்கையில் இவ்வாதிசைவர்கள் பஞ்சக்ஷிதியென்றும் பஞ்சஜனமென்றும் கூறப்பட்டிருக்கின்றனர். இதற்கு வேதபாஷ்யகாரராகிய சாயனாசாரியார் நிஷாதர் அல்லது க்ஷந்துருவர் பிதுர் தேவர் அசுரர் இராட்சதரென, மனங்கொண்டவாறு கூறுகின்றனர்.

**ஆதி சைவப்பிராமணர்களே தீக்ஷைசெய்தற்குரியர் எனல்.**

*சந்தான ஸம்ஹிதை.*

ஆத்யாஸ்ஸாக்ஷாச்சிவேனைவ தீக்ஷிதாஹ்யாதிஶைவகா:| ஆதிஶைவாஸ்து தேஜ்ஞேயாஸர்வர்ணாத்ஹ்யுத்தமோத்தமா:||

ఆదౌ సదాశివేనైవ దీక్షితాస్త్వాదిశైవకాః
ఆదిశైవాస్తు తేజ్ఞేయాః సర్వానుగ్రహకాః స్మృతాః ।

ஆதௌஸதாஶிவேனைவ தீக்ஷிதாஸ்த்வாதிஶைவகா:
ஆதிஶைவாஸ்துதேக்ஞேயா ஸர்வாநுக்ரஹகா:ஸ்ம்ருதா:.

இ-ள். சதா சிவ மூர்த்தியால் தீக்ஷைசெய்யப்பெற்றவர்கள் ஆதி சைவவேதியர்கள்; அவர்கள் எல்லாவருணத்தாருக்குந் தீக்ஷாநுக்கிரகஞ்செய்ய அதிகாரம் பெற்றவர்கள்.

காமிகாகமம்.

𑌆𑌦𑌿𑌶𑍈𑌵𑌕𑍁𑌲𑍇𑌜𑌾𑌤𑌾𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌸𑍍𑌸𑍍𑌯𑍁𑌃 𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌦𑌿𑌷𑍁। 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌂𑌸𑌰𑍍𑌵𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂𑌮𑌹𑍋𑌤𑍍𑌸𑌵𑍇। 𑌸𑍍𑌨𑌪𑌨𑍇 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑌣𑍇𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌭𑌿𑌷𑍇𑌚𑌨𑍇। 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌦𑍌 𑌚 𑌶𑌸𑍍𑌤𑌾𑌸𑍍𑌸𑍍𑌯𑍁𑌃 𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑍇 𑌵𑌾𑌥 𑌪𑌰𑌾𑌰𑍍𑌥𑌕𑍇 ॥

ఆదిశైవకులేజాతాః శ్రేష్ఠాస్స్యుః స్థాపనాదిషు ।
దీక్షాయాం సర్వమర్త్యానాం ప్రతిష్ఠాయాం మహోత్సవే।
స్నపనే ప్రోక్షణే చైవ ప్రాయశ్చిత్తాభిషేచనే ।
వ్యాఖ్యానాదౌ చశస్తాస్స్యుః స్వార్థేవాథ పరార్థకే॥

ஆதிஶைவகுலேஜாதா:ஶ்ரேஷ்டாஸ்யு:ஸ்தாபநாதிஷு
தீக்ஷாயாம்ஸர்வமர்த்யாநாம்பிரதிஷ்டாயாமஹோத்ஸவே
ஸ்நபநேபுரோக்ஷணேசைவபிராயஸ்திபிஷேசநே
வியாக்கியாநாதௌசஶஸ்தாஸ்யு:ஸ்வார்தேவாதபரார்தகே.

இ-ள். ஆதி சைவ குலத்திலுதித்த பிராமணர்கள் ஸ்தாபநாதி காரியங்களிற் சிரேஷ்டராகின்ற எல்லாவருணத்தாருக்கும் சிவ தீட்சையால் அநுக்கிரகிப்பதிலும், பிரதிஷ்டை உற்

சவம் ஸ்தபநம் ஸம்புரோக்ஷணம் பிராயச்சித்தம் அபிஷேக முதலியவற்றை நடத்துவதிலும், சிவதருமங்களை வியாக்கியான ரூபமாக வெளிப்படுத்துவதிலும், ஸ்வார்த்த பரார்த்தங்களிலும், அதிகாரிகளாவார்.

### மானிடரிற் சிறந்துள்ளா ராதிசைவரே எனல்.

இதனல் மானிடராயுள்ளவர்களில் சிறந்துள்ளவர் ஆதி சைவப்பிராமணரே என்று ஏற்படுகின்றது. இதற்கு அநுபவமாகத் திருவிளையாடல் மூர்த்திவிசேடப் படலத்தில்,

மனிதரிலுயர்ந்தோராதி மறையவர்தேவர்தம்மிற்
பனிதருதிங்கள்வேணிப் பகவனேயுயர்ந்தோன்வேட்டோர்க்
கினிதருள்விரதந்தம்முளதிகமாமிந்துவாரம்
புனிதமந்திரங்கடம்முட் போதவைந்தெழுத்தமேலாம்.

எனக்கூறியிருத்தல் காண்க.

### ஆதிசைவர் சப்தலிங்கத்துள் ஒரு லிங்கமேனல்.

தரிசன விதியிலும் அர்ச்சகரென்னும் ஆதி சைவப்பிராமணரையும் ஏழுலிங்கத்துளொன்ருகத் தரிசிக்கும்படி ஆகம வாக்கியம் ஏற்பட்டிருக்கின்றது.

பிரமாணம்.

ഗോപുരേശിഖരേദ്വാരേ പ്രാകാരേബലിപീഠകേ |
അര്‍ച്ചകേമൂലലിംഗസ്യ സപ്തലിംഗസ്യദൎശയേത് ||

గోపురేశిఖరేద్వారే ప్రాకారేబలిపీఠకే
అర్చకేమూలలింగస్య సప్తలింగస్యదరిసయేత్.

கோபுரேசிகரேதுவாரே பிரகாரேபெலிபீட்டகே
*அர்ச்சகேமூலலிங்கஸ்ய ஸப்தலிங்கஸ்யதெரிசயேது.

---

* அருச்சகர், இவரைப் பாண்டிநாட்டில் பட்டரென்பர் சோழநாட்டில் குருக்களென்பர்.

இ-ள். கோபுரம், கருப்பக்கிருகத்தின் சிகரம், சிவாலயத்தின் வாயில், பிரகாரம், பலிபீடம், சிவார்ச்சனைசெய்யும் அருச்சகர், சிவலிங்கப்பெருமான், ஆக இவ்வேழினையும் தரிசிக்க வேண்டும். அங்ஙனந் தரிசித்தபின்னர்.

**சிவப்பிரசாதம் ஆதிசைவர் மூலமாகப் பெறவேண்டுமெனல்.**

இலிங்கபுராணத்தில்.

𑌶𑌿𑌵𑌾𑌗𑍍𑌰𑍇 𑌶𑌿𑌵𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌲𑍍𑌯 𑌮𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌶𑌿𑌵𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍍।
𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌨𑌾𑌦𑌦𑌾𑌨𑌶𑍍𑌚𑍇 𑌨𑍍𑌨𑌰𑌕𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇॥

శివాగ్రేశివనిర్మాల్య మగృహీత్వాశివద్విజాత్ ।
స్వయమేనాదదానశ్చే న్నరకంప్రతిపద్యతే॥

ஶிவாக்ரேஶிவநிர்மால்ய மக்கிரஹித்வாஶிவத்திவிஜாத்
ஸ்வயமேநாததாநஸ்சேந்நரகம்பிரதிபத்யதே.

இதனால் விபூதி கந்தம் புட்பமாதி பிரசாதங்களாகிய நின்மாலியங்களை எவனொருவன் சிவத்துவிஜர்கள் கொடுக்கப்பெறாமல், தானே எடுத்துக்கொள்ளுகிறானோ, அவன் நரகத்தையடைவன் எனக்கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால் சிவத்துவிஜர் கையினாற் கொடுக்க வாங்கவேண்டுமென்பதாயிற்று.

**அதீக்ஷிதரான ஆரியர்கள் தீக்ஷைசெய்யலாகாதெனல்.**

கிரணாகமம்.

𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌹𑍀𑌨𑌾𑌸𑍍𑌤𑍁𑌯𑍇𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌃 𑌨𑌤𑍍𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌭𑌵𑌨𑍍𑌤𑌿𑌤𑍇॥
𑌚𑌤𑍁𑌰𑍍𑌣𑌾𑌮𑌪𑌿𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌶𑌿𑌵𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌕𑌰𑍍𑌮𑌣𑌿।

దీక్షాహీనాస్తుయేవిప్రాః నత్వాచార్యాభవంతితే ।
చతుర్ణామపివర్ణానాం శివసంస్కారకర్మణి॥

*தீக்ஷாஹீநாஸ்துயே விப்ராः நத்வாசார்யபவந்திதே*
*சதுர்ணாமபி வர்ணாநாம் ஸிவஸம்ஸ்கார கர்மணி.*

இதனால் தீக்ஷாஹீனராயுள்ள பிராமணர்கள் நான்கு வருணங்களிலும் சிவதீட்சைசெய்யும் ஆசாரியராகமாட்டார்கள் எனத்தெரிகின்றது.

**அதீக்ஷிதரால் தீக்ஷைபெறல் பயன்படாதேனல்.**

𑌅𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍇𑌨𑌵𑌿𑌪𑍍𑌰𑍇𑌣 𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍋𑌯𑌦𑌿𑌮𑌾𑌨𑌵𑌃 ‖
𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌨𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌾𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌾𑌭𑌵𑍇𑌤𑍍 |,

అదీక్షి తేనవిప్రేణదీక్షితో యదిమానవః ।
మంత్రసిద్ధిర్నతస్యాస్తి సా దీక్షానిష్ఫలాభవేత్ ॥

*அதீக்ஷிதேநவிப்பிரேண தீக்ஷிதோயதிமாநப:*
*மந்த்ரஸித்திர்நதஸ்யாஸ்தி ஸாதீக்ஷாநிஷ்ப்பலாபவேது.*

இதனால் தீக்ஷையில்லாத பிராமணனிடத்தில் எவன் தீக்ஷிக்கப்படுகிறானோ அவனுக்கு மந்திரசித்தியுண்டாகாது. அவன் பெறப்பட்டதீக்ஷை வியர்த்தமாம் எனக்கூறப்படுகின்றது. ஆகையால் சிவதீக்ஷையில்லாத ஸ்மார்த்தப் பிராமணனிடத்துத் தீக்ஷை செய்துகொள்ளப்படாதென்பது கருத்து.

**அதீக்ஷிதர் பரார்த்தபூசை செய்யப்படாதேனல்.**

சிவதீக்ஷையில்லாத ஆரியர்கள் அல்லது ஸ்மார்த்தர்கள் பரார்த்தபூசை செய்யப்படாது. செய்யின், அவ்வூர் பஞ்சத்தாலழியும். இதற்குப்பிரமாணம்,

திருமந்திரம்.

*பேர்கொண்டபார்ப்பான் பிரான்றன்னையர்ச்சித்தாற்*
*போர்கொண்டவேந்தர்க்குப் பொல்லாவியாதியாம்*
*பார்கொண்டநாட்டுக்குப் பஞ்சமுமாமென்றே*
*யேர்கொண்டநந்தி யெனக்குரைத்தானே.*

### சைவ பேதம்.

தீக்ஷாப் பிரபாவத்தில் சாதுர்வருணத்தினர்க்குமுண்டான சைவபேதங்கள்.

### வீராகமம்.

𑌶𑍈𑌵𑌾𑌸𑍍𑌸𑌪𑍍𑌤𑌵𑌿𑌧𑌾𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌃 𑌤𑍇𑌷𑌾𑌂𑌭𑍇𑌦𑌂𑌶𑍍𑌰𑍁𑌣𑍁𑌷𑍍𑌵𑌤
𑌅𑌨𑌾𑌦𑌿𑌶𑍈𑌵𑌃𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 𑌆𑌦𑌿𑌶𑍈𑌵𑍋𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌕𑌃।
𑌤𑍃𑌤𑍀𑌯𑌸𑍍𑌤𑍁𑌮𑌹𑌾𑌶𑍈𑌵𑌃 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌶𑍍𑌚𑌾𑌨𑍁𑌶𑍈𑌵𑌕𑌃॥
𑌪𑌞𑍍𑌚𑌮𑍋𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌶𑍍𑌶𑍈𑌵𑌃 𑌷𑌷𑍍𑌠𑌃𑌪𑍍𑌰𑌵𑌰𑌉𑌚𑍍𑌯𑌤𑍇।
𑌸𑌪𑍍𑌤𑌮𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌶𑍈𑌵𑌶𑍍𑌚𑌶𑍈𑌵𑌾𑌨𑌾𑌂𑌭𑍇𑌦𑌈𑌰𑌿𑌤𑌃॥

శైవాస్సప్తవిధాజ్ఞేయాః తేషాంబెదంశృణుష్వధ
అనాదిశైవఃప్రథమః ఆదిశైవోద్వితీయకః
తృతీయస్తుమహాశైవః చతుర్థశ్చానుశైవకః
పంచమోవాంతరశ్శైవః షష్ఠఃప్రవరఉచ్యతే ।
సప్తమశ్చాన్యశైవశ్చ శైవానాంభేదయీరితః

ஸைவாஸ்ஸப்தவிதாக்ஞேயாः தேஷாம்பேதம்ஶ்ருணுஷ்வத
அநாதிஸைவஃப்ரதமஃ ஆதிஸைவோதிவிதீயகஃ
திரிதியஸ்துமஹாஸைவஃ சதுர்தஸ்சாநுஸைவகஃ
பஞ்சமோவாந்தரஸ்ஸைவஃ ஷஷ்டஃப்ரவரவுச்யதே
ஸப்தமஸ்சாந்யஸைவஸ்ச ஸைவாநாம்பேதயீரிதஃ.

இ-ள். சைவர் ஏழுபிரிவினராவர் அவருள் 1-அநாதிசைவர். 2-ஆதிசைவர். 3-மகாசைவர். 4-அநுசைவர். 5-அவாந்தரசைவர். 6-பிரவரசைவர். 7-அந்தியசைவராவர்.

𑌅𑌨𑌾𑌦𑌿𑌶𑍈𑌵𑌸𑍍𑌸𑌿𑌵𑌃 𑌆𑌦𑌿𑌶𑍈𑌵𑌶𑍍𑌶𑌿𑌵𑌦𑍍𑌵𑌿𑌜𑌃। [𑌚॥
𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌶𑍍𑌶𑍈𑌵𑌮𑌹𑌾𑌶𑍈𑌵𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍋𑌵𑍈𑌶𑍍𑌯𑌶𑍍𑌚𑍈𑌵
𑌅𑌨𑍁𑌶𑍈𑌵𑌸𑍍𑌸𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌃 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌶𑍍𑌶𑍈𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌸𑍍𑌮𑍃
𑌤𑌾𑌃।𑌸𑌵𑌰𑍍𑌣𑌾𑌮𑍍𑌬𑌷𑍍𑌠𑌸𑍂𑌤𑌾𑌸𑍍𑌤𑍁 𑌕𑍋𑌲𑌕𑌾𑌃 𑌪𑍍𑌰𑌵𑌰𑌾𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃॥

பாரஶைவஸம்ப்ரோக்த: அந்யஶைவோऽதோச்யதே।
இதோऽந்யஜாதயோயாஸ்து அந்யஶைவாஸ்து தாஸ்ம்ருதா:

అనాదిశైవస్సశివః ఆదిశైవశ్శివద్విజః
విప్రాశ్చైవమహాశైవః క్షత్రియోవైశ్యఏవచ
అనుశైవస్సమాఖ్యాతః శూద్రాశ్చైవాంతరాస్మృతాః
సవర్ణాంబష్ఠమద్యస్థః కులాలఃప్రవరస్మృతాః
పారశైవసంప్రోక్తః అన్యశైవమథోచ్యతే
ఇతోఽన్యజాతయోయాస్తు అన్యశైవాస్తుతాస్మృతాః॥

அநாதிஶைவஸ்ஸஶிவ॥ ஆதிஶைவஸ்ஶிவத்திவஜ:
விப்ராஸ்சைவமஹாஶைவ: க்ஷத்திரியோவைஸ்யஏவச
அநுஶைவஸ்ஸமாக்யாத: ஶூத்ராஸ்சைவாந்தராஸம்மிருதா:
ஸவர்ணாம்பஷ்டமத்யஸ்த:குலால: பிரவரஸம்மிருதா:
பாரஸ்சைவஸம்புரோக்த: அந்யஶைவமதோச்யதே
இதோந்யஜாதயோயாஸ்து அந்யஶைவாஸ்துதாஸ்மிருதா:

இ-ள். அவர்களில் அநாதிசைவர் சிவபெருமான் ஒருவரே, ஆதிசைவர் சிவத்துவிஜர், மகாசைவர் சிவதீக்ஷைபெற்ற வைதிகப் பிராமணர், அநுசைவர் சிவ தீக்ஷைபெற்ற க்ஷத்திரிய வைசியர்கள், அவாந்தரசைவர் சூத்திரர், பிரவரசைவர் பொன்வேலை செய்பவரும் க்ஷௌரவரஞ் செய்பவரும் குயவரும், அந்ய சைவர் மேற்கூறியவரொழிந்த ஏனையர் ஆவர். அவாந்தர சைவர் முதலியோரும் சிவாகமங்களிலே தத்தமக்குக்கூறிய விதிப்படி தீக்ஷை பெற்றுக்கொள்ளக் கடவராவர்.

ஆரியருக்கும் ஆதிசைவருக்கு முள்ளபேதம்.

ஆரியர் மதுமாமிசபட்சணஞ் செய்வார். ஆதிசைவர் அது செய்யார். ஆரியர் பசுபந்த யாகஞ்செய்வார். ஆதிசைவர் அதனைச்செய்யார்.

ஆரியர் விஷ்ணுவையே பரமபதியாகக் கொள்வார். ஆதிசைவர் சிவபெருமானையே பரமபதியெனக்கொள்வார்.

ஆரியர் விவாகஞ்செய்யும்போது, அக்கினி வளர்ப்பதில் அல்லது ஹோமஞ்செய்வதில் நவக்கிரகத்தைப் பூசிப்பார். ஆதிசைவர் சிவாக்கினி ஹோமஞ்செய்வார்.

ஆரியர் அந்தியேஷ்டியில் ஆன்மாவை வசு ருத்திர ஆதித்தபதவியில் ஒடுக்குவர். ஆதிசைவர் அவ்வான்மாவைத் தீக்ஷாகிரமத்திற்கேற்ப ஸ்கந்த சண்டகணாதிசபதவிகளில், அல்லது ஈசுவராந்த சதாசிவபதவிகளில் ஒடுக்குவர்.

ஆரியர் ஆசீர்வாதஞ்செய்கையில் அட்சதைகொடுப்பார். ஆதிசைவர் விபூதிப்பிரசாத மளிப்பார்.

ஆரியர் இராமகிருஷ்ணாதியர் கதைகளைக்கூறும் இராமாயண பாரதங்களாகிய இதிகாசங்களைப் பாராயணஞ்செய்வார். ஆதி சைவர் ஆகமம் அல்லது தேவார திருவாசகங்கள் ஸ்காந்தம் திருவிளையாடற்புராணங்களையே சிந்தைசெய்வார்.

ஆரியர் அனுஷ்டான சந்தியாவந்தனத்தில் கேசவா நாராயணா கோவிந்தாவென்று துவாதச நாமங்களைச் சம்மிதா நாமங்களாக ஓதுவார். ஆதி சைவர் பஞ்சப்பிரம மந்திரங்களையும் இருதயாதிஷடங்கங்களையும் மந்திரங்களாக ஓதுவார்.

ஆரியர் அஷ்டாக்ஷர மந்திரத்தை மூலமந்திரமாகக்கொள்வர். ஆதி சைவர் ஸ்ரீபஞ்சாட்சரத்தை மூலமந்திரமாகக்கொள்வர்.

ஆரியர் பிரமானுஷ்டானத்துள் பிரமகாயத்திரியை யோதுவர். ஆதி சைவர் சிவகாயத்திரியையோதுவர்.

ஆரியர் வேதங்களுள் இருக்குவேதமே சிறந்ததெனஅதனுளுள்ள புருஷ சூக்தத்தைப் பூசாகாலத்திலோதுவர். ஆதிசைவர் யசுர் வேதமே சிறந்ததென அதனுளுள்ள ஸ்ரீருத்திரநமக சமகாதிகளைப் பூசாகாலத்திலோதுவர்.

ஆரியர் நானே பிரமமென்பார். ஆதி சைவர் ஆண்டவ ஞெருவனுண்டு ஆன்மா அவன்றிருவடியடையவேண்டுமென் பார்.

இவைபோன்ற பேதங்கள் பலவுள. ஆயினும் ஆரியர்க்குக் கூறப்பட்ட ஐம்பெரும் வேள்வியும் அறுவகைத்தொழிலும் சோடச கிரியையும் ஸ்நானுஷ்டாந ஜெபதப ஹோம தேவதாபூசை முதலிய நித்திய நைமித்திய கருமங்களும் (சிற்சில பாகங்களில் பேதப்படினும்) பெரும்பாலும் ஆரியருக்கும் ஆதிசைவருக்கும் பொதுவிதியாக விருக்கின்றன. ஆகையாலவைகளை இவ்விடத்தில் விரித்துக் கூறவேண்டுவதில்லையென விடுத்ததென்க.

**ஆதி சைவர்கள் வடதேசமிருந்து வந்தவர்கள் எனல்.**

ஆதி சைவர்கள் ஆதிகாலத்தில் கங்கை சூழ்ந்த நாடுகளாயுள்ள காசிமுதலிய பிரதேசங்களில் வசித்துக்கொண்டிருந்தார்கள். குலசேகரபாண்டியன் காசியாத்திரைபோன காலத்தில் அவர்களைக்கண்டு தம்முடைய நாட்டிற்கழைத்துக் கொண்டுவந்து சேர்த்தானென்று திருவிளையாடற் புராணத்தில் கூறியிருக்கின்றது.

திருவிளையாடற் புராணம், திருநகரங்கண்ட படலம்.

கைவரையெருத்திற்கனவரைகிடந்த காட்சியிற்பொலிந்தொளிர்கோயின், மைவரைமிடற்றுமதுரைநாயகரை மரபுளியருச்சனைபுரிவான், பொய்வரைமறையாகமநெறியொழுகும் புண்ணியமுனிவரையாதி, சைவரைக்காசிப்பதியினிற்கொணர்ந்து தலத்தினிற்குபனஞ் செய்தான்.'

இதுபோலவே இராஜேந்திர சோழனென்னும் பெயருள்ள சோழமகாராஜனொருவன் பூமியாளுங்காலத்தில், கங்காஸ்நானத்திற்குப் போனபோது, அவ்விடத்திலுள்ள ஆதி சைவர்களைக்கண்டு, ஸ்நானஞ்செய்து திரும்பி வருங்காலத்தில், அவர்களையழைத்துக்கொண்டுவந்து, சோழமண்டலங்களிலும்

தொண்டைமண்டலங்களிலும் ஸ்தாபித்தாள். இதன் சரித்திரத்தைச் சித்தாந்த சாராவளி கிரியாபாதம் 90-ஆவது சுலோகத்தில், காண்க.

## II க்ஷத்திரியர்.

### இந்தியாவின் எல்லை.

சங்கச் செய்யுள், புறநானூறு.

"தென்குமரி வடபெருங்கற்
குணகுட கடலாவெல்லை
குன்றுமலை காடுநா
டொன்றுபட்டு வழிமொழியக்
கொடிதுகடிந்து கோறிருத்திப்
படுவதுண்டு பகலாற்றி
யினிதுருண்ட சுடர்நேமி
முழு தாண்டோர் வழிகாவல
விடியென முழங்குமுரசின்
வரையாவீகைக் குடவர்கோவே."

இச்செய்யுளான் தென்றிசைக்கண் கன்னியாகுமரியும், வடதிசைக்கண் மகமேருவும், கீழ்த்திசைக்கண்ணும் மேற்றிசைக்கண்ணும் கடலும், எல்லையாகக்கொண்டமையின் இவ்வெல்லைக்குள்ளடங்கியதாகிய பூமி இந்தியா என்பது பெறப்பட்டது.

ஆகவே, சேரதேசத்தரசன் வீரத்தனமுடையானென்றும் இந்தியாவிலுள்ள 56-தேசத்தரசர்களையும் வெற்றிகொண்டு தனது விற்கொடியை மகமேருவில் நாட்டினன் என்றும் தெரியவருகின்றன.

இஃதன்றியும் பெரியபுராணம் புகழ்ச்சோழநாயனார் புராணத்தில்,

குலகிரியின் கொடுமுடிமேற் கொடிவேங்கைக்குறியெழுதி
நிலவுதரு மதிக்குடைக்கீழ் நெடுநிலங்காத்தினிதளிக்கு

மலர்புகழ்வண்டமிழ்ச்சோழர் வளநாடுமொழுதா
ருலகில்வளரணிக்கெல்லா முள்ளுறையூராமுறையூர்.

இச்செய்யுளான் புகழ்ச்சோழனும் அரசரை எல்லாம்வென்று தனது புலிக்கொடியை மகமேருவின்மீது நாட்டினனென்றுந் தெரியவருகின்றது.

ஆதலால், தமிழ்நாட்டரசர்கள் ஒவ்வொருகாலத்து இந்தியாமுழுவதும் ஏகச்சக்ராதிபதிகளாக ஆண்டிருக்கிறார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

தண்டகநாட்டெல்லை.

தென்றிசைக்கண் கன்னியாகுமரியும், வடதிசைக்கண் விந்தியபர்வதமும், கீழ்த்திசைக்கண்ணும் மேற்றிசைக்கண்ணும் கடலும், எல்லையாகக்கொண்டது தண்டகாரணியம். இது தண்டகனென்னும் அரசனால் ஆளப்பட்டதால் தண்டகநாடென்றும் பெயராம்.

முக்கணனுக்கணநாதர்க்கு முதன்மைத்துண்டீரநாடு
மிக்கதுண்டீரநாடாய்த் தண்டகவேந்தன்றாங்கித்
தக்கதண்டகன்னாடாய்த் தபனன்மாகுலத்துச்சோழன்
றொக்கதார்த்தொண்டமான்காத் தாயதுதொண்டநாடே.

தமிழ்நாட்டெல்லை.

பவணந்திமுனிவர் நன்னூல்.

"குணகடல்குமரி குடகம்வேங்கட
மெனுநான்கெல்லையி னிருந்தமிழ்க்கடலுள்."

இதனால் தென்றிசைக்கண் கன்னியாகுமரியும், வடதிசைக்கண் வேங்கடமும், கீழ்த்திசைக்கண்ணும், மேற்றிசைக்கண்ணும் கடலும், எல்லையாகவுடையநாடு தமிழ்நாடாம்.

ஈண்டு அரசரென்றெடுத்துக்கொண்டது தமிழ்நாட்டரசரைக்குறித்ததாம். இதைப்பண்டைநாள் தொடங்கி ஆண்டுவந்தவர்கள் சேரன் சோழன் பாண்டியனென்னுமூவேந்தராம்.

சோழனாலாளப்பட்டது சோழமண்டலமென்றும், சேரனாலாளப்பட்டது சேரமண்டலமென்றும், பாண்டியனாலாளப்பட்டது பாண்டிமண்டலமென்றும் பெயராம்.

சோழமண்டலம் ஆதொண்டைச்சக்கரவர்த்தியின் பொருட்டு, தென்சோழம் வடசோழமென இருகூறுக்கப்பட்டது. அவற்றுள், தென்சோழம் சோழமண்டலமென்றும், வடசோழம் தொண்டைமண்டலம், என்றும் பெயராயிற்று. ஆகவே தமிழ்நாடானது 4-மண்டலங்களாகப்பிரிந்தது. அவற்றுள்,

சேரமண்டலம்.

வடக்குத் திசைபழனி வான்கீழ்த்தென் காசி
குடக்குத் திசை*கோழிக் கோடாங்—கடற்கரையி
னோரமோ தெற்காகு முள்ளெண் பதின்காதஞ்
சேரநாட் டெல்லையெனச் செப்பு.

சோழமண்டலம் (=தென்சோழம்.)

கடல்கிழக்குத் தெற்குக் கரைபொருவெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையி
லேணாட்டுப் பெண்ணை யிருபத்து நாற்காதஞ்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்.

தொண்டைமண்டலம் (=வடசோழம்.)

மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்கா
மார்க்கு மூவரி யணிகிழக்கு—பார்க்குளுயர்
தெற்குப்†பினாகி திசழிருப திின்காத
நற்றொண்டை நாடெனவே நாட்டு.

பாண்டிமண்டலம்.

வெள்ளா றதுவடக்கா மேற்குப் பெருவழியாந்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகு—முள்ளார்வத்
தான்ட கடல்கிழக்கா மைம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி.

* கோழிக்கோடு=காலிகட். (Calicut) † பினாகி=பெண்ணையாறு.

## மண்டலங்களின் சிறப்பு.

ஔவையார்.

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
றென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து.

இ - ள். சேரநாடு ஆனைகளிற்சிறந்தது. சோழநாடு சோற்றிற் சிறந்தது. பாண்டிநாடு முத்திற்சிறந்தது. தொண்டைநாடு சான்றோரிற் சிறந்தது.

சேரராசனுக்கு இராஜதானி கருவூர் (அல்லது வஞ்சி) பகோதை (அல்லது கொடுங்கோளூர்.)

சோழராஜாக்களின் தலைநகரம் அல்லது இராஜதானி. உறையூர் கும்பகோணம் கங்கைகொண்டான்சோழபுரமாம்.

ஆதொண்டைச் சக்கரவர்த்திக்குத் தலைநகரம் காஞ்சிபுரம்.

பாண்டியனுக்கு இராஜதானி மதுரை கொறுக்கையாம்.

## மூவேந்தரின் குலம்.

சேர சோழ பாண்டியராகிய தமிழ்நாட்டரசர் மூவரும் முறையே அக்கினிகுலத்திலுஞ் சூரியகுலத்திலுஞ் சந்திரகுலத்திலு முதித்தவராவர். பிரமாணம்.

திருவிளையாடற்புராணம், திருவாலவாயானபடலம்.

வெள்ளநீர்வறப்பவாதி வேதியன்ஞாலமுன்போ
லுள்ளவாறுதிப்பநல்கி யும்பரோடிம்பரேனைப்
புள்ளொடுவிலங்குநல்கிக் கதிருடற்புத்தேண்மூவர்
தள்ளருமரபின்முன்போற் றமிழ்வேந்தர்தமையுந்தந்தான்.

என்பதனாலுணர்க.

இம்மூவேந்தர்களின் மகிமையை விசாரிக்குமிடத்தில் ஏனையநாட்டரசர்களைப்போல இவர்கள் சாமானியர்களல்லர் இவர்களுள் பெரும்பான்மையர் சிவானுக்கிரகம்பெற்றவர்கள்.

## மூவேந்தர்களின் தசாங்கம்.

திருவள்ளுவமாலை, சீத்தலைச்சாத்தனார்.

மும்மலையு மூன்னாடு மூன்னதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றான்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பெயர் ... | சேரன் ... | சோழன் ... | பாண்டியன். |
| 2 | மலை ... | கொல்லி ... | நேரி ... | பொதிகை. |
| 3 | நாடு ... | குடநாடு ... | புனனாடு ... | தென்னாடு. |
| 4 | நதி ... | பொருனை ... | காவிரி ... | வைகை. |
| 5 | பதி ... | கருவூர் ... | உறையூர் ... | மதுரை. |
| 6 | முரசு ... | மங்களம் ... | வெற்றி ... | கொடை. |
| 7 | தமிழ் ... | இயல் ... | இசை ... | நாடகம். |
| 8 | கொடி ... | விற்கொடி ... | புலிக்கொடி ... | மீனக்கொடி. |
| 9 | ஊர்தி ... | கனவட்டம் ... | பாடலம் ... | கோரம். |
| 10 | மாலை ... | பனை ... | ஆத்தி ... | வேம்பு. |

## மும்மண்டலத்தின் சிவாலயங்கள்.

இம்மூவேந்தர்களால் 1,008-சிவாலயங்களும் 108-திருப்பதிகளும் உண்டாயிருக்கின்றன, மறைந்து போனதுபோக இக்காலத்திலுள்ள சிவாலயங்கள் 338. அவற்றுள்,

| | | |
|---|---|---|
| வடபதிகள் ... ... ... | | 6 |
| துளுவநாடு ... ... ... | | 2 |
| வடசோழம், (தொண்டமண்டலம்) ... | | 36 |
| தென்சோழம். | | |
| மகதநாடு ... ... | 23 | |
| காவிரியின் வடகரை ... | 66 | |
| ,, தென்கரை ... | 133 | |
| | | 222 |
| பாண்டிநாடு ... ... ... | | 53 |
| சேரநாடு. | | |
| கொங்குநாடு ... ... | 13 | |
| மலைநாடு ... ... | 3 | |
| | | 16 |
| ஈழநாடு ... ... ... ... | | 3 |
| | | 338 |

### மூவேந்தர் ஒழுக்கம்.

இவ்விதமாகத் தமிழ்நாட்டுள்ள அரசர்கள் நல்லொழுக்கம் ஆசாரம் தேவதாபக்தி நீதிவழுவாதுநடத்தல் முதலியவற்றில் சிறந்துள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள். அதனாலன்றோ சிவபெருமான் அவர்களன்பினையும் நீதியினையும் ஆங்காங்கு வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

ஐம்பத்தாறு தேசத்து அரசர்களுள்ளும் இத்தமிழ்நாட்டினுள்ள அரசர்களைப்போலச் சிவபுண்ணியமும் புகழும் நற்கதியும் பெற்றவர்கள் வெளிப்படவில்லை.

அரசர்க்குரிய வேதமோதல் வேள்விசெய்தல் ஈதல் உலகோம்பல் படைபயிலல் மனமடக்கலாதிய ஷட்கருமங்களையெல்லாம் ஆரியகாண்டத்தில் கூறியிருத்தலின் ஈண்டுவிரிக்க வேண்டுவது மிகையாமென்க.

ஆயினும் ஆண்டெடுத்தோதப்பெறாத சில்அரியவிதிகளை அகஸ்தியர் விக்கிரமசிங்க பாண்டியனுக் குபதேசித்தருளினர். அதை ஈண்டெடுத்துரைப்பாம்.

### மநுநீதியுரைத்தல்.

பாவநாசத்தலபுராணம்.

விக்கிரமசிங்கபாண்டியனுக்கு அகஸ்தியர் மனுநீதியுரைத்தது.

ஆறிலொன்றிறைமாகவே
கூறுகொண்டதுகோடலா
மீறில்வெந்துயரெய்தினோர்க்
கூறுநீக்குவதுன்கடன்.

ஆதிநூலினராவின
மாதர்பாலர்வயோதிய
ரோதுவெம்பிணியோர்தமைப்
பாதுகாத்திடல்பண்பரோ.

காமமாதிகடந்திடல்
வாமமாதிமறந்திட

லேமவில்வியையேத்துதல்
பூமிமன்னவர்பொற்பரோ.

ஊக்கநெஞ்சிலுறைத்தலு
மாக்கநாடொறுமாக்கலும்
வாக்குமாறலேமாற்றலுந்
தூக்கிமன்னவர்சூழ்ச்சியால்.

ஒற்றர்சூழ்வருலகினி
லற்றமானவநீதியு
மற்றுமோர்ந்தவைமாற்றுதல்
கொற்றமன்னவர்கொள்கையாம்.

போதம்வாய்ந்தபுரோகித
ராதல்கூறுமமைச்சருந்
நீதிநூல்பயில்செல்வரு
மோதில்வேந்தருக்குண்மையோர்.

அச்சமின்மையவாவறல்
விச்சையாவும்விரும்புத
றுச்சமானதுறப்பதி
லிச்சைமன்னரியற்கையாம்.

வரைவிலாக்கொடைவண்மையும்
புரையின்மாதவர்ப்போற்றலும்
விரவுசூதைவெறுத்தலுந்
தரைபுரப்பவர்தன்மையாம்.

## வேறு.

குடிபுறங்காத்தல்வேகக்கூற்றுவந்தெதிர்த்தபோது
மடியிலாச்சேனைசேர்த்தன்மாற்றலரைபோதற்குந்
தடைபடுமரணுண்டாக்கல்சந்ததம்பொச்சாப்பின்மை
புடவியோர்புயத்திற்றாங்கும்புலவருக்குறுதியாமால்.

சிற்றினநட்புநீத்தல்சீரியருறவுபோற்றல்
சுற்றம்வந்தடுத்தகாலைத்துயரொழித்தவரைக்காத்தல்

பற்றலர்வலியுந்தங்கள்வலியுமேம்பாடும்பார்த்தல்
வெற்றிவேலரசர்க்கெண்ணவேண்டியகருமமாமால்.

என்பனவற்றாலுணர்க.

## சேரராஜன்பெருமை.

சேரமான்பெருமாள் சிவபெருமானாலே பாணபத்திரருக்காகத் திருமுகம் அனுப்பப்பெற்றவர். சுந்தரமூர்த்திசுவாமிகள் அனுக்கிரகப்பெற்றுத் தேகத்தோடு திருக்கைலாயமடைந்தவர்.

## சோழராஜர்கள் பெருமை.

முசுகுந்தன் பூர்வசென்மத்தில் குரங்காயிருந்து வில்வத்தைப்பறித்துச் சிவபெருமான்மீது எறிந்த புண்ணியத்தினால் சக்கரவர்த்தியாயினான்; இவன் தெய்வலோகத்தையாளு இந்திரன் இராக்கதர்களாற் போரில் தோல்வியடைந்தகாலத்தில், அவனுக்குதவியாயிருந்து செயமடையச்செய்தான். அங்ஙனஞ் செய்ததற்குப் பரிசாகத் தேவேந்திரனது ஆத்மார்த்தமாகிய தியாகராசப் பெருமானைப் பெற்றுக்கொண்டுவந்து திருவாரூரில் ஸ்தாபித்துப் பூசைநடாத்திவந்தவன்.

காடுவெட்டிய சோழன் காஞ்சிபுரத்தில் வாசஞ்செய்தவன்; இவன் சிவபெருமானிடத்து வைத்த அன்பினால் மதுரையிலெழுந்தருளியிருக்கிற மீனாட்சிசுந்தரேசுரரைத் தரிசிக்க ஆசையுற்றிருந்தான் அதன்மேல் மதுரைக்குச்செல்லின் பாண்டியனால் சிறைப்படுத்தப்படுவேனென்றஞ்சி வருந்துகையில், சிவபெருமான் அச்சோழனை இராக்காலத்தில் கொணர்ந்து தமது கோயிற்கதவிற் பாண்டியனால் மீன முத்திரைவைத்திருந்ததை யுடைத்து உமாதேவியுடன் தரிசனங்கொடுத்தனுப்பிப், பின் கதவங்களுக்குத் தமது இடபமுத்திரையை வைத்தருளினர். இவ்விதமான திருவருளைப்பெற்றவன்.

கோச்செங்கட் சோழநாயனார், இவர் முன்சனனத்திற் சிலம்பியாயிருந்து சிவபெருமானுக்குப் பட்டுநூலிழைத்துப்

பந்தலிட்டுப் பூசித்தவர். அந்தப்புண்ணிய விசேடத்தால் அரசனாகப்பிறந்து அரசாண்டு அநேக சிவாலயங்களும் அந்தணர்களுக்குத் திருமாளிகைகளுங் கட்டிவைத்துச் சிவபதமடைந்தவர். இவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராக இருந்து பூசிக்கப்பட்டுவருகிறார்.

புகழ்ச்சோழநாயனார், இவர் உறையூரிலிருந்து அரசு செலுத்திக்கொண்டிருக்கையிற் கொங்குநாட்டரசன் குடகுநாட்டரசன் முதலியோர் கொண்டுவந்து செலுத்தும் திறைப்பொருளைப் பார்க்கும்படி கருவூர் என்னும் இராஜதானியில் வந்திறங்கியிருந்து. திறை செலுத்தினாக்கெல்லாஞ் சன்மானஞ் செய்தனுப்பினார். அக்காலத்து அதிகனென்னும் ஓர் மலைநாட்டரசன் திறைசெலுத்தத் தவறிப்போனதனால் அவன்மேற் படையெடுத்துப்போய் அவன் படைவீரர்களையெல்லாம் தமது படைவீரரால் வெட்டி அவர்கள் தலைகளைக் கொண்டுவரும்போது; அத்தலைகளில் ஒன்றில் சடையிருக்கக் கண்டு சிவனடியார்களுக்குத் தீங்குசெய்தோமென்று நினைத்து அத்தீங்கினை யொழிப்பதற்காகத் தீயைவளர்த்து அத்தீயினுள் அத்தலையை ஏந்திக்கொண்டு தாமும் இறங்கிச் சிவபதமடைந்தவர். இவரும் அறுபத்துமூன்று நாயன்மாரிலொருவராகப் பூசிக்கப்பட்டு வருகிறார்.

அபயகுலசேகரசோழன், இவன் திருவாரூரை இராஜதானியாகக்கொண்டு வாழும் நாளில் ஓதுவார்கள் ஒவ்வோர் தேவாரங்களைப் பண்ணோடோதக்கேட்டு வியப்புற்று அத்தேவார முழுவது மெங்குளவென்று விசாரித்து அவைபகப்படாது மறைந்துவிட்டனவென தெரிந்து விசனமுற்றிருக்குங் காலை, * பொல்லாப்பிள்ளையாரைப் பூசித்தருள்பெற்ற † நம்பி

---

* பொல்லாப்பிள்ளையார் உளியினால் பிளந்து திருவுருச்செய்யப்படாத சுயம்புமூர்த்தி. பொல்லுதல்=பிளத்தல்.

† நம்பியாண்டார்நம்பி—அறுபத்துமூன்று நாயன்மார் சரிதங்களைத் திருவந்தாதியெனப்பாடியருளினவர்.

யாண்டார்நம்பியென ஒருவரிருக்கின்றாரெனக்கேட்டு அவர்பாற்சென்று வணங்கித் திருமுறைகள் எங்குளவென்று விநாயகர்பால் தெரிந்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்தான்.

அந்நம்பியாண்டார்நம்பி அங்ஙனமே பொல்லாப்பிள்ளையார்பாலுணர்ந்து, அவை சிதம்பரத்திற் சிவபெருமான் நடனஞ்செய்கின்ற சிற்சபையின்மேல்பாலுளவென்றும் அவை சேமித்திருக்குமிடத்தில் திருக்கரத்தால் இலச்சினையிட்டிருக்குமென்றுங் கூறியருளுதலும், அவ்வடையாளப்படிகண்டு அத்திருமுறைகளை எடுத்து வெளிப்படுத்தினவன்.

அநபாயச்சோழன், இவன் அரசாண்டுவருநாளையில், சமணநூலாகிய சீவகசிந்தாமணியை வாசித்து அதனிடத்து மிகவும் அன்புள்ளவனாயிருப்பதைக்கண்டு, அவனுக்கு மந்திரியாயுள்ள சேக்கிழார் நாயனார் இந்நூல் பொய்நூலாம, இம்மைப்பயனையொழிப மறுமைப்பயனைத் தராதென்றுகூற, அரசன் மறுமைப்பயனைத் தரத்தக்கநூல் எது? எனக்கேட்க, உலகத்தின்கண் சிவனடியார்களது பெருமையைச் சொல்வதற்குத் திருவாரூரிலெழுந்தருளியிருக்கும் தியாகராஜப்பெருமான் "தில்லைவாழந்தணர்" என்று முதலடி யெடுத்துக்கொடுத்தருள, சுந்தரமூர்த்திசுவாமிகள் பதினொரு திருப்பாடல்களாகப் பாடியருளிய திருத்தொண்டத்தொகைக்குத், திருநாரையூரிலெழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையார் பொருள் அருளிச்செய்ப அதைக்கேட்டு, நம்பியாண்டார்நம்பி தமது பெயரைமுன்னிட்ட கலித்துறைத் திருவந்தாதி செய்தருளினர் என்று, அந்த அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திரத்தை எடுத்துக்கூறுதலும், அதுகேட்ட அபாயச்சோழன் நம்பியாண்டார்நம்பி திருவந்தாதி தொகுத்துக்கூறியதேயன்றி விரித்துக்கூறவில்லை. ஆகையாலதைப் புராணமாக விரித்துரைக்க வேண்டுமென, சேக்கிழார் சிதம்பரத்தின்கண் எழுந்தருளிய நடராசப்பெருமான் சந்நிதானத்தில் வந்திருந்து நட

ராசப்பெருமான் உலகெலாமென அடியெடுத்துக்கொடுக்கப் பெரியபுராணம் பாடியருளினர். இங்ஙனம் பெரியபுராணம் பாடுதற்கு ஏதுவாயிருந்த அநபாயச் சோழன் முதலிய சிவ நேசமுள்ள சோழர்களை எல்லாம் எடுத்துரைக்கிற் பெருகு மென விடுத்ததென்க.

### பாண்டிய ராஜர்கள் பெருமை.

குலசேகரபாண்டியன் மதுரையில் எழுந்தருளியிருக்கிற மீனாட்சி சுந்தரேசுரர்களுக்கு ஆலயம் செய்வித்து மதுரைந கரைத்தையும் உண்டுபண்ணி ஆதிசைவர்களைக்காசியிலிருந்து கொண்டுவந்து அந்நகரத்தில் ஸ்தாபித்தவன்.

மலையத்துவசபாண்டியன் 10,000-வருடமிருந்து மது ரையையாண்டு 99-அசுவமேத யாகஞ்செய்து 100-ஆவது யாகத்தில் உலக மாதாவாகிய உமாதேவியாரை மகளாகப்பெ ற்றவன். தடாதகைப்பிராட்டியார் சோமசுந்தர பாண்டியன் உக்கிரகுமாரபாண்டியன் இம்மூவரும், முறையே உமாதேவி யார் சிவபெருமான் முருகக்கடவுளாதலின், அவர்கள் பெரு மையையெடுத்துச்சொல்ல ஒருவராலுமுடியாது.

இராஜசேகர பாண்டியன் அன்பு மிகுதியினாலே வெள் ளியம்பல வாணராகிய நடேசப்பெருமானைக் கான்மாறியாடி யருளும்படி செய்தவன்.

குலபூடண பாண்டியன் இவன் தன்னாட்டிலுண்டான க்ஷாமம் நீங்கச் சிவபெருமானிடத்து உலவாக்கிழிபெற்றவன்.

வரகுணபாண்டியன் இவன் பக்திமிகுதியினாலே சிவபெ ருமான் சிவலோகங் காட்டியருளத் தரிசித்தவன்.

குலசேகர பாண்டியன் இவன் தனக்கும் இடைக்காட ரென்னும் புலவருக்குமுள்ள பிணக்கைச் சிவபிரானாலே தீர்த்தருளப்பட்டவன்.

அரிமர்த்தன பாண்டியன். இவன் மாணிக்கவாசகசுவாமிகளை மந்திரியாகக்கொண்டு, அவரால் நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டுவந்துதரப்பெற்று, பின்பு சோமசுந்தரக் கடவுளை மண்சுமக்கச்செய்து, அவரைப் பிரம்பாலடித்து, அவரது திருவருள்பெற்றவன்.

கூன்பாண்டியன். இவன் திருஞானசம்பந்தசுவாமிகளால் தனது கூனல் நிமிரப்பெற்றுச் சுரவியாதி நீங்கிச்சமணரைக் கழுவிலேற்றி, முன்போலச் சைவமதத்துட் பிரவேசித்தவன்.

### மூவேந்தரும் தெய்வத்தன்மை பெற்றவர்கள் எனல்.

இன்னும் இத்திராவிடவரசர்களாகிய சேர சோழ பாண்டியர் மூவரும் தெய்வத்தன்மை பெற்றுள்ளவர். இதற்குப் பிரமாணமென்னை? எனின், ஒருகாலத்தில் இவர்கள் நாட்டில் மழை பெய்யாமையால், பயிர்கள் வளராது பசிப்பிணிமேலிட்டுக் குடிகள் வருந்தக் கண்டு, இம்மூவேந்தரும் மதுரையின்கணுள்ள சொக்கலிங்கப் பெருமானைப்பூசித்து, அவர் திருவருள்பெற்றுத், தெய்வலோகஞ்சென்று இந்திரனுக்குத்தெரிவிக்க, அவன் இவ்வரசர்களுக்குத் தனித்தனி தவிசிட்டு இருக்கும்படி சொன்னான். சேர சோழர்கள் அவனுத்தரவின்படி இருந்தார்கள். பாண்டியராசன் இந்திரனுக்குச் சமானமாக உயர்ந்த ஆசனத்திலேறியிருந்தான். தேவேந்திரன் முன்னையரிருவருக்கும் வேண்டுவதாகிய மழைபெய்யும் வரத்தைக் கொடுத்தனுப்பிவிட்டுப், பின்னவனாகிய பாண்டியனிடத்துக் கோபங்கொண்டவனாயிருந்து அதை உள்ளடக்கிக்கொண்டு, அநேக கிங்கிலியராலுஞ் சுமக்கமுடியாத ஓர் ஆரத்தை அப்பாண்டியன் கழுத்திலிட்டான். அதைப்பாண்டியன் யாதொருவருத்தமுமில்லாமற் றாங்கிக்கொண்டிருந்ததைக் கண்டு பயந்து, அவனுக்கு ஆரந்தாங்கு பாண்டியனெனப் பெயர்கொடுத்தனுப்பினான். இச்சரித்திரம் பதினெண் புராணங்களிலொன்றாகிய ஸ்காந்த

புராணத்தில், ஈசஸம்ஹிதையில் ஆலாஸ்யமான்மியமென்ற திருவிளையாடற் புராணத்திற் கூறப்படுகின்றது. பின்வருஞ் செய்யுட்களிற் காண்க.

## திருவிளையாடற் புராணம்,
### இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்.

வான்வழிவந்தமூன்று மன்னரும்பொன்னாடெய்தி
யூன்வழிகுலிசவைவே லும்பர்கோன்மருங்கிற்புக்கார்
தேன்வழிபோந்தின்கண்ணிச் சேரனுமார்த்தார்வேந்துங்
கான்வழிதாருநாடன் காட்டியதவிசின்வைக.

மைக்கடல்வறப்பவென்ற வாகைவேற்செழியன்மௌலிச்
செக்கர்மாமணிவிற்காலத் தேவர்கோன்றவிசிலேறி
யொக்கவீற்றிருந்தானாக வும்பர்கோனழுக்காறெய்திப்
பக்கமேயிருந்தவேனைப் பார்த்திபர்முகத்தைப்பாரா.

முகமனன்கியம்பிநீவிர் வந்ததென்மொழிமினென்ன
மகபதியெங்கணாட்டின் மழைமறுத்தடைந்தேமென்று
ரகமலர்ந்தனையார்நாட்டி னளவும்வான்சுரக்கநல்கி
நகைமணிக்கலன்பொன்னாடை நல்கிநீர்போமினென்றான்.

அன்னவரகன்றபின்னை யமரர்கோன்கன்னிநாடன்
றன்னரியணைமேலொக்கத் தருக்கினோடிருக்குமாறும்
பின்னருமாரிவேண்டாப் பெருமிதவீறுநோக்கி
யின்னதுபுலப்படாமை யினையதோர்வினையமுன்னா.

பொற்புறவரிசைசெய்வான் போலளவிறந்தோர்தாங்கி
வெற்புறழ்திணிதோளாற்றன் மெலிவதோராரந்தன்னை
யற்புறவளித்தான்வாங்கி யலர்மதுத்தார்போலீசன்
கற்புடையுமையாண்மைந்தன் கதுமெனக்கழுத்திலிட்டான்.

கண்டனன்கடவுளாதன் கழியவுமிறும்பூதுள்ளங்
கொண்டனனின்றுதொட்டுக் குவலயமிதுழாவுசிம்பத்
தண்டழைமார்பவாரந் தாங்குபாண்டியனென்றுன்னை
மண்டலமதிக்கவென்றான் வானநாடுடையமன்னன்.

இங்ஙனம் தமிழ்நாட்டரசர்கள் தெய்வத்தன்மையுள்ளாராய்ச் செங்கோல் நடாத்தி வந்திருக்கிறார்கள்.

## III. வைசியர்.

சாதியேற்பாடு தொழிலைப்பற்றி வந்ததாதலின், மூன்றாங்குலத்தினர் வைசியரென்றும், அவர் கிருஷி வாணிபம் கோசம்ரக்ஷணை என மூத்தொழில்களையுடையாரென்றுங் கூறப்பட்டனர். ஈண்டு மூத்தொழிலென்றது சீவனவிருத்தியைக் குறித்ததாம்.

**வைசியர் மூவகைச் சீவனத்தொழில்.**

கோக்களைக்காத்தலு மாப்பொருளீட்டலு
மேர்த்தொழின்மூன்றும் வைசியர்தந்தொழிலே.

என்பது பிங்கலந்தை நிகண்டானுணர்க.

இம்மூத்தொழிலுடையார் ஆரியத்தில் வைசியரென்றும், திராவிடத்தில் வேளாளரென்றுங் கூறப்படுகின்றனர்.

உழவுத்தொழில் செய்வதால் கிருஷியும், அத்தொழிற்கு உபகரணமாயுள்ள ஆன்காத்தலும், கிருஷியாலுண்டான பொருளைப் பண்டமாற்றலால் வாணிகமும், ஒன்றைவிட்டொன்று பிரித்தற்குக்கூடாது. ஆகவே, இம்மூத்தொழிலையுமுடையாரை வேளாளரெனப் பொதுமுகத்தாற் கூறப்பட்டது.

ஆனிரையாதிகளுக்கு உணவாகிய வைக்கோல் கொள்ளு முதலியவையுதவலும், தானியம் விளைந்தகாலத்துப் பதினெண்குடி மக்களுக்குக் களவேள்விசெய்தலும், எலி எறும்பு காகம் குருவி முதலியவைகளும் உண்டுகளிப்பதாற், சகலசீவர்களுக்கும் இவர்கள் உபகாரியாயிருத்தலும் உடையராதலின், இவர்களுக்கு வேளாளரென்று பெயர் கூறப்பட்டது. இதற்குப் பிரமாணமாகவே, மகாபாரதம் ஆரண்யபருவம் ஐந்தாமத்தியாயத்தில், சாதுர் வருணங்களுக்காகத் தொழில்களை வகுக்கு

மிடத்து 1-அந்தணருக்கு ஏற்றலையும், 2-க்ஷத்திரியர்க்கு உலக பாலனத்தையும், 3-வைசியருக்கு போஷணையையும், 4-சூத்திரருக்கு ஏவல்செய்தலையும், சிறந்த தொழில்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனை உல்சன் துரையாற் செய்யப்பட்ட இந்தியர் ஜாதிநூலில் எடுத்தெழுதப்பட்டிருக்கின்றது.

Vide India caste by Mr. Wilson Page 253.

"Taking alms belong to the Brahmins, protection (palana) being the duty of the Kshatriyas, supporting (poshana) that of the Vaishyas, and service (shushrusha) that of the Shudras."

இதன் மொழிபெயர்ப்பு.

உல்சன் துரையாற் செய்த ஜாதிநூல். 253-பக்கம். தானமேற்றல் அந்தணருக்கும், உலகபாலனம் க்ஷத்திரியருக்கும், போஷணம் வைசியருக்கும், சிஸ்ருஷை சூத்திரருக்கும் உரியதாம்.

ஈண்டுக்கூறிய போஷணை என்பது வைசியருக்கு ஏற்பட்ட, ஓதல் வேட்டல் ஈதல் என்னும் வைதிக கருமங்கள் மூன்றனுள் கடைசியாயுள்ள ஈதலில் அடங்கியிருக்கிறது.

வைசியர் அறுதொழில்.

ஓதல்வேட்ட லுபகாரமன்றியும்
வாணிபம்பசுக்காவ லுழவுதொழிலெனப்
புகன்றவையாறும் பூவைசியர்தொழிலே.

ஆகவே பூவைசியராகிய வேளாளருக்கே வைசியபட்டம் சித்தமாம். அங்ஙனங் கூறவேண்டுவதென்னை? எனின்,

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர். எனவும்,

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால். எனவும்,

வேதத்துள் கூறப்பட்டிருப்பதை நோக்கி எனக்கொள்க.

உயர்ந்த பொன்னென்பதும் தாழ்ந்த பொன்னென்பதும் மாற்றுரைக்கல்லாலறியலாம். அதுபோலச் சாதியின் உயர்வு தாழ்வுகளை அவரவர் செய்யும் கருமத்தாலறியலாம்.

பிரமாணம்.

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

என்பதனாலுணர்க.

தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு.

இதனுண்மை யறிந்துணரா மாக்கள் தத்தம்வாய்வந்தவாறே கூறுவர் அதுசித்தாந்தமன்றாம்.

ஏரெழுபது.

நிறைக்குரியவந்தணர்கள் நெறிபரவமநுவிளங்கத்
தறைக்குரியகாராளர் தமதுவரம்பினிதோங்க
மறைக்குரியபூமனையும் வண்டுளபத்தாமனையும்
பிறைக்குரியநெடுஞ்சடிலப் பெம்மானையும்பணிவாம்.

மகா கவியாகியகம்பர் தாம் எடுத்துக்கொண்ட ஏரெழுபது என்னும் நூன்முகத்து நிறைக்குரிய அந்தணர்கள் நெறிபரவ என அந்தணரை முதல் வருணத்தாரெனவும், மநுவிளங்கவென அரசரை இரண்டாம் வருணத்தாரெனவும், தறைக்குரிய காராளர் தமது வரம்பினி தோங்கவென வேளாளரை மூன்றாம் வருணத்தாரெனவும், முறையே வாழ்த்தியருளினார். இதனால் வேளாளர் மூன்றாம் வருணத்தாராகிய வைசியரென்பதே தேற்றம்.

### வேளாளர் என்பதன் பதப்பொருள்விளக்கம்.

வேளாளர், வேளாண்மையர், வேள்வியாளர், வெள்ளாளர் எனப் பலகாரணத்தால் திரிந்து வழங்கும்.

### (1) வேளாளர்.

அவற்றுள், வேளாளர் என்பதற்குப் பொருள்கூறுமிடத்து, வேள்=நன்னிலம், ஆளர்=ஆள்பவர் என்பதாம். எனவே, ஐந்திணையுள் சிறந்தது மருதநிலம், அதனை கிருஷியால் வளப்படுத்தி யாள்பவரென்பதாம்.

வேள்=நன்றி, ஆளர்=ஆள்பவர் எனவே நன்றியாளர்.

வேள்=விருப்பம், ஆளர்=ஆள்பவர் எல்லாரும் தம்மை விரும்பச் செய்பவர்.

வேள்=ஆண்மகன், ஆளர்=ஆள்பவர். எனவே, இளங்கோக்களாய் அரசாண்டவரும், மன்னர்பின்னரென மந்திரி பிரதானி சேனாதிபதி தானாதிபதியாயிருந்தவரும், குடியரசுக்காலத்து முதன்மையவராயிருந்தவரும், காணியாளராயிருந்தவரும், நாட்டாண்மைபெற்றுப் பதினெண்குடிகளையும் வசப்படுத்தியாண்டவரு மிவரென்பதாயிற்று.

வேள்=ஈகை, ஆளர்=ஆள்பவர், எனவே ஈகையாளராம் கொடையாளர் என்பதுமது.

வேள்=சத்தியம், ஆளர்=ஆள்பவர் எனவே சத்தியவந்தராம்.

"மெய்மையுங் கொடையும் வேளாண்மை யாகும்."

என்பது பிங்கலந்தையிற்காண்க.

விளைவாளர் என்பது வேளாளரென மருவியதென்பாருமுளர்.

## (2) வேளாண்மையர்.

வேளாண்மையர்=கிருஷியாதியமுத்தொழிலையுடையார்.

வேள்=அரசரால் விரும்பப்படுந்தன்மையும், ஆண்மையர்=வீரத்தையுமுடையார். எனவே மந்திரித்தலைமை சேனைத்தலைமை என்னும் ஆண்மைபூண்டொழுகுவார் என்பதாம்.

வேளாண்மை=உபகாரம். அதைச்செய்பவர் வேளாண்மையர்.

> தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
> வேளாண்மை செய்தற் பொருட்டு.

## (3) வேள்வியாளர்.

களத்தில் நெற்கதிரைத் தேவர் அந்தணர் தொழிலாளி முதலியவர்களுக்கு வழங்குவதால் "களவேள்வியையும்" வேதமோதலாற் பிரமவேள்வியையும், அக்கினிகாரியாதி செய்வதால் தெய்வ வேள்வியையும், சிராத்தாதிசெய்வதால் பிதுர் வேள்வியையும், அதிதி அப்பியாசிகளுக்கு அன்னமிடுதலால் மானுஷவேள்வியையும், ஆக "ஐம்பெரும் வேள்விகளையும்" செய்வதால் வேளாளர்களுக்கு வேள்வியாளரென்றும் பெயராம்.

வேள்வி=அருச்சனை, ஆளர்=செய்பவர். அருச்சனையாதிய சிவபூசைசெய்பவர்.

## வேளாண்குடி என்பது.

உயர்நிலைக்காப்பிய வழக்குச்சொன்னடைச், சிறப்புமுன்னிலைக் காரணம்பின்னிலை, யிடுகுறிச்சாதிக் கூற்றுத்தொடர்நிலை, கருத்துப்பொருட்புறத் துயர்திணைக்காட்சிப், பெருட்பண்மைத் தோற்றத் தன்மொழித்தொகைச் சொற்றொடர் ஆதலின், இதனை வேளாண்மைக்குரிய குடிப்பிறப்பினரென்று விரித்துக்கொள்க.

(4) வெள்ளாளர்.

இது வெள்-அம்-ஆளர், என்ற மூவசையாலாகிய ஓர் பதமாம். இதில் அம் என்ற இடைகுறைந்து வெள்ளாள ரெனத்திரிந்ததாம். இனி, வெள்ளம் ஆளரென்பதில், வெள் ளம் நீரின்பெருக்கினை, ஆளர் கடலிற்செல்லாது மறுத்து வயலிற் செலுத்தி நிலத்தினை வளப்படுத்திப் பயன்கொள்ப வரென்றுமாம்.

CHINGLEPUT MANUAL OF 1879. P. 211.

KAŅIATCHI-KARAR.

'Taking the Chola epoch as the very earliest which yields any reliable data, we find the propriety, exlusively consisting of the class of Vellalars. These have now been incorporated with the Sudra caste, but this has been the result of the Brahminical ascendency which belongs to a later period. Originally when they were imported by Adonda Chakravarti Chola to colonize Thondamandalam they formed the highest class, and the name of the Brahmin was unknown. Accordingly they enjoyed a monopoly of priveleges as of rank and formed the sole proprietary body. It has been shewn above how they were distributed in little bodies over the country in villages or Townships the lands of which they held and the concerns of which they managed in common. The derivation of the name by which they were designated is from Kani the Tamil for land, and adsi = adchi the root of which is al, owner, lord. This name must have been bestowed consequently long before Mernu or Sanscrit or Brahmins were even known here. In process of Brahmins and a few other tribes were also added to the list of the proprietary share-holders who finally though still calling themselves by the original tittle Kaniatchi-karar become known by the Mahomedan name of Mirasdars or holders by right of inheritance.

செங்கல்பட்டு ஜில்லா சரித்திரம், (211-பக்கம்.)
காணியாட்சிக்காரர்.

நம்புதற்குரிய பூர்வகாலவரையறை சோழர்காலமாகவே கொள்ளவேண்டும். காணி ஆட்சி அக்காலந்தொடங்கி வேளாள வகுப்பினர்க்கே உரியதாகவிருக்கின்றது. இக்காலத்தில் அவர்களைச் சூத்திர வகுப்பிற் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் பிற்காலத்து வந்த பிராமணர்களின் தலையெடுப்பேயாம். பூர்வத்தில் ஆதொண்டைச் சக்கரவர்த்தியிவர்களைத் தொண்டைமண்டலத்தில் கொண்டுவந்து குடியேற்றினபோது இவர்கள்தான் சாதியுள் எல்லாஞ் சிறந்தவர்களாகவிருந்தார்கள். அக்காலத்தில் பிராமணரென்ற பெயரே தெரியாதிருந்தது. ஆகவே கௌரவத்துக்குரிய சகலசுதந்தரமும் இவ்வேளாளர்களே யனுபவித்துவந்தார்கள். அன்றியும் காணியாட்சி வகுப்பினராகவேயேற்பட்டிருந்தார்கள். இந்நாட்டில் இவர்களைச் சிற்சிலவகுப்பாகப்பிரித்ததும், இவர்களிருக்கும் நிலத்தை நகரங்களாகவும் கிராமங்களாகவும் பிரித்ததும், இவர்கள் அந்த நாட்டை நடத்திவந்ததும், மேலேகுறிக்கப்பட்டிருக்கின்றன. காணியாட்சி என்பது தமிழில் காணி=நிலம், ஆட்சி=ஆளுதல் எனவே, நிலத்துக்குச் சுதந்தரக்காரர் எசமானர் அல்லது கர்த்தர் என்பது பொருளாம். மனுவின் காலத்துக்கு முன்னே, அல்லது சமஸ்கிருதத்திற்குமுன்னே, அல்லது பிராமணரென்பவர்கள் இவ்விடத்துத் தெரிவதற்கு முன்னே, இந்தப்பெயர் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். பிராமணர் காலத்துக்குப்பின்னும் சில சாதியர்களைக் காணியாளர்களின் சாபிதாவில் சேர்க்கப்பட்டது. இவர்கள் பூர்வீக பெயரினால் காணியாளர்கள் என்று சொல்லிக்கொண்டபோதிலும், மகமதியர் காலத்தில் சுதந்தர பாத்தியதைபற்றிவரும் மிராசுதாரர் என்று வழங்கப்பட்டு வருகின்றார்கள்.

TANJORE MANUAL.

Of the various sections above enumerated, Soliars & Kondaikattis are considered to be the most ancient. Possi-

bly also the Sola country was the birth place of the Vellars, and the foreign emigrants in other parts of the Tamil country acquired this name from analogy of occupation.

1. Vellalars are exclusively the inhabitants of Tamil country.

2. In religious observances they are more strict than the generality of Brahmans.

3. They abstain from both intoxicating liquors and flesh-meat. They are remarkably cleanly in their habits.

4. They do not permit the re-marriage of widows or indulge in polygamy.

5. They never worship demon gods or village dieties. If any classes which call themselves vellas follow demonatory it may be presumed they are certainly not true Vellalars. Most of them profess the Siva faith; but some apparently converts to the school of Ramanujachari are follower of Vaishnava set.

The occupations of the generality of the Vellalars is aggriculture in which they excel all other classes; but many are found in the various grades of the Government Service, more especially as Karnams or Village Accountants; some are engaged in trade. They do not however condescend to work of degrading nature. They carry on aggriculture by "Pannayals" or predial laborers.

தஞ்சாவூர்ச் சீமை சரித்திரம்.

மேற்குறித்த அனேக பிரிவுகளுள் சோழியரும் கொண்டைகட்டிகளும் பூர்வமாயுள்ளவர்கள். நம்பத்தக்கதாகவே சோழநாடானது வேளாளர்களுக்கு உற்பத்திஸ்தானமாக விருக்கிறது. வேறு தமிழ்நாட்டில் குடியேறினவர்களும் இங்

நாட்டையே தங்கள் பூர்வத்திலிருந்த இடமாகக் கூறுவதால் மேற்கூறும் கூற்று ஒற்றுமையுள்ளதாக இருக்கின்றது.

1. வேளாளர் முழுதும் தமிழ்நாட்டாரே.

2. சமயானுஷ்டிப்பில் பிராமணர்களைவிட அதிக நெறியுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

3. அவர்கள் மது மாமிசங்கள் கொள்ளார்கள்.

4. விதவாவிவாகமாவது அல்லது பலதாரவிவாகமாவது செய்வதில்லை.

5 அவர்கள் பிசாசுகளையாவது, அல்லது கிராம தேவதைகளையாவது ஆராதிப்பதில்லை. இதில் எந்த வகுப்பாராவது பிசாசுகளை ஆராதிப்பரென்றால், அவர்கள் உண்மையான வேளாளரல்லராவர். அவர்கள் பெரும்பான்மையும் சிவமதத்தையே கொண்டாடுகிறார்கள். ஆனால் சிலர் விஷ்ணுமதமாகிய இராமானுஜமதத்தில் புகுகிறார்கள்.

வேளாளர்களின் தொழிலானது சாதாரணத்தில் பயிர்த்தொழிலாம். இத்தொழிலில் மற்றையவர்களைப்பார்க்கிலும் இவர்கள் மிஞ்சியிருப்பார்கள். அநேகர் இராஜாங்க உத்தியோகத்திலிருப்பார்கள். முக்கியமாகக் கிராமக் கணக்கராயிருப்பார்கள். இழிவான தொழில்செய்ய உடன்படார்கள். பயிர்த்தொழிலையும் பண்ணையாட்களைக்கொண்டுசெய்வார்கள்.

THE MADURA MANUAL 1868.
*Page 32.*

Of the customs and religion of Vellalars I have not much to say, except that they are reputed to be for the most part strict and self denying followers of the Saiva faith : and to carefully abstain from eating flesh-meats, and drinking intoxicating liquors. They burn their dead. Early marriages are usual amongst them. Their widows

do not re-marry, Polygamy is unknown. And the chastity of their females is jealously guarded.

மதுரை ஜில்லாச் சரித்திரம்.

வேளாளர்கள் பரம்பரையாய் சைவசமயத்தாராகி, மாமிசம் புசியாமலும், லாகிரியாயுள்ள மதுபானஞ்செய்யாமலும் *அவற்றினின்றும், அதிக சாக்கிரதையாக நீங்கி இருக்கிறார்களென்பதில் கீர்த்தி பெற்றிருக்கிறார்கள் என்று கூறுவதேயொழிய அவர்கள் ஒழுக்கத்தையும் மதத்தையும்பற்றி நான் விசேஷங்கூறவேண்டுவதொன்றுமில்லை. இவர்கள் இறந்த பிரேதத்தைத் தகனஞ்செய்கிறார்கள். பாலியவிவாகஞ்செய்கிறார்கள், அவர்களுள் விதவைகளுக்கு மறுமணஞ்செய்வதில்லை. புருஷர்கள் பலதாரங்கள் செய்வதுமில்லை. பெண்டுகளின் கற்புநிலையை வெகு சாக்கிரதையாகக் காப்பாற்றி வருகிறார்கள்.

## கலியில் க்ஷத்திரிய வைசியரில்லை என்பதை மறுத்தல்.

மேற்கூறிய நான்கு வருணத்துள் க்ஷத்திரியரும் வைசியரும் இக்காலத்து இல்லையென ஆரியர்கள் கூறுகிறார்கள். பிரமாணமென்னை எனக் கேட்குமிடத்துப் பரசுராமன் க்ஷத்திரியப் பூண்டை 21-தலைமுறைபாகக் கருவறுத்துவிட்டானென்றும், கிருஷ்ணன் யாதவர்களைக் கருவறுத்தானென்றும் சொல்லுகிறார்கள். இதுவன்றியும் பாகவதத்திலும், இன்னுஞ் சில புராணங்களிலும் நந்தன் என்ற அரசனுக்குப் பின் பூமியில் சகலரும் சூத்திரர்களால் ஆளப்படுவார்களென்றுஞ் சொல்லுகிறார்கள்.

எங்ஙனமெனில், பாரதம் சாந்திபர்வத்தில். பிருகுவின் பேரனும் ஜமதக்கினியின் குமாரனுமாகிய, பரசுராமர் வில்வித்தையில் மிகவும் பயிற்சியுள்ளவராயிருந்தார் இவர் மகாதேவரிடம் தவத்தினால் பரசு என்னும் ஆயுதத்தைப்பெற்றிருந்தார். இங்ஙனமி

---

* அவற்றின் - இதில் இன்னுருபு, வினையினீங்கி விளங்கிய வறிவின் முனைவன் என்றதுபோல நின்றது.

ருக்க, கேகயதேசத்தரசனாகிய கிருதவீரியனுடைய குமாரன் அர்ச்சுனன் தான் செய்த அசுவமேதயாகத்தில், தனது பலவிதமான ஆயுதங்களால் செயிக்கப்பட்ட தேசங்களையும் சப்ததீபங்களையும் மலைகளையும் பிராமணர்களுக்கே தானஞ்செய்தான். ஆனால் பரசுராமரால் இந்த அர்ச்சுனன் பாணங்களெல்லாம் முறியக்கடவதென்று வசிட்டரது சாபம் முன்னரே நேரிட்டிருந்தது. இந்த அர்ச்சுனனுக்குத் தெரியாமலேயே இவனுடைய குமாரர்கள் பரசுராமருடைய பிதாவாகிய ஜமதக்கினிமுனிவன் கன்றுக்குட்டிகளைக் கொண்டுபோய்விட்டார்கள். இதனையறிந்த பரசுராமர் அர்ச்சுனனை யெதிர்த்து அவன் பாணங்களை யெல்லாம் முறித்தெறிந்தனர். அர்ச்சுனன் பிள்ளைகள் இதற்குப் பிரதியாக ஜமதக்கினியின் றலையைத் துணித்தார்கள். இதைக்கண்ட பரசுராமர் இனியிந்த க்ஷத்திரியப்பூண்டை உலகத்திலில்லாதபடிக்குக் கருவறுப்பேன் என்று சபதங்கூறி, அர்ச்சுனனையும் அவன் பிள்ளைகள் பேரன்மார் முதலிய சகலரையும் ஒருங்கே கொன்றொழித்தார். பின்பு பரசுராமர் தாம் செய்த கொடுமையினை நினைந்து, வருத்தமுற்றுக் காட்டுக்குப் போய்விட்டார்.

1,000. வருஷம் சென்ற பின்னர். விசுவாமித்திரன் பேரனாகிய பரவாசு என்பவன் பரசுராமரைக்கண்டு ஐய, க்ஷத்திரியப் பூண்டுகளையெல்லாம் கருவறுத்துவிட்டேன் என்று பலபேர் முன்பாக வீணான டம்பவார்த்தை கூறிப்போனீரே க்ஷத்திரிய வமிசத்தில் குழந்தைகளாக இருந்து தப்பிப்பிழைத்திருந்தவர்களெல்லாம் பெரியவர்களாகி வீரமுள்ள அரசர்களாகி உலகமெல்லாம் பரவி விட்டார்களே, உமது சபதமெங்கே நீர் எங்கே என்று, இவ்விதமாக க்ஷாத்திரத்தையுண்டாக்கினான். இதைக்கேட்ட பரசுராமர் மீளவும் அந்த அரசர்களையும் அவர்கள் பிள்ளைகளையும் கொன்றொழித்தார்.

ஆயினும் தாயின்வயிற்றிலுள்ள சில குழந்தைகள் தப்பிப் பிழைத்திருந்து தக்க வயது வந்தபின் அரசர்களாகி அரசா

ண்டு வந்தார்கள். இதைக்கண்ட பரசுராமர் மீளவும் அவர்களைக் கொன்றொழித்தார்.

இவ்விதமாக 21-தரம் க்ஷத்திரியப் பூண்டைக் கருவறுத்து அசுவமேதத்தை முடித்து, க்ஷத்திரியராண்டுவந்த பூமியை யாகத்திலுள்ள கசியபருக்குத் தானஞ்செய்தார். அப்போது கசியபர் இனிப்பிழைத்துள்ள க்ஷத்திரியர்களை நீர் கொல்லப்படாது, இனிநீர் தென்கடற் கரையில் போய்ச்சேரக்கடவதென்று, பரசுராமரை அனுப்பிவிட்டு, தானம் வாங்கிய பூமியைப் பிராமணர்களுக்கு இருப்பிடமாக்கிவிட்டு, தாமுங் காடு போய்ச் சேர்ந்தார்.

அரசு இல்லாமையால் சூத்திரர்களும், வைசியர்களும், பிராமண ஸ்திரீகளை துராகிரதஞ் செய்யத்தொடங்கினார்கள். இங்ஙனம் எளியோரை வலியோர் ஒறுக்கவும், ஒவ்வொருவரும் தாந்தாம் ஆர்ச்சித்த பொருளை யனுபவிக்கச் சத்தியில்லாதிருந்து பின்பு தென்னாட்டுக்குச் செல்லத்தொடங்கினார்கள்.

அப்பால் பூமாதேவியானவள் கசியபரிடஞ்சென்று உலகினைக்காப்பதற்கு அரசு இல்லாமையால் அதிக்கிரம மிஞ்சி என்னால் இப்பூமிபாரஞ் சுமக்கமுடியவில்லை. அதனால் நான் கேகய தேசத்துப்பெண்களினிடமாக அநேக க்ஷத்திரியரைக் காப்பாற்றினேன். அவர்களில் ஒருவரை யெனக்குக் காவலனாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டாள். உடனே கசியபரும் அவ்வாறே ஒரு அரசனைத் தெரிந்தெடுத்துப் பட்டங்கட்டி உலகினை நீதி நெறிதவறாது ஆளும்படி யனுக்கிரகித்தருளினார். இதனால் க்ஷத்திரிய வமிசம் கசியபரால் நிலைநிறுத்தப்பட்டதென்றும், பரசுராமர் சபதம் மாற்றப்பட்டதென்றும் தெரியவருகின்றன.

இது நிற்க இராமாயணத்தில் அயோத்திக்கரசனாகிய தசரதச் சக்கரவர்த்தியைப் பரசுராமர் எதிர்த்துக் கொல்லவருங்காலமெல்லாம், ஒவ்வொரு சமயத்திலும், சக்கரவர்த்தி ஒவ்

வொரு கன்னிகையை மணம்புரிந்து கங்கணமவிழ்க்காமல் மாப்பிளேச்கோலமா யிருந்தாரென்றும், அதைக்கண்டு அக்காலத்துக்கொல்வது நீதியன்றெனத் திரும்பப்போய்விட்டாரென்றுங் கூறப்பட்டிருக்கின்றன. அதன்மேல்,

சீதா பிராட்டியாரைக் கல்யாணஞ் செய்துகொண்டு, வசிட்டர் தசரதச் சக்கரவர்த்தி பரத சத்துருக்கள் இலட்சுமணருடன் வருகிற, ஸ்ரீராமனைப் பார்த்துப்பரசுராமர் எதிர்த்து, இராமா! நீ சொத்தை வில்லைவளைத்து உன் தோள் வலியைக்காட்டினையே, இப்போது என்கையிலிருக்கப்பட்ட வில்லைவளை பார்ப்போம் என்று சொல்லவே, ஸ்ரீராமர் பரசுராமரிடத்திலிருந்த வில்லைவாங்கி வளைத்து நாண்பூட்டிக்கணை தொடுத்துச் சொல்லுகிறார், பரசுராமரே! நீர்பிராமணராதலாலும், விசுவாமித்திரருடைய உடன்பிறந்தாளுடைய பேரப்பிள்ளையாதலாலும், உமது உயிரைக்கொல்வது தருமமன்று. ஆயினும், எனது குறியோ தப்பாது; ஆகையால் உமது தாளின் வலியையாயினும் தவத்தால் பெற்ற நற்கதியையாயினும் இரையாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்க, அப்போது பரசுராமர் சொன்னதாவது, இராமா! முன்பு நான் பூமியிலுள்ள அரசர்களையெல்லாம் 21-தரங்கொன்று இப்பார் முற்றுங் கசியபருக்குத் தானமாகக் கொடுத்தகாலையில், கசியபர் என்னை நோக்கி இவ்வகலிடம் எல்லாம் என்னுடையதாயினமையால் இனி நீஎன்னுடைய பூமியில் வாசஞ்செய்யப்படா தெனவுரைத்தனர். அதற்கு யானும் உடன்பட்டு இனி உமதுநிலத்தில் இரவுக்காலுங் கழிப்பதில்லை என மகேந்திரப்பொருப்பைச் சார்ந்திருக்கிறேன். என்னுடைய தவத்தை இக்கணையால் கொல்லலாமென்ன, உடனே ஸ்ரீராமன் அவ்வண்ணமே செய்துமுடிக்க, பரசுராமர் கண்ணுற்றுத் தமதிருப்பிடஞ்சேர்ந்தனர்.

இதற்குப் பிரமாணம்.

கூர்மபுராணம், இராமபிரானவதரித்த வத்தியாயம்.

மணவினைமுடிந்தபின்னர் மன்னர்கோன்மைந்தர்சூழப்
பணிவரும்பவளத்தாற்றுச் செந்நெலம்படைப்பைவேலி
துணிகெழுமிதிலைநீங்கி யகநகர்க்கேகுமெல்லைத்
துணிகதிர்ப்பரசுராம னிராமனைநோக்கிச்சொல்வான்.

பாற்றினஞ்சுழலஞ்சூலப் படையினோனளித்தவில்லை
யாற்றல்கொலிறுத்ததென்ன வணிமணிமுறுவல்கோட்டி
யேற்றுதியிந்தவில்லென் றளித்தலுமிமைப்பினேற்றிக்
கூற்றுறழ்பகழிக்கென்கொ லிலக்குநீகூறுசென்றான்.

ஈட்டியதவங்கள்யாவு மெய்துகொன் றிடுதியென்னப்
பூட்டியபகழியொன்றாற் பொன்னகர்ப்புகவுமாற்றி
வாட்டிறலிளையரோடு மன்னனொடுஞ்சிலையிராமன்
சேட்டிளம்பரிதிதாழு மணிமதிலயோத்திசேர்ந்தான்.

இனி, இரகு ராமரின் முன்னோர்களைப் பரசுராமர் ஒழித்தாரென்று சொன்னால், இரகுவமிசத்தில் அரிச்சந்திரன் முதல் இரகுராமர்வரையும் 21-தலைமுறையாகிறது; இவருக்கு முன்னோர்களழிந்துபோயிருந்தால், தசரதச் சக்கரவர்த்தியும் அவருக்கு இராமலட்சுமணாதியர்களும் பிறந்திருக்கமாட்டார்கள். அன்றியும் அவ்விராமர் பரம்பரையிலுதித்த அடியிற்கண்ட அரசர்கள் பலரும் அரசாண்டு வந்திருக்கவுமாட்டார்கள்.

1 குசன்.
2 அதிதி.
3 நிஷதன்.
4 நபசு.
5 புண்டரீகன்.
6 க்ஷேமதனுவா.
7 தேவானிகன்.
8 அகீனகு.
9 குரு.
10 பாரியாத்திரன்.
11 பலன்.
12 சலன்.
13 உற்கன்.
14 வச்சிரநாபன்.
15 சங்கணன்.
16 வியூஷிதாசவன்.
17 விசுவஸஹ்னு.
18 இரண்யநாபன்.
19 புஷ்யன்.
20 துருவசந்தி.
21 சுதரிசனன்.
22 அக்கினிவருணன்
23 சீக்கிரகன்.
24 மரு.
25 பிரசுகர்.
26 சந்தி.
27 அமர்ஷன்.
28 சகஸ்வரன்.
29 விசுபவன்.
30 பிரதக்பலன்.
31 போகதிருணன்.
32 உருஷிதன்.
33 வச்சபரீதன்.
34 பிரதிவியோமன்
35 மநு.
36 திவீகசு.
37 வாக்கினியதி.
38 சகதேவன்.
39 பிரகதசுவன்.
40 பரதுமன்.
41 பிரதிகசுவன்.
42 சுப்பிரதீகவன்.
43 மேருதேவன்.
44 சுதட்சன்.
45 இரட்சகன்.
46 அந்தரட்சகன்.
47 சுதப்சு.
48 அமித்திரசிது.
49 பிரகத்துவாசி.
50 பேரிகிசு.
51 தனஞ்சயன்.
52 இரணஞ்சயன்.
53 கிரஞ்சயன்.
54 சக்கியன்.
55 சுத்தாதரன்.
56 பிரசௌசிது.
57 க்ஷுத்திரகன்.
58 இரணகன்.
59 சுரதன்.
60 சுமித்திரன்.

பிறருமாம். குருகுல வமிசத்தை விசாரிக்குமளவில், கலியாரம்பம்வரையும், பஞ்சபாண்டவர்களிருந்தாண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்பரிசித்து ஜனமேஜயன் நரேந்திரன் சாரங்கன் விக்கிரமன் முதலானவர்களும் ஆண்டிருக்கிறார்கள்.

கலியுகம் பிறந்தபின்னரும், இரகுகுலத்தரசரும் குருகுலத்தரசரும் ஆண்டுவந்திருக்கிறார்கள். பரசுராமர் இவர்கள் பூண்டைக் கருவறுத்தாரா? சேரன் சோழன் பாண்டிய வமிசத்தார் துலுக்கர் வந்து கைக்கொள்ளுகிறவரையும் ஆண்டிருக்கிறார்களே, இவர்கள் பூண்டைக் கருவறுத்தாரா?

வடதேசத்தில் இக்காலத்தும் அநேக க்ஷத்திரிய வமிசத்தார் இருக்கிறதாகத் தெரியவருகிறது. ஆகையால் க்ஷத்திரிய வமிசத்தைப் பரசுராமர் முழுதுங்கருவறுத்தாரென்பது பொருந்தாது.

இனி, கிருஷ்ணன் யாதவர்களைக் கருவறுத்தான். அதனாலே வைசியப்பூண்டு ஒழிந்துவிட்டதென்பதை விசாரிக்குமிடத்தில், யாதவர்களை வைசியரென்று ஆரியதிராவிட வேதங்களில் கூறப்படவில்லை. ஆதலால் யாதவர் வைசியரல்லர். ஒருகால், ஆரியர்கூறியபடியே அவரை வைசியரென வைத்துப்பார்த்தாலும் கிருஷ்ணன் சண்டையிற் போர்புரிந்திறந்தவர்கள்போக, அவர்கள் வீட்டிலுள் ளகுழந்தைகளும், கருப்பத்திலிருந்து பின்னிட்டுவெளிப்பட்ட சிசுக்களும், அளவிறந்ததாயிருக்குமன்றோ. ஆதலினவர்கள் வாழையடிவாழையாகப் பரவி இக்காலத்துமிருக்கிறார்களென்பது வெளிப்படுகிறது. ஆதலால் மேற்கூறிய கிழவி கதையினால் வைசியர்கள் மாண்டுபோனார்கள் இக்காலத்து ஒருவருமில்லையென்பது பொருந்தாதாம்.

இது நிற்க, சாதுர் வருணங்களும் சீவசிருட்டியா? ஈசுரசிருட்டியா? என்று கேள்வி நிகழும். அதற்கு விடை வே

தங்களிற் கூறப்பட்டிருப்பதால் ஈசுரசிருட்டியென்றே கூ றுதலையும். அங்ஙனமாயின், ஈசுரனால் அநாதியில் ஆக்கப்ப ட்ட சாதுர் வருணங்களுள் 2-சாதிகெட்டு 2-சாதிமாத்திரமி ருக்குமா? ஒழிந்தால் 4-உம் ஒழியவேண்டும். 2-கெட்டு 2- இருக்க ஹேதுவில்லை. ஆகையால் கலியில் க்ஷத்திரியவைசி யர்களில்லை என்பது அடாதவார்த்தையாம்.

"All this is said with the full admission of the fact that the Brahmanical theory of the total extinction of the Kshatriyas and Vaishyas is altogether inadmissible." Vide (Indian caste by Mr. Wilson page 53.)

மொழிபெயர்ப்பு.

உல்சன் துரையாற் செய்யப்பட்ட இந்தியர்களின் சா திநூல் 53-ஆவது பக்கம்."

க்ஷத்திரிய வைசியர்கள் ஒருங்கே ஒழிந்துபோனார்கள் என்ற அந்தணர்களின் கற்பனையை முழுதும் ஒப்புக்கொ ள்ளப்பட்டிருக்கிறதென்று கூறுங் கூற்று முற்றுமே நம்பத்தக் கதல்லவாம்.

## திராவிடநாட்டில் க்ஷத்திரிய வைசியரில்லை என்பதை மறுத்தல்.

மேற்கூறிய பிரமாணங்களால் கலியில் க்ஷத்திரிய வை சியர்க ளிருக்கிறார்களென ஒப்புக்கொள்ளுவோமாயினும், அவர்கள் விந்தகிரியின் தென்பாகத்திலுள்ள தமிழ் நாட்டிலி ல்லையாம். ஏன் என்றால் இந்நாட்டையாளும் சேர சோழ பாண்டியர்கள் முதலாவது க்ஷத்திரிய குலத்தினரன்றாம். 2-ஆவது அவர்களுக்கு வைதிக கர்மமின்றாம். 3-ஆவது அ வர்கள் பயிரிடுங் குடிகளாயிருந்து அரசரானவர்களாம். இக் காரணம்பற்றி அவர்கள் சூத்திரராம். அவர்க்குப் பின்னவ

ராயுள்ள கிரிஷிகரும் அங்ஙனமாகவே கொள்ளப்படும் என்றால், அவற்றை யிங்கு விசாரிப்போமாக.

**தமிழரசர்கள் க்ஷத்திரிய குலத்தாரென்பது.**

பெரியபுராணம், அதிபத்தநாயனார் புராணம்.

மன்னிநீடியசெங்கதி ரவன்வழிமரபின்
றொன்மையாமுதற் சோழர்தந்திருக்குலத்துரிமை
பொன்னிநாடெனுங் கற்பகப்பூங்கொடிமலர்போ
னன்மைசான்றது நாகப்பட்டினத்திருநகரம்.

திருவிளையாடற்புராணம்,

உக்கிரகுமாரபாண்டியன் திருவவதாரப்படலம்.

மற்றதற்கிசையத்தானு மருமகனுகிவைய
முற்றும்வெண்குடைக்கீழ்வைக முறைசெய்தானுகமூன்று
கொற்றவர்தம்மிற்றிங்கட் கோக்குடிவிழுப்படைய்தப்
பெற்றதபோலுமின்னும் பெறுவதோர் குறைவுதீர்ப்பான்.

மேற்கூறிய இரண்டு செய்யுளானும் சோழன் சூரியகுலத்தரசனென்றும்,பாண்டியன் சந்திரகுலத்தரசனென்றும், வெளிப்படுகின்றன. அவர்கள் விந்தகிரியின் தென்பாகத்திலே தண்டகனாட்டிலுள்ள க்ஷத்திரியர்களாகவே யிருக்கிறார்கள். அதனால் தென்னாட்டிலரசாண்ட சேர சோழ பாண்டியர்கள் க்ஷத்திரியரல்லரென்பது பொருந்தாவுரை யெனமறுக்க.

**தமிழ் நாட்டரசர் வைசியர் வைதிக கர்மமுடையார் என்பது.**

பின்னும் ஓதலாதி அறுதொழிலும் திராவிட க்ஷத்திரிய வைசியர்களுக்கில்லை அதனால் க்ஷத்திரியராகாரெனக் கூறுகிறார். அங்ஙனமாயின்,

பெரியபுராணம், கழறிற்றறிவார், புராணம்.

வேதநெறியின்முறைபிறழா மிக்கவொழுக்கந்தலைநின்ற
சாதிநான்குநிலைதழைக்குந் தன்மைத்தாகித்தடமதில்சூழ்

சூதவகுளசரளநிரை துதையுஞ்சோலைவளநகர்தான்
கோதையரசர்மகோதையெனக் குலவுபெயருமுடைத்தலகில்.

இச்செய்யுளால் இத்தமிழ் நாட்டிலுள்ள சேர தேசத்தின் ஒழுக்கங்கூறுமிடத்துச் சாதுர் வருணத்தாரும் வேதநெறி தவருது நடந்துவந்தார்களென்று கூறப்படுகின்றது. அதற்குச் சான்ருகவே, பாண்டி நாட்டரசனுகிய மலையத்துவச பாண்டியன் 100-அசுவமேத யாகஞ்செய்தானென்று கூறப்பட்டிருக்கின்றது. பிரமாணம்,

திருவிளையாடற்புராணம்,

தடாதகைப் பிராட்டியார் திரு அவதாரப் படலம்.

கண்ணுதலைமுப்பொழுதும் வந்துபணிகற்ருே
னெண்ணில்பலநாண்மக விலாவறுமையெய்திப்
பண்ணரியதானதருமம் பலவுமாற்றிப்
புண்ணியநிரம்புபரி வேள்விபுரிகுற்ருன்.

ஈறின்மறைகூறுமுறை யெண்ணியொருதொண்ணூற்
ருறிெனுமூன்றுமக மாற்றவமரேச
னூறுமகமும்புரியி னென்பதநொடிப்பின்
மாறுமெனமற்றதனை மாற்றியிதுசாற்றும்.

இவ்வாறிருக்க. இத்தமிழ் நாட்டரசர்களுக்கு ஓதலாதியகருமங்கள் இல்லை என ஆரியர் கூறத்துணிந்தது தங்களுக்குத் திராவிடர்கள் சமமாகப்படா தென்னுங் கருத்துப்போலும்.

**பயிர்த்தொழில் செய்ததனுல் அரசராகாரென்பதின் மறுப்பு.**

பின்னும் இவ்வாரியர்களின் அபிப்பிராயப்படி.

History of India by Sinclair.

"The most ancient kingdoms were Pandiya and Chola both of which were founded by persons belonging to the aggricultural classes.

இதன் மொழிபெயர்ப்பு

சின்கிளேயர் ஹிந்துஸ்தான சரித்திரம்.

மிகவும் பூர்வீகமாயுள்ள பாண்டிய சோழ இராஜாங்கங்கள் பயிரிடுங் குடிகளால் உண்டாக்கப்பட்டன.

ஆதலால் இத்தமிழ் நாட்டரசர்கள் பயிரிடுங்குடிகளாயிருந்து அரசரானார்கள் என்பதும், அதனால் அவர்கள் க்ஷத்திரிய வமிசத்தார்களன்றென்பதும், ஆரியரின் கருத்தாம். அங்ஙனமானால்,

ஆரியர் என்பவர்யாவர்? அவர் பூர்வத்திலெப்படி யிருந்தவர்களென வினா நிகழுமன்றோ? அதை விசாரிப்போமாக.

Indian Reform-Caste.

The word Aryas probably comes from "Ar" to plough.

மொழி பெயர்ப்பு.

ஆரியர் என்ற மொழி "ஆர்" என்னுந்தாதுவி லிருந்துண்டானதாம். ஆர்=உழுதல். எனவே, ஆரியர் என்பவர் உழவினரென்பது பொருளாம்.

Afterwards it comes to mean noble, nations following aggriculture being more civilized than the wandering races.

நாடோடித் திரிபவர்களைப் பார்க்கிலும் உழவுத்தொழிலினைச்செய்பவர் மிகவும் விவேகிகளாயிருத்தலின், அவர்களுக்குப் பின்னர் மேன்மக்கள் எனப்பொருள்கொள்ளப்பட்டது.

The Aryans were a pastoral and aggricultural people.

ஆரியர்கள் ஆனிரை மேய்ப்பவரும் பயிரிடுங்குடிகளுமாயிருந்தார்கள். பின்னர் இந்தியாவில் வந்து பிரம க்ஷத்திரிய

வைசியரானார்கள் என்று ஒப்புக்கொள்ளும்போது, திராவிட நாட்டிலுள்ள அப்பயிரிடுங்குடிகள் ஏன்? க்ஷத்திரிய வைசிய ராகக்கூடாது. ஆகலால் இது பொருந்தாவுரை என மறுக்க.

பின்னும் திருவிளையாடற்புராணத்தில், இவ்வுலகம் கடல்கொள்ளப்பட்டகாலத்தில் சோமசூரியாக்கினி என்னுமுச்சுடர்களினின்றும் தமிழ்நாட்டு மூவேந்தர்களும் உண்டாக்கப்பட்டார்களென்று கூறப்படுகின்றது. அஃது புராணகற்பனையெனின், இதுசாமானியர்களால் கூறப்பட்டதன்று. பதினெண்புராணங்களில் ஒன்றாகிய ஸ்காந்தபுராணம் ஈச சங்கிதை ஆலாஸ்யமான்மியமென்னும் கிரந்தத்தில் ஆரியாசாரியரிற் சிறந்துள்ள சூதமுனிவராலேயே கூறப்பட்டுள்ளது. இவ்வாரியாசாரியரின் வாக்கியம் பொய்யென்றால், ஆரியர்களால் ஆக்கப்பட்ட நூல் முழுதும் பெய்யென்றேயொழிக்க. அவற்றையுண்மையெனக்கொள்ளின், தமிழ்நாட்டரசர்கள் க்ஷத்திரியரென்றே கொள்க. இப்பிரமாணங்களாலே, தமிழ் நாட்டுள்ள வேளாளரும் வைசியரெனக்கொள்க. பின்னும் அவ்வேளாளர் வைதிக கிரியையுடையாரென்பதை வேளாளரறு தொழில்விளக்கமென்னும் அத்தியாயத்திற் கண்டுதெளிக.

## IV. சூத்திரர்.

ஆதிகாலத்தில் ஏற்பட்ட சாதிகள் நான்கேயாம். ஐந்தாவதில்லை என மநுவால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

அவர்களுள் முதன் மூவருக்கும் முறையே அவ்வாறு தொழில்கள் ஏற்பட்டிருக்கின்றன. நான்காவது ஆன சூத்திரனுக்கு இன்னதொழில் என்று ஏற்படவில்லை. ஆயினும் முதன் மூவருக்கும் பணிசெய்வதெனப் பொதுவகையாற் கூறப்பட்டிருக்கின்றதன்றி இதுதான் தொழிலென வரையறுக்கப்படாமையின் எஜமான் ஏவின வேலை எல்லாஞ்செய்ய வேண்டுமெனப்பொருளாயிற்று.

ஆகவே அச்சூத்திரர் செய்யற்பாலனவாகிய தொழில் பலபடவிரிந்துகிடந்தமையின், அவையெல்லாம் ஏககாலத்தில் ஒருங்கே ஒருவரால் செய்துமுடித்தற்குக்கூடாதிருந்தன.

ஆதலால் ஒவ்வொரு தொழிலையுந் தனித்தனியே செய்து முடிப்பதற்கு அச்சூத்திரர் வண்ணார் அம்பட்டர் குயவர் முதலிய பற்பல சாதியராகப்பிரிந்தனர்.

இவர்கள் பூர்வத்தில் ஏற்பட்டபடி ஒரேவகையான சூத்திர சாதியராக இருந்தபோதிலும்,

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்.

என்ற வேதவாக்கியத்தின்படி அவரவர்கள் செய்தொழில் வேற்றுமையால், சிலர் மேலானவராகவும் சிலர் கீழானவராகவும் மதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவைநிற்க அக்காலத்தில் மேற்குலத்தார் கீழ்க்குலத்தார் பெண்ணை விவாகஞ்செய்பலாமென விதியேற்பட்டிருந்தது. அதனால் நான்குவருணத்துள்ளும் ஒருவர்க்கொருவர் விவாக சம்பந்தத்தினாலோ, களவுப்புணர்ச்சியாலோ, உண்டானவர்கள், அநுலோமர் பிரதிலோமர் அந்தராளர் விராத்தியர் எனப் பலசாதியர்களாகப்பிரிந்தார்களென்று மிருதிகளினும் புராணங்களினும் கூறப்பட்டிருக்கின்றது. அங்ஙனமுண்டாகிய சாதிகள் கணக்கிடத் தொடங்கின் நூற்றிற்கு மேற்படவிரிந்து கிடக்கின்றன.

அவைகளை யீண்டெடுத்துக்கூறின் ஒவ்வொருவருக்கும் மனவருத்தத்தையுண்டாக்குவதாக முடியும். அவற்றை ஒருவரும் ஒப்புக்கொள்ளத்தக்கதாகவுமில்லை. ஒவ்வொருவன் ஜாதியை விசாரிக்கப்புகின், நான் அனுலோமசாதியன், நான் பிரதிலோமன், நான் மிசிரமசாதியாருக்குற்பத்தியானவனென

ஒருவனும் கூறுன். நூல்களிலுள்ளபடி எடுத்துக்கூறினும் ஒருவனும் ஒப்புக்கொள்ளான். ஆகையால் அவற்றை விரித்தோதுவதில் பயனில்லையாம்.

இவைநிற்க. பிற்காலத்தில் கோமாமிசம் புசிப்பவர் பஞ்சமசாதியரென ஏற்படுத்தப்பட்டனர். இவர்களுள்ளும் பறையன் பள்ளன் வெட்டியான் என உட்பிரிவுகளுண்டாயிருக்கின்றன.

பூர்வமாக ஏற்பட்டசாதி நான்கனுள், வேதமோதுபவன் அந்தணன் என்றும், உலகாள்பவன் க்ஷத்திரியன் என்றும் வெளிப்படையாகத்தெரியவருகின்றன. எஞ்சியவர் குடிகளாயிருத்தலின் அவர்களுள் வைசியரின்னுரென்றும் சூத்திரரின்னுரென்றும் வெளிப்படவிளங்கவில்லையே? எனின் நாயனுர் குறளில்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

என்னுங்குறளால்கிருஷித்தொழிலினராகிய வேளாளரே வைசியரென்றும், தொழுதுண்டு வாழ்பவர் சூத்திரரென்றும், விளக்கியருளினுர்.

பின்னும் இச்சூத்திரராவாரின்னுரென்று புலப்படுத்தும்படி மண்டல புருடனுர் தமது சூடாமணி நிகண்டில்

இந்தமுக்குலத்துளார்க்கே யேவல்பூண்டொழுகுகின்ற
வெந்திறலாளர்தாமே விதித்தசூத்திரரென்றுகும்.

எனச்சுருங்கக்கூறி விளங்கவைத்தனர்.

தொழிலாளிகளுள் இன்னுரின்னுர் இன்ன வேலைசெய்கிறதென்று பூர்வகாலத் தரசர்களால் விதிக்கப்பட்டு இக்காலத்தும் நடந்துவருகின்றது. அவர்களுள்,

| | | |
|---|---|---|
| ஆடைவெளுக்க | ... | ... வண்ணுன். |
| க்ஷவரஞ்செய்ய | ... | ... அம்பட்டன், |

| | |
|---|---|
| மட்பாத்திரஞ்செய்ய ... | ... குயவன். |
| கலப்பையாதி மரவேலை செய்ய | ... தச்சன் |
| கொழுவாதி இரும்புவேலை செய்ய | ... கொல்லன். |
| வெண்கலப் பாத்திரஞ் செய்ய | ... கன்னான். |
| கருங்கல் வேலைசெய்ய ... | ... கல் தச்சன். |
| பணிசெய்ய ... ... | ... தட்டான். |
| மாடுமேய்க்க, பால்கறக்க | ... இடையன். |
| எண்ணெயாட்ட ... | ... செக்கான். |
| ஆடைநெய்ய... ... | ... சேணியன். |
| ஆடைதைக்க... ... | ... பாணன். |
| நெல் சுமக்க ... ... | ... எருத்து வாணியன். |
| குயிலுவத்தொழிலாகிய தோற்கருவியடித்தற்கும் துளைக் கருவியூதற்கும் ... ... | ... தேவதாசிமக்கள். |
| வேட்டையாட ... | ... வேடுவன். |
| தோல்வினைசெய்ய ... | ... சக்கிலியன், |

என இவைபோன்ற பற்பல தொழிலாளிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

இனி, இச்சூத்திரர்களின் பாகுபாடுகளும், உயர்வு தாழ்வும், அவரவர்களின் தரத்திற்குத்தக்கபடி நிகண்டுகளில் வகுக்கப்பட்டிருக்கின்றன; ஆங்குணர்க. மேற்கூறியவற்றால் ஆதியில் ஒருகுடும்பமாயிருந்த சூத்திர வகுப்பினரே பிற்காலத்தில் பலகுடும்பமாகப் பரவிப் பல தொழில்புரிந்து பல சாதியர்களானார்களென்பது வெளியாகின்றது.

பின்னும் சூத்திரர்களைப் பற்றிய விஷயங்களெல்லாம் ஆரியகாண்டம் வருணோற்பத்தி 163-ஆவது பக்கத்திலும், திராவிடகாண்டம் வருண விளக்கம் 260-ஆவது பக்கத்திலும், விரித்துரைக்கப்பட்டன; ஆங்கறிந்துணர்க.

## மூன்றாவது: அத்தியாயம்.

## வேளாளருற்பவ விளக்கம்.

### வேளாளர் கங்கையிடத்துதித்தாரெனல்.

இமயமலையின்கண் தவம்புரிந்திருந்த பர்வதராஜ குமாரியான உமாதேவியாரைச் சிவபெருமான் திருமணம்புரிந்து கைலையங்கிரியில் வந்தெழுந்தருளியிருந்தனர். அக்காலத்தில், உமாதேவியார் தாம் இமயமலையில் தோழிகளோடும் விளையாடினதுபோலக் கைலையங்கிரியில் வந்தகாலத்துங் கமலினி அநிந்திதைமுதலிய சேடியர்களோடு நீர் விளையாடல் முதலிய மகளிர்விளையாடல் புரிந்துவருங்காலத்தில், ஒருநாள் சிவபெருமானுடன் தனித்திருந்தபோது அவரை நோக்கி ஆகாயத்தில் பிரகாசித்து உலகினில் ஒளியைவிளக்கும் சூரிய சந்திரர்கள் யாவரென்று வினவுதலும், சுவாமிகள் அவர்களிருவரும் நமதிருகண்களே எனக்கூறினர். அங்ஙனமாயின் சுவாமிகள் கண்களை மூடின் உலகமெல்லாமிருளடைந்துவிடுமோவெனலும், சுவாமிகள் ஆம் என்றார். அங்ஙனமாயின் பார்ப்போமென்று பார்வதிதேவியார் ஏனைய விளையாடல்களிலொன்றாகநினைத்துச் சுவாமிகளின் கண்களைத்தமதுதிருகரத்தாற்பொத்தினர். உடனே உலகமெல்லாம் இருளடைந்தது. பிரம விஷ்ணுவாதிதேவர்களும் இருடியர்களும் பதினெண்கணங்களும் உலகிலுள்ள நால்வகையோனி எழுவகைத்தோற்றமாகிய எண்பத்துநான்குலட்ச சீவராசிகளும் கண்ணொளியிழந்திருந்தார்கள். பின்னர் இவர்கள் தத்தம் தொழிலை நடத்த முடியாமல் சிவபெருமானைக்குறித்துத்தியானித்து வருந்தினர்கள். உடனே சிவபெருமான் சகலசீவதயாபரரானதால் அவர்கள் வந்தனைக் கிரக்கமுற்றவராய்த் தமது நெற்றிக் கண்ணினைத் திறந்தார். கோடிசூரிய ருதயமானாற்போலப் பிரகாசமுண்டாயிற்று. இதைக்கண்ட உமாதேவியா

ர் பயந்து சிவபெருமான் கண்களில் பொதிந்துள்ள தமது இரு கரங்களையும் எடுத்தருளினுர். தேவியாரது சீதளமான கராம்புயங்களில் சுவாமிகளது கண்களின் வெப்பம் தாக்கியமாத்திரத்தில் சலசலவென்று வியர்வையுண்டாகிப் பிரளயகாலத்தைப்போலும் பிரவாகமாகக் கங்கை ஆரவாரித் தெழுந்தது. அக்கங்கையிடத்துச் சிவபிரான் திருவருளால் வேளாளர்கள் தோன்றி உமாதேவியையும் சிவபெருமானையும் சூழ்ந்திருந்தார்கள். (கங்கை என்பதற்கு கம்-கை என இரண்டுபதங்களாகப் பிரித்து, அவற்றுள், கை-உமாதேவியார் ஙகையினிடத்துண்டாகிய, கம் - சல மெனப்பொருள்கொள்க). அப்பால் அந்தக்கங்கைப் பிரவாகமானது உலகினை யழிக்குமென்றஞ்சி, மனிதரும் தேவரும் சிவபெருமானிடத்து எம்மைக்காத்தருளவேண்டுமென்றிரந்தார்கள். பக்தவத்ஸலனுன எம்மான் அவர் வேண்டுகோளுக்கிரங்கி அக்கங்கையைத்திருக்கரங்களாலெடுத்துத் தமது சடாமகுடத்தில் தரித்தனர். வேளாளர் கங்கையினிடத் துதித்தமையால், கங்கை புத்திரரென்று பெயர் பெற்றனர். பின்வருஞ் செய்யுட்களிற் காண்க.

கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் அருளிச்செய்த,

ஏரெழுபது.

கங்கைபெறுங்காராளர் கருவியெழுபதுமுரைக்க
வங்கைபெறும்வளைத்தழும்பு முலைத்தழும்புமணியுமலை
மங்கைபெறுந்திருவுருவாய் வந்துறைந்தார்தமைவலஞ்செய்
கங்கைபெறுந்தடவிகடக் களிற்றுணைக்கழல்பணிவாம்.

சேக்கிழார் சுவாமிகள் பிள்ளைத்தமிழ்.

முறியுமலரும்பொருவுதிருமேனியுமையம்மை மூவுலகுயத்தழுவுபு, மூரிப்புனற்கங்கை யெம்பிரான்றிருமேனி முற்றுங்குழைத்தஞான்றி, லறியும்வகையறமெலாம்பொலிய விருநாழிநெல்லளந்தப்பிரான்கொடுக்க, வனையமாதேவியேற்றேற்றகையுயிர்த்த மகளாலுயிர்த்தோர்களேநன், னெறியுநலனும்பெருகவுளரெனல் குறித்தவர்கை நீட்டப்பணிந்துவாங்கி, நீடுங்கொழுக்கொடுதம் மனையுதவியானனி

நிரம்பப்பெருக்குகுடியுட், செறியுமொருகுடியாய சேவையர்குலாதி பன் சிறுதேருருட்டியருளே, சிறுகோலெடுத்தரசு செங்கோனிழுத் திஞேன் சிறுதேருருட்டியருளே.

இன்னும் "பரப்புநீர்க்காவிரிப் பாவைதன்புதல்வர்."

என்ற சிலப்பதிகாரம் நாடுகாண்கதையினுங்காண்க.

இது நிற்க அம்மையார் எழுந்து சிவபெருமானை வணங்கி இவ்வுலகுயிர்கள் துன்பமடையும்படி சுவாமிகளுடைய திருக் கண்களைப்பொத்திய பாவம் எவ்வாறகலுமென வினவுதலும், சுவாமிகள் அம்மையாரை நோக்கி நீ பூலோகத்திற்போய்த் தவஞ்செய்வாயாக வென்றார்; அதற்கு உமாதேவியார் பூலோ கத்தில் தவஞ்செய்வதற்குச் சிறந்துள்ள தலமெது? கிருபை கூர்ந்தருளுமென்ன, அதற்குச் சிவபெருமான் பூலோகத்தில் அயோத்தி மதுரை மாயை காசி காஞ்சி அவந்தி துவாரகை ஆகிய இவ்வேழும் முத்தி நகரங்களென்று சொல்லப்படும். அவற்றுள்ளும் சிறந்துள்ளது காஞ்சிநகரம், அவ்விடத்திற்செ ன்று தவம்புரியின் உனது பாவம் நீங்கும, நாம் அங்கேவந்து கருணைசெய்வோமென்றார். ஈங்கு முத்திநகர் ஏழினுள் கா ஞ்சிநகர் சிறந்ததென்பதற்குப் பிரமாணமென்னை ? எனின்,

அருணாசலப்புராணம்.

ஈசனுமங்குரைத்தருள்வா னுனைவினைவந்தணுகாதேயெனினும் யார்க்கு, மாசகலும்படிக்கரியதவம்புரிய விரும்பினையேன்மதுரை *மாயை,காசி†யவந்திதுவாரையயோத்தியினுஞ் சிறப்புடையகாஞ்சி மேவிப், பூசைபுரிந்தரியதவம் புரியென்றான் விடைகொண்டாள்புக ழ்ந்துபோற்றி.,

என்றசெய்யுளாற் காண்க.

இதைக்கேட்ட உமாதேவியார் பின்னுஞ் சிவபெருமா னை நோக்கிக்கூறுகின்றார். நான் ஜீவராசிகளுக்கு ஹிம்சை

---

* மாயை = அரித்துவாரம். † அவந்தி = உஞ்சை.

யுண்டாக்கினவளாயிருத்தலின், இப்போது அச்சீவராசிகளுக்கு இதமுண்டாகும்படி அறம்வளர்க்கவேண்டுமென விரும்புகிறேன்; அதற்கு என்ன உபகரணங்கள் வேண்டுமோ அதனை எனக்கருளவேண்டுமென்றார்; அதைக்கேட்டுச் சிவபெருமானும் அம்மையாருக்கு இரு நாழிநெல்லளித்து இதைப்பூலோகத்தில் கொண்டுபோய் உழவுதொழிலாற்பெருக்கி அறம் வளர்ப்பாயெனக் கிருபைசெய்தார்; அதைப்பெற்றுக்கொண்டு உமாதேவியார் கைலையங்கிரியைவிட்டுப் பூலோகத்திற்குச் செல்ல புறப்பட்டார்.

அக்காலத்து, கமலினி அநிந்திதை முதலிய சேடியர்களும் சப்தகன்னியர்களும் கந்தன் கணேசன் காராளர் முதலானவர்களும் அம்மையாரோடு சூழப் புறப்பட்டார்கள். உமாதேவியார் முத்துச் சிவிகையின்மீது ஆரோகணித்தார். அப்போது விஜய லட்சுமி குடைபிடித்தாள், சரசுவதி அடைப்பைதாங்கி வந்தாள், கமலினி அநிந்திதை இருபுறத்தினின்று சாமரை வீசிவந்தார்கள். இவ்விதமாகக் கங்கை சூழ்ந்துள்ள நாட்டை வந்தடைந்தமாத்திரத்தில், காராளரிற் சிலரை நோக்கி,நீங்களிங்கிருந்து வேதமோதல் வேள்விசெய்தல் ஈதல் கிருஷி வாணிகம் ,ஆனிரைகாத்தலாகிய அறுதொழில்களைச் செய்து அறங்களை வளர்ப்பீரென்று, சிவபெருமான்றந்த நெல்லிற் சிறிதை உமாதேவியார் கொடுத்தருளினார்.

இறந்தவுயிர்கள் மீளவும் பிறவாதிருக்கும்படி சிவமே திருவுருக்கொண்டெழுந்த தலமாகிய காசி நகரையடைந்து, ஆங்கு விசுவேசுரரைப் பூசித்து, அந்நாட்டில் அநேக நாளாக மழையின்றி க்ஷாமமடைந்திருப்பதொழிந்து மழை பெய்யவும், அத்தலத்திலுள்ளோர் பிழைக்கவும் செய்து, காசிராசனுக்கு விடையளித்து, உமாதேவியார் தொண்டைமண்டலம்வந்து சேர்ந்து, அத்தொண்டை நாட்டின் நடு நாயகமாயுள்ள காஞ்சிபுரத்துக்கெழுந்தருளி, ஏகம்ப வாணரைக்குறித்துத் தவஞ்செய்யத்தொடங்கினார்.

அக்காலத்துத் தம்முடன் கைலையிலிருந்துவந்த காராளரை நோக்கிப் பிள்ளைகளே! வாருங்கள்; நீங்கள் இளங்கோக்கள், மன்னர்பின்னர், வேளாளர் முதலிய பேர்கள்பூண்டு, உங்களைப்பலரும் போற்றும்படி இக்காஞ்சிமண்டலத்திலிருந்து, வேதமோதல் வேள்விசெய்தல் ஈதல் கிருஷி வாணிகம் ஆனிரை காத்தலாகிய அறுதொழிலும் பின்னிடாதியற்றுதிர், சிவபெருமான் தந்தருளிய உணவின் மூலத்தை உமக்குத் தந்தோம்; இவற்றை உழவாற் பெருக்கி 32-அறங்களையும் வளர்ப்பீராக வென்று கட்டளையிட்டருளினர். இதற்குப்பிரமாணம் பின்வரும் செய்யுட்களிற் காண்க.

புராணசாரத்திரட்டு.

அழகின்மேம்படுமோரணை யென்றருளமலன்
குழவிவெண்மதிதவழ்திருக் கயிலையங்குன்றின்
மழலைமென்மொழியுமையவ ளொடுமனமகிழ்ந்து
பழகுமேல்வையினிகழ்ந்ததொன் றுளதனைப்பகர்வாம்.

நாயகன்றிருமலர்முக நோக்குபுநங்கை
சேயசெஞ்சுடர்வெண்சுடர் விரித்துவான்றிகழ்ந்து
மேயஞாயிறுமதியமும் யாரெனவினவ,
வேயநம்மிருகண்களா மென்றனனிறைவன்.

அனையநல்லுரைகேட்டரு ளம்பிகையங்கண்
வினையமுன்னியீதறிவமென் றன்புமீக்கொண்டு
நினையுமோர்விளையாட்டென வுவகையினிமலன்
றுணையுமின்னருள்விழிகளைப் புதைத்தனடுணிந்து.

ஆயகாலையிலிந்திரன் பிரமன்மாலாதி
யேயவோரிருசுடர்களுந் தமதொளியிழப்ப
மாயமென்னென மற்றுளவுயிர்களுமயங்கப்
பாயகாரிருள்பொதிந்ததா லுலகெலாம்படர்ந்து.

நெருங்குகாரிருட்செறிவினாற் றங்தொழினீங்கி
யொருங்குமான்முதலோர்குழீஇ யவ்விடரொழிப்பான்

மருங்குவந்தநம்மானெதிர் காவெனவணங்க
முருங்குசெந்தழல்விழியினை நுதலினின்முகிழ்த்தான்.

கோடிசூரியருதித்தெனப் பேரொளிகுலாவ
வோடியேகினவிருளொடு வானவருறுகண்
ணுடியாவையுங்கண்டுள நடுங்கியநங்கை
யீடிலெம்பிரான்விழியைவிட் டெடுத்தனளிருகை.

எடுத்தவப்பிகையிருகைமா மலரினின்றெம்மான்
மடுத்தகண்களின்வெம்மைதாக் குறும்வியர்வையினு
லடுத்ததாஞ்சலசலவெனு மொலியொடுமடங்காத்
தொடுத்தவெண்டிரைமாநதி யொன்றுதோன்றியதால்.

அந்தமாநதியின்பெயர் கங்கையாமப்பேர்
வந்தகாரணம்புனலெனுங் கங்கையின்மங்கை
தந்ததாலெனப்புகலுவர் கற்றுணர்சான்றோ
ரிந்தமர்ந்தசெஞ்சடைமுடி யிறைவனவ்வெல்லை.

மையுலாம்விழியுமையறம் வளர்த்திடவருநா
ளையுமாறின்றியுலகுயிர் பசிப்பிணிநண்ணு
துய்யுமாறுதன்றிருவுளத் தெண்ணியாங்குவந்து
பெய்யுமின்னருள்சுரந்து வேளாளராய்ப்பிறங்கும்.

மைந்தர்பற்பலருதித்திடக் கங்கையைமகிழ்ந்து
சிந்தையன்பொடுநோக்கலுங் கங்கையாந்தெரிவை
யந்தவெல்லையிற்பெற்றன ளுலகெலாமாக்கு
மெந்தையெம்பிராற்கரியதோ விதுசெயலெளிதே.

வேறு.

இன்னமைந்தர்தம்மை யீன்றருள்கங்கையாங்க
ணென்னருநடுங்கவேகத் தெழுந்தெங்கும்பரவமாலு
மன்னவூர்தியுமேனோரு மரனடியடைந்தாராகி
முன்னர்நின்றிறைஞ்சியேத்தி முறைமுறைமொழியலுற்றார்.

ஐயவிக்கங்கைவேக மாற்றிலேமடக்காவிட்டால்
வையகத்தேவருய்வார் மற்றெமைக்கடைக்கணித்தே

பொய்யெனக்காத்தியென்ன வொலிசெழுகங்கைதன்னைச்
செய்பவார்சடையுள்வைகத் தரித்தனன்சிவபிரானும்.

தமைப்பெறுந் தாயாங்கங்கை தனைத்தலைதரித்தார்தம்மை
யமைப்பருந்தோளியாகு மம்பிகைதன்னையாங்கட்
கமைப்பெருந்திறல்வேளாளர் கைதொழுஉக்களிப்புமீக்கொண்
டமைப்புரந்தருளுகென்ன வேத்தினரிருந்தா ரிப்பால்.

பலவுயிர்க் கொருதாயாகும் பார்ப்பதி பரமன்பாத
மலரிணை வணங்கிநின்று வள்ளலுன் மலர்க்கண்பொத்தி
யுலகுயிர்க் கிடையூறுற்று மொருதவ றேசுற்கொத்த
நலமெதைப் புரிவதென்று வினவலு நவிலுநம்மான்.

ஏதமிலிமயமீன்ற விளம்பசுங்கிளி நீயேகிப்
பூதலந் தன்னின்முத்தி பொருந்துறு காசியாதி
யோதலாந்தலமோரேழுண் மேவைகளு ளுயர்ந்தகாஞ்சி
மாதலந் தன்னிற்சென்று மாதவ மியற்றவேண்டும்.

ஆயிடைநம்மைப்பூசை யாற்றுக வாங்கணெய்தி
மீயுயர்கருணைசெய்ய மேவுவம் விடுக்கும்பாவம்
நீயிறைகொள்கவென்ன நின்பிரிவாற்றே னீசொல்
வாயுரைமறுப்பதன்று லென்றுமை மறித்துங்கூறும்.

உயிர்க்கெலா முயிராய்நின்ற வுன்விழி புதைத்தலான்மற்
றுயிர்க்கெலா மகிதஞ்செய்தே னுவகைமீக்கூரவந்த
வுயிர்க்கெலா மிதஞ்செய்வானல் லுபாறமுளுற்றவேசுற்று
முயிர்க்கெலாந் தந்தையாநீ யுதவிசெய் தருளுகென்றாள்.

என்றலுங் கருணைவைப்பா மிறையவ னிலங்கிழாய்நீ
நன்றது புரிகவென்று நயந்திரு நாழிநெல்லை
யன்றவட் கருளியிந்நெல்லவனியிற் கொடுபோயாங்கட்
குன்றலி லுழவாலாக்கங் கொளவொன்று கோடியாக்கி.

அன்புமீக் கொள்ளவெண்ணான் கறங்களும் வளர்ப்பாயென்று
புன்புலி யுரிவைபோர்த்த பூரணன் கருணைபூப்ப
மன்புவி யடைதற்கம்மை யெழுதலும் வளங்கூர்கங்கை
தன்புதல்வர்களு மேனைக்கணங்களுந் தழுவிச் சூழ்ந்தார்.

வேறு.

அருகினின்றுவிசையமகள்குடைபிடிப்பச்சயமகள்பொன்னடை
ப்பைதாங்கத், திருவமையுமகிந்திதையுங்கமலினியுமணிக்கவரி செங்
கையேந்தி, மருவியிருபுடையிரட்ட மாமணிப்பொற்சிவிகையினை
மங்கையூர்ந்து, பொருவிலறம்வளர்ப்பதற்குப்புனன்மலிகங்காநதியி
ன்புறத்துச்சார்ந்தாள்.

அந்நதியின்புனன்மூழ்கிக் கணங்களொடும்விசுவேசரமருங்கோ
யிற், சந்நிதியையடைந்திறைஞ்சி மருங்கினின்ற காராளர்தமிற்சில
லோரை, யிந்நதியின்பாங்கரிருந்தாணிரைகாத் துழுவொடுவாணிகமு
ஞ்செய்தே, யெந்நலமும்பெறுவிரெனவிறைதருநெற்சிறிதவர்கட்கீ
ந்தாளன்றே.

ஆங்கவர்களெம்மிறைவி யருட்பணிகொண்டுழுதொழிலேயாதி
யாற்றிப், பாங்கமையும்மறையோதல்வேள்வி செயலீதலுறப் பயில்வ
ரானார், தேங்கமழ்பூங் குழலுமையுமழை வளத்தாலந்நாடுசெழிக்கச்
செய்வித், தோங்கறமெண்ணான்கும்வளர்த்துயிரெலாம்புரந்துசின்னா
ளுறைந்தாளிப்பால்.

கங்கைநாடாண்டு வருமரசனறம் வளர்த்தருளுங் கௌரியென்
னு, மங்கைநாயகிகருணைத்திறம்வியந்துவந்தெதிரே மலர்ப்பொற்பா
தஞ், செங்கைகூப்புபுநின்றுதிருவருள்பெற் றேகவிடைசெலுத்திப்பி
ன்ன, ரங்கண்வேளாளரொடுகணம்பரவத்தொண்டைநாடடைந்தா
ளன்றே.

அந்நாட்டுளநகர்க்குமேனைய நாட்டுளநகர்க்குமணியென்றோதுஞ்
செந்தமிழ்மாமறைமுழங்குங்காஞ்சி நகர்புகுந்துதவஞ்செய்யவெண்
வந்தருளம்பிகைதனைச்சூழ்வேளாளர் தம்மைமுகமலர்ந்துநோக்கி[ணி
யெந்தமரும்பிள்ளைநீரிளங்கோக்கண் மன்னர்பின்னரெனலாய்வைகி.

உமக்குரியதொழிலாறுமியற்றுகெனக் கருணைபுரிந்துயர்வொப்
பில்லா, னமக்குதவுசாலியினைக்கொண்மினெனக் கொடுத்தன்னா
ளெம்பிராட்டி, நமைக்குமரராப்பெறற்குநாஞ்செய் தவமென்னையெ
னவியந்தன்னோருந், தமக்கினியவறம்புரிந்தாரீதுநிற்க வம்மைதவஞ்
ாற்றலுற்றும்.

## 32. அறங்களாவன.

### நேரிசையாசிரியப்பா.

1 ஆதுலர்க்கடையச் சாலைபமைத்தலும்
2 ஓதுநர்க்கருங்கலை யோதுவித்தோதுநர்க்
குறுசுவையூணுடை முதலியவுதவலும்
3 அறுசமயத்தோர்க் கன்னமளித்தலும்
4 பசுவுக்குணவிட்டுப் பாதுகாத்தலுஞ்
5 சிசுவுக்குப்பால் தெளிமருந்துதவலுஞ்
6 சிறைபட்டோர்க்குத் தினவூணளித்தலும்
7 அறச்சோறிரப்போர்க் கழைத்துக்கொடுத்தலும்
8 விளைபயனனைத்தையும் விழைந்துணக்கொடுத்தலுங்
9 களைகணற்றோரைக் காத்தினிதோம்பலும்
10 ஆதரவற்ற பிள்ளைகட்கருத்தித்
தீதறவளர்த்துச் சிறப்புறவுய்த்தலும்.
11 அநாதியாயுயி ரகன்றகளேபரந்
தனதெனவெடுத்துத் தகனஞ்செய்தலும்
12 ஏழைமைமணத்துநல் லியங்கலிப்பித்தலுங்
13 கோழடைபாதுசுண் ணத்தொடுகொடுத்தலும்
14 பிணிப்பட்டோர்க்குப் பெறலருமருந்து
தணிப்பிலன்பொடு தந்திரட்சித்தலும்
15 வலியற்றோர்க்கு மாசுடைத்தூசினை
யொலித்துக்கொடுக்க வண்ணானுதவலுங்
16 தலைமயிர்கழிக்கத் தருபொருளிலர்க்கு
விலைதந்தேமயிர் வினைஞனையுதவலும்
17 முன்னுறமுகந்தெரி கண்ணாடிகொடுத்தலுங்
18 கன்னியர்காதணி யோலைகொடுத்தலுங்
19 கண்ணோவகற்றுங் கண்மருந்துதவலும்
20 எண்ணெய்பிண்ணாக்குத் தலைக்கிடவீதலுங்
21 காமச்சத்திரங் கட்டிநடாத்தலும்
22 ஏமமாயிடர்பட் டோர்குறையிருத்தலு
23 நெடுவழிச்செல்வோர் விடாய்க்குநீர்ப்பந்தரும்
24 படுபசிதீர்க்கப் பாலூண்மடமும்
25 ஊர்தொறுஞ்செல்லற் குறுநன்னெறியுஞ்
26 சேர்பவர்வெம்மை தெறுநிழற்சாலையும்

27 மக்கள்விலங்குபுள் ளாதியமன்னுயிர்
தொக்கமர்தண்ணிழற் சோலையமைத்தலும்
28 பெற்றமுரிஞ்சப் பெருங்கன்னாட்டலு
29 மற்றையுயிர்க்கும் நீர்நிலைவகுத்தலும்
30 ஆவினஞ்சூல்கொண் டருங்குலம்பல்கச்
சேவினம்வளர்த்துத் தேவர்க்குவிடுதலுங்
31 கொல்லப்படுமுயிர்க் குறுவிலைகொடுத்தே
யெல்லையின் மீட்டவற் றுயிர்பிழைப்பித்தலுங்
32 கைப்பொருளில்லாக் காளையைக்கன்னியை
மெய்ப்படுநன்மண விதியிற்புணர்த்தலும்
இன்னவாமுப்பா னிரண்டெனவிதந்து
சொன்னவறங்களின் றொகையுந்துறவும்
வெந்துயர்குடையும் விதிச்செங்கோலும்
ஆய்ந்துயர்கலைகளு மமரர்தஞ்சிறப்பும்
வழுவில் வாணிகப் பயனும்
உழுநர்தந்தொழிலி னுண்டாவனவே.

இதனாற் கண்டுகொள்க.

உமாதேவியார் வேளாளர்களுக்கு அறம் வளர்க்க உணவின்மூலந் தந்தாரென்பதற்குப் பிரமாணம்.
பெரியபுராணம், திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணம்.

விழவின்மலிதிருக்காஞ்சி வரைப்பின்வேளாண்
விழுக்குடிமைப்பெருஞ்செல்வர் விளங்கும்வேணி
மழவிளவெண்டிங்கள்புனை கம்பர்செம்பொன்
மலைவல்லிக்களித்த வருளுணவின்மூலந்
தொழவுலகுபெறுமவடா னருளப்பெற்றுத்
தொன்னிலத்துமன்னுபயிர் வேதவாய்மை
யுழவுதொழிலாற்பெருக்கி யுயிர்களெல்லா
மோங்கவருந்தரும வினைக்குளாரென்றும்.

என்னுஞ் செய்யுளிற்காண்க.

### கங்கை நாட்டு வேளாளர்.

வேளாளரென்பவர்கள் எக்காலத்தும் பயிரிடுங் குடிகளேயாம். அவர்கள் சதா நீர்வளம் நிலவளமுள்ள நாட்டிலே

யே குடியிருக்க விரும்புவார்கள். ஆகவே, பூர்வகாலத்தில் இந்தியாவின் வடபாகத்திலுள்ள நிலங்கள் அதிகவளமுடையனவாக அவைகளுக்கு ஹிமாசலத்திலிருந்து கங்கையமுனை சரசுவதி முதலிய நதிகள் சதாகாலமும் வந்துபாய்ந்து கொண்டிருக்கும். ஆகையால் காசிப்பதிக்கடுத்த கங்கையாற்றின் இருபுறத்துள்ள நிலங்களும் சிறந்திருந்தமையால் ஆதிகாலத்தில் கைலையங்கிரியிலிருந்து உமாதேவியாருடன் வந்து அங்கு ஸ்தாபிக்கப்பட்டவேளாளர்கள் வசித்திருந்தார்கள். அவர்கள் வைசிய குலத்தாராதலின், தினந்தோறும் கங்கையில் ஸ்நானஞ்செய்து செபதப முதலிய அனுஷ்டானமும் சிவபூசையுஞ் செய்து கொண்டிருந்தார்கள். அதனால் அவர்களுக்குக் கங்கை நாட்டாரென்றும் பெயர் வழங்கப்பட்டிருந்தது. இதற்குப் பிரமாணம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்,
சீகாழி பண்-பியந்தைக் காந்தாரம்.

மங்கைகூறமர்மெய்யான் மான்மறியேந்தியகையா
னெங்களீசனென்றெழுவா ரிடர்வினைகெடுப்பவற்கூராஞ்
சங்கையின்றிநன்னியமந் தாஞ்செய்துதகுதியின்மிக்க
*கங்கைநாடவர்கீர்த்தி மறையவர்காழிநன்னகரே.

இ - ள். எமது சிவபெருமான் எழுந்தருளியிருக்குமூர் யாதெனவிஞ்வின் நியம நிஷ்டைகளிற் சிறந்துள்ள கங்கைநாடவர் (=வேளாளர்) கீர்த்தியும், மறையவர்கீர்த்தியும், நிறைந்துள்ள சீகாழிப்பதியாம் எனக் கூறப்பட்டிருக்கிறது.

## ஆதியில் வடநாடு சைவந்தழைத்துள்ள தெனல்.

பூலோகத்தில் சம்புத்தீவின் நடுவிலிருக்கும் மகமேருவிற்குத் தென்பாரிசத்திலுள்ள இமயமலைக்குத் தென்புறமாயிருக்கும் கண்டம் பரதகண்டமென்று பிரசித்தமாயிருக்கின்றது.

* கங்கைநாடவர் என்றும் பாடபேதமுண்டு.

அதில் தூர்வாசமா முனிவராலே ஸ்தாபிக்கப்பட்டது ஆமர்த்தகமடம். அந்தமடத்தில் வௌசிகர் கசியபர் முதலானவர்களுந் தக்ஷிணாமூர்த்தி சொரூபரான ஸ்ரீகண்ட பரமேசுரரையுபாசித்து ஆகம ஞானம்பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் சனகாதி நால்வரும் நான்கு வேதங்களையும் வேதாந்த சாத்திரங்களையும் முற்றுமோதிக் கரைகண்டவர்களாகவிருந்தும், பிரக்ஞானம்பிரமம், அகம்பிரமாஸ்மி, தத்துவமசி, அயமாத்மாபிரமம் என்னும் நான்கு வாக்கியங்களையும் அநுசந்தானஞ்செய்தும் பிரமநிஷ்டைகூடியும் சித்தம் நிலைபெறுதவராக ஸ்ரீகண்ட பரமேசுவரரை யுபாசிக்க, அவர் கல்லாலின் கீழ் எழுந்தருளி இவர்களின் சந்தேக விபரீதங்களொழியவும், சிவானுபவத்தில் சித்தம நிலைபெறும்படியாகவும், பதி பசு பாசம் அநாதியென்பது விளங்கவும், அவைகளில்பாசம் நீங்கிப் பசு பதியிற்கூடுமுபாயத்தைச் சின்முத்திரையாற்காட்டியருளி, சட்சுபரிசமுதலிய தீக்ஷைகளாலனுக்கிரகஞ்செய்தருளினர். இதற்குப் பிரமாணம் பின்வருஞ் செய்யுளிற் காண்க.

தாயுமான சுவாமிகள்.

பன்முகச்சமயநெறிபடைத்தவரு மியாங்களேகடவுளென்றிடும்
பாதகத்தவரும்வாததர்க்கமிடு படிறருந்தலைவணங்கிடத்
தன்முகத்திலுயிர்வரவழைக்குமெம தருமனும்பகடுமேய்க்கப்போய்த்
தனியிருப்பவடநீழலூடுவளர் சனகனாதிமுனிவோர்கட்குஞ்
சொன்மயக்கமறுத்தவருகைகொடு மோனஞானமதுணர்த்தியே
சுத்தநித்தவருளியல்பதாகவுள சோமசேகரகிருபாளுவாய்த்
தென்முகத்தினொருமுகமாயிருந்தகோனு மெமமுகசதுமுனும்வணங்குவே
றெரிவதற்கரியபிரமமேயமல சிற்சுகோதயவிலாசமே. [ன்

மேற்கூறிய ஆமர்த்தக மடத்திலிருந்து அதற்குச் சரியானதாக இரணபத்திராம் கோளகி புஷ்பகிரி என்னும் மூன்று மடங்கள் பிரிந்தன. ஆக நான்கு மடங்களுக்கும் சனற்குமாரர் முதலான நால்வரும் அதிபதிகளாக இருந்தார்கள்.

1. ஆமர்த்தக மடத்திற்கதிபதி சனற்குமாரர்; அவர் சந்ததியார் அந்தமடாதிபதிகளாக இருந்தார்கள். அங்கேகதம்ப விருக்ஷமுள்ளது. (கதம்பம்-கடப்பமரம்.)

2. புஷ்பகிரி மடத்திற்கதிபதி சனகர்; அவர் சந்ததியார் அந்த மடாதிபதிகளானார்கள். அங்கே அர்ச்சுனவிருக்ஷமுள்ளது. (மருதமரம்)

3. கோளகி மடத்திற்கதிபதி சனாதனர்; அவர் சந்ததியாரந்தமடத்திற்கு மடாதிபதிகளாயிருந்தார்கள். அங்கேசம்புவிருக்ஷமுள்ளது. (சம்பு-நாவல்.)

4. இரணபத்திர மடத்திற்கதிபதி சநந்தர்; அவர் சந்ததியார் அம்மடத்து மடாதிபதிகளானார்கள். அங்கே வடவிருக்ஷமுள்ளது. (வடம்-ஆலமரம்).

கோதாவரி தீரத்தில் சைவர்கள் வாசஞ்செய்யும் மந்திரகாளி என்னும் ஓர்பட்டணமுண்டு; அவ்விடத்தில் தான், சைவாசாரியர்கள் விசேஷமாயுண்டாயிருந்தார்கள். அவ்விடத்தில் மந்திரகாளீஸ்வரரைச் சூழ மேற்கூறிய ஆமர்த்தக முதலான இந்நான்கு மடங்களுமிருந்தன.

இவையெல்லாஞ் சித்தாந்த சாராவளியிற் கண்டுணர்க.

அது நிற்க, இக்காலத்துள்ளும் காசிப்பதியில் திருப்பனந்தாள் தருமபுரம் திருவாவடுதுறை முதலிய சைவாதீனத்தலைவர்களால் நூற்றுக்கணக்காக அங்கே சைவமடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. குமரகுருபர சுவாமிகளை வாதுக்கழைத்த டில்லிபாட்சாவை அச்சுவாமிகள் வாதில்வென்றதனால் அந்த டில்லிபாட்சாவால் காசிவிசுவநாதர் கோவிலுக்கும் அதைச் சார்ந்தமடங்களுக்கும் அநேக கிராமங்கள் மானியம்விடப்பட்டு நாளிதுவரையும் அம்மானியமுடையார் அநுபவித்துவருகிறது பிரத்தியட்சமாகவிருக்கிறது.

இதனால் மகமேருவுக்கும் விந்தகிரிக்கும் மத்தியப்பிரதேசங்களிலும் ஆங்காங்கு தலைநகரங்களாயுள்ள அயோத்தி மது

ரை மாயை காசி காஞ்சி அவந்திகை துவாரகை ஆகிய சப்த புரிகளிலும், சைவர்களாயுள்ள வேளாளர்களும், சைவஸ்தாப னுசாரியர்களாயுள்ளவர்களும் பிரபலமாயிருந்தார்கள். மேற் கூறிய சைவ தபோதனர்கள் நிறைந்திருந்தபடியால், இந்தச் சப்த புரிகளுக்கும் முத்தி நகரங்கள் என்று பெயராயிற்று முத்தி நகரங்களென்பது பின்வருஞ் சுலோகத்திற் காண்க.

அயோத்யாமதுராமாயா காசிகாஞ்சிஅவந்திகாபுரி
துவாராவத்நைமிஸாரண்யா ஸப்ததேமோட்சதாயகஃ

பின்னும்,

கங்கே சைவ்வமுனேசைவ கோதாவரி ஸர்ஸ்வதி
நர்மதேஸிந்து காவேரி ஜலேஸ்மின் சந்நிதிம்குரு?

என்ற அங்குள்ள கங்கையமுனை கோதாவரி சரஸ்வதி நரும தை சிந்து காவிரி என்னும் சப்த நதிகளும் முத்தி தீர்த்தங்க ளாயிருந்தன.

MADURA MANUAL OF 1868. PAGE 32.

In connection with the devotedness of the Ve ars to the Saiva faith there is a curious tradition existent to the effect that they came to Madura from Benares in the reign of Kulasegara Pandya, with a sole object of establishing there the Sivagama Siddantam or Saiva rule of faith. Perhaps they were amongst the earliest and most faithful converts of Manikavasaka : and came to Madura shortly after their conversion.

இதன் மொழிபெயர்ப்பு.

1868-ஆம் ஸ்ரூத்திய மதுரைஜில்லா சரித்திரம் பக்கம் 32.

வேளாளர்கள் சைவமதத்தில் அழுத்தமுடையவர்களாக இருந்ததனால், அவர்கள் குலசேகரன் பாண்டியன்காலத்தில் காசியிலிருந்து சைவசித்தாந்தத்தை மதுரையில் ஸ்தாபிக்கும் பொருட்டு வந்தார்கள். அவர்கள் ஆதியில் மாணிக்கவாசக ரிடத்து அனுக்கிரகம் பெற்றுச் சிலகாலத்தின்பின்னர் மது ரைக்கு வந்திருக்கவேண்டும்.

இந்தச் சரித்திரங்களால் வேளாளர்கள் பூர்வகாலத்தில் கங்கை நாட்டிலிருந்ததாகவே ஸ்தாபிக்கப்படுகின்றது.

### ஆரியர் வேளாளரோடு போர்புரிதல்.

மேற்கூறிய வேளாளர்கள் கங்கைநாட்டில் வசிக்குங்காலத்து ஆரியர்கள் பார்சீகநாட்டிலிருந்து இந்தியாவிற் குடிபுகுதத்தொடங்கினார்கள் அதன்முன்னர் சிந்துநதியின் மேலைக்கரையில் வந்துசேர்ந்து அங்குள்ளநாட்டை வசப்படுத்திக்கொண்டு பின்னர் சிந்துவைக்கடந்து கிழைக்கரையிற்சேர்ந்து அங்குள்ள பூர்வகுடிகளுடன் அநேக யுத்தஞ்செய்து அவர்கள் நாட்டைக்கைக்கொண்டார்கள்.

அங்கு சிலகாலமிருந்து கிழக்கே திரும்பி சரஸ்வதி திருஷ்வதி யென்னும் இரண்டுநதிகளுக்கும் மத்தியிலுள்ள தேசங்களையும் சண்டைசெய்து கைப்பற்றிக்கொண்டார்கள். இவ்விதமாக இந்தியாவில் இவர்கள் ஸ்தாபனையான பின்னர் கங்கைநாட்டின்மேலே படையெடுத்தார்கள். அங்குள்ள வேளாளர்கள் ஆரியர்களைக் கூடியமட்டில் அடித்துத்துரத்தினார்கள்.

### ஆரியர் வெற்றிபெறல்.

ஆரியருக்குச் சேனைகள் மேலுமேலும் பின்பலமாகவந்து சேர்ந்தவுடனே வேளாளர்கள் அவர்களுடன் போருக்காற்றாது பின்னிட்டார்கள். அதைக்கண்டு ஆரியர்கள் இவர்களைத்துரத்த ஆரம்பித்தார்கள். வேளாளர் போருக்காற்றாது ஓடி, விந்தகிரிக்குத் தென்பாகத்தில் தண்டகாரண்யத்திலுள்ள சோழநாட்டில்வந்து சேர்ந்தார்கள்.

### வேளாளர் வெற்றிபெறல்.

அவர்கள் சிலகாலம் அங்கு வசித்திருந்து பின்னர் சோழராஜனைச் சிநேகித்துக் கங்கைநாட்டில் ஆரியரால் தங்களுக்கு நேரிட்ட துன்பத்தை அவனுக்குத்தெரிவித்து, அவனால் படைத்துணைகொண்டு மீளவுங் கங்கைநாட்டை நோக்கிச்

சென்று ஆரியருடன் யுத்தஞ்செய்து, அவர்களைப் புறங்காட்டியோடும்படி துரத்தியடித்தார்கள். மேழிக்கொடியினையும் புலிக்கொடியினையும் மகமேருவிற்கொண்டு நாட்டினார்கள்.

யுகமேழுகோடியிருபதிலக்கமுமுள்ளமட்டுஞ்
சக . மூ . மூ யுகமேழிறுத்தித்தமிழ்புணர்ந்து
புகழ்மேழிவாகைப்பதாகையும்வீரப்புலிக்கொடியு
மகமேருவிற்சென்றுநிட்டியதாற்றொண்டமண்டலமே.

### வேளாளர் தென்னாடடைதல்.

பின்னர் அவர்கள் சிலகாலம் கங்கைநாட்டிலிருந்தார்கள். மிலேச்சர்கள் மேலிட்டபடியால் இங்கு இனி வசிப்பதற்கு யோக்கியதையில்லையென்று சோழநாடு வந்துசேர்ந்துவிட்டார்கள். இந்த வேளாளர்தான் வைசியரென்பவர்கள்.

### குடியரசு.

ஓர் காலத்துக் காஞ்சி நாட்டில் பலவளங்களும் நிறைய அதிலுள்ள மனுக்கள் இன்புற்று வாழ்ந்துவருநாளில், அந்நாட்டையாளும்,மதனபூபதி என்னுமரசன் அரசர்க்குரிய உலகோம்பல் படைபயிலல் மனமடக்கல என்னு மூத்தொழிலினையும் ஒருங்கே துறந்தவனாய்த்,துன்மந்திரிகளின் சகவாசத்தால் காமம் கட்குடி முதலிய துர்ச்செய்கைகள் அதிகரித்துத் தன்னாட்டிலுள்ள, ஸ்திரீகளைப் பலவந்தஞ்செய்யத் தொடங்கினான். அக்காலத்தில் ஓர் பதிவிரதா சிரோமணியாகிய வேதவல்லி என்னும் ஸ்திரீ அவனுக் கிணங்காதிருக்கவும் கையைப் பிடித்துப் ,பலவந்தஞ்செய்து இம்சை செய்தான். அதைக்கண்ட அம்மாது மனம்புழுங்கி நீயும் உனது குடும்பமும் உனது நாடும் இருந்தவிடந் தெரியாமல் அழிந்துபோகக்கடவதென்று சபித்துவிட்டுத் தன்னுடலைவிட்டுப் பிரிந்தனள். இதைக்கண்ட அவ்வூரிலுள்ளா ரெல்லோரும் நாம் இவ்வூரிலிருந்தால் இவளுக்கு வந்த கதிதானே நமமுடைய ஸ்திரீகளுக்குமுண்டாம்.

கொடுங்கோல்மன்னன் வாழுநாட்டிற்
கடும்புலிவாழுங் காடுநன்றே.

என்று பெரியோர் கூறியிருப்பதால் இந்நாட்டைவிட்டுப் பிறதேசத்தில் போய்ச்சீவிப்பதே தகுதியென்று வேற்றரசர் நாட்டில் போய்ச்சேர்ந்தார்கள். உடனே அவ்வரசனும் அவனது குடும்பமும் ஒருங்கேயழிந்தன. அவனது நாடும் மண்மேடிட்டுப் புல் பூண்டுகளுமின்றி வெட்டவெளியாய்விட்டது. சில நூற்றாண்டுகளின் பின்னர் காடுகள் மண்டிப் புலிகரடி மான் பன்றி முதலிய துஷ்டமிருகங்கள் வசித்திருந்தன. சில நாளுக்குப்பின்னர் குறும்பர்கள் அக்காட்டில் ஆடுமேய்க்கவந்து சேர்ந்தார்கள். பின்னர் பலசனங்களும் சிறுகச் சிறுக வந்து சேர்ந்து சிற்றூர்களாயின. பின்னருஞ் சனங்கள்வந்து சேரவே பயிர்கள் உண்டாக்க ஆரம்பித்தார்கள். பிறநாட்டில் போயிருந்த வேளாளர் கவரை செட்டி வாணிகர் முதலிய பலகுடிகளும் வந்து சேர்ந்தார்கள். இங்ஙனம் காடாயிருந்த இடமெல்லாம் நாடானது. ஆகிலும் அதிலுள்ள மனுக்கள் தங்களையாள அரசில்லாமையால் தங்கள் தங்கள் குலதருமங்களை நடத்தமுடியாமலும், தாந்தாம் சம்பாதித்த பொருளை அனுபவிக்கக்கூடாமலும், தீவர்த்திக்கொள்ளை கன்னங் களவு பகற்கொள்ளை முதலானவைகளால் இடர்ப்பட்டு வர்த்தகம் நடத்த முடியாமலும், ஈவிரக்கம் தானதருமம் செய்ய ஏலாமலும், இருந்ததுடன் ஒருவர் மனைவியை வேறொருவர் கைப்பற்றுதலும் பசிநோயால் வருந்துதலும் நேரிட்டன.

அங்ஙனம் நேர்ந்தகாலத்தில் விவேகியாயுள்ளவர்கள் இப்படியிருப்பதுசரியல்ல; நாம் எல்லாருங்கூடி நம்முள் ஒரு எசமானை ஏற்படுத்திக்கொண்டு, அவனுக்கு உலகியலைநடத்தவேண்டிய அதிகாரங்களைக்கொடுத்து, அவன் கட்டளையின்படி நாம் நடக்கவேண்டுமென்று ஏற்பாடுகள்செய்தால், நாம் இவ்விடத்தில் சுகசீவனஞ்செய்யலாமென்று சொன்னார்கள். இது

நல்லகாரியமே இப்படிச்செய்வது எங்களெல்லாருக்குஞ் சம்மதமென்று சகலரும் ஒப்புக்கொண்டார்கள்.

ஆனல் நம்முள் யாரை அதிகாரியாகக் கொள்ளலாமென்று ஆலோசிக்கத்தொடங்கினூர்கள். அதில் விவேகியாயுள்ள ஒருவன் எழுந்து, ஒழுக்கம் வீரம் தயை சாந்தம் ஈகை பொறை மானங் குலம் கல்வி புகழ் சான்றாண்மை மாண்பு நாணம் வாய்மை இன்சொல் பெருமை இவை நிறைந்துள்ள நற்குடிப்பிறந்தானை நமக்குத் தலைவனாகக்கொள்ளின் நன்மையுண்டாகுமென்றான்.

இதை எல்லாருங்கேட்டுச் சந்தோஷங்கொண்டு இக்குணங்களெல்லாம் ஒருங்கே எக்குடியில் நிறைந்துள்ளனவென விசாரிக்கவே, அதில் ஒருவன் இவை யெல்லாம் வேளாண்குடியிற் காணலாமென்றான். பின்னும் இவ்வேளாண்குடிப்பிறப்பினர் நடுவின்றெவ்வுயிர்க்கும் நுகர்ச்சி வருவித்தலும், பகைப்புலன் முருக்கிப்பாதுகாத்தலுந், திருவிற்பொலிந்த சிறப்புடைமையும், இன் சுவையமுதமிரந்தோர்க்கீதலும், பூமகட்குரிமைபூண்டு நிற்றலுஞ், சத்துவத்தனிக்குணத்திலே பயிறலும் ஊக்கமுஞ், செவ்வியும் உடையாரென ஆன்றோர் வாக்கானுமறிந்திருக்கிறோமென்றான்.

மகாசனங்கள் எல்லாருங்கூடிச் சற்றுநேரம் ஆலோசித்து,இக்குணநிசயமுள்ளார் வேளாளரென்று சருவசம்மதமாய் ஒப்புக்கொண்டு, அக்குடியிலுள்ள சகல சற்குணங்களு மமைந்த ஓர் பிரபுவைக் குறிப்பிட்டு, இவரே நமக்கெல்லாம் முதன்மையராக இருந்து அதிகாரஞ்செலுத்தி நம்மையாளவேண்டுமென்று அவருக்குப் பட்டங்கட்டினூர்கள். அன்று முதல் அவருக்கு முதலியார் எனப்பட்டப்பெயர்வந்தது., இப்பெயர் இக்காலத்தும் அவர் மரபிலுள்ளார்க்கும் வழங்கிவருகின்றது.

அது அங்ஙனமிருப்ப, இதைக்கண்ட கம்மாளர்கள் அழுக்காறுடையவர்களாய், இவ்வேளாளருக்கு நாம் அடங்கி நடக்கிறதா? நாம் இவர்களை எதிர்த்தால் வெல்லமாட்டோம். இம்மனிதருக்குள் சிலரைக்கலகப்படுத்திக் கட்சியேற்படுத்திக் கொண்டு, அவர்களை முன்னாகச் செல்லவிட்டு, நாம் பின்னிருந்து அவ்வேளாளருக்குக் கொடுத்த அதிகாரத்தை மாற்றவேண்டுமென்று நினைத்து, வியாபாரச்செட்டிகளைக் கூட்டி நீங்கள் செல்வ வந்தர்களாயிருந்தும் வேளாளர் பட்டங்கட்டியாள, நாம் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறதா? என்று சொல்லவே, வியாபாரச்செட்டிகள் அதற்கு என்ன செய்கிறதென்றார்கள். நீங்கள் பொருளைச் செலவிடும்பட்சத்தில், மகா சனங்களையெல்லாம் நம்முடைய பட்சம் திருப்பிக்கொண்டு, அவ்வேளாளர்களுக்குக்கொடுத்த அதிகாரத்தை உங்களுக்குக் கொடுக்கும்படி செய்விக்கிறோம்; நீங்கள் எசமானாக ஆளலாமெனவே, அவர்களும் அதை நம்பித் தங்களிடத்தில் உண்டான திரவியங்களை வாரிவிட்டார்கள். அத்திரவியங்களைப்பெற்றுச் சொற்செல்லுதலுடைய சனங்களுக்கெல்லாம் வேண்டுமானவரையும் கையடைகட்டுகிறோம் அவ்வதிகாரத்தை வியாபாரச்செட்டிகளுக்கு மாற்றவேண்டுமென்றார்கள். அதற்குச் சிலர் உடன்பட்டும், சிலர் உடன்படாமலும், வெகு சனக்கூட்டங்களுள் இரண்டுகட்சி உண்டாயின. வேளாளருக்குக் குடியரசுப் பட்டம் கொடுக்கவேண்டுமென்ற கட்சிக்காரர்கள் யாவரெனின்,

கவரைகள், இரெட்டிகள் கம்மவாரு கொந்தளவர் நத்தமான் மலையமான் கோமுட்டி இடையர் சாலியர் சேணியர் பட்டுநூற்காரர் சேடர் செக்குவாணியர் எருத்துவாணியர் இலைவாணியர் ஜனப்பர் முச்சிலியர் காஞ்சியார் வேதகாரர் ஜோகியர் குயவர் மேளகாரர் நட்டுவர் தாசிகள் ஈட்டியர் குறவர் சுக்கார்செட்டி லம்பாடிகள் வேட்டைக்காரர் பட்டனவர் ஒட்டர் உப்பரவர் போகி பணிசெய்வோர் வண்ணார்

நாவிதர் பூசாரி இருளர் பறையர் வெட்டியான் முதலானவர்கள்.

வியாபாரச் செட்டிகளுக்குக் குடியரசுப்பட்டங் கொடுக்கவேண்டுமென்ற கட்சிக்காரர்கள். கைக்கோளா கம்மாளர் பள்ளிகள்.

வேளாளர் கட்சிபலத்ததனுல் வலங்கையென்றும், வியாபாரச் செட்டிகள் கட்சி இளைத்ததனுல் இடங்கையென்றும், பெயராயின. வேளாளருக்காகக் கூடிய கூட்டம் வலுத்ததனுல் அந்தப்பட்டம் வேளாளருக்கே நிலைத்தது.

இவ்விரு கட்சிகளுள்ளுஞ்சேராது வேளாளர்கள் பொதுவாகவே யிருந்திருக்கிறுர்கள். அங்ஙனமாயின் வேளாளரை வலங்கையென வழங்கி வருகின்றதேயெனின், கவரை முதலியோரும் வேளாருக்காகவே வலங்கையிற் சேர்ந்தமையின் அவ்வலங்கைக் கட்சியார் இவ்வேளாளரையுந்தங்கள் கட்சியிற் சேர்ந்தவரென்று கூறுவர்.

அங்ஙனமிருப்பக்கம்மாளர் வேளாளரின் மேலே தீராப்பகையுடையவராய் உழவுத்தொழிற்குரிய கொழுமுதலிய கருவிகளை நாம் செய்துகொடுப்பதனுலன்றோ? இவர்கள் நம்மையடக்கி யாளவந்திருக்கிறுர்கள். இவர்கள் அதிகாரத்தைப்பார்ப்போமென்று தாங்கள் தங்கள் தொழிலைச்செய்யாமல் இறுமாப்படைந்திருந்தனர். கிராமத்தார் உழவுதொழில செய்ய முடியாமல் குடியரசாயுள்ள முதன்மையாருக்குத் தெரிவித்தவுடனே, அவர் இக்கம்மாளர்களைப்பிடித்துச் சிறையிலிட்டொறுத்தனர். உடனே அக்கம்மாளரின் பெண்டுகள்வந்து உழவிற்கு வேண்டிய கருவிகளை நாங்கள் செய்துதருகிறேம், எங்கள் புருஷர்களை ஒறுக்காதிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அப்படியே அநேகநாள் கம்மாளப்பெண்டுகள் உழவிற்குரியவாயுதங்களைச் செய்துகொடுத்து வந்தார்கள். கம்மாளரில் புருஷர்கள் இடங்கையிலிருந்தும், அவர்

பெண்டுகள் வலங்கையிற்சேர்ந்திருந்தார்கள். அநேகநாள்வரையும் கம்மாளர்கள் சிறையினின்று நீங்கமுடியாமையால், மூதன்மையாரை, இனி நாங்கள் வழக்கப்படி எங்கள்தொழிலைச் செய்துவருகிறோம், எங்கள் குற்றத்தைப்பொறுத்துக் காவலினின்று விடுவிக்கவேண்டுமென்று பிரார்த்தித்துச், சிறையினின்று நீக்கப்பட்டு வழக்கம்போலத்தங்கள் வேலையை நடத்திவந்தார்கள் பின்வருஞ்செய்யுளிற்காண்க.

குழுவார் குடிமக்களானகண்ணுளர் குறும்படக்கி
யெழுவாயமைந்த மநுநீதியாற் பதினெண்மரபு
முழுவாணரித்துக் கிடந்துவிடாம லுலகுக்கெல்லாம்
வழுவாதமைக்கவும் வல்லது நீடொண்டமண்டலமே.

இக்கம்மாளர்களைப்போலவே ஏனைய குடிமக்களும் தத்தந்தொழிலிற்றடைபடாது நடத்திவந்தமையால், மநுநீதி தவறாமல் குடியரசு அநேகநாள்வரையும் நடத்தப்பட்டுவந்தது. நாடும் வளப்பட்டுவந்தது.

பிறதேசத்திலுள்ளசனங்கள் இந்தக்குடியரசு சுகமடைந்திருப்பதைக்கண்டு சிறுகச்சிறுகவந்துசேர்ந்தார்கள். இங்ஙனம் சிறப்படைந்திருக்கும் இந்நாட்டைக் கைக்கொள்ளவேண்டுமென்று குறும்பரசர்கள் படையெடுத்துவந்தனர். இக்குடியரசுஞ் சனங்களும் ஒருங்குகூடி அவர்களுடன் அநேகதரஞ் சண்டைசெய்து அவர்களையடித்துத்துரத்தினார்கள். பின்னுஞ் சிலகாலங்கழித்து அநேக குறும்பரசர்கள் ஒன்றாய்ச்சேர்ந்து பெருந்திரளான சேனைகளுடன் இவர்களைவந்தெதிர்த்தார்கள். இவர்களும் கூடியவரையும் அவர்களுடன் எதிர்த்துப்போர் செய்து வந்தார்கள். எதிரிகளின்படைபலத்திருந்தமையானும், இவர்களுக்குப்பக்கத்துணையின்மையானும், அந்நாட்டைவிட்டுப் பிறதேசங்களிற்போய்க்குடியேறினார்கள். குறும்பரசர்கள் அந்நாட்டைக்கைக்கொண்டு ஆங்காங்கு கோட்டையிட்டு அரசாண்டுவந்தார்கள்.

## வேளாளர் தொண்டைநாட்டில் குடியேறினது.

சோழமகாராஜன் தன்னுடையநாட்டிலுள்ள குடிகளும் பயிர்களும் துஷ்டமிருகங்களால வருந்துவதைக்கண்டு, வேட்டையாடிவருவேனென்று மந்திரி பிரதானிகள் வேடுவர் குறவர் மறவர் முதலானவர்கள் புடைசூழத் தண்டகாரண்யத்துள்புகுந்து, புலி கரடி காட்டுப்பன்றி முதலியவைகளை அழித்துவருகையில, நாழிகை 15-ஆய்விட்டது. தன்னுடன்வந்த சேனைகளையெல்லாம ஓர் சோலையிலிருக்கச்செய்து தனக்கெதிரிற்றோன்றிய ஓர் இருடி ஆச்சிரமத்தைக்கண்டுவருவேனென்று, அரசன தனித்து ஒருகுதிரையின் மேலேறிச்சென்றடைந்து, ஆங்குள்ள இருடியர்நிட்டையிலிருக்கக்கண்டான். பின்னர் அவருக்குச் சிசுருஷைசெய்துவரும அவர்புத்திரி நாககன்னியென்பவள் மிகவும் ரூபவதியாயிருக்கக்கண்டு அவள் மீது மோகங்கொண்டான். அந்தக்கன்னிகை இதையறிந்து எனது தந்தையனுமதியின்றி உன்னைச்சேரேனென்றாள். உனது தந்தைதவத்திலிருப்பதால் இப்போது இடையூறுசெய்யப்படாது. நானே இந்நாட்டையாளுமரசன், உனக்கு வேண்டுவனவெல்லாம் கொடுப்பேன், என்னிஷ்டத்தை நிறைவேறவேண்டுமென்றுகேட்கவே, விவாகமின்றி எவ்விதம் உம்மைச்சேருவதென்றாள்; உடனே ஆங்குள்ள ஆதொண்டைப்பூக்களைக்கொய்துமாலையாக்கி அவள்கழுத்திலிட்டுத், தன்விரலிலுள்ள கணையாழிமோதிரத்தை அந்தக்கன்னிகையின் விரலிலிட்டுச், சேரத்தொடங்குகையில் எனக்குப்பிள்ளைபிறந்தால் என்னசெய்வீர்? என அவள்கேட்க, என்னரசை அப்பிள்ளைக்கு அளிப்பேனெனப்பிரமாணஞ்செய்து கொடுத்து அவளுடன் சுகித்திருந்தான். பின்னர் போதுபோனபடியால் மீளவும் வருகிறேனென்று, தன் சேனையுடன் தனதிருப்பிடம் போய்ச்சேர்ந்தான். அதன்மேல் அரசன் இதைமறந்து இராஜகாரியத்திலிருந்துவிட்டான்.

ஈண்டுக்கூறிய சோழனைச் சிலர் மணிகண்ட சோழன் என்றும், சிலர் குலோத்துங்க சோழனென்றுங்கூறுகிறார்கள் அதை விசாரித்தறியவேண்டியது.

அந்த நாககன்னியானவள் உடனே கர்ப்பமாகி ஒரு ஆண் மகவைப்பெற்றாள். தந்தையாகிய முனிவர் நிஷ்டை நீங்கி நடந்த வர்த்தமானங்களைக்கேட்டுக் களிப்புற்று, அக் குழந்தைக்கு ஆதொண்டன் என நாமகரணஞ்செய்து வளர்த்து, வேண்டுமான வித்தைகளெல்லாம் கற்பித்தார், வயதும் 20-ஆய்விட்டது. இஃதிங்ஙனமிருக்க, இப்பால் சோழராஜன் பிள்ளையில்லாதிருந்து தன்பட்டஸ்திரியின் கருப்பத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்து வளர்ந்துவரத், தனக்கு வயோதிகம் நேரிட்டபடியால், நாககன்னியை மறந்தவனாய்த், தனது பட்டஸ்திரீயின் பிள்ளைக்குப் பட்டாபிஷேகஞ் செய்யவேண்டுமென்று ஊர்கள் தோறும் பறையறைவித்தான். இதைச்செவியுற்றநாககன்னி தன் தகப்பனிடஞ்சென்று, அரசன் முன் தனக்கு வாக்குதத்தஞ்செய்ததையும், இப்போது அதற்கு மாறாகப்பறையறைவித்ததையும் தெரிவித்தாள் அதுகேட்ட பிதாவாகிய முனிவர் தமது பௌத்திரனையழைத்துப், பூர்வ வரலாற்றையுணர்த்தி அரசனிடஞ்சென்று உன் தாய்க்கு அவன் செய்த பிரதிக்கினையின்படி, உனக்குப் பட்டங்கட்டவேண்டுமென்று கேள். அதற்கு அரசன் சம்மதியாவிட்டால் யுத்தத்துக்குவாவென்று அழைத்து யுத்தஞ்செய்து, வென்று அரசைப் பெறுவாயென்று மந்திரோபதேசஞ் செய்தனுப்பினர்.

ஆதொண்டனும் அவர் ஆஞ்ஞையின்படி சோழனிருக்கும் நகரிற்சென்று, நாககன்னியினிடமுண்டான உமது குமாரன் வந்திருக்கிறான், அவனுக்குப் பட்டங்கிடைக்கவேண்டுமெனக்கேட்கிறானென்று அரசனுக்குச் சொல்லும்படி ஒரு தூதனையனுப்பினான்.

20 வருடத்துக்குமுன் நடந்த விஷயங்கள் அரசனுக்கு எவ்வளவும் ஞாபகமேயில்லாதிருந்ததால், அந்தத்தூதன்வந்து சொல்வதைக்கேட்டு நகைத்து, எவனோ பயித்தியங்கொண்ட

பிதற்றுவதை என்னிடத்தில் அச்சமின்றிச் சொல்லவந்தாய் உயிர் பிழைத்துப்போய்ச்சேருக என்றுசொல்லி அனுப்பினான். இதைத்தூதன் ஆதொண்டனுக்குத்தெரிவித்தான். அப்படியானால் யுத்தத்துக்குவரும்படி சொல்லென மீளவுந் தூதனுப்பினான்; அதைக்கேட்டுச் சோழனுந் திடுக்கிட்டான். மந்திரிகளும் ஆலோசிக்கத் தொடங்கினார்கள். முன்வேட்டைக்குப் போனபோது கூடப்போயிருந்து, ஆங்கு நடந்தவற்றுள் சிலவற்றையுணர்ந்த ஒரு மந்திரியானவன், அந்தப்பிள்ளையை நேரில் வரும்படி உத்தரவுசெய்யவேண்டுமென, அவ்வண்ணமே அரசன் உத்தரவுசெய்தலும், தூதன் ஆதொண்டமாலை பூண்டுள்ள பிள்ளையை எதிரில் கொண்டுவந்து விட்டான். ஆதொண்டன் உடனே அரசன் பாதத்தில் விழுந்து நமஸ்காரஞ்செய்து எழுந்துநின்றான். அப்போது ஆதொண்டனைநோக்கி நீர் எப்படி அரசன் புத்திரன் என்றீர்? என மந்திரி விசாரிக்கவும், தன் தந்தையாகிய இவ்வரசன் தண்டகாரண்யத்தில் வேட்டைக்கு வந்ததும், நாககன்னியாகிய தன்னுடைய தாய்க்கு ஆதொண்டை மாலையிட்டுக் கணையாழிதரித்துக் காந்தருவ விவாகஞ்செய்ததும், பிள்ளைபிறந்தால் தன் பட்டத்தை அந்தப் பிள்ளைக்குக் கொடுக்கிறேனென்று பிரமாணஞ்செய்து கொடுத்ததையும், கிரமமாகச்சொல்லி, அந்தக் கணையாழியையும் காண்பித்தான். சோழனது திருவுருவே இந்தச் சிறுவனிடத்தில் அமைந்து கிடப்பதும், இந்தச் சிறுவனிடத்தில் சொலிக்கும்படியான இராஜ தேசசும் காம்பீரமுங்கண்டு, இச்சிறுவன் சொல்வதெல்லாம் உண்மையென்று ஒப்புக்கொண்டார்கள். இவைகளையெல்லாங்கேட்டவுடனே அரசனும் ஞாபகம் வந்துதோன்ற, அந்தச் சிறுவனை யணைத்துக்கொண்டு அருகிலிருக்கச்செய்தான். இச்சிறுவன் பிறந்தது தெரியாமல் பட்டஸ்திரீயின் குமாரனுக்குப் பட்டங்கட்டுவதாய் அறிக்கைசெய்துவிட்டோம், அதைமாற்றினால் உலக நிந்தனைக்கு ஆளாகிறோம். இச்சிறுவனுக்குப் பட்டங்கொடாவிட்டால் சத்தியத்

துக்கு விரோதமாகிறது. இதற்கு என்னசெய்வதென, இரு தலைக்கொள்ளியின் எறும்புபோலத் தரும சங்கடம் நேரிட்டதே என்று வருத்தமுறுகையில், உம்முடையதேசத்தை யிரு கூறுக்கி இரண்டு பிள்ளைகளுக்கும் கொடுப்பதே தருமமென்று மந்திரிமார்கள்சொல்ல, உடனேபெண்ணையாற்றின் தென்புறத்திலுள்ளநாட்டைத் தென் சோழமென்றும், வடபுறத்திலுள்ளநாட்டை வட சோழமென்றும், இருகூறுக்கித் தென்சோழத்தைப் பட்டஸ்திரீயின் பிள்ளைக்கும், வடசோழத்தை நாககன்னியின்பிள்ளைக்கும் கொடுத்து இருவருக்கும் பட்டங் கட்டிவிட்டு அரசன் காலஞ்சென்றான். அவற்றுள் தென் சோழம் வட சோழங்களின் எல்லைகள் 280-ஆவது பக்கத்திற்காண்க.

சோழ மகாராஜன் வடசோழத்தை நாககன்னியினிடம் பிறந்த தனது குமாரனுக்குப் பிரித்துக்கொடுத்தது மன்றி, ஆதொண்டப்பெருமான் எனப்பட்டமுங்கொடுத்து, ரதகஜ துரகபதாதிகளாகிய சதுரங்கசேனைகளும் வேண்டுமான திரவியங்களும், தனக்கு உதவியாக மந்திரி பிரதானிகளிற் சிலரையும் பயிர்த்தொழிலில் சிறந்துள்ள வேளாளக் குடிகளையும் துணையாகக்கூட்டி அனுப்பினான். இவ்விதமாகச் சேனைசமுத்திரங்களோடு ஆதொண்டன் வடசோழம் வந்து சேர்ந்தான். அந்நாள் முதலாக அவ்வடசோழத்துக்குத் தொண்டைமண்டல மெனப்பெயராயிற்று.

அந்த நாட்டைவந்து நாற்புறமுஞ் சுற்றிப்பார்க்குமிடத்துப், பெரும்பாலும் அது காடுகளால் சூழப்பட்டு, மிருகங்களுக்கொப்பாகிய குறும்பர்களால் வசிக்கப்பட்டிருந்தது.

பதவேடு மகேந்திரவாடி ஆம்பூர்பேட்டை நாராயணவனம் வள்ளிமலை என்ற இவைமுதலான இடங்களில் குறும்பர்கள் கோட்டைகட்டிக் கொண்டிருந்தார்கள். அவை பிற்காலத்துக்கோட்டமென வழங்கப்பட்டன. அக்கோட்டை

கள் இக்காலத்தும் சில இடங்களில் தெரிகின்றன. கோமந்து குறும்பப்பிரபு, என்பவன் குறும்பர்களுக்கெல்லாம் தலைமை யான அரசனாக இருந்தான்; இவன் அந்நாட்டை 24 - கோட்டங்களாகப்பிரித்தான்.

குறும்பரசர்கள் பலதரமும் சோழ மகாராஜனால் செயிக்கப்பட்டபோதிலும், தங்களரசை முழுமையும் இழக்கவில்லை. ஆதொண்டப்பெருமான் புழற்கோட்டத்தில் இந்தக்குறும்பர்களை எதிர்த்துப் போர்செய்தான். ஆகிலும், இவர்கள் போருக்காற்றாதவனாய்ச் சோழிங்கபுரத்திற்போய்த் தங்கியிருந்தான். சோழிங்கபுரமென்பது சோழ இலிங்கபுரம் என்பதன் மரூஉமொழி. அவ்விடம் சோழனால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டுச் சிவாலயமுங் கட்டப்பட்டிருக்கிறது. ஆதொண்டைப்பெருமான் சிவபெருமானை நோக்கி வருந்தித் தவம் புரியுங் காலத்தில், அவனது சொப்பனத்தில் சிவபெருமான் தோன்றியனுக்கிரகஞ்செய்தார்.

உடனே ஆதொண்டப்பெருமான் திருவருளை முன்னிட்டுக்கொண்டு படையெடுத்து மீளவும் குறும்பரசனை வந்தெதிர்த்து வெற்றிகொண்டு புழற்கோட்டையைப்பிடித்து அதிலுள்ள வெண்கலக்கதவினையுங் கைக்கொண்டுபோனான்.

இவ்விதமாக ஏனைய குறும்பர்களையும் எதிர்த்து வெற்றி கொண்டு அவர்கள் கோட்டையையும் இடித்துத்தகர்த்தான். அதன்மேல் கீழைத்தொண்டை நாட்டிலுள்ள குறும்பர்களையெல்லாம் போர்செய்து ஓட்டிவிட்டான். அவர்கள் மைசூர் நீலகிரி முதலான இடங்களில் போய்ச்சேர்ந்தார்கள். மேலைத்தொண்டை நாட்டிலுள்ளவர்கள் இன்னமும் சிலபேர் இருக்கிறார்கள்.

அப்பால் ஆதொண்டப் பெருமான் தன்னுடன் கூட வந்த வேளாளர்களை இந்நாட்டிற் குடியேற்றினான். அன்றியும்

முன்னர் இந்நாட்டில் குடியரசாயிருந்து குறும்பருடைய ஹிம்சைக்காற்றாது புறநாட்டிற்போய்க் குடியேறி யிருந்தவர்களையும் அழைப்பித்துக் குடியேற்றினான். பின்னர் அவர்களைக்கொண்டு காடாயிருந்த பாகங்களையெல்லாம் வெட்டி, நாடாகச்செய்தான். இதற்குப் பிரமாணம் பின்வருஞ்செய்யுளிற் காண்க.

ஏரெழுபது.

மேடுவெட்டிவளப்படுத்தி மெய்வரம்புநிலைநிறுத்திக்
கோடுவெட்டிக்காராளர் குவலயத்தைக்காத்திலரேற்
பாடுவெட்டிக்குறும்படக்கப் படைவேந்தரவர்விளைத்த
காடுவெட்டிப்பகையறுத்துக் கலிகளையமாட்டாரே.

வேளாளர்களையே தேடிக்கொண்டுவந்து இந்நாட்டிற் குடியேற்றுவானேன் என்னில்? இத்தேசங்களிலுள்ள நாடெல்லாம் நாடன்றாம்; பின்னை நாடெனப்படுவது யாதெனில்?

நாயனார் குறள்.

தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.

இ - ள். குறைவிலாது பயிர்செய்யும் வேளாளரும் அறவோருங் குறைவிலாச் செல்வமுடையாருஞ் சேர்ந்துள்ளதே நாடாம். இங்கே விளைவென்பது உழவுசெய்பவராகிய வேளாளரையுணர்த்தி நின்றது. திருக்குறள் 187 - ஆவது பக்கத்திற்காண்க. ஆகையால் ஆதொண்டப்பெருமான் இவ்விலக்ஷணங்களமைந்துள்ள வேளாளர்களைக்கொண்டு வந்து குடியேற்றினான் என்பது கருத்து.

இது நிற்க. இவ்வேளாளர்கள் இந்நாட்டிற் குடியேறுங் காலத்தில் மூன்று வகுப்பினராயிருந்தார்கள்.

1. கொண்டை கட்டிகள் இவர்கள் குடுமிக்குப்பிரதியாகத்தலைமயிர் முழுமையும் வளர்த்துக் கொண்டையாகக் கட்டிக்

கொண்டிருப்பார்கள். இவர்கள் குறும்பரோடிருந்த பழக்கவாசனையால் கொண்டைகட்டிக் கொண்டிருந்தார்களெனக் கூறுவார்கள். அன்றியும் நாவிதன் பிடிக்கத் தங்குடுமியைக் கொடாத காரணத்தால் இப்பெயருற்ருர் என்பாருமுளர். இவர்கள் இந்நாட்டில் சீர்திருத்தப்பட்ட வூர்களில் மிகத்தூரத்தில் அங்குமிங்குமாகச் சிதறுண்டிருந்தார்கள்.

2. சோழிய வேளாளர்கள் நற்குடி 48,000, பசுங்குடி 12,000, ஆ 60,000, பேர்கள் அரசனேடு கூடச்சோழ நாட்டிலிருந்து வந்தவர்கள்; இவர்கள் நிலத்தைத் திருத்துவதால் உண்டாகும் அதிகப் பிரயாசையையும் அதனுல் உண்டாகும் சொற்ப பலனையுங்கண்டு வெறுப்படைந்தார்கள். அதனுல் சிலர்தாம் இந்நாட்டில் தங்கியிருந்தார்கள். ஏனையோர் பழையபடி தங்கள் சுயநாடாகிய தென் சோழம் போய்ச்சேர்ந்தார்கள்.

3. துளுவவேளாளர்கள், இவர்கள் கன்னடதேசத்தில் துளுவ நாட்டிலிருந்துவந்து குடியேறினவர்கள். இவர்கள் இந்நாடு முழுமையையும் வளப்படுத்துவாராகில், காணி மானியம் மிராசு முதலானவைகளும் இவர்களுக்கு விடப்படுமென்று அரசனுத்தரவுசெய்தான். அவ்வாறே இவர்கள் வளப்படுத்திக் காணி முதலியவைபெற்ருர்கள்.

இவ்விதமாக மேற்கண்ட மூன்று வகுப்பாரும் தொண்டைமண்டலத்தில் இக்காலத்தும் மிராசு பெற்றிருக்கிருர்கள். இதில் பெரும்பாலும் துளுவரேயாம். சோழியரும் கொண்டைகட்டிகளும் தனித்தனியே சிறுபான்மையராயிருக்கிருர்கள். தமிழரசு காலம்வரையும் இந்த நாட்டில் பூஸ்திதியை அடைதற்கு யோக்கியதை யுடையவர்கள் வேளாளர்களேயொழிய யேனைய சாதியாரல்லர்.

ஆதொண்டப்பெருமான் தனது நாட்டை 24-கோட்டம், 79-நாடு, 1,900-நத்தமாகப் பிரித்தான்.

கோட்டமோரிருபானுன்கு கூறுநாடெழுபத் தொன்பான்
றேட்டெழிலாயிரத்துத் தொளாயிரநத்தமாகுந்
தாட்டெழுகோத்திரங்கள் சகத்திரம்பன்னிரண்டாம்
நாட்டில்வேளாளர்தம்மை நவின்றிடவடங்காலக்கம்.

மேற்கண்ட 1,900-நத்தத்தில் இக்காலத்தில் கணக்கிடுமிடத்தில் 680-நத்தங்கள் தானிருக்கின்றன. 12,000-கோத்திரத்துள் 2,000, கோத்திரங்க ளிருக்கின்றன. ஏனைய நத்தங்கள் சமுத்திரங் கொள்ளப்பட்டிருக்கவேண்டும், அல்லது காடு மேடுகளாயிருக்கவேண்டும், அல்லது வேற்றரசர் நாட்டில் சேர்ந்திருக்கவேண்டும்.

மிராசுரையிட்டு, 57-ஆவது பக்கம்.

சீர்கொண்டதொண்டமண்டல மிருபதுடனுலு
செப்பிடுங்கோட்டமவையிற்
சேருமெழுபத்தொன்பதாகு நாடவையினூர்
தசநூறுநவநூறதாம்
பார்கொண்டகோத்திரம் பன்னீராயிரமுன்
பகர்ந்தபட்டயமுள்ளதிப்
பட்டயந்தனிலில்லை யுள்ளபடிமுன்னோர்
பகர்ந்திடுமூர்களவையில்
வேர்கொண்டகாடுசில வாயவோதிரைவீசு
வேலைசிலதைக்கொண்டதோ
வேற்றரசர்நாட்டினிற் சேர்ந்திட்டவோவலது
மேடாய்வளர்ந்திட்டவோ
கார்கொண்டநீர் கொண்டுபெள்ளவழியாயவோ
கழறுமிவ்வூர்களெல்லாங்
கச்சிபுரிற்கல்வெட்டுசெப்பேட்டிலுளவென்று
கற்றநாவலர்சொன்னதே.

## தொண்டைமண்டலம்.

| ஜில்லா. | தாலூகா. | எண். | கோட்டம். | நாடு. | எண். | கூட்டுத் தொகை. |
|---|---|---|---|---|---|---|
| | | | கீழைத்தோண்டை நாடு. | | | |
| செங்கல்பட்டு ஜில்லா. | சைதாப்பேட்டை ... | 1 | புழற் கோட்டம் ... | நாயிறு. | | |
| | | | | அம்பத்தூர். | | |
| | | | | ஆகுடி. | | |
| | | | | ஆற்றூர். | | |
| | | | | எழுமூர். ... | 5 | 5 |
| | ஷை ... | 2 | புலியூர்க் கோட்டம் ... | குன்றத்தூர். | | |
| | | | | பேறூர். | | |
| | | | | மாங்காடு. | | |
| | | | | அம்ளூர். | | |
| | | | | கோட்டூர். ... | 5 | 10 |
| | திரு எவ்வுளூர் ... | 3 | ஈக்காடு ... | காக்களூர். | | |
| | | | | கச்சி. ... | 2 | 12 |
| | காஞ்சிபுரம் ... | 4 | செங்காட்டுக் கோட்டம் ... | பொன்னலூர். | | |
| | | | | அதிகத்தூர். ... | 2 | 14 |
| | பொன்னேரி ... | 5 | பையூர்க் கோட்டம் ... | விற்பற்றி. | | |
| | | | | சேணூர். | | |
| | | | | வெண்கலி. | | |
| | | | | கன்னி. ... | 4 | 18 |

| ஜில்லா. | தாலுகா. | எண். | கோட்டம். | நாடு. | எண். | கூட்டுத் தொகை. |
|---|---|---|---|---|---|---|
| செங்கல்பட்டு ஜில்லா. | காஞ்சிபுரம் ... | 6 | எயிற் கோட்டம் ... | தண்டகம். | | |
| | | | | மாகறல். | | |
| | | | | கோனேரி. ... | 3 | 21 |
| | ஷை ... | 7 | தாமக் கோட்டம் ... | கரிவீடு. | | |
| | | | | வடகரைவல்லம். ... | 2 | 23 |
| | ஷை ... | 8 | ஊற்றுக்காடு | பாலையூர். | | |
| | | | | சம்மனூர். | | |
| | | | | துன்றம். | | |
| | | | | வேளூர். ... | 4 | 27 |
| | செங்கற்பட்டு ... | 9 | களத்தூர் ... | குறும்பறை. | | |
| | | | | வல்லிபுரம். | | |
| | | | | மாத்தூர். | | |
| | | | | நடு. ... | 4 | 31 |
| | பொன்னேரி ... | 10 | செம்பூர்க் கோட்டம் ... | பிறையூர். | | |
| | | | | பட்டணம். | | |
| | | | | முகுந்தூர். ... | 3 | 34 |
| | செங்கற்பட்டு ... | 11 | ஆமூர்க் கோட்டம் ... | குமிழி. | | |
| | | | | படுவூர். ... | 2 | 36 |
| | மதுராந்தகம் ... | 12 | ஈதூர்க் கோட்டம் ... | அறமுறங்கா. ... | 1 | 37 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| செங்கல்பட்டு ஜில்லா. | காஞ்சிபுரம் ... | 13 | காலியூர்க் கோட்டம் ... | காழியூர். | | |
| | | | | திருப்புலிவனம். | | |
| | | | | விற்பேடு. | | |
| | | | | எரிகீழ். | | |
| | | | | பாவூர். ... | 5 | 42 |
| | மதுராந்தகம் ... | 14 | வேலூர்க் கோட்டம் ... | ஒழு•ரை. | | |
| | | | | நெனமலி. | | |
| | | | | மாத்தூர். ... | 3 | 45 |
| தென் | ஆர்க்காடு ஜில்லா ... | 15 | சிறுகாரைக் கோட்டம் ... | ஆயந்தம். ... | 1 | 46 |
| வட ஆர்க்காடு ஜில்லா. | கார்வேட்டி நகரம் ... | 16 | மணவூர்க் கோட்டம் ... | பாசாலை. | | |
| | | | | இல்லத்தூர். | | |
| | | | | கண்ணூர். | | |
| | | | | புரிசை. | | |
| | | | | பெருமூர். ... | 5 | 51 |
| | ஷை ... | 17 | வெண்குன்றக்கோட்டம் ... | பெருநகர். | | |
| | | | | அரசூர். | | |
| | | | | மருதாடு. | | |
| | | | | நல்லூர். | | |
| | | | | தெள்ளாறு. ... | 5 | 56 |
| | ஷை ... | 18 | பல்குன்றக் கோட்டம் ... | பாசூர். | | |
| | | | | தச்சூர். | | |
| | | | | மெய்யூர். | | |
| | | | | சிங்கம்பொருத வளநாடு. | | |
| | | | | பெருந்திமிரி. ... | 5 | 61 |

| ஜில்லா. | தாலூகா. | எண். | கோட்டம். | நாடு. | எண். | கூட்டுத் தொகை. |
|---|---|---|---|---|---|---|
| வட ஆற்காடு ஜில்லா. | கார்வேட்டிநகரம் ... | 19 | இளங்காட்டுக்கோட்டம் ... | பொன்னூர். தென்னாற்றூர். மரகுணம். ... | 3 | 64 |
| | ஆற்காடு ... | 20 | படுவூர்க் கோட்டம் ... | ஆர்க்காடு. செங்குன்றம். ... | 2 | 66 |
| | | | மேலைத் தொண்டை நாடு. | | | |
| | சோழிங்கிபுரம் ... | 21 | கடிகைக் கோட்டம் ... | பெருங்காஞ்சி. நாகவேடு. பராஞ்சி. ... | 3 | 69 |
| | சந்திரகிரி ... | 22 | சந்திரிகை கோட்டம் ... | போளூர். வளகுளம். ஆலத்தூர். அருங்குளம். ... | 4 | 73 |
| | ஷை ... | 23 | குன்றபத்திர கோட்டம் ... | மாகாளம். நின்றை. மங்கலம். ... | 3 | 76 |
| | ஷை ... | 24 | வேங்கட கோட்டம் ... | குடகரை. தொண்டமான். போத்தப்பி. ... | 3 | 79 |

முன் குறித்த மூன்று வகுப்பினராயுள்ள வேளாளர்களுக்கு அவரவர்கள் சக்திக்குத்தக்கபடி பயிரிடும்படி, ஒவ்வொரு நாட்டிலுள்ள நிலங்களையும் பிரித்துப் புத்திரபவுத்திரபாரம்பரியமாக ஆண்டு அனுபவித்துக்கொள்ளும்படி, அரசனுல் காணியாட்சி யேற்படுத்தப்பட்டது.

பின்னும் அவ்வேளாளர்க்குப் பணிசெய்யும்படி, பதினெட்டுக் குடிமக்களையும் ஏற்படுத்தி, அவரவர்களுக்கு மானியமும் கொடுக்கப்பட்டது.

தொண்டமண்டலவரிசைமூவாறுகுடிமக்கள் சுருதிநாண்முதலாகவே, துங்கமிகுநாவிதன்குயவன்வண்ணானே சொன்னபடியெழுதுமோச்சன்,—கண்டகம்மாளர்வகையைவர்வாணியர்மூவர் கந்தமலர்மாலைகாரர், கலைமீதுசரடோட்டுபோணன்றலைக்கடைக் காவல்புரிபள்ளிவலையன்,—பண்டுமுதலூரான்மறிக்குமிடையன்விருது பலகூறுவீரமுடையான், பதினெண்மர்குடிமக்களனைவருங்காராளர் பணிசெய்துபலமுறைமையுங்,—கொண்டுபெரிவட்ட முங்கட்டியேவருவரிக் குவலயமதிக்கவேதான், கூறரியகச்சிவாழேகம்பராலயக் குமுத்தத்திலிட்டலிபியே.

இவர்கள் குடியிருப்புக்குப் பள்ளிக்குப்பம் அம்பட்டக்குப்பங்களும், பறைச்சேரி யிடைச்சேரிகளும், பிறவும் அந்தந்த வூருக்கருகே அமைக்கப்பட்டன. இவர்களுக்கு விடப்பட்ட மானியங்களை யல்லாமலும், பயிர் சாகுபடி யாகுங்காலத்தில் ஒவ்வொரு மிராசுதார்களும், களவாசத்தில் குறுணி பதக்கென்று பிச்சை கொடுப்பதுமுண்டு.

இதுவன்றியும் பயிர்செய்வதற்கு இவ்வேளாளர்கள் பறைபள்ளிகளை அடிமையாகவுங் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எழுதிக்கொடுத்த சாஸனங்கள் வேளாளர் அறுதொழில் விளக்க அத்தியாயத்திற் கிருஷியிற் கூறப்படுமாங்குணர்க.

ஆதொண்டப்பெருமான் தான் பிரித்த 79 - நாட்டிற்கும் வேளாளருள் 79 - பெயரை நாட்டாரென நிருமித்தான்.

MIRASI RIGHT OF 1852, PAGE 57.

The sub division of Nadus was introduced by the agricultural colonists and the office of Nattan or head of the Nadu which still remains and possesses some authority as to questions of Caste especially was established and conferred on the principal Vellalar whose descendants now hold it.

1852ஷ மிராசு ரயிட்டு, 57-ஆவது பக்கம்.

நாடுகளின் உட்பிரிவுகள் குடியேறின கிருஷிகர்களால் உண்டாக்கப்பட்டன. சாதியைப்பற்றிய விவகாரங்களை விசாரிப்பதற்காகச் சிறிது அதிகாரத்தைப் பெற்றுவிளங்குகிற நாட்டுத் தலைமை நாட்டாண்மையானது, முக்கியமாக உண்டாக்கப்பட்டு, அவ்வுத்தியோகம் வேளாண்டலைவருக்கே கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் சந்ததியார் இக்காலத்தும் அந்நாட்டாண்மைத் தனத்தைப்பெற்றிருக்கின்றார்கள்.

The junction of the Nattans of a Kottam with the chief proprietors of their respective Nadus formed what was called the Maha-Nadu, an assembly of which the tradition now only remains: the consideration of agricultural improvements in the Kottam, of the means of extending irrigation, &c. seem to have been principally the purposes for which it met. Whether its members possessed deliberative and administrative powers and resembled our ancient *Witena-Gemôtes, I posses not data for determining; though the phrase, Manthri Mahanadu, the former term signifying a Minister of State being generally used to express the concurrence of the government and the people would seem to indicate that it actually had such powers.

இதன் மொழிபெயர்ப்பு.

ஒவ்வொருகோட்டத்தினது நாட்டார்கள் தங்கள்தங்கள் முக்கியமான மிராசுதாரர்களுடனே கூடுங் கூட்டமானது மகாநாடென்னப்படும். அந்தக்கூட்டமானது விசாரிக்குமிடத்து

*An assembly of wise men in England in ancient days.

இக்காலத்தில் சரித்திரமாத்திரமே யிருக்கிறது. இந்தக்கோட்டத்தில் நீர் பாய்ச்சுவதை எவ்விதமாக விருத்திசெய்தால் பயிர் விருத்தியாகுமென்பதை ஆலோசிப்பதற்காகவே இக்கூட்டம் ஏற்பட்டதென்று அபிப்பிராயப்படுகின்றது. நம்முடைய பூர்வ Witena-gemôt என்ற கூட்டத்தாரைப்போலவே இந்தக் கூட்டத்தாருக்கு வாதிப்பதற்கும், அதிகாரத்தைச் செலுத்துவதற்கும், அதிகாரமுண்டோ இல்லையோ அதை நிச்சயிக்க எனக்குச்சாதனங்கள் அகப்படவில்லை. இராஜாங்கமந்திரி என்னும் பொருளைக்கொள்ளும் மந்திரி மகாநாடு என்னும் பூர்வபதம் இராஜகாரியங்களைக்குறித்து ஆலோசிப்பதற்காகவே வழங்குவதால், ஜனங்கள் அவ்வித அதிகாரத்தைப் பெற்றிருந்ததாகத் தெரியவருகிறது.

### TINNEVELLY MANUAL OF 1879.

The land owners had always the complete command of the village servants, and could refuse the use of barbers washerman or watchman to recusant members of any of the other classes.

### 1,879-ஆண்டில் திருநெல்வேலிச்சில்லாச் சரித்திரம்.

காணியாளர் அல்லது மிராசுதாரர்கள் கிராமத்தொழிலாளிகளை நடத்துவதற்குப் பூரண அதிகாரமுண்டு. அதனால் அம்பட்டன் வண்ணான் காவலாளி முதலியவர்களை இதரசாதியாருக்கு வேலைக்குப் போகவொட்டாமல் தடைசெய்யலாம்.

### இளங்கோக்கள்.

ஆதொண்டப்பெருமான் தனது இராச்சியத்திலுள்ள குடிகளை நீதிதவறாது அடக்கியாள ஒருவனால் முடிவுபெறாது, இங்குள்ள 24 - கோட்டங்களிலும் இருந்து அரசுசெலுத்துவதற்கு 24-இளங்கோக்களை நியமிக்கும்படி, நிச்சயித்து அதற்குத் தகுதியுடையார் யாரென ஆலோசிக்கத்தொடங்கினான்.

ஹிந்து ஜாதியர்களுள் மூதன்மைபெற்றுள்ள அந்தணர்களைக் கோக்களாக நியமிக்கலாமெனின், "ஆறுகெட நாணலிடு ஊருகெட நூலைவிடு" எனப் பழமொழியிருப்பதால் அந்தணரை நியமிக்கின் அவர்கள் நாட்டைக் கெடுத்துவிடுவார்கள். நமது சோழ வமிசத்திலுள்ளவர்களை நியமித்தால் அவர்கள் நமது இராச்சியத்தைக் கைப்பற்றிக்கொண்டு நம்மை இராச்சியத்தைவிட்டு ஒட்டிவிடுவார்கள். வேளாளரல்லாத வேறு சாதியாரை நியமித்தால் நீதி தவருது செங்கோல்செலுத்த மாட்டார்கள். ஆகவே, வேளாளரை நியமித்தால் ஆணைவழிநிற்றல் அழிந்தோரைநிறுத்தல் கைக்கடனாற்றல் கசிவகத்துண்மை ஒக்கல்போற்றல் ஓவாமுயற்சி மன்னிறைதருதல் ஒற்றுமைகோடல் விருந்துபுறந்தருதல் திருந்திய வொழுக்கம் என்னுந் தசவித நற்செய்கை யுடையவர்களாதலின், அவர்கள் உலகுயிர்க்கு எப்போதும் உபகாரஞ்செய்வார்களேயன்றி ஒருவருக்குந் தீங்குசெய்யக் கனவிலும் நினையார்கள் ஆகையால் அவர்களில் செல்வம் அறிவு ஒழுக்கம் நற்குண நற்செய்கை யுடையவர்களாயுள்ளவர்களை ஆராய்ந்தெடுத்து, 24-வேளாளப் பிரபுக்களை 24-கோட்டங்களுக்கும் இளங்கோக்களாக நியமித்தான்.

இவ்வேளாளரை இளங் கோக்களாக நியமித்தற்குச் சிலர் வேறு நியாயமுஞ்சொல்லுகிருர்கள். அதாவது கரிகாலச் சோழனுக்கு முன் இந்த வேளாளர்கள் இந்த நாட்டில் தாமே அரசாண்டுகொண்டிருந்தார்கள். அதன்பின் குறும்பர்களது கொடுமையினுல் இந்நாட்டையும் அரசையும் இழந்து பிறதேசங்களில் சென்று வர்த்தகம் கிருஷியாதி தொழிலைச்செய்து கொண்டு அங்ஙனே நிலைத்த குடியாயிருந்துவிட்டார்கள். ஆதொண்டைச் சக்கரவர்த்தி அக்குறும்பர்களைத் தொலைத்து மீளவும் அரசிழந்த வேளாளர்களை யழைத்து அரசாட்சி அவர்களுக்கே கொடுத்தானென்பது. தேவியாரால் வேளாளர்கள் இந்நாட்டில் வந்து நிறைந்ததனுல் தொண்டைநாடு ஏனை

யநாடுகளைவிடப் பெரிய தவத்தைச்செய்த நாடெனக்கூறப்பட்டிருக்கிறது.

வருமாறு.

பூதவஞ்சூதமுதலாகநின்ற பொதும்பிற்சந்தப்
பாதவம்போன்மிக்கவேளாளர் தங்கியபான்மையிஞ
லாதவஞ்சூழ்சருபல்கோடிதேய மனைத்தினுமா
மாதவஞ்செய்ததன்றோதமிழ் சேர்தொண்டைமண்டலமே.

என்றபாடலாற்காண்க. இதுநிற்க,

| | | | |
|---|---|---|---|
| சேரமண்டலம் | ... | 80 | காதம். |
| பாண்டிமண்டலம் | ... | 56 | ,, |
| சோழமண்டலம் | ... | 24 | ,, |
| தொண்டைமண்டலம் | ... | 20 | ,, |

இதன்விவரம் 280-ஆவது பக்கத்திற்காண்க.

சேர சோழ பாண்டியர்களின் தேசங்கள் தொண்டைமண்டலத்தைவிடப் பெரிதாயிருக்கினும், அவற்றையாளும் அரசர்களுக்குச் சக்கரவர்த்தியென்றபட்டம் வராதிருக்க, குறைந்த அளவுள்ள தொண்டைமண்டலத்தரசனுக்குச் சக்கரவர்த்திப்பட்டம் எவ்வாறு வரக்கூடுமெனின்? அவர்களது நாட்டில் அவர்கள் அரசின் மேலரசாயிருந்திலர். தொண்டைமண்டலத்தில் 24-அரசின் மேலரசாயிருப்பதனுல், ஆதொண்டவரசனுக்கு இளங்கோக்களாகிய 24-கோட்டத்து வேளாளரும் முடிசூட்டிச் சக்கரவர்த்திப்பட்டங்கொடுத்தார்கள். இதனுல் தொண்டைமண்டலத்திலுள்ள 24-கோட்டங்களுக்கும் வேளாளர்கள் இளங்கோக்களெனப் பெயர்பூண்டு அரசாண்டு வந்தார்களென்பது பெறப்பட்டது.

வேளாளரரசாண்டாரென்பதற்குப் பிரமாணம்.

காளமேகப்புலவர்.

உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற வொருகோடி
வெள்ளங்கா லந்திரிந்து விட்டோமே—தெள்ளுதமி

ழாமூர் முதலி யரசர்பிரா னிங்கிருக்கப்
போமூ ரறியாமற் போய்.

தொண்டைமண்டல சதகம்.

மோதிச்சிவந்தகவிகாளமேக மொழிந்தவெண்பாப்
பாதிக்குமுந்திப்பரிசளித்தோன் களப்பாளனென்று
மாதிக்கம்பெற்றவனாமூர் முதலியரசிருப்ப
மாதிக்கெலாம்புகழ்கின்றதொல் சீர்த்தொண்டைமண்டலமே.

இதனால் களப்பாளன் என்னும் ஆமூர் முதலியார் அரசாண்டதாகத் தெரியவருகிறது.

வாணன் புகழெழுதா மார்புண்டோ மாகதர்கோன்
வாணன் புகழுரையா வாயுண்டோ—வாணன்
கொடிதாங்கி நில்லாத கொம்புண்டோ வுண்டோ
வடிதாங்கி நில்லா வரசு.

இதனால் வேளாளராகிய ஏகம்பவாணர் மகதநாட்டரசர் எனத்தெரியவருகிறது.

நீளத்திரிந்தென்றுவெண்பாவினாலன்று நின்றையர்கோன்
காளத்திவாணனைப்பாடியபாடல் கருதுமண்ட
கோளத்தினுஞ்சென்று பாதாளம்புக்குக்குலவுசக்ர
வாளத்தினுஞ்சென்றதா லெளிதோதொண்டைமண்டலமே.

இதனால் வேளாளராகிய காளத்திவாண முதலியார் திருநின்றையூர்க்கரசர் எனத்தெரிய வருகிறது.

பயிரைப்பெரும்பன்றிதின்றதற்காகப் பரிசனத்தோ
ருயிரைப்பருகியுடலவர்க்கீய வொருபுலவன்
செயிரைப்புடைத்ததுந்தானே பொறுத்தந்தச்செய்யுதவு
வயிரப்பனென்பவன் வாழ்வானதுந்தொண்டைமண்டலமே.

குருகுதங்கள்கருவெணவெண்முத்தமிசை குடியிருக்குமெழில் பழனயின், குமுதமல்குதடமேயவென்றிதருதொண்டைமண்டலவரம்பினுட்—,பாவுகால்வளைபல்குன்றகோட்டமெய்யூரயர்ந்தவயிரப்பபூ, பதிதனக் கடிமைவேலைசெய்பவர்வளர்த்தபன்றியொருபாவலன்—,

விரிநிலத்திற்சிறுபயிரழிக்கநனி வெகுளிகொண்டுவிரல்கவிவலான்,
விரைவிலாங்கதனையும்வளர்த்தவனை யுஞ்செருக்கவைரப்பவேள்—,
கருதிவாணனிகன்முனிவுதீரநெடு கதிர்விளைச்சலுதவிப்புகழ், கமழ்
பெருங்குவளைமாலைசேரிலகு கங்கையக்குலவேளாளனே.

இதனால் பல்குன்றக்கோட்டம் மெய்யூரிலுள்ள வயிரப்பமுதலி யாரைப் பூபதியெனக் கூறியிருப்பதாலும் கொடையின் வளப்பத்தாலும் அவர் அரசரெனத்தெரிகின்றது.

வேளாளர் வீரம்.

தாறுற்றசெந்தமிழொப்பாரி யென்னுந்தமிழ்புனைந்தோன்
சேறைப்பதிச்சந்த்ரசேகரவாணன்முன் சென்றவர்நாள்
வீறற்றனரென்று வேளாளரைமன்விலங்கிலிட
மாறற்குவந்துமுடிசூட்டினான் றொண்டமண்டலமே

இப்பாடலால் கம்பரால் ஒப்பாரியென்னும்பாடலைப்பெற்றோனாகிய சேறையம்பதியில் வாழும் சந்திரசேகரவாணன் என்னும் பிரபுவினிடத்தில் காஞ்சிநகரையாண்டுவந்த சோழகுலத்தரசன்வர, அவனை அப்பிரபு எதிர்கொள்ளாதிருக்கவே, வேளாளர் செருக்கடைந்தார்களென்று கோபித்து, வேளாண்குடிகளை விலங்கிலிட்டுச் சிறைசெய்யக்கண்டு, அப்பிரபு அவ்வரசனைப்பிடித்துச் சிறைசெய்துவிட்டுப், பாண்டியதேசத்தரசனொருவனைக் கொணர்ந்து முடிசூட்டினான். அப்படிப்பட்ட வீரத்தனமுடைய வேளாளரையுடையதாம் இத்தொண்டைமண்டலம் என்பது கருத்து.

இதனால் சந்திரசேகரனென்னும் வேளாளன் சோழனரசைப்பறித்துப் பாண்டியனுக்கு அளித்தான் என்பதாம்.

இதுநிற்க ஓர்காலத்து, சேர சோழ பாண்டியராகிய மூவேந்தர்களுந் தங்கள் இராச்சியத்தினெல்லை வழக்கைத் தீர்த்துக்கொள்ள ஒன்றுசேர்ந்து எல்லை வரையறுத்தபின், சோழநாட்டிலுள்ள பலதலங்களையும் தரிசித்துக்கொண்டுவருகை

யில், ஆற்றாரில் எண்டிசையினும் கீர்த்திபெற்றுள்ள ஏகம்ப வாணராகிய வேளாளவரசனைப் பார்க்கும்படி வீட்டில்வந்து விசாரித்தார்கள். அவரது மனைவி முதலியார் கழனி பார்க்கப்போயிருக்கின்றார் என்று ஏவலாளராலறிவிக்க, அது தெரிந்துமூவரசர்களுள், சேர சோழர் நாம் வந்தபோதிருந்து உபசரிக்கவில்லையேயென்று மனவருத்தங்கொள்ளப், பாண்டியன் அகங்கரித்து "மூப்பர் நாற்றுமுடி பிடுங்கி நடப்போயினரோ" என்று ஏளனமாகச்சொல்ல, ஏவலாளராலது தெரிந்த ஏகம்பவாணன்மனைவி,

சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
யானை மிதித்த வருஞ்சேற்றின்—மானபரன்
மாவேந்த னேகம்ப வாணன் பறித்துநட்டான்
மூவேந்தர் தங்கண் முடி.

என்னும்பாடலைச் சொல்லியனுப்பக்கேட்டு மனம்புழுங்கி யரசர் மூவருஞ்சென்றனர்.

வாணன் வீட்டில் வந்தவுடனே மனைவி நிகழ்ந்தசெய்தியைச்சொல்ல, மானத்தால் மனம்புழுங்கிக் கண்கள்சிவந்து அவரது செருக்கை யொழிப்பேனென்று கோபித்தெழுந்து, தனக்கடிமையாகிய பூதத்தையழைத்துச் சேர சோழ பாண்டியர்களை யுடனே பிடித்துக்கொண்டுவந்து சிறைச்சாலையிலடைக்கும்படி கட்டளையிட்டான். அப்பூதம் உடனே சேர சோழர்களைப் பிடித்துச் சிறையிலடைத்துவிட்டுப், பாண்டியனிடத்தில் வேப்பமாலையிருப்பதா லவனைக்கிட்டவொண்ணலாகாதென்றது. அதன்மேல் சேர சோழர்கள் வேண்டிக்கொண்டமையால் அவர்களைச்சிறையினின்றும் விடுத்துப், பின்னர் கம்பரிடத்திலிருந்த நான்கு தாதிப்பெண்களை வரவழைத்து அவர்களுக்கு வேண்டுமான வஸ்திராபரணங்களைக் கொடுத்துப், பாண்டியன் சபையிற்போய் அவன்மேற் கவிபாடி அவனணிந்துள்ள வேப்பமாலையைப் பரிசாக வாங்கிவரும்படியனுப்பினான்.

அப்பெண்கள் அவ்வாறே பாண்டியன் சபையிற்போய் அவ்வரசன்மேற் கவிபாடப், பாண்டியன் அவர்களைமெச்சி ஆடையாபரணங்களும் வேண்டுமான திரவியங்களுமளித்தான். உடனே அத்தாதிப்பெண்கள் எமது ஏகம்பவாணர்து தயையால் அளவிறந்தவை இருக்கின்றன. எம்மைவந்து யாசிப்போருக்கு இதினும் பதின்மடங்கு கொடுப்போம், நாங்கள் இவற்றைக்கருதி வந்தேமல்லம், உமது வேப்பமாலையே எமக்கு வேண்டுவது என்று ஒவ்வொருபெண்களும் ஒவ்வொருபாடலைப்பாடினார்கள்.

அப்பாடல்கள் வருமாறு.

மாப்பைந்தார்க் கல்லமுத்து வண்ணத்தார்க் கல்லவென்பெண்
வேப்பந்தார்க் காசைகொண்டு விட்டாளே—பூப்பைந்தார்
சேர்ந்திருக்கும் நெல்வேலிச் சிவிலிமா ராதமிழை
யாய்ந்திருக்கும் வீரமா று.

தென்னவா மீனவா சிவிலிமா ராமதுரை
மன்னவா பாண்டி வரராமா—தன்னுஞ்
சுரும்புக்குத் தாரளித்த துய்யதமிழ் நாடா
கரும்புக்கு வேம்பிலையே கண்.

வேம்பா கிலுமினிய சொல்லிக்கு நீமிலைந்த
வேம்பா கிலுமுதவ வேண்டாவோ—மீன்பாயும்
வேலையிலே வேலைவைத்த மீனவா நின்புயத்து
மாலையிலே மாலைவைத்தாண் மான்.

என்னும் பாடல்களைப்பாடப், பாண்டியன் தன் வேப்பமாலையைக் கொடுத்தால் வாணன் பூதம்வந்து பிடித்துக்கொண்டு போம், 'கோடேனென்றால் ஒரு வெள்ளாட்டி யாசித்த கேவலப்பொருளைக் கொடாதவனும் வள்ளலாவனோவென்று இவள் இகழ்ந்துகூறின் நமதுமானம் போமே, என்று ஆலோசித்துக்கொண்டிருக்கையில், பின்னவள்,

இலகு புகழாறை யேகம்ப வாண
னலகை வரும்வருமென் றஞ்சி—யுல்கறிய

*வானவர்கோன் சென்னிமிசை வண்கை வளையெறிந்த*
*மீனவர்கோன் கைவிடான் வேம்பு.*

என்னும் பாடலைப்பாடின உடனே, பாண்டியன்வெட்கி இனி நமக்கு என்னதீங்கு நேரிடினும் நேரிடுக, நமது குடிக்கும் கொடைக்கும் பழிப்பில்லாதிருந்தாற் போதுமென்று துணிந்து, தனது கழுத்திலுள்ள வேப்பமாலையை எடுத்துக்கொடுக்க, அப்பெண்கள் அதைக்கொண்டுபோய் ஏகம்பவாணரிடத்திற் கொடுத்துப் பரிசுபெற்றுப்போனார்கள். உடனே அந்தமுதலியாரும் பூதத்தைக்கொண்டு பாண்டியனைப் பிடித்துவந்து சிறையிலிட்டனர். அக்காலத்து ஒருபாணன் முதலியார் சபையில்வந்து அப்பிரபுவைப்புகழ்ந்து பாடவே, அப்பாணனுக்குப் பாண்டிநாட்டைப் பரிசாகவளித்தார்.

இதையறிந்த பாண்டியன் மனைவி உடனே ஏகம்பவாணரிடத்துவந்து அவரது செல்வம் அதிகாரம் கொடைமுதலியவற்றின் சிறப்புத்தோன்ற,

*என்கவிகை யென்சிவிகை யென்றுவச மென்கவச*
*மென்கரியீ தென்பரியீ தென்பரான்—மன்கவன*
*மாவேந்த னேகம்ப வாணன் வரிசைபெற்ற*
*பாவேந் தரைவேந்தர் பார்த்து.*

என்னும் பாடலைப்பாடித் தன் மங்கிலியத்தைப் பரிசாகக் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டாள். அதுகேட்டுப் பாண்டியனைச் சிறைவிடாவிடின் இவ்வரசி உயிர்நீங்குவள். நமக்குப் பெண்பழி நேருமென்றஞ்சி உடனே பாண்டியனைச் சிறையினின்றும்விடுத்து, ஏகம்பவாணமுதலியார் பாண்டியனைப்பார்த்து உன்னுடையநாட்டை யாழ்ப்புலவனுக்கு யான் பரிசாகக் கொடுத்துவிட்டபடியால், என்னை யவமதித்து நீ பேசின குற்றத்துக்கு அபராதமாக, கோடி செம்பொன்னை அப்பாணனுக்குக் கொடுத்துவிட்டு உன்னுடையநாட்டைப் பெற்றுக் கொள்ளுகவென்று, மணி பொன் ஆடை ஆபரணாதிகளும் சதுரங்கசேனைகளும் கொடுத்து விடைகொடுத்தனுப்பினர்.

*தேருளைப்புரவிவாரணத்தொகுதி திறைகள்கொண்டுவருமன்னநின்*
*றேயமேதுனதுநாமமேதுபுகல் செங்கையாழ்தடவுபாணகேள்*
*வாருமொத்தகுடிநீருநாமு மகதேவனுறைநகர்காவலன்*
*வாணபூபதிமகிழ்ந்தளித்தவெகுவரிசைபெற்று வருபுலவன்யான்*
*நீருமிப்பரிசுபெற்றுமீளவரலாகு மேகுமவன்முன்றில்வாய்*
*நித்திலச்சிகரமாடமாளிகை நெருங்குகோபுரமருங்கெலா*
*மாருநிற்குமொருவேம்புநிற்கு முயர்பனையுநிற்குமதனருகிலே*
*யரசிருக்குமரசைச்சுமந்தசில வத்திநிற்குமடையாளமே.*

இப்பாடலால், ஆடை ஆபரணந் திரவியங்கள் சதுரங்கசேனையுடன் செல்லும் ஒருவித்துவானை மற்றொரு வித்துவான்கண்டு உமதுதேசமெது ? உமது நாமமென்ன ? சொல்லுகவென்றுகேட்க, அந்த வித்துவான் சொல்லுவான்; நீரும்வித்துவான் நானும் வித்துவான், ஆகையால் கேண்மின்; நான் மகததேசாதிபதியாகிய ஏகம்பவாணரிடத்தில் பாடி இவற்றைப் பரிசாகப் பெற்றுவந்தனன்; நீரும்போய்ப்பாடி இப்பரிசுகளெல்லாம் பெற்று வரலாமென்றான். ஆனால் ஏகம்பவாணரிருப்பிடத்துக்கு அடையாளம் யாதெனின்? முத்துக்களாற் செய்யப்பட்ட சிகரங்களையுடைய மாடமாளிகை கூடகோபுரங்கள் நெருங்கியிருக்கும், அவரது அரண்மனை முற்றத்தில் ஆத்தி வேமபு பனை இருக்கும் அதன்மத்தியிலரசிருக்கும், அரசைச் சுமந்த சில அத்திகள் நிற்கும், இதுதான் அடையாளமென்றான்.

இவற்றால் ஆத்திமாலையும் வேப்பமாலையும் பனைமாலையுந் தரிக்கும் சேர சோழ பாண்டியர்கள் சூழ்ந்திருப்பார்கள், அவர்களின் மத்தியில் ஏகம்பவாணர் அரசு வீற்றிருப்பரென்பது பெறப்பட்டது.

இதனால் வேளாளராயுள்ள ஏகம்பவாணர் மகததேசத்து அரசரென்றும், அவர் சபையில் சேர சோழ பாண்டியர்களும் நிறைந்திருப்பார்களென்றும் வெளிப்படுகின்றன. அன்றியும் அவரைப்பகைத்த பாண்டியன் அரசிழந்தானென்றும், அந்தப்பாண்டிநாட்டைத் தாம் அடைய ஆசைகொள்ளாது,

தம்மைப்பாடிவந்த கேவலமான ஒருபாணனுக்கு அலெட்சிய மாகிய பரிசாகக்கொடுத்தாரென்றும் தெரியவருகின்றன.

ஆரான்முடியுமிக்காரியந்தோடவிழாத்திமலர்த்
தாரானைவேம்பின்றொடையானைப்பெண்ணையந்தாமனையும்
போராடிக்காவலில்வைத்தவப்பாட்டும்புனைந்ததன்றோ
வாராருமோட்டிளங்கொங்கைநல்லாய்தொண்டைமண்டலமே.

*　　*　　*　　*　　*

"மாவேந்த னேகம்ப வாணன் பறித்துநட்டான் மூவேந்தர் தங்கண் முடி" என வித்தொடக்கத்தனவற்றால் இளங்கோக் களாகிய வேளாளர்கள் அரசர்களுக்கு முடிசூட்டவும் வாங்க வும் வீரம்பெற்றுளாரெனத் தெரியவருகிறது.

இவ்வபோல்வன பல சரித்திரங்களுள, அவற்றை ஈண்டு விரிக்கிற்பெருகும். இவற்றால் பூர்காலத்து வேளாளர்கள் அரச ராகவும், இளங் கோக்களாகவும், இருந்தார்களெனத் தெரியவ ருகிறது. அற்றேல் அரசரென்றதனேடமையாது இளங்கோக்க ளெனக் கூறுவானேன் எனில்? அவர்களை ஒருவேளை க்ஷத்தி ரியவகுப்பில் சேர்ப்பார்கள், அதனால் அவர்கள் சுயகுலமாறி விடுமென்று இளங்கோக்கள் எனக் கூறப்பட்டனர்.

பின்னும் கோக்களுக்குப்போல இளங்கோக்களாகிய வே ளாளர்களுக்கும் அறுதொழில் பரிவாரம் சின்னம் தசாங்கம் முதலியவைஃ ஏற்பட்டிருக்கின்றன. அவை அடியில் விவரிக் கப்படும்.

அறுதொழில்.

| கோக்கள்=அரசர். | இளங்கோக்கள்=வேளாளர். |
| --- | --- |
| வைதிககருமங்கள். | வைதிககருமங்கள். |
| 1 வேதமோதல். | 1 வேதமோதல். |
| 2 வேள்விசெய்தல். | 2 வேள்விசெய்தல். |
| 3 ஈதல். | 3 ஈதல். |
| இலௌகிககருமங்கள். | இலௌகிககருமங்கள். |
| 4 உலகோம்பல். | 4 கிருஷி. |
| 5 படைபயில்தல். | 5 வாணிகம். |
| 6 * பொருதல். | பசுக்காத்தல். |

பிரமாணம் பிங்கலந்தையார்.

767. ஓதல் பொருத லுலகு புரத்த
ரீதல் வேட்டல் படைபயில் வறுதொழில்.

ஆரியகாண்டம் 146-ஆவது பக்கத்திலும் திராவிடகாண்டம் 283-ஆவது பக்கத்திலுங் காண்க.

778. ஓதல் வேட்ட லுபகார மன்றியும்
வாணிகம் பசுக்காவ லுழவு தொழிலெனப்
புகன்றவை யாறும் பூவைசியர் தொழிலே.

ஆரியகாண்டம் 153-ஆவது பக்கத்திலும் திராவிடகாண்டம் அறுதொழில்விளக்க அத்தியாயத்திலும் காண்க.

---

* பொருதலுக்குப் பிரதியாக வடநூலார் மண்மடக்கலெனக் கூறுவர்.

## பரிவாரம். ௧௮.

| எண். | கோக்களுக்கு. | எண். | இளங்கோக்களுக்கு. |
|---|---|---|---|
| 1 | மந்திரி. | 1 | நாவிதன். |
| 2 | புரோகிதர். | 2 | குயவன். |
| 3 | சேனாதிபதி. | 3 | வண்ணான். |
| 4 | தூதர். | 4 | ஓச்சன்=கணக்கன். |
| 5 | சாரணர்=வேவுகாரர. | 5 | கொல்லன். |
| 6 | கரணத்தியல்வோர். | 6 | தச்சன். |
| 7 | கருமவதிகாரர். | 7 | தட்டான். |
| 8 | சுற்றத்தார். | 8 | கன்னான். |
| 9 | கடைகாப்பாளர்=வாயில்காப்போர். | 9 | சிற்பி. |
| 10 | நகரமாக்கள். | 10 | செக்கான். |
| 11 | படைத்தலைவர். | 11 | இலைவாணியன். |
| 12 | இவுளிமறவர். | 12 | எருத்துவாணியன். |
| 13 | யானைவீரர். | 13 | மாலைக்காரன்=சாத்தானி. |
| 14 | நட்பாளர். | 14 | பாணன்=தையற்காரன். |
| 15 | அந்தணாளர். | 15 | பள்ளி. |
| 16 | மடைத்தொழிலாளர். | 16 | வலையன். |
| 17 | மருத்துவக்கலைஞர். | 17 | இடையன். |
| 18 | நிமித்திகப்புலவர். | 18 | பறையன். |

பிங்கலந்தையார் ஐந்தாவது ஆடவாவகை.

769. மந்திரியர் புரோகிதர் சேனாபதியர்
தந்திரத்தூதர் சாரணரென்றிவ
ரந்தமில்ரசர்க் கைம்பெருங்குழுவே.

770. கரணத்தியல்வோருங் கருமவதிகாரரு
மகன்றசுற்றமுங் கடைகாப்பாளரு
நகரமாக்களு நனிபடைத்தலைவரு
மிவுளிமறவரும் யானைவீரரு
மரசர்க்கெண்பெருந் துணைவராகும்.

771. அடுத்தநட்பாளரு மந்தணாளரு
மடைத்தொழிலாளரு மருத்துவக்கலைஞரு
நிமித்திகப்புலவரு நீணிலவேந்தர்க்
குரைத்தவைம்பே ருறுதிச்சுற்றம்.

772. உரைத்தமுப்பாலு முயர்குடைவேந்தர்க்குப்
படைத்தபதினெண் டொழிலுடைப்பாலோர்.

இளங்கோக்களுடைய பரிவாரம் 18-க்கும் பிரமாணம் 347-ஆவது பக்கத்திற் காண்க.

## சின்னம்.

| எண். | கோச்சின்னம் அல்லது அரச சின்னம். | எண் | இளங்கோச்சின்னம் அல்லது வேளாளர் விருது. |
|---|---|---|---|
| 1 | முடி. | 1 | வெள்ளைப்பூச்சக்கரக்குடை |
| 2 | குடை. | 2 | வெள்ளைநிசாணி. |
| 3 | கவரி. | 3 | சுருட்டி. |
| 4 | தோட்டி. | 4 | க்ஷாமரம். |
| 5 | முரசு. | 5 | திருச்சின்னம். |
| 6 | சக்கரம். | 6 | அருகுதீவர்த்தி. |
| 7 | யானை. | 7 | அலப்படை. |
| 8 | கொடி. | 8 | சித்திரமேழிக்கொடி. |
| 9 | மதில். | 9 | எடுகோல் நிசாணி. |
| 10 | தோரணம். | 10 | சிங்கக்கொடி. |
| 11 | நீர்க்குடம். | 11 | ஜெயமணிசலவாதிமுத்திரை. |
| 12 | பூமாலை. | 12 | குயில் நிசாணி. |
| 13 | சங்கு. | 13 | கிளிநிசாநி. |
| 14 | கடல். | 14 | ஆலவட்டம். |
| 15 | மகரம். | 15 | பெரியபேரி. |
| 16 | ஆமை. | 16 | பசுங்குவளைத்தார். |
| 17 | இணைக்கயல். | 17 | ஆத்தித்தார். |
| 18 | சிங்கம். | 18 | தவண்டை. |
| 19 | தீபம். | | |
| 20 | இடபம். | | |
| 21 | ஆசனம். | | |

அரசசின்னம் 21-க்கும் பிரமாணம் சதுரகராதியிற்காண்க. வேளாளர் விருது 18-க்கும் பிரமாணம் பின்வருஞ் செய்யுளிற்காண்க.

நிறையும்வெண்பூச்சக்கரக்குடைவெள்ளைநிற நிசழ்நுவசமேழி க்கொடி, நிலவுமெடுகோற்கேதனங் குயிற்கொடிசிங்கசீடுகொடியோ டுலாவு—,முறையுறுகிளிக்கொடிசுருட்டி சாமரமருகுமுந்துநீவர்த்தி சின்ன, முன்னுசயமணிசலவாதிமுத்திரைதுன்றுமுதிர்திரைசுருட்டி யென்று—,மறைகடல்சுலாவுநிலமுழுமலப்படைவட்டமானநல்லால வட்ட,மாம்பெரியபேரிபசுமைக்குவளை மாலையோடாத்திமாலைதவண் டை—, தறையிலுயர்வாமிளங்கோக்களெனும் வேளாளர்தங்கள்விரு தென்றுமிக்க, சான்றோருரைப்பரிப்பதினெட்டு மிகவுந்தழைத்துநீடு ழிவாழி.

மூவேந்தர்களின் தசாங்கந் திராவிடவேதம் வருணவிள க்கம் 282-ஆவது பக்கத்தில் விரித்துரைக்கப்பட்டன. ஆண் டுணர்க.

இனி, இளங்கோக்களாகிய வேளாளர்களின், தசாங்கம் அடியில் விவரிக்கப்பட்டன:

### தசாங்கம்.

| | | | |
|---|---|---|---|
| 1 பெயர் | ... | ... | வேளாளர். |
| 2 மலை | ... | ... | மகமேரு. |
| 3 ஆறு | ... | ... | கங்கை. |
| 4 நாடு | ... | ... | 79. |
| 5 நகரம் | ... | ... | 1,900. |
| 6 ஊர்தி | ஐராவத யானையும், | | உச்சைஸ்வர குதிரையும். |
| 7 மாலை | ... | ... | செங்குவளை. |
| 8 கொடி | ... | ... | மேழி குயில் சிங்கம். |
| 9 படை | ... | ... | அலப்படை |
| 10 முரசு | ... | ... | கொடைமுரசு. |

இதற்குப் பிரமாணம்:

முத்தமிழ்நிலத்தனின் மூன்றுங்குலத்தவர்
முழங்கிடு தசாங்கமோதின்
மூவுலகத்துளும் புகழோங்குமேதக்க
முதன்மை வேளாளர்பெயரா

மத்தனுறைகின்றதோர் மேருவேமலையதா
மற்புதக் கங்கையாறு
மனையறம்வளர்த்ததே தமது*நாடொன்பது
மைம்பதுட னிருபதாகு
மொத்தவூராங்கதிற் றசநூறுநவநூறு
மும்பர்நாட் டதிபனுய
வுத்தமச்சசிபதி தனதுவெள்வாரண
முச்சைசு வரியமூர்த்தி
கொத்தலர்செங்குவளை மாலைகொடிகூறிடிற்
குயில் சிங்க மேழியுலகின்
கொடும்பசிப்பகை யடுமேலப்படையுமேபடை
கொடைமுரச மோங்கமாதோ.

காஞ்சிநாடு அறம்வளர்த்த நாடென்பதற்குப் பிரமாணம்.

எண்ணுன்கறந்தொண்டைமண்டலத்தார்க்கன்றியில்லையெனத்
தண்ணூர்வயலுழன்றான்சொலவேந்தன்றலைதடிந்த
தெண்ணுமன்மன்னனுமப்படியேசொல்லிப்படியின்
மண்ணாளும்வேந்தன் வரிசைபெற்றான்றொண்டைமண்டலமே.

இதன்சரித்திரம்.

அரசன் தனது சபையில் பலசாதியருங்கூடியிருக்குங்காலத்தில் 32-அறங்களையுஞ் செய்வோர் எச்சாதியாரெனக்கேட்க, ஓர் வேளாளனெழுந்து 32-அறங்களையும் செய்பவர் வேளாளரேயன்றி யேனையசாதியரின்றாமென, க்ஷத்திரிய சாதியராகிய எங்களுக்குமின்றோவென அரசன் கேட்க, வேளாளன் இன்றெனமறுத்துக்கூற, உடனே அரசன் கோபங்கொண்டு அவ்வன்றலையைக் கொய்தெறிந்தான். சிலநாட் பின்னர்

* இவ்வெழுபத்தொன்பது நாட்டினுள்ளுமத்தியில் மதாணிப்பதக்கம்போலும் விளங்குவது காஞ்சிநாடாம். அக்காஞ்சிநாட்டில் உமையம்மையார்வந்து தங்கியிருந்து சிவபெருமானைப்பூசித்து 32-அறங்களையும் வளர்த்தமையால், அக்காஞ்சிநாடேயன்றி அதைப்பரிவாரங்கள்போலும் சூழ்ந்துள்ளநாடுகளாக இருத்தலின், அவைகளையும் பொதுவகைபால் அறம்வளர்த்த நாடெனக்கூறப்பட்டது

அவ்வரசன் பிள்ளையைச் சத்துருக்கள் கொல்லும்படி துரத்த, அவ்வரசகுமாரன் முன் கொல்லப்பட்டவன் குமாரனாகிய கிடங்கின் பெருமாள் முதலியார்வீட்டில் அடைக்கலம் புகுந்தான். உடனே அம்முதலியார் தமது தந்தை தலையைக் கொய்ததைப்பற்றி வைரம் பாராட்டாது, அவ்வரச குமாரனை யொளித்துவைத்துத், தமதுபிள்ளையை இவன்றான் அரசகுமாரன் என்று கொலைசெய்யக்கொடுத்தார். இதையறிந்த அரசன் கிடங்கின் பெருமாள் முதலியாரை யழைத்து வேண்டிய சன்மானங்கள்செய்து, 32-அறஞ்செய்பவர் வேளாளரேயன்றி வேறு சாதியாரில்லையெனத் தனது சபையிலுள்ள பல சாதியாருமறியும்படி, தன்வாயினாலே கூறினான் என்பதாம்.

---

## மன்னர் பின்னர்.

உமாபதி சிவாசாரியார் செய்தருளிய
திருத்தொண்டர் புராணவரலாறு.

அத்தகையபுகழ்வேளாண்மரபிற்சேக்கி ழார்குடியில்வந்த வருண்மொழித்தேவர்க்குத்,தத்துபரிவளனுந்தன்செங்கோலோச்சுந்தலைமையளித்தவர்தமக்குத்தனதபேரு, முத்தமச்சோழப்பல்லவன்றானென்னு முயர்பட்டங்கொடுத்திடவாங்கவர்சீர்நாட்டு, நித்தனுறை திருநாகேசுரத்திலன்பு நிறைதலினுன் மறவாதநிலைமைமக்கார்.

தம்பதிகுன்றத்தூரின் * மடவளாகந் தானுச்கித்திருக்கோயிறபித்தங்கண், செம்பியர்கோன் திருநாகேசுரம்போலீதுந் திருநாகேசுரமெனவேதிருப்பேர்சாற்றி, யம்புவியி†லங்காங்கவைபவங்கட்கானபரிசலந்திருநாள்பூசைசற்பித், திம்பர்புகழ் வளவனரசுரிமைச் செங்கோ லிமசேதுபரியந்தமியற்றுநாளில்.

வேறு.

என்றுசொல்லவர்தமையழைத்தரச னிவரமைச்சரிவர்பட்டமு, மென்றன்மாலைபுனைதொண்டைமானென வகுத்தபின்றமதுமண்டல, மன்றுவற்பம்வரவந்தடைந்தவரை யாற்றல்செய்துதொண்டை

---

* மடவளாகம் = திருமதிலின்புறத்துள்ளவீதி.

† அங்காங்கம் = நித்தியம் நைமித்தியம்.

மண்டல், நின்றுகாத்தபெருமானெனத்தமது பெயரையெங்கணுநி றுத்தினர்.

இச்செய்யுட்களால் சேக்கிழார் சோழராசனிடத்து மந்திரித் தலைமை பூண்டுள்ளாரென விளங்குகின்றது.

ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம்.

இன்னவாழ்பதியதனிடையேயர்கோக்குடிதான்
மன்னுநீடியவளவர்சேனாபதிக்குடியாந்
தொன்மைமேவியநிகழ்ச்சியானிறைவதுதூய
பொன்னிநாட்டுவேளாண்மையினுயர்ந்தபொற்பினதால்.

இதனால் வேளாள குலத்தினராகிய ஏயர்கோன் கலிக்காமநாயனார் சோழராசனிடத்துச் சேனாதிபதியாக இருந்தாரென்பது தெரியவருகின்றது.

கோட்புலிநாயனார் புராணம்.

நலம்பெருகுஞ்சோணாட்டுநாட்டியத்தான்குடிவேளாண்
குலம்பெருகவந்துதித்தார் கோட்புலியாரெனும்பெயரார்
தலம்பெருகும்புகழ்வளவர் தந்திரியராய்வேற்றுப்
புலம்பெருகத்துயர்விளையப் போர்விளைத்துப்புகழ்விளைப்பார்.

இதனால் வேளாண்குலத்தினராகிய கோட்புலியார் சோழராசனிடத்துச் சேனாதிபதியாக இருந்திருக்கிறாரெனத் தெரியவருகின்றது.

மானக்கஞ்சாறநாயனார் புராணம்.

அப்பதியிற்குலப்பதியா யரசர்சேனாபதியாஞ்
செப்பவருங்குடிவிளங்கத் திருவவதாரஞ்செய்தார்
மெய்ப்பொருளையறிந்துணர்ந்தார் விழுமியவேளாண்குடிமை
வைப்பனையமேன்மையினார் மானக்கஞ்சாறனார்.

இதனால் வேளாளருள் ஒருவராகிய மானக்கஞ்சாறநாயனார் சோழராசனிடத்துச் சேனாதிபதியாக இருந்திருக்கிறாரெனத் தெரியவருகின்றது.

## கலிப்பகையார் புராணம்.

அந்நாளிற்றிலதவதி யாருக்காண்டாறிரண்டின்
முன்னாகவொத்தகுல முதல்வேளாண்குடித்தலைவர்
மின்னார்செஞ்சடையண்ணன் மெய்யடிமைவிருப்புடையார்
பொன்னாருமணிமௌலிப் புரவலன்பாலருளுடையார்.

ஆண்டகைமைத்தொழிலின்க ணடலரியேறெனவுள்ளார்
காண்டகையபெருவனப்பிற் கலிப்பகையாரெனும்பெயரார்
பூண்டகொடைப்புகழனார் பாற்பொருவின்மகட்கொள்ள
வேண்டியெழுங்காதலினான் மேலோரைச்செலவிட்டார்.

இதனால் வேளாளமூர்த்தியாகிய அப்பர்சுவாமிகளின் தமக்கையார் திலதவதியாரை மணம்புரியவந்த கலிப்பகையார் சோழராஜனிடத்துச் சேனாதிபதியாயிருந்ததாகத் தெரியவருகிறது.

## Madura Mânual Part III. Chapter II. Page 90-104.

## அரியநாயகமுதலியார்.

இன்னும் அரியநாயகமுதலியார் என்பவர் காஞ்சிபுரத்துக்கடுத்த மைப்பேடு என்னுங் கிராமத்தில் வேளாளகுலத்திற் பிறந்தவராம். இவர், விஜயநகரத்திலிருந்து விசுவநாதநாய்க்கர் மதுரைக்கு வந்தகாலத்தில் அவருடன் கூடவந்தவர். இவர் பாண்டிநாட்டில் பட்டத்துக்கு அரசரையும், அவர்களுக்குள் பாளையகாரர்களையும், ஏற்படுத்துபவராம். இவர் அந்த விசுவநாத நாய்க்கரிடத்தில் தளவாயாகவிருந்தவர். தளவாய் என்பது முதன்மந்திரியும் சேனாதிபதியுமாகிய இரண்டு உத்தியோகங்களை உள்ளடக்கியபெயராம். இராமாராசாவுக்குப்பின் இங்கிலிஷ் (A. D. 1,564) ஆண்டில் அரியநாயகமுதலியாருக்கு இராயர்பட்டம் ஆகிறதாயிருந்தது. இவர் ஆரியரின் துற்போதனைக்குள்ளாகி அப்பட்டத்தைத் தாம் வகித்துக்கொள்ளாமல், குமரகிருஷ்ணப்ப நாய்க்கருக்குக் கட்டிவைத்துத் தாம் தளவாயாகவே இருந்துவிட்டார். இவர் சுத்தவீரர்

ஆதலால் இவரதுவடிவம் எல்லார் மனத்திலும் ஞாபகத்துக்குவரும்படி பெரியநாய்க்கரால் மதுரைக்கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் ஒரு தூணிற்செய்து ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இக்காலத்தும் வீரராயுள்ளவர்கள் அவ்வுருவினுக்கு மாலைசாத்திப் பூசிக்கிறார்கள்.

### மாவைக் குமாரசுவாமி முதலியார்.

இவர் மேற்கூறிய அரியநாயக முதலியாருடைய தூரமானபின் சந்ததியினரென்று சொல்லுகிறார்கள். இவர் கர்த்தாக்கள் வம்மிசத்தினளாகிய மங்கம்மாள் காலத்துக்குப் பிற்காலத்தில், திருநெல்வேலிஜில்லாவில் அக்கர்த்தர்களால் கொடுக்கப்பட்ட இராசாங்க அதிகாரஞ்செய்திருக்கிறார்.

### ஆறை அழகப்ப முதலியார்.

இவர் மாவைக் குமாரசுவாமி முதலியாருடைய சமீபபந்து. அவருக்குப் பின் வாரிசாகத் திருநெல்வேலி மதுரை திருச்சிறுப்பள்ளி இம்மூன்று ஜில்லாக்களிலும் இராசாங்கஞ்செய்திருக்கிறார்.

### குமாரசுவாமி முதலியார்.

ஆறை யழகப்பமுதலியாருக்கு அடுத்தபிந்திய வாரிசாக், கர்த்தாக்கள் கடைசிக்காலத்திலும், பத்தையசிங்கு என்ற மகாராட்டிர ராசாவின் காலத்திலும், திருநெல்வேலி மதுரையிரண்டு சில்லாவிலும் ராசரீகஞ்செய்தவர், தளவாய் குமாரசுவாமிமுதலியார்; இவருக்கு ராசரீக பதவியளித்த கர்த்தாக்களால், விசேஷசேனையும் தளகர்த்தமோதிரமும் "தளவாய் என்றபட்டமும்" கொடுக்கப்பட்டன. அந்தப்பட்டம்பாரம்பரியமாய் இக்காலத்திலுள்ள அவர் சந்ததியார் யாவருக்கும் வழங்கப்பட்டுவருகிறது. 'இவருடைய முதலாவது குமாரர் தளவாய் அழகப்பமுதலியாரும், நபாபு ராசாங்கத்தில் திருநெல்வேலிஜில்லாவில் ராசரீகஞ்செய்தவர்'. ஷை தளவாய் அழகப்ப முதலியார் குமாரரில், மூத்தகுமாரர் தளவாய் தீத்தாரப்பமு

தலியாரும், மூன்றாங் குமாரர் தளவாய் திருமலையப்பமுதலியாரும், அதே ஜில்லாவில் அரசாண்டு வந்திருக்கிறார்கள். தளவாய் ராமசாமி முதலியார் காலம் கொல்லம் 972-ஆம்ஆண்டு, என்று தெரிகிறது. இவருடைய நேரான பௌத்திரர்தளவாய் ராமசாமிமுதலியார் திருநெல்வேலியில் ஜீவந்தவராக இருக்கிறார். மேற்கூறியவர்கள் தளவாய் திருமலையப்பமுதலியார் அரசாண்டு வந்தகாலத்தில்,பற்பல ஆலயங்கள் மடங்கள் முதலிய இடங்களுக்கு விசேடமாக மானியங்கள்விட்டு வேறு பல தருமங்களுஞ்செய்தவர். அத்தருமங்கள் இன்றும் நிலைபெற்றிருக்கின்றன. இந்தத்திருமலையப்ப தளவாய் முதலியாரின்பின் சந்ததியாகத், திருநெல்வேலியில் தற்காலத்தில் தளவாய் திருமலையப்ப முதலியாரிருக்கிறார். இந்தத் தளவாய் முதலியார்கள் குடும்பவைபவச் சிறப்பு நெல்லைக்குறவஞ்சியிற் புகழ்ந்துப்பாடப்பட்டது. இந்தக் குடும்பத்தார் அரசாட்சி செய்து வந்ததற்காக, இந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு, இன்றும் ஆலயங்களிலும், பெரிய சபைக்கூட்டங்களிலும்,பிரதம மரியாதை செய்யப்பட்டுவருகிறது. அன்றியும் இக்குடும்பத்தார் மட்டுமே வெளிப்பிரவேசகாலங்களில், இரட்டை அருகு தீவர்த்தியோடு செல்லுங் கௌரவத்துக்குரியரா யிருக்கிறார்கள். பெரிய பட்டணமாகிய திருநெல்வேலியில் இன்றும் இவர்கள் வீடு அரண்மனையென்று வழங்கப்பெற்றுவருகிறது.

மேற்கூறிய குடும்பத்தார்போலவே திருநெல்வேலியில் கார்காத்த வேளாளகுலத்தில், வடமலையப்பப்பிள்ளையன் முதலிய சிலர் அரசாண்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் வமிசத்தினராகத் திருநெல்வேலியில் தற்காலம் சிலர் இருக்கிறார். அவர்களுக்கும் பெரிய சபைகளில் முதன் மரியாதைசெய்யப்பட்டுவருகிறது.

நூல்களையும் பழையசரித்திரங்களையும் ஆராயுமிடத்து அரசனுக்கு மந்திரி பிரதானி சேனாதிபதிமுதலிய பெரிய உத்

தியோகங்களெல்லாம் பூர்வத்தில் வேளாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பது தெரியவருகின்றது.

கைம்மாறு கனவிலுங்கருதலின்றி வரையாதுவழங்கும் வள்ளற்றன்மை உடையாரென்றும், எவ்வாற்றானுயர்ந்தோர் கட்குந் தம்மையன்றி உலகியனடத்தப் படாச்சிறப்புடைக் கருவியாந்தன்மை உடையாரென்றும், இங்ஙனம் வையகத்தார்க்கன்றி வானகத்தார்க்குங் குன்றாநன்றி குயிற்றுநரென்றுந், தம்மானேயன்றித் தங்கருவியானுங் கருமத்தானும் எவ்வெவ்வளாகத் தெவ்வெவ்வுயிர்கட்கு மின்பந்தரூஉ மியலினரென்றும், ஆன்றகல்வி யூன்றுகேள்வி சான்றவுணர்ச்சியேன்றவொழுக்க முதலிய உயர்நெறிக் குன்றத்தும்பரிம்பர் பலகாற்பயிலுறும் பாங்கினரென்றும், தொன்னெறியரையர்க்குத் துணைவராகிப் பகைப்புலனடுக்கிய படர்ந்தெதிருறீஇ வாய்விட்டார்த்து வாள்புடைபெயர்த்து விற்புடைத்தழீஇப் பொற்பொடுபெய்யும் ஆண்மையரென்றும், தண்ணளியுருக்கொடு தாங்கிச்செங்கோனிலைபெறச் செய்யுந் தலைமையரென்றும், எத்திறத்தவருமெதிர் கொடுபராஅய்ப் பற்பலதிறப்படூஉம் பரிசிற்பழிச்ச உயரிடத்தோங்கிய பெயருளரென்றும், கடவுளாணையிற் கடவாச்செறிவும் யாவருமதிக்குமேன்றுடைமையும் புலவராற்புனையும் புகழினீட்டமுங் களக்கறுமொண்மையும் விளக்குறுபசுமையும் பொய்யாமாற்றமும் போக்கறுதோற்றமு மின்சுவைநிறைவு மெத்திறநலனு முடையரென்று முவமைக்குறிப்பாற் பெறப்படுதலின் வேள்ாளரென்பார் வேந்தர்பின்னோரே.

## நான்காவது அத்தியாயம்:
## வேளாளர் அறுதொழில் விளக்கம்.

### I ஓதல்.

**ஓதற்பாலனமறைகள்.**

ஓதல் என்பதற்கு பொதுவகையால் சொல்லல் படித்தல் வாசித்தல் எனப்பொருளாம்.

"ஓதாத்தார்க்கில்லை யுணர்வொடுமொழுக்கம்."

"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்."

என்பனவபோல சிறப்புவகையால் இம்மொழிக்கு வேதத்தை யுச்சரித்தலென்பதே பொருளாம்.

"ஓதருளே வேதியர்க்கொழுக்கம்."

"காலையுமாலையு நான்மறையோதா
வந்தண ரென்போ ரனைவரும்பதரே."

இவைபோல்வனவற்றாலுமுணர்க. இவ்வோதலை ஆரியத்தில் அத்தியயனமென்பார்கள். ஆகவே, திராவிடவேதமாகிய தேவாரம் திருவாசகங்களைச் சுரவடிவாகிய பண்களிலமைத்து ஓதும் வேளாளருக்கு ஓதுவாரென்றும், ஆரியவேதம் ஓதும் அந்தணருக்கு அத்தியாபகர் என்றும் பெயர்களாம். ஆகவே ஆரியவேதம் அல்லது திராவிடவேதம் இவ்விரண்டனுள் ஒன்றேனும் ஓதவேண்டும். அங்ஙனமோதாதாரெல்லாம் பாவிகளென்றே சம்பந்தப்பிள்ளையாரால் கூறப்பட்டிருக்கிறது.

திருவாலவாய் நாலடிமேல் வைப்பு என்றபதிகத்தில்,

மறைவழக்கமில்லாத மாபாவிகள்
பறிதலைக்கையர் பாயுடுப்பார்களை
முறியவாதுசெயத் திருவுள்ளமே
மறியுலாங்கையின் மாமழுவாளனே.
ஞாலநின்புகழே மிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையு மெம்மாதியே.

இப்பதிகத்தில் மறை வழக்கம் என்பதற்குத் திராவிடவேதத்தை யொழித்து ஆரியவேதத்தை யோதுபவர் என்றுபொருள் கொள்ளலாகாதோ? எனின் அங்ஙனங்கொள்ளின் தமது திருக்கூட்டத்துள்ள ஆரியவேத மோதாத சைவர்களும், தந்நேரொத்த திருநாவுக்கரசு சுவாமிகளே முதலியவரும், பாவிகளாகவேண்டும். ஆதலின் அவர்கருத்து அங்ஙனமாகாது.

ஆகவே, மறை வழக்கம் என்பதற்குப் பொருள் ஆரிய திராவி விடங்களிலுள்ள வேதங்களில் இயன்ற ஒன்றின் வழக்கம் என்பதே பொருளாம்.

திராவிடத்துள்ளும் வேதமுண்டென்பதனை வெளிப்படு த்தும் பொருட்டன்றோ சிவபெருமான் 3-வயதுள்ள சம்பந் தப்பிள்ளையாருக்கு ஞானப்பாலையூட்டித் திராவிடவேதத்தை யோதச்செய்தார்.

"தமிழ்வேதம்பாடினார் தாளம்பெற்றார்."
"விருப்புடன்பாடலிசைத்தார் வேதந்தமிழால்விரித்தார்."
"பண்ணுதமிழ்மறையாம் பதிகம்பாடி."

என்ற இவை முதலிய செய்யுள்வழக்கால் கண்டுணர்க.

### ஓதலின்பேதம்.

திருவாரூர் முதலிய சிவாலயங்களில் சிவபெருமான் தீ பாராதனை காலத்து, ஓர்புரம் அந்தணர் ஆரியவேதத்தையும், ஓர்புறம் வேளாளர்கள் தமிழ் வேதத்தையும் ஏக காலத்தில் ஓதிவருகிறார்கள்.

சிதம்பரம் முதலிய சிவாலயங்களில், அந்தணர்கள் ஆரி யவேதத்தை யோதி நிறுத்தினவுடன் வேளாளர்கள் தமிழ்வே தம் ஓதுகிறார்கள்.

ஏனைய சிவாலயங்களில் ஆரியவேதம் ஓதவமையாவிட த்தும், தமிழ்வேதமோதியே ஆராதனை பூர்த்திசெய்வது பிரத் தியட்ச அனுபவமாயிருக்கிறது.

### ஓதுவார்களின் மிராசு பாத்தியதை.

ஆரியவேதம் ஓதுகிறவர்களுக்கு மிராசு கிடையாது. அ வர்களுக்கு அப்போதப்போது சம்பாவனை கொடுத்து வரு கிறார்கள்.

திராவிடவேதம் ஓதும் ஓதுவாருக்குக் கோயிலில் நித்தி யப் படித்தரமும் மிராசு பாத்தியதையுமுண்டு,

### வேளாளர் ஆரியவேதமோதுமுறை.

திராவிடவேதத்தை யோதுவதுபோல ஆரியவேதத்தை யோதுவதுண்டோவெனின்? ஆத்மார்த்த பூசைகளில் யசுர் வேதத்தில் ஸ்ரீருத்திர முதலிய சிலபாகங்களை ஓதுகிறார்கள் எனவே, பசுத்தன்மையான கடவுளர்களைப் பதியாகக்கூறும் ஏனைய பாகங்களை யோதார் என்பது கருத்து.

### வேதமோதுவதில் அந்தணரும் வேளாளரும் ஒத்தவரேனல்.

வேதம் ஓதுவதில் அந்தணரும் வேளாளரும் ஒத்த தரத்தினரென்பதை நோக்கியே, திருஞானசம்பந்தசுவாமிகள் தமது பதிகங்களுள் பல இடத்திலும் இவ்விருவரையும் சமமாகப்புகழ்ந்து பாடியிருக்கின்றனர். பின்னர் வருந் தேவாரங்களாலுணர்க.

### திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

திருக்கொச்சைவயம், பண் - பியந்தைக்காந்தாரம்.

விடையுடையப்பனொப்பினடமாடவல்லவிகிர்தத் துருக்கொள் விமலன், சடையிடைவெள்ளெருக்க மலர்கங்கைதிங்க டகவைத்த சோதிபதிதான், மடையிடையன்னமெங்குநிறையப் பரந்துகமலத்து வைகும்வயல்சூழ், கொடையுடைவண்கையாளர்மறையோர்களென்றும்வளர்கின்ற கொச்சைவயமே.

திருப்புகலி, பண் - செவ்வழி.

விடையதேறிவெறியக்கரவார்த்தவிமலனூர்
படையதாகப்பரசுதரித்தார்க்கிடமாவது
கொடையிலோவார்குலமும்முயர்ந்தம்மறையோர்கடாம்
புடைகொள்வேள்விப்புகையும்பருலாவும்புகலியே.

சீகாழி பண் - பியந்தைக் காந்தாரம்.

மங்கைகூறமர்மெய்யான் மான்மறியேந்தியகையா
னெங்களீசனென்றெழுவா ரிடர்வினைகெடுப்பவற்கூராஞ்
சங்கையின்றிநன்னியமந் தாஞ்செய்துதகுதியின்மிக்க
கங்கைநாடவர்கீர்த்தி மறையவர்காழிநன்னகரே,

சிவாலயங்களில் வேதமோதுவதற்கு இவ்விருதிறத்தாரன்றி வேறு சாதியார் ஓதப்படாதோ? எனில், பரம்பரையில் அறிவு ஒழுக்கம் உயர்குலம் சிவதீட்சை சுத்தபோசனம் வேதாகம விதிதவருமை ஆகிய இவை முக்கியமாக உடையார் இவரேயாதலின், ஏனையர் ஓதுதல் கூடாதென்க. இவற்றுள் ஒன்று தவறினும் ஓதுதற்கருகரல்லராவர். அவருள்ளும்,

"படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது."

என்று கூறியபடி அரசர் அசுத்தவாசனை மிகுந்துள்ளாராதலின் அவரைநீக்கி, அந்தணர் வேளாளர்களே சிவாலயங்களில் ஓதற்குரியாரென்று ஏற்பட்டிருக்கிறது. இங்ஙனஞ் சிறந்த வேளாள குலத்தாராகிய வைசியரை ஏவலாளராகிய சூத்திர வகுப்பினரென்பார் விவேகமில்லாரே யாவர்,

## ஆரியர் திராவிடவேதமோதாமைக்குக் காரணம்.

சிவாலயங்களுள் ஆரியர்கள் திராவிடவேதமோதவில்லையே? எனின், ஆரியர்களிற் பெரும்பாலும் ஸ்மார்த்தர்களேயன்றிச் சைவர்கள்கிடையாது. விபூதி ருத்திராட்சம் தரித்தாலும், அவர்கள் கேசவா மாதவா நாராயணா கோவிந்தாவென்று விஷ்ணு மந்திரங்களே கூறுவார்கள்; அவர்களுக்குச் சிவ தீட்சைகிடையாது. சிவதீட்சை யில்லாதவர்கள் தேவாரம் திருவாசகமுதலிய திராவிட வேதத்தை ஓதப்படாது. சிவதீட்சைபெற்ற அந்தணர்கள் மகா சைவராம். அவர்கள் பூர்வகாலத்தில் ஆயிரக்கணக்கில் திருக்கூட்டங்களாக மடங்கள் ஏற்படுத்திக்கொண்டு தேவார திருவாசகங்களையோதி வந்தார்கள். இக்காலத்துச் சிற்சில இடங்களில் அருமையாயிருக்கிறார்கள். அன்றியும் தேவார திருவாசகங்கள் எல்லாரும் ஓதுவதற்கு எளிதில் அமையாவாம். ஏன்? எனில், ஆரியவேதங்கட்கவேண்டுமானால் உதாத்தம் அனுதாத்தம் சுவரிதகம் முதலியவை தெரியவேண்டும். அனுஷ்டுபு திரிஷ்டுபு பிரஹதி சதோபிர

ஹதி உஷ்ணி காயத்திரி விராஜ ஜகதி பங்தி முதலிய சந்தசு பேதங்கள் கற்கவேண்டும். அதுவும் பலநாள் முயன்று கற்க வேண்டும். அவ்வாறே திராவிடவேதமாகிய தேவாரமும் நட்டபாஷை நட்டராகம் சீகாமரம் செவ்வழி கௌசிகம் பஞ்சமம் பழம்பஞ்சுரம் புறநீர்மை இந்தளம் செந்துருத்தி பஞ்சமம் திருநேரிசை திருவிராகம் திருவிருத்தம் திருக்குறுந்தொகை திருத்தாண்டகம் தக்கராகம் தக்கேசி குறிஞ்சிகாந்தாரம் கொல்லி சாதாரி என்னும் பண் வரிசைகளையுடைமையால், அநேகநாள் முயன்று கற்கவேண்டுமென்க. ஆதலின் இசைவளமையில்லார் ஓதலரிதென்பதாயிற்று. இதற்குப்பிரமாணம்.

பாகத்தினுற்கவிதை பாடிப்படிக்கவோ பத்திநெறியில்லை வேத, பாராயணப்பனுவன் மூவர்செய்பனுவலது பகரவோவிசையுமில்லை,—யோகத்திலேசிறிது முயலவென்றாற்றேக மொவ்வாதிவ் வூன்வெறுத்தா, லுயிர்வெறுத்திடலொக்குமல்லாது கிரியைகளுபாயத்தினுற் செய்யவோ,—மோகத்திலேசிறிது மொழியவில்லையெஞ் ஞான மோனத்தினிற்கவென்றான், முற்றுதுபரிபாக சத்திகளனேகநின் மூதறிவிலேயெழுந்த,—தாகத்திலேவாய்க்கு மமிர்தப்பிரவாகமே தன்னந்தனிப்பெருமையே, சர்வபரிபூரண வகண்டதத்துவமான சச்சிதானந்தசிவமே.

எனவரும் தாயுமானசுவாமிகள் திருவாக்கானுணர்க.

### வேதமோது முறைமை.

பிராமணன் ஆரியவேதமோதத் தொடங்கும்போதும், முடிக்கும்போதும், பிரணவத்தைச் சொல்லவேண்டுவது. அப்படி முன் சொல்லாமல் ஓதினுல், வேதம் சிறிது சிறிதாக மறந்துவிடும். பின்சொல்லாமலோதினுல், ஞாபகத்தில் தரிக்கப்படமாட்டாது. (மநு. 2-74.) அதுபோலத் திராவிடவேதமோதத் தொடங்கும்போதும் முடிக்கும்போதும் திருச்சிற்றம்பலமென்னு மநுவைச் சொல்லவேண்டும். பிரமாணம் பின்வருஞ் செய்யுளிற்காண்க.

திருமாளிகைத் தேவர் - திருவிசைப்பா.

செக்கரொத்திரவிநூறுயிரத் திரளொப்பாந்தில்லைச்
சொக்க*ரம்டலரென்னுஞ் சுருதியைக்கருதமாட்டா
வெக்கரைக்குண்டமிண்ட வெத்தரைப்புத்தரர்திப்
பொக்கரைக்காணுகண்வாய் பேசாதப்பேய்களோடே.

எவன் நாள்தோறுந் தன் சக்திக்குத்தக்கப்படி வேதத்தில் நாலு வாக்கியமாவது ஓதுகிறனே அவன் பாதாதி கேசம் வரையும் தவஞ்செய்கிறவனுகச் சொல்லப்படுகிறன். (மநு. 2 - 167.)

எந்தத் துவிஜனனவன் வேதத்தையோதாமல் வேறன அர்த்த சாஸ்திரத்தில் முயற்சிசெய்கிறனே அவன் சீவித்திருக்கும்போதே தன்வமிசத்தாருடன் சூத்திரனுகிறன்(2-168.)

ஓதுவார்களுக்கு மரியாதை.

திருநெல்வேலிமுதலிய சிவாலயங்களில் ஆரியவேதம் ஓதுகிற அந்தணர்களுக்கு விபூதிப்பிரசாதம் அளித்து முதன் மரியாதை நடத்தினபின், மற்றைப் பிராமணர்களுக்கு விபூதியளிப்பதென்று சாம்பிரதாயம் ஏற்பட்டிருக்கிறது. அதுபோலவே சிவாலயங்களிலும் மடாலயங்களிலும், தமிழ்வேதம் ஓதுகிற ஓதுவார்களுக்கு விபூதிப்பிரசாதம் முன்னர் அளித்து, பின்னர் மடாதிபதிகளுக்கும் வேளாளருக்கும் ஏனையோருக்கும் முறையே கொடுப்பதென்று கிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மடாலயங்களிலும் ஏனைய இடங்களிலும் நடக்கும் மகேசுர பூசாகாலத்தும் முதன் மரியாதை ஓதுவார்க்கேயாம்.

மார்கழிமாதம் உற்சவகாலத்துச் சுவாமி எழுந்தருளி வீதிவலம் வரும்போது ஓதுவார்க்குப் பரிவட்டங்கட்டி மாலை மரியாதைசெய்து,மாடவீதி அஷ்டதிக்கிலும் சுவாமிக்குத்

---

* அம்பலவரென்னுஞ்சுருதி—திருச்சிற்றம்பலமென்னும் சொல்லை முதலாகவுடைய தேவார திருவாசகங்களாம்.

திருவாசகம் ஓதுவித்துத், தீபாராதனை செய்வது வழக்கத்தில் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் பல விசேஷகாலங்களிலும் சுவாமிக்கு முன்னின்று ஓதும் திராவிடவேதியராகிய ஓதுவாருக்குப் பரிவட்டம் மாலை மரியாதையும் செய்வதைக்கண்டிருக்கிறோம். இவ்வித மரியாதை ஆரியவேதியருக்குமின்றாம்.

இஃதன்றியும் திராவிடவேதமாகிய தேவார திருவாசகங்களை அந்தணர்கள் மிகமுயன்று பண்வரிசை கற்றுச் சிவாலயங்களுள் ஓதப்புகினும் "ஓதுவதொழியேல்"என்ற முதுமொழிநோக்கி வேளாளகுலத்தராகிய ஓதுவார் தாங்கள் வேதமோதியடையும் மிராசு பாத்தியதையை ஒருக்காலும் விடமாட்டார்கள்.

இனி, ஆரியவேதம் ஒருவன் இறக்குங்காலத்தில் ஓதப்படாதெனக்கூறுகிறார்கள். திராவிடவேதம் அற்றன்று இறக்குங்காலத்தில் ஆவசியகம் ஓதவேண்டும் ஒருவனது மனம் இறக்கிறகாலத்தில் எந்த விடயத்திற் செல்லுமோ அதற்கேற்ற சனனம் எடுக்கிறானென் றேற்பட்டிருக்கிறது. அங்ஙனமாக, அக்காலத்தில் திருவாசகாதி திராவிடவேதங்களையோதவே, அவை செவிப்புலனில் நுழைந்தமாத்திரம் அவைகளிற்கூறும் சிவ கதியடைகிறானென்பது சித்தாந்தம். அக்காலத்தில் ஓதக் கூடாதவேதம் ஏனைய காலத்தில் ஓதுவதினால் என்னபயன்?

"ஆபத்துக்குதவாப்பிள்ளை யரும்பசிக்குதவாவன்னம்."

என்ற நீதிவாக்கியத்தின்படி ஆபத்துக்காலத்துக்குதவாதென்றால், அவ்வேதம் நிஷ்பிரயோசனமெனா ஏற்படுகின்றது. இறக்கிறகாலத்தில் காதில் பஞ்சாட்சரம் அஷ்டாட்சரமுதலியவையோதுவதெதற்காக? ஆலோசித்துணர்க.

## II. வேள்வி.

வேள்வியென்பதென்னையெனின்? உண்பித்தல் உபசரித்தல் விருந்தளித்தல் பலியீதல் பூசித்தலென்பனவாம்.

### வேள்வி வகை.

சூத சங்கிதை வேதார்த்தமுரைத்த அத்தியாயம்.

யாகமெனப்படுவதிரு வகைதூலஞ்சூக்குமமென்
றாகுமவற்றுட்கரும யாகமேதூலமக
மோகமறுஞானமக மொழிதருசூக்குமமகமா
மாகரவிலுங்கரும மகமொருமூவகைப்படுமால்.

வேள்வியானது தூலசூக்குமமென இருவகைப்படும். அவற்றுள், தூலவேள்வி கருமவேள்வியாம். சூக்குமவேள்வி ஞானவேள்வியாம். அந்தக்கருமவேள்வியு மூவகைப்படும்.

### தூலவேள்வி அல்லது கரும வேள்வி.

கரைதருமம்மூன்றின்பேர் காயிகமேவாசிகமே
யுரைபெறுமானதமேயென் றுரைப்பர்காயிகமகந்தான்
விரைமலருநித்தியநை மித்தியகாமிகமாகும்
வரைதலின்மந்திரசெபமே வாசகயாகந்தவத்தீர்.

இந்தத் தூல வேள்வி என்ற கருமவேள்வியானது, காயிக வாசிக மானதவேள்விகளென மூவகைப்படும். அவற்றுள் காயிக வேள்வியானது நித்திய நைமித்திய காமிகமென மூவகைப்படும். வாசிகவேள்வி மந்திரஜெபமேயாம்.

மருவுதெய்வத்தி யானமேமானதயாக
மொருவிலாவிவை யொன்றற்கொன்றுயர்ச்சியாமுணர்வீர்
பெருகுசீர்த்தியம் மானதயாகமும்பேசி
னிருவகைப்படு முத்தமமதமமேயென்ன.

மானதவேள்வி என்பது தெய்வத்தியானமாம். அம்மானதமும் உத்தமம் அதமம் என விருவகைத்தாம்.

மட்டவாங்குழன் மலைமகள்கூறுடையானை
யட்டமூர்த்தியை யளவிலின்பருள்பரசிவனை

விட்டமாவுளத்துத்தியா னித்தலேயென்றுஞ்
சட்டவுத்தமமுத்தமமென்பர் கற்றவையோர்.

உத்தமமானத வேள்வியானது யாவர்க்கும் மேலாகிய சிவபெருமானைத் தியானித்தலாம்.

கதநிலாவியதிகிரியார் கரத்தனைக்கவின்மான்
மதம்விராந்தனக்கலைமகண் மணாளனைமற்றைப்
பதம்விராவுவானவரையுட் டியானித்தல்பகரி
னதமமேயெனவறைவர்நா லுணர்ச்சியரதனால்.

அதமமானதவேள்வியானது விஷ்ணுபிரமேந்திராதி பதமுத்தி தேவர்களைத் தியானித்தலாம்.

தரைகொள்காமியமேதயங்குநித்தியமே சாற்றுநைமித்தியமேயென்
றுரைசெய்காயிகவல்யாகமூவகைத்தா லுவப்புறுகாமியபலன்றான்
றிரைதவில்சுவர்க்கமுதலிய வருத்தசித்திநன்னித்தியபலன்றான்
புரைதவிர்த்துயருஞ்சத்துவசுத்தி பொலியுநைமித்தியபலன்றான்.

பாதகநாசஞ்சிறப்புறுவுணர்வோர் பற்றவர்காமியயாக
மேதகுமுணர்வோர்நித்தியமகநை மித்தியமகமுயலுறுவார்
நீதகவிவர்கள்கிரமமாமுத்தி சேருவரினையமும்மகமும் [ன்று.
வேதநன்கியற்றவேண்டுமென் றுரைக்கும்விதியினாலியற்றுகோமெ

காயிகவேள்வியானது காமியம் நித்தியம் நைமித்தியம் என மூவகைப்படும். அவற்றுள், காமியவேள்வியின் பலன் சுவர்க்கப்பேறு மகப்பேறு முதலியவையாம். நித்திய வேள்வி சத்துவ சுத்தியைக் கொடுக்கும். நைமித்தியவேள்வி பாதகங்களை நாசஞ்செய்யும்,

நித்தியவேள்விஎன்பது ஜெபதபஹோம சிவபூசை சிவார்ச்சனை முதலிய நித்தியகருமங்களாம்.

நைமித்திய வேள்வி என்பது பௌர்ணமாவாசை கிரகணகாலம் உத்தராயண புண்ணியகாலங்களில் ஒவ்வொரு நிமி

த்தமாகச் செய்யுஞ் சற்கருமங்களாம். இதனை நைமித்திய கருமமென்பார்.

### சூக்ஷுமவேள்வி அல்லது ஞானவேள்வி.

ஞானயாகநேர்யாகநான் மறையுளுமில்லை
யானமற்றிதற்கதிகயா கமுமெங்குமில்லை
மானமாரிதுவாய்த்தவர்க் கரியதுமில்லை
யீனராயினோர்க்கிதனிடத் திச்சையுமில்லை.

அருண்மெய்ஞ்ஞானமுண்டாகுவ தெவற்குமற்றவற்குங்
தெருள்விராவியசிவன்பவன் முதற்றிருப்பெயரிற்
பொருளதாஞ்சிவமூர்த்தி பேதங்களிற்புரைசெய்
மருளனுக்கியசாந்தி முற்சாதனவகையில்.

போற்றம்புண்ணியநீற்றினிற் பொருந்துகண்மணியிற்
சாற்றுமெய்ச்சிவலிங்கபூ சையிற்சிவதலத்திற்
காற்றும்வல்வினையடியரிற் கணிப்பரும்பத்தி
மாற்றுதற்சரிதாம்வித மியற்கையின்மருவும்.

சொற்றவிவ்விடயங்களிற் றவேடமுற்றோன்றப்
பெற்றவன்பெறுன் பெறலரிதாஞ்சிவஞானம்
பொற்றவச்சிவபூசையாதிகளினுற் பொருந்து
முற்றசித்தசஞ்சலமம் தொளிருஞானக்கு.

பிரதிபந்தமாமாதலிற் பேசருஞானி
வரமுறவ்விடயங்களின் மலிதருதுவேடம்
பரவுமாறுவைப்பானெனிற் பகருதுங்கேண்மின்
கரகந்தாங்கிய கையுடையருந்தவக்கணத்தீர்.

நலமெய்ஞ்ஞானிக்குச் சாத்தியமானஞானத்து
மிலகுசாதகமான பூசாதிகளிடத்து
நிலவுவாஞ்சையல்லாற்,சிறுதவேடமுநிலையா
தலகிலாதமாதவத்தினீர் நன்றறிந்திடுமின்.

உத்தமச்சிவபூசையாதிகளி லொண்ஞான
சித்தியாதலின்விருப்பமே ஞானிசெய்திடுவன்

பெத்தநீங்கினும்பிறங்குற மெழுமூன்வாசனையா
லொத்தநற்பிரியஞ்சுபா வத்தினுற்றிருக்கும்.

பந்தநீங்குரூன்சிவார்ச்சனை முதற்பலவற்று
நந்தவாஞ்சைசெய்யா னவன்ஞானியேயல்ல
னெந்தநாளினுமூக்கமற் றெக்கருமத்துஞ்
சிந்தைவைத்தியற்றித்திரி வார்களுஞ்சிலரே.

இவைகளால் மூர்த்தி தலம் தீர்த்தங்களிலும், சிவபூசை சிவார்ச்சனையிலும், சிவ சாதனமான பஞ்சாட்சர விபூதி உருத்திராட்சங்களிடத்தும் சிவனடியாரிடத்தும் அன்பு பூண்டொழுகுதலே ஞானவேள்வியென்றும், இது எல்லாவேள்வியினுஞ் சிறந்ததென்றும், தெரியவருகின்றன. இதற்குமேலான வேள்வி உலகத்தினுமில்லை வேதங்களினுமில்லை. ஞானிகளுக்குச்சிவஞானங் கைவல்யமான காலத்தும், இடையிடையே பழையவாதனைவிடயங்கள்வந்து இடர்செய்யும்; அஃது இச்சிவபூசையாதிகளாலொழியும்.

இவ்வேள்விகளெல்லாம் சைவர்களென்று சொல்லப்பட்ட வேளாளர்களிடத்துண்டோ இல்லையோ வென்று விசாரிப்பாராக. அவர்களின் அனுஷ்டானத்திலிருக்குமிவைகளை இல்லையென்று யாவரால் மறுக்கக்கூடும்.

### பஞ்சமகாவேள்வி.

வேதங்களுள் பஞ்சமகா வேள்வியென்பது பிரமவேள்வி தெய்வவேள்வி பிதுர்வேள்வி மானுடவேள்வி பூதவேள்வியென ஐவகைப்படும். அவற்றுள்,

1. பிரமவேள்வி ஆரியதிராவிட வேதமோதலாம்.

2. தெய்வவேள்வி=அக்கினி காரியஞ்செய்தல் அல்லது அக்கினிமூலமாகத் தேவர்களைப்பூசித்தலாம்.

3. பிதுர்வேள்வி=சிராத்தாதிகளில் பிதுர்களை உண்பித்தலாம்.

4. மானிடவேள்வி=அதிதி அப்பியாசிகளுக்கு உணவளித்தலாம்.

5. பூதவேள்வி=தானுண்ணும்போது காகமுதலிய சீவராசிகளுக்குப் பலியிடுதலாம்.

வேதாத்தியானத்தால் ருஷிகளையும், ஓமத்தினாலே தேவர்களையும், சிராத்தத்தினாலே பிதுரர்களையும், போசனத்தினாலே அதிதிகளையும், பலிபோடுவதினாலே பூதங்களையும், திருப்திசெய்யவேண்டும். (மநு - 3, 81).

மேற்கூறியவற்றுள், பிரமவேள்வி வாசிக வேள்வியினும், ஏனைய நான்கும் காமிகவேள்வியினும், அடங்கினமை காண்க.

இவ்வேள்வி தென்புலத்தார் தெய்வம் விருந்தினர் சுற்றத்தார் தான் என ஐவகையாகத் திராவிடவேதங்களில் பிரிக்கப்பட்டிருக்கின்றது. வருமாறு தேவர் குறள்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை."

இதில் பிரமவேள்வியினை, தெய்வமென்றதிலடக்கிக் கூறினார். மானிட வேள்வியென்பதனை, விருந்து ஒக்கல் தான் என முப்பாலாக, விரித்துக்கூறினார். பூதவேள்வியினைத், தனக்கெனப் படைக்கு மன்னத்தினின்றும் பகிர்ந்து பலியிடுதலின் வேறு பிரித்துக் கூறாது தான் எனக்கூறி முடித்தார்.

### வேள்வியின்பலன்.

இப்பிறப்பில் விருந்தினரை யுபசரிப்பவன், மறுபிறப்பில் தேவனாகப்பிறந்து தேவர்களால் உபசரிக்கப்பட்டுச், சுவர்க்க போகத்தையடைவான் என்பது தோன்ற,

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு,

எனவும், தானளிக்கும் பொருள் சிறிதேயாயினும் உத்தமபாத்திரத்திற் செய்யும் வேள்வியின்பலன் இவ்வளவினதென்று வரையறுக்கப்படாதென்பது தோன்ற

> இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
> றுணைத்துணை வேள்விப் பயன்.

எனவும், திராவிடவேதமாகிய நாயனார் குறளில் கூறப்படுகின்றன. இது இங்ஙனமிருப்ப, மேற்கூறிய பஞ்சமகா வேள்விகள் வேளாளரனுஷ்டானத்திலுளவோவெனின்? உளஎங்ஙனமெனில்.

1. பிரமவேள்வி என்பது வேதமோதலன்றோ? வேளாளராயுள்ளவர்கள் திராவிடவேதமாகிய தேவார திருவாசகங்களைப் படுக்கைவிட்டெழுந்தபோதும், சந்தியாகாலத்தும் பூசாகாலத்தும், ஓதுகிறார்கள். சிவாலயங்களில் தமிழ்வேதம் ஓதும் வேளாளர்களுக்கு ஓதுவாரென்று வழங்கப்பட்டுவருகிறது. ஆகையால் பிரமவேள்வியை யிவர்கள் நித்திய நைமித்தியங்களிலும் அனுஷ்டித்து வருகிறார்கள்.

2. தெய்வவேள்வி என்பது அக்கினிகாரியமாம். வேளாளரில் அபிஷேகம் பெற்றுள்ளார் தினந்தோறும் அக்கினிவளர்த்துப் பூசிக்கிறார்கள். இதனாலன்றோ பட்டாரகர் (பண்டாரம்) வீட்டில் ஓமகுண்டமும் யாகசாலையும் பூசாமடமும் நிருமிக்கப்பட்டிருக்கின்றன. தினந்தோறும் அக்கினி வளர்த்துப்பூசிக்க, சக்தியில்லாதவர்கள் பூசாகாலத்தில் மந்திரமூலமாகப் பாவனா வேள்விசெய்து பூசையை முடிக்கிறார்கள். இதன் உளவு சிவபூசை செய்பவர்களுக்கே தெரியும். நைமித்தியத்தில் கல்யாணம் சோபனம் சீமந்தம் மகப்பேறு நாமகரணம் உபநயனமுதலிய சுபகாரியங்களிலும், சிவப்பிராயச்சித்தம் சூர்ணோச்சவம் அந்தியேஷ்டி கிரக எக்கியம் முதலிய அசுபகாரியங்களிலும் அக்கினிகாரியம் செய்துவருகிறார்கள்.

3. பிதுர்வேள்வி என்பது சிராத்தகாலங்களில் பிதுரர்களை ஆவாகித்து வேளாளர்கள் அன்னசிராத்தம் ஆமசிராத்தம் இரண்யசிராத்தம் என்ற உத்தம மத்திம அதம சிராத்தங்களில் ஏதேனும் அவரவர்களுக்கியன்ற மாத்திரம் செய்துவருதலாம்.

4. மானிடவேள்வி என்பது *அதிதி †அப்பியாசிகளுக்கு அன்னமிடுதல். இது வேளாளர்களுக்குச் சுபாவத்திலுள்ளதாம்.

> “தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
> வேளாண்மை செய்தற் பொருட்டு.”

என நாயனார் குறளாலுணர்க.

5. பூதவேள்வி என்பது இலையிலிட்ட அன்னத்தைப் பிசைந்து சீவர்களுக்காகப் பலிவைத்து நீர்வளாவி, பின்னர்க் காக முதலியவைகளுக்குப் பலிகொடுத்துத் தேவாராதனைசெய்து உண்பது. இது வேளாளர்களுக்கு வழக்கத்திலுள்ளதாயிருக்கிறது.

ஆகவே இந்தப் பஞ்சமகாவேள்விகளும் வேளாளர்கள் அனுஷ்டானத்திலிருப்பதை யில்லையென்றுமறுக்க ஒருவராலுமுடியாது.

### பசுபந்தவேள்வி.

வேதத்தில் கூறும் பசுபந்தயாகத்தை ஆரியர்கள் செய்வதுபோல வேளாளர்கள் செய்யக்காணவில்லையே? எனின், ஆரியவேதத்தில் கூறுவது ஹிம்ஸாவேள்வி யென்றும் அகிம்ஸா வேள்வியென்றும் இருவகைத்தாம். அவற்றுள் ஹிம்ஸா வேள்வியானது மது மாமிசங்களால் தேவாராதனை செய்தலாம். அகிம்ஸாவேள்வி அன்னம் பலகார பட்சணங்களால் தேவாராதனைசெய்தலாம். ஆதலால் ஹிம்ஸாவேள்வியை

---

* அதிதி ஓர் இராத்திரிவரையும் புதிதாய் வந்திருப்பவன்.
† அப்பியாசி நாடோறும்வராமல் ஒருகாலத்தில் வருகிறவன்.

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.

எனத் திராவிடவேதத்தில் மறுக்கப்பட்டமையின் வேளாளர்கள் அதனைச் செய்வதில்லையாம்.

ஹிம்ஸாவேள்வி தகாதகாரியமென்றால், ஆரியவேதத்துள் கூறியதெற்றுக்கெனின்? மாமிசபட்சணிகளாயுள்ள மந்தாதி காரிகளைக்குறித்துக் கூறியதாம்.

முன்னர் ஹிம்ஸா வேள்வியைக்குறித்துக் கூறிய வேதமே பின்னர் "அஹிம்ஸா பரமோதர்மா" என அதைப்பூர்வபக்கமாக்கி அஹிம்ஸா வேள்வியினையே சிறப்பித்துக்கூறுகிறது.

தேவர்களுக்கு மதுமாமிசங்களில் பிரீதியுண்டானதனாலன்றோ வேதங்களில் ஹிம்ஸா வேள்விக்கு இடங்கொடுத்ததெனில் அற்றன்று. தேவர்களுக்கு மதுமாமிசங்களில் பிரதியுண்டாகும்பட்சத்தில் பூலோகத்திலுள்ள ஆடு மாடு முதலிய சீவராசிகள் ஒன்றேனும் அவர்கள் வைக்கமாட்டார்கள். தென்னை பனையிலுள்ள கள்ளும் நில்லாது. பிராமணர்கள் இவற்றைக்கொண்டுவந்து அவர்களுக்கு நைவேதிக்கிற வரையும் அவர்கள் பொறுத்திரார்கள். ஒருவேளை அவற்றை நெய்யில் பாகஞ்செய்தாலொழிய அவர்கள் புசிக்கமாட்டார்களோ? எனின், தெய்வலோகத்தில் இவற்றைப்பாகஞ்செய்து கொடுக்கப் பரிசாரகர்களில்லையா? இவைகளை உயிருடனே அவ்விடத்திற்குக் கொண்டுபோய் விடுவார்களே இது நிற்க. ஆடுகோழிகளைப் பூசாரிகள் சேதித்துப் பாகஞ்செய்யாமற் பச்சைமாமிசமாகத்தானே ஐயன் பிடாரி முதலிய தேவதைகளுக்கு நைவேதிக்கிறார்கள். அவற்றை ஐயன் பிடாரி ஒப்புக்கொண்டிருந்தால், அதுபோல ஏனையதேவர்கள் பச்சையாகத்தின்ன ஏன் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஆகையால் இதுகருத்தன்று. எந்தெந்த மனிதர்கள் எதை எதைப்புசிக்கவிரும்

புகிறார்களோ அதையதைத் தங்கள் இஷ்டதேவதைகளுக்குப் பிரதிசெய்து புசிக்கிறதேயன்றி வேறில்லை

பாரதம், அசுவமேத பருவம், வேள்விச்சருக்கம்.

தேவருமவர்க்கிறைவ னுந்திருவில்வீசு
மூவருமகிழ்ந்தவி முறைப்படியருந்த
மேவரவளித்தபினர் வேதமுனிவோர்கள்
தாவரவியற்றுமுறை யூபவிதிதந்தார்.

காதிரமதாறுகலை வில்லுவமதாறு
மீதுறுடலாசமதி லாறுவிறன்மிக்க
சாதலறுதேவமதி தாரமதிரண்டு
மேதில்செலுமொன்றமெழு மூன்றுவிதியூபம்.

எற்றமுமிரண்டுடலைதான் றெனவிசைக்கும்
போற்றரியசானுடைய பொற்பினிலமைத்தே
நாற்றிசையுமேமமணி நற்றறிமுப்நூலுஞ்
சாற்றுமுறைதந்தனர்க ளுமதுதக்கோர்.

வேறு.

முறைப்படியூபந்தோறுமாருயிர் பூட்டிமுன்னர்
மறைப்படியிடையில்வேள்வி வாசியைநிறுவிக்கற்றோர்
துறைப்படிசடங்குமுற்றித் தொலைத்துறப்பவிக்கணேர்ந்தார்
நிறைக்குரியவராயுள்ள நிமலவானவர்களம்மா.

எடுத்தநல்லவயவங்கடோறுந் தொறுமிரந்துமேதை
மடுத்தமுதினுஞ்சுவைக்க வானவர்களித்தபின்னர்த்
தொடுத்தமாமுனிவராருந் துண்ணெனவார்த்தெழுந்து
முடித்தனர்கனலையாசி மொழிந்தனர்முறையான்மாதேர்.

இச்செய்யுட்களால் வேள்விக்கண் கொடுக்கப்பட்ட மதுமாமிசங்களைத் தேவர்களுண்டு களித்ததாகச் சொல்லுகிறதே? எனின் அது உபசாரமேயன்றி வேறில்லை; முனிவரும் அந்தணரும் உண்டு களித்ததேயுண்மையாம்.

சிறுத்தொண்ட நாயனரிடம் சிவபெருமான் பிள்ளைக்கறிதின்னவில்லையோவெனின்? அந்நாயனர் பக்தி வைராக்கி

யத்தை வெளிப்படுத்திபதன்றி, அவர் சமைத்த மாமிசத்தைத் தின்றதே கிடையாது. அவரது புராணமுழுதும் வாசித்துணர்ந்தால் தெரியும்.

மதுமாமிசங்கள் தேவர்களுக்குப் பிரீதியாகிறபட்சத்தில், சிவாலய விஷ்ணுவாலயங்களில் தினந்தோறும் மகா நைவேதனமாகிறதே அதனுடன் மதுமாமிசங்களும் ஏன்? நைவேதிக்கக்கூடாது.

**பசுபந்த வேள்வி ஏற்பட்ட காரணம்.**

பூர்வகாலத்தில் ஆரியர்கள் காட்டிலுள்ள மிருகங்களைக் கொன்று பச்சையாக மாமிசங்களைப் பிடுங்கித்தின்று கொண்டிருந்தார்கள். நாகரீகம் உண்டான காலத்து, ஒருவிவேகியானவன் அதை மறுக்கமுயன்று முடியாமல், தந்திரோபாயங்களால் நீக்கவேண்டுமென்று ஆலோசித்துப் போதிக்சத் தொடங்கினான். எங்ஙனமெனில்,

1. முதலில், நீங்கள் இந்த மாமிசங்களைப் பச்சையாசத் தின்பதால் உங்களுக்கு அடிக்கடி நோயுண்டாகிறது; வேகவைத்துத் தின்றால் சுகமுண்டாமென்றான். அப்படியே செய்தார்கள்.

2. பின்னுஞ் சிலநாள்கழித்து இப்படி வேகவைத்துத் தின்பது சரியல்ல, புளி மிளகாய் உப்பு முதலியவைசேர்த்துத்தின்பீராகில் சுகத்தைக்கொடுக்குமென்றான். அப்படியே செய்துவந்தார்கள். அப்போது சாமான்வர்க்கம் தேடச்சிறிது தாமதப்பட்டதால், இரண்டொருநாள்கழிய, மாமிசமில்லாத அன்னமுண்ணநேரிட்டது.

3. பின்னுஞ் சில காலங்கழித்து அவர்களைக்கண்டு இதுவுஞ்சரியல்ல, எண்ணெய் நெய் முதலியவைகளில் வேகவைத்துத் தின்றால் மிகவும் சுகமென்றான். இவைகளைத் தேடவ

தால் பின்னுஞ் சிலகாலந்தாமதபட்டது. அதற்குள்ளாக அன்னபானுதிகள் புசிக்கும் பழக்கம் மிகுதியாய்விட்டது.

4. பின்னுஞ் சிலகாலங் கழித்து விரதாதிகளனுஷ்டித்தால் புண்ணியமுண்டாகும், அக்காலங்களில் மாமிசம் புசிக்கப்படாதெனப் போதித்தான். அதைக்கேட்டு, பஞ்சபருவங்கள் வெள்ளிக்கிழமை மாசப் பிரவேசம் இக்காலங்களில் மாமிசம் புசிப்பதைவிட்டொழித்தார்கள்.

5. முடிவில் உத்தம சிலர்களாயுள்ளவர்கள் மாமிசமே புசிக்கலாகாது. வேண்டுமானுல் வேள்விசெய்து புசிக்கவேண்டுமென்று விதியேற்படுத்தினுன். அதையுமங்கீகாரஞ்செய்து வேள்வி மாதந்தோறுஞ் செய்யமுடியாமல், வருஷத்தில் 2-3-தரம் யாகஞ்செய்து மாமிசங்களைப் புசித்தார்கள்.

இவ்விதமாகவே ஆரியர்களுக்கு மாமிசபோசனம் சிறுகச் சிறுக நீங்கியது. நீங்குவதற்கு முன்பழக்கத்தினுல் இன்னும் யாகஞ்செய்ய முயலுகிறுர்கள். முன்போல அடிக்கடிசெய்ய முடியவில்லை. ஆகையால் மாமிசபட்சணிகளாயுள்ளவர்கள் மறுத்தால் மாமிசத்தை ஒரோதரத்தில் நிறுத்தமுடியாது. அதற்காக அரியவிதிகளை யேற்படுத்தி யாகஞ்செய்யவேண்டுமென்று அவர்களுக்குப் போக்குக் காட்டுவதுபோல ஆரியவேதத்தில் பசுபந்த வேள்வி ஏற்பட்டதேயொழிய வேறில்லை. இதற்குப் பிரமாணம் பின்வருஞ் செய்யுட்களிற்காண்க.

கைவல்லியம், சந்தேகந்தெளிதற்படலம்.

கள்ளுமூனுநீ விரும்பினன்மகங்கள்செய் காமத்தின்மனதானாற்,
கொள்ளும்பெண்டொடுகலவிசெய்யெனிலிவன் குறையெலாந்தொ
டாமென்றே, தள்ளுவேதத்தின்சம்மதஞ்சொலமுந் தவிர்வதேகருத்
தாகும், விள்ளுமிவ்விதியென்னெனிற்பூருவநியாயமாம்விதியன்றே.

மதுவிறைச்சிகளுண்ணென்றசுருதியின்மணந்துபாரெனச்பாராய்
மிதுனவிச்சையுப்புத்திரோற்பத்தியால் விரும்பென்றவிதிபாரா
யிதையும்விட்டொழியதிரயிட்டிகவன்னிக் கிகழ்ச்சியுற்றதும்பாரா
யதையறிந்துகன்மங்களாசைகளொழிந் தானந்தமடைவாயே.

## பசுபந்தவேள்வியின்பயன்.

இனி, பசுபந்த வேள்வியினால் தேவர்கள் திருப்தியடைகிறார்கள். அதற்கு யாதொரு சந்தேகமுமில்லையெனச் சாதிக்கப்புகினு மங்ஙனமாகுக. அதனால் வரும்பயன் யாதெனவிசாரிக்கில் சுவர்க்கபோக மடைவதே யென்றுதெரிகிறது. அச்சுவர்க்கப்பேறுதான் எத்தன்மையதென விசாரிக்குமிடத்தில், பதினாறுவயதுடையகுமாரனும் பன்னிரண்டுவயதுடைய குமரியுந் தம்முளொத்தமரபும் தம்முளொத்த அன்புமுடையவராகிச் சகல சம்பத்தையும் போகபோக்கியங்களையும் கற்பக விருட்சமுதவப்பெற்று, தாம்செய்த தவத்தளவும் அப்போசபூமியிலநுபவிப்பதாம். இதற்குப்பிரமாணம்.

பிங்கலந்தையார் அநுபோகவகை.

பதினாறுட்டைக் குமரனுஞ்சிறந்த
பன்னீருட்டைக் குமரியுமாகி
யொத்தமரபினு மொத்தவன்பினுங்
கற்பகநன்மர நற்பயனுதவ
வாகியசெய்தவத் தளவுமவ்வுழிப்
போகநுகர்வது போகபூமி.

என்பதனாற்காண்க.

வேள்விகளுட்சிறந்தது அசுவமேதம்; இது எளிதில் செய்து முடிக்கத்தக்கதன்று. அரசர்களையெல்லாம் வென்றபின் இராஜாதிராஜனால் செய்யத்தக்கது. அப்படிப்பட்ட அசுவமேத வேள்விகள் 100-செய்துமுடித்தால் தேவேந்திரப்பட்டங் கிடைக்குமென்பது நூற்றுணிபு. இவ்வளவு அருமையாகக் கிடைத்த தேவேந்திரப்பட்டமும், வேறொருவன் 100-அசுவமேத யாகஞ்செய்வானாகில், மாறி இவன்மீளவும் பூமியில் வந்துபிறக்கவேண்டும். தேவேந்திரப்பட்டமாளுகிறவனுக்கு எவன் 100-மகம் முடிக்கிறானோ எப்போது நம்முடைய பட்டம் மாறுமோவென்ற பயங்கொண்டிருப்பான்.

மலையத்துவஜ பாண்டியன் 99. மகஞ்செய்து முடித்த வுடனே, தேவேந்திரன் இன்னம் ஒன்றையுஞ்செய்து முடிப்பானேல், நமது பட்டம் மாறிவிடுமென்று பயந்து, நூறுவது அசுவமேதத்தைச் செய்யவொட்டாமல் தடுத்து, புத்திரகாமேஷ்டி யாகஞ்செய்யும்படி செய்தான். பிரமாணம் பின்வருஞ்செய்யுட்களிற்காண்க.

திருவிளையாடற் புராணம்,
தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப் படலம்.

ஈறின்மறைகூறுமுறை யெண்ணியொருதொண்ணூற்
றுறினொடுமூன்றுமக மாற்றவமரேச
னூறுமகமும்புரியினென்பத நொடிப்பின்
மாறுமெனமற்றதனை மாற்றியிதுசாற்றும்.

நன்பொருள்விரும்பினை யதற்கிசையஞால
மின்புறுமகப்பெறு மகத்தினையியற்றி
நன்புறுமகப்பெறுதி யென்றமரர்நாடன்
றன்புலமடைந்திடலு மிம்பகுதாரான்.

இங்ஙனம் அருமையாகப் பசுபந்த யாகத்தைச்செய்து சுவர்க்க போகத்தைப் பெற்றாலும், சிறிது காலமநுபவித்து மீளவும் இப்பூமியின் கண்வந்து பிறக்கவேண்டும். ஆகையால் இதுபயனற்றதென்று விவேகிகள் கொள்ளார்.

ஆரியர்களுக்குக் கொலை புலை மதுபானம் எக்காலத்தும் உண்டு. அதை வடதிசையிலுள்ள பிராமணர்களுள், யாகத்திலும் சிராத்தாதியிலும், விருந்தளிக்கும்போதும், மற்றையகாலத்தும், உண்பதை வெளிப்படையாகக் காணலாம்.

திராவிடதேசத்து வந்து திராவிடர்களுடன் பழகி நாகரீகம் பெற்றுச் சைவாசாரத்தை யனுஷ்டித்து வரும்பிராமணர்களுள்ளும், பழையவாசனையால் யாகாதிசெய்து மது மாமிசங்களை யுண்ண விரும்புகிறார்கள். அப்படி விருப்பமுள்ளவர்கள் வெளிப்படையாகப் புசிக்கமாட்டார்களா? எனின், அவ

ர்கள் மது மாமிசம் உண்பதாகத் தெரிந்தால், திராவிடர்கள் அவர்களைப் பூசிதைசெய்யார்கள். அவர்கள் கைப்படவுணவுங்கொள்ளார்கள்.

"ஆரியர்-மிலேச்சரென" மண்டலன் புருடன் நிகண்டிற் கூறியது மிக்கருத்துப்பற்றியே யென்க. சமணர்கள் கொல்லாவிரதியராதலின் ஆரியர்கள் பசுபந்த யாகத்தில் செய்யும் கொலை புலைமதுபானங்கண்டு சகியாராகி, அவர்கள்செய்யும் யாகத்துக்கும் இடையூறு செய்துவந்தார்கள்.

ஆரியர்களுக்குக் கொலை புலை மதுபானமுண்டென்பதற்குப் பிரமாணம், பின்வருவனவற்றாற்காண்க.

## ஆரியர் கொலைபுரிதல்.

மநு. 5-22. புசிக்கும்படி சொல்லியிருக்கிற மிருகம் பட்சி இவைகளைப் பிராமணர் எக்கியத்துக்காகவும், அல்லது தன்மாதா பிதா முதலிய போஷிக்கவேண்டியவர்களைக் காப்பாற்றுவதற்காகவும், கொல்லலாம்.

முற்காலத்தில் அகத்திய மகாமுனிவர் தன்பிதா முதலிய போஷியவர்க்கங்களுக்காக ஜெந்து ஹிம்சைசெய்திருக்கிறார்.

5-23. இருடிகள் செய்த பழமையான எக்கியங்களில் பட்சிக்கத்தக்க மிருகம் பட்சி இவைகள் அவிசாக இருந்தன. ஆகையால் எக்கியத்தில் ஹிம்சை செய்யலாம்.

10-107. தவத்தில் உயர்ந்த பாரத்துவாசர் தப்புத்திரனோடு காட்டில் வசிக்கையில், விருது வென்னும் தச்சனிடத்தில் அநேகபசுக்களை வாங்கிக்கொன்று தின்றார் என்று கூறப்பட்டிருக்கிறது.

10-105. வேதத்துள் ஐதரேயப் பிராஹ்மணம் 7-ஆம் அத்தியாயம் 7-ஆம் பஞ்சகத்தில், அஜிகர்த்தன் என்ற ரிஷி

யின் புத்திரன் ஷுனஷேபனை நரமேதயாகஞ் செய்வதற்கு, பசுவாக்கினார்களென்று கூறப்பட்டிருக்கிறது.

### ஆரியர் மாமிசபட்சணஞ்செய்தல்.

ஆரியர்கள் பூருவத்தில் மாமிசபட்சணிகளாகவே இருந்திருக்கிறார்கள். இதற்குப்பிரமாணம், மநு தருமசாத்திரம் பார்வண சிராத்த நியமம்.

3-266. பிதுர்களுக்கு எவ்விதமாகச் சிராத்தஞ்செய்தால் நெடுநாள்வரையும் திருப்தியுண்டாகுமோ அது முழுமையுஞ் சொல்லுகிறேன்.

3-267. திலம் செந்நெல்லரிசி உழுந்து ஜலம் கிழங்கு பழம் இவைகளினால் சிராத்தஞ்செய்தால் மனிதர்களின் பிதுர்க்கள் ஒருமாதம் வரையும் திருப்தியடைகிறார்கள்.

3-268. பாடீநசம் முதலிய மச்சமாமிசத்தால் செய்தால் இரண்டுமாதம்வரையும், ஆரிணமென்கிற மான் மாமிசத்தால் செய்தால் மூன்றுமாதம் வரையும், செம்மறியாட்டு மாமிசத்தால் செய்தால் நான்குமாதம்வரையும், பட்சிகளின் மாமிசத்தால்செய்தால் ஐந்துமாதம் வரையுந் திருப்தியடைகிறார்கள்.

3-269. வெள்ளாட்டின் மாமிசத்தால் செய்தால் ஆறுமாதம் வரையும் புள்ளிமான் மாமிசத்தால் செய்தால் ஏழுமாதம் வரையும் கறுப்பு மான் மாமிசத்தால் செய்தால் எட்டுமாதம் வரையும் கலைமான் மாமிசத்தால் செய்தால் ஒன்பதுமாதம் வரையும் திருப்தியடைகிறார்கள்.

3-270. முள்ளம்பன்றி காட்டெருமைக்கடா இவைகளின் மாமிசத்தால் செய்தால் பத்துமாதம் வரையும் முயல் ஆமை இவைகளின் மாமிசத்தால் செய்தால் பதினொருமாதம் வரையும் திருப்தியடைகிறார்கள்.

3-271. பசுவின்பால் தயிர் நெய் இவைகளால் சிராத்தஞ் செய்தால் ஒருவருஷம் வரையும், தண்ணீர் குடிக்கும்போது இரண்டுகாதுந் தண்ணீரிற்படக் குடிக்கின்ற க்ஷீணவிந்திரியத்தை யுடையதாகிய வார்த்தீநசமென்னும் கிழ வெள்ளாட்டுக் கடாவின் மாமிசத்தாற் செய்தால் பன்னிரண்டுவருடம் வரையும் திருப்தியடைகிறார்கள்.

3-272. அந்தந்தக்காலத்திலுண்டான கறியமுது முள்ளுள்ள வாளைமச்சம் கட்கமிருகம் சிவந்த ஆடு இவைகளின் மாமிசங்களாலும் காட்டில் முளைத்திருக்கும் செந்நெல்லின் அரிசியினாலும் சிராத்தஞ்செய்தால் அளவற்றநாள்வரையும் பிதுர்க்கள் திருப்தியடைகிறார்கள்.

## ஆகிதாக்கினி விஷயம்.

4-27. ஆகிதாக்கினியான பிராமணன் தான் தீர்க்காயுளாயிருக்க வேண்டுமென்னும் விருப்பமிருந்தால், புதிதாக நெல்லு விளைந்துவந்தவுடனே, ஆக்கிரயணேஷ்டி செய்யாமல் அதைத் தான்புசிக்கக்கூடாது. மேற்சொன்னகாலத்தில் பசுவதேஷ்டிசெய்யாமல் மாமிசபட்சணமுஞ் செய்யப்படாது.

## மாமிசத்தின் விதிவிலக்குகள்.

5-16. ஆயிரம் பல்லுள்ள பாடீநசமென்னு மச்சமும் சிவப்பு மச்சமும் எக்கியத்திலும், சிராத்தத்திலும், புசிக்கலாமென விதிக்கப்பட் டிருக்கின்றது. கூட்டத்தோடு சஞ்சரிக்கின்ற மீனும் சிங்கமுகமீனும் முள்ளுமீனும் மற்றக்காலங்களிலும் கூடுமென்று சொல்லப்படுகின்றது. ஆதலால் ஆபத்துக்காலத்தில் இவைகள் கூடுமென்று தாற்பரியம்.

5-18. முள்ளம்பன்றி சல்லியமிருகம் உடும்பு காண்டாமிருகம் ஆமை முயல் இவைகள் ஐந்து நகங்களாயிருந்தபோதிலும் இவைகளையும், ஒருபக்கம் பல்லுள்ள மிருகங்களில் ஒட்டகம் நீங்கலாக மற்றவைகளையும், புசிக்கலாம்.

5-27. ஒருபிராமணன் தன்னை மாமிசம் புசிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்ளும்போதும், விதிப்படி சிராத்தத்தில் வரிக்கப்பட்டபோதும், வேறே ஆகாரமில்லாமல் மாமிசம் புசியாவிட்டால் உயிர்போகும்படி நேரிட்டசமயத்திலும், மந்திரத்தினற் கொல்லப்பட்ட மிருகாதிகளின் மாமிசத்தைப்புசிக்கலாம்;

4-250. கர்ப்பூரமுதலிய வாசனுதிரவியம் படுக்கைவீடு தருப்பை ஜலம் புஷ்பம் அரதனம் தயிர் அவல் அரிசி மீன் பால் மாமிசம் கறியமுது இவைகள் வலியவந்தால் நீக்கப்படாது.

5-28. ஏனென்றல் பிரமன் இவ்வுலகமுழுதும் ஜீவனுக்காகாரமாக வுண்டுபண்ணினர். ஆகையால் நெல்லு முதலான தாபரமும் மிருகமுதலான சங்கமமும் ஜீவனுக்காதாரமாகவேயிருக்கின்றன.

5-29. எப்படி என்றல் மான்முதலியசரங்களுக்குப் புல்லுமுதலிய அசரங்களும்,புலிமுதலிய கோரைப்பல்லுள்ளவைகளுக்கு மான்முதலிய கோரைப்பல்லில்லாதவைகளும், மானுடர் முதலிய கையுள்ளவர்களுக்கு மீன் முதலிய கையில்லாதவைகளும், சிங்க முதலிய வீரமுள்ளவைகளுக்கு யானை முதலிய பயமுள்ளவைகளும், ஆகாரமாக இருக்கின்றன.

5-30. ஆதலால் பிராணன் போகிற காலத்தில் புசிக்கத்தகுந்த ஜெந்துக்களைத் தினந்தோறும் புசித்தபோதிலும் தோஷத்தை யுடையமாட்டான். பிரமனுலேயே புசிக்கத்தக்கவர்களும் கொல்லத்தக்கவைகளும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனரல்லவா.

5-31. ஆனல் யாகஞ்செய்து அதின் மிகுந்தமாமிசத்தைப்புசித்தல் தேவகாரியமென்றும், மற்ற வேளையில் தனக்காக ஜெந்துக்களைக் கொன்று புசித்தல் ராட்சச காரியமென்றுஞ் சொல்லப்படும்.

5-32. மாமிசம் விலைக்கு வாங்கினாலும், தானாகவே சம்பாதித்தாலும், ஒருவனிஷ்டமாகக் கொடுத்தாலும், அவைகளைத் தேவர்களுக்கும் பிதுர்களுக்கும் நைவேத்தியஞ்செய்து புசிக்கிறவன் தூஷிக்கப்படமாட்டான்.

5 35. சிராத்தத்தில் விதிப்படி வரிக்கப்பட்ட துவிஜனானவன் தோஷமென்று மாமிசத்தைப் புசியாவிட்டால் அவன் இருபத்தொரு ஜநநம் பசுவாய்ப் பிறப்பான்.

5-39. எக்கியத்திற்காகவே பசுக்கள் பிரமனால் சிருட்டிக்கப்பட்டிருக்கின்றன. அந்த எக்கியஞ் செய்தால் உலகமெல்லாம் க்ஷேமத்தை யடைகின்றன. ஆகையால் எக்கியத்தில் செய்யும் பசு ஹிம்சை ஹிம்சையன்று.

5-40. கொடிகள் பசுக்கள் விருக்ஷங்கள் மிருகங்கள் பட்சிகள் இவைகளை எக்கியத்திற்கு உபயோகப்படுத்தினால் பின்பு அவைகளுயர்ந்த கதியையடைகின்றன.

5-41. மதுவர்க்கம் எக்கியம் சிராத்தம் இவைகளுக்கு மாத்திரம் ஜெந்து ஹிம்சைசெய்யலாம், மற்றவிஷயத்தில் கூடாதென்று மநுப் பிரஜாபதி ஆஞ்ஞாபித்திருக்கிறார்.

5-42. வேதத்தின் தத்துவார்த்தத்தையறிந்த துவிஜனானவன் இந்த மதுவர்க்கமுதலிய விஷயத்தில் ஜெந்து ஹிம்சை செய்தால் தன்னையும் அந்த ஜெந்துவையும் நற்கதியடைவிப்பான்.

5-44. சராசரவிஷயத்தில் வேதத்தில் சொல்லப்பட்ட ஹிம்சையை ஹிம்சையென்று நினைக்கக்கூடாது. வேதத்தினின்றே தருமம் விளங்குகிறதல்லவா. ஆதலால் அந்த வேதம் ஹிம்சையைச் சொன்னபோதிலும் புண்ணியமாகவேயிருக்கும்.

இன்னும் ஆரியர்கள் மாமிசம் புசிப்பதைப்பற்றிய அநேக சரித்திரங்களுள, அவற்றை விரிக்கிற்பெருகும்.

4-176-ல் கலியுகத்தில் மாமிசத்தோடு சிராத்தஞ் செய்தல் உலகத்தாரால் நிந்திக்கப்பட்டதென்று கூறுகிறது. 'இதனுல் மாமிசபக்ஷணங் கூடாதென வெளிப்படையாக மறுக்கவில்லை. மறுத்ததாக வைத்துக்கொள்வோமாயினும் வடநாட்டிலுள்ள பிராமணர்களில் வழக்கத்திலும் யாகத்திலும், மறுத்ததாகக் காணவில்லை. தென்னாட்டிலுள்ள பிராமணர்களோ? எனின், திருவையாறு சிதம்பரம் முதலிய திவ்யக்ஷேத்திரங்கள் பலவற்றிலும்,பசுபந்த யாகஞ்செய்து தற்காலத்திலு மாமிசபக்ஷணம் புசித்து வருகிறூர்கள்; இது பிரயத்தியட்சமாகக் காணலாம்.

### ஆரியர் சோமபானம்.

சாமவேதம் 2-ஆம் பாகம் iii. 3.

𑌸𑍋𑌮𑌃 𑌪𑌵𑌤𑍇 𑌜𑌨𑌿𑌤𑌾 𑌮𑌤𑍀𑌨𑌾𑌂
𑌜𑌨𑌿𑌤𑌾 𑌦𑌿𑌵𑍋 𑌜𑌨𑌿𑌤𑌾 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌃 ।
𑌜𑌨𑌿𑌤𑌾𑌗𑍍𑌨𑍇𑌃 𑌜𑌨𑌿𑌤𑌾 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯
𑌜𑌨𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌜𑌨𑌿𑌤𑍋𑌤 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 ॥

సోమః పవతే జనితా మతీనాం
జనితా దేవో జనితా ప్రధివ్యాః।
జనితాగ్నేః జనితా సూర్యస్య
జనితేంద్రస్యజనితోతవిష్ణోః॥

* ஸோமஃ பவதே ஜநிதா மதீநாஂ
ஜநிதா தேவோ ஜநிதா பிரதிவ்யா

---

* சோமம்=ஓர்வகைக்கள்.

ஜநிதாக்நே: ஜநிதா ஸூர்யஸ்ய
ஜநிதேந் திரஸ்ய ஜநிதோ தத்விஷ்ணோ:

இ-ள். சுபமாயுள்ளசோமம் விவேகத்தைவிளைக்கும், ஆகாயத்தை யுண்டாக்கும், அக்கினியை யுண்டாக்கும், சூரியனையுண்டாக்கும், இந்திரனையுண்டாக்கும், பூமியையுண்டாக்கும், விஷ்ணுவையுண்டாக்கும்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑌦𑌵𑍀𑌃 𑌕𑌵𑍀𑌨𑌾𑌮𑍃𑌷𑌿𑌰𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌾
𑌣𑌾𑌂 𑌮𑌹𑌿𑌷𑍋 𑌮𑍃𑌗𑌾𑌣𑌾𑌂 ।
𑌶𑍍𑌯𑍇𑌨𑍋 𑌗𑍃𑌧𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑍍𑌵𑌧𑌿𑌤𑌿𑌰𑍍𑌵𑌨𑌾𑌨𑌾𑌂
𑌸𑍋𑌮𑌃 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑌤𑍍𑌯𑍇𑌤𑌿 𑌰𑍇𑌭𑌨𑍍 ॥

బ్రహ్మా దేవానాం పదవీః కవీనా
మృషిర్విప్రాణాం మహిషో మృగాణాం॥
శ్యేనో గృధ్రాణాం స్వధితిర్వనానాం
సోమః పవిత్రమత్యేతి రేభన్॥

பிரஹ்மா தேவாநாம் பதவீ: கவீநா
மிருஷிர் விப்ராணாம் மஹிஷோ மிருகாணாம்
ஸியேநோ கிருத்ராணாம் ஸ்வதிதிர்வநாநாம்
ஸோம: பவித்ர மத்யெதி ரேபண்.

இ-ள். தேவருள் பிரஹ்மாவும், வித்வானுள் பண்டிதனும், விப்பிரருள் இருடியும், கொம்புள்ள மிருகங்களுள் எருமையும், பட்சிகளுள் இராஜாளியும், ஆயுதங்களுக்குள் கட்கமும், சிறந்தனபோல, கிரட்டினுள்ள ஓடதிகளுள் சோமம் சிறந்ததாம். அந்தச் சோமம் தன் பெயரை சப்தித்தமாத்திரத்தில் சப்திக்கிறவனைச் சுவர்க்கத்துக்குக் கொண்டுபோகின்றது.

இதனால் சோமபானமானது வேதத்துள் ஆரியருக்குச் சிறந்துள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. உல்சன் துரையாற்

செய்யப்பட்ட இந்துக்களின் சாதிநூல் 123-ஆவது பக்கத்திற் காண்க.

பசுபந்தவேள்வியின்கருத்து என்னை? எனில், 'தேவர்களைப் பூவுலகினிடத்தே வருவித்து அவர்களுக்கு மதுமாமிசாதிகளால் விருந்தளித்துக் களிப்பித்தலாம். தேவர்கள் இதற்குப்பிரதியாக இப்படி விருந்தளித்தவர்களைத், தங்களிருப்பிடமாகிய சுவர்க்கலோகத்துக் கழைப்பித்துத், தங்கள் நாட்டிலுள்ளதை விருந்தளித்துக் களிக்கச்செய்து, மீளவும் பூவுலகிற் செல்ல வழிவிடுதலாம்.

நித்திய சுகத்தை யடைவதற்குரிய அநேக சன்மார்க்க நெறிகளிருக்க, அதைவிடுத்துச் சொற்காதி அநித்தியசுகத்தின்பொருட்டுக் கொலைபுரியவும் மதுமாமிச பட்சணஞ்செய்யவும் யாகத்தை விரும்புவது,

இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

என்று நாயனார் கூறியபடி நல்லதீங்கனியைத்தின்று சுகத்தை யடையாது துவர்க்காயைத்தின்று வருந்துவதுபோலுமாம்.

இவ்வாறாக ஆரியவேதமானது சிறியபயனைக்கருதிப் பெரும்பாவமான சீவஹிம்சையைச் செய்யும்படி கற்பிக்கும். திராவிடவேதமோ? என்றால் சீவர்களுக்குச் சற்றும் ஹிம்சையின்றியே பெரும்பயனாகிய மோட்சசாதனத்தைக் கற்பிக்கும். அதற்குச் சான்றாகத் திராவிடவேதமாகிய நாயனார் குறளில்,

கொல்லாமை யதிகாரத்துள்.

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

தருமமென்பது ஓருயிரையும் கொலைசெய்யாமையாம். பாவம் என்பது பிறவுயிரைக்கொலைசெய்தலாம். இது எல்லாத் தீமைகளையும் உண்டாக்கும்.

நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி.

கொல்லாதமார்க்கமே நல்லமார்க்கமாம். கொலைசெய்யும் மார்க்கம் தீவினைமார்க்கமாம்.

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று.

கொல்லாவிரதியரிடம் கூற்றுவனணுகான்.

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

தன்னுயிரை நீக்கவரினும் பிறவுயிரை நீக்கலாகாதாம்.

நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை.

கொலைசெய்வதால் இன்பமிகுவதாகிய செல்வம்பெரிதே யுண்டாயினும், பெரியோர்கள் அதை யிழிவாக மதிப்பார்கள் ; பொருளாகக் கொள்ளார்கள்.

புலான்மறுத்தல் என்ற அதிகாரத்துள்.

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்.

தனது மாமிசதேகத்தை வளர்ப்பதற்காகப் பிறவுயிர்களைக் கொன்று அதன் மாமிசத்தைப் புசிப்பானாயின், அவனுக்குச் சிவபெருமான் அருள் எவ்விதஞ் சித்திக்கும். எனவே புலாலுண்பவனுக்குச் சிவபெருமானது அருள் ஒருபோதுஞ் சித்தியாதென்பது சித்தாந்தம்.

படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.

ஓர் சீவனைக்கொன்று அதன்மாமிசத்தை யுண்பவர்மனம் எப்படியிருக்குமென்றால், யுத்தகளத்தில் ஒருவரை யொருவர்

கொல்லவேண்டுமென்று வாளைக் கையிற்பற்றி வீராவேசங் கொண்டெழுவார் மனம் எவ்வளவு கொடுமையாயிருக்குமோ அவ்வளவு தீமையுடையதாயிருக்கும்.

*கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*யெல்லா வுயிருந் தொழும்.*

கொலைசெய்யாதவனும் மாமிசம் புசியாதவனுமாயுள்ளோன் உயர்ந்தோனுவன். இப்பேரருளுடையோன் மறுமையில் தேவரிற் சிறந்திருப்பானுதலின் எல்லாராலும் வணங்கப்பெறுவான்.

*அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற*
*னுயிர்செகுத் துண்ணாமை நன்று.*

குடங்குடமாக நெய்களைச்சொரிந்து அநேக பசுபந்த யாகங்களைச்செய்து அதனுலாகும் பலனை விரும்புவதைப்பார்க்கிலும் ஓர் சீவசெந்துவின் உயிரைப்போக்கி அதன் மாமிசத்தை யுண்ணுயின் மேலான பலனையடைவன்.

இதனுல் பசுபந்தயாகங்களை மறுத்து, ஒருயிரையுங் கொல்லாமையே நன்றெனச் சித்தாந்தப்படுத்தினுர்.

கள்ளுண்ணுமை.

*உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா*
*லெண்ணப் படவேண்டா தார்.*

மதுபானஞ் செய்யற்க செய்யவேண்டுமோனுல் சான்றோரால் மதிக்கவேண்டாராயின் செய்க. எனவே மதுபானம் சான்ருேர் செய்கையன்ரும். தீயோர் செய்கையாம்.

*துஞ்சினுர் செத்தாரின் வேறல்லர் ரெஞ்ஞான்று*
*நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.*

உறங்கினுர்க்கும் செத்தார்க்கும் பேதமின்ரும், அதுபோல நஞ்சுண்டார்க்கும் கள்ளுண்டார்க்கும் பேதமின்ரும். அறிவழிதலால்,

1. கொலை ... பாவத்தை விளைக்கும்.
2. புலை ... தாமதகுணத்தையுண்டாக்கும்.
3. மதுபானம் ... அறிவையழிக்கும்.

கொலை களவு கள் காமம் கோபம் இவ்வைந்துமே மகாபாதகங்களாக விதிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வைந்தினையும் விட்டவருக்கே திருவருள் மலையிலக்காக வெளிப்படும்.

கொலைகளவு கட்காமங் கோபம்விட்டார்க் கன்றே
மலையிலக்கா நின்னருள் வாய்க்கும் பராபரமே.

என்ற தாயுமானசுவாமிகள் பாடலாற் கண்டுணர்க.

ஆதலால் ஆரியவேதத்துள் கொலை புலை மதுபானமென்கிற இம்மூன்றும் பசுபந்தயாகத்தில் சுவர்க்கப்பேற்றின் பொருட்டுச் செய்யும்படி விதிக்கப்பட்டிருக்கின்றன.

மகாபாதகங்களைச்செய்து அதனாலுண்டாகும்பயன் சுவர்க்கப்பேறேயாயினும் அது தீமையையேயாம். அதனைச் செய்யப்படாதெனத் திராவிடவேதத்தில்,

நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்.

என்னுந்திருக்குறளில் மறுக்கப்பட்டது. அங்ஙனமாயின்,

திருஞானசம்பந்தசுவாமிகள் திருவாலவாய்
நாலடிமேல் வைப்பு.

வேதவேள்வியை நிந்தனைசெய்துழ
லாதமில்லி யமணொடுதேரரை
வாதில்வென்றழிக் கத்திருவுள்ளமே
பாதிமாதுட னாயபரமனே
ஞாலநின்புக ழேமிகவேண்டுந்தென்
னாலவாயி லுறையுமெம்மாதியே.

என வேதவேள்வியை நிந்தனை செய்யப்படாதெனக் கூறியிருப்பதனால் அவர்கள் அவ்வேள்வியை ஒப்புக்கொண்டார்க

ளென்பதற்கு ஐயமுண்டோ? இல்லாதிருக்க், நீர் அதை எங்ஙனமறுக்கக்கூடுமெனின்? அவர்கருத்ததுவன்றும். வேறென்னையெனின்? வேதம் என்பதற்குத் தாதுப்பொருள் வித் என்பதாம். (வித்=ஞானம்) ஆகவே ஞானவேள்வியென்பது பெறப்பட்டது. இதன்விளக்கம் சூக்குமவேள்வியிற் கூறப்பட்டிருக்கின்றது ஆங்கறிந்துணர்க.

கோயில் பண் - குறிஞ்சி.

*பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரி யோம்புஞ்*
*சிறப்பர்வாழ்தில்லைச் சிற்றம்பலமேய*
*பிறப்பில்பெருமானைப் பின்றாழ்சடையானை*
*மறப்பிலார்கண்டீர் மையறீர்வாரே.*

இங்ஙனம் பசுபந்த வேள்வியை வெளிப்படையாகக் கூறியிருக்கின்றாரே இதற்கென்ன சமாதானஞ் சொல்லப்போகிறீர் எனின், பசுவேட்டெரி என்றது ஹிம்ஸாவேள்வியைக் குறித்ததன்றாம். பின்னை யெதைக்குறித்தது? எனின், அதன் பொருளைவிளக்குதும் கேண்மின்.

இ - ள். எங்கும் - விடயங்களெங்கணும், பறப்பை-பரந்தெழு மனோவெழுச்சியை, படுத்து - கெடுத்து, (எனவே ஜீவபோதத்தை யொழித்து,) பசு - சீடனது ஆன்மாவை, வேட்டு - நாடி சந்தானத்தால் தன்னுடன் புணர்த்தி, (எனவே மலத்திலழுந்தியுள்ள ஆன்மாவைச் சிவத்திலழுந்தச்செய்து) எரி - ஞானச்சுடரைவிளக்கி, ஓம்பும் - பாதுகாக்கும், சிறப்பர் - சிறந்துள்ள சைவாசாரியர்கள், வாழும் - வசிக்கும், தில்லை - சிதம்பரத்தில், சிற்றம்பலமேய-சிற்சபையிலெழுந்தருளியிருக்கும், பிறப்பில் பெருமான் - தாயின் கருப்பவாசத்திற்குட்படாத பெரியோனை, பின்றாழ் சடையானை - பின்புறத்துத் தொங்கும் சடையையுடையவனை, மையல்தீர்வார் - பதி நிச்சயார்த்தத்தில் மயக்கமற்றவர்கள், மறப்பிலார் -(ஒருபோதும்) மறக்கமாட்டார்கள், கண்டீர் - என்றுணர்வீராக எ - று.

(கருத்து.)

தம்மை வந்தடுத்த சீடனது சீவபோதத்தை யொழித்துச் சிவ தீட்சாக்கிரமத்தால் சிவ பதத்திலிருத்தும் சைவாசாரியர்கள்வாழும் சிதம்பரத்தில் சிற்சபையிலெழுந்தருளி யிருக்கும் சிவபெருமானைக் கற்றுணர்ந்தோர் மறவார் என்பது பொருளாம்.

இதனால் பசுவேட்டெரி என்றது ஞானவேள்வியேயன்றிக் காமியவேள்வியன்றாம். இதைக் காமிகாகமம்பிராயச்சித்தப்படலத்தும், பௌஷ்க்கராகமம் பசுபடலத்தினும், சித்தாந்த சாராவளி கிரியாபாதத்திலும் வாசித்துணர்க.

திருப்பஞ்சாக்கரப்பதிகம் - காந்தாரபஞ்சகம்.

ஊனிலுயிர்ப்பை யொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினை யேற்றிநன்புலத்
தேனைவழிதிறந் தேத்தவல்லார்க்கிட
ரானகெடுப்பனவஞ்செழுத்துமே.

என்று கூறினமையின் இவர் கூறுங்கூற்றெல்லாம் ஞானப்போக்காகவே யிருக்குமேயன்றி காமியங்களின் கருத்தன்றாம்.

திருஞானசம்பந்தசுவாமிகள் பசுவினைக்கொன்று செய்யும் யாகத்தை வெளிப்படையாகக் கூறியிருப்ப, அதை மறைத்துத் தமக்கு இஷ்டமானவாறே பொருள் கூறுவது பொருந்தாத காரியமெனின்? தேவாரதிருவாசகங்கள் மறைகளன்றோ அவைகளிற்கூறும் "பேயோடாடி" "சுடலையாடி" "கோயில்சுடுகாடு" "பூதநாதன்" "பித்தன்" "பெரும்பித்தன்" என்ற பதங்களுக்கு என்னபொருள் கூறுவது? இவைகள் வெளிப்படைப்பொருளோ? மறைபொருளோ? அதுபோல மறைபொருளேயாமென்க. மதுமாமிசத்தி விச்சையுள்ளவர்கள் பசுப்பந்தவேள்வியில் செய்யும் பசுக்கொலை ஹிம்சையாகாதே

னக் கூறுகிறார்கள். (மநு. 5-39) அதை அறிவுடையோர் சித்தாந்தமாகக்கொள்ளார்.

திரிகடுகம்.

ஊனுண் டுயிர்கட் கருளுடையே மென்பானுந்
தானுடன்பா டின்றி வினையாக்கு மென்பானுங்
காமுறு வேள்வியிற் கொல்வானு மிம்மூவர்
தாமறிவர் தாங்கண்ட வாறு.

என்பதுமதுவாம். நம்மை யெல்லாம் உண்டாக்கினவர் பிரமாவன்றோ? அவரால் வேதத்தில் விதிக்கப்பட்டபடி நாம் நடக்கவேண்டியதன்றோ? எனின், ஈசுரன் நமக்கு அறிவினைக்கொடுத்திருக்கிறார் அதைக்கொண்டு இந்தப்பசுபந்தயாகம் எதற்காகச் செய்யவேண்டுமென்று ஏன் விசாரித்தொழிக்கப் படாது?

மநுதர்மசாத்திரத்தினும் கொலை புலை மறுக்கப்பட்டிருக்கின்றன. வருமாறு.

மநு 5-51. இதில் 1. சீவர்களைக் கொல்லச்சொன்னவன், 2. கொன்றவன், 3. மாமிசத்தைச் சேதிக்கிறவன், 4. அதைவிற்கிறவன், 5. அதை வாங்குகிறவன். 6. அதைச்சமைக்கிறவன், 7. பரிமாறுகிறவன், 8. புசிக்கிறவன் இவர்களனைவரும் காதகர்களென்று சொல்லப்படுகிறார்கள்.

5-53. உயிருள்ளளவும் எவன் மாமிசத்தைப் புசியாதிருக்கிறானோ அவன் 100-அசுவமேதயாகஞ்செய்தவனுக் கொப்பாவான்.

5-54. மாமிசத்தை நீக்குகிறவன் எந்தப்பலனை யடைகிறானோ அதைப் பழம் கிழங்கு சாவியன்னம் இவைகளால் ஜீவிக்கிற முனியும் அடையமாட்டான்.

5-55. நான் எதன்மாமிசத்தை இம்மையில்சாப்பிடுகிறேனோ அது இறந்தபின் என்னைப்பட்சிக்கிறது. என்பதனாற் காண்க.

# III. ஈதல்.

ஈதலென்பது கொடையாம்.

ஈகைதான மிடுகைகவிகை
வேள்விவண்மை தியாகம்வேளாண்மை
யுதாரங்கடப்பா டுபகாரங்கொடையெனல்.

என்னும் பிங்கலந்தையானுணர்க. இது இருபிறப்பாளராயுள்ள முதன் மூன்றுவருணத்தாருக்கும் விதிக்கப்பட்ட வைதிக கருமங்களுள் ஒன்றாம்.

## அந்தணரீகை.

முதலாவது அந்தணரீகையை விசாரிப்போமாக.

அந்தணருக்கு ஜீவனவகையாயுள்ளது உஞ்சவிருத்தியே யன்றிச் சுதந்தரவிருத்தியின்றாம். அதனால் அந்தணர் தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஏற்றல் என்னும் இலௌகிக கருமத்தாற் பொருள்தேடி ஈதல் என்னும் வைதிக கருமத்தை நடத்தவேண்டும். தங்கள் ஜீவனத்துக்கே ஏற்றலால் வரும்பொருள் சாலாதிருப்பதால், அவர் பிறருக்குக்கொடுக்க இயலாதாம். ஒருக்கால் இயையினும் அது சிறுபான்மையாதலால் சிறப்புடையதன்றாம்.

## அரசரீகை.

இரண்டாவது அரசனது ஈகை பெருமிதமாயுள்ளதேனும், அது எளியோர்க்கு எளிதிற்பெறுதற்கு முடியாதாம். கற்றுணர்ந்தோர்களே இராஜபேட்டிக்காக வெகுகாலங் காக்கவேண்டியிருத்தலின், எளியோர்கள் தங்களுக்கு வறுமைநேரிட்டகாலத்துத், தடையின்றி அரசனிடத்து நெருங்குதற்கு இடங்கொடாதாம். ஒருக்கால் அரசனைச் சந்திக்கப்பெறினும், அவன் நிமித்தமில்லாமலே பொருளை வாரி வழங்கமாட்டான். சுபாசுபங்களினும் யாககாரியங்களினும் தானஞ்செய்வான்.

அவ்வரனுசல் பெருமிதமாகக் கொடுக்கப்பட்ட கொடையினையும் விவேகமுள்ளவேதியர்கள் பாவத்தை விளைக்குமெனக் கொள்ளார்கள். அதற்குப் பிரமாணமென்னை? எனின்,

விஷ்ணுதருமோத்திரம்.

𑌦𑌶𑌸𑍂𑌨𑌿𑌸𑌮𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑍀 𑌦𑌶𑌚𑌕𑍍𑌰𑍀𑌸𑌮𑍋𑌧𑍍𑌵𑌜𑍀
𑌦𑌶𑌧𑍍𑌵𑌜𑌿𑌸𑌮𑌾𑌵𑍇𑌶𑍍𑌯𑌾 𑌦𑌶𑌵𑍇𑌶𑍍𑌯𑌾 𑌸𑌮𑍋𑌨𑍃𑌪𑌃 ॥
𑌦𑌶𑌸𑍂𑌨𑌾𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌯𑍋𑌵𑌾𑌹𑌯𑌤𑌿 𑌸𑍌𑌨𑌿𑌕𑌃 ।
𑌤𑍇𑌨𑌤𑍁𑌲𑍍𑌯𑌸𑍍𑌤𑌤𑍋 𑌰𑌾𑌜𑌾𑌘𑍋𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑌃

దశసూనిసమశ్చక్రీ దశచక్రీసమో ధ్వజీ।
దశధ్వజసమా వేశ్యా దశవేశ్యాసమో నృపః।
దశసూనాసహస్రాణి యోవాహయతిసౌనికః।
తేనతుల్య స్తతో రాజా ఘోర స్తస్మాత్ప్రతిగ్రహః॥

தஶஸூநிஸமஸ் சக்ரீ தஶசக்ரீ ஸமோத்வஜீ
தஶத்வஜீஸமா வேஶ்யா தஶஸ்வேஶ்யா ஸமோநிருபஃ
தஶஸூநா ஸஹஸ்ராணி யோவாஹயதி ஸௌநிகஃ
தேநதுல்ய ஸ்ததோராஜா கோரஸ் தஸ்மாத் பிரதிகிரஃ

இ-ள். சூனனென்பவன் கொலையாளி அல்லது ஊன்விற்போன். அவன் மகாபாவியாவன். சூனனிற்பதின்மடங்கு பாவமுள்ளவன் செக்கான். செக்கானிற் பதின்மடங்கு பாவமுள்ளவன் கள்விற்பவன். கள்விற்பவனில் பதின்மடங்கு பாவமுள்ளவர் விலைமாதர். விலைமாதரிற் பதின்மடங்குபாவமுள்ளவன் அரசனும்.

பதினாயிரம் சூனபாவத்தை எவன் சுமக்கின்றானோ அவன் சௌனிகன். அரசன் அவனுக்கொப்பாவன். ஆதலின் அரசனிடத்திருந்து பெறுங்கொடை பெரும்பாவத்தை விளைவிக்கும். அதனால் அரசன்கொடை, சிறப்புடையதன்றாம்.

### சூத்திரரீகை.

சூத்திர ரீகையோ என்றால் அதுவும் மேற்கூறியவாறும். எங்ஙனமெனில்? முதலாவது அறுதொழிலுள் ஒன்றாகிய கொடுக்குமதிகாரம் வேதத்துள் சூத்திரருக்கு விதிக்கப்படவில்லை. ஒருவேளை அவர்கள் கொடுக்கநேரினும், மேல்குலத்தாராயுள்ள இருபிறப்பினர் அவரிடத்துத் தானம் ஏற்கலாகாது.

வியாசர்.

𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑌿𑌭𑍍𑌯𑍋 𑌧𑌨𑌂 𑌲𑌿𑌪𑍍𑌸𑍇𑌤𑍍 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 |
𑌅𑌪𑌿 𑌵𑌾 𑌜𑌾𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑍋 𑌨 𑌤𑍁 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌤𑍍 𑌕𑌥𑌂𑌚𑌨 ||

ద్విజాతిభ్యోధనంలిప్సె త్ప్రశస్తేభ్యోద్విజో త్తమః
అపివాజాతిమాత్రేభ్యో నతుశూద్రాత్కథంచన

திவிஜாதிப்யோதநம்லிப்ஸேத் பிரஸஸ்தெப்யோதிவிஜோத்த
அபிவாஜாதிமாத்ரேப்யோநது ஸூத்ராத்கதஞ்சன. [மஃ

இ-ள். இருபிறப்பாளர் மூவருள்ளுஞ் சிறந்த அந்தணன் ஒருவன் தனத்தைத் தானமாக ஏற்றலுக்கு அதிகாரியாவன். அவ்வந்தணன் அச்சிறந்த இருபிறப்பாளரிடத்திலேயே பொருளைப்பெற விரும்பவேண்டும். இல்லையேல் சாதிமாத்திரையால் இருபிறப்பாளராயிருப்பினும் அவரிடத்திலாவது அவ்விருப்பஞ் செலுத்தலாம். எவ்வளவு துன்பம்வந்தபோதிலும் சூத்திரனிடத்தில் பொன்னை விரும்பலாகாது.

மநு.

𑌨𑌯𑍋𑌗𑌾𑌰𑍍𑌥𑌂 𑌧𑌨𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌤𑍍 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌽𑌭𑌿𑌕𑍍𑌷𑍇𑌤 𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌤𑍍 |
𑌯𑌜𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑌿 𑌭𑌿𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌵𑌾 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌃 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌜𑌾𑌯𑌤𑍇 ||

నయోగార్థంధనంశూద్రాత్ ద్విజోభిక్షేతధర్మవిత్।
యజమానోపిభిక్షిత్వా చండాలఃప్రేత్యజాయతే॥

நயோகார்த்தந்தநம்ஸூத்ராத் திவிஜோபிக்ஷேத தர்மவிது
யஜமாநோபிபிக்ஷித்வா சண்டாலஃபிரேத்யஜாயதே.

இ-ள். தருமத்தை யறிந்த இருபிறப்பாளன் சூத்திரனிடத்தில் பொன்னை வேள்வியின் பொருட்டு இரக்கலாகாது. வேள்வித்தலைவனாயினும், அங்ஙனம் இரத்தலைச்செய்தால், இறந்தபின் சண்டாளனாகப் பிறப்பான். மேற்கூறியவற்றால் சூத்திரரீகை தீயதெனவிலக்கப்பட்டது.

வைசியரீகை.

வைசியர் கொடையோவெனின், அதையுஞ் சற்றேவிசாரிம்போமாக.

ஆரியத்தில் வைசியரென்பதைத் திராவிடத்தில் வேளாளரெனக்கூறுவர். வேளாளரென்பதற்குப் பொருள் உபகாரிகளென்பதாம்.

புரவலனீகையாளன் போற்றும்வேளாளன்றியாகி
யுரைசெழுவேள்வியாள னுபகாரிகொடையுளோனும்
வரைவறக்கொடுத்தளிப்போன் வள்ளியோனென்றுங்கூறு
மிரவலன்பரிசிலாளன் யாசகன்றீனனேற்போன்.

என்னுஞ் சூடாமணி நிகண்டானுணர்க. இதனால் வேளாளரென்பது காரண இடுகுறிப்பெயராயிருத்தலின், ஈதல் என்பது அவ்வருணத்தாருக்குக் கூறுதலையும். இதனலன்றே திராவிட வேதமாகிய நாயனார் குறளில்,

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்.

என்னுஞ் செய்யுள் கொடுக்கற்பாலார் கொடையெல்லாம் வேளாளர் கொடையின் கீழடங்கியதெனக் கூறுகின்றது. பின்னும் தேவாரத்தினுள்ளும்,

திருஞானசம்பந்தசுவாமிகள், திரு ஆக்கூர் பண் - சீகாமரம்.

வாளார்கண்செந்துவர்வாய் மாமலைபான்றன்மடந்தை
தோளாகம்பாகமாப் புல்கினான்றன்கோயில்
வேளாளரென்றவர்கள் வள்ளன்மையான்மிக்கிருக்குந்
தாளாளராக்கூரிற் றான்றோன்றிமாடமே.

என்னுஞ்செய்யுளில் வேளாளர் என்பவர் வள்ளற்றன்மையுடையாரெனப் பொதுவகையாகக்கூறியருளினார். இதற்கு இலக்கியமாக,

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருப்புகலூர் பண் - கொல்லி.

மிடுக்கிலாதானைவீமனேவிறல்விசையனே வில்லுக்கிவனென்றுங்
கொடுக்கிலாதானைப்பாரியேயென்று கூறினுங்கொடுப்பாரிலை
பொடிக்கொண்மேனியெம்புண்ணியன் புகலூரைப்பாடுமின்புலவீர்
ளடுக்குமேலமருலகமாள்வதற் கியாதுமையுறவில்லையே. [கா

என்னுஞ்செய்யுளில் கடை எழு வள்ளலில் ஒருவனாயுள்ள பாரியென்னும்வேளாளன் தன்மையைச் சிறப்புவகையால் எடுத்தோதினர். பின்னும் இப்பாரி என்னும் வள்ளலைப்பற்றிச் சங்கப்புலவருள் ஒருவராகிய கபிலரும்,

பாரிபாரி யென்றுபலவேத்தி
யொருவற்புகழ்வர் செந்நாப்புலவர்
பாரியொருவனு மல்லன்
மாரியுமுண்டீண் டுலகுபுரப்பதுவே.

என்றுபாடியிருக்கின்றார். இதனால் பாரிபாரியென்று அவ்வொருவனையே செந்நாப்புலவர்கள் புகழ்வர். பாரி ஒருவனுமேயல்லன்; மாரியுமுண்டு இவ்வுலகத்தைக் காப்பதற்கென்றார். ஆகவே உலகத்தை மாரிகாப்பதுபோலும் பாரிகாத்தனன் எனப்பொருளாகின்றது.

திருஞானசம்பந்தசுவாமிகள் வாக்கியத்திற்கிலக்கியமாக, பின்னும் கடையெழுவள்ளலில் ஒருவனாகிய ஆய் என்னும்

வேளாளனைச் சங்கத்தாருள் ஒருவராகிய உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்பாடியிருக்கிறார்; அச்செய்யுள் வருமாறு.

முன்னுள்ளுவோனைப் பின்னுள்ளினேனே
யாழ்கென் னுள்ளம் போழ்கென் னாவே
பாழூர்க்கிணற்றிற் றூர்கவென்செவியே
நரந்தைநறும்புன் மேய்ந்தகவரி
குவளைப்பைஞ்சுனை பருகியயல
தகரத்தண்ணிழற் பிணையொடுவதியும்
வடதிசையதுவே வான்றோயிமயந்
தென்றிசையாஅய் குடியின்றாயிற்
பிறழ்வனமன்னோவிம் மலர்தலையுலகே.

இ - ள். யாவரினும் முன்னே நினைக்கப்படுவோனைப் பின்னே நினைத்தேன். யான் அவ்வாறு நினைந்த குற்றத்தால் என்னுள்ளம் அமிழ்ந்திப்போகக்கடவது. அவனையன்றிப் பிறரைப் புகழ்ந்த நாவுங் கருவியாற் பிளக்கக்கடவது. அவன்புகழன்றிப் பிறர் புகழைக் கூறக்கேட்ட எனதுசெவியும் பாழ்ங்கிணற்றைப்போலத் தூர்க்கடவது. மான்கள்வசிக்கும் வடதிசையிலுள்ள மகமேருவும் தென்றிசையிலுள்ள ஆய்குடியுந்தாங்கிற்றில்லையாயின், இவ்வுலகம் கீழ்மேலாகப்புரண்டுவிடுமென்பது பொருளாகின்றது. வடதிசை தேவருலகோடு ஒத்தலான் இமயத்தால் தாங்கவேண்டுவதில்லை. தென்றிசைக்கண் ஆய்குடி தாங்கிற்றில்லையாயின் இவ்வுலகு பிறழும். அதனால் இமயத்துக்கு முன்னுள்ளப்படுவோனைப் பின்னுள்ளினமையின் என்னுள்ளம், ஆழ்கவென்றார்.

இனி "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும், உழவிடை விளைப்போர்" என்ற சிலப்பதிகாரம் நாடுகாண்கதையினுங்காண்க.

ஏரெழுபது.

நாவலோநாவலென நாடறியமுறையிட்ட
வேவலோர்போர்க்களத்தி லெதிர்நிற்பார் முத்தமிழ்தேர்

பாவலோரிசைவல்லோர் பற்றடையபதினெண்மர்
காவலோரெல்லோருங் கையேற்கும்பொருட்டாலே.

இதனால் கவிவாணர், ஏவலர் பதினெண்குடிமக்கள் அனைவரும் வேளாளன் கொடையையே பெறுகிறார்கள் என்றுதெரிகிறது. பின்னும்,

பார்வேந்தர்பெருஞ்செல்வம் பழுதுபடாதொருநாளு
மோர்வேந்தர்பெருஞ்செல்வ மழிவுபடாதிருத்தலினாற்
றேர்வேந்தர்போர்க்களத்துச் சிலர்வெல்வர்சிலர்தோற்ப
ரேர்வேந்தர்போர்க்களத்து ளிரப்பவருந்தோலாரே.

இதனால் அரசன் யுத்தஞ்செய்யுங்காலத்து அவன் போர்க்களத்தில் சிலர் வெற்றிபெறினும் சிலர் தோற்பார். வேளாளரது போர்க்களத்தில் வந்த யாசகரும் தானம்பெறுதலால் வெற்றி பெறுவர். எனவே எல்லாரும் பயனை யடைவரென்பதாயிற்று.

## திருக்கைவழக்கம்.

கல்லார்களென்னுமற் கற்றோர்களென்னும
மெல்லாரையுங்காத்தி டேற்றுங்கை-வல்லமைசேர்
மைம்மாமுகிலுலகைவாழ்விக்கு மேன்மேலுங்
கைம்மாறிலாதளிக்குங் கற்பகக்கை-சும்மையா
முருணிகீர்போ லுலகத்தவர்க்கெலாம்
பேரறிவாலீயும் ப்ரதாபக்கை-பாரி
லுடுக்கையிழந்தவன் கைபோலவாங்கே
கொடுக்கவிசைந்த குளிர்கை-யிடுக்கணினன்
மாமறையோர்மன்னர் வருவினைமூர்சங்கரர்க்குத்
தாமரையாமற் கொடுத்துத்தாங்குங்கை-மாகளத்தி
லேற்கவந்தவருந்தல்ருக் கில்லையென்னாதுநெல்லைக்
கார்க்கையினான்முக்கையிட்ட கற்பகக்கை-தீர்க்கமுடன்
செய்பொன்விளைகளத்தூர் செந்நெல்விளைந்தவனை
நம்பிமறையோர்க்களித்த நாணயக்கை,,
வையகமெங்குந்தேடி வந்ததமிழோன்புகழச்
செய்யமுடியைக்கொடுத்த செம்பொற்கை,,

மூக்கிற்புகழ்புரிந்த மூதாவின்வாயிடத்து
நீக்கியபைநாக்கதனி னீட்டுங்கை.

என்றுங் கூறியிருத்தலால் இரந்தவர்க்கு இல்லையென்னுமற் கொடுத்தற்றொழில் வேளாளரிடத்தே யுள்ளதெனத்தெரிகின்றது.

வரையாது கொடுக்குங்கொடை.

கொண்டலைநிகர்க்கும்வேளாண் குடியொடுதழீஇயதொண்டை
மண்டலசதகந்தன்னை வளமையால்வகுப்பதற்குப்
புண்டரநுதலிரண்டு புயமிசையிருந்திரண்டு
குண்டலநிகரிரண்டு குமரரைவணக்கஞ்செய்வாம்.

இதனால் வேளாளர் பிறரிடம் பயனைக்கருதாது மேகத்தைப் போலுங் கொடுப்பவர் என்பது பெறப்பட்டது.

யாசிக்க நாணுபவர்க்குக் கொடுக்குங் கொடை.

நீணிலத்திலுறுமேழைமாந்தரீர் நீவிர்வேண்டுவனவின்புறீஇ,நேரிற்கேண்மினவைதருவன் யானலதுங்கிளைவிலுன்னுமவைநவிலகீர்,—நாணிலென்னுடைய மனைமுன்வாயிறனினன்மணன்மிகுதிகொட்டியே, நான்பரப்பியுமிருக்கிறேனதனி னாடிவந்ததனையெழுதுமின்,—காணிலங்குடனேயருள்வனென்னவவன் கட்டளைப்படிதிட்டமாக், கையினாலெழுதவுவகையோடுபொருள் கண்டளித்தப்ரபுவாரெனிற்,—பூணிலங்குவரநதிகுலத்தில்வரு புண்யனானவதிகண்யனும், புல்வர் போற்றுமாகறலின்மேவுமெழில் புண்யகோடியெனும்பூபனே.

உணவைப்பசும்பொன்முதலானவற்றை யுதவிப்பின்னுங் ,
குணலச்சையுள்ளவர்கேட்கவுங் கூசுவர்கொல்லெனவே
யெணலைக்கருதியெழுதிவைப் பீரெனவின்மறைந்து
மணலைப்பரப்பியமுன்றிலுளான் றொண்டைமண்டலமே.

இதனால் வந்த யாசகர்களுக்கு உண்பொருள் பசும்பொன் மணி யாடையாபரணமுதலிய வேண்டுவனவற்றைக் கொடுப்பன் கேண்மின்! என்றும்,ஒருகால் கேட்கக்கூசுவீராயின்,என் முன்றிலில் மணலைப்பரப்பியிருக்கிறேன், அதில் நுமக்குவே

ண்டுவெனவற்றை யெழுதினல் கொடுப்பேனென்று மறைந்திருந்து கொடுப்பவனுமுண்டு. அவன்யாரெனின் மாகறலின் கண்வாழும் கங்காகுலதிலகனுகிய புண்ணியகோடியென்னும் பூபனும்.

அடையாதவாசலுடையான்கொடை.

கடைவாயிலினின் றியாசகர் கூப்பிடக்காதிலது
தடையாகவெம்பசியால்வருந்தாமற் றடையகற்றி
யடையாதவாசலுடையானெனும் பெயராதரித்தான்
மடையார்கழனியிடையாலத்தான் றொண்டைமண்டலமே.

வீட்டின்வாயில் அடைக்கப்படின் யாசகர்கள்வந்து கூப்பிடுஞ்சொல், காதில் கேளாமல் தடைபடும். அதனுல் அவர்கள் பசியால் வருந்துவர்களென்று நினைத்து, யாசகர்கள் தடைபடாதுண்டுகளிக்கும்படி கதவினைத்திறந்து வைப்பன். அவன் யார் என்றால், இடையாலம்பதியில் வாழும் வேளாளப்பிரபு.

பஞ்சந்தெளியும்வரை யீயுங்கொடை.

கோனூருழவுக்குடியானவன் றன் குமிழம்பட்டு
வேலூர்க்கிழானெருவேளாளன் பஞ்சம்விடுமளவும்
நாலூரிலுள்ளபுலவோர்க்குந்தேசத்து நாவலர்க்கு
மாலூரிலன்னங்கொடுத்தளித்தான் றொண்டைமண்டலமே.

பஞ்சம் வந்தகாலத்து நாலாமூர்களிலிருந்து வந்த வித்துவான்களையெல்லாம் அன்னமுதலியவை கொடுத்தாதரித்துப், பஞ்சந்தெளிந்தவுடன் பரிசு கொடுத்தனுப்பினன். அவன்யாரெனின், குமிழம்பட்டிலுள்ள வேளாளனும்.

மதுரைக் கடைச்சங்கத்தார் காலத்துப் பாண்டியன் அரசாளும்பொழுது பஞ்சம் வந்தது. அப்பொழுது அரசன் புலவர்களையழைத்து நீவிர் பஞ்சந்தெளியுமளவும் வேற்று நாட்டில்வசித்துப் பின்வருதிர் என்றுகூறிப் போகவிடைகொடுத்தான் என்று ஆசிரியர் நக்கீரனர் அகப்பொருளுரையில்

கூறினர். இதனோடு வேளாளன் வள்ளன்மைக்குணத்தை யொப்பித்து ஏற்றம் அறிந்துகொள்க.

### தானில்லாக்காலத்து மீயுங்கொடை.

பன்னுந்தமிழ்க்கவன்மா மனைத்தாதிபரிசளிப்ப
முன்னம்பிகாளிக்குநெற்குன்றவாண முதலியென்போன்
பின்னுஞ்சிலபலபொன்னுங் கொடுத்துத்தன்பேர்நிறுத்த
மன்னுந்தமிழுமுரைத்தானவன் றொண்டைமண்டலமே.

நெற்குன்றவாணமுதலியார் வீட்டில் காளமேகப்புலவர்வந்து முதலியார் வீட்டிலிருப்பதாகக்கருதி அவர்பேரில் தமிழ்க்கவிதை சொல்லக்கேட்ட அவருடைய தாதியானவள் ஓடிவந்து அவ்வித்துவானுக்குபசரித்துத் தக்க பொன் முதலிய பரிசுகளையளித்து முதலியார் வருவாரென்றுசொல்லிச் சென்றவளவில், முதலியாரும் வெளியேயிருந்துவந்து வேண்டியபரிசுகளை அவ்வித்துவானுக்குக்கொடுத்தார்.

### பொன்னெல்லையும் செந்நெல்லாக அளிக்குங்கொடை.

நன்றாய்விளைந்ததைவேதியர்க்கீந்தந்த நன்மையினாற்
பொன்றான்விளைந்திட நெற்போலவேயதைப்போரடித்துக்
குன்றாக்குவித்ததைநெற்பரிமாற்றங் கொடுத்தளித்தான்
மன்றார்களந்தைக்குடிதாங்கியுந் தொண்டைமண்டலமே.

களத்தூரில் குடிதாங்கிமுதலியாரென்பவர், தமது வயலின்கண் நன்றாய் விளையப்பட்ட நெல்லையெல்லாம் வேதியர்களுக்கே தானங்கொடுப்பதென்று விரதம்பூண்டு நடந்தேறிவருங்காலத்து, ஈசுரன் அவரது கொடைப்பெருமையை வெளிப்படுத்துநிமித்தம் ஓர்வருடம் நெற்கதிர்களெல்லாம் பொற்கதிர்களாக விளையச்செய்தனர். அப்பொற்கதிர்களிடத்துத் தாம் ஆசைகொள்ளாது, அப்பொன்னையும் நெற்போலவே யடித்துத் தூற்றிக்குன்றுபோலக் குவித்து, நெல் கொடுக்குமளவாகவே வேதியர்களுக்குத் தானங்கொடுத்தார். இக்காரணத்தால் அவ்வூரிற்கு, பொன்விளைந்த களத்தூரென்று நாளைக்கும் பெயர் வழங்கிவருவதைக்காணலாம்.

பாண்டியனைவென்று அவனரசைப் பாணற்கீயுங்கொடை.

பாண்டியனைப் போர்மாற்றிப் பாணற் கரசளித்த
வாண்டகைமையென் றுன்னை யறியேனே—மூண்டெழுந்த
கார்மாற்றுஞ் செங்கைக் கடகரிவா ணவுனது
பேர்மாற் றுவதரிதோ பேசு.

இது ஏகம்பவாணரைக்கண்டபோது அவர்பேரில் கம்பர்பாடிய கவியாம்.

இதனால் ஏகம்பவாணரென்னும் ஓர் வேளாளப்பிரபு தன்னை அவமதிப்பாகப்பேசின பாண்டியனைப்பிடித்துச் சிறையிலிட்டு, அவனுடைய அரசையும் பாண்டிநாட்டையும் பாணனாகிய ஓர் வித்துவானுக்குக் கொடுத்தாரென்பது காண்க.

யானைக்கொடை.

உலைக்குரிய பண்ட முவந்திரக்கச் சென்றாற்
கொலைக்குரிய வேழங் கொடுத்தான்—மலைக்குரிய
வாணர்கோ னறை மகதே வனுக்கிந்தப்
பாணன்மே லென்ன பகை.

இதனால் பாணனென்னும் ஓர் வித்துவான் ஆறைப்பதி ஏகம்பவாணரிடத்துச் சாப்பாட்டுக்குவேண்டிய பண்டங்கொடுப்பரென்று பாடிக்கொண்டு போனான். அதற்கு அவர் ஓர் யானையைப் பரிசாகக்கொடுத்தார் என்று தெரியவருகிறது.

குதிரைக்கொடை.

கூற்றூர்புலவனொருபரிகேட்பக் கொடைமதத்தா
லாற்றூர்கிழான்பரியாயிர மீந்தனனாதலினால்
வேற்றூர்பலவிதுகம்மூரெனும்படி வெம்பசியை
மாற்றூர்பலவுளமண்டலங்காண் டொண்டைமண்டலமே.

இதனால் கூற்றூரிலுள்ள ஓர்வித்துவான் ஆற்றூரிலுள்ள ஓர் வேளாளப்பிரபுவினிடத்து ஓர் குதிரை வேண்டுமென்று கேட்டான். ஓர் குதிரைகொடுத்தால் நம்முடைய கௌரவத்து

க்குக் குறைவென்று ஆயிரம்பரிகளைக்கொடுத்தார் எனத்தெரியவருகிறது.

### ஆனிரைக்கொடை.

கொல்லையிற்பாற்பசுமேய்ப்போன் கறப்பவன்கொண்டுசென்றே
யெல்லையிற்சேர்ப்பவன்பாலடுவோ னிவரித்தனையுஞ்
சொல்லையிற்பாவலனோரோர்கவி சொல்லச்சொல்லிநல்கும்
வல்லையிற்காளத்திவாழ்வானதுந் தொண்டைமண்டலமே.

இதனால் வல்லத்துக் காளத்திமுதலியாரிடத்தில் ஓர்வித்துவான் பசு வேண்டிவந்தான். அவருக்கு ஷை முதலியார் ஆனிரையும் பொன்னும் பரிசளித்தார். இவர் கவிக்குக், கொல்லையிற் பசுநிரை மேய்ப்பவன், கறப்பவன், கொண்டுபோமவோன், பால் காய்ச்சுவோன், இவர்களும் உபசரித்து ஒவ்வொருபசு வளித்தார்கள் என்று தெரியவருகின்றது.

### அரசன் மகவைக் கொல்லவந்தவனுக்குத் தன் மகவை ஈயுங்கொடை.

வெங்கொலைக்கஞ்சியடைக்கலந்தான்புக வேந்தன்மைந்த
னுங்கலையாமலொளித்துவைத்தே தன்னொருமகவை
யிங்கிவன்றானவனென்றே யடையலர்க்கீந்துவிட்டான்
மங்கலஞ்சேர்கிடங்கிற்பெருமான் றொண்டைமண்டலமே.

கொலை செய்யவருஞ் சத்துருக்களுக்கஞ்சி யடைக்கலப்புகுந்த இராஜகுமாரனைத் தன்வீட்டிலுள் ளொளித்துவைத்துவிட்டு, ஏகபுத்திரனாகிய தமது புத்திரனை இவன்றான் அவன் என்று, கொடுத்து, அரசபுத்திரனைக்காத்தவர் கிடங்கின்பெருமாள் முதலியார் என்பவராம்.

### தன்னை விற்றுக்கொடுக்குங் கொடை.

மிண்டரைவெல்லும்புகழ்ச்சிங்கராயன் விலைகொடுப்பத்
தண்டமிழ்மேகமுறத்தூரில் வேதியன்றானும்விற்பக்
கொண்டவன்பின்சென்றுமண்டலத்தே புகழ்கொண்டபிரான்
வண்டமிழக்கும்பனைதாரிபுந் தொண்டைமண்டலமே;

இதனுல் உறத்தூரிலுள்ள ஓர் பார்ப்பனவித்துவான் தனக்குப் பொருள்வேண்டி, வாயிலாமூர் வேளாளராயுள்ள கும்பமுதலியார்குமாரர் அனதாரியப்பமுதலியாரிடத்தில் வந்து யாசிப்ப, அவர் அக்காலத்தில் பொருளுதவ இயலாமையால், சிங்கவராயனென்னும் பிரபுவினிடத்தில் தன்னே விற்று வந்தபுலவருக்குப் பரிசுகொடுத்தனுப்பினர் எனத்தெரியவருகிறது.

தன் தலையைக்கொடுக்குங் கொடை.

புறவோடெற்றசைபோக்கியவேந்தன் புரிந்ததிலு
மறவோகொடிதுகொடிதுகண்டீ ரறனன்றுமற்றுப்
பிறவோமறுத்துரைசெய்யான் மிகுசிரம்பேர்த்துவைத்த
மறவோனைத்தாங்கியவையமன்றே தொண்டைமண்டலமே.

ஆலெங்கே யங்கே யரும்பறவை யாற்றயிலு
மாலெங்கே யங்கே மலர்மடந்தை—சோலைதொறுஞ்
செங்கே தகைமணக்குஞ் செங்குன்றை யெல்லனெங்கே
யங்கே யிரவலரெல் லாம்.

செங்குன்றையில் வாழும் எல்லன் என்னும் ஓர் வேளாளன், வந்த புலவர்கள் வேண்டுவனவற்றை யெல்லாம் வரையாது கொடுப்பானென்று கீர்த்தியடைந்திருக்க, அதைச்சோதிக்க ஒருவித்துவான் உன் தலையைக் கொடுக்கவேண்டுமென்று கேட்க, அவ்வெல்லன் உடனே தலையை யரிந்து அவனுக்குப் பரிசாகக்கொடுத்தான்.

தன்னுயிரைக் கொடுக்குங் கொடை.

ஈட்டாலமன்னவன்பின்னேயறிய வெனக்கெனமுன்
கேட்டான்தற்குமுன்சென்றதவ் வாருயிர்கேட்டவர்க்கு
நீட்டாவிடினுந்தனக்கென்ன கேட்பினுநெஞ்சமுய்ய
யீட்டாதிரண்டுமுன்கற்றிலதோ தொண்டைமண்டலமே.

முன் ஓர் காலத்தில் ஈட்டாலம் என்னும் ஊரில்வாழ்ந்த இல்லையென்னது கொடுக்கும் ஓர் வேளாளப்பிரபுவினது கொடைத்தன்மையைச் சோதித்தறியும்படி, அவரிடத்தே ஒரு பு

லவன்வந்து உமது உயிரைத்தரவேண்டுமென்று கேட்டான். அவன் கேட்பதற்கு முன்னமே யப்பிரபுவினுயிர்போயிற்று.

பிணத்தைமூடி யன்னமிடுங் கொடை.

தன்னுடன்கூடப்பிறந்த வருந்துணைத்தம்பியுயி
ரன்னிலைமாண்டதுதோன்றுமன் மூடிவைத்தன்னமிட்டான்
மன்னவர்போற்றிடவாழ் செங்கலங்கைவடுகனுக்குக்
கன்னனுஞ்சோமனுமோ விணையாகக்கழறுவதே.

இச்செய்யுளால் செங்கலங்கையென்னும் வாயற்பதியில் வாழும் வடுகநாதன் என்னும் ஓர் வேளாளப்பிரபு, தனது அருமைத்துணையாகிய சகோதரன் மாண்டிருக்கையில், அப்பிணத்தை மூடிவைத்துவிட்டு வந்த வித்துவானுக்கு அன்னமிட்டான் எனத்தெரியவருகிறது.

பிணத்தைமூடி மணத்தைச்செய்விக்குங் கொடை.

கெடுகவிரித்துப்பிண்மூடினேன்மக னீயெனில்வா
கடுகவெனக்குமுன்முந்தவென்றேயோர் கவிதைசொல்லி
முடுகவழைப்பமனையாள்பிணத்தினை மூடிச்சென்ற
வடுகனளித்தமகன்வாயிலான் றொண்டைமண்டலமே.

முந்தவிளை யோன்மாள முத்தமிழோர்க் கன்னமிட்ட
வந்த வடுகன் மகனானல்—வந்தென்
றலைக்கலியா ணத்துக்கே தான்பிணத்தை மூடி
யிலக்கணமாச் செய்குலவைநீயே.

இச்செய்யுட்களால் வாயற்பதி வடுகநாதமுதலியார் மகன் மனைவி மர்ணமடைந்திருக்குஞ்சமயத்தில், ஓர்வித்துவான்வந்து உனதுதகப்பன் சகோதரனாகியபிணத்தை மூடிவைத்துவிட்டு வந்தவித்துவானுக்கு அன்போடு அமுதளித்தான்; அவன்மகன் நீயாகில், உன் மனைவியாகிய பிணத்தை மூடிவைத்துவிட்டு என்னுடைய கல்யாணத்தை நடத்திவைப்பதற்கு எனக்கு முன்னே நடவென்ன, அவனுமவ்வண்ணஞ்சென்று நடத்திவிட்டுத் தன்மனைவியாகிய பிணத்தைத் தகனஞ்செய்தான்.

## உடுத்தவாடைகொடுத்து, ஊருணியில் மறைந்திருக்குங் கொடை.

உளத்துத்தயையுற்றவோர்புலவோனுக் குடையுதவிக்
குளத்துப்புனலையுடுத்துநின்றேபின்பு கூவியவைக்
களத்துப்புருதக்கலையுடுத்தே கரையேறிவந்த
வளத்துப்புகழ்பெற்றவல்லாளனுந் தொண்டைமண்டலமே.

இதனால் வல்லாளமுதலியாரென்னும் ஓர் வேளாளப்பிரபு அரச சபைக்குச் செல்லுங்கால், இடைவழியில் ஓர்வித்துவான் இவரைக்கண்டு உடுக்க ஆடைவேண்டுமென, அவர் தாம் உடுத்திருந்த ஆடைகளைக்களைந்து அவ்வித்துவானுக்குக்கொடுத்தனுப்பிவிட்டு, அருகிலுள்ள குளத்திலிறங்கித் தன்தேகத்தை மறைத்துக்கொண்டு, கரையிற் செல்வோரைக் கூவியழைத்து ஆடைதருவித்து உடுத்திக்கொண்டு போயினர் எனத் தெரியவருகிறது. இஃதன்றியும் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் தாம் எடுத்துக்கொண்ட ஏரெழுபது என்னும் நூலில்,

ஆழித்தேவர்கடலானாலல்லாத்தேவரம்பலத்தா
ரூழித்தேவரெலாங்கூடி யுலகங்காக்கவல்லாரோ
வாழித்தேவர்திருமக்கள் வையம்புரக்கும்பெருக்காளர்
மேழித்தேவர்பெருமைக்கு வேறுதேவர்கூறேனே.

என்றும்,

அழுங்குழவிக்கன்புடையதாயேபோல் வேளைத்துயிர்க்கு
மெழுங்கருணைப்பெருக்காள ரெளியரோயாம்புகழ
வழுங்கொழுவிற்கருவீறி யுலகமுதற்கருவாகச்
செழுங்கமலத்தயனிவரைச் செய்துலகஞ்செய்வானேல்.

என்றும், வேளாளர்களின் கொடைப்பெருமையினை எடுத்தெடுத்தோதியும் அளவைக்கடங்காமைகண்டு எளியரோ யாம்புகழ என இளைத்துவிட்டனர்.

## VI. கிருஷி அல்லது உழவு.

உலகின்கணுள்ள பலவகைச் சீவனத் தொழிலுள்ளும் கிருஷி, வாணிகம் கோ சம்ரட்சணை ஆகிய இம்மூன்றுமே சிறந்ததெனஸ்மிருதிகள் முறையிடுகின்றன.

உலகுயிர் நிலைபெறுதற்குரிய பண்டங்களை ஆக்கல் கிருஷியாம். அக்கிருஷிக்குத்துணைக் கருவியாயுள்ளது ஆனினம்; அவற்றைக் காத்தல் கோ சம்ரட்சணையாம். இவ்விரண்டால் ஆக்கப்பட்டபொருளை அல்லது பண்டங்களைப் பிறர்க்குப் பகிர்ந்தளித்தல் வாணிகமாம். இவை மூன்றும் ஒன்றைவிட்டொன்று பிரியாது ஒரு தொடர்பாய் நிற்றலின், இம்மூன்றினையும் உயர்வொழுக்கமுடைய வைசியர்க்குரிய தொழிலென ஸ்மிருதிகள் விதிக்கின்றன.

யாஞ்ஞவல்க்கியர்.

𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍇𑌕𑌰𑍍𑌮 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌂𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌨𑌂।
𑌕𑍁𑌸𑍀𑌦𑌂𑌕𑍃𑌷𑌿𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂 𑌪𑌾𑌶𑍁𑌪𑌾𑌲𑍍𑌯𑌂𑌵𑌿𑌶𑌸𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌂॥

ప్రదానంక్షత్రియేకర్మ ప్రజానాంపరిపాలనం ।
కుసీదంక్రషివాణిజ్యం పాశుపాల్యంవిశస్స్మృతం॥

பிரதாநம்க்ஷத்திரியேகர்ம பிரஜாநாம்பரிபாலநம்
குஸீதங்கிருஷிவாணிஜ்யம் பாஶுபால்யம்விஶஸ்ஸ்மிருதம்.

இ-ள். அரசனுக்குக் குடிகளைப்புரப்பதே சிறந்த தருமமாம், வைசியனுக்கு வட்டிவாங்குதல் உழவு பண்டமாற்றுதல் ஆனிரையோம்பல் என்னுமிவை சிறந்த தருமமாம்.

வைசியனுக்குரிய இம்முத்தொழிலினுள்ளும் கிருஷி சுதந்தரத்தொழிலாதலானும், இத்தொழிற்குரியவன் பிறரை வணங்காது பலருந் தன்னை வணங்கத் தான் இறுமாந்திருந்து உலகுயிர்களை இன்புறச்செய்தலானும், இதுமுதன்மையான தொ

ழிலாம். அதனால் அத்தொழிலுடையான் Land-Lord. நிலகர்த்தன் எனக்கூறப்படுகின்றான்.

இக்கிருஷித்தொழிலே பலவற்றுள்ளும் மேன்மைப்பட்டதென்பது தோன்ற "நெற்பயிர்விளை" "பூமிதிருத்தியுண்" "சீரைத்தேடி னேரைத்தேடு" "தொழுதூண்சுவையினுழுதூணினிது" "மேழிச்செல்வங் கோழைபடாது" என ஆன்றோர்கள் கூறியிருக்கின்றனர். அன்றியும் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் இயற்றிய ஏரெழுபதில்,

வாழிசான்மறையோர்கள் வளர்க்கின்றவேள்விகளு
மாழியாலுலகளிக்கு மடல்வேந்தர்பெருந்திருவு
மூழிபேரினும்பெயரா வுரையுடையபெருக்காளர்
மேழியால்விளைவதல்லால் வேறொன்றால்விளையாவே.

பார்பூட்டுந்திசையனைத்தும் பகைகளும்பரம்பூணு
போர்பூட்டுங்காமனுந்தன் புரைசிலைமேற்சரம்பூட்டான்
கார்பூட்டுங்கொடைத்தடக்கைக் காவேரிவளநாட
ரேர்பூட்டினல்லதுமற்றிரவியுந் தேர்பூட்டானே.

பத்திவிளைத்திடுந்தெய்வம் பணிவார்க்குத்தற்பரமா
முத்திவிளைத்திடுஞான முதல்வருக்குமின்னமுதம்
வைத்துவிளைத்திடுவோர்க்கும் வல்லவர்க்கும்பெருக்காளர்
வித்துவிளைத்திடிலன்றி வேண்டுவனவிளையாவே.

எனக்கூறப்பட்டிருக்கின்றது.

பின்னும் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் நான்கு வருணங்களுக்கும் ஏற்பட்டுள்ள கிருஷி நீங்கலான எத்தொழிலினையும் வேதங்களிலெடுத்துக் கூறவில்லை. வைசியர்க்குரிய கிருஷியினைத் திராவிடவேதமும் ஆரியவேதமும் புகழ்ந்துகூறுகின்றன.

இனி உழவு என்பது, விளைத்தல். உழுதொழில் செய்பவன்-உழவனும். வடநூலார், ஆர்=உழவு, அதனைச்செய்பவர்

ஆரியர் எனக்கூறுவர். ஆதலால் இக்கிருஷிகன் வடமொழியில்ஆரியனென்றும் தென்மொழியில் வேளாளனென்றும் வழங்கப்படுவன். பின்னும் உழவன் என்னும் பதப்பிரயோகம் அந்தணன் அரசன் வேளாளன் ஆகிய மூவருக்கும் பொதுவ்கையாக நின்றது. மறையை ஏராகக்கொண்டுழுபவன் அந்தணன் என்றும், சிலையை ஏராகக்கொண்டுழுபவன் அரசன் என்றும், அலப்படையை ஏராகக்கொண்டுழுபவன் வைசியனென்றும், செய்யுள் வழக்கத்தில் வழங்கப்பட்டன. இம்மூவருள் முன்னையிருவருக்கும் பிரமாணம்.

கம்பராமாயணம் - சரபங்கர்பிறப்பு நீங்குபடலம்.

வரிசிலையுழவனு மறையுழவனே
புரிதொழிலென்பது புகலுதியெனலுந்
திருமகடலைவசெய் திருவினையுறயா
னெரிபுகநினைகுவெ னருளெனவிறைவன்.

என்ற செய்யுளாற் காண்க. முன்னவராகிய மறையுழவனுஞ் சிலையுழவனும் பிற்பட்டுள்ள நிலவுழவனாகியவேளாளன் பின்னரேயாம். எங்ஙனமெனின்?

**திராவிடவேதத்தில் கூறும் உழவு.**

நாயனார் திருக்குறள் 104-ம் அதிகாரம்.

சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா
லுழந்து முழவே தலை.

இதனால் உலகினுள்ளார் பற்பல தொழில்புரிந்தும் பசியாற்றாராய், முடிவில் ஏருடையார் பின்னானார்கள்என்பதாம். ஆகலின் எத்தகைய வருத்தமுறினும் முதன்மையானதொழில் உழவென்றார்.

உழுவா ருலகத்தாந் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

உழுதொழில் செய்யமாட்டாமல் பிறதொழில்களின்மேற் செல்வோரையெல்லாம் இவ்வுழுதொழிலாளர் தாங்குதலால் உலகத்தாராகிய தேர்க்கு இவர் ஓர் அச்சாணிபோலுமாம்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

எல்லாரும் உண்ணும்படி உழுதலைச்செய்து அதனால் தாமும் உண்டு வாழ்வாரே தமக்குரியராய் வாழ்பவராம். மற்றவரெல்லாம் பிறரைத்தொழுது அதனால் தாம் உண்டு அவரைப் பின் செல்கின்றவராம்.

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்.

இதனால் நெற்பயிர்செய்யும் கிருஷிகர் குடைநிழற்கண்ணிருந்து அரசாளும் பல மன்னரையும் தமது நெற்பயிர்நீழலை அவாவக்காண்பராம்.

இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

இதனால் தமது கையினால் உழவுத்தொழிலைச்செய்து ஜீவிக்கும் கிருஷிகர் பிறரிடஞ்சென்றிரவாராம்: தம்மிடம்வந்து இரப்பவர்க்கு ஒளியாது கொடுப்பவராம்.

## ஆரியவேதத்தில் கூறும் உழவு.

### இருக்குவேதம்.

4-ஆவது மண்டலம் 5-ஆவது அனுவகம் 3-ஆவது அஷ்டகம் 8-ஆவது அத்தியாயம் 57-ஆவது சூக்தம் 9-ஆவது வருக்கை க்ஷேத்திரபதி.

இதனுட் கூறியதேவர்கள் சூத்திரத்தோடு சம்பந்தப்படுத்திப் பார்க்கும்பொழுதுமட்டுமே தேவர்களாவர். யதார்த்தத்தில் கிருஷிக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களை யவ்விதமாக உருவகப்படுத்தியதாம். உழவாரம்பத்தில் அக்கினிக்கு நைவேதனஞ்செய்து ஒவ்வொரு வாக்கியங்களையும் மௌனமாக

உச்சரிக்கவேண்டுமென்று கிரஹ்ய சூத்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றது. முதல் மூன்றுவாக்கியங்கள் க்ஷேத்திர்பதியையும், 4-ஆவது வாக்கியம் சுனாவையும் 5-8-ம் சுனாசீராவையும் 6-7-ம் சீதாவையும் கூறுகின்றன.

இதற்கு இருடியர் வாமதேவர் சந்தசு 1-4-7 வாக்கியங்களுக்கு அனுஷ்டுபு மற்றையவைகளுக்கு திரிஷ்டு.

1. * 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌸𑍍𑌯𑌪𑌤𑌿𑌨𑌾𑌵𑌯𑌂
𑌹𑌿𑌤𑍇𑌨𑍇𑌵𑌜𑌯𑌾𑌮𑌸𑌿
𑌗𑌾𑌮𑌶𑍍𑌵𑌂𑌪𑍋𑌷𑌯𑌿𑌤𑍍𑌨𑍍𑌵𑌾
𑌸𑌨𑍋𑌮𑍃𑌳𑌾𑌤𑍀𑌦𑍃𑌶𑍇

క్షేత్రస్యపతినావయం
హితేనేవజయామసి
గామశ్వంపోషయిత్న్వా
సనోమృళాతీదృశే

க்ஷேத்ரஸ்ய பதினாவயம்
ஹிதேநேவ ஜயாமஸி
காமஸ்வம் போஷயின்தவா
ஸன்னோம்ருளாதீ த்ருஸே

நமது நண்பராகிய புலகர்த்தாவுடன் நாம் வெற்றியடைவோமாக. அவர் நமக்கு ஆனிரைகள் அசுவங்கள் உணவு ஆகிய இவற்றை யளிப்பார். ஏனெனில் இவற்றை நமக்குக் கொடுப்பதால் நம்மைப் பாக்கியவான்களாக்குகிறார்.

2. 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌸𑍍𑌯𑌪𑌤𑍇𑌮𑌧𑍁𑌮𑌨𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌮𑌿𑌂
𑌧𑍇𑌨𑍁𑌰𑌿𑌵𑌪𑌯𑍋𑌅𑌸𑍍𑌮𑌾𑌸𑍁𑌧𑍁𑌕𑍍𑌷𑍍𑌵

---

* க்ஷேத்ரஸ்யபதினாம் என்பது உருத்திரன் அல்லது அக்கினியென்னும் மூலார்த்தத்தைக் கொண்டிருக்கின்றது.

[illegible]
[illegible]

క్షేత్రస్యపతేమధుమంతమూర్మిం
ధేనురివపయోఅస్మాసుధుక్ష్వ
మధుశ్చుతంఘృతమివసుపూత
మృతస్యనఃపతయోమృళయంతు

க்ஷேத்ரஸ்யபதே மதுமந்தமூர்மிம்
தேனுரிவபயோ அஸ்மாஸுதுக்ஷ்வ
மதுஶ்சுதம் கிருதமிவஸுபூத
மிருதஸ்யநஃபதயோ மிருளயந்து.

புலகர்த்தனே! தேன் சொரிவதுபோலப் பாற்பசுக்கள் பாலைச்சொரிந்து நவநீதத்தை யுதவுகின்றன. அதுபோல மதுரமுள்ள நீரினைப்புஷ்களமாகத் தந்தருளும். ஜலகர்த்தன் நம்மைப்பாக்கியவான்களாக்கவேண்டும்.

3. * [illegible]
[illegible]
† [illegible]
[illegible]

మధుమతీరోషధీర్ద్యావ
ఆపోమధుమన్నో భవత్వంతరిక్షం
క్షేత్రస్యపతిర్మధుమాన్నో
అస్త్వరిష్యంతో అన్వేనంచరేమ

---

* மதுமத் = மதுரமுடையது. † இதுவும் இதையடுத்துவரும் க்ஷேத்திரப்தியின் விசேஷணமும் பயிரின் விசேஷணமும் ஒன்றேயாம்.

மதுமதீரோஷதீர்தியாவ
ஆபோமது மந்நோபவத்வம் தரிக்ஷம்
க்ஷேத்ரஸ்யபதிர்மது மாந்நோ
அஸ்த்வரிஷ்யந்தோ அந்வேநஞ்சரேம.

புலத்திலுள்ள பயிர்கள் நமக்கு மதுரமாகவேண்டும். ஆகாயமும் நீரும் வான வெளியும் நமக்கு அன்புடையவைகளாகுக. புலகருத்தன் நமக்குக் கருணைசெய்வாராக. சத்துருக்களால் தடைபடாவண்ணம் அவரிடத்து நாம் அடைக்கலம் புகுவோம்.

4. 𑌶𑍁𑌨𑌂𑌵𑌾𑌹𑌾𑌃𑌶𑍁𑌨𑌂𑌨𑌰𑌃
𑌶𑍁𑌨𑌂𑌕𑍃𑌷𑌤𑍁𑌲𑌾𑌂𑌗𑌲𑌂
𑌶𑍁𑌨𑌂𑌵𑌰𑌤𑍍𑌰𑌾𑌬𑌧𑍍𑌯𑌂𑌤𑌾𑌂
𑌶𑍁𑌨𑌮𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌮𑍁𑌦𑌿𑌂𑌗𑌯

శునం వాహాః శునం నరః
శునం కృషతు లాంగలం
శునం వరత్రా బధ్యంతాం
శునమష్ట్రాముదింగయ

ஶுநம்வாஹா: ஶுநம்நர:
ஶுநம்கிரஷதுலாங்கலம்
ஶுநம்வரத்ரா யத்யந்தாம்
ஶுநமஷ்டராமுதிங்கய.

எருதுகள் சுகமாக இழுக்க, மனிதர்கள் சுகமாகத்தொழில்புரிக. ஏர் சுகமாக வுழுக. கட்டுவாருகள் சுகமாகக்கட்டுக. தாற்றுக்கோல் சுகமாகச்செலுத்துக.

குறிப்பு:-சுனம் வாஹா சுனம்நரா: இதில் உரையாசிரியர் சுனம் என்பதற்கு,சுகம் யதாபவ்திதா என்றார். எனவே

அவ்வண்ணமே சுகமாகவிருக்கின்றது. அல்லது இருக்கும் எனக்கூறியதாம். இதைத்தெய்வமாக்கி அத்தெய்வத்தின் கிருபைத்துவாராவாக இவை செவ்வனே தொழிற்படுகின்றனவென்பதாம். சுககிருதுதேவா=வாயு அல்லது இந்திரன்.

5. ശുനാസീരാവിമാംവാചം
ജുഷേഥാംയദ്ദിവിചക്രഥുഃ
പയഃതേനേമാ | മുപസിഞ്ചതം

శునాసీరావిమాంవాచం
జుషేథాంయద్దివిచక్రథుః
పయఃతేనేమాముపసించతం

ஶுநாஸீராவிமாம்வாசம்
ஜுஷேதாம்யத்திவிசக்ஷுது:
பயஃதேனேமாமுபஸிஂசதம்.

சுநுவே! ஸீராவே! எங்களது துதியால் சந்தோஷமடைவீர்களாக. ஆகாயத்தில் உங்களால் ஆக்கப்பட்ட நீரைப் பூமியின்மேல் சொரியச்செய்க.

குறிப்பு—சுநுஸீரௌ என்பதை இரண்டுகூறுக்கி இரண்டு தெய்வப்பெயர்களாகவும கொள்ளலாம். அவற்றுள் சுநுஎன்பது சௌனகவாக்கியத்தின்படி தியுதேவ:=வானதேவன். அதாவது இந்திரன். அப்போது ஸீராசாயனர்வாக்கியத்தின்படி வாயுவாகும். யாஷ்காநிருக்த 9-40-ல் சுநுவை வாயுவெனவும், சீராவை ஆதித்தனெனவுங் கூறப்பட்டிருக்கின்றன. சாதாரணப்பிரயோகத்தில் சுநுஸீரா என்பது இந்திரன் பெயராம்.

6. ക്ഷേത്രസ്യപതേമധുമന്തം
ഊർമ്മിംധേനുരിവപയഃ

யதா ந: ஸுபகாஸஸி
யதா ந: ஸுபலாஸஸி

అర్వాచీసుభగేభవ
సీతేవందామహేత్వా
యథానఃసుభగాససి
యథానఃసుఫలాససి

அர்வாசீஸுபகேபவ
ஸீதே வந்தா மஹேத்வா
யதாந: ஸுபகாஸஸி
யதாந: ஸுபலாஸஸி.

மங்கலமுள்ள சீதா! உன்னை வாழ்த்துகிறோம் எதிரில் வந்திரு. அவை எங்களுக்கு அதிக பலனைக்கொடுக்கும்படி எங்களிடத்தில் சுபகரமாய் விளங்குக.

குறிப்பு-"சீதா" என்பது சாதாரணத்தில் படைச்சாலாம். இந்தக்கருத்துக்கொண்டு, அல்லது யசுர்வேதத்தில் கூறப்பட்ட 12, 69-முதல் 72-வரையிலுள்ள 4-செய்யுட்களைத்தழுவி ஒருதெய்வமாக உருவகப்படுத்திச் சடங்கின்போது அந்த 4-சுலோகங்களைச்சொல்லி 4 - படைச்சால்கள் கீறவேண்டும். ஆனால் அடுத்த செய்யுளில் இதை உழவு காறைத்தாங்கும் மரத்துண்டுக்குச் சாயனாசாரியார் பொருள் கூறுகின்றார். "ஸீதா'தாராகாஷ்டம்" இதை இந்திரன் பிடித்துக்கொள்ள வேண்டும். "இந்திரக்கிரஹ்நாது" காஷ்டத்தைப் பெண்பாலாக்குகிற பூமி வானசந்தியிடத்தின்மீதேற்றிக் கொள்ளுவமேயாயின், பின்வரும்வரியில் கூறியதுபோலச் சீதா என்பது ஆகாயத்திற்குப்பொருள்படும். சீ=(அவள்) என்பதை உரையாசிரியர் தீயௌ = (ஆகாயம்) எனக்கூறியிருக்கிறார்.

7. 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃𑌸𑍀𑌤𑌾𑌂𑌨𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑍁
𑌤𑌾𑌂𑌪𑍂𑌷𑌾𑌨𑍁𑌯𑌚𑍍𑌛𑌤𑍁
𑌸𑌾𑌨𑌃𑌪𑌯𑌸𑍍𑌵𑌤𑍀𑌦𑍁𑌹𑌾
𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑌾𑌂𑌸𑌮𑌾𑌂

ఇంద్రఃసీతాంనిగృహ్ణాతు
తాంపూషానుయచ్ఛతు
సానఃపయస్వతీదుహా
ముత్తరాముత్తరాంసమాం

இந்த்ரஃ ஸீதாம்நிக்ருஹ்ணாது
தாம்பூஷாநுயச்சது
ஸாநஃபயஸ்வதீதுஹா
முத்தராமுத்தராம்ஸமாம்.

இந்திரன் சீதையைப் பற்றிக்கொள்ளுக. பூஷன் அவளைச்செலுத்துக. அவள் நன்றாய் நீரால் பூரிக்கப்பட்டுப் பால் சொரிவதுபோல் வருடாவருடம் சொரிவாளாக.

குறிப்பு-பூஷன்=மார்க்க சகாயன். யாபாரஞ்செய்வதற்கும் பிறதேசத்தாருடன் பழகிவருவதற்கும் தத்தம் இடம்விட்டு யாத்திரை செய்பவர்களுக்குக் காவற்கடவுள். அபகரித்துக்கொண்டுபோன சொத்துக்களைக் கண்டுபிடிக்கும் மாந்திரிகளுக்குஞ் சகாயன்.

8. 𑌶𑍁𑌨𑌂𑌨𑌃𑌫𑌾𑌲𑌾𑌵𑌿𑌕𑍃𑌷𑌨𑍍𑌤𑍁𑌭𑍂𑌮𑌿𑌂
𑌶𑍁𑌨𑌂𑌕𑍀𑌨𑌾𑌶𑌾𑌅𑌭𑌿𑌯𑌨𑍍𑌤𑍁𑌵𑌾𑌹𑍈𑌃
𑌶𑍁𑌨𑌂𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑍋𑌮𑌧𑍁𑌨𑌾𑌪𑌯𑍋𑌭𑌿𑌃
𑌶𑍁𑌨𑌾𑌸𑍀𑌰𑌾𑌶𑍁𑌨𑌮𑌸𑍍𑌮𑌾𑌸𑍁𑌧𑌤𑍍𑌤𑌂

శునంనఃఫాలావికృషంతుభూమిం
శునంకీనాసా అభియంతువాహైః
శునంపర్జన్యోమధునాపయోభిః
శునాసీరాశునమస్మాసుధత్తం

ஶுநம்நஃபாலாவிகிருஷந்துபூமிம்
ஶுநங்கீநாஸா அபியந்துவாஹைஃ
ஶுநம்பர்ஜந்யோ மதுநாபயோபிஃ
ஶுநாஸீரா ஶுநமஸ்மாஸுதத்தம்.

கொழுமுனை சந்தோஷத்துடன் நமது நிலத்தைப்பிளக்கச்செய்க. உழவினர் எருதுடன் சந்தோஷமாகச் செல்லுக. பர்ஜன்னியர் மதுரமுள்ள நீர்த்தாரையால் நமது நிலத்தை யிரமாக்குக. சுனனே! ஸீரனே எங்களுக்குப் பாக்கியத்தைத் தந்தருளுக.

மநு.

𑌬𑍀𑌜𑌾𑌨𑌾𑌮𑍁𑌪𑍍𑌤𑌿𑌮𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌬𑍀𑌜𑌗𑍁𑌣𑌸𑍍𑌯𑌚
𑌮𑌾𑌨𑌯𑍋𑌗𑌾𑌂𑌶𑍍𑌚𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌤𑍍𑌤𑍁𑌲𑌾𑌯𑍋𑌗𑌾𑌂𑌶𑍍𑌚𑌸𑌰𑍍𑌵𑌶𑌃

బీజానాముప్తిమావిద్యాత్ క్షేత్రబీజగుణస్యచ
మానయోగాంశ్చజానీయాత్ తులాయోగాంశ్చసర్వశః

பீஜாநாமுப்திமாவித்யாத் க்ஷேத்திரபீஜகுணஸ்யச
மாநயோகாம்ஸ்சஜாநீயாத் துலாயோகாம்ஸ்சஸர்வஶஃ॥

தானியங்களும் பிரம்பு மூங்கில் முதலிய மரவகைகளும் பிறவுமுள்ள பண்டங்களின் விலைகளும் அவற்றின் தரங்களும் நிலத்தின் குணங்களும் எந்தநிலத்தில் எந்தக் காலத்தில் எதனை விதைத்துப் பயிர்செய்து பயன்கொள்

ளவேண்டுவதோ அதனையும், தானியமுதலிய பண்டங்களைச் சுத்தஞ்செய்துவைத்தலும், வித்துக்களைச்சீர்செய்து வைத்தலும், முகத்தலளவையின் வேறுபாடுகளும், கணிதவேறுபாடுகளும் அறியவேண்டும். என மநுகூறுகிறார்.

இக்கிருஷியாகிய உழவு - இம்மை மறுமை வீடு பேறடைதற்குரிய மக்களுயிர்க்குப்பெருங்கருவியாகியவுடம்பு நிலைபெறச்செய்யுஞ் சிறப்பிற்றாய் உண்டி வினைக்கின்றியமையாத விளையுளைத்தரும் அருந்தொழிலாம். அதனை உழுதலென்னாது உழவென்றதென்னை ? எனின், ஏருழுதல் பரம்படித்தல் நிலந்திருத்தல் புழுதியாக்கல் சேடைசெய்தல் விதைவிதைத்தல் நாறுநடுதல் நீர்பாய்ச்சல் களைகட்டல் ஓம்புதல் விளைவறுத்தல் போர்செய்தல் பிணையடித்தல்சேர்த்தல் பார்த்தல் என்ற பல தொழில்களையுந் தனக் குறுப்பாகக்கொண்டு அவ்வத்தொழில்களெல்லாம் விளங்கக் குறித்துப்பொதுமையினிற்றலின் தொல்லோர் அங்ஙனங்கூறி வழங்கியவாறென்க.

ஒருவன் கிருஷி செய்யத் தொடங்குமுன்.

நிலவளம்.

இது பள்ளத்தாக்கு இது மேட்டுப்பாங்கு இது சமநிலம் என்றும், இது செய்கால் இது வானமாரி இது காம்பு இது புறம்போக்கு என்றும், இது மணற்பாங்கு இது களிமண்நிலம் இது கரிசல் நிலம் இது செம்மண் நிலம் இது வெண்மண் நிலம் இது சுக்கான்றரை இது தைலமண் நிலம் இது உவர்மண் நிலம் என, நிலவளமும் அறியவேண்டும்.

நீர்வளம்.

இது ஏரிப்பாய்ச்சல், இது ஆற்றுக்கால்பாய்ச்சல், இதுவானமாரி என நீர்வளமும் அறியவேண்டும்.

நிலந்திருத்தல்.

நாடழித்துக் கரம்புதிருத்தி மேடுபள்ளமின்றி நிலத்தைச்சமானமாக்கவேண்டும்.

## செய்நேத்தி.

ஏர்கட்டி உழுது அதில் குப்பை தழை முதலிய எரு விடவேண்டும். பின்னர் பரம்படித்துச் சேடையாடி வளப்படுத்தவேண்டும்.

## நன்செய்த்தா்னியம்.

சீரகச்சம்பா முதலிய சம்பாவினங்களும், கடப்புக்கார் மோசனம் மணக்கத்தை பிச்சவாரி ஈசுரக்கோவை முதலிய காரினங்களும்,

## புன்செய்த்தான்யம்.

கோதுமை வாற்கோதுமை வரகு கேழ்வரகு மஞ்சள் சோளம் செஞ்சோளம் முத்துச்சோளம் கம்பு சாமை தினை முதலியவைகளும்,

## காய்த்தானியம்.

அவரை துவரை உழுந்து கடலை மொச்சை கறுப்புப்பயறு பச்சைப்பயறு பனிப்பயறு மூரிப்பயறு தட்டைப்பயறு பெரும்பயறு கொள்ளு எள்ளு முதலிய காய்த்தானியங்களின் குணகுணங்களும் அறியவேண்டும்.

## காலம்.

பருவத்தே பயிர்செய் என்று வேதமொழி யிருப்பதால் கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் முதுவேனில், என்ற இவற்றுள், இன்னபயிர் இன்னகாலத்திற் குரியதெனை அறிந்து பயிர்செய்யவேண்டும்.

பின்னுங் கிருஷிக்குரிய தொழில் பலவுளவேனும், அவற்றுள் ஐந்து சிறந்துள்ளன. அவை உழுதல் எருப்பெய்தல் களைபறித்தல் நீர்பாய்ச்சல் காத்தல், அவற்றுள்.

1. உழுவதே சிறந்தது. 2. அதனினும் எருவிடுதல் சிறந்தது. 3. அதனினுங் களைபறித்தல் சிறந்தது. 4. அதனினும் நீர்பாய்ச்சல் சிறந்தது. 5. அதனினுங் காத்தல் சிறந்தது.

ஏரினு நன்ரு லெருவிடுதல் கட்டபின்
னீரினு நன்றதன் காப்பு.

என்ற நாயனுர் குறளா லுணர்க.

பின்னும் அப்படி யுழுவதிலும் ஒருபலப்புழுதியைக்காற் பலப்புழுதியாகும்படி உலரவைத்தால் எருவேண்டாமலே பயிர் செழுமையாக வளரும்.

தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

என்ற குறளாலுணர்க.

இவ்வுழவினுக்கு வேண்டிய முக்கியமான வியல்புகளுமிருக்கவேண்டும் எனவே கிருஷிகனுன ஒருவனுக்குக் குறைந்தபக்ஷம். 1. இரண்டே ரிருக்கவேண்டும். 2. வீட்டில் விதையிருக்வேண்டும். 3. நீரருகாயுள்ள நிலமிருக்கவேண்டும். 4. அந்நிலமும் ஊருக்கருகானதா யிருக்கவேண்டும். 5. பண்ணையாட்கள் சொற்படி நடக்கிறவர்களாக இருக்கவேண்டும். இவற்றிற்கு பிரமாணம்.

ஏரு மிரண்டுளதா யில்லத்தில் வித்துளதாய்
நீரருகே பாயு நிலனுளதா—யூரருகே
சென்று வரவெளிதாச் செய்வாருஞ் சொற்கேட்கி
லென்று முழவே யினிது.

என்பது முதுமொழியாம்.

### பயிர்செய்யுமுறை.

சூன்மாதம் வெள்ளம்வந்தவுடனே நாற்றங்கால் நிலத்தை உழுது, 2-தரம் சலங்கட்டிப் பாகப்படுத்திவைக்கவேண்டும்.

விதை நெல்லை 1-நாள் அல்லது 2-நாள் சலத்தில் ஊறப்போட்டு நல்ல நாளில் அந்த நிலத்தில் விதைக்கவேண்டும்.

விதைத்த மறுநாள் நாற்றங்காற் சலத்தை வடியவிடவேண்டும். மூன்றுநாள் சலங்கட்டவேண்டும். மறுநாள் மீளவும் வடியவிடவேண்டும்.

நாற்றைப் பிடுங்குகிறவரையும் 10 - நாளைக்கொருதரம் சலங்கட்டவேண்டும். இதற்கு மத்தியில் நடவுசெய்யவேண்டிய நிலத்தில் நாற்றங் காலுக்குச் சலங்கட்டும்போதே நடவு நிலத்துக்குஞ் சலங்கட்டி 1-அல்லது 2-தரம் உழுது, ஈரம் உலராது வைத்திருக்கவேண்டும்: நாறுநடு முன்னம் மறுபடியும் ஒருதரம் உழவேண்டும்.

நாறு செவ்வையாக வளருகிறவரையும் நாற்றங்காலில் இருக்கவேண்டும். வளர்ந்தவுடனே பிடுங்கி நடவு நிலத்தில் நடவேண்டும்.

நடவுநிலம் சிலவேளை அதிகவெள்ளத்தால் ஜலங்கொண்டிருந்தாலும், அல்லது சலமில்லாமல் வறண்டுபோயிருந்தாலும், நிலத்தைப் பதப்படுத்தத் தாமதித்தாலும், நடவுசெய்யப்படாது. நாற்றங்காலிலேயே நாறு இருக்கவேண்டும். நாறுகள் பருவமடைந்த ஒருவாரத்துக்குமேலும் இருக்கப்படாது.

பின்பு நாறுகளைப் பிடுங்கிக் கற்றை கற்றையர்கக்கட்டி நடவு நிலத்திற்குக் கொண்டுபோகவேண்டும்.

நடும்போது நடவுநிலத்தில் சலம் இருக்கப்படாது தக்கபடியீரமாக இருக்கவேண்டும்.

நடவு நட்ட 3-நாள்வரையும் சலமிருக்கக்கூடாது. சலம் வந்தபோதிலும் வடியவிடவேண்டும்.

இதன்பின்பு கதிர்விடுகிறவரையும் நீர்பாய்ச்சுவதும் வடியவிடுகிறதும் மாறிமாறிச் செய்யவேண்டும். 3-தரம் களைபிடுங்கவேண்டும்.

முதல்தரம் சலம் பாய்ச்சின 1½-மீ வரையும் 4-விரலடி அளவு வயலில் சலமிருக்கவேண்டும். பின்பு பயிரின் விளைவுக்குத்தக்கபடி ஒரு முழமுதல் 2-முழம்வரையும் இருக்கலாம். குலைக்கதிர்கள் பழுத்தவுடன் அறுப்புக்கு 2-அல்லது 3-வாரத்துக்கு முன்னமே சலத்தை வடித்துவிடவேண்டும்.

## நன்செய்த்தானியங்கள்.

| தானியவகைகள். | விதைப்புலத்தில் வளருங்காலம். | நடவுசெய்த புலத்தில் வளரும் காலம். | வேலி க-க்குவிதைக்கிற கலம். |
|---|---|---|---|
| * கடப்பு. | நாள். | மா | |
| கடப்பு அல்லது பெருங்கார்<br>சில்றைக்கடப்பு<br>குழியடிச்சான் | 30 | 3 அல்லது 4 | $11\frac{2}{3}$ |
| மட்டக்குருவை<br>கருங்குருவை<br>செங்குருவை<br>கள்ளுக்குருவை | 25 | 3 | $13\frac{1}{3}$ |
| அறுபதாங்குருவை ... | 18 | 2 | 20 |
| கார். | | | |
| பூங்கார்<br>கறுத்தகார் | 30 | 4 | $13\frac{1}{3}$ |
| சண்டிக்கார்<br>காடைக்கழுத்தன் | 35 | 6 | $13\frac{1}{3}$ |
| † சம்பா. | | | |
| வெள்ளை சம்பா<br>கைவிரிச்சம்பா<br>இராமன்சம்பா<br>கருடன்சம்பா<br>மூத்துச்சம்பா<br>ஈர்க்குச்சம்பா<br>சீரகச்சம்பா<br>அன்னதானச்சம்பா<br>பாலன்சம்பா<br>வரகன்சம்பா<br>கம்பன்சம்பா<br>செம்பிலிச்சம்பா<br>செம்பிலிப்பிரியன்<br>சிகப்புச்சிறுமணி<br>வெள்ளைச்சிறுமணி | 40 | 5 | 10 |
| அன்னதானம் அல்லது பொங்கற்சம்பா<br>சடைச்சம்பா | 35 | 4 | 10 |
| பசானம். | | | |
| பசானம்<br>தில்லை<br>கல்லுண்டை<br>ஒட்டடையன் | 45 | $6\frac{1}{2}$ | 10 |
| காட்டழகிவாணன் ... | 50 | 7 | 10 |
| குட்டாளை ... | 35 | 5 | 10 |

* கடப்பு. இது கார்வகையில் ஓர் பிரிவு.

† சம்பா. இது பசானவகையில் ஓர் பிரிவு.

## புன்செய்த் தானியங்கள்.

| தானியம். | விதைகாலம். | அறுப்புக்காலம். | மீ |
|---|---|---|---|
| (Cereals) முதிரை அல்லது புன்செய்த் தானியங்கள். | | | |
| கேழ்வரகு (Ragi) ... | சூன் சூலை-அக்டோபர் நவம்பர் ... | செப்டம்பர் அக்டோபர்-பிப்புரவரி மார்ச்சு ... ... ... | 3 |
| கம்பு ... | ,, ,, ... | செப்டம்பர் அக்டோபர்-ஜனவரி பிப்பரவரி ... ... ... | 3 |
| சோளம் ... | ,, ,, ... | ,, ... | 3 |
| வரகு ... | சூலை ஆகஸ்டு ... ... ... | டிசம்பர் ஜனவரி ... ... | 5 |
| (Pulses) காய்த்தானியம். | | | |
| கொள்ளு ... | அக்டோபர் நவம்பர் ... ... | ஜனவரி பிப்பரவரி ... ... | 3 |
| கடலை ... | ,, ... ... | ,, ... ... | 6 |
| உழுந்து ... | சூலை ஆகஸ்டு ... ... ... | ,, ... ... | 6 |
| துவரை ... | ,, ... ... ... | ,, ... ... | 6 |
| எள்ளு ... | ,, ஜனவரி பிப்பரவரி ... | செப்டம்பர் அக்டோபர்-மார்ச்சு எப்பிரல் ... ... ... | 2 |
| மொச்சை ... | சூலை ஆகஸ்ட்டு ... ... ... | ஜனவரி பிப்பரவரி ... ... | 6 |
| காராமணி ... | ,, ... ... ... | ,, ... ... | 6 |
| வயற்பயறு ... | ஜனவரி ... ... ... ... | மார்ச்சு ... ... ... | 2 |

| இதரபலன்கள். | விதைகாலம். | அறுப்புக்காலம். | ஸ்ரீ |
|---|---|---|---|
| | (Other Dry Crops) இதர புன்செய்ப் | பலன்கள். | |
| வேர்க்கடலை ... | சூலை ஆகஸ்டு ... ... ... | ஜனவரி பிப்பரவரி ... ... | 6 |
| ஆமணக்கு ... | ஆகஸ்டு செப்டம்பர்-நவம்பர் டிசம்பர் ... | அக்டோபர் நவம்பர்-பிப்பரவரி மார்ச்சு. | 2 |
| பருத்தி ... | நவம்பர் டிசம்பர் ... ... ... | மார்ச்சு எப்பிரல் ... ... | 4 |
| அவுரி ... | டிசம்பர் ஜனவரி ... ... ... | ,, ... ... | 3 |
| | (Garden Crops) தோட்டக்கால்பயிர். | | |
| கரும்பு ... | ஜனவரி பிப்பரவரி... ... ... | டிசம்பர் ஜனவரி ... ... | 11 |
| புகையிலை ... | ,, ... ... ... | மே சூன் ... ... ... | 4 |
| முத்துச்சோளம் ... | சூன் சூலை ... ... ... | செப்டம்பர் அக்டோபர் ... ... | 3 |
| மஞ்சள் ... | ,, ... ... ... | ஜனவரி பிப்பரவரி ... ... | 7 |
| இஞ்சி ... | ,, ... ... ... | ,, ... ... | 7 |
| வெங்காயம் ... | ,, ... ... ... | ,, ... ... | 7 |
| கடுகு ... | நவம்பர் டிசம்பர் ... ... ... | பிப்பரவரி மார்ச்சு ... ... | 3 |
| கொத்தமல்லி ... | ,, ... ... ... | ,, ... ... | 3 |
| வெந்தயம் ... | ,, ... ... ... | ,, ... ... | 3 |
| மிளகாய் ... | சூன் சூலை ... ... ... | செப்டம்பர் அக்டோபர் ... ... | 3 |
| கருணை ... | ,, ... ... ... | டிசம்பர் ஜனவரி ... ... | 6 |
| சேமை ... | ,, ... ... ... | ,, ... ... | 6 |
| சிறுகிழங்கு ... | ,, ... ... ... | ஜனவரி பிப்பரவரி ... ... | 7 |
| கத்தரி ... | ஜனவரி பிப்பரவரி ... ... ... | மார்ச்சு எப்பிரல் ... ... | 2 |

| | | | |
|---|---|---|---|
| கொத்தவரை ... | ,, ... ... ... | ,, ... ... | 2 |
| வெண்டை ... | ,, ... ... ... | ,, ... ... | 2 |
| பூசனி ... | ,, ... ... ... | ,, ... ... | 2 |
| கல்யாண பூசனி ... | ,, ... ... ... | ,, ... ... | 2 |
| சுரை ... | ,, ... ... ... | ,, ... ... | 2 |
| புடல் ... | ,, ... ... ... | ,, ... ... | 2 |
| கொம்பன்பாகல் ... | ஜூன் ஜூலை ... ... ... | செப்டம்பர் அக்டோபர் ... ... | 3 |
| மிதிபாகல் ... | ஜனவரி பிப்பரவரி ... ... | மார்ச்சு எப்பிரல் ... ... | 2 |
| வெள்ளரி ... | ஜூன் ஜூலை-ஜனவரி பிப்பரவரி ... | ஆகஸ்டு செப்டம்பர்-மார்ச்சு எப்பிரல்... | 3 |
| கக்கரி ... | ,, ... ... ... | ,, ... | 3 |
| கொம்மட்டி ... | ,, ... ... ... | ,, ... | 3 |
| பீர்க்கு ... | ஜனவரி-பிப்ரவரி ... ... ... | அக்டோபர் நவம்பர் ... ... | 9 |
| அவரை ... | ,, ... ... ... | டிசம்பர் ஜனவரி ... ... | 12 |
| வாளவரை ... | ,, ... ... ... | ,, ... ... | 12 |
| க்ராச்சுருக்கு ... | ஜூன் ஜூலை ... ... ... | ,, ... ... | 6 |

### எருதுக்குரியார் வேளாளரெனல்.

எருதுடையான் வேளாள னேலாதான் பார்ப்பா
னொருதுடையான் வெல்லுவது கோழி—யுருவோ
டறிவுடையா ளில்வாழ்க்கைப் பெண்ணென்பாள் சேனைச்
செறிவுடையான் சேனா பதி.

என்னுஞ் சங்கநூல்களிலொன்றாகிய நான்மணிக்கடிகையினும் எருதுடையான் வேளாளன் என்றார். இஃதன்றியும் இன்னும் பலபிரமாணங்களுள. அவையெல்லாம் எடுத்துரைக்கிற் பெருகுமென்க.

### எருதின் வலிமைகூறல்.

வானமழைபொழிந்தாலும் வளம்படுவதெவராலே
ஞானமறையவர்வேள்வி நலம்பெறுவதெவராலே
சேனைகொடுபொருமன்னர் செருக்களத்திற்செருக்குமத
யானைவலியெவராலே யிவரெருத்தின்வலியாலே.

எனக்கூறிய இச்செய்யுளால் உலகவுயிர்களுக்கு வேண்டிய பலவளமும், அந்தணர்களின் ஐவகை வேள்வியும், அரசர்களின் போர்வலியு, முண்டாவது வேளாளர்களின் எருதின் வலியால் எனக் கம்பர் ஏரெழுபதிற்கூறினர். இதனானும் கோசம்ரட்சணை வேளாளர்க்கே உரியதென விளங்குகின்றது.

### உழவெருதின் தொகை.

ஹாரீதர்.

அஷ்டாகவம் தர்ம்யஹலம் ஷட்கவம் ஜீவிதார்த்தினாம்|
சதுர்க்கவம் ந்ருசம்ஸானாம் த்விகவம் ப்ரஹ்மகாதினாம்||

అష్టాగవంధర్మ్యహలం షడ్గవంజీవితార్థినాం।
చతుర్గవంనృశంసానాం ద్విగవంబ్రహ్మఘాతినాం॥

அஷ்டாகவந்தர்மியாஹலம ஷட்கவஞ்சீவிதார்த்திநாo
சதுர்க்கவoகிறுஶoஸாநாo திவிகவoபிர்ஹ்மகாதிநாo

இனி ஏர்பூட்டி யுழும்போது, 8-எருது பூட்டுவது உத்தமம், 6-எருது பூட்டுவது மத்திமம், 4-பூட்டுவது அதமம், 2-பூட்டுவது அதமாதமமாம்.

இக்காலத்து நிலங்கள் வளம்பட்டமையால் 2-எருதுக ளுக்கு மேற்பூட்டி யுழுவதில்லை. சில கடின இடங்களில் 4-எருதுகள் பூட்டி யுழுகிறார்கள்.

**உழவிற்கேற்றவெருதுகள்.**

*பராசரம், ஆசாரகாண்டம் 2-ஆவது அத்தியாயம், 4-ஆவது சுலோகம்.*

𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌙𑍍𑌗𑌂𑌨𑍀𑌰𑍁𑌜𑌂𑌤𑍃𑌪𑍍𑌤𑌂 𑌸𑍁𑌨𑌰𑍍𑌦𑌂𑌷𑌣𑍍𑌡𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂।
𑌵𑌾𑌹𑌯𑍇𑌦𑍍𑌦𑌿𑌵𑌸𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌧𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌨𑌂𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍॥

స్థిరాంగంనీరుజంతృప్తం సునర్దంషణ్డవర్జితం।
వాహయేద్దివసస్యార్థం పశ్చాత్స్నానంసమాచరేత్॥

*ஷ்திராங்கம்நீருஜந்திருப்தம் ஸுநர்தம்ஷண்டவர்ஜிதம்*
*வாஹயேத்திவஸஸ்யார்தம் பஶ்சாத்ஸ்நாநஸமாசரேத்*

ஊனமும் இளைப்பு மற்ற வுறுப்பினவும் நோயற்றனவும் திருப்தி பெற்றனவும் செருக்கி முழக்கஞ் செய்வனவும் ஆண்டன்மை குன்றாதனவுமாகிய எருதுகள் உழுதொழிற்குரியனவாம். தொழின் முற்றியபின்னரவற்றைக் குளிப்பிக்கவேண்டும்.

*ஆசாரகாண்டம் 2-ஆவது அத்தியாயம், 3-ஆவது சுலோகம்.*

**உழவிற்கு விலக்கான எருதுகள்.**

𑌕𑍍𑌷𑍁𑌧𑌿𑌤𑌂𑌤𑍃𑌷𑌿𑌤𑌂𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌬𑌲𑍀𑌵𑌰𑍍𑌦𑌂𑌨𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍।
𑌹𑍀𑌨𑌾𑌙𑍍𑌗𑌂𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌤𑌂𑌕𑍍𑌲𑍀𑌬𑌂 𑌵𑍃𑌷𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋𑌨𑌵𑌾𑌹𑌯𑍇𑌤𑍍॥

క్షుధితంతృషితంశ్రాంతం బలీవర్దంనయోజయేత్।
హీనాఙ్గంవ్యాధితంక్లీబం వృషంవిప్రోనవాహయేత్॥

க்ஷுத்திதம் திருஷிதம் ஸ்ராந்தம் ஜலீவர்த்தம் நயோஜயேத்
ஹீநாங்கம் வியாதிதங்க்லீபம் விருஷம் விப்ராணவாஹயேத்

பசி தாகம் இளைப்புற்ற எருதுகளை ஏரிற்பூட்டுவிக்கலாகாது. குறைந்தவுறுப்புகளையுடையதனையும், நோயுள்ளதனையும் ஆண்டன்மை யற்றதனையும் பாரம் சுமப்பிக்கலாகாது.

## உழவெருதினை நடத்துமுறை.

### அசுவமேதம்.

വാഹയേദ്ധുംകൃതേനൈവ ശാഖയാവാസപത്രയാ।
നദണ്ഡേന നയഷ്ട്യാവാ നപാശേന നവാപുനഃ॥
നക്ഷുത്തൃഷ്ണാശ്രമക്രാന്തം വാഹയേദ്വികലേന്ദ്രിയം।
സുതൃപ്തേഷുതുഭുഞ്ജീയാത്പിബേത്പീതേഷുചോദകം
അഹ്നഃപൂർവ്വംദ്വിയാമംവാ ധുര്യാണാംവാഹനംസ്മൃതം।
വിശ്രാമേന്മദ്ധ്യമേഭാഗേ ഭാഗേചാന്ത്യേയഥാസുഖം॥
യാത്രായാത്വരയാനിത്യം സംസൃഷ്ടോയത്രവാഹ്വനി।
വാഹയേത്തത്രയാമാംസ്ത്രീൻ നസവാഭവേന്നിർവൃതേ॥
ചന്ദ്യാവാഹയന്രാജന്നിയതംയാതിരൌരവം।
രാത്രിംവാഹയംസ്തേഷാം യസ്ത്വാഗോഹാന്നരാധമഃ।
ഭ്രൂണഹത്യാസമംപാപം തസ്യസ്യാദ്വർമ്മബന്ധനം॥

వాహయేద్ధుంకృతేనైవ శాఖయావాసపత్రయా।
నదండేనన యష్ట్యావా నపాశేనన వాపునః ॥
నక్షుత్తృష్ణాశ్రమక్రాంతం వాహయేద్వికలేంద్రియం।
సుతృప్తేషుతుభుంజీయా త్పిబేత్పీతేషుచోదకం ॥
అహ్నఃపూర్వంద్వియామంవా ధుర్యాణాంవాహనంస్మృతం।
విశ్రామేన్మధ్యమేభాగే భాగేచాంత్యేయథాసుఖం ॥

యాత్రాయాత్వరయానిత్యం సంశ్రయోయత్రచాధ్వని।
వాహయెత్తత్రధుర్యాంస్తు నసపాపేనలిప్యతే॥
అన్యథావాహయన్రాజ న్నియతంయాతిరౌరవం ।
రుధిరంవాహయంస్తేషాం యస్తుమోహాన్నరాధమః॥
భ్రూణహత్యాసమంపాపం తస్యస్యాత్పాండునందన ॥

வாஹயெத்தும்கிருதெ நைவஸாகயாவா ஸபத்ரயா
நதண்டேநயஷ்ட்யாவா நபாஷேநவாபுந:
நக்ஷுத்துருஷ்ணாஸிரமகாந்தம் வாஹயேத்விகலேந்திரியம்
ஸுத்ருப்தேஷுதுபுஞ்ஜீயாத்பிஜேத்பீதேஷுசோதகம்
அஹ்ந:பூர்வம்திவியாமம்வா துர்யாணும் வாஹநம்ஸ்ம்ருதம்
விஸ்ராமெர்மத்யமேபாகேபாகே சாந்தியெயதாஸுகம்
யாத்ராயாத்வரயாநித்யம்ஸ்ம் ஸரயோயத்ரசாத்வநி
வாஹயெத்ததிரதுர்யாம் ஸ்துநஸ்பாபேநலிப்யதே
அன்யதாவாஹயந்ராஜந் நியதம்யாதிரௌரவம்
ருதிரம்வாஹயம்ஸ்தேஷாம்யஸ்து மோஹாந்நராதம:
புரூணஹத்யாஸமம்பாபம் தஸ்யஸ்யாத்பாண்டுநந்தந

ஊங்கார சத்தமாத்திரையானே எருதுகளை ஓட்டுதல் செய்யவேண்டும். அல்லது இலைகளோடுங்கூடிய வளாரினாலாவது ஓட்டவேண்டும். பெருங்கட்டை, தடி, சிறுத்தகோல்கள், கயிறு இவைகளால் ஓட்டுதல் செய்யலாகாது. ஒருக்கால் ஓட்டிய எருதை யடிக்கடி யோட்டலாகாது. பசிதாகத்தினையுடையதனையும் இளைப்படைந்ததனையும் அவயவக்கருவிகள் கெட்டுள்ளதனையும், பாரம் சுமப்பிக்கலாகாது. உழுத எருது திருத்தியடைந்த பின்னரே தான்புசிக்கவேண்டும். அது நீர் குடித்த பின்னரே தானும் நீர் குடிக்கவேண்டும். உச்சிக்குமுன் இரண்டு யாமப்போதளவே வேலைசெய்வித்தல்வேண்டும். சுமக்கத்தக்க அளவேபாரம்வைத்தல்வேண்டும். நடுப்

பகலிலும் மாலையிலும் இராவிலும் சுமைத்தொழிலின்றிச் சுகமாகவைத்தல்வேண்டும். ஆயின், ஒருதலையான பயணவிரைவினால் நாடோறும் வழிநடக்கவேண்டியதாக நேர்ந்தபொழுது பாரஞ்சுமக்கத்தக்க நல்ல பலமுள்ளதனையாராய்ந்து இருபோதினும் வேலைசெய்விக்கலாம். அப்படிச்செய்யும் ஒருவன் மாத்திரம் பாவத்தாற் பூசப்படமாட்டான். அவ்வாறன்றி இரண்டு காலங்களிலும் வேலைசெய்வித்தவன் இரௌரவம் என்னும் நரகினுக்குச் செல்வன். எவன் அறிவில்லாமையால் அவ்விடப சாதிக்கு இரத்தம்வரும்படி செய்கிறானோ அவனுக்குக் கருக்கொலை அல்லது சிசுக்கொலை செய்த பாவம்வரும்.

**உழவேருதை வருத்தினதற்குப் பிராயச்சித்தம்.**

ஆசாரகாண்டம் 5-ஆவது சுலோகம்.

ஜப்யம் தேவார்ச்சநம் ஹோமம் ஸ்வாத்யாயம் சைவமப்யஸேத் ஏகத்ரிசதுர்விப்ராந் போஜயேத் ஸ்நாதகாந் த்விஜ:॥

జప్యం దేవార్చనం హోమం స్వాధ్యాయం చైవమభ్యసేత్
ఏకం త్రిచతుర్విప్రాన్ భోజయేత్స్నాతకాన్ ద్విజః॥

ஜப்யந்தேவார்ச்சநம்ஹோமம்
ஸ்வாத்யாயஞ்சைவமப்யஸேது
ஏகத்ரிசதுர் விப்ரான்போ
ஜயேத்ஸ்நாதகான்த்விஜ:.

இங்ஙனம் உழவுக்குண்டையை வருத்திய தீமையுற இருபிறப்பினர் மூவரும், நவம் தேவபூசனை வேள்வி வேதமோதல் பலகாற்புரிவதன்றி வேதியரை நாடோறு முண்பிக்கவேண்டும்.

அவ்வுழவினுக்கு இன்றியமையாத துணைக்கருவியாயுள்ளது எருதுகளாதலின் அவற்றைப்பற்றிச் சிலகூறுதும்.

## உழவர்.

வண்டிக்காரன் என்னுமிடத்து வண்டியுடைய எசமானுக்கும் வண்டியை நடத்தும் சூத்திரனுக்கும் பொருளாமாறுபோல, உழவர் என்பதும் ஏவுதற் கருத்தா இயற்றுதற் கருத்தா ஆகிய இருவருக்கும் பொருளாமாறுகாண்க.

ஏவுதற் கருத்தாவாகிய உழவர் வேளாளராம். இயற்றுதற் கருத்தாவாகிய உழவர் பண்ணையாட்களாகிய சூத்திரராம்.

இப்பகுப்பறியாமாக்கள் இவ்வுழவு வேளாளராயுள்ள வைசியர்க்குரியதென்னாது சூத்திரராதியர்க்குரிய தெனக் கொள்ளுகிறார்கள். இன்னும் இவ்வுழவைப்பற்றிச்சுக்கில யசுர்வேதம் 30-ஆவது அத்தியாயத்தில் நின்றும் Wilson துரை என்பவரால் எடுத்தெழுதப்பட்டிருக்கின்றது.

Tillage is in the hands of the Vaishya, who, it is to be noticed, is distinct from the Vani or Merchant. The symbalical representative of toil is the Shudra.

வேளாண்மை அல்லது உழவு என்பது வைசியர்க்குரிய தொழிலாம். அவ்வைசியரோ வணிகருள் ஒருவரல்லர். தொழிலாளிகள் சூத்திரரென்று சொல்லப்படுவர்.

இதனால் வேளாண்மைக்குரியர் வணிகருமல்லர் சூத்திரருமல்லர். எனவே வேளாளரென்பது தேற்றம்.

கூலிவேலை செய்பவனும் கொண்டுவிற்கும் வணிகனும் எதிரியின் இலாபத்தைக்கெடுத்துச் சுயலாபத்தையே கொள்வாராகலின், இவர்கள் வஞ்சகரென ஒழிவிலொடுக்கத்தினுங் கூறப்படுகின்றனர்.

கூலித்தொழிலாளர் கொண்டுவிற்போர் போன்ற குரு
வேலைப் பதடிகளை மேவாதே—காலமபோற்
பார்த்திருக்க வைத்த பரமகுரு வைப்பரவ
வார்த்தையிலே நீண்டா மனம்.

கூலியாளரும் வணிகரும் எங்ஙனம் வஞ்சகராவாரெனின்? கூலிக்கு வேலைசெய்கிறவன் பொழுதின்மேலே கண்ணோக்கமேயொழிய எஜமான் வேலையின்மேல் கண்ணிராது. வேலையானாலும் ஆகாவிட்டாலும் பொழுதுபோனால் சம்பளம் வந்துவிட்டதென்றிருப்பார். அறுபடைக்காலத்தில் கூலியாளை வைத்தறுத்தால் "அரிவாளும் அசைந்தாற்போலிருக்கவேண்டும் ஆண்டைகுடியுங் கெட்டாற்போ லிருக்கவேண்டும்" என்று கூறுவதுபோலப் பொழுதுபோக்கலேயொழிய வேலை நடப்பதில்லை. இந்தக் கூலியாட்களின் குணங்களை வெளிப்படுத்துவாராய், சோமசுந்தரக்கடவுள் பிட்டுவாணிச்சிக்கு ஆளாய்வந்து கிரமமாக வேலைசெய்யாமல் பிட்டைமாத்திரம் அடிக்கடிவாங்கிப் புசித்துவிட்டு விளையாடிக்கொண்டு பொழுதுபோக்கினதே பிரமாணமாம். பின் பாண்டியராசன் பிரம்படி கொடுத்தபோது கரைபோட்டு முடித்ததும் கூலியாட்களின் திறத்தை வெளிப்படுத்தியதாம். இனி, கொண்டுவிற்போர் யோக்கியதையைக் கூறவேண்டுவதில்லை "வியாபாரந் துரோகசிந்தா" என்றபடி அரைப்பணத்துக்கு வாங்கி ஐந்துபணத்துக்குக் கொண்டதென்று வந்தவன்றலையி லடிப்பதும், அரிசியோடு நொய் தவிடுகளைச்சேர்த்து விற்பதும், க்ஷாமகாலத்தில் ஒருமூட்டையில் பாதிமணலும் பாதி அரிசியுமாகக் கலந்துவிற்பதும், விறகுக்கடையில் பெரியவிறகை விலைபேசிப் பொடிவிறகைக் கலந்துவிற்பதும் கண்டிருக்கிறோம். கேட்டால் ஐந்துவிரலும் சரியாயிருக்கிறதா அப்படித்தானிருக்குமென்று வம்புவழக்குகள்பேசி, வந்தவனை மோசஞ்செய்து விற்பதைக்கண்டிருக்கிறோம். ஆகையால்இவ்விருவரும் வைசியர்களாகாரென்பது கருத்தாம்.

மநு. 9-332.

ஹ்ரு தீ்ரா நாம்வஹ்ரு திம்விசீராஷூாஷாஶ்ரு வியா நீரணாம்
ஊ்ருவீராணாம்ஸா நயொமாம்ஶ்ரு க்ரு யவி க்ரு யமேவவ ||

భృత్యానాంచభృతింవిద్యా ద్భాషాశ్చవివిధాన్నృణాం
ద్రవ్యాణాంస్థానయోగాంశ్చ క్రయవిక్రయమేవచ॥

புறுத்தியாநாஞ்சபுறுதிம்வித்பாத் பாஷாஸ்சவிவிதாகிருணும்
திரவியாணும்ஸ்தான்யோகாம்ஸ்ச கிரயவிக்கிரயமேவச

இ-ள். வைசியனுனவன் பயிர்வேலை செய்பவர்களுக்கும் மாடுமேய்ப்பவர்களுக்கும் தேசம் காலம் இவைகளுக்குத்தக்க படி சம்பளம் கொடுப்பதை ஆலோசிக்கவேண்டும். பின்னும் நானுதேசத்தில் வழங்குகிற பாஷையை யறியவேண்டும். சாக்குகளைச் சமயம்பார்த்து விற்கவும் வாங்கவும் வேண்டும்.

மேற்கண்ட சுலோகம் பயிர்வேலைக்கு ஏவுதற் கருத்தாவும் இயற்றுதற் கருத்தாவும் உளரென்பதைப் பிரித்துணர்த்துகின்றது.

வேளாளர்கள் உழவினைப் பண்ணையாட்களைக் கொண்டு செய்வதேயன்றித் தாங்கள் செய்வதில்லையாம். இதற்குப்பிரமாணம்.

CHINGLEPUT MANUAL OF 1879 P. 50.

Brahmins and Vellalars seldom themselves work on the farm. Indeed, the Sastras distinctly forbid a Brahmin to plough and it is used to be a recognized custom to make a deduction called Brahma-naminah from the Government demand against this class in order to compensate them for the extra expense involved by this disability. The lands of Brahmins and Vellalars are generally cultivated by farm servants either Pullis or Pariahs.

1879-ஸூத்திய செங்கல்பட்டு ஜில்லாச் சரித்திரம்.
50-ஆவது பக்கம்.

வயல்களில் அந்தருணம் வேளாளரும் சுயமாகவேலை செய்வதில்லை. பிராமணர்கள் உழப்படாதென்று சாஸ்தி

ரங்கள் விளங்கக்கூறுகின்றன. இந்தப்பலக் குறைவினால் இவர்களுக்கு அதிகவிரயத்தினிமித்தம், இராஜங்கத்துக்குக் கொடுக்கும் தீர்வையிலிருந்தும், பிராமணுமினும் என்று சிறிதுபாகந் தள்ளிக்கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. பிராமணர் வேளாளர்களின் நிலங்கள், சாதாரணமாகப் பள்ளி அல்லது பறையர் ஆகிய பண்ணையாட்களால் பயிர்செய்யப்படுகின்றன.

### TANJORE MANUAL OF 1883.

The occupation of the generality of the Vellalars is agriculture in which they excel all other classes; but many are found in the various grades of the Government service more especially as Karnams or village accountants; some are engaged in trade. They do not however condescend to work of a degrading nature. They carry on agriculture by Pannials or Prædial loberers. "

### 1883வுடு-த்திய தஞ்சாவூர் ஜில்லாச் சரித்திரம்.

வேளாளர்தொழிலுள் சாதாரணத்திலுள்ளது கிருஷியேயாம். இதில், எல்லாரையும்விட இவர்கள் மேம்பட்டவராக இருக்கிறார்கள். அநேகர் இராஜாங்க உத்தியோகத்திலமர்ந்திருக்கிறார்கள். பெரும்பாலும் கிராமக் கணக்கராயிருக்கிறார்கள். சிலர் வர்த்தகமுஞ் செய்கிறார்கள். ஆனபோதிலும், அவர்கள் குறைவான வேலைகளில் பிரவேசிக்கிறதில்லை. அவர்கள் வேளாண்மையை அல்லது கிருஷியைப் பண்ணையாட்களைக் கொண்டு நடத்துகிறார்கள்.

### MADURA MANUAL OF 1868, PAGE 30.

Most Vellalars support themselves by husbandry, which according to native ideas is their only proper means of livelihood. But they will not touch the plough, if they can help it; and ordinarily they do every thing by means of hired servants and prædial slaves.

வேளாளர் அறுதொழில் விளக்கம். சுசுஎ

1868-ஆண்டுத்திய மதுரைஜில்லாச் சரித்திரம் 30-ஆவதுபக்கம்.

வேளாளர் பெரும்பான்மையும் கிருஷியினாலே ஜீவனஞ் செய்கிறார்கள். இந்துக்கள் அபிப்பிராயப்படி இதுதான் அவர்களுக்கு உரியதொழிலாயிருக்கிறது. சாத்தியமானவரையில் வேளாளர் மேழி பிடிக்கமாட்டார்கள். சாதாரணத்தில் சகலமும் கூலியாள் அல்லது பண்ணையாட்களைக் கொண்டுசெய்கிறார்கள்.

MADURA MANUAL. PAGE 57.

Pallars are a very numerous, but a most abject and despised race, little of indeed at all superior to the loathed Pariahs. Their principal occupation is ploughing the lands of more fortunate Tamilians: and though nominally free they are usually slaves in almost every sense of the word; earning by the ceaseless sweat of their brow a bare handful of grain to stay the pangs of hunger, and a rag with which to partly cover their nakedness. They are to be found in almost every village, toiling and moiling for the benifit of Vellalars and others; and with the Pariahs doing patiently nearly all the hard and dirty work that has to be done. Personal contact with them is carefully avoided by all respectable men; and they are never permitted to dwell within the limits of a village *nattam*. Their huts form a small detached hamlet, the *Pallacheri* removed to a considerable distance from the houses of the respectable inhabitants and barely separated from that of the Pariahs, the Parei-cheri.

மதுரைஜில்லாச் சரித்திரம், 57-ஆம் பக்கம்.

பள்ளர் என்பவர் மிகப்பெருத்துள்ளகூட்டத்தினராம். ஆனால் அவர்கள் மிகவுங்குறைவாயும் அலெட்சியமாயுமுள்ள சாதியராம். அவர்கள் எவ்வளவும் இழிவான பறையருக்கும் மேம்பட்டவரல்லர். அவர்களின் முக்கிய தொழிலானது செல்வ

ராயுள்ள தமிழர்களுக்கு உழவுதொழில் செய்வதாம். இவர்கள் சுதந்தரராய்த் தோற்றினபோதிலும், இடைவிடாது நெற்றி வியர்வை சிந்த உழைத்துப் பசிநோய் தணிக்க ஒரேபிடிநெல்லும், மானத்தைக்காக்க ஓர்சுற்றுக்கந்தையும் சம்பாதிக்கிறபடியால், இவர்கள் பலவிதத்தாலும் சாதாரணத்தில் அடிமை ஆட்களென்றுபொருளாகின்றது. வேளாளருக்கும் பிறர்க்கும் இவர்கள் உழுவதையும் நீர்பாய்ச்சுவதையும் சகலகிராமங்களிலும் காணலாம். செய்யவேண்டிய கடுமையாகியசகலவித இழிதொழிலையும் பறையரோடிருந்து பொறுமையுடன் செய்கிறார்கள், கௌரவமாயுள்ளவர்கள் ஒருவரும் இவர்களைத் தீண்டார்கள். இவர்கள் நத்தங்களில் குடியிருக்கப்படாது. இவர்களிருக்கும் குடிசைகள் ஊருக்குப்புறம்பாக வெகுதூரத்தில் பறைச்சேரியுடன் சேராது பள்ளச்சேரி எனப் பிரத்தியேகமாக இருக்கின்றன.

MADURA MANNAL PAGE 75

The Parayans (Parayas) are very numerous. Their original occupation is said to have been beating the parei or tom-tom at funerals ; but as they increased and multiplied they were obliged to do indiscrimenately all kinds of menial and degrading work. They are now employed everywhere as prædial slaves, scavengers, burners, and buriers of corpses, musicians and the like; and where there are Europeans, as gentlemen's servants. They are still theoretically loathed and despised by all but a few of the lowest classes of natives; their touch defiles; and their mere presencc is believed to taint the air. They are obliged to live apart from their employers in separate quarters, called the *Parei-cheri*, and must never come near a Brahman cr a Vellalan or indeed any respectable man.

மதுரை ஜில்லாச் சரித்திரம் 75-ஆவது பக்கம்.

பறையர் பெருத்த கூட்டத்தாராம். இவர்கள்தொழில் சாவுக்குப்பறையடித்தலாம். இவர்களில் சனங்கள் பெருகவே

இவர்கள் வித்தியாசமில்லாமல் பலவித ஈனத்தொழில்களைச் செய்யவுடன்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இக்காலத்தில்எவ்விடத்தும் பண்ணைவேலைசெய்யும் முறிகளாகவும் தோட்டிகளாகவும் பிரேதங்களைப்புதைக்கிறவர்களாகவும் சுடுகிறவர்களாகவும் வாத்தியம்வாசிக்கிறவர்களாகவுமிருக்கிறார்கள். ஐரோப்பியர்களுள்ள இடங்களில் துரை வேலைக்காரர்களாகவு மிருக்கிறார்கள். சிலகீழ்மக்களொழிய மற்ற எல்லாரும் இவர்களிடத்தில் அருவருப்பும் அலெட்சியமு முடையவர்களாகவிருக்கிறார்கள். இவர்களைத்தீண்டினால் தீட்டாகிறது. இவர்களிருந்தவிடத்தில் காற்றும் அசுத்தப்படுகிறது. தங்கள் ஆண்டைகளிருக்குமிடத்துக்குப்புறம்பாக இவர்கள்வசிக்கவேண்டும். அதற்குப் பறைச்சேரி என்றுபெயராம். இவர்கள் பிராமணன் வேளாளன் சமீபத்தினும் வேறு பெரியமனிதர்கள் சமீபத்தினும்வரக்கூடாது.

TANJORE MANUAL PAGE 379.

In the case of Pannai cultivation, the laborers employed are either Pariahs or Pallars or Sudras of the ordinary Palli or Vannia class, such hired laborers are employed also by Purakudies, when, as on occassions of planting, weeding and reaping a large number of hands are required. Ploughing and other ordinary operations are performed by Purakdies themselves and their families. The status of all Panneyals in former days was slavery. From the report of the Tanjore Commissioners (1799) it appears that the land holders bought and sold them to each other as they did their cattle. The price then current having been 20 chakrams, equal to a little over 31 Rs each ; but no vestige of slavery now remains. On the other hand, the general complaint now is, that the Panneyals desert the Mirasidars without working out their advances, and that the advances are often lost from want of assets."

தஞ்சாவூர்ஜில்லாச் சரித்திரம் 379-ஆவது பக்கம்.

பண்ணை பயிரிடுவதில் ஆட்களாயுள்ளவர்கள் பறையர் பள்ளர் அல்லது சூத்திரரில் சாதாரண பள்ளி அல்லதுவன்னியரெல்லாம் புறக்குடியாரும், நாறுநடவு களைபிடுங்கல் அறுப்பு இக்காலங்களில், வேண்டுமான வரையும் பெருங்கூட்டமாக இவர்களைக் கூலியாளாகவைத்துக்கொள்ளுகிறார்கள். உழவும் மற்றச் சாதாரண வேலைகளும் புறக்குடியார்களே தாங்களும் தங்கள் பெண்டுகளுமாக இருந்து செய்கிறார்கள். பூர்வத்தில் சகல பண்ணையாட்களின் நிலைமையும் அடிமைத்தனமாம், தஞ்சாவூர் கம்மிஷனர்களின் (1799ஞு) ரிப்போர்ட்டு அல்லது அறிக்கைப் பத்திரிகையினால் காணியாளர்கள் ஒருவர்க்கொருவர் இவர்களை ஆடுமாடுகளைப் போலவே விலைச்குக் கொள்ளவும் கொடுக்கவுமாக இருந்தார்கள். அக்காலத்து விலைப்பருவம் ஒவ்வொரு அடிமையும் 20 சக்கரமாம். அது 31 ரூபாய்க்குக் கொஞ்சம் உயர்வாகவே யிருக்கும், இக்காலத்தில் அடிமை யென்பதின் அடையாளமே யில்லையாம். இது நிற்க, அந்தப்பக்கத்தில் பார்க்கும்போது, பண்ணையாட்கள் தாங்கள் வாங்கியிருந்த முன்பணத்துக்கு வேலைசெய்யாமலேயே, மிராசுதார்களைவிட் டோடிப்போகிறார்கள் என்றபிராதுகள் மிகப் பெரிதாயிருக்கின்றன. ஓடிப்போனவனிடத்துச்சொத்தில்லாமல் போவதால் கொடுத்திருந்த முன்பணம் ஈடில்லாமல் நஷ்டப்படுகின்றது.

வேளாளருக்குப் பறையர் எழுதிக்கொடுத்த அடிமை சாதனம்.

1852ஞு-த்திய மிராசுரையிட்டு 48-ஆவது, பக்கம்.

சுவஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலேஸ்வர ராஜாதிராஜராஜ பரமேஸ்வர ராஜ குலதிலத ராஜமார்த்தாண்ட பாஷைக்குத் தப்புவராதக்கண்ட கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதோன், எம்மண்டல முந்திறைகொண்டு ஈழமுந்திறைகொண்டு, தலைகொண்ட கண்டன், துலுக்க தளவி

பாடன், துலுக்கமோகந் தவிர்த்தோன், மனுசூர மகாசூர மகாமண்டலாதிபதி, அஸ்வபதி நரபதி கெஜபதி கெஜ மன்னன், சூரத்தானன், ராயசூரத்தானன், ராஜாதிராஜன், ராஜகெம்பீரன், ராஜநாராயணன், சேனவாசிசூரன், தீனவர் த்தோழன், சத்துருக்கள்கண்டன் நவகோடி நாராயணன், பூ லோகபுரந்தான், அசுவகுணகுலன், விருதுநரபாலன், கோத ண்டராமன், கலியுககர்நன், தெக்ஷணசுலுத்தானன், இந்து ராயர்சுலுத்தானன், அஷ்டாங்க மனோபயங்கரன், மத்தகாசி னிமானுபரணன், இரணரங்காவேசியர் புயங்கன், உபயகுல திலத கடகத்தளவிபாடன், ராயர்க்குத் தக்ககண்டன், நாக லோக நரபாலன், பூலோகபுரந்தரன், உத்தரதெக்ஷண பூர்வப ச்சிம சத்தசமுத்திராதிபதி, செஜவேட்டை கண்டருளிய ஸ்ரீவீரப்பிரதாபன், சோழமண்டல ஸ்தாபனுசாரியன், தொ ண்டமண்டல ஸ்தாபனுசாரியன், பாண்டிமண்ட ஸ்தாபனு சாரியன், ஈழமண்டலமுங்கொண்டருளிய ராஜாதிராஜ ராஜ பரமேஸ்வரன், ஸ்ரீவீரப்பிரதாப ஸ்ரீவீரவேங்கடபதி ராயர் ஐயர் தேவமகாராயர், பிருதிவிராச்சியம்பண்ணி யருளாநின்ற சகாப்தஹூ 1512-க்குமேற் செல்லாநின்ற விளம்பி-ஹூ அற் பிசிமீ 5வ செயங்கொண்ட சோழமண்டலத்துக் குலோத் துங்க சோழவளநாட்டுப் புழல்கோட்டத்து எழும்பூர் நாட் டில் தண்டையார் பேட்டையிலிருக்குங் கொட்டி பெரியான் மகன் பெரிய திம்மன் சின்னதிம்மன் உள்ளிட்டாரும், அடி மை விலேப்பிரமாணம் பண்ணிக்கொடுத்தபடி எங்களுடன் பிறந்த பெண் வெள்ளச்சியையும், அவள்மகள் பெரியாளே யும், ஷை மகள் சோலேச்சியையும், ஆக இந்த 3-பேரையும் கொத்தடிமையாகக் கொள்வாருளரோ வென்று முற்கூற, இம் மொழிகேட்டு இதற்கு எதிர்மொழி கொடுத்தோன், இம்மண் டலத்து இக்கோட்டத்து இந்நாட்டில் வல்லூரிலிருக்கும் வே ளாளரில், வாண்டராய உலகநாதமுதலியார் மகனுன் ஒற்றியப் பமுதலியார் விலே கூறித்தரில் நானேகொள்வேனென்றுபிற்

கூற, முற்கூறிய பெரிய திம்மன் சின்னதிம்மன் உள்ளிட்டாரும் பிற்கூறிய ஒற்றிப்பமுதலியாரும் எம்மிலிசைந்து, தம்மில்பொருந்தி, திருமயிலாப்பூர் மண்ணுளர் மனைகொள்வர் முன்பாக இந்தப் பறைச்சி வெள்ளச்சியையும், அவள் மகள் பெரியாளையும், மேற்படி மகள் சோலைச்சியையும், இந்த 3-பேரையுங் கொத்தடிமையாக விலையாக நிச்சயித்த கெட்டி. வராகன் 2. இந்தவராகனிரண்டிற்கும், இந்த வெள்ளச்சியையும், இவள் மகள் பெரியாளையும், இவள் மகள் சோலைச்சியையும், இந்த மூன்றுபேரையும், விற்றுவிலைப் பிரமாணம் பண்ணிக்கொடுத்தோம். இருக்காலாவது, முக்காலாவது, இதுவே விலைப்பிரமாணமதாகவும்விற்று, விலைப்பிரமாணமதாகவும் இதுவல்லது, வேறுவிலைப்பொருள் மாவறுதிப்பொருள் சில ஓலைக்காட்டென்று சொல்லப்பெறுவதல்லாததாகவும் இந்த வெள்ளைச்சிக்கும், இவள் மகள் பெரியாளுக்கும் இவள்மகள் சோலைச்சிக்கும், யாதொரு கலனுமில்லை. கலனுளதாய்த் தோற்றப்படில், நாங்களே முன்னின்று கலன் தீர்த்துக்கொடுக்கக் கடவோமாகவும். இப்படிச் சம்மதித்து, இந்த வெள்ளச்சியையும், இவள் மகள் பெரியாளையும், இவள் மகள் சோலைச்சியையும், இந்த மூன்று பேரையும், ஒற்றிப்பமுதலியாருக்கு விற்றுவிலைப்பிரமாணம் பண்ணிக்கொடுத்தோம். பெரியதிம்மன் சின்னதிம்மன் உள்ளிட்டாரும். இவை பெரியதிம்மன் சின்னதிம்மன் உள்ளிட்டார் கைநாட்டு.

---

வேளாளருக்குப் பள்ளியெழுதிக்கொடுத்த அடிமை சாதனம்.

சுவஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலேஸ்வர மேதினிகண்டன், கண்டகட்டாரி சாருவன்; ஆரியதளவிபாடன், ஆரியமோகந்தவிர்த்தோன்; ஒட்டியதளவிபாடன், ஒட்டியமோகந் தவிர்த்தோன், பாஷைக்குத் தப்புவராதகண்டன், மூவராயகண்டன், கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதோன், இம்மண்டலமுங் கொண்டு ஈழமுந்திறைகொண்ட இராஜாதி ராஜ இராஜ பரமேஸ்வர இராஜமார்த்தாண்டன், இராஜகெம்பீரன்,

இராஜதுரந்தரன், பிற்பட்டதேவமகாராயர் இராமதேவ மகா ராயர் அருள்தேவமகாராயர் கிருஷ்ணதேவ மகாராயர் ஸ்ரீ ரங்கராயர், இவர்கள் பிருதிவி ராஜ்யம் பண்ணுகையில் சாலி வாகன சகாப்தம் 1068௵-க்கு மேற்செல்லா நின்ற பிரப வ௵ ஆனிமீ 14௳ சனிவாரநாள் துதிகை திருவோண நட்சத்திரமுங்கூடின சுபதினத்தில் தொண்டமண்டலத்தைச் சேர்ந்த செஞ்சிராஜ்யம் வழுதிலம்பட்டுக் காவடிக்கு வடக்கு, வக்கரைக்குத் தெற்கு, ஓவற்கு மேற்கு, கூழையானைபோன வழிக்குக்கிழக்கு, மலைக்சழிஞ்சிப்பத்தில் சேர்ந்த கோட்டப்ப ட்டிவிருக்கும் பாரிவாக்கம் மாரியப்ப முதலியாரவர்களுக்கு கருக்களாம் பாக்கத்திலிருக்கும் பள்ளிகளில், சின்னப்பயல் என்பெண்சாதி சேவி நாங்களிருவருங் கிறையசாதன முறி கொடுத்தபடி: எங்கள் குமாரத்தியான குழந்தையைக் கொள் வாருளரோ கொள்வாருளரோ வென்று நாங்கள் முற்கூற, தாங்கள் கொள்ளுவோங் கொள்ளுவோமென்று பிற்கூறுகை யில், எம்மிலிசைந்துதம்மில் பொருந்தி நால்வர்கூடி மூவர்மதி த்துக்கிறைய நிச்சயித்த நக்ஷத்திர வராகன் 1. இந்த வராகன் ஒன்றும், நாங்கள் பற்றிக்கொண்டு எங்கள் மகள் குழந்தை யைக் கிறையமாகக் கொடுத்தபடியினலே இந்தக் கிறையசாத னம் புத்திர பௌத்திரபாரம்பரியமாகச்சந்திராதித்தர் வரைக் கும் இந்தக் கிறையசாதனம் அனுபவித்துக் கொள்ளக்கடவீ ராகவும், இந்தக் கிறையசாதனத்துக்கு யாதொரு கலனில்லை. கலனுண்டென்று யாராமொருவர்வந்தால், ஏறுமண்டல மேறி நாலே தீர்த்துக் கொடுக்கக்கடவேனுகவும். இந்தப்படி சம்மதி த்து எங்கள் ராஜியில் மாரியப்பமுதலியாரவர்களுக்குச் சின் னப்பயலும் சேவாத்தாளும் கிறைய் சாதனமுறி கொடுத் தோம். இதற்குச் சாட்சிகள்.

நத்தம்பட்டு அன்னப்பரெட்டியார்.
சந்தக்குமாரபுரம் வெங்கடபதி ரெட்டியார்.
தோட்டப்பட்டுக்குடி வெங்கட்ட ரெட்டியார்.

உள்ளூர் தச்சவீரப்பாசாரி.
கருமார சின்னக்குட்டியாசாரி.
அழகப்பெருமாள் முதலியார்.
பாளையக்காரர் குமஸ்தா துளசிராவு.
தொட்டிகளில் குப்பிரி நாய்க்கன்.

இந்த முறியெழுதின நன்மைக்குத் தோட்டபட்டு ஊர் கணக்கு, குழந்தை கையெழுத்து.

—இவை சின்னப்பயல் கைநாட்டு.
—இவை சேவாத்தாள் கைநாட்டு.
—இவை குழந்தையம்மான் தேப்பெருமாள் கைநாட்டு.

---

இனி, பயிர்த் தொழில் செய்பவன் பயிர் அறுபடையான காலத்துக் களவேள்வி செய்யவேண்டும்.

**களவேள்வி.**

பிள்ளையார் ஐயன் பிடாரி முதலிய கிராமதேவதைகளுக்கு, கொடுக்குந் தேவதத்தமும்,

பஞ்சாங்கம் புரோகிதன், முதலிய அந்தணர்களுக்குக் கொடுக்கும் பிரம தத்தமும்,

கொல்லன் தச்சன் குயவன் வண்ணான் பரிகாரி பள்ளி வலையன் இடையன் தோணிக்காரன் காவலாளி பறையன் வெட்டியான் தலையாரி கொம்புக்காரன் முதலியவர்களுக்குக் கொடுக்கும் வருஷ வர்த்தனையும்,

களங்கூட்டடுகிறவன் வேஷக்காரன் கூத்தாடி பிடாரன் முதலியவர்களுக்குக்கொடுக்கும் பிச்சைக்கதிர்களும் களவேள்வியாம்.

எழுபது.

பார்வேந்தர் பெருஞ்செல்வம் பழுதுபடாதொருநாளு
மோர்வேந்தர் பெருஞ்செல்வமழிவுபடா திருத்தலினற்

நேர்வேந்தர்போர்க்களத்துச் சிலர்வெல்வர்சிலர்தோற்ப
ரேர்வேந்தர்போர்களத்து ளிரப்பவருந்தோலாரே.

இதனால் களத்தின்கண் வரப்பட்டவர்களுக்கெல்லாம் இல்லை என்னாது கொடுப்பவர்கள் வேளாளர்கள் என்பதாயிற்று.

## களவேள்வி செய்யாவழி வருந்துற்றம்.

### பாராசரம் ஆச்சாரகாண்டம் 2-ஆம் அத்தியாயம்.

யோ நதத்யாத்த்விஜாதிப்யோ ராஸிமூலமுபாகதஃ|
ஸசோரஸ்ஸசபாபிஷ்டோ ப்ரஹ்மக்நம்தம்விநிர்திஸேத்||

యోనదద్యాద్ద్విజాతిభ్యో రాశిమూలముపాగతః
సచోరస్సచపాపిష్ఠో బ్రహ్మఘ్నంతంవినిర్దిశేత్.

யோநதத்யாத்திவஜாதிப்யோ ராஸிமூலமுபாகதஃ
ஸசோரஸ்ஸசபாபிஷ்டோ பிரஹ்மக்நம்தம்விநிர்திசேத்.

இ-ள். நெற்போரடிக்குவந்த உழவுத்தலைவன் வேதியர் பொருட்டு விளைபயனைக் கொடுப்பதில்லையேல் அவனே கள்ளன், அவனே, பாவத்துள்ளான், அவனேயே வேதியனைக் கொன்றவனென்று காட்டி விடப்படும் எ-று.

உழவோனுக்கு அக்களவேள்வி நித்தியமோ, காமியமோ, எனில், நித்தியம் காமியமென்னும் இருவகையுமாமென்று இருவகையுரைவலியாலும் விளங்குகின்றது. என்னை? செய்யாவிடிற் பாவம்வருகின்றதெனவே நித்தியமாயிற்று. மரம்வெட்டியது முதலிய பாவங்களை யொழிக்கின்றதென்றதனாற் காமியமாயிற்று.

### சிவபுராணம்.

க்ஷேத்ராக்ஷேத்ரேஷு யஸ்து யாந்நம் ப்ரயச்சதி|
தஸ்ய த்ருஷ்ணா ஹிநஸ்தஸ்ய ஸ்வாவம் தந்நஹ்மவேத்||

𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌵𑌰𑍍𑌷𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌦𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑍃𑌷𑌿𑌕𑌾𑌰𑌕𑌃।
𑌮𑌰𑍁𑌦𑍇𑌶𑍇 𑌭𑌵𑍇𑌦𑍍𑌵𑍃𑌕𑍍𑌷𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌫𑌲𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃॥
𑌤𑌸𑍍𑌯𑌾𑌂 𑌤𑍇 𑌮𑌾𑌨𑍁𑌷𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍𑌕𑌾𑌲𑌪𑌰𑍍𑌯𑌯𑌾𑌤𑍍।
𑌦𑌰𑌿𑌦𑍍𑌰𑍋 𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌤𑍋 𑌮𑍂𑌰𑍍𑌖𑌃 𑌕𑍁𑌲𑌹𑍀𑌨𑌶𑍍𑌚 𑌜𑌾𑌯𑌤𑍇॥

అథత్వాకర్షకో దేవి యస్తుధాన్యంప్రవేశయేత్
తస్యతృష్ణాభిభూతస్యయ త్పాపంతన్మహద్భవేత్
దివ్యంవర్షసహస్రంతు దురాత్మాకృషికారకః
మరుదేశేభవేద్వృక్షస్సు పుష్పఫలవర్జితః
తస్యాంతేమానుషోభూత్వాకదాచిత్కాలపర్యయాత్
దరిద్రోవ్యాధితోమూర్ఖః కులహీనశ్చజాయతే.

அதத்வாகர்ஷகோதேவி யஸ்துதான்யம்பிரவேஸயேத்
தஸ்யதிருஷ்ணாபிபூதஸ்ய யத்பாபந்தன்மஹத்பவேத்
திவ்யம்வர்ஷஸஹஸ்ரந்து துராத்மாகிருஷிகாரக:
மருதேஸேபவேத்விருக்ஷஸ்ஸு புஷ்பபலவர்ஜித:
தஸ்யாம்தே மாநுஷோபூத்வா கதாசித்காலபர்யயாது.
தரித்திரோவ்யாதிதோமூர்க்க: குலஹீனஸ்சஜாயதே.

இ-ள். உழுதொழில்செய்வோன் யாவன் தானியங்களை யொருவர்க்குங் கொடாது தன்மனைக்கே கொண்டுபோகின்றானோ அவனுக்கு வரும்பாவம் பெரியதாயிருக்கும் உமையே! கேள் உழவு செய்பவன் தானதருமமில்லாத துராத்மாவாக விருந்தால் தேவாளவையால் ஆயிரம் வருஷம் வரையும் நீரற்ற பாலைவனத்தில் பூ, காய், பழமற்ற மரமாகப்பிறந்து துன்புற்றொழிந்தபின்பு, பக்குவம் வந்தபோது, மானிடயாக்கைபெற்று வறியோனும் நோயாளியாயும் மூர்க்கனாயும் தாழ்ந்தகுலத்துள்ளோனும் பிறக்கின்றான் எ-று.

உலகியலைவிட்டு அருள் வசப்பட்டுள்ள அடியார்கள் சிவபெருமானைத் தோத்திரஞ் செய்யுமிடத்து உலகியற் கிருஷியினையே அவரது அருளியற் கிருஷிக்கு உவமானமாக எடுத்துக் கூறியிருக்கின்றனர். எங்ஙன மெனின்,

அருளியற்கிருஷி.

திருவாசகம் திருவண்டப் பகுதி.

பரமானந்தப் பழங்கடலதுவே
கருமாமுகிலிற் றோன்றித்
திருவார்பெருந்துறை வரையிலேறித்
திருத்தகுமின்னொளி திசைதிசைவிரிய
வைம்புலப்பந்தனை வாளரவிரிய
வெந்துயர்கோடை மாத்தலைகரப்ப
நீடெழிற்றோன்றி வாளொளிமிளிர
வெந்தம்பிறவியிற் கோபமிகுத்து
முரசெறிந்துமாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரையஞ்சலி காந்தள்காட்ட
வெஞ்சாவின்னரு ளுண்டுளிகொள்ளச்
செஞ்சுடர்வெள்ளந் திசைதிசைதெவிட்டா, வரையுறக்
கேதக்குட்டங் கையறவோங்கி
யிருமுச்சமயத் தொருபேய்த்தேரினை
நீர்நசைதரவரு நெடுங்கண்மான்கணந்
தவப்பெருவாயிடைப் பருகித்தளர்வொடு
மவப்பெருந்தாப நீங்காதசைந்தன
வாயிடைவானப் பேரியாற்றகவயிற்
பாய்ந்தெழுந்தின்பப் பெருஞ்சுழிகொழித்துச்
சுழித்தெம்பந்தமாக் கரைபொருதலைத்திடித்
தூழூழோங்கிய நங்க
ளிருவினைமாமரம் வேர்பறித்தெழுந்
துருவவருணீ ரோட்டாவருவரைச்
சந்தின்வான்சிறை கட்டிமட்டவிழ்
வெறிமலர்க்குளவாய் கோலிநிறையகின்
மாப்புகைக்கரைசேர் வண்குடைக்குளத்தின்
மீக்கொளமேன்மேன் மகிழ்தலினோக்கி

யருச்சனைவயலு ளன்புவித்திட்டுத்
தொண்டவுழவ ராரத்தந்த
வண்டத்தரும்பெறன் மேகன்வாழ்க.

பட்டினத்துப் பிள்ளையார்.

அஞ்சக்கரமெனுங்கோடாலி கொண்டிந்தவைம்புலனும்
வஞ்சப்புலக்கட்டைவேரறவெட்டி வளங்கள்செய்து
விஞ்சத்திருத்திச்சதாசிவமென்கின்ற வித்தையிட்டு
நஞ்செய்க்களைபறித்தேன்வளர்த்தேன் சிவபோகத்தையே.

---

## V. வாணிகம்.

வாணிகம் என்பது கொள்ளல் விற்றலாகிய பண்டமாற்றலாம். வைசியனுயுள்ளவன் கிருஷி அதிகாரத்தில் "பீஜாநாம்" என்ற சுலோகத்தில், நிலவளம் நீர்வளம் காலபேதம் தானியவகை, அவற்றின்குணங்கள், வித்துகளைச்சீர்திருத்தல் ஆகிய இவைகளை அறியவேண்டுமெனக் கூறப்பட்டிருக்கின்றது. இனி,

பராசரம், வைசியதருமம்.

𑌲𑌾𑌭𑌕𑌰𑍍𑌮 𑌤𑌥𑌾𑌕𑌰𑍍𑌷𑌂 𑌗𑌵𑌾𑌂𑌚 𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌨𑌂।
𑌕𑍃𑌷𑌿𑌕𑌰𑍍𑌮 𑌚𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂 𑌵𑍈𑌶𑍍𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌾॥

లాభకర్మ తథాకర్షం గవాంచపరిపాలనం
కృషికర్మ చవాణిజ్యం వైశ్యవృత్తిరుదాహృతా.

லாபகர்மததாரத்நம் கவாஞ்சபரிபாலநம்
கிருஷிகர்மசவாணிஜ்யம் வைஸ்யவிருத்திருதாஹ்ருதா.

வட்டி வாங்குதல், இரத்தின முதலிய மணிச்சோதனை, பசுநிரைகளைக்காத்தல், உழுதல், கொள்ளல்விற்றலாகிய பண்டமாற்று, இவைகள் வைசியன் தருமாகக் கூறப்பட்டன.

மநு.

𑌮𑌣𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌪𑍍𑌰𑌵𑌾𑌳𑌾𑌨𑌾𑌂 𑌲𑍋𑌹𑌾𑌨𑌾𑌂 𑌤𑌾𑌨𑍍𑌤𑌵𑌸𑍍𑌯𑌚|
𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑌾𑌞𑍍𑌚𑌰𑌸𑌾𑌨𑌾𑌞𑍍𑌚𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌦𑌰𑍍𑌘𑌬𑌲𑌾𑌬𑌲𑌂||

మణిముక్తాప్రవాళానాం లోహానాంతాంతవస్యచ
గంధానాంచరసానాంచ విద్యాదర్ఘబలాబలం.

மணிமுக்தாபிரவாளாநாம் லோஹாநாந்தாந்தவஸ்யச
கந்தாநாஞ்சரஸாநாஞ்ச வித்யாதர்கபலாபலம்.

இ-ள். வயிரம் முதலிய மணிகள் சந்திரகாந்தம் சூரியகாந்தம் படிகம் அயக்காந்தமுதலிய உபமணிகள், முத்து சங்கு பவளம் முதலியவும், வெள்ளி பொன் முதலிய லோகங்களும், நார்ச்சீலை நூலாடை பட்டு கோசிகம், மயிர்க்கம்பளம் அகில் சந்தனம் குங்குமப்பூ கஸ்தூரி பச்சைக்கர்ப்பூரம் புழுகு சவ்வாது விலாமிச்சம் முதலிய வாசனைப்பண்டங்களும், வெல்லம் சருக்கரை உப்பு புளி மிளகாய் நெய் எண்ணெய் தேன் அரக்கு கந்தம் முதலிய இரசவருக்கங்களும்,

𑌸𑌾𑌰𑌾𑌸𑌾𑌰𑌞𑍍𑌚𑌭𑌾𑌣𑍍𑌡𑌾𑌨𑌾𑌂 𑌦𑍇𑌶𑌾𑌨𑌾𑌞𑍍𑌚𑌗𑌣𑌾𑌗𑌣𑌂|
𑌲𑌾𑌭𑌾𑌲𑌾𑌭𑌞𑍍𑌚𑌪𑌣𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌪𑌶𑍂𑌨𑌾𑌞𑍍𑌚𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌂||

సారాసారంచభాండానాం దేశానాంచగుణాగుణం
లాభాలాభంచపణ్యానాం పశూనాంచవివర్ధనం.

ஸாராஸ்ாரஞ்சபாண்டாநாந் தேஸாநாஞ்சகுணகுணம்
லாபாலாபஞ்சபண்யாநாம் பஸூநாஞ்சவிவர்தனம்.

இ-ள். ஆக்கப்பட்ட பண்டங்களின் நன்மைதீமை முதலிய நிலைமைகளும் நிறவண்ணங்களி னேற்பாடுகளும் "ஞ" என்றதனுற் சிற்பபேதங்களும் தேயவியற்கைகளும், 'கொள்ளல் விற்றலின் நயநஷ்டங்களும் பசுக்களைக்காக்கத்தக்க' வகைகளும் தெரிந்து,

𑌧𑌰𑍍𑌮𑍇𑌣𑌚𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌵𑌾 𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌦𑍍𑌯𑌤𑍍𑌨𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂।
𑌦𑌦𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾 𑌮𑌨𑍍𑌨𑌮𑍇𑌵𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌤𑌃॥

ధర్మేణచద్రవ్యవృద్ధావా తిష్ఠేద్యత్నముత్తమం
దద్యాశ్చసర్వభూతానా మన్నమేవప్రయత్నతః.

தர்மேணசதிரவ்யவிரத்தாவா திஷடேத்யத்நமுத்தமம்
தத்யாஸ்சசர்வபூதாநா மந்நமேவப்பிரயத்நதஃ.

இ-ள். தருமத்தோடும் "ச" என்றதனால் தருமத்திற்கு மாறுபாடில்லாத பொய் முதலியவற்றோடும் நடத்தியும், தன் பொருள்விருத்தியாகும்படி நல்ல முயற்சிகளை எப்பொழுதும் செய்துவரவேண்டும். இப்படிப்பட்டவைசியன் விசேடமாக ப்பொருளைத்தேடி எல்லா முயற்சியாலும் அந்தப் பொருளினை வேதியன் முதலிய எல்லாவுயிர்க்ளுக்கும் தக்கவாறு சோறிடுதன் முதலிய*வேளாண்மை செய்யவேண்டும்.

சாந்திபர்வம்.

𑌯𑌃 𑌕𑌰𑍋𑌤𑌿𑌜𑌡𑌾𑌨𑍍𑌸𑌾𑌧𑍂𑌨𑍍 𑌵𑌣𑌿𑌕𑍍𑌕𑌰𑍍𑌮𑌣𑌿𑌵𑌞𑍍𑌚𑌿𑌤𑌾𑌨𑍍।
𑌸𑌯𑌾𑌤𑌿𑌨𑌰𑌕𑌂𑌘𑍋𑌰𑌂 𑌧𑌨𑌂𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿𑌹𑍀𑌯𑌤𑍇॥

యఃకరోతిజడాన్సాధూ న్వణిక్కర్మణివంచితా౯
సయాతినరకంఘోరం దనంతస్యాపిహీయతే॥

யஃகரோதிஜடான்ஸாதூன் வணிக்கர்மணிவஞ்சிதான்
ஸயாதிநரகங்கோரங் தனந்தஸ்யாபிஹீயதே.

இ-ள். எந்த வைசியன் சாதுக்களாயும் தெரியாதவர்களாயுமுள்ளவர்களை வஞ்சிக்கிறானோ, அந்த வைசியன் அச்சத்தைத் தருகின்ற நரகத்திற்குச்செல்வன். அவன் பொருளும் அழிந்துவிடும். வஞ்சிக்கக்கூடாதென்பது பின்வருஞ் செய்யுளானுமுணர்க,

* வேளாண்மை - கொடை.

பிரபுலிங்கலீலை.

கல்மலிவயலிலாற்றி னந்தனத்தாலயத்திற்
சலமலமொழிப்பான்ருனுந் தனிவழிவிலக்குவானும்
"விலைமொழிபொய்த்துவிற்கும் வெய்யவாணிபனுங்" தாழ்ந்து
குலமிலிதன்குற்றேவல் கூலிகொண்டியற்றவானும்.

சாந்திபர்வம்.

𑌯𑌦𑍍𑌦𑌦𑌾𑌮𑌿𑌨𑌤𑌂𑌨𑍍𑌯𑍂𑌨𑌂 𑌯𑌦𑍍𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌮𑌿𑌨𑌚𑌾𑌧𑌿𑌕𑌂 ।
𑌵𑌿𑌕𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑌿𑌰𑌸𑌾𑌂𑌶𑍍𑌚𑌾𑌹𑌂 𑌮𑌨𑍍𑌨𑌵𑌰𑍍𑌜𑌮𑌮𑌾𑌯𑌯𑌾 ।
𑌕𑍍𑌰𑍀𑌤𑍍𑌵𑌾𑌵𑍈𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌿𑌕𑍍𑌰𑍀𑌣𑍇 𑌪𑌰𑌹𑌸𑍍𑌤𑌾𑌦𑍍𑌧𑌨𑌂𑌬𑌹𑍁 ॥

యద్దదామినతన్న్యూనం యద్గృహ్ణామినచాధికం
విక్రీణామిరసాంశ్చాహం మన్నవర్జమమాయయా
క్రీత్వావై ప్రతివిక్రీణే పరహస్తాద్ధనంబహు.

யத்ததாமிநதந்நியூநம் யத்கிரஹ்ணாமிநசாதிகம்
விக்கிரீணாமிராஸாம்ஸ்சா ஹமந்நவர்ஜமமாயய
கிரீத்வாவைபிரதிவிக்கிரீணே பரஹஸ்தாத்தநம்பஹூ.

இ-ள். நான், எதனைக்கொடுக்கின்றேனே அது குறைவாகவிராது. நான் எதனைக்கொள்ளுகின்றேனே அதுமிகுதியாகவிராது. சமைத்த சோறொன்றொழிய மற்றைய இரசவருக்கமனைத்தினையும் வஞ்சிப்பின்றி விற்கின்றேன். ஆயினுங்கொண்டதினும், அதிகப்பொருளைப் பிறன்கையிற்பெற்று விற்கின்றேன்.

கோடிலாபங் கிடைப்பதேனும் நடுவிகர்தவாக்கத்தைச் செய்யப்படாது. நடுவிகர்த வாக்கமாவது, விற்கத்தகாதனவற்றை விற்றுப் பொருளீட்டலாம். விற்கத்தகாதன், சுஞ்சாஅபின் மதுமாமிசம் ஸ்திரீகள்முதலியவைகளாம். பிரமாணம்.

நன்றே தரினும் நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்.

பிரபுலிங்கலீலை, மாதேவியம்மை துறவுகதி.

கற்பழிமனைவியோடு கலந்திருப்பவனுமற்றோர்
பொற்புடைமனைவிதன்னைப் புணர்வதற்கெண்ணுவானுஞ்
சொற்பொருளுணர்த்தினானைத் தொழவுளநாணுவானும்
"விற்பனவலாதுவிற்று", மெய்வளர்த்தழிகுவானும்.

இந்த வாணிகத்தை இக்காலத்துச் சென்னையில் துலுக்கர், சோனகர், குசராத்தியர், வியாபாரிச்செட்டி, கோமுட்டிச்செட்டி, கவரைகள்முதலானவர்களால் நடத்தினபோதிலும், சோழநாடு தொண்டைநாடு பாண்டிநாடு முதலியவற்றுள், பூர்வமாக நடத்திவருகிறவர்கள் பெரும்பாலும் வேளாளர்களேயாம்.

இக்காலத்தும் இவர்களுக்குச் சோழநாட்டில், சோழபுரத்துச்செட்டி, சித்தக்காட்டுச்செட்டி, ஆடுதுறைச்செட்டி, நுணுக்காட்டுச்செட்டி, திருப்பூண்டிசெட்டி, அறுபத்துநாலு தலைக்கட்டுச்செட்டி, பஞ்சுக்காரச்செட்டி, வாட்போக்கிச்செட்டி, காவிரிப்பூம்பட்டினச்செட்டி, ஆரோக்கியச்செட்டி, மைக்காணச்செட்டி, பொன்னடிச்செட்டி, என இவை முதலாகிய வகுப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

இஃதன்றியும் தஞ்சாவூர், கும்பகோணம், நாகூர், நாகபட்டணம், தரங்கம்பாடி, சீகாழி சிதம்பரம் முதலிய தலைநகரங்களிலும், சிற்றூர்களிலும், இந்தவேளாளர் அல்லது வேளாஞ்செட்டி வகுப்பினர்கள் தங்கம் பொன் வெள்ளி இரத்தினமுதலிய நாணயக்கடைகளும், புளி மிளகாய் மளிகைக் கடைகளும், பட்டுநூலாடை முதலிய சவுளிக்கடைகளும், வெண்கலப்பாத்திரக் கடைகள் அரிசிமண்டி நெல்மண்டி கறிகாய்க்கடைகளும், வைத்து வியாபாரஞ் செய்வதுலகமறிந்த விஷயமேயாம்.

இஃதன்றியும் இவ்வேளாளரைப் பற்றி மகாகவியாகிய கம்பரால் செய்யப்பட்டதிருக்கை வழக்கமென்னும் நூலில்

"சாணியுழுதுண்டு கழிபெருளெல்லாங்கொண்டு
வாணிகங்கள்செய்தங்கு மாற்றுங்கை—மாணிவர்ந்த
வைந்திணையின்பொருள் யாவுமறத்தாற்றேடித்
தந்திணையில்வந்தணையத் தாங்குங்கை—முந்திப்
பிறர்பொருளுந்தம்பொருள்போற் பேணியேமூன்று
மறவளவையாளக்கு மங்கை."

என்று கூறியிருப்பதே வேளாளருக்கு வாணிகமுண்டென்பதற்குப் போதுமான சான்றும்.

TANJORE MANUAL OF 1883.

Chetties other than Komatis

This is the general trading class, and its sub-divisions had reference originally probably to territorial and Commercial distinction, each of which latterly assumed the form of a distinct Caste. The main sub-divisions, so far as they are known are:—

1. Vellan Chetti.
2. Solapurm Setti.
3. Sittakadu Setti.
4. Aududorai Setti.
5. Nonakadu Setti.
6. Tirupundi Setti.
7. Arupattu Nalu Talai kattu Setti.
8. Tamil Vyapari Setti.
9. Telugu Vyapari Setti:
10. Panju Setti.

The name of the first indicates merely that the settis are of the Vellala caste, and those of 2 to 6 denote the places of their original habitation (all in the Tanjore District)-The seventh means the sixty four who bound (covered) their heads probably sixty four families first obtained by royal grant the previlege of wearing a head cloth or brought it with them from else where. The eighth and the ninth mean traders of the Tamil and Telugu countries respectively. The tenth probably means cotton traders; the word panju being applied in common parlance to cotton.

These ten divisions represent the primary institution of setti castes; but inferior castes which have entered upon trade have assumed the title of setti, and evidently all such as are included under this head in the census tables. Men of Ordinary Palli or Vannia Caste, as they rise in the world, assume the title of Setti or Pillai according as they pursue trade or agriculture; and the class of setties and Pillais thus newly formed have now become so numerous that it is difficult to distingnish the true castes from them. Some of the setti families abstain from animal food and otherwise follow the pure Vella customs, and very probably they are of the true Vellala castes. The occupation of Setti class in Tanjore is almost wholly trade.

இதன் மொழிபெயர்ப்பு.

1883-ஆு தஞ்சாவூர் ஜில்லாச் சரித்திரம.

கோமட்டி*நீங்கலான செட்டிகள்.

இது சாதாரணத்திலுள்ள பெரிய வர்த்தகக் கூட்டம். இதன் உட்பிரிவுகள் அவரவர்கள் ஊரையும் வர்த்தகப்பிரிவுகளையும் குறிக்கின்றன. தெரிந்தமட்டில் முக்கியப்பிரிவுகளாவன:—

1. வெள்ளான் செட்டி.
2. சோழபுரத்துச் செட்டி.
3. சித்தக்காட்டுச் செட்டி.
4. ஆடுதுறைச் செட்டி.
5. நஞ்சுக்காட்டுச் செட்டி.
6. திருப்பூண்டி செட்டி.
7. அறுபத்துநான்கு தலைக்கட்டுச் செட்டி.
8. தமிழ் வியாபாரச் செட்டி.
9. தெலுங்குவியாபாரச்செட்டி.
10. பஞ்சுக்காரச்செட்டி.

---

* கோமட்டி=கோமர்த்தி என்னும் ஆரியபதம் கோமட்டி என மருவியதாம். கோமர்த்தி என்பது கோக்கொலை செய்பவன். இவ்வகுப்பினர் பிரதிலோமரில் ஒருவராம். ஆதலால் வைசிய ராகாரென நீக்கப்பட்டது. இதன் விரிவை வட ஆர்க்காட்டு ஜில்லாச்சரித்திரத்தில் கண்டுணர்க.

முதலாவது செட்டி வேளாள சாதியைக் குறித்ததாம். 2-மூ 6-வரையும் அவர்கள் பூர்வம் (தஞ்சை ஜில்லாவில்) குடியிருந்த வூர்களைக்குறித்தனவாம். 7-ஆவது 64-பேருக்குத் *தலைகட்டிக்கொள்ளும்படி இராஜாங்கத்தாரால் கொடுத்த வெகுமானம் அல்லது வேறிடத்திலிருந்து கொண்டுவந்த தலைத்துண்டுகளைக்குறித்ததாம். ௮-ம் 9-ம் தமிழ் தெலுங்குநாட்டு வியாபாரிகளைக் குறித்தனவாம். 10-ஆவது பஞ்சுவர்த்தகர்களைக்குறித்ததாம். பஞ்சு என்பது சாதாரண வார்த்தையில் பருத்தியினைக் குறிப்பிப்பதாம்.

இந்தப் பத்துவகுப்பும் செட்டி எனச் சாதியில் முக்கியமானவையாக ஏற்பட்டுள்ளன. ஆனாலும் வர்த்தகத்தில் பிரவேசித்துள்ள இழிசனங்களும் செட்டியென வழங்கிக்கொள்ளுகிறார்கள். இதுவிளக்கமாயிருக்கவும், அவர்களும் ஜனசங்கைப் பட்டோலையில் இவ்வகுப்பினுட் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். சாமானியனாயுள்ள பள்ளி அல்லது வன்னியனும் வியாபாரத்திலோ அல்லது பயிர்த்தொழிலிலோ பிரவேசிக்குங்கால் அதற்குத்தக்கபடி செட்டி அல்லது பிள்ளையென வைத்துக்கொள்ளுகிறான். இவ்விதமாக நவீன செட்டி, பிள்ளையென ஏற்பட்ட சாதியரும் அவ்வளவு மிகுந்துவிட்டபடியால் அவர்களினின்றும் உண்மையாயிருக்கிற சாதியாரைப் பகுத்தறிவது கஷ்டமாயிருக்கிறது. சில செட்டி குடும்பத்தார் மாமிசபட்சணத்தை நீக்கிவிட்டு உண்மையான வேளாளர்களைப்போலவே நடிக்கிறார்கள். சற்றேறக்குறைய இவர்கள் உண்மையான வேளாளர்போலவே இருக்கிறார்கள். தஞ்சாவூர்ச் சீமையிலுள்ள செட்டிகள் தொழில் முழுமையும் வியாபாரமாகவே யிருக்கின்றன.

## VI. ஆனிரை காத்தல்.

ஆன் நிரை எனப்பிரிக்க அல்லது ஆநிரையெனக் கூறி ஆ நிரையெனப்பிரித்தலுமாம். பிரமாணம்.

* தலைக்கட்டென்பது - குடும்பமெனச் சொல்லவேண்டும்.

"ஆவுமெருமையு மரையுமானே" "எருமையும்பசுவு மரையுமாவென்ப" எனப் பிங்கலந்தையுட் கூறப்படுகின்றன. ஆதலின் ஆநிரை எருமை சேர்ந்துள்ள கூட்டமாம். பசுவர்க்கத்தின் கூட்டங்கூடுமிடத்துக்கு மாட்டுமந்தை என்றும், வெள்ளாடு செம்மறியாடு பள்ளையாடு முதலியவற்றின் கூட்டங்கூடுமிடத்துக்கு ஆட்டு மந்தை என்றுங்கூறுவார்கள்.

நிரை என்பது கூட்டம். காத்தலாவது வைக்கோல் புல் விடுதல் நீர்குடிப்பித்தல் மேய்த்தல் தேய்த்தல் சொறிதல் நீராட்டல் புலிமுதலியவற்றா லிடையூறுவராமற் காத்தல் முதலியவைகளாம். பிரமாணம்.

பெரிய புராணத்தில், சண்டேசநாயனார் புராணம்.

பதவுகாலங்களின்மேய்த்துப் பறித்துமளித்தும்பரிவகற்றி
யிதமுண்டுறையுணற்றண்ணீ ரூட்டியச்சமெதிர்நீக்கி
யதர்நல்லனமுன்செல்நீழ லமர்வித்தமுதமதரப்பா
லுதவும்பொழுதுபிழையாம லுடையோரில்லந்தொறுமுய்த்தார்.

சங்கலிதர்.

காரக்ஷேத்தாஸ்வபீதாஸு நபிபேந்ந திஷ்டேஷு|
தஸூபவிசேந்ந ஸ்வயமுத்தாபயேந்நைவார்த்ரசாகயா ந|
ஃபலாசயா ப்ருஷ்டதோபி ஹந்யாத் தீக்ஷ்ணேந விஷமேண|
ஸ்வல்போதகே நசைவ தாரயேத் ப்ராஹ்மணோ நாம
ரக்ஷிதஃ ப்ரதிகாரம் கார்யாத் ஸந்த்யாவிஷ்வவ:||

గారక్షేత్తాస్వపీతాసునపిబేన్నతిష్ఠన్న
తూపవిశేన్నస్వయముత్థాపయేన్నైవా
ర్ద్రశాఖయానఫలాశయాపృష్ఠతోభిహన్యా
త్తీక్ష్ణేనవిషమేణాల్పోదకేననైవతారయె

ద్బాలవృద్ధరోగార్తానాంశ్ క్తితః
ప్రతీకారంకుర్యాదన్యథావిప్లవః.

காரக்ஷதாஸ்வபீதாஸு நபிபென்னதிஷ்டென்ன
தூபவிஸென்னஸ்ஸவய முத்தாபயெந்நைவாத்தி
ருஸாகயாநபலாஸயா பிருஷ்டதோபிஹன்யாத்
தீர்த்தேநவிஷமேணுல்போதகேந நைவதாரயேத்
பாலவிருத்தரோகார்த்தாஞ் ம்ஸ்க்திதஃ
பிரதீகாரங்குர்யாதன்ய தாவிப்லவ.

இ-ள். ஆனிரை காத்தல்வேண்டும் அவை நீர்குடிக்குமளவுந் தான் நீர் குடிக்கலாகாது. அவை படுக்காவிட்டால் தான் இருக்கலாகாது. படுத்திருப்பதனைத் தான் எழுப்பலாகாது. கையினுற்றீண்டாது. பசிய சிறியவளாரினுலும் இலையற்ற கட்டைக்கோட்டினுலும் உலர்ந்த இலைகளோடுங்கூடிய உலர்ந்த சிறுவளாரினுலும் அதன்கால் முதலிய இடங்களின் மெல்லப்பரிசித்துச் செலுத்தவேண்டும். பெரு சிறு மேடு பள்ளம் அழுக்கு உளை முதலியனவுடைய நீர் நிலைகளில் இறங்கவிடலாகாது. நீரில்லாத நிலைகளிலும் விடலாகாது. இளங்கன்று கிழப்பசு நோயுடையன இவற்றிற்குத் தன்னுலியன்ற மட்டும் அவற்றின் துன்பத்தை யொழிக்கத்தக்க வுபாயமு முபகாரமுஞ் செய்தல்வேண்டும். செய்யாவிடின் பாவத்துள் அழுந்துவன்.

ஆனினங்கள் மிருகசாதிகளில் ஒன்றுயிருக்க அவைகட்கு இவ்வளவு பூசிதைசெய்வானேன்? எனின்,

சண்டேசுர நாயனுர் புராணம்.

தங்குமகிலயோனிகட்குமேலாம் பெருமைத்தகைமையன
பொங்குபுனிததீர்த்தங்க ளெல்லாமென்றும்பொருந்துவன
துங்கவமரர்திருமுனிவர்கணங்கள் சூழ்ந்துபிரியாத
வங்கமனைத்துந்தாமுடைய வல்லவோநல்லாவினங்கள்.

இவ்வானினங்களின் அவயவங்களெல்லாவற்றிலும் சகல தீர்த்தங்களும் தேவர்களும் முனிவர்களும் இருத்தலால் எல்லா யோனிகளிலும் இவை சிறந்தனவெனக் கொள்ளப்பட்டன. எனக்கூறியதனாலென்க. இதன் விரிவு சிவதருமோத்தரத்தில் கூறப்படுகின்றது. பின்வருஞ் செய்யுட்களிற் காண்க.

சிவதருமோத்தரம்.

வேதாவுங்கரியவனுமாவினது கோட்டடியின்விளங்கிவாழ்வர்
கோதாவிமுதற்றீர்த்தங்கோட்டினுதிச் சராசரமுங்கூடிநிற்கு
மீதானசிரத்தமலன்விமலைபத னடுநெற்றிவிசாகனுசி
மீதானந்தனிலதனுண்ணுசிதனி னுகேசர்விளங்குவாரே.

பசுவின் கொம்பினடியில் பிரமவிஷ்ணு வசிக்கிறார்கள், கொம்பினுனியில் கோதாவரிமுதலிய தீர்த்தங்களும் சகல சராசரங்களும் பொருந்தியிருக்கும் சிரசில் பரமசிவனும், நடுநெற்றியில் பார்வதியாரும், நாசியில் முருகவேளும், உண்ணுசியில் திக்குப்பாலகர்களும் வசிக்கிறார்கள்.

ஆசகலவிருகன்னநாப்பணச்சுவினிதேவ ரமர்ந்துவாழ்வர்
தேசுடையபரிதிமதிநயனத்திற் றந்தத்திற்செறியும்வாயு
வோசையுறுநாவதனில் வருணனுரைமகளோங்கூங்காரநெஞ்சி
னேசமுறயமனியக்கர்கண்டதலத் தெந்நாளுநிலவுவாரே.

காதுகளில் அச்சுவினிதேவர்களும், கண்களில் சூரிய சந்திரர்களும், பற்களில் வாயுவும், நாவில் வருணனும், ஊங்காரத்திற்கிடமாகிய நெஞ்சில் சரஸ்வதியும், இருதயத்தில் யமனும், மார்பில் காந்தருவரும் வசிக்கிறார்கள்.

ஓட்டத்திலுதையாத்தமனசந்தி யிவையுறையுமுறைவன்கண்டத்
திட்டுடையவிந்திரனேயிமிலிருப்பருக்கரென்வியப்புந்தேவர்
வாட்டமிலாச்சாத்தியரே வாழ்வார்களுரமதனில்னிலவாயு
நீட்டியதாளொருநான்கின் மருத்தென்பர்முழந்தாளினிலவுவாரே.

உதட்டில் காலைசந்தி மாலைசந்தி தேவதையும், கழுத்தில் இந்திரனும், இமிலில் சூரியனும், மார்பில் சாத்தியரும், கால்க

ளில் வாயுவும், முழந்தாளில் மருத்துக்களும் அசுவினிதேவர்களும் வசிக்கிறார்கள்.

குரத்தினுதிபன்னகரேகுடிகொள்வர் காந்தருவர்குதத்திருப்ப
ணிருப்பாரமகளிர்கணமிவரெல்லாமேற்குதத் தின்முதுகினெல்லை,
யுருத்திரரேசந்துதொழு முறைவார்கள்வசுதேவர்பிதிர்க்களோங்கிப்
பருத்தவரைப்பலகைதனிற் பகத்துறைவரெழுமாதர்பரிவுகூர்ந்தே.

குரத்து நுனியில் நாகலோகத்தாரும், குரத்துநடுவில் காந்தருவரும், மேற்குரத்தில் தேவமாதர்களும், முதுகில் உருத்திரரும், சந்துகளில் வசுக்களும், அரைப்பலகையில் பிதிர்தேவர்களும், பக்கத்தில் சத்தமாதர்களும் வசிக்கிறார்கள்.

திருமகளேயபானத்திலுகேசரடிவாலிற் சிறந்துவாழ்வ
ரிரவியொளிவாலின்மயி ரிலங்கியிடுஞ்சுரநதிதானேய்நீரின்
வரமுடையயமுனேமயமதுதன்னின் மாதவர்களுரோமம்வாழ்வ
ருரமுடையபூதேவியுதர்த்திற் பயோதரத்தினுததியெல்லாம்.

குதத்தில் இலட்சுமியும், அடிவாலில் தேவர்களும், வால் மயிரில் சூரியனொளியும், கோசலத்தில் கங்கையும், கோமயத்தில், யமுனையும், உரோமத்தில் மாதவர்களும், வயிற்றில் பூதேவியும், முலையில் சமுத்திரமும், பொருந்தியிருக்கிறார்கள்.

சடரத்தினிடையத்திற்றழைத்தமுக மதுதன்னிற்றங்குமங்கி
கடனுடனேகாருகபத்தியமெழுவா யொருமூன்றுங்கடினவென்பி
னுடலுறுசுக்கிலந்தனினுமுறையுமகவினையனைத்துமுறுப்புத்தோறுந்
திடமுறுகற்புடைமடவார் செறிந்திருப்பாரிம்முறையைச்சிந்தைசெய்தே.

வயிற்றில் காருகபத்தியமும், இருதயத்தில் தக்கணாக்கினியமும், முகத்தில் ஆகவனீயமும், எலும்பிலும் சுக்கிலத்திலும் யாகாதிகளும், ஏனைய அவயவங்களில் கற்புடைமகளிரும் வாழ்வார்கள்.

இவ்வானினங்களினுண்டாய பால் தயிர் நெய் கோமயம் கோசலங்கள் இந்துக்களின் இலௌகிகவைதிக கருமங்களுக்

கு இன்றியமையாத பொருள்களாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன. எங்ஙனமெனில்? முன்னர் இலௌகிக கருமத்தையெடுத்துக்கொள்ளுவோம்.

மனிதர்களின் தேக போஷணைக்குப் பால் தயிர் வெண்ணெய் சிறந்துள்ளனவாக இருக்கின்றன, இவை கிடையாவிடத்துத் தேகத்தில் சூடேறியும் பித்தமதிகரித்தும் நோயினால் துன்புற்றுவருந்துவார்கள். அவிடதங்களுள் இலேகியம் கிருதாதிகள் நெய்யின்றி முடியாவாம். அடுப்பெரிப்பதற்கும் வயலினுரத்துக்கும் கோமயம் மிகவுபகாரமாயிருக்கிறது. நோவாளத்தைச் சுத்திசெய்யவும், எச்சில் மூத்திரமாதிய துர்க்கந்தங்களையொழிக்கவும், பாஷாணாதி விஷங்களைப் போக்கவும், வாந்திபேதிக்கு ஆதாரமாயுள்ள விஷக்காற்றினையொழிக்கவும், விஷ செந்துக்கள் அணுகாதிருக்கவும் கோமயமே பிரதானமாகிய கருவியாயிருக்கின்றது. கோசலம் மகோதர முதலிய நோய்களை நீக்கவும், பூச்சி புழு முதலியவையணுகாதிருக்கவும் உபயோகமாயிருக்கின்றது.

இனி, வைதிககருமங்களுக்கோவென்றால், சிவாலய விஷ்ணுவாலயங்களிலும், மனிதர் குடியிருக்கப்பட்ட கிருகங்களிலும், அசுத்தப்படுமிடங்களிலும், கோமயத்தால் மெழுகியும், கோசலத்தால் புரோக்ஷித்தும் சுத்திசெய்து வருகிறார்கள் சோடச கிரியைகளிலும் புண்யாவாசனம் பஞ்சகௌவியம் சேர்த்து நடத்தவேண்டியதா யிருக்கிறது. கிருக சுத்தியேயன்றி ஆத்ம சுத்திக்காகப் பஞ்சகௌவியங்களையுட்கொண்டும் வருகிறார்கள். இவை மாத்திரமா, சிவாலயங்களில் அபிஷேகத்திற்கு ஏற்பட்டுள்ளனவாகிய பழவர்க்கம் தேன் இளநீர் பச்சைக்கர்ப்பூரம் குங்கும்ப்பூ கோரோசனை நிறைந்துள்ள சுத்தோதகம் சந்தனாதித் தயிலங்களுக்கெல்லாம், சிறந்தன பால் தயிர் முதலிய பஞ்சகௌவியங்களாம். பிரமாணம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை
யாவினுக்கருங்கல மரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங் கோட்டமில்லது
நாவினுக்கருங்கல நமச்சிவாயவே.

என்று கூறியதனாலுணர்க.

இவ்வைம்பெரும்பொருளை ஆனினங்கள் மக்கள் தேவர்களுக்குதவுதலால், எல்லாயோனிகளுள்ளும் சிறந்துள்ளன வெபது பின்வருஞ்செய்யுளிற் காண்க.

சண்டேசுர நாயனார் புராணம்.

ஆயசிறப்பினாற்பெற்ற வன்றேமன்றாணடம்புரியு
நாயனார்க்குவளர்மதியு நதியுநகுவெண்டலைத்தொடையு
மேயவேணித்திருமுடிமேல் விரும்பியாடியருளுதற்குத்
தூயதிருமஞ்சனமைந்து மளிக்குமுரிமைச்சுரபிகடாம்.

சைவசமயத்தை விளக்கும் சாதனம் பலவற்றுள்ளும் பூதிசாதனஞ் சிறந்துள்ளது. சிவனடியார் தரித்தற்குரிய அச்சாதனத்திற்கும், சகலபுவனகர்த்தாவாயுள்ள ஸ்ரீகண்ட பரமேஸ்வரர் திருமுகமண்டலத்திற் சாத்துதற்கு உரிய திருநீற்றிற்கும், காரண பூதமாயிருக்கின்றனவாம். பிரமாணம்.

சீருமுடையசோகலங்கள் சிறக்குந்தகைமைத்தேவருடன்
கால்முழுதுமுலகீனைத்துங் காக்குமுதற்காரணராகு
நீலகண்டர்செய்யசடை நிருத்தர்சாத்துநீறுதரு
மூலமவதாரஞ்செய்யு மூர்த்தமென்றுன்மொழிவென்னே.

அவ்வானினத்தின் பெருமை இவ்வளவினின்றதோ இல்லை. கைலாசபதியாகிய சாட்சாத் பரமசிவமும்தேவியாரும் ஆரோகணித்தருளப் பெறுதற்குறியனவாயுமிருக்கின்றன. பின்வருஞ் செய்யுளிற்காண்க.

உள்ளுந்தகைமையினிப்பிறவே றளவேயுமைமான்மறிக்கன்று
துள்ளுங்கரத்தாரணிபணியின் சுடர்சூழ்மணிகள்சுரந்திீர்

தெள்ளுஞ்சடையார்தேவர்கடம் பிராட்டியுடனேசேரமிசைக்
கொள்ளுஞ்சினமால்விடைத்தேவர் குலமன்றோவிச்சுரபிகுலம்.

மநுஸ்மிருதி.

𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌰𑍍𑌹𑌿𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌯 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌪𑌰𑌿𑌦𑌦𑍇𑌪𑌶𑍂𑌨𑍍।

ప్రజాపతిర్హివైశ్యాయ సృష్ట్వాపరిదదేపశూన్।

பிரஜாபதிர்ஹவைஸ்யாய ஸிருஷ்ட்வாபரிததேபஸூன்.

இ-ள். பிரமன் பசுக்களைப்படைத்து வைசியரிடத்தில் ஒப்புவித்தான் எனக்கூறப்படுகின்றது

𑌨𑌚𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯𑌕𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌨𑍍 𑌨𑌰𑌕𑍍𑌷𑍇𑌯𑌂𑌪𑌶𑍂𑌨𑌿𑌤𑌿।
𑌵𑍈𑌶𑍍𑌯𑍇𑌚𑍇𑌚𑍍𑌛𑌤𑌿𑌨𑌾𑌨𑍍𑌯𑍇𑌨 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌵𑍍𑌯𑌾𑌃𑌕𑌥𑌂𑌚𑌨।

నచవైశ్యస్యకామస్యా న్నరక్షేయంపశూనితి।
వైశ్యేచేచ్ఛతినాన్యేన రక్షితవ్యాఃకథంచన॥

நசவைஸ்யகாமஸ்யாந்நரக்ஷேயம்பஸூநிதி
வைஸ்யேசெச்சதிநான்யேன ரக்ஷதவ்யா:கதஞ்சந.

இ-ள். பசுக்களை நாம் காப்பாற்றவேண்டாமென்று வைசியன் எண்ணக்கூடாது. அவன் காப்பாற்றும்போது மற்றொரு ஜாதியானும் பசுக்களைக் காப்பாற்றக்கூடாது.

இவ்வான்காத்தலை வைசியர்பாற்படுத்தியது எற்றுக்காகவெனின், அம்மையார் காஞ்சியிற்றவம்புரிய வந்தகாலத்துக் கொண்டுவந்த இரு நாழிநெல்லில் வேளாளர்களுக்குச் சிறிது நெல்லளித்து அதை உழவு தொழிலாற்பெருக்கி 32. அறங்களையும் வளர்க்கும்படி கட்டளையிட்டருளினார், அவ்வறங்களுள் பசுவுக்குணவிட்டுப் பாதுகாத்தல் ஓர் தருமமாயிருத்தலால் அது வேளாளருக்கே யுரியதென்க. பசுவினைக்காத்தலால்,

அவ்வினப்பெருகும். பெருகவே, கிருஷி இடையூறின்றி நடக்கும். அக்கிருஷி நடப்பதால் உலகின்கண்பலவறங்களும் நடந்தேறிவருமென்க.

இதை நோக்கியே மகாகவியாகிய கம்பர் திருக்கை வழக்கத்துள்.

ஊன்காக்கு மாவிக் குறுதியுழவாமதற்கா
யான்காப்பே காப்பாகவாளுங் கை.

எனக்கூறினர். ஆதலால் ஆனினங்காத்தல் வேளாளர்க்கே உரியதாயிருக்கிறது.

### ஆனிரைக்குப் பூசனைபுரிதல்.

ஆனிரைகளைத் தினந்தோறும் மேய்த்து நீரூட்டி வைக்கோல் புல் முதலியவை உண்பித்து நீர் காட்டுவதுடன், சுக்கிரவாரங்களில் மஞ்சள்பூசிக் குங்குமமிட்டு மலர்சூட்டி இலட்சுமியாகப்பாவித்துப் பூசிக்கிறார்கள். இது நித்தியகருமமாம். வருடாந்தரம் மகரசங்கராந்திகாலத்துப், பெரும்பொங்கலுக்கு அடுத்தநாளில், மேற்கண்ட பூசிதையுடன் மாவிலை சல்லியாதி பூட்டி அலங்காரஞ்செய்து பொங்கலிட்டுத் தூபதீபங்கொடுத்துப் பூசிக்கிறார்கள். இது மாட்டுப்பொங்கல் என்பார்கள். இதுவே ஆனிரைக்கு நைமித்தியபூசையாம்.

### ஆனிரைக்கு உறைவிடம்.

இராக்காலங்களில் தங்கவும் படுக்கவும் ஆனிரைகளுக்கும் கன்றுகளுக்கும் உழவெருதுகளுக்கும் எருமைமாடுகளுக்கும் தனித்தனியே தொழுவங்கள் ஏற்படுத்தவேண்டும். அவற்றில் முளைகளடித்து ஒவ்வொன்றினையும் தனித்தனியே கட்டவேண்டும்.

வைசியராகிய வேளாளர்கள் 1 காணிமுதல் 5 வேலி 10 வேலி 100 வேலி 1,000 வேலி மிராசுதாரர்களாக இருக்கிறு

ர்கள். இவர்களின் கௌரவத்துக்குத் தக்கபடி ஓரிணை ஈரிணை முதல் 100, 1,000 கணக்காக ஆனிரைகளுண்டாம். இவற்றுள் கிருஷிக்கு வேண்டுவனவற்றை மருதநிலத்தில் வைத்துக்கொண்டு, மிகுந்தவற்றை முல்லைக்கு மேய்ப்பதற்காக இடையன் வசமாக ஓட்டிவிடுவார்கள். மருதநிலத்தில் பெருமந்தையாயுள்ள ஆவினங்களுக்குப் போதுமான உணவுகிடையாதாகலின் முல்லைக்கனுப்புவது வழக்கத்தில் ஏற்பட்டிருக்கின்றது. உழவுகாலத்தில் வேண்டுவனவற்றை யழைப்பித்துக் கொள்ளுவார்கள்.

## ஆனிரைக்குரிய ஏவலாளர்.

ஆனிரை மேய்ப்பதற்குரிய தொழிலாளிகள் இடையரும் பறையருமேயாம். கிராமங்களில் பசுக்களையும் எருதுகளையும் மேய்ப்பவர்கள் பறையர்களாம். இவர்கள் நத்தம் புறம்போக்கிலுள்ள நிலங்களில் மேய்த்து நீராட்டி மாலைக்காலத்துத் தொழுவத்தில் கொண்டுவந்து கட்டிவிட்டுப் போரிலுள்ள வைக்கோல்களை யெடுத்து இரவிற்கு வேண்டியமட்டும் உதறிப்போட்டுப் போவார்கள். விடியற்காலத்துப் பறைச்சிகள் வந்து கோமயத்தை யெடுத்துக் குவியலாகச்சேர்த்து மிதித்து உண்டையாடி எருமுட்டைதட்டி மிகுந்துள்ள குப்பைசெத்தைகளைக் கூட்டி ஓர் பள்ளத்தில் எருவிற்காகச்சேர்த்துவைப்பார்கள். மாட்டுக்காரப்பையல்கள்வந்து ஆனினங்களைத் தறியினின்றுங் கட்டவிழ்த்து மேய்ப்பதற்கு ஓட்டிக்கொண்டு போவார்கள். இடையர்கள் காலைமாலைகளில்வந்து பால்கறந்து கொடுத்துவிட்டுப்போவார்கள். நகரங்களில் ஆனிரைமேய்ப்பவர் இடையர்களேயாம்.

## ஏவலாளர்களுக்கு இருப்பிடம்.

கிராமத்திற்குப் புறத்தேயுள்ளது புறச்சேரியாம். அதில் பறையர்கள் வசிப்பார்கள். அதனால் அதற்குப் பறைச்சேரி என்றுஞ்சொல்லுவார்கள். அக்கிராமத்திற்கும் புறச்சேரிக்

கும் இடையிலுள்ளது இடைச்சேரியாம். இது இடையர்கள் வசிக்குமிடமாம்.

### பேறுதற்குரிய பேறு.

இனி, உலகின்கணுள்ள சிறப்புடை மாந்தர்கள் பெறுதற்குரிய பேறுகள் பதினாறும். அவை புகழ் கல்வி வலி வெற்றி நன்மக்கள் பொன் நெல் நல்லூழ் நுகர்ச்சி அறிவு அழகு பெருமை இளமை துணிவு நோயின்மை வாழ்நாள் என்பனவாம்.

சிறியோர் பெரியோரை நமஸ்கரித்த காலத்துப்,பதினாறும்பெற்றுப் பெருவாழ்வும் வாழ்கவென ஆசீர்வதிக்கிறார்கள். இதன் பொருளறியாதார் பதினாறு பேறென்பதற்கு, பதினாறு மகப்பேறெனப் பொருள்கொள்ளுகிறார்கள். அஃதின்றென்பதற்குப் பிரமாணம் மேற்கூறியவற்றாலும் பிற்கூறுஞ் செய்யுளாலுங் காண்க.

### சீவகசிந்தாமணி.

உருவளர்வயதுபூமி யுயர்தவங்கருணையூக்கம்
பெருநிதியொழுக்கஞ்சீலம் பேரபிமானங்கல்வி
பொருவலிஷிசையவீரம் புண்ணியமாதர்போகந்
திருமலிபுகழீரெட்டுஞ் சீவகனொருவன்பெற்றான்.

முற்கூறிய பேற்றிற்கும் இதிற்கூறிய பேற்றிற்கும் சிற்சில பேதப்படுகின்றன.

ஸ்ரீயாம்வர்த்திஷ்ய ஆயுஷ்யமாயுதா
ஸோபமானம் மஹீயது
தான்யுந்தனம் பசுபுத்திரலாபம்
சதசம்வத்ஸரம் தீர்க்கமாயுஃ.

எனச் சகல சாதியாரானும் ஒவ்வொரு சுபகாரியங்களிலும் ஆசீர்வதிக்கக் கண்டிருக்கிறோம். தனம் தானியம் பசு இம்மூன்றும் முறையே வாணிபத்தையும் கிருஷியையும் கோ

சம்ரட்சணையையும் குறிக்கின்றன. இம்மூன்றுமுடைய வைசியருக்கு மேலாயுள்ள வேதமோதலாதி அந்தணர் தொழிலை யாவது உலகோம்பலாதி அரசர் தொழிலையாவது குறித்த தொன்றையும் விரும்பாது வைசியர் தொழிலைக்குறித்த, தனம் தானியம் பசு ஆகிய இம்மூன்றுமே சித்திக்கவேண்டுமென்று ஆசிகூறுகிறார்கள். ஆதலால் வைசியருக்குமேலிட்ட அந்தண ரரசரும் அவ்வைசியர் தொழிலையே மேலாக விரும்புவாரென்பது பெறப்பட்டது.

## ஐந்தாவது அத்தியாயம்:

## வேளாளர் பலசிறப்பு விளக்கம்.

### முடிசூட்டல்.

உலகபாலனஞ்செய்யும் க்ஷத்திரியர்களுக்கு ஆதிகாலந் தொடங்கி முடிசூட்டுங் கௌரவத்தைப் பெற்றுள்ளார் வேளாளராயிருத்தலின் அவர்கள் உயர்வகுப்பினராகிய வைசியரேயாம். பிரமாணம்.

உமாபதி சிவாசாரியார்.

*காராளரணிவயலிலுழுதுதங்கள் கையாரநட்டமுடிதிருந்திலிந் தப், பாராளுந்திறலரசர்கவித்தவெற்றிப் பசும்பொன்மணிமுடிதிருந் துங் கலப்பைபூண்ட, வேராலெண்டிசைவளர்க்கும் புகழ்வேளாளரேரடிக்குஞ்சிறுகோலாற்றரணியாளச், சீராருமுடியரசரிருந்து செங்கோல்செலுத்துவர்வேளாளர்புகழ்செப்பலாமோ.*

ஏரெழுபது.

*தென்னன்முடிசேரன்முடி தேங்குபொன்னிநாடன்முடி*
*கன்னன்முடிகடல்சூழ்ந்த காசினியோர்தங்கண்முடி*
*யின்னமுடியன்றியுமற் றெடுத்துரைத்தமுடிகளெல்லா*
*மன்னுமுடிவேளாளர் வயலின்முடிகொண்டன்றே.*

இவற்றால் வேளாளர்கள் தங்கள் வயலினிடத்தே பிடுங்கிநடும் படியான நாற்றுமுடி ஓங்கினால், உலகத்தையெல்லாம் ஒருகுடை நிழலின்கண் செங்கோல் செலுத்தும் வேந்தனது முடி ஓங்குமென்பதாம். ஏன்? எனில் வேளாளர்களின் பலத்தைக் கொண்டு வேந்தருமாளவேண்டுமென்பது கருத்து.

போர்வாகை வாய்த்த புரவலரின் மேதக்கா
ரேர்வாழ்ந ரென்பதற் கேதுவாஞ்—சீர்சா
லுரைகாக்கு மன்னர்க் கொளிபெருகத் தாந்த
நிரைகாத்துந் தந்த நிதி.

இதனாலன்றோ அநாதிகாலந்தொடங்கித் தேவரும் வேந்தரும் வேளாளர்களால்முடிசூட்டப்பட்டுவருகின்றார்கள். பிரமாணம்.

சோமசுந்தரபாண்டியற்கு முடிசூட்டல்.

திருநெல்வேலித்தலபுராணம்; பட்டாபிஷேகச்சருக்கம்.

ஆயபங்குனியுத்திரநாளதில்மூதவோரையிலன்பாய்த்
தாய்பராபரைபாங்கர்நெல்வேலிவாழ்தற்பரர்முடி மீதே
நேயமோடிழுவன்றரமாலபணிந்திரன்முனிவோர்க
ளேயமாமணிமுடியிணைச்சூட்டினர்சொரிந்தனர்மலர்மாரி.

ஸ்ரீ இராமபிரானுக்கு முடிசூட்டல்.

கம்பராமாயணம்.

அரியணையனுமன்றாங்க வங்கதனுடைவாளேந்தப்
பரதன்வெண்குடைகவிக்க விருவருங்கவரிவீச
விரைசெறிகுழலியோங்க வெண்ணெயூர்ச்சடையன்றங்கண்
மரபுளோர்கொடுக்கவாங்கி வசிட்டனேபுனைந்தான்மௌலி.

கரிகாலச்சோழனுக்கு முடிசூட்டல்.

சோழமண்டலசதகம்.

கண்டன்கரிகாலனுக்குமுடி கவித்துக்காணிபடைத்தோருந்
தொண்டைநாட்டினற்குடியாய்ச் சூழவமைந்ததூயோரும்,
பண்டுமநுநீதியைத்தொடுத்துப் பயின்றுவருஞ்சோழியரெனவே
மண்டுகீர்த்திபடைத்தோரும் வளஞ்சேர்சோழமண்டலமே.

### தொண்டமானுக்கு முடிசூட்டல்.

தொண்டைமண்டலசதகம்.

வெல்லாமல்வென்றுநற்சந்தனக்காட்டத்தின்மேலிருந்து
நல்லாரைநந்திக்கலம்பகங்கேட்டபினற்றுணைக்குக்
கொல்லாபுரிச்சந்திரன்முடிசூட்டக்குடைகவித்து
மல்லார்புரித்தொண்டைமானனதுந்தொண்டைமண்டலமே.

### பாண்டியனுக்கு முடிசூட்டல்.

சேறையம்பதி சந்திரசேகரவாணமுதலியார் வேளாளருக்குத் தீங்கிழைத்த சோழனைச்சிறையிலிட்டு ஓர்பாண்டியனைக் கொணர்ந்து முடிசூட்டல்.

தாருற்றசெந்தமிழொப்பாரியென்னுந்தமிழ்புனைந்தோன்
சேறைப்பதிச்சந்த்ரசேகரவாணன்முன்சென்றவந்நாள்
வீறற்றனரென்றுவேளாளரைமன்விலங்கிலிட
மாறற்றுவந்துமுடிசூட்டினன்றொண்டைமண்டலமே.

திருக்கைவழக்கம்.

மங்கையொருபாகற்கு மன்னவற்கு மாதவற்குந்
துங்கமணிமுடியைச் சூட்டுங் கை.

என்னுஞ் செய்யுட்களாலும் அரசர்களுக்கு முடிசூட்டுவார் வேளாளரேயென்பது காண்க.

### துலாபாரம்.

இதற்குத் துலாபுருஷதானமென்று பெயராம். இதுசெய்யவேண்டிய முறை சிவபுராணத்துள் விரித்துக் கூறப்படுகின்றது.

### துலாபாரத்தாலுண்டாகும் பயன்.

பெரும்பொருளாற் செய்யத்தக்கதும், தேககசுத்தியுண்டாக்கத்தக்கதும், சுவர்க்க பதவியையடையச் செய்வதும், மகாபாதகங்களை ஒழிப்பதுமாகிய இந்தத்தானத்தைச்செய்யும் பட்சத்தில் சத்தியமாக மோக்ஷத்தை யடைவான். பிருகு வமிசத்திற் பிறந்த பரசுராமர் இருபத்தொரு தலைமுறைவரை

யும் க்ஷத்திரிய வதஞ்செய்த பாவத்தை யொழிக்கப் பலவித தானஞ்செய்தும், அசுவமேத முதலியன நடத்தியும், அப்பாவம் அகலாது வருந்தியிருக்குஞ் சமயத்தில் திரிநேத்திரதாரியாகிய சிவபெருமானால் இந்தத் துலாபுருஷ தானமானது செய்யும்படி அவருக்கு அருளிச்செய்யப்பட்டது.

பாவத்தையே செய்துவந்தவனும் பலரைச் சிறையிலிட்டவனும் அநேகரைக்கொன்றவனும் பரஸ்திரீயைப் புணர்ந்தவனும் மதுபானஞ்செய்தவனும் மாமிச பட்சணஞ்செய்தவனும் புசிக்கத்தகாதவற்றைப்புசித்தவனும் சிசுஹத்தி செய்தவனும் குருபத்தினியைப் புணர்ந்தவனும் இந்தத் தானத்தைச் செய்யவேண்டும்.

### துலாபாரஞ் செய்யுமுறை.

துலாபாரஞ்செய்யுங் கருத்தா, முதலில் இந்திரன் வருணன் வாயு நிருதி புதன் அக்கினி முதலிய தேவர்களுக்குப் பிரீதியாக ஹோமஞ்செய்து, கிருகதேவதை இஷ்டதேவதைகளைப்பூசித்து, துலையின் ஒருதட்டில் திரவியத்தைவைத்து மற்றொரு தட்டில் தான் ஏறவேண்டியது. அதன் பின்னர் துலையே! பூமிதேவியே உன்தாயும், பிரமதேவனே உன்தந்தையுமாயிருப்பது சத்தியமானால், நீ சத்திய தருமரூபமாகி உன்மேல் ஏறியிருக்கிற என்னைத் தரிக்கவேண்டும். சத்தியத்தினாலேயே தேவர்களும் முனிவர்களும் நற்கதியடைந்திருக்கிறார்கள். அந்தச் சத்தியரூபமாகிய நீ என்னாற் செய்யப்பட்ட தானத்தை யங்கீகரித்து என்பாவத்தைப்போக்கவேண்டும் என்று பிரார்த்தித்து, துலையில் நின்று இறங்கிவிடவேண்டும். பின்னர் துலையிலிருந்த திரவியங்களைச் சற்பாத்திரமாயுள்ள அந்தணர்களுக்குத் தானஞ்செய்யவேண்டும்.

### துலாபாரம் நிறுத்தற்குரியார்.

அரசனைத் துலையிலேற்றி நிறுக்கும் அதிகாரம் யாவர்க்குரியதெனில், வேளாளர்க்கே உரியதாம். வேறுவருண்த்தார்

செய்யப்படாதோவெனில்? செய்யப்படாது. நிலத்தில் விளை பொருளெல்லாம் எடுத்தல் முகத்தலாதிய துலாக்கோல் மரக்காலாதி கருவிகளைக்கொண்டு கணக்கிடவேண்டுமாதலால், அக்கருவிகள் வைசியராகிய வேளாளர்பால்வைக்கப்பட்டன, அக்கருவிகள் ஏனையரிடத்துளவேனும்,

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

என நாயனர் கூறியபடி, சத்தியவழியில் நின்று தராசுமுனை கோணாது, பிறபொருளையும் தம்பொருள்போற் கருதிநிறுக்க வேண்டுமாதலால், அந்நிறைக்குரியார் வைசியராகியவேளாளரேயாம்.

திருக்கைவழக்கம்.

தலாபாரந்தாங்குந் தனியரசும் பொன்னுந்
துலாபாரந்தட்டினிற் றூக்குங் கை.

எனக்கம்பர் கூறியதனாற்காண்க.

இனி, "வயலின்முடிகொண்டு மன்னர்முடி திருந்தவென்றும்" "ஏரடிக்கோல்கொண்டு இறைகோல் செலுத்தவென்றும்" பிரமாணமிருப்பதால் அரசர்க்கு வேளாளரே முடிசூட்ட வேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறது. அதுபோல அரசரைநிறுக்கவும், வறுமைக்காலத்தும் செழித்தகாலத்தும் மன்னர்க்குக் குறைவுபடாது இறைசெலுத்தவும், யுத்தகாலங்களில் திரவியம் குறைவுபடுமாயின் கைக்கடனுற்றவும், இவ்வித உபகாரகுணங்களெல்லாம் இளங்கோக்கள் என்று சொல்லப்பட்ட வேளாள்ர்க்கே உரியனவாம். ஆகவே முற்காலத்து அயோத்திக்கரசனுகிய ஸ்ரீஇராமபிரானுக்கும் பாண்டிநாட்டிற்கு அரசாய சோமசுந்தரபாண்டியனுக்கும் முடிசூட்டினதும், துலாபாரஞ்செய்வித்ததும், வேளாளரே. சிலகாலத்துக்குமுன் தஞ்சைமாநகரத்தரசனுச்கு அணைக்குடிச் சாமிநாதபிள்ளை

இக்கருமங்களைச் செய்தாரென்பது உலகப்பிரசித்தமாகத்தெரிந்த விஷயமாம். அவர் சந்ததியார் இக்காலத்துமிருக்கின்றனர். அவர் இருந்த அரண்மனை 32-கட்டுகளுள்ளதென்று இக்காலத்துங் காணலாம்.

---

## குலம்.

குலம் என்பது என்னை எனின்? குடிப்பிறப்பாம். ஆயின் வேளாளருக்கு என்னகுலமெனின்? கங்கைகுலமாம். கங்கை என்பது சிவபெருமானது திருமுடியிலெழுந்தருளியிருக்கும் அருட்சத்தியாம்.

ஆகவே, கங்கை குலமென்பது கங்கையாரிடத்துதித்த குடிகளாம். இவர்களைக் கங்கை புத்திரர்கள் என்றுங் கூறுவார்கள். இவர்கள் வரலாறு வேளாளருற்பல விளக்கமென்னும் அத்தியாயத்தில் விரித்துரைக்கப்பட்டது. ஆங்குணர்க.

உமாபதி சிவாசாரியார் செய்தருளிய,
திருத்தொண்டர் புராண வரலாறு.

தோடுசெய்ததிருநெறியசெந்தமிழோடொக்குமென்றுரைதொடர்ந்
பேடுசெய்துநடராசர்சந்நிதியி லேற்றினர்களிதுபாலிசூழ் [துசெப்
காடுசெய்ததவமீடுகுன்றைவள நகரிசெய்ததவநிகரிலாப்
பீடுசெய்த "பகீரதிகுலத்திலகர் சேக்கிழார்" செய்தபெருந்தவம்.

வளவர்கோன்வரவறிந்துதில்லைமறையோரும் வண்மைமட்பதிகளும்
பிளவுகொண்டமதிநுதன்மடந்தையருமற்றுமுள்ளபெரியோர்களுங்
களவிலாதமொழியொப்புராணகதைசெய்த கங்கைகுலதிலகருந்
தளவமாலையபயனையெதிர்ந்தினிய சாரவாசிபலசாற்றினர்.

இச்செய்யுட்களான் வேளாளராகிய சேக்கிழார் கங்கைகுலத்தாரென விளங்குகின்றது.

---

## கோத்திரம்.

கோத்திரமென்பதென்னை ? எனின் ஒருவன் தானும் தன்மூதாதைகளுந் தோன்றுதற்குக் காரணமாயிருந்த மூல புருஷன் வழியைவிளக்குவதாம்.

### எல்லாருக்கும் கோத்திரமுண்டெனல்.

அங்ஙனமாயின், எல்லாருக்குங் கோத்திரமுண்டோ ? எனின், சிவபெருமான் ஒருவர் நீங்கலாக ஏனைய தேவர் மக்களாதியர்க்கெல்லாமுண்டு.

### கோத்திரமில்லாதான் சிவபெருமானெனல்.

சிவபெருமானுக்குக் கோத்திரமில்லாதகாரணமென்னை? எனின், மேற்கூறிய தேவர் மக்களாதியரையெல்லாந் தோற்றுவித்துத், தாம் ஒருவரிடத்துந்தோன்றாது அநாதி முத்தசித்துருவாயிருத்தலினாலென்க. இதற்குப்பிரமாணம்.

பிங்கலந்தையார், வானவர்வகைப் பெயர்ப்பிரிவு.
சிவனெண்குணத்தின் பெயர்.

பவமின்மையிறவின்மை பற்றின்மைபெயரின்மை
யுவமையின்மை யொருவினையின்மை
குறைவிலறிவுடைமை கோத்திரமின்மையென்
றிறைவனிடத்தி லெண்குணமிவையே.

### வேளாளர் கோத்திரமீதெனல்.

இனி வேளாளர்களின் கோத்திரம் யாதெனின்? பூர்வத்தில்,

மநு. 1-35. மநுவிடத்திருந்து மரீசி, அத்திரி ஆங்கிரசு புலத்தியன் புலகன் கிரது பிரசேசு, வசிட்டன் பிருகு நாரதன் ஆகிய தசப்பிரமர்கள் உண்டானார்கள்.

3-198. அவர்களில் புலத்தியன்புத்திரர்கள் ஆஜ்ஜியபர்கள் என்னும் பிதிர்களாம்.

3-197. இந்த ஆஜ்ஜியபர்ப்பிதிர்களினின்றும் வைசியர்களாகிய வேளாளருண்டானார்கள்.

இதனால் வைசியர்களுக்கு ஆதிகோத்திரம் புலத்தியமகாரிஷி கோத்திரமாம்.

இக்கோத்திரத்தினின்றும் அநேக கோத்திரங்கள் பிரிந்தன. அவைகளினின்றும் ஆதொண்டச்சக்கரவர்த்தி காலத்தில் 12,000 கோத்திரங்கள் கணக்கிடப்பட்டன. பிரமாணம் கீழே கூறுஞ்செய்யுளாற் காண்க.

கோட்டமோரிருபானன்கு கூறுநாடெழுபத்தொன்பான்
றோட்டெழிலாயிரத்துத் தொளாயிரநத்தமாகுந்
தாட்டெழுகோத்திரங்கள் சகத்திரம்பன்னிரண்டா
நாட்டில்வேளாளர்தம்மை நவின்றிடவடங்காலக்கம்.

இக்கோத்திரங்களை வெளியிடுவது மரபன்றாதலின் ஈண்டுவிடுத்தனம். அங்ஙனமாயினும் சில வேளாளர்கள் சிவகோத்திரமெனக் கூறுவதென்னை? எனின், தங்களுக்கு மூலபுருஷனாகிய புலத்தியரையும் அவருக்குப்பின்சந்ததியாரையுங்கூறுவதைப்பார்க்கிலும், அவ்விருவகையினருந் தோன்றுதற்கு மூலமாயிருந்த சிவபெருமானைக் கூறுவது சிறப்புடைத்தெனப் பக்திவிசேடத்தால் சிவகோத்திரமெனக் கூறுவதேயாம்.

### சூத்திரர்க்குங் கோத்திரமுண்டெனல்.

ஆனால் சூத்திரர்களுக்குக் கோத்திரமில்லையெனக் கூறுகிறார்களே அது பொய்யோ? எனின் சூத்திரர்களுக்கும் கோத்திரமுண்டென்பதனை அடியில் குறித்தபிரமாணங்களால் கண்டுதெளிக.

பராசரம் முதல் அத்தியாயம், 431-ஆவது பக்கம்.

ஸர்வேஷாம்ப்ராஹ்மணஸ்ரேஷ்டம் வர்ணாநாம்க்ஷத்ரியஸ்ததா
ததாவைஸ்யஸ்யஸ்ய சாஸூனாம்ஸர்வஜாதிஜநஸ்ய ||

శ్లో॥ శర్మాంతంబ్రాహ్మణస్యోక్తం వర్మాంతంక్షత్రియస్యతు।
గుప్తాంతంచైవవైశ్యస్యదాసాంతంశూద్రజన్మనః॥

ஸர்மாந்தம்பிராஹ்மணஸ்யோக்தம்
வர்மாந்தம்க்ஷத்திரியஸ்யது
குப்தாந்தஞ்சைவவைஸ்யஸ்ய
தாஸாந்தம்ஸூத்ரஜந்மந:

அந்தணன், அரசன், வைசியன், சூத்திரனுடைய பெயர்களின் முடிவில் கூறிய முறைப்படி கிரமேலே, சருமன், வருமன், குப்தன், தாசன் என்ற சொற்களைச் சேர்த்துத் தருப்பணம் செய்யவேண்டும்.

வதூணாவிவணாநாம் விதுணாம்விதுமொத்ர தஃ
விதுமொத்ரம்கூமாரீணாமூடாநாம்ஹதுமொத்ர தஃ॥

శ్లో॥ చతుర్ణామపివర్ణానాం పితౄణాంపితృగోత్రతః।
పితృగోత్రంకుమారీణా మూఢానాంభర్తృగోత్రతః॥

சதுர்ணுமபிவர்ணுநாம்-பித்ருணும்பித்ருகோத்ரத:
பித்ருகோத்ரங்குமாரீணு-மூடாநாம்பர்த்ருகோத்ரத:

இந்நான்கு வருணத்துள்ளவர்க்கும் அந்தந்தப் பிதிரர்கட்கும் அவ்வவர் கோத்திரத்தோடும், மணம்புரியாத பெண்களுக்குத் தந்தை கோத்திரத்தோடும், மணம் புரிந்த பெண்களுக்குக் கணவன் கோத்திரத்தோடும் தருப்பணஞ்செய்க.

---

## பிள்ளைப்பட்டம்.

எல்லாம் வல்ல சிவபெருமானைவிட்டு நீங்காத அருட்சத்தியாகிய கங்கையாரிடத்துண்டான வேளாளர்களைப் பிள்ளைகளே யென்று உமாதேவியார் அழைத்ததனால் அப்பிள்ளை

யென்னும்பெயர், "தாயிட்டபெயரையே ஊரிட்டழைக்கும்" என்னும் பழமொழிப்படியே அவ்வேளாளருக்கு எக்காலமும் வழங்கிவருகின்றது. பிரமாணம்.

வேளாளருற்பவச் சருக்கம், 321-ஆம்பக்கம்.

அந்நாட்டுளநகர்க்குமேனைய நாட்டுளநகர்க்குமணியென்றோதுஞ்
செந்தமிழ்மாமறைமுழங்குங் காஞ்சிநகர்புகுந்துதவஞ்செய்யவெண்
வந்தருளம்பிகைதனைச்சூழ்வேளாளர்தம்மை முகமலர்ந்துநோக்கிநீ
யெந்தமரும்பிள்ளைநீரிளங்கோக்கண் மன்னர்பின்னரெனலாய்வைகி.

எனவருஞ்செய்யுளிற் காண்க.

**பிள்ளைப்பட்டம் ஏனையசாதியருக்குரிய காலம்.**

இனி, பிள்ளை என்பது அருமையும் பெருமையும் சீரும் செல்வமுங் குறித்த சிறப்புப்பெயராம். எங்ஙனமெனில்? கலியாணகாலத்தில் எவ்வளவு வயதுசென்ற கிழவனேயானாலும், எவ்வருணத்தவரேனும், மணமகனை மாப்பிள்ளைவந்தார் எனக் கூறுகிறார்கள். இது சிறப்பினும் சிறப்பாயுள்ள பெயராம். பிள்ளை ஊர்கோலம்போகிறது, பிள்ளைமருவுண்ணுகிறது எனவும், மாமியார் வீட்டிற்குப்போனவுடன் மருமகப்பிள்ளை வந்தாரெனவுங் கொண்டாடுகிறார்கள். இங்ஙனங் கூறுவதெல்லாம் அருமையையும் சிறப்பையும் குறித்து நின்றபெயராம். இப்பெயர் ஏனையவருணத்தார் சீரிடுங்காலத்தேயொழிய, ஏனையகாலத்து மாற்றித் தத்தம் பட்டப்பெயரால், ஐயர் இராயர் நாய்க்கர் செட்டியெனத் தத்தமக்குரியபெயர்களாலழைக்கப் படுகிறார்கள்.

**பிள்ளைப்பட்டம் வேளாளருக்கு எக்காலத்துமுளதேனல்.**

வேளாளருக்கோவென்றால், அற்றன்றாம். கருப்பத்திலுதித்தபோதும் பிள்ளையே, பிறந்தகாலத்தும் பிள்ளையே, இறந்தகாலத்தும் பிள்ளையே, விவாககாலத்தும் பிள்ளையே ஆதலின், எந்தக்காலத்தும் இவர்களுக்கு நிலைத்த பட்டப்பெயராக

இருக்கிறது. இந்தப் பிள்ளையென்னும் பெருமைநோக்கியே கடவுள்களாயுள்ள சிவகுமாரர்களுக்கும் மூத்தபிள்ளையார் இளையபிள்ளையார் எனவும், கூறுகிறார்கள்.

"MADURA MANUAL OF 1868, PART II, PAGE 32.

Vellalars so generally adopt the title of Pillai, that in the Madura District the terms of Vellalar and Pillai are almost interchangeable. The title of Pillai appears to have been generally adopted by these and other castes at a comparatively recent period probably about three or four centuries ago. Before that time, it is said Brahamans alone called themselves "Pillai" or sons of the Gods Rama Krishna and others, on the same principle as that on which the God Vigneshwara was and is still called Pillayar or the honorable son, namely of Siva and Parvathi.

1868-ஆ த்திய மதுரை ஜில்லாச் சரித்திரம் 32-ஆம் பக்கம்.

பிள்ளை என்றபட்டத்தை வேளாளர்கள் அவ்வளவு சாதாரணத்தில் வழங்கப்பட்டு வருதலால் மதுரைச்சில்லாவில் வேளாளர் என்பதும் பிள்ளை என்பதும் ஒன்றுக்கொன்று பிரதிபதமாயிருக்கின்றன. வேளாளர்களும் இன்னும் சில சாதியாரும் சிலகாலத்தின் முன்னர் சுமார் 3. அல்லது 4. நூற்றாண்டுகளாக இந்தப்பிள்ளை என்னும் பட்டம் வழங்கப்பெற்று வருகிறார்கள். விக்கினேஸ்வரருக்கு முற்காலத்தும் தற்காலத்தும் சாட்சாத் பரமசிவம்பார்வதியார்களின் பிள்ளை என வழங்கிவருதல்போல, இராமகிருஷ்ண முதலிய தேவர்களின் பிள்ளைகளென பூர்வகாலத்தில்,பிராமணர்கள் தங்களுக்கே பிள்ளையென்ற பட்டம் உரியதாக வழங்கப் பெற்றிருந்தார்கள்.

MADURA MANUAL OF 1868, PART III, PAGE 84.

About the year 1515 the administration of the country devolved upon one Narasu Pillai, who is said to have ruled four years. Curiously enough this man is called a Pillai

in the Stritala book, an Ayyar in an inscription of 1515, and both an Ayyar and a Nayakkan in another of 1516. As the title Ayyar is one usually borne by Brahmans alone at the present day—that is of course in the Madura District and the title Pillai is usually borne by Vellalars and men of a few other castes, I doubted at first whether the Narsa of the Stritala book could be the Narsa of the inscription. But all doubt on this point was set at rest by the discovery that in the inscription of 1515 the names of the ancestors of Narasa are given, and they are said to have been Pillais of Tanjore. Very probably therefore Narasa was a Brahman, (I am told that Brahmans formerly bore the title of Pillai not infrequently, as being "sons" of the Gods Rama, Subramanya, and others) and on becoming Governor of Madura in behalf of the Rayar of Vijayanagar endeavoured to assume the more dignified titles of Ayyar (Ayya) and Nayaka, leader.

தமிழ் மொழிபெயர்ப்பு 1868-ஹூத்திய.

மதுரைச்சில்லாச்சரித்திரம் 3-ஆவது பிரிவு 84-ஆவது பக்கம்.

1,515 - ஆவது வருடத்தில் இந்த இராச்சியத்தின் ஆளுகையானது நரசப்பிள்ளை யென்னும் ஒருவர் பால்வைக்கப்பட்டது. இவர் 4-வருடம் ஆண்டார். இவர் பட்டப்பெயர் ஆச்சரியமாகவே, சீதளபுத்தகத்தில் பிள்ளையென்றும், 1,515ஆம் ஹூல் ஏற்பட்ட சிலாசாசனத்தில் ஐயர் என்றும், மற்ஞோர் சாசனத்தில் நாயகர் என்றும், குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மதுரைச் சில்லாவில், தற்காலத்தில் சாதாரணமாக ஐயர் என்பது பிராமணருக்கும், பிள்ளை என்பது வேளாளருக்கும், இன்னும் சில ஜாதியாருக்கும், ஏற்பட்டிருப்பதால், சீதள புத்தகத்தில் குறித்திருக்கிற நரசு என்ற பெயரே சிலாசாசனத்தில் குறித்திருக்கிற நரசாக இருக்குமோவென்று நான் முதலில் சந்தேகப்பட்டேன். 1,855-ஹூத்திய சிலாசாசனத்தில் இந்த

நரசென்பவரின் முன்னோர்கள் தஞ்சாவூர்ப் பிள்ளைகளெனக் குறித்திருப்பதைப் பார்த்தவுடன் இந்தச்சந்தேகங்களெல்லாம் நிவிர்த்தியாய்விட்டன. அநேகமாகப் பிராமணர்கள் பூர்வத்தில் பிள்ளைப்பட்டம் வகித்திருந்ததாகக் கேள்விப்பட்டிருப்பதால், (பிள்ளை=இராமன் சுப்பிரமணியன் முதலிய தேவர்களின் பிள்ளை) நரசு என்பவன் பிராமணனாகவேயிருக்கவேண்டும். இவர் விஜயநகரத்து இராயருக்காக மதுரைச் சில்லாவுக்குக் கவர்னராக ஏற்பட்டதின்மேல், ஐயர் என்றும் நாய்க்கர் என்றும் சொல்லும்பெயர்களை அதிக கௌரவமான பட்டப்பெயரென்று வைத்துக்கொண்டார்.

மேற்கூறிய பிள்ளையென்பதற்குத் திருஷ்டாந்தமாகவே பெரிய புராணத்தில் குறிக்கப்பட்ட 63. நாயன்மார்களில் பிராமணத்திருமேனிகளாகிய சம்பந்த சுவாமிகளுக்கு, சம்பந்தப்பிள்ளையார், 'ஆளுடைய பிள்ளையார் என்றும், சண்டேசுர நாயனாருக்கு சேய்ஞலூர்ப்பிள்ளையார் என்றும் வழங்கி வருகின்றன. பிரமாணம் பின்வருஞ் செய்யுட்களிற் காண்க.

### பெரியபுராணம், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்.

சேணுயர்மாடப்புகலியுள்ளார் "திருஞானசம்பந்தப்பிள்ளையா"ரைக்
காணும்விருப்பிற்பெருகுமாசைகைமிகுகாதல்கரையிகப்பப்
பூணுமனத்தொடுதோணிமேவும் பொருவிடையார்மலர்ப்பாதம்போற்
வேணுபுரத்தையகன்றுபோந்து வீழிமிழலையுள்வந்தணைந்தார். [றி

### சண்டேசுர நாயனார் புராணம்.

ஞாலமறியப்பிழைபுரிந்து நம்பரருளானன்மறையின்
சீலந்திகழுஞ் "சேய்ஞலூர்ப்பிள்ளையார்"தந்திருக்கையிற்
கோலமழுவாளேறுண்டு குற்றநீங்கிச்சுற்றமுடன்
மூலமுதல்வர்சிவலோக மெய்தப்பெற்றான்முதுமறையோன்.

## முதலியார்ப் பட்டம்.

வேளாளருக்கு முதலியார்ப்பட்டம் வந்தகாரணம் என்னை எனின்.

### குடிகளால் பெறப்பட்ட முதலியார்ப்பட்டம்.

பூர்வத்தில் காஞ்சிநாட்டில் குடியரசா யிருந்தகாலத்தில் அக்குடியரசுக்கு வேளாளரைத் தலைவராகக்கொண்டு அவருக்கு முதன்மையாரென்னும் பட்டப்பெயரைக் குடிகள் கொடுத்தார்கள். அன்றுமுதல் அவர் சந்ததியாருக்கும் முதலியாரெனப் பெயர்வழங்கிவருகின்றது.

### ஆதொண்டச்சக்கரவர்த்தியால் பெறப்பட்ட முதலிப்பட்டம்.

ஆதொண்டச்சக்கரவர்த்தி காலத்துத், தொண்டைமண்டலத்தில் பிறதேசத்திலிருந்து வேளாளரைக்கொணர்ந்து குடியேற்றி, அத்தொண்டைமண்டலத்தை 79 நாடுகளாகப்பிரித்து, அந்நாடுகளைச்சீர்திருத்தி வளப்படுத்தவும், குடிகள்செய்யுங்குற்றத்தை விசாரிக்கவும், ஒவ்வொருநாட்டிற்கும் ஒவ்வொருவேளாளரை முதன்மையராக்கி நாட்டாண்மைகொடுத்து, ஏனைய குடிகளுக்கு முதன்மை பெற்றிருந்தமையால், அவ்வேளாளருக்கு மேற்படி சக்கரவர்த்தியால், முதலியார் என்ற பட்டமுங் கொடுக்கப்பட்டது.

கதலிதொண்டைக் காவலன் காமுறுமக்கட்கும்
முதலியெனப் பேர்படைத்த முன்கை.

என்ற, திருக்கை வழக்கத்தானுங்காண்க.

### அநபாயச்சோழனாற் பெறப்பட்ட முதலிப்பட்டம்.

இதுவன்றியும் அநபாயச்சோழன்காலத்து, சேக்கிழார் பெரியபுராணம் அருளிச்செய்து சிதம்பரத்தில் சிற்சபையின்கண் எழுந்தருளியிருக்கும், முதலாகிய நடேசப்பிரபுவின் சந்நிதானத்தில் அரங்கேற்றினர். அப்போது அதைக்கேட்டுச் சிரவணானந்தங்கொண்ட அச்சோழமகாராசன் சேக்கிழாரை

"எம்முதலியோ" இவர் எனத்தழுவிக்கொண்டான். அன்று முதல் சேக்கிழாருக்கும் அவர் குலத்தாருக்கும் முதலியார்ப் பட்டம் வந்ததாகக் கூறுகிறார்கள்.

'சிருட்டியில் முதன்மைநோக்கிவந்த முதலிப்பட்டம்.

பிரமாவானவர் உலகினுயிரைச் சிருட்டிக்கத்தொடங்குகையில் வேளாளரை முதலில் சிருட்டித்து அவர்களால் உயிர்களுக்கு வேண்டிய உணவுகளை உண்டாக்கிப் பின்னர் ஏனைய வருணத்தாரையும் சீவராசிகளையும் உண்டாக்கியதால் இவர்களுக்கு முதலிப்பட்டம் உண்டானதாகத் தெரியவருகிறது. பிரமாணம் கம்பரால் செய்தருளிய,

ஏரெழுபது.

அழுங்குழவிக்கன்புடைய தாயேபோலனைத்துயிர்க்கு
மெழுங்கருணைப்பெருக்காளரெளியரோயான்புகழ
வுழுங்கொழுவிற்கருவீறி யுலகமுதற்கருவாகச்
செழுங்கமலத்தயனிவரைச் செய்துலகஞ்செய்வானேல்.

என்னுஞ் செய்யுளாற்காண்க.

சிருட்டி திதி சம்மார திரோபவ அநுக்கிரகமென்னும் பஞ்ச கிருத்தியங்களை நடாத்தும் முதற்காரணராகிய நடராஜப்பெருமானுக்கு முதலிப்பட்டம் வந்ததுபோலச், சருவான்மாக்களுஞ் சீவிப்பதற்கு முதற்காரணமாயுள்ள உழவுதொழிலையுடையார் வேளாளராதலின், அவருக்கும் முதலியாரென்னும் பெயர் வந்ததென்க. பிரமாணம். பின்வருவனவற்றாற்காண்க.

தொண்டைமண்டல சதகம்.

சீரொன்றதேவர்முதலாத லாற்றில்லைவாழ்முதலி
யாரென்றுநாமம்படைத்தது போன்மற்றவருமந்தப்
பேரொன்றுபெற்றது வேளாண்முதன்மையைப்பெற்றல்லவோ
வாரொன்றுபூண்முலையாயெளிதோ தொண்டைமண்டலமே.

நாயனூர் குறள்.

சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனு
லுழந்து முழவே தலை.

மேற்கூறிய பிள்ளைப் பட்டமும் முதலிப்பட்டமும் வேளாளர்க்கே உரியனவென்க. அங்ஙனமானல் இக்கால்த்துப் பிறசாதியாரும் அப்பட்டப்பெயர்களை வைத்துக்கொண்டிருக்கிறூர்களே அதற்கு என்ன காரணமெனின்? முற்காலத்து வேறுசாதியார் முதலியார் பிள்ளை யெனப்பட்டம் வைத்துக்கொண்டால் மற்றவர்கள் என்னடா! நீ வேளாளனுக்குப் பிறந்தவனு? எனக்கேட்பார்கள். அதனை நோக்கி வேறுசாதியார் அப்பட்டப்பெயர்களைவைத்துக்கொள்ள நாணுவார்கள். ஒருகால் நாணமின்றி வைத்துக் கொண்டபோதிலும் அக்காலத்துள்ள தமிழரசர்களால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இக்காலத்திலுள்ளார் சிலர் வேறுசாதியார்க்குரிய பட்டப்பெயரைத் தாங்கள் வைத்துக்கொள்வதற்கு நாணுவதுமில்லை, அங்ஙனம் நாணமின்றி வைத்துக்கொண்டபோதினும் இக்காலத்தரசர்களால் அவர்கள் தண்டிக்கப்படுகிறூர்களுமில்லை.

---

## சைவன்.

சைவன் என்னும் பெயர் யாருக்கு வழங்குமெனின்? விஷ்ணுவை வழிபடுவோனுக்கு வைஷ்ணவன் எனவும், புத்தனை வழிபடுவோனுக்குப் பௌத்தன் எனவும், பெயர்கள் வழங்குவனபோலச் சிவனை வழிபடுவோனுக்குச் சைவனெனப் பெயர்வழங்கும். சிவனை வழிபடும் சிவத்துவிஜனுக்கு ஆதிசைவனென்றும், ஏனைய அந்தணனுக்கு மகாசைவனென்றும், க்ஷத்திரிய வைசியர்களுக்கு அநு சைவரென்றும், சூத்திரனுக்கு அவாந்திர சைவனென்றும், அநுலோமாதியருக்கு மத்திய சைவர் அல்லது பிரவர சைவரென்றும், பிரதிலோமாதியருக்குப் பாரசைவர் அல்லது அவாந்திர சைவரென்றும்,பெயர்கள் வழங்கப்பட்டன. அங்ஙனம் ஒவ்வொரு சாதியார்க

னுக்கும் சிறப்புவகையால் இன்ன இன்னர் சைவரென்று நூன்முகத்தா லுணர்வதேயன்றி அனுபவத்தில் பொதுவகையால் சைவர் என்பது வேளாளரைக் குறிப்பிப்பதுபோல வேறு சாதியாரைக் குறியாதாம். ஏனெனில்? சாத்தன் கொற்றனைநோக்கி இவ்வூரில் சைவன் வீடெங்குளது எனவினவவே, கொற்றன் உயர்குலத்துள்ள ஆதிசைவன் மகாசைவன் வீட்டையாவது, அல்லது இழிகுலத்தானாகிய பாரசைவனுயுள்ள அம்பட்டன் வீட்டையாவது, காட்டாது வேளாளன்வீட்டையே காட்டுகிறான். ஆகையால் சைவன் என்பது காரண இடுகுறியாய் வேளாளனுக்கே யுரியதாயிருப்பதாகத் தெரியவருகிறது. இத்தகைய சைவன் என்றபெயர் வேளாளருக்குச் சிறந்துநின்றதுபோலச் சிவபெருமானுக்குஞ்சிறந்துநின்றதாம். பிரமாணம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாலவாய் - திருநேரிசை.

செய்யநுண்கமலபாதஞ் சேருமாதேவர்தேவே
மையணிகண்டத்தானே மான்மறிமழுவொன்றேந்துஞ்
சைவனேசாலஞானங் கற்றறிவிலாதநாயே
னையனேயாலவாயி லப்பனேயருள்செயாயே.

திருஞானசம்பந்தசுவாமிகள் திரிசிரபுரம்
பண் - வியாழக்குறிஞ்சி.

வானவர்மதியொடு மத்தஞ்சூடித்
தானவர்புரமெய்த சைவனிடங்
கானமடமயில் பெடைபயிலுந்
தேனமர்பொழிலணி சிரபுரமே.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம், குலாப்பத்து.

பாழ்ச்செய்விளாவிப் பயனிலியாய்க்கிடப்பேற்குக்
கீழ்ச்செய்தவத்தாற் கிழியீடுநேர்பட்டுத்
தாட்செய்யதாமரைச் சைவனுக்கென்புன்றலையா
லாட்செய்குலாத்தில்லை யாண்டானைக்கொண்டன்றே.

மற்றும் வருவனவற்றுற் காண்க.

வேளாளர்கள் வைசியர்கள் என்பது முன்னரே அநேக பிரமாணங்களால் விளக்கப்பட்டது. இப்பிரமாணங்களினால் தெளியாதார்க்கு இன்னும் வேறுபிரமாணங்களாலும் விளக்குதும்.

**சாதுர்வர்ணர்களின் மேம்பாடு.**

மநு-2-155.

𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑍋𑌜𑍍𑌯𑍈𑌷𑍍𑌠𑍍𑌯𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂𑌤𑍁𑌵𑍀𑌰𑍍𑌯𑌤𑌃। 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌨𑌾𑌂𑌧𑌾𑌨𑍍𑌯𑌧𑌨𑌤 𑌶𑍍𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑍇𑌵𑌜𑌨𑍍𑌮𑌤𑌃 ॥

విప్రాణాంజ్ఞానతోజ్యైష్ఠ్యం క్షత్రియాణాంతువీర్యతః
వైశ్యానాంధాన్యధనత శ్శూద్రాణామేవజన్మతః॥

விப்ராணும்க்ஞாநதோஜ்யைஷ்டியம் க்ஷத்ரியாணாந்துவீர்யத
வைஸ்யாநாம்தாந்யதநதஸ் ஸூத்ராணாமேவஜந்மத:.

இ - ள். பிராமணர்களுக்கு ஞானத்தினாலும், க்ஷத்திரியர்களுக்கு வீர்யத்தினாலும், வைசியர்களுக்கு தானியம் பொருள் இவைகளினாலும், சூத்திரர்களுக்கு வயதினாலும் மேன்மையுண்டாகிறது.

**ஞாயஸ்தானங்களில் வாதி பிரதிவாதிகள் வாக்குமூலம்.**

மநு. 8-113.

𑌸𑌤𑍍𑌯𑍇𑌨𑌶𑌾𑌪𑌯𑍇𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌂𑌵𑌾𑌹𑌨𑌾𑌯𑍁𑌧𑍈𑌃। 𑌗𑍋𑌬𑍀𑌜𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑍈𑌰𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑌂𑌶𑍂𑌦𑍍𑌰𑌂𑌸𑌰𑍍𑌵𑍈𑌸𑍍𑌤𑍁𑌪𑌾𑌤𑌕𑍈𑌃 ॥

సత్యేనశాపయేద్విప్రం క్షత్రియంవాహనాయుధైః।
గోబీజకాంచనైర్వైశ్యం శూద్రంసర్వైస్తుపాతకైః॥

ஸத்யேநஶாபயேத்விப்ரம் க்ஷத்ரியம் வாஹநாயுதை:
கோபீஜகாஞ்சநைர்வைஶ்யம் ஶூத்ரம் ஸர்வைஸ்துபாதகை:

இ-ள். ஞாயாதிபதி வாதிபிரதிவாதிகளைப் பிரமாணங் கேட்கும்போது, பிராமணனைச் சத்தியமாகச் சொல்லென்றும், க்ஷத்திரியனை உன் வாகனம் ஆயுதம் இவைகளின்மேல் ஆணையிட்டுச் சொல்லென்றும், வைசியனை உன் பசு தானியம் தனம் இவைகளின்மே லாணையிட்டுச் சொல்லென்றும், சூத்திரனை நான் பொய்சொன்னால் பஞ்சமகா பாதகங்களையடையக்கடவே னென்று சொல்லச் சொல்லியும் பிரமாணங் கேட்கவேண்டியது.

### சாதுர்வருணசாட்சிகளின் வாக்குமூலங்கள்.

மநு-8-49.

ബ്രൂഹീതി ബ്രാഹ്മണം പൃച്ഛേത് സത്യം ബ്രൂഹീതി പാർത്ഥിവം ഗോബീജകാഞ്ചനൈർവൈശ്യം ശൂദ്രം സർവൈസ്തു പാതകൈഃ ॥

బ్రూహీతిబ్రాహ్మణంపృచ్ఛేత్సత్యంబ్రూహీతిపార్థివమ్।
గోబీజకాంచనైర్వైశ్యం శూద్రంసర్వైస్తుపాతకైః॥

புரூஹிதிபிராஹ்மணம்புருச்சேத்ஸத்யம் ப்ரூஹிதிபார்திவம்
கோபீஜகாஞ்சனைர்வைஸ்யம் ஸூத்ரம்ஸர்வைஸ்துபாதகை:

இ-ள். நியாயாதிபதி சாட்சிகளை விசாரிக்குமிடத்து, பிராஹ்மணனைச் சொல்லென்றும், க்ஷத்திரியனை உண்மையைச் சொல்லென்றும், வைசியனை நான் பொய்சொன்னால் என்னுடைய பசுவும் விதையும் பொன்னும் பலியாதழியுமென்றும், சூத்திரனை நான் பொய்சொன்னால் மறையோனைக் கொன்றது முதலிய பாவங்களையடைவேனென்றும், சத்தியஞ் சொல்லுவித்து வாக்குமூலங் கேட்கவேண்டும்.

### சாதுர்வருணத்தார் தீட்டுப்போக்கு.

மநு-5-99.

𑌵𑌿𑌪𑍍𑌰𑌶𑍍𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑍍𑌯𑌪𑌸𑍍𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍋𑌵𑌾𑌹𑌨𑌾𑌯𑍁𑌧𑌮𑍍।
𑍈𑌵𑌶𑍍𑌯𑌃𑌪𑍍𑌰𑌤𑍋𑌦𑌂𑌰𑌶𑍍𑌮𑍀𑌨𑍍𑌵𑌾𑌯𑌷𑍍𑌟𑌿𑌂𑌶𑍂𑌦𑍍𑌰𑌃𑌕𑍃𑌤𑌕𑍍𑌰𑌿𑌯𑌃॥

విప్రశ్శుధ్యత్యపస్స్పృష్ట్వా క్షత్రియోవాహనాయుధమ్।
వైశ్యఃప్రతోదంరశ్మీన్ వాయష్టింశూద్రఃకృతక్రియః॥

விப்ரஸ்ஸத்தயத்யபஸ்ஸப்ரஷ்ட்வா க்ஷத்திரியோவாஹநாயுதம்
வைஸ்யஃபிரதோதஂரஸ்மீங்வாயஷ்டிஂ ஸூத்ரஃகிருதகிரியஃ.

இ-ள். தீட்டுப்போகும் நாளில் நான்குவருணத்தாருள், பிராஹ்மணனுக்கு ஸ்நாநத்தாலும், க்ஷத்திரியனுக்கு வாகனம் வில்லு இவைகளைத் தொடுவதினாலும், வைசியனுக்கு உழவு கோல் தராசு கயிறு இவைகளைத் தொடுவதினாலும்; சூத்திரனுக்கு மூங்கிற்றடியைத் தொடுவதினாலும் சுத்தியுண்டாகிறது.

மேற்கண்ட சாதுர்விதப் பிரமாணங்களாலும் தனம் தானியம் பசு உழவுகோல் தராசு கயிறு இவை வைசியர்களின் பொருள்களென்றே மநு தர்மசாஸ்திரங்களால் தீர்மானிக்கப் பட்டிருக்கின்றன. வேளாளர் சூத்திரராயின் இப்பொருள்கட்கு இவர் உரியரல்லராவர். ஆதலால் அது பொருந்தாது. உரியராகிய இவர் வைசியரென்பது திண்ணம்.

## வருணனுஷ்டான பிரகாசிகை.

| விடயம். | அந்தணர். | அரசர். | வைசியர். | சூத்திரர். |
|---|---|---|---|---|
| உற்பத்தி, பிரமாவின் .. | முகத்தில் .. | தோளில் ... | தொடையில் ... | பாதத்தில். |
| நாமகரணம் ... | தெய்வத்தன்மை ... | பராக்கிரமம் ... | செல்வம் ... | இழிவு. |
| பட்டப்பெயரந்தத்தில் | சர்மன் ... | வர்மன் ... | குப்தன் ... | தாசன். |
| உயர்வு ... | ஞானத்தால் ... | வீரியத்தால் ... | தனம்தானியம்பசுவால் | வயதினுல். |
| சாதி உயர்வு ... | 6-பங்கு ... | 3-பங்கு ... | 2-பங்கு ... | 1-பங்கு. |
| பற்குச்சியளவு ... | 12-அங்குலம் ... | 11-அங்குலம் ... | 10-அங்குலம் ... | 9-அங்குலம். |
| சௌசம் ... | 5-தரம் ... | 4-தரம் ... | 3-தரம் ... | 2-தரம். |
| ஸ்நானம் நீரில் ... | புயத்தளவு ... | கண்டத்தளவு ... | முகத்தளவு ... | சிரசளவு. |
| ஆசமனம் ... | மாரளவு ... | கழுத்தளவு ... | உண்ணாக்களவு ... | உதட்டளவு. |
| உபவீதம் ... | பட்டுநூல் ... | சணல் ... | கம்பளம் ... | சூன்யம். |
| கருமம் ... | ஓதல் வேட்டல் ஈதல் ஓதுவித்தல் வேட்பித்தல் எற்றல் ... | ஓதல் வேட்டல் ஈதல் உலகோம்பல் படைபயிற்றல் மனமடக்கல் | ஓதல் வேட்டல் ஈதல் கிருஷி வாணிபம் பசுக்காத்தல் ... | மேன் மூவருக்கும் பணிசெய்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| பதவி ... | சத்தியலோகம் ... | இந்திரலோகம் ... | மருத்துலோகம் ... | கந்தர்வலோகம். |
| பிதிர்கள் ... | சோமபர்கள் ... | ஹவிர்ப்புக்குகள் ... | ஆஜ்ஜிபர் ... | சுகாலிகள். |
| விவாகம் ... | பிராமணாதி 4-ல் ... | க்ஷத்திரியாதி 3-ல் ... | வைசியாதி 2-ல் ... | தங்குலத்தில். |
| உபநயனகாலம் ... | 3-முதல் 16-க்குள் ... | 11-முதல் 22-க்குள் ... | 12-முதல் 24-க்குள் ... | சூன்யம். |
| அந்தணர் க்ஷேமம்விசாரிப்பது ... | அந்தணரை. குசலமாக இருக்கிறுயா ... | அரசரை. நோயற்றிருக்கிறுயா ... | வைசியரை. க்ஷேமமாக இருக்கிறுயா ... | சூத்திரரை. சுகமாக இருக்கிறுயா என்பனவாம். |
| சூதகம் ... | அந்தணருக்கு. 10-நாள் ... | அரசருக்கு. 12-நாள் ... | வைசியருக்கு. 15-நாள் ... | சூத்திரருக்கு. 30-நாள். |
| தீட்டுப்போவது ... | ஸ்நானத்தால் ... | வாகனம் வில்லுகளைத் தொடுவதால் ... | உழவுகோல் தராசு கயிறு இவைகளைத் தொடுவதால் ... | மூங்கிற்றடியைத் தொடுவதால். |
| நியாயாதிபதி சாட்சி விசாரணையில் ... | அந்தணரை. சொல்லென்றும் ... | அரசரை. உண்மையைச் சொல்லென்றும் ... | வைசியரை. பொய்சொன்னால் பசுவும் விதையும் பொன்னும் உனக்குதவாவென்றும் ... | சூத்திரரை. நீ பொய் சொன்னால் அந்தணனைக்கொன்றபாவம் அடைவாயென்றும் கேட்கவேண்டும். |

| விடயம். | அந்தணரை. | அரசரை. | வைசியரை. | சூத்திரரை. |
|---|---|---|---|---|
| நியாயாதிபதி பிரதிவாதி விசாரணையில்... | சத்தியமாகச் சொல்லென்றும் ... | உன்வாகனம் ஆயுதம் இவைகளின்மேலாணையிட்டுச் சொல் என்றும் ... | உன்பசு தானியம் தனம் இவைகளின்மேல் ஆணையிட்டுச் சொல் என்றும் ... | நீ பொய்சொன்னால் பஞ்ச மகாபாதகங்களையடையக் கடவாயென்றும் சொல்லி, பிரமாணங் கேட்கவேண்டும். |
| களவுசெய்வதற்கு அபராதம் ... | அந்தணருக்கு.<br>64-பங்கு ... | அரசருக்கு.<br>32-பங்கு ... | வைசியருக்கு.<br>16-பங்கு ... | சூத்திரருக்கு.<br>8-பங்கு. |
| *அந்தணர் சதுர்வருணத்தில் தானம்வாங்கும்போதுபெற்றுக் கொண்டேனென்று ... | அந்தணரிடத்தில்.<br>வெளிப்படையாகச் சொல்லவேண்டும்... | அரசரிடத்தில்.<br>மெள்ளச் சொல்லவேண்டும் ... | வைசியரிடத்தில்.<br>வாயுடன் சொல்லவேண்டும் ... | சூத்திரரிடத்தில்.<br>மனத்தினால் சொல்லவேண்டும். |
| ஷ | பிரணவத்தோடு சொல்லவேண்டும் ... | பிரணவத்தை நீக்கிச் சொல்ல வேண்டும் | காதுடன்சொல்ல வேண்டும் ... | சுவஸ்தியென்று கூறவேண்டும்.<br>சுவஸ்தி=நல்லது. |

* சூத்திரரிடத்தில் அந்தணர் தானம் வாங்குவது ஆபத்துக்காலத்திலென்க.

## விருதுகள்.

**வேளாளர்களுக்கு, கரிகாலச்சோழனளித்த விருதுகள்.**

*காவியமாகியகாமீசங்கண்டுகெங் காகுலத்தோ*
*ரோவியபாத்திரராகவிருபத்து நான்குயர்ந்த*
*மேவியகோட்டத் திலுங்கரிகாலவளவன்மிக்க*
*வாவியமேன்மைகொடுத்தளித்தான் றொண்டைமண்டலமே.*

இதனால் கரிகாலச் சோழன் ஆகம சாஸ்திர புராணங்களில் தேர்ச்சியுடைய தனது தொண்டைமண்டலத்து 24-கோட்டங்களினுமுள்ள கங்கை குலத்தோராகிய வேளாளர்களுக்கு மேன்மையான பட்டமும் விருதுகளுமளித்தான் எனத்தெரியவருகின்றது. இந்த விருதுகளே எல்லாம் வருண உற்பவவிளக்க அத்தியாயத்தில் 361 - ஆவது பக்கத்தில் இளங்கோக்களின் சின்னமெனக்கூறப்பட்டன. ஆங்குணர்க.

பிற்காலத்தும் இடங்கை வலங்கையார்களுள் வெகுகாலமாக விவாதங்கள் நேரிட்டுவந்தன கடைசியாக A. D. 1809-ஸு-ல் செங்கல்பட்டு சில்லாக் கோர்ட்டாரால் இன்ன இன்னருக்கு இன்ன இன்ன விருதுகளுரியனவென்றும், அவரவர் இன்ன இன்னபடி நடந்து கொள்ளவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. அவற்றையடியிற் காட்டுதும் கண்டுணர்க.

**இடங்கை வலங்கையார் விருதுகளைப்பற்றிய தீர்ப்பு.**

1809-ஸு ஜூலை மீ 25உ செங்கல்பட்டு ஜில்லா ஜட்சி மேஜிஸ்திரெட்டு ஜார்ஜு கோல்மன் துரையவர்கள் செய்த தீர்மானத்தின் சங்கிரகம்.

**வலங்கையார் விருதுகள்.**

வேளாளர் கவரைகளுக்கு—சங்குசக்கரக்கோல், பசுமைக் குவளைத்தார், ஆத்தித்தார், தவண்டை, அருகுதீவட்டி, வெள்ளைக்குடை, வெண்சாமரம், திருச்சின்னம், செயமணி, சித்திரமேழிக்கொடி, வெள்ளைக்கொடி, அம்சக்கொடி, அனுமக்கொடி, மயிற்கொடி.

கன்னிடையருக்கு - கூடாரம், பசவசங்கரக்கொடி, பஞ்சவர்ணக் கொடி.

வடுகுவேளாளருக்கு - ... ... அம்சக்கொடி.

இரெட்டிகளுக்கு - ... ... ... கல்பைக்கொடி.

கம்மவாருக்கு - ... ... ... ரிஷபக்கொடி.

கொந்தளவருக்கு - ... ... ... சகோரபக்ஷிக்கொடி.

நத்தமான்களுக்கு - ... ... ... ஆளிக்கொடி.

மலையமான்களுக்கு - ... ... ... அரிதாளக்கொடி.

கோமட்டிகளுக்கு - இடுமயிர், இடுமுரசு, இலவந்தார், மகரதோரணம்.

இடையருக்கு - ... ... ... ... சக்கரம்.

வடுகுஇடையருக்கு - ... ... ... ... சங்கு.

பத்மசாலியருக்கு - ... ...புலிவாகனம், ஆண்புலிக்கொடி.

பட்டுச்சாலியருக்கு - ... ... இருதலைப்பட்சிக்கொடி.

வடுகுசேணியருக்கு - ...பிச்சிமாலை, நாகபாசம், பெண்புலிக்கொடி.

சேன்றவருக்கு - ... ... ... முதலைக்கொடி.

கன்னிடைய சேணியருக்கு - முல்லைமாலை, விசுறுதண்டை, கெண்டபேரண்ட பட்சிக்கொடி.

பட்டுநூற்காரருக்கு - ... ... ... பட்டுக்கொடி.

சேடருக்கு - ... சூர்வாள்கொடி, கொழிஞ்சிக்கொடி.

செக்குவாணியருக்கு - செண்டு, தொண்டு, இடுமயிர்த்தார், இடுமுரசு, கெருடக்கொடி.

இலைவாணியருக்கு - ... தொண்டு, தார், இடுமுரசு, குயிற்கொடி.

ஒண்டியெருது வாணியருக்கு - ... பஞ்சவர்ணக் கிளிக்கொடி.

சணப்பருக்கு - ... ... ... சவுரிக்கொடி.

முச்சியருக்கு - ... ... ... மகரமீன்கொடி.

காஞ்சியருக்கு - ... ... ... பொதிக்கொடி.

வேதகாரருக்கு - சிக்கிலிக்கொடி, பொய்க்காற்குதிரை, கத்திக்கொடி.

நரிசோகிகளுக்கு - ... ... ... நாய்க்கொடி.

தமிழ்க்குசவர்
வடுகுக்குசவர்
குசக்கன்னக்கர் } சக்கரம், தடி, தாளவிருஷபக்கொடி.

மேளகாரருக்கு - ... ... ... டமாரக்கொடி.

நட்டுவருக்கு - ... ... ... தாளக்கொடி.

தாசிகளுக்கு - ... ... ... மன்மதக்கொடி.

சாணருக்கு - ... குறிஞ்சித்தார், சாணை, ஏணிக்கொடி.
குறவருக்கு - ... ... ... கழுதைக்கொடி.
சுக்காசெட்டி லம்பாடிகளுக்கு - ... சித்திரக்கொடி.
வேட்டைக்காரருக்கு - ... ... கவுண்டிக்கொடி.
பட்டணவருக்கு - ... ... ... ஆமைக்கொடி.
கரையாருக்கு - ... ... ... மச்சக்கொடி.
ஒட்டருக்கு - ... ... ...மண்வெட்டிக்கொடி.
உப்பரவருக்கு - ... ... ... பன்றிக்கொடி.
போயிகளுக்கு - ... ... ... பல்லக்குக்கொடி.
பணிசெய்வருக்கு - ... ... ... தாரைக்கொடி.
தமிழ் வண்ணார், வடுகுவண்ணார் } சாய்ப்பு அரிவாள், அல்லித்தார், வெள்ளையானை.
தமிழ் நாவிதனுக்கு - ... ... தும்பைமாலை, புருஷாமிருகம்.
வடுகுநாவிதனுக்கு - ... ... ... நாகசுரம்.
தொம்பரவருக்கு - ... ... ... கெடைக்கொடி.
மாரியம்மைக்காரருக்கு - ... ... ... உடுக்கைக்கொடி.
பூசாரிக்கு - ... ... ... சிலம்புக்கொடி.
ஏனாதிகளுக்கு - ... ... ... முயற்கொடி.
அரிப்புக்காரருக்கு - ... ... ... தாமரைபத்மக்கொடி.
வடுகுபண்டாரங்களுக்கு - ... ... சூலக்கொடி.
வஞ்சூராருக்கு - ... ... முத்துக்கோவைக்கொடி.
குடுகுடுப்பைக்காரருக்கு - ... ... சத்திக்கொடி.
கிளாசுக்காரருக்கு - ... ... ... வண்டிக்கொடி.
இருளருக்கு - ... ... ...சில்லாக்சோற்கொடி.
வெளிக்கருமானுக்கு - ...துத்திக்கொடி, சம்மட்டிக்கொடி.
வெளிக்கற்றச்சருக்கு - ... ... உளிக்கொடி.
கப்பல் தச்சருக்கு - ... ... ... வாச்சிக்கொடி.
கப்பல் வடுகருக்கு - ... ... ... கப்பற்கொடி.
பண்டருக்கு - ... ... ... கத்திக்கொடி.

* * * *

## வலங்கைப் பஞ்சமர்களுக்கு விருதுகள்,

பவுனியருக்கு - ... ... ... டமாரக்கொடி.
வள்ளுவருக்கு, மாவட்டியருக்கு, பறையருக்கு, பண்டப்பறையருக்கு } இவர்களுக்கு வெள்ளைக்குடை, வெண்சாமரம், வெள்ளைக்கொடி, செக்குத்தடி, தமுக்கு, தப்பட்டை, வாங்கா, பறை, சங்கீதமேளம், பஞ்சகல்சம்.

* * * *

## இடங்கையார் விருதுகள்.

செட்டிகளுக்கு - ... ... ... பருந்துக்கொடி.
நகரவாணியருக்கு - ... ...நவரத்தினமாலை,தொண்டு,தார்.
கைக்கோளருக்கு - திருவரைப்பத்திரம், அடக்கம், தோமரம், ஏறுக மூகு, சிங்கக்கொடி, கரடிக்கொடி, மான்கொடி, மயிற்கொடி, போத்துக்கொடி, இடுமுரசு.
கம்மாளருக்கு - சுத்தி, உளி, வாச்சி, சக்கரக்கோல், கிளிக்கொடி, கழுகுக்கொடி.
பள்ளிகளுக்கு - குந்தளி, கொக்கிறகு, இடுமயிர், செங்கழுநீர்மாலை, பசுமை, வெங்கத்தார், அக்கினிக்கொடி, சேவற்கொடி, சிலைக் கொடி, மாலக்கொடி, கழுகுக்கொடி, போத்துக்கொடி, நரிக் கொடி, இடுமுரசு.

* * * *

## இடங்கைப் பஞ்சமர் விருதுகள்.

பள்ளருக்கு - ... ... நெல்லித்தார், அலவங்கொடி.
சக்கிலியருக்கு - மஞ்சள்தட்டி, கறுப்புருமால், வீரகத்தி, தென்னஞ் சோலை, தப்பட்டை, கோணக்கொம்பு.

* * * *

இதற்கு, சாக்ஷி 1809ஆ ஜூலை மீ 25உ செங்கல்பட்டுஜில்லா ஜட்சு மேஜிஸ்திரேட்டு விசாரணைக்கர்த்தராகிய மேஸ்டர் ஜார்ஜி கோல்மன்துரை அவர்கள் கையெழுத்தும் கோர்ட்டின் முத்திரை யும் போடப்பட்டது.

(Signed) GEORGE COLEMAN,
*Judge and Magistrate.*

(Signed) திருவேற்காடு சுப்பராயமுதலியார்,
நேட்டிவ் ரிஜிஸ்டர்.

இத்தமிழ்நாட்டில் ஒவ்வொரு நகரங்களிலும் சிற்றூரி லும் இடங்கை வலங்கையார் வசிப்பதற்கு வீதிகள் தனித்த னியே ஏற்பட்டிருக்கின்றன. ஒருவர் வசிக்குந் தெருவில் மற்றொருவர் வசிப்பதில்லை சுபாசுபப் பிரயோசனங்களிலும் ஒருவரிருக்கும் வீதிவழியாக மற்றொருவர் ஊர்வலம் வருவதி ல்லை பிரேதங்கொண்டு போவதில்லை கருமாதியிலுமப்படியே.

இருவருக்கும் பொதுவாயுள்ள வீதியில் போவதற்குத் தடை யிராது. சுவாமிகளுக்கு உற்சவாதிகளும் அந்தந்தக் கட்சிக ளிலுள்ள வீதிகளிலேதான் நடத்துவார்கள். மறுகட்சி வீதி களில் கொண்டுபோவதில்லை. இந்த 2-கட்சிக்காரருக்கும் தாசி கள் பணிசெய்வோர் வெவ்வேறாக இருக்கிறார்கள். வலங்கைத் தாசிகள் இடங்கைக் கோவில் அல்லது அவர்கள் வீட்டில் நட க்கும் சதுர்களுக்குப் போகமாட்டார்கள். இடங்கைத்தாசிகள் வலங்கையாரிடத்துமப்படியே. வலங்கைப்பணி செய்வோரும் இடங்கையாருக்கு நேரில், போய் சாவுசொல்லமாட்டார்கள். அப்படி வலங்கையார் இடங்கையாருக்குத் தெரிவிக்கவேண் டுமானல் இடங்கைப்பணி செய்வோனைக்கொண்டு தான் தெ ரிவிக்கவேண்டும். இடங்கையார் தமது ஏவலாளரைக்கொண்டு வலங்கையாருக்குத் தெரிவிப்பார்கள். இன்னுமிங்ஙனஞ் சிற் சிலவித்தியாசங்களுண்டு.

### கவரைகளுக்குத் தேசாயிப்பட்டமும் விருதுகளும் வந்தகாரணம்.

வேளாளர்க்குரிய விருதுகள் கவரைகளுக்கு எங்ஙனம் பெறப்பட்டதெனில்? சாலிவாகனசகாப்தம் 1433-ல் சந்திர கிரியில் கிருஷ்ணராயர் அரசாண்டுவந்தார். அவருக்கு அறன் வளர்த்தான் முதலியார் மந்திரியாகவிருந்தார். அக்காலத்தில் சிலவேடதாரிகள் இராஜசபையில் நூதனமான ஆட்டங்களை யாடவேண்டுமென்று நினைத்து வேடங்கட்டியாடினார்கள். அவ் வாட்டத்துள், ஓர் வேளாளப்பெண் வந்ததுபோல ஒருவன் வேடங்கட்டியாடினான். அதனைக்கண்ட முதலியார் தம்முடை யகுலத்தைப் பரிகாசஞ்செய்வதுபோல நினைத்துக் கோபக் குறியாயிருந்தார். இதைக்கண்ட தமது சேவகனாயுள்ள ஓர் க வரைச்செட்டியானவன், அவ்வேளாளப் பெண்ணைப்பார்த்து தாயே! தாங்கள் திருமணிவாயில்கடந்து சபையேறி இங்குவந் த காரணம் யாதென்றுகேட்க, வேடதாரியும் பரிகாசமாகவே நீ வந்ததுபோல நானும் வந்தேன் என்றான். அதுகேட்ட அ ச்சேவகன் எமது எஜமான் சாதிக்குத் தகாதகாரியஞ்செய்த

மையால் உன்னைத்தண்டிப்பேனென்று, தன்கையிலிருந்த வாளாயுதத்தால் ஒரேவெட்டாகவெட்டித் தலையை வீழ்த்தினன். அப்படி வெட்டினதற்காக அச்சேகவனைக் குற்றவாளியாக்காமல், வேடப்பிராந்தியால் வெட்டினனென்று அவன்பிழையை முதலியார் மன்னிக்கச்செய்தார். பின்னும் அவனது வீரத்தனத்தை மெச்சி, தேசாயிப்பட்டமும் வேளாளர்க்குண்டான விருதுகளும் அவனுக்குக்கொடுத்துச் சன்மானஞ் செய்தார். அன்றுமுதல் கவரைச்செட்டிகளுக்கும் வேளாளர்விருதுகள் வழங்கிவருகின்றன.

இதற்கு வேறு சிலகாரணமுமுண்டு. அஃதென்னை? எனில், குடியரசுக்காலத்தில் குடிகளை யாளுவதற்கு, கவரைகள் அதிகமுயற்சிசெய்து வேளாளரை முதன்மையராக்கினர்கள். அவ்வபிமானம்பற்றி அவருக்குத் தேசாயிப்பட்டமும் தமது விருதுகளும் வேளாளர் கொடுத்தனர் என்பது.

வேளாளருக்குக் கரிகாலச்சோழனால் கொடுக்கப்பட்ட விருதுகள் 18. அவை 361-ஆம் பக்கத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன. செங்கல்பட்டுஜில்லா தீர்ப்பில் அலப்படை எடுகோல் சிங்கக்கொடி குபிற்கொடி கிளிக்கொடி ஆலவட்டம் பெரியபேரி இவை ஏழும் விடுபட்டிருக்கின்றன. சங்கு சக்கரம் கோல், அம்சக்கொடி அநுமக்கொடி மயிற்கொடி ஆகிய இந்நான்கும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணந்தெரியவில்லை. இவ்விருதுகளெல்லாம் ஒவ்வொரு சாதியாருக்கும் ஒவ்வொரு காரணம்பற்றியே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் கங்காதேவியின் கொடி சிங்கம் அது அவள் புத்திரருக்கே யுரியதாம். இவையன்றியும்,

வலங்கைத்தலைவராயுள்ள வேளாளரைச் சூத்திரரென்றும் இடங்கைத் தலைவராயுள்ள வணிகரை வைசியரென்றும் சில வித்துவான்கள் கூறியிருக்கின்றார்கள். முற்காலத்திலுள்ள அவ்வித்துவான்கள் வடநூலாராய்ச்சியின்மையினாலோ, அல்லது வணிகரிடத்துப்பொருளுதவிபெற்ற வஞ்சகத்தினாலோ

தெரியோம் பின்வரும் வித்துவான்களும் அவற்றையே பாடமாகக்கொண்டு வழங்கிவருகிறார்கள். இது எதுபோலிருக்கிறதெனின், பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுள் முன்னிருந்த ஒருவன் ஆறு நாலும் எட்டென்றால் பின்னின்றாரும் அவ்வாறே கூறுவர் அதுபோலாம்.

---

## நூற்புரட்டுகள்.

வேளாளரைச் சிலநூல் வைசியரென்றும் சிலநூல் சூத்திரரென்றுங் கூறுகின்றன. இவ்விரண்டனுள் எதைப் பிரமாணமாகக் கொள்வதெனின்? வேதங்களில் வைசியரெனக் கூறுதலால் அதையே பிரமாணமாகக் கொள்ளவேண்டும். எங்ஙனமெனில்,

திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம் திருவாக்கூர்.

வாளார்கண்செந்துவர்வாய் மாமலையான் றன்மடந்தை
தோளாகம்பாகமாப்புல்கினான் றன்கோயில்
வேளாளரென்றவர்கள் வள்ளன்மையான்மிக்கிருக்குந்
தாளாளராக்கூரிற் றான்றோன்றிமாடமே.

என்பதனாற்காண்க. வேளாளரைத்தாளாளரென்றால் எங்ஙனம் வைசியரெனக்கூடும் எனின்?

தாளாளரிப்பர் தருமக்கிழவர்
வேளாளரிளங்கோக்கள் வைசியர்பொதுப்பெயர்.

என்பதைப்பிங்கலந்தையிற் கண்டுதெளிக. இனி, பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள்நால்வரும் முறையே, பிரமாவின்முகம் தோள் தொடை தாள்களிற் பிறந்ததாக வேதங்களிற்கூறப்படுதலின், தாளாளர் என்பதைத் தாளிற்பிறந்தார் எனக்கொண்டு சூத்திரரென்னப்படாதோவெனின்? தாளிற்பிறந்தார் தாளாளரெனக்கூறின், தலையிற் பிறந்தாரைத் தலையாளரெனவும், தோளிற்பிறந்தாரைத் தோளாளரெனவும், தொடையிற் பிறந்

தாரைத் தொடையாளரெனவுங் கூறவேண்டும். அங்ஙனம் கூறுதலின்மையாலது பொருந்தாதெனக்கொள்க. அன்றியும் வள்ளன்மையான் மிக்கிருக்குந்தாளாளரென்று அடைகொடுத்துக்கூறியதே சூத்திரரல்லரென்பதற்குச் சான்றாம். ஏனெனில்? சூத்திரருக்கு வள்ளன்மைத்தொழிலில்லை யாதலினென்க. வேளாளரே வைசியரெனப் புலப்படுத்தற்கு இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக வேளாளரென்றதனோடு விடாது தாளாளரென்று கூறியருளினர். வள்ளன்மையால் மிக்கிருக்கும் தாளாளரென்றதனால் அந்தணர் கொடையினும் அரசர்கொடையினும் வேளாளர் கொடைசிறந்ததென்பதாயிற்று. இனி, தாளாளர் என்பதற்கு முயற்சியாளரெனக் கொள்ளுவோம் எனின், உலகின்கணுள்ள சீவராசிகளனைத்தும் மூலப்பிரகிருதியினின்றும் வெளிப்படுங்காலத்து முயற்சிவடிவாகவே வெளிப்படுகின்றன, ஆகலின் அதுசிறப்பன்றாம்.

### பெரியபுராணத்திற் புரட்டு.

சேக்கிழார் வேளாளர்தானே, அங்ஙனமிருக்கவும் வேளாளரைப் பெரியபுராணத்தில், சூத்திரரெனக்கூறியிருக்கின்றாரேயெனில், அவர் தமிழ்வேதமாகிய தேவாரங்களையே பிரமாணமாகக்கொண்டு புராணஞ்செய்யவந்தவராதலின், அவ்வேதவாக்கியத்திற்கு மாறாக வேளாளரைச் சூத்திரரெனக்கூறாரென்பது துணிபாம். அது பற்றியே வேளாளரைக்கூறுமிடமெல்லாம் மேம்பாடாகக் கூறியிருக்கின்றார். பிரமாணம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்.

தலத்தின்கண் விளங்கியவத் தனிப்பதியிலனைத்துவித
நலத்தின்கண் வழுவாத நடைமரபிற்குடிநாப்பண்
விலக்கின்மனையொழுக்கத்தின் மேதக்கநிலைவேளாண்
குலத்தின்கண்வரும்பெருமைக் குறுக்கையர்தங்குடிவிளங்கும்.

விறன்மிண்டநாயனார் புராணம்.

என்னும்பெயரின்விளங்கியுல கேறும்பெருமையுடையதுதா
னன்னம்பயிலும்வயலுழவி னமைந்தவளத்தாலாய்ந்தமறை

சொன்னநெறியின்வழியொழுகுந் தூயகுடிமைத்தலைநின்றார்
மன்னுங்குலத்தின்மாமறைநூன்மரபிற்பெரியோர்வாழ்பதியாம்.

மானக்கஞ்சாற நாயனார் புராணம்.

அப்பதியிற்குலப்பதியா யரசர்சேனாபதியாஞ்
செப்பவருங்குடிவிளங்கத் திருவவதாரஞ்செய்தார்
மெய்ப்பொருளையறிந்துணர்ந்தார் விழுமியவேளாண்குடிமை
வைப்பனையமேன்மையினார் மானக்கஞ்சாறனார்.

சாக்கியநாயனார் புராணம்.

தாளாளர்திருச்சங்க மங்கையினிற்றகவுடைய
வேளாளர்குலத்துதித்தார் மிக்கபொருடெரிந்துணர்ந்து
கேளாகிப்பல்லுயிர்க்கு மருளுடையராய்க்கெழுமி
நீளாதுபிறந்திறக்கு நிலையொழிவேனெனநிற்பார்.

ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம்.

தாளாண்மையுழவுதொழிற் றன்மைவளந்தலைசிறந்த
வேளாளர்குண்டையூர்க் கிழவரெனுமேதக்கோர்
வாளார்வெண்மதியணிந்தார் மறையவனாய்வழக்கினில்வென்
றாளாகக்கொண்டவர்தா ளடைந்தன்பாலொழுகுவார்.

மற்றும் வருவனவற்றாற்காண்க.

அங்ஙனமாயின், வாயிலார்புராணத்தில் "தொன்மைநீடிய சூத்திரத்தொல்குலம்" என்றும், இளையான்குடிமாறநாயனார் புராணத்தில் "நம்புவாய்மையினீடு சூத்திரநற்குலம்" என்றும், ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணத்தில் "நாலாங்குலத்திற் பெருகுநலமுடையார்" என்றும் கூறியிருக்கின்றதேயெனின்? இவையெல்லாம் பிற்காலத்தில் வந்த அழுக்காறுடைய இழிகுலத்தாரால் புரட்டப்பட்டனவெனக்கொள்க. புரட்டென்பது எற்றாற் பெற்றீரெனின்? தொன்மைநீடிய சூரத்தொல்குலமென்று கூறியிருப்பதில் "தொன்மை" என்பதும் "தொல்" என்பதும் வேறுபொருளன்றே ஒரே பொருள்தானே, அங்ஙனமாயின், கூறியது கூறலென்னுங் குற்றமன்

ரோ? சேக்கிழார் இவ்வாறு கூறுவரோ? கூறார். ஆகையால் இவையெல்லாம் புரட்டெனக்கொள்க. இவைமாத்திரமன்று; பூர்வகாலத்து வெள்ளியம்பலத்தம்பிரான் என்றொருவரிருந்தார்; அவரும் இன்னுஞ்சிலரும் பெரியபுராணம் தேவாரம் திருவாசகம் முதலிய நூல்களில் பாடல்களைப்புரட்டியும், சில பாடல்களின் பதங்களைப்புரட்டியும், தங்களுக்கு மனங்கொண்டவாறு கற்பனையாகச் சிலசெய்யுட்களை நவீனமாக எழுதி இடையிடையே சேர்த்தும் ரசாபாசஞ்செய்தொழித்தார்கள். பிரமாணம்.

பெரியபுராணம், திருமலைச்சிறப்பு.

காதில்வெண்குழையோன்கழறொழநெடியோன் காலம்பார்த்திருந்ததுமறியான், சோதிவெண்கைலைத் தாழ்வரைமுழையிற்றுதிக்கையோனூர்தியைக்கண்டு, மீதெழுபண்டைச் செஞ்சுடரின்றுவெண்சுடரானதென்றதன்கீ, ழாதியேனமதாயிடக்கலுற்றானென் றதனைவந்தணைதருங்கலுழன்.

கண்ணப்பநாயனார் புராணத்தில் 157-ஆவது செய்யுளின்கீழ்.

பொருப்பினில்வந்தவன்செய்யும்பூசனைக்குமுன்பென்மே
லருப்புறுமென்மலர்முன்னையவைநீக்குமாதரவால்
விருப்புறுமன்பெனும்வெள்ளக்கால்பெருகிற்றெனவீழ்ந்த
செருப்படியவ்விளம்பருவச்சேயடியிற்சிறப்புடைத்தால்.

உருகியவன்பொழிவின்றிநிறைந்தவவனுருவென்னும்
பெருகியகொள்கலமுகத்திற்பிறங்கியினிதொழுகுதலா
லொருமுனிவன்செவியுமிழுமுயர்கங்கைமுதற்றீர்த்தப்
பொருபுனலினெனக்கவன்றன்வாயுமிழும்புனல்புனிதம்.

இம்மலைவந்தெனையடைந்தகானவன்றனியல்பாலே
மெய்ம்மலருமன்புமேல்விரிந்தனபோலவீழுதலாற்
செம்மலர்மேலயனொடுமான்முதற்றேவர்வந்துபுனை
யெம்மலருமவன்றலையாலிடுமலர்போலெனக்கொவ்வா.

வெய்யகனற்புதங்கொள்ளவெந்துளதோவெனுமன்பா
னையுமனத்தினிமையினினைபமிகமென்றிடலாற்

செய்யுமறைவேள்வியோர்முன்புசருந்திருந்தவியி
லெய்யும்வரிச்சிலையவன்றூனிட்டவூனெனக்கினிய.

மேற்கண்டபாடல்கள் மழவை மகாலிங்கையர் அச்சிட்ட புத்தகத்தில், சேர்க்கப்பட்டும், காஞ்சிபுரம் சபாபதிமுதலியார் அச்சிட்ட பிரதியில் நீக்கப்பட்டுமிருக்கின்றன.

### தேவாரத்தில் புரட்டு.

சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்.

திருக்காரோணம் பண் - காந்தார பஞ்சமம்.

பொன்னுமிதழிவிரைமத்தம்பொங்குகங்கைபுரிசடைமேன்
முன்னுவரவமதியமுஞ்சென்னிவைத்தன் மூர்க்கன்றே
துன்னுமயூரஞ்சோலைதொறுமாடத்தூரத்துணைவண்டு
தென்னுவென்னுந்தென்னுகைத்திருக்காரோணத்திருப்பீரே.

வரக்னகவேழமுரித்துமானடமாட்டானுன்மணேதேரு
மிரக்கையொழியீர்பழியறியிலேற்றைவிற்றுநெற்கொள்ளீர்
முரைக்கைப்பவழக்கால்காட்டமூரிச்சங்கத்தொடுமுத்தந்
திரைக்கைகாட்டுந்தென்னுகைத்திருக்காரோணத்திருப்பீரே.

புல்லும்பெறுமேவிடைபுணரச்சடைமேலொருபெண்புகவைத்தி
ரில்லந்தோறும்பலியென்றுலிரக்கவிடுவாரிவரே
முல்லைமுறுவல்கொடியெடுப்பக்கொன்றைமுகமோதிரங்காட்டச்
செல்லும்புறவிற்றென்னுகைத்திருக்காரோணத்திருப்பீரே.

மாண்டாரெலும்புங்கலும்புமெல்லாயாலயாகமகிழ்ந்தருளிப்
பூண்டார்பொறியாடரவாமைபுரமூன்றெரித்தீர்பொருளாகத்
தூண்டாவிளக்குமணிமாடவீதிதோறுஞ்சுடருய்க்குச்
சேண்டார்புரிசைத்தென்னுகைத்திருக்காரோணத்திருப்பீரே.

ஒருவர்க்கொருவரதோசிலுடைவெண்டலைகொண்டூரூரி
னிருவர்க்கொருவரிரந்துண்டாலெளிதேசொல்லீரெத்தணையும்
பருவற்கனகங்கற்பூரம்பகர்ந்தமுகந்துபப்பரவாத்
தெருவிற்சிந்துந்தென்னுகைத்திருக்காரோணத்திருப்பீரே.

தோடையுடுத்தகாதுடையீர்தோலையுடுத்துச்சோம்பாதே
யாடையுடுத்துக்கண்டக்காலழகிதன்றேயரிதென்று

ஓடையுடுத்தகுமுதமுளங்கைமறிப்பப்புறங்கையனஞ்
சேடையுடுத்துந்தென்னாகைத்திருக்காரோணத்திருப்பீரே.

கடுநஞ்சுண்டிராகவேகண்டங்கறுத்ததிக்காலம்
விடுநஞ்சுண்டநாகத்தைவீட்டிலாட்டவேண்டாநீர்
கொடுமஞ்சுகடோய்நெடுமாடங்குலாவுமணிமாளிகைக்குழா
மிடுமிஞ்சிசைசூழ்தென்னாகைத்திருக்காரோணத்திருப்பீரே.

பள்ளம்பாறுநறும்புனலைச்சூடிப்பெண்ணோர்பாகமா
வெள்ளைநீறேபூசுவீர்மேயும்விடையும்பாயுமே
தொள்ளையான்றகாத்தானைச்சுமந்துவங்கஞ்சுங்கமிடத்
தெள்ளும்வேலைத்தென்னாகைத்திருக்காரோணத்திருப்பீரே.

மந்தங்கவருமலர்க்கொன்றை மாலைமேன்மாலானை
யுய்த்தங்கவருமுரைசெய்தா லுமக்கேயன்றேபழியுரையீர்
முத்தங்கவருநகையினையார் மூரித்தானைமுடிமன்னர்
சித்தங்கவருந்தென்னாகைத் திருக்காரோணத்திருப்பீரே.

மறையன்றாலின்கீழ்நால்வர்க் களித்தீர்களித்தார்மதிமூன்று
மிறையிலெரித்தீரேபூலகுமுடையீரிரந்துணிணிதேதான்
றிறைகொண்டமரர்சிறந்திறைஞ்சித் திருக்கோபுரத்துநெருக்கமலர்ச்
சிறைவண்டறைபுந்தென்னாகைத் திருக்காரோணத்திருப்பீரே.

தேரார்வீதித்தென்னாகைத் திருக்காரோணத்திறையானைச்
சீரார்மாடத்திருநாவலூர்க்கோன் சிறந்தவன்றொண்டன்
னாராவன்போடுரைசெய்த வஞ்சோடஞ்சுமறிவார்கள்
வாரார்முலையாளுமைகணவன் மதிக்கவிருப்பார்வானகத்தே.

இப்பதிகம் இரத்தாட்சி-௵ மாசி௴-ல் உலகநாத முதலியாரால் அச்சிட்ட பிரதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது, இதனைக் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் தாம் அச்சிட்ட பிரதியில் வெள்ளிப்பாட்டென்று நீக்கிவிட்டனர்.

## திருவாசகத்தில் புரட்டு.

### அச்சோப்பதிகத்துள்.

செத்திடமும்பிறந்திடமுஞ் சாகாமலிருந்திடமு
மித்துணையுமறியாதா ரறியுமறிவெவ்வறிவோ

ளொத்தநிலத்தொத்த பொருளின்பெரும்பயனை
யத்தனெனக்கருளியவா ரூர்பெறுவாரச்சோவே.

படியதனிற்கடினசித்தம் பசுபாசந்தவிரவிடுங்
குடிமையிலேதிருந்தடியேன் கும்பியில்வீழாவண்ண
நெடியானுநான்முகனு நீர்காற்றுங்காணவொண்ணா
வடிகளெனக்கருளியவா ரூர்பெறுவாரச்சோவே.

பாதியெனுமிரவுறக்கிப் பகலெனக்கேயிரைதேடி
வேதனையிலகப்பட்டு வெந்துவிழக்கடவேனைச்
சாதிகுலம்பிறப்பறுத்துச் சகமறியவெனையாண்ட
வாதியெனக்கருளியவா ரூர்பெறுவாரச்சோவே.

இப்பாடல்கள் 1,883-ஆம்வூ பரசிராமமுதலியாரது பரப்பிரமமுத்திராக்ஷசாலையில் அச்சிட்டிருந்த திருவாசகத்தினுள்ளே காணலாம். இவை மாணிக்கவாசக சுவாமிகள் வாக்கன்றென ஏனையோர் அச்சிட்ட பிரதிகளில் நீக்கப்பட்டிருக்கின்றன.

## திருவிளையாடலிற் புரட்டு.

திருவிளையாடற் புராணஞ் செய்தருளிய பரஞ்சோதி முனிவர் என்பவர் சிறந்த பக்திமான்என்பதற்கும் பாக்களைச் சுவைபடப்புனையும் வித்துவசிரோமணி என்பதற்குஞ் சந்தேகமில்லை. ஆயினும், சில விடயங்களில் ஒன்றையொன்றுக மாறுபடக்கூறியிருக்கின்றார். அவற்றை யெடுத்துக்காட்டுதும்.

விடந்தீண்டப்பட்டிறந்த வணிகனுயிரைத் திருஞானசம்பந்தசுவாமிகள் பதிகம் பாடிவரவழைத்துத்தந்து வன்னிகிணறு இலிங்கம் இவைகள் முன்னிலையில் வணிக கன்னிகைக்கு மணம்புரிவித்ததலம் திருமருகல் என்று பெரியபுராணத்திலுந் தேவாரத்திலுங் கூறப்பட்டிருக்கின்றது. பிரமாணம் பின்வருஞ் செய்யுட்களிற் காண்க.

பெரியபுராணம், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்.

அடியாராமிமையவர்தங்கூட்டமுய்ய வலைகடல்வாய்நஞ்சுண்ட
வமுதேசெங்க, ணெடியானுநான்முகனுங்காணக்கோல நீலவிடவர

வணிந்தநிமலாவெந்து, பொடியானகாமனுயிரிரதிவேண்டப் புரிந்த வித்தபுண்ணியனேபொங்கர்வாசக், கடியாருமலர்ச்சோலைமருங்குகு ழுங்கவின் "மருகற்பெருமானே" காவாயென்றும்.
இது வணிக் கன்னியின் புலம்பலாம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்,
திருமருகல் விஷந்தீர்த்த திருப்பதிகம், பண்-இந்தளம்.

சடையாயெனுமால் சரணீயெனுமால்
விடையாயெனுமால் வெருவாவிழுமான்
மடையார்குவளை மலரு "மருக
லுடையாய்" தகுமோ விவளுண்மெலிவே.

பெரிய புராணம், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்.

பொங்குவிடந்தீர்ந்தெழுந்து நின்றான் சூழ்ந்தபொருவிறிருத்தொண்டர்குழாம்பொலியவார்ப்ப, வங்கையிணைபுச்சியின்மேற்குவித்துக் கொண்டங் கருட்காழிப்பிள்ளையாரடியில்வீழ்ந்து, நங்கையவடனை நயந்தநம்பியோடு நானிலத்திலின்புற்றுவாழும்வண்ண, மங்குறவழ் சோலையலிபுகலிவேந்தர்மணம்புணரும்பெருவாழ்வுவகுத்துவிட்டார்.

இம் மூன்று பாடல்களானும் இங்ஙனம் நிகழ்ந்தவெல்லாம் திருமருகலில் எனத்தெரிய வருகின்றன. இங்ஙனமிருப்பவும் இவை புறம்பயமென்னு மூரில் நடந்ததாகப் பரஞ்சோதிமுனிவர்பாடியிருக்கின்றார். பிரமாணம் பின்வருஞ்செய்யுட்களிற் காண்க.

திருவிளையாடற் புராணம்,
வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்தபடலம்.

வெங்கதிர்வேலைசெல்லும் வேலைவந்தடையுமுன்ன
மிங்கிருந்தொழிகமென்னுப் "புறம்பயமூதூரெய்தி"
யங்கிறைகோயின் முன்னிக் கூவனீராடியங்குத்
தங்கியவன்னிமாடே போனகஞ்சமைத்துண்டல்வாய்.

மலைவைத்தசிலையான்கோயின் மருங்கொருபடியினும்பர்
தலைவைத்துத்துயிலுமெல்லை விதிவழிச்சாரவந்தோர்

கொலைவைத்தவிடவாய்நாகங் கடித்ததுகொதித்தநீண்ட
விலைவைத்தகொடும்பூணுய்கண்விடந்தலைக்கொண்டுமாய்ந்தான்.

தந்தையுந்தாயுமன்னோர் தமியளாயிரங்கும்பேதைப்
பைந்தொடியாவிகாப்பான் பாம்புகோட்பட்டான்மாடே
வந்தவனுகமெல்லா மருந்துருவாகும்வண்ணஞ்
சிந்தைசெய்தருட்கண்வைத்தார் குதித்ததுதீய்வாய்நஞ்சம்.

இம்மட்டோ! திருஞான சம்மந்த சுவாமிகள் திருவாக்கூர்த் தேவாரத்தில், "வேளாளரென்பவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்குந்தாளாளர்" எனவே வைசியரெனக் கூறியிருப்பவும், அதற்கு மாறுபாடாகத் திருவிளையாடற் புராணம் இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலத்தில், ஒரு வேளாளன் மேகங்களுக்காக ஏன்றுகொள்ளுஞ் சமயத்தில்,

இடுக்கண்வந்துயிர்க்குமூற்ற மெய்தினும்வாய்மைகாத்து
வடுக்களைந்தொழுகும் "நாலாமரபினு"னுரையையாத்த
னெடுத்துரைமறைபோற்சூழ்ந்து சிறைக்களத்திட்டயாப்பு
விடுத்தனன்பகடுபோல் மீண்டனமேகமெல்லாம்.

என்னுஞ்செய்யுளில் வேளாளரை வேதவாக்கியத்திற்கு விரோதமாக நாலாமரபினரெனக் கூறியிருக்கின்றார்.

ஐயோபாவம் இவர் என்செய்வார்! ஆரியத்திலுள்ளதை இவர் மொழிபெயர்த்தாராதலின், அதிலுள்ளபடி வேளாளரைச் சதுர்த்தரெனக் கூறினாரெனக் கூறுவாருமுளர். அதனுண்மையும் வெளிப்படுத்துவாம்.

ஆலஸ்யமான்மியத்தில்.

வ்ருஷ்ட்யர்த்தம் ப்ரதிபூ: கஸ்யாதிதி ப்ராஹ்மணீரவேஷ
ததாஹம் ப்ரதிபூரஸ்மீத்யுக்த: ஸ்ரீ தைவபிவிஜஜ: ||

వృష్ట్యర్థం ప్రతిభూః కస్యాదితి బ్రాహ్మ్యతనీరూపహ|
తదాహం ప్రతిభూరస్మీత్యుక్తః శ్రీశైవభిజ్జాజనః॥

விருஷ்டியர்த்தம்பிரதிபூः கஸ்யாதிதிப்பிராஹ்யதநீருப:
தகாஹம்பிரதிபூரஸ்மீத்யுக்தः பிரீத்யைபௌஜஸः

இ - ள். ததா - அப்பொழுது, பௌஜஸः - இந்திரனுடைய, பிரீத்யை - பிரீதியின்பொருட்டு, அகம் - நான், பிரிதிபூः - பிணை, இதி - என்று, இதியுக்தः - சொன்னான். எ-று.

கருத்து. மேகங்கள் வருஷிக்குமென்பதற்கு பிணையாரென்று அரசன்கேட்க, தேவேந்திரனிடத்து அன்புடையவொருவன், நான் பிணையென்று சொன்னான் என்பதாம்.

𑌸𑌪𑍍𑌤𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌧𑌿𑌪𑍇𑌷𑍍𑌵𑍇𑌕𑌃 𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑍇𑌷𑍁𑌚𑌜𑌨𑍇𑌷𑍁𑌚
𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌶𑌂𑌭𑍁𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌚 𑌵𑍀𑌰𑍍𑌯𑍇𑌣𑌯𑌶𑌸𑌾𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 ॥

సప్తగ్రామాధిపేష్వేకః వన్ద్యేషుచజనేషుచ।
ప్రసిద్ధశంభుభక్త్యాచవీర్యేణయశసాశ్రియా ॥

ஸப்தக்கிராமாதிபேஷ்வேகः வந்தியேஷுசஜனேஷுச
பிரஸித்தஸம்புபக்தியாச வீர்யேணயஸஸாஸ்ரீயா.

இ - ள். ஸம்புபக்தியா - சிவபக்தியினாலும், வீர்யேண - ஆண்மையிலும், யஸஸः - கீர்த்தியிலும், ஸ்ரீயாச - ஐஸ்வரியத்திலும், பிரஸித்தः - பிரபலமாயுள்ளவன், வந்தியேஷுஜனேஷுச சகலராலும்வணங்கப்பட்டவன், ஸப்தகிராமாதிபேஷ்வேகः - ஏழுகிராமாதிபதிகளில் ஒருவன். எ-று.

கருத்து. அவன் யாரென்றால் ஏழுகிராமாதிபதிகளில் ஒருவனாகியும், சகல சனங்களாலும் வணங்கப்பட்டவனாயும், சிவபக்தியிலும் வீரத்திலும் கீர்த்தியிலும் ஐஸ்வரியத்திலும் பிரசித்தியடைந்தவனும்.

[illegible]
[illegible] ॥

ఏకవీరయితిఖ్యాతః నామధేయేనచార్థతః।
అతఃపాండ్యమహీపాలోముమోచజలభృద్వరాన్

ஏகவீரயிதிக்கியாதஃநாமதேயேனசார்த்ததஃ
அதஃபாண்டியமஹீபாலோமுமோசஜலபிருத்வரான்.

இ-ள். ச அர்த்தஃ - பொருளினாலும், நாமதேயேன- பெயரினாலும், கியாதஃ - பிரசித்தியுள்ளவனான, ஏகவீர இதி - ஏகவீரன்என்று சொல்லப்பட்டவனும். அதஃ- ஆகையினாலே, பாண்டியமஹீபாலோ - பாண்டியமகாராஜன், ஜலபிருத்வரான் - மேககூட்டங்களை, முமோச - விட்டுவிட்டான். எ-று.

கருத்து. இவன் பின்னும் செல்வத்தினால் பிரசித்தியடைந்தவனாகிய ஏகவீரனென்னும் நாமத்தை யுடையவனும். இதைக்கேட்ட பாண்டியமகாராஜன் மேகக்கூட்டங்களை விடுதல் செய்தான் என்பதாம்.

இந்தச்சுலோகங்கள் எங்கேனும் மேகத்திற்குப் பிணைப்பட்டவன் சூத்திரனென்று கூறுகின்றனவா? அங்ஙனமிருப்ப வேதவாக்கியத்திற்கு விரோதமாக வேளாளனை நாலாம் வருணத்தானாகிய சூத்திரனென்று பரஞ்சோதிமுனிவர் கூறியது புரட்டன்றோ. இம்மட்டில் விடுத்தனரோ!

திருவிளையாடற்புராணம் நகரப்படலம்.

வழுக்கறுவாய்மையுமாண்புங்கங்கைதன்மரபின்வந்த
விழுக்குடிப்பிறப்புமூவரேவியவினைசேட்டாற்று
மொழுக்கமுமமைச்சாய்வேந்தர்க்குறுதிசூழ்வினையுங்குன்றா
விழுக்கறுபேழிச்செல்வர்வளமறுகியம்பலுற்றும்.

இப்பாடலில் பரஞ்சோதிமுனிவர் வேளாளரை மூவரேவிய வினைகேட்டாற்றுபவரென்றும், அமைச்சாய் வேந்தர்க்குறுதி சூழ் வினையுடையாரென்றுங்கூறினர். வேளாளர் இவ்விரண்டு வினைகளுக்கும் உரியரோ? இவற்றுளொருவினைக்குரியரோ?

என விசாரித்தொழிக்கவேண்டும்; மூவரேவிய வேலைகளைச் செய்பவராயின், அவர் வேதசாத்திரங்களைக் கற்றுணர்ந்து அரசனோடு சமமாக இருந்து மந்திராலோசனைசெய்து அரசனுக்குறுதிசூழும் அமைச்சராதற்கு யோக்கியதையுடையராக மாட்டார். அமைச்சாய் வேந்தர்க்குறுதி சூழ்வினையுடையராயின், அங்ஙனம் மேம்பாடுடையார் மூவரேவிய இழிதொழிற் பணிவிடைகளைச் செய்தற்கிசையமாட்டார். ஆகலின், மேற்கூறிய இரண்டனு ளொன்றற்கொன்று மூரணுதலா லொன்றற்கே யுரியராவாரெனக்கொள்ளவேண்டும். வேளாளர் வைசியரென்று ஆரியதிராவிட வேதங்களிலும் நிகண்டுகளிலும் பலபிரமாணங்களோடு கூறுதலாலும், அரசருக்குச் சேனாதிபதிகளாகவும் அரசருக்கு முடிசூட்டுபவராகவும் அரசனைத்துலாபாரத்தில் வைத்து நிறுப்பவராகவுமிருப்பவராதலாலும், அமைச்சாய் வேந்தர்க்குறுதிசூழ்வினையுடையாரென்பதே பொருந்தும். ஆகவே வேளாளரைச் சூத்திரரென்றது ஒருசிறிதும் பொருந்தாதென்க.

### நிகண்டில் புரட்டு.

உலகின்கண் வழங்கும் நிகண்டுகள் பலவற்றுள்ளும் சிறந்துள்ளது, மண்டல புருடனாற்செய்யப்பட்ட சூடாமணி நிகண்டாம்.

இது 12-தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இரண்டாவது மக்கட்பெயர்த்தொகுதி 107-பாடல்களாக முடிக்கப்பட்டதென்று அத்தொகுதியின் கடைக்காப்பில் முத்திரையிடவைக்கப்பட்டிருக்கின்றது. இந்நூற்றேழுபாடல்களுள், வைசியருக்கு இரண்டுபாடல்களும், சூத்திரருக்கு ஓர் பாடலும் ஆ 3-பாடல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அம்மூன்றினுள் முதற்பாடலில் வைசியரென்பவர் வேளாளரென்றும், இரண்டாவது பாடலில் அவ்வைசியர் கோவைசியர் தனவைசியர் பூவைசியரென முப்பாலினரென்றும், மூன்றாவது பாடலில் மேல் மூவர்க்கும் ஏவலாளிகள் சூத்திரரென்றும் (பிங்கலந்தையில் 773-

முதல் 778-ஆவது வரையிலுள்ள சூத்திரங்களின்படி) கூறப்பட்டிருக்கின்றன. அப்பாடல்கள் வருமாறு,

இளங்கோக்கண்மன்னர்பின்ன ரிப்பரெட்டியர்காராளர்
வளம்பெறவாழ்வேளாளர் வைசியர்தம்பொதுப்பேராகும்
இளந்தகோக்கார்த்தன்மற்றும் இளர்பொருளீட்டலேரை
விளங்கவேயுழலான்மூன்று குலம்பெறும்வேறுசொல்வாம்.

வந்தகோவலருடன்கோ வர்த்தனரிப்பர்முப்பேர்
முந்துகோவைசியரென்று மொழிந்திடும்வணிகர்நாய்கர்
தந்தநூற்பரதர்முப்பேர் தனவைசியர்க்கேசாற்று
முந்தபூவைசியர்முப்பே ருழவர்மேழியர்வேளாளர்.

இந்தமுக்குலத்துளார்க்கே யேவல்பூண்டொழுகுகின்ற
வெந்திறலாளர்தாமே விதித்தசூத்திரரென்றாகும்
தந்தநூலுரைத்தவாறே சாற்றினமிவர்கடாமே
யுந்தியதொழிலுக்கெல்லா முரியவர்தெரியுங்காலே.

இப்பாடல்களை யுடைய நிகண்டு பலநூற்றாண்டுகளின் முன்சமணராற்செய்யப்பட்டு, சென்னைராஜதானியில் அச்சுயந்திரசாலை யேற்பட்ட காலத்தே ஜட்சி தாண்டவராய முதலியார் காலேசு நயினியப்ப முதலியாரவர்களால் அச்சிடப்பட்டு வழங்கிவருகின்றது.

இஃதிங்ஙனமிருப்ப ஈழநாட்டு வித்துவான்களில் சிறந்துள்ள யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலரென்பவர் இந்நிகண்டைச் சென்ற சௌமிய வருடத்தில்பரிசோதித்து அச்சிட்டனர் (About A. D. 1850). அக்காலத்தில் மேற்கண்ட 3-பாடல்களையும் உண்மையானவையென்றே ஒப்புக்கொண்டு அச்சிட்டிருக்கின்றார். அங்ஙனமிருப்பவும், அவர் பின்னர் அச்சிட்ட பிரதிகளில் மேற்கண்ட பாடல்களை நீக்கி அடியிற்கண்ட பாடல்களைச் சேர்த்திருக்கிறார்.

இளங்கோக்கண்மன்னர்பின்ன ரிப்பரெட்டியரோநாய்கர்
வளம்பெறுவணிகர்நல்லான் காவலருழவர்மற்றும்
விளங்கியபாரதர்மேய வினைஞர்செட்டியர்பன்னென்று
மூளங்கெழுவைசியர்பேரா முறுசிரேட்டிகளுமாகும்.

மண்மகள்புதல்வர்வாய்ந்த வளமையர்களமரென்று
முண்மைசால்சதுர்த்தர்மாரு வுழவர்மேழியர்வேளாளர்
திண்மைகொளேரின்வாழ்நர் காராளர்வினைஞர்செம்மை
நண்ணுபின்னவர்பன்னென்று நவின்றருத்திரர்தம்பேரே.

இந்த 2 பாடல்களைச் சிருட்டித்தெழுதியதுமன்றி முன் தாம் அச்சிட்ட பிரதியின் கடைக்காப்பாயுள்ள,

இருபஃதோடிருபான்முப்பா னிருபானீரைந்துமேலு
மருவியவேழுசெய்யுண் மக்கடம்பெயர்க்குச்செய்தான்
குருநறுங்குன்றைவேந்தன் குணபத்திரன்றந்தநோன்மை
தருநெறிபோற்கும்வீரை தலைத்தமண்டலவன்றானே.

என்னுஞ் செய்யுளைப், பின்னர் அச்சிட்ட பிரதிகளில் அச்செய்யுளினிரண்டாமடியில் "மருவியவேழுசெய்யுள்" என்பதையழித்து "மருவியவாறுசெய்யுள்" எனப்புரட்டி அச்சிட்டிருக்கின்றார். இவர் இப்பாடல்களைப்புரட்டினாலும் புரட்டுகே.மண்டலபுருடன் வைத்த முத்திரையை அழித்து அவர் முத்திரையைப்போலும் வேறு முத்திரையிடலாமா? இதை ஞாயஸ்தானத்திற்குக் கோண்டுபோனால் (Foregery) என்னுங் குற்றத்திற்குள்ளாவாரல்லவா? இதுநிற்க. பின்னும் இதற்கு ஒற்றுமையாக ஷெ நிகண்டு பன்னிரண்டாவது பல்பெயர் கூட்டுத்தொருபெயர்த்தொகுதியில்,

வைசியர்மூவகையுள்ளார்க்கு வகுத்தமுத்தொழில்களான
பசுவோம்பல்பொருளையீட்டல் பாரிலேர்த்தொழிலைச்செய்த
லிசைபவேதியருக்கேவல் குயிலுவத்தொழிலியற்ற
லசைவில்காருகவினைக ளாக்கல்சூத்திரருக்காமே.

என முன்பிரதிகளில் அச்சிட்டிருக்க அதனை மாற்றி,

வைசியர்தந்தொழில்களாறுள் வகுத்தமுத்தொழில்களான
பசுவோம்பல்பொருளையீட்டல் பயிரிடல்புராணமாதி
நசையுறவோதலீத னெண்ணுமந்தணர்முன்னோர்க்கு
வசைதவிரநுகூலம்மாம் வகைத்தொழில்சூத்திரர்க்காம்.

என அச்சிட்டிருக்கிறார். இப்படிமாற்றி யச்சிட்டது எதற்காக எனின்? வேளாளராகிய தம்மைச் சூத்திரரென்றே சித்தாந்தப் படுத்திக்கொண்டு, அப்பாடலின்படி ஆடை நெய்வதோடு, தோற்கருவியடிக்கவும் துளைக்கருவி யூதவும்வேண்டுமே இவை இழிவன்றோவென்று நாணமடைந்தோடு, யாராவது விவேகியாயுள்ளவர் நீர் ஏன் உமது குலதருமத்தின்படி எங்கள் வீட்டில் வந்து வாத்தியம் வாசிக்கப்படாதெனக்கேட்டால்? அதற்கு நாம் என்ன மறுமொழிசொல்வது என்று பயந்து அச்செய்யுளைப்புரட்டி வேறுசெய்யுள் கூறியதுமன்றி, வட நூலில் சூத்திரனனவன் அந்தண ராதிமூவர்க்கும் பணிக்காகவே சிருட்டிக்கப்பட்டிருக்கிறானெனக்கூறுதலின், அதற்கு மாறுகொளக்கூறலாகாதென "அந்தணர் முன்னோர்க்கு வசைதவிரனுகூலமாம் வகைத்தொழில் சூத்திரர்க்காம்" எனக்கூறியொழித்தார்போலும். ஐயோ பாவம்! இவர் நெடுநாள் சத்தியவந்தரென்று பெயரெடுத்துக் கடைசிக்காலத்தில் இத்தீய செய்கைக்கு உடன்படலாமா! "உள்ளியர் தெள்ளியராயினுமூழ்வினை மெள்ள நுழைந்துவிடும்" என்றபழமொழியும் பொய்யாகாதென்பதைப் பிரத்தியட்சமாகக்கண்டோம்.

## சாந்தோக்கிய வுபநிஷத்து பிரமஞான வுபதேசத்தைப் பற்றிய ஓர் கதை.

பூர்வகாலத்தில் பௌத்திராயண ஜானசுருதி என்னும் ஓர் அரசனிருந்தான். இவன் புத்திரனென்னும் அரசனுடைய பேரனாதலால், பௌத்திராயணன் என்றும், ஜனசுருதா என்னும் அரசனதுபுத்திரனாதலால் ஜானசுருதியென்றும் ஆக இருபெயரொட்டிய பௌத்திராயண ஜானசுருதி என்று பெ

யர்பெற்றனன். இவன் தருமஞ்செய்வதில் மிக ஆசையுள்ளவ ஞகத் தன்னுட்டிலுள்ள பலவிடங்களினும், அன்னசத்திரங்கள் கட்டி, வந்தவர்களுக்கெல்லாம் சோடச உபசாரங்களோடு அன்னமிட்டுவந்தான். இவனுடைய தருமமானது நாளுக்கு நாள் மேலாக வளர்ந்துவந்தது. ஆயினும் இவன் பிரமஞானம் சிறிதும் பெருதவனுகவிருந்தான். இவனது தருமவிசேடத்தாற்பரிபக்குவகாலம் வந்தது. அக்காலத்தில் சில தேவர்கள் இவனுக்குப் புத்தியுண்டாகும்படி நினைத்தார்கள். நினைக்கும்போது அவ்வரசன் மேன்மாடத்தின்மீது காற்றின் சுகத்துக்குப் படுத்துக்கொண்டிருக்கையில், முன் குறித்ததேவர்கள் ஆண் பெண்ணென இரண்டு அன்னப்பட்சிகளின் வடிவங்கொண்டு அவ்வரசன் சமீபத்தில் சஞ்சரித்தனர். அவைகளில் ஆண் அன்னம் பெண் அன்னத்தைநோக்கி, தூரதிருஷ்டியில்லாதவளே! ஜானசுருதியின் தேஜசானது சுவர்க்கம்வரையும் பரவியிருக்கிறது. நீ அந்த நெருங்கிப்போகாதே அது உன்னைக் கொளுத்திவிடும் என்றது. இதைக்கேட்ட பெண் அன்னமானது இவரிடத்து ஓர் அதிசயமுமில்லை, இவரை வண்டியோடிருக்கும் சாகவரைப்போல நினைக்கிருயோ என்றது. அங்ஙனமாயின், அச்சாகவர் எப்படிப்பட்டவர் என்று ஆண் அன்னங் கேட்டது. நான்காம்படி ஏறினவனுக்கு ஏனைய மூன்றுபடிகளும் அவனுக்குள்ளடங்கியதாம். அதுபோல இவ்வுலகத்தில் எவன் எவன் எந்த எந்த நற்கருமஞ்செய்தாலும் அவை எல்லாம் இவரது நற்கருமத்தில் அடங்கியன. அதுபோல உலகத்திலுள்ள ஞானமெல்லாம் இவரதுஞானத்தில் அடங்கியனவெனப் பெண்ணன்னங் கூறியது.

இதைக்கேட்ட ஜானசுருதியாகிய அரசன் நம்முடைய தருமத்தைப்பார்க்கிலும், பிரமஞானமே சிறந்ததென்றறிந்து அதையறியாமற்போய்விட்டோமேயென்று மனவருத்தமுற்றவனுய், சூரியனுதயமாவதை எதிர்பார்த்திருந்தான். விடிந்தவுடனே சாகவரிருக்குமிடத்தை வேவுக்காரராலுணர்ந்துஅவரி

டஞ்சென்று வந்தனை வழிபாடுசெய்து அவருக்கு 600-பசுக்களையும் பரிகள்பூட்டிய இரதத்தையும் காணிக்கை வைத்து கழுத்தில் ஆரத்தையிட்டு, தனக்குப் பிரமஞானத்தையுபதேசிக்கும்படி கேட்டான். அதற்கு, சாகவர் சொன்னதாவது.

சாந்தோக்கிய உபநிஷத்து நான்காம் பிரபாடகம்,

3-ஆவது சுலோகம்.

𑌤𑌮𑍁𑌹𑌪𑌰𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌵𑌾𑌚𑌾𑌹𑌹𑌾𑌰𑍇𑌤𑍍𑌵𑌾𑌶𑍂𑌦𑍍𑌰 𑌤𑌵𑍈𑌵
𑌸𑌹𑌗𑍋𑌭𑌿𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌤𑌿𑌤𑌦𑍁𑌹 𑌪𑍁𑌨𑌰𑍇𑌵𑌜𑌾𑌨𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃
𑌪𑍌𑌤𑍍𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌂𑌗𑌵𑌾𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑌮𑌶𑍍𑌵𑌤𑌰𑍀𑌰𑌥𑌂
𑌦𑍁𑌹𑌿𑌤𑌰𑌂𑌤𑌦𑌾𑌦𑌾𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌚𑌕𑍍𑌰𑌮𑍇 ௩ ॥
𑌤𑌂𑌹𑌾𑌭𑍍𑌯𑍁𑌵𑌾𑌦𑌰𑍈𑌕𑍍𑌵𑍇𑌦𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌂𑌗𑌵𑌾𑌮𑌯𑌂
𑌨𑌿𑌷𑍍𑌕𑍋𑌽𑌯𑌮𑌶𑍍𑌵𑌤𑌰𑍀𑌰𑌥 𑌇𑌯𑌂𑌜𑌾𑌯𑌾𑌯𑌂
𑌗𑍍𑌰𑌾𑌮𑍋𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌸𑍇𑌽𑌨𑍍𑌵𑍇𑌵𑌮𑌾𑌭𑌗𑌵𑌶𑍍𑌶𑌾𑌧𑍀𑌤𑌿 ॥

తముహపరః ప్రత్యువాచాహహారేత్వాశూద్రతవై
వసహగోభిరస్త్వితితదుహపున రేవజానశ్రుతిః
పౌత్రాయణస్స హస్రంగవాంనిష్కమశ్వతరీరథం
దుహితరంతదాదాయప్రతిచక్రమే॥ 3
తగ్ంహాభ్యువాదరైక్వేదగ్ సహస్రంగవామయం
నిష్కోఽయమశ్వతరీరథఇయంజాయాయం
గ్రామోయస్మిన్నాస్సేఽన్వేవమాభగవశ్శాధీతి.

தமுஹபர:பிரத்யுவாசாஹஹாரேத்வாஸூத்ரதவை
வஸஹகோபிரஸ்திவிதிததுஹ புநரேவஜாநஸ்ருதி:
பௌத்ராயணஸ்ஸஹஸ்ராங்க வாம்நிஷ்கமஸ்வதரீரதம்
முஹிதாம்ததாதாய பிரதிசக்ரமே 3.
தக்ஹாப்யுவாதரைக்வேதக் ஸஹஸ்ரங்கவாமய;

நிஷ்கே—யமஸ்வதரீரத இயoஜாயாயo
கிராமோயஸ்மிந்நாஸ்ஸே—ந்வேமாபகவஸ்ஸாதிதி.

இ - ள். அடே சூத்திரா! இவைகளை நீயே வைத்துக்கொள் என்று சாகவர் சொன்னார். மறுபடியும் அரசன் 1,000-பசுக்கள் விலையுயர்ந்த ஆரம் உயர்ந்த பரிகளைப்பூட்டிய ரதம் தன்னுடைய பெண் இவைகளைக்கொண்டுவந்து சாகவரிடம் கொடுத்து, இந்நாட்டையும் உமக்கே கொடுத்துவிடுகிறேன்; எனது குமாரத்தியையும் நீர் பாரியாளாகக் கொள்ளும். இப்பொருள்களையும் அங்கீகரித்துக்கொண்டு எனக்குப் பிரம வித்தையை யுபதேசிக்க வேண்டுமென்று கேட்டான்.

இவ்விடத்து, சாகவர் என்னும் ஆசிரியர் பௌத்ராயண ஜானசுருதி என்னும் க்ஷத்திரியனை நோக்கி அடா சூத்திரா என்றார். எனவே, அடா மூடா ஆசிரியனிடத்துச் சுசுருஷை செய்து கற்றுக்கொள்ளவேண்டியதிருக்க, பொன்னையும் மண்ணையும் பொருளையும் கொடுத்துக் கேட்கிறாயே என்பது கருத்தாம்.

இதனால் சூத்திரனென்பது மூடனெனப் பொருளாயிற்று. இதுவே, ஆரியவேதத்தின் உட்கருத்தாம். அங்ஙனமிருப்ப மண்டல புருடனிகண்டில் வேளாளரை வைசியரென்று கூறியிருக்க, வித்துவசிகாமணியாகிய ஆறுமுகநாவலர் சூத்திரரெனத்திருத்தி வைசியராயுள்ள வேளாளருக்கு மூடப்பட்டங்கட்டினர். அவர் தாமும், வேளாளராதலின் அப்பட்டம் தமக்கும் வருமே யென்பதறியார்போலும்.

இப்புரட்டுகள் வந்ததற்குக் காரணம் ஆரியர்கள் தென்னாட்டிற் குடிபுகுந்ததேயாம்.

இவ்வாரியர்கள் வேளாளரை மாத்திரமா சூத்திரரென்றனர். சேரன் சோழன் பாண்டியனென்னும் தமிழ் வேந்தரையுஞ் சூத்திரரென்றே சாதிக்கிறார்கள். அதன்மறுப்பு 306-ஆவது பக்கத்திற் கூறப்பட்டது காண்க.

இது நிற்க, இந்து பெருங்காப்பியங்களின் கதியிதுவா னல், ஏனை நூல்களிற் கூறும் கொள்ளப்படைக்கு வரம்புண் டோ? இல்லை. மேற்குறித்த நூல்களில் வேளாளரைச் சூத் திரரென்றது நூற்புராட்டன்று, அந்நூல்கள்செய்தார் கருத் தென்று கூறுவாராயின்,

*அதிமதிநுட்பமோ டதிகலைகற்பினும்*
*விதியதுவசத்தால் விதிவிலக்கயர்ப்பா*
*ரிம்முறைதன்னை யெவர்பகுத்தறியினு*
*நூலுரைபோத காசிரியர்மூவரு*
*முக்குணவசத்தான் முறைமறைந்தறைவ*
*ரவத்தை வசத்தாலலைகுவர் திடனே.*

என்று இலக்கணக் கொத்துட்கூறியபடி அவத்தைக்குள்ளாய் அப்புராணங்களிற்கூறினர் எனக்கோடல் வேண்டும்.

இவ்வேறுபாடுகளைப் பிரித்தறியாதவர்களும், நூதன விவேகிகளும், வேளாளர் சூத்திரரென்றே சித்தாந்தப்படுத்தி வருகிறார்கள். கற்றுணர்ந்தார் யாரேனும் மறுத்துக்கூறின், அவர்களுடன் எதிர் வாதமிட்டே, "நாட்டு முயலுக்கு நாலே கால் நான்பிடித்த மோட்டு முயலுக்கு மூன்றேகால்" எனக் கூறி, அவர்களைப் பயித்தியகாரராக்குகிறார்கள். கலியின் வலி மை யிதுவானல் ஐயோபாவம் வேளாளர்கள் என் செய்வார் கள்?

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு.*

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் கூறியபடி எல் லா நூல்களையுஞ் சீர்தூக்கிப்பார்த்து உண்மையுணரவேண்டி யது பேரறிவுண்டையோர் கடமையாம்.

## வருண சிந்தாமணி முற்றிற்று.

சிவபிரான் றிருவடிவாழ்க.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 6 | 27 | வைககட ... | வைக்கட. |
| 7 | 33 | கிருஷ ஞ ... | கிருஷ்ணு. |
| 8 | 10 | தக்ஷிண ... | தக்ஷிண இங்ஙனம் வருமிடந்தோறுங் கொள்க. |
| 11 | 3 | தாமல ... | தாமல். |
| 40 | 19 | க்ஷத்திய ... | க்ஷத்திரிய. |
| 46 | 8 | வையிந்த ... | வைந்த. |
| 51 | 4 | சேரும் ... | செல்லும். |
| ஷை | 25 | நீககப் ... | நீக்கப். |
| 53 | 4 | தாண ... | தாண். |
| ஷை | 5 | தங்களே ... | தங்களே. |
| 59 | 18 | ஐயம் ... | ஜயம். |
| 63 | 10 | சுத்திர ... | சூத்திர. |
| 89 | 12 | | ஜீவனோபாயம். |
| 90 | 5 | டாவதார் ... | டாவார். |
| ஷை | ஷை | ரூவதார் ... | ரூவார். |
| ஷை | 26 | கடவன் ... | கடவர். |
| 91 | 30 | பூவிவசா ... | விவசா. |
| 94 | 7 | பெரும் ... | பெரு பகரத்தோபேபுணராது விடத்து இங்ஙனம் வருமிடந்தோறுங் கொள்க. |
| ஷை | 12 | தொழில் ... | |
| 95 | ஷை | அவற்றுள் ... | அச்சாதியர்களுள். |
| 96 | 6 | யாசர ... | யாசார. |
| ஷை | 8 | துவிதர் ... | துவிதிவர். |
| 117 | 7 | சுயகுலத்தில் சுய ... | சுவகுலத்தில் சுவ. |
| 124 | 14 | அமாசை ... | அமாவாஸ்சை. |
| ஷை | 19 | தவம் ... | தவதம். |
| ஷை | 25 | மூன்னடி ... | மூன்னக. |
| 125 | 21 | ஷாப்பிய ... | ஷாப்திக. |
| 128 | 14 | தம்பாரி ... | தம் குதிரைகளுக்குப்பாரி. |
| 129 | 21 | ரையில் ... | ரையும். |
| 130 | 25 | வருவ ... | வந்த. |

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 130 | 30 | வேத் ... | வேத. |
| 132 | 19 | வர்வர் ... | வர். |
| 135 | 7 | யாணபூ ... | யாணப்பூ. |
| 136 | 28 | அவனுடைய ... | |
| 139 | 21 | களுத்கு ... | களுக்கு. |
| 140 | 3 | மடைந்த ... | மடைவ. |
| ஷை | 21 | அடக்கிற ... | அடக்குகிற. |
| 141 | 12 | தீர்மா ... | அரசன் தீர்மா. |
| ஷை | 29 | பொதுனிலே ... | பொதுநிலே. |
| 142 | 29 | அடுத்வீடு | அடுத்தவீடு. |
| 144 | 12 | அபிஷ்ட ... | அபீஷ்ட. |
| 146 | 25 | பயிற்றல் ... | பயிலல். |
| 151 | 18 | ஆயுதம் ... | கூரிய ஆயுதம். |
| 168 | 2 | நீங்க ... | நீக்கி. |
| 170 | 5 | புண்க ... | உண்க. |
| ஷை | 6 | உசிக்க ... | புசிக்க. |
| 173 | 6 | கிருண ... | கிருஷ்ண. |
| 176 | 8 | பர்கத்தில் ... | பாகத்தில். |
| 178 | 30 | மனுளன் ... | மணாளன். |
| 179 | 13 | வனேற்ரு ... | வனவற்ரு. |
| ஷை | 16 | மேம்மாடு ... | மேம்பாடு. |
| 180 | 18 | ருமு ... | முரு. |
| 182 | 30 | விருகைத்து ... | விருவகைத்து. |
| 184 | 22 | திப்பெரு ... | திருப்பெரு. |
| ஷை | 31 | (. ஆவது ... | (2-ஆவது. |
| 190 | 12 | அதனே ... | அவனே. |
| 191 | 19 | போலவன ... | போல்வன. |
| 193 | 28 | றெனசி ... | றெனச்சி. |
| ஷை | 30 | நது ... | நது. இவ்வுண்மையை. |
| 196 | 9 | மறைநிகாட் ... | மறைக்காட். |
| 205 | ஷை | வடிவம்பு ... | வடிம்பு. |
| 206 | 9 | முடவட்பட ... | முடவுப்பட. |
| ஷை | 10 | பாய்சுருட்டு ... | பாய்ச்சுருட்டு. |
| 210 | 13 | வனற்ருற் ... | வனவற்ருற். |
| 214 | 4 | தற்குசச ... | தற்குச்ச. |
| 115 | 9 | திரவிட ... | திராவிட. |
| 217 | 27 | ளிருளிண்மு ... | ளிருண்மு. |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 220 | 9 | வேளாருக்கு ... | வேளாளருக்கு. |
| 225 | 26 | பெயர்தமொ ... | பெயர்த்தொ. |
| 226 | 22 | வுமையும் ... | வமமையும். |
| 239 | 18 | மெல்லாம ... | மெல்லாம். |
| 247 | 5 | வல்லினை ... | வல்லினை. |
| ஷை | 20 | திவேஷங் ... | துவேஷங். |
| 256 | 12 | 57 ... | 95. |
| 265 | ஷை | கோஷ்டி ... | கோஷி. |
| 273 | 5 | ணங்களிலும் ... | ணத்தாருக்கும். |
| 277 | 7 | ஸ்நானு ... | ஸ்நாநானு. |
| 279 | 8 | ஏகச்ச ... | ஏகச. |
| 280 | ஷை | பெயராயிற்று ... | பெயர்பெற்றன. |
| 282 | 20 | போனது ... | போனவை. |
| 285 | 26 | உமர் ... | உமா. |
| 291 | 19 | கூடாது ... | கூடாதென. |
| 292 | 16 | உரியதா ... | உரியவா. |
| 297 | 23 | தெரிவத ... | தெரியப்பட்டத. |
| 299 | 15 | புகுகிரு ... | புகுந்திருக்கிற. |
| 302 | 13 | கிரத் ... | கிருத. |
| 305 | 23 | தாயிரு ... | ணவாயிரு. |
| 307 | 3 | றுல ... | றுல். |
| 310 | 24 | தொழி ... | தொழி. |
| 313 | 9 | எண்ணே ... | எண்ணெ. |
| 317 | 10 | செல்லபு ... | செல்லப்பு. |
| 319 | 3 | மூகிழ் ... | மூகை. |
| 321 | 31 | ாற்ற ... | சாற்ற. |
| 323 | 14 | வெந்து ... | வேந்து. |
| 327 | 28 | சரன்பாண் ... | சரபாண். |
| 333 | 21 | இ ... | இறு. |
| 334 | 14 | மநீதி ... | தருமநீதி. |
| 336 | 26 | கேட்கி ... | கேட்கி. |
| 339 | 2 | தெரிகின் ... | காணப்படுகின். |
| 341 | 21 | இதில் பெரும்பாலு ... | இவர்களுள் பெரும்பாலார் |
| 351 | 16 | பெரிதாயி ... | பெரியனவாயி. |
| 355 | 19 | வேம்பிலேயே ... | வேப்பிலே. |
| 358 | 2 | அலெட்சி ... | அலட்சி இங்ஙனம் வருமிடங்தோறுங்கொள்க. |

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 360 | 8 | வேவுகாரா ... | வேவுகாரர். |
| ஷை | 23 | ஆடவாவ ... | ஆடவர்வ. |
| 374 | 15 | ன்வெறு ... | ஊவெறு. |
| ஷை | 16 | மெஞ் ... | மெய்ஞ். |
| 375 | 29 | வாசங்க ... | வாசகங்க. |
| 383 | 15 | வழக்கததி ... | வழக்கத்தி. |
| 387 | 2 | தாமதபட் ... | தாமதப்பட். |
| 390 | 5 | மண்டலன்புரு ... | மண்டலபுரு. |
| 395 | 6 | வெளிப்படை ... | வெளிப்படை. |
| 407 | 11 | ரிம்போ ... | ரிப்போ. |
| 408 | ஷை | கிலாதனை ... | கிலாதானை. |
| 421 | 17 | கிலவுழ .. | அலப்படையுழ. |
| 423 | 7 | கிரிஷ்டி ... | கிரிஷ்டிபு விடயம் உழவு. |
| 428 | 21 | ரிகளுக் ... | ரிகர்களுக். |
| 429 | 22 | தாணிய ... | வைசியன் தாணிய. |
| 436 | 3 | ஆ மணக்ரு ... | ஆமன்க்கு. |
| 442 | 26 | 26 27 ஆவது வரிகள். | 438 ஆம் பக்கமுதலிற்சேர |
| 443 | 17 | வேளாண் .. | ழ் - ள். வேளாண். [க்க. |
| ஷை | 18 | வைணிய ... | வணிக. |
| 445 | 28 | அந்தருண ... | அந்தணரு. |
| 450 | 18 | அந்த ... | இந்த. |
| 462 | 9 | னவர்களால் ... | னவர்கள். |
| 363 | 2 | பெரு ... | பொரு. |
| 469 | 11 | பக்கத்தில் ... | பகத்தில். |
| 470 | 8 | அவிட ... | ஒளட. |
| ஷை | 22 | வாசனம் ... | வாகனம். |
| 476 | 27 | வெளா ... | வேளா. |
| 480 | 10 | பிறபொருளை ... | பிறர்பொருளை. |
| ஷை | 29 | னுச்கு ... | சனுக்கு. |
| 486 | 3 | ளுக்கும் ... | களை. |
| ஷை | 4 | எனவும் ... | எனைக். |
| 487 | 32 | 355 ... | 515. |
| 496 | 15 | யிற்றல் .. | யிலல். |
| 502 | 29 | வதிப்ப ... | வசிப்ப. |
| 511 | 13 | திராக்ஷ ... | திராக்ஷர. |
| 513 | 8 | சம்மந்த ... | சம்பந்த. |
| 517 | 22 | யாழப் .. | யாழ்ப். |
| 523 | 3 | கொளர்ப ... | குழறுப. |